# நன்னூல்விருத்தியுரை.

இவ்வுரை-

இயற்றமிழாசிரியராகிய

## இராமாநுசகவிராயராற் செய்யப்பட்டது.

இராமாநுசகாண்டிகையெனச்சிறப்புப்பெயரிடப்பட்டுச்

சஞ்சீவிராயன்பேட்டையில்

அவரது-அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சாலிவாகனசகாப்தம் - ௲௭௱௬௮-ல் செல்லாநின்ற

பிலவங்க ௵ மார்கழி ௴

இதன்விலை - ரூபா - ௫.

44416

{ [illegible]
மாசறுமணிமுடியெனக்கு }

கடல்புடைசூழ்தரூஉங்காசினியதனிடை, வடதிசைக்கண்மரீஇவளனெலாஞ்சுரந்து, முனிமுனநடந்துறாஉமோங்கிலிற்படர்ந்து, குனிதிரைவையையின்கொடுந்திறலழித்தாங், கடைந்ததென்குமரியகநெகிழ்ந்தன்பி, னுடைந்துதன்வசப்படாதுடல்சலசலத்து, நீராழமாமெய்நிலைதடுமாறித், திராநீர்மையிற்றிரைக்கடல்படிந்து, மதிமுகமலரிடைமலர்க்கணீர்மல்கத், துதிசெயவெனவாய்தூக்கியாங்கே, யெழுத்தியறழாஅதெழுமொழிகுளறி, வழுத்தியுமாராவவாவலைவளைக்கையாற், பொன்மணிமலர்தூய்ப்புரிந்துநன்கிறைஞ்சுறாஉந், தென்மலைமாமுனிதேத்திய னுணர்ந்தோ, ரோர்பன்னிருவர்பாலொண்டமிழுணர்ந்தோர், சீர்பெறவெண்ணிலர்தெரினுங்கவருழைச், சிவக்கொழுந்தென்னுமோர்தேசிகரவருழைத், தவக்கொழுந்தென்னமாதவத்தினர்துதித்துறாஉஞ், சிவஞானதேசிகன்சேவடிக்கன்பூண், டவனூலுணர்த்திய வைநதியலோர்ந்தனன், சோமசுந்தரனெனுந்தொன்னூற்குரவன், காமர்செஞ்சேவடிகண்ணிணையாக்கொண், டியல்பலவுணர்ந்தோரொண்ணிலரவருழைத், துயல்வருகீழ்மையிற்றொடர்கீழ்நிலையினே, னில்லையாந்தன்னிகரெனவுலகோதுறாஉ, முல்லையாந்துருவெனுமொளிகொள்போதகனா, மேமசன்மார்க்கத்தியனிலைவழாஅத், தாமசன்கிளார்க்கெனுந்தகைப்புரவலனுந், துராசையினீங்கித்தொல்னெறிவழாஅ, விராசலெனும்பெயரியற்கோமகனா, மிந்நூற்குறையீங்ஙனமியற்றுகவென, நன்னூற்குறைசெயநாடினனாவலர், முகநகைநாணமுழுமகனாயினூஉந், தகைகெழுசோமசுந்தரகுருவருளுக், கென்னாலெனுமகத்தினைப்பலியீந்து, பின்னவதனவழிபிழையாநிலைநின், றியன்றவையியற்றுமிந்நூனுளித்தலைச்சூத்திரம்யாதுணர்த்திற்றோவெனின், சிறப்புப்பாயிரத்திலக்கணமாகவெடுத்தோதப்பட்ட- நூல்செய்தோன்பெயர்முதலியபதினொன்றையு முணர்த்திற்றென்க. இதன்பொருள்- (இதுமலர்தலையுலகென்றசூத்திரமுடிந்தவுடனேதொடர்ந்திருக்கவேண்டியது.)

சீருலவுமியற்றமிழாசிரியனிராமானுசனுஞ்செந்தமிழ்க்கோன், பேருலவுநன்னூற்குவகுத்ததொரு நூலுரையைப்பெரிதென்கே ளோ, ஏருலவுசென்னையெலா முறைத்துறைத்துநோக்குமிடமெங் குஞ்செந்தே, னேருலவுதமிழ்க்கவிஞராகவவன்வாயுரையேநிகழ் த்தலாலே. *

வெ- தொல்காப்பியம்-

வரதராசமுதலியாராற்செய்யப்பட்டது.

விறற்கம்பன்புகழேந்தியொட்டக்கூத்தன் வியன்காளமேகமென் போனாதியாய,திறற்கவிஞர்பற்பலரும்படவிதீதுசிறப்புற்றார்முக வைவருசெல்வனெங்கோன்,முறைத்தமிழாசிரியனிராமானுசன்று முன்னுகவிராயனன்னூற்குரைசெயாமுன், சிறப்புறுவனென்பதி னியென்றும்வானிற்செங்கதிர்முன்மின்மினிபோற்றிகழ்வர்தாமே

அஷ்டாவதானம்-

வீராச்சாமிக்கவிராயராற்செய்யப்பட்டது.

ஏற்றவவைவாணரரிலியல்காட்டிக்களைந்தரங்கேற்றியக்கட்கோ வை,நூற்றுகவிநூலுடையார்நுவலிலமுன்றங்கெனவந்தொடிக் கணைந்தாத், தேற்றியமிக்கினனன்னூற்குரையியற்றினியற்றமிழா சிரியனென்னச், சாற்றுமிராமாநுசநற்கவிராயனிதுவியப்போத மிழ்வல்லோரே. *

களத்தூர் - வேதகிரிப்புலவராற்செய்யப்பட்டது.

பொருள்விளக்கும்பொன்வெள்ளிமதியொக்குநிலத்தினிடைப் ப்புலவர்சில்லோர், தெருள்விளக்குநன்னூற்குவகுத்தவுரையிது காறுஞ்செப்புங்காலை, யருள்விளக்குமியற்றமிழாசிரியனிராமாநு சனுமருந்தமிழ்க்கோன், இருள்விளக்குஞ்செங்கதிர்போலந்நூலி ன்பொருள்விளங்கவியற்றலாலே. *

சேமங்கலம்-தமிழ்ப்புலமை-

நாராயணவுவாத்தியாராற்செய்யப்பட்டது.

திருவளுவரவ்வைமுனஞ்செப்பியநூற்குரையியற்றுந்திறமை பூண்டோன், ஒருகவியோர்நூலாக்கி யொருகவியீரைந்தாக்கியு ரைக்கவல்லோ,னிருநிலமேனன்னூலுக்குரையியற்றினியற்றமிழா சிரியனென்னக், கருதுமிராமாநுசநற்கவிராயனிதுவியப்போக விவல்லோரே. *

சத்தியவேட்டி-தமிழ்ப்புலமை

சென்னகேசவவுவாத்தியாராற்செய்யப்பட்டது.

## OR GRAMMAR OF THE TAMIL LANGUAGE

BY

# PAVANANTI.

This Prospectus of the following work was published in the month of September last, to which the accompanying names of Subscribers was kindly appended.

---

The undersigned proposes to publish the Nannul with a Commentary; employing as much as possible words in familiar use; dividing the words where a doubt might be produced by the want of it; and distinguishing the sentences into their component parts. Price to the Subscribers, paying their money in advance Rs. 4, to Non-Subscribers, Rs. 5.

இயற்றமிழாசிரியன்
இராமாநுசகவிராயன்.

MADRAS,
*1st September*, 1846.

From an experience of the thorough knowledge of the Tamil Language possessed by Ramanuja Caviràyar, we confidently recommend his work to the generous support of all who are interested in the revival and extension of Tamil literature.

W. H. DREW.
T. CLARKE.

I cannot sign the above as requested by Ramanuja Caviràyar, because I know nothing of Tamil, but having known him well through others for some years I feel the fullest confidence in his ability for the work.

C. A. BROWNE.

| கையொப்பக்காரர்கள். | காப்பி | கையொப்பக்காரர்கள். | காப்பி |
|---|---|---|---|
| Revd. W. H. Drew, | 12 | Revd. H. M. Scudder, | |
| T. Clarke, Esq. | 3 | Revd. J. Anderson, | |
| Lieut. Col. Browne, | 6 | Male Orphan Asylum, | |
| Revd. J. B. Rodgers, | 10 | Mr. J. Rodgers, | |
| Mr. T. Ballard, | 2 | ரிவ. தே. ஞானமுத்துப் | |
| Mr. T. Y. Darling, | 2 | | |
| Revd. J. E. Sharkey, | 1 | பிள்ளை, | |
| Mr. W. Thomson, | 1 | ஜான். தேவசகாயபிள்ளை, | |
| Revd. A. Leitch, | 1 | ரிவ. ஜான். யேசுதாசபிள்ளை, | |
| Revd. M. Winslow, | 1 | | |
| G. Latchmenarasu Chettiar, | 1 | . வெங்குமுதலியார், | |
| Revd. J. Tucker, | 2 | . பாலசுந்தரமுதலியார், | |
| Revd. A. R. Symonds, | 1 | கொ. இராமசாமிபிள்ளை; | |
| Revd. John Devasagayum, | 1 | | |
| C. Nar[illegible] Naidoo | 1 | [illegible] சிங்காரமுதலியார். | |

| கையொப்பக்காரர்கள். | காப்பி |
|---|---|
| சை. உமாபதிமுதலியார், | 1 |
| D. Sinnappen Pillay, | 2 |
| சை. காசிவிசுவநாதமுதலியார், | 1 |
| ப. வேலுமுதலியார், | 1 |
| Madras School-book Society, | 15 |
| T. Muttooswamy Moodeliar, | 1 |
| John Cornelius Pillay, | 1 |
| L. Vencatapatty Naidoo, | 1 |
| க. ஆறுமுகமுதலியார், | 1 |
| Revd. P. Batchelor, | 1 |
| Revd. E. Pinkney, | 1 |
| Revd. J. Jenkins, | 1 |
| Revd. Ponniah Pillay, | 1 |
| P. Sindooroy Moodeliar, | 1 |
| ஞாஞபுதஉபதேசியார், | 1 |
| Revd. S. A. Godfrey, | 1 |
| Revd. J. E. Nimmo, | 3 |
| Revd. H. Bower, | 6 |
| Revd. T. Brotherton, | 2 |
| Mr. M. Ross, | 1 |
| Mr. A. R. C. Nailer, | 1 |
| Mr. W. L. Coombes, | 1 |
| Revd. W. Hickey, | 1 |
| Revd. J. Guest, | 1 |
| Revd. J. P. Fletcher, | 1 |

| கையொப்பக்காரர்கள். | |
|---|---|
| த. சுந்தர ராமாநுஜ நாய்க்கர், | 1 |
| சி. சிதம்பரமுதலியார் | 1 |
| P. Carstairs, Esq | 1 |
| A. Rungasawmy Moodeliar, | 1 |
| Revd. C. S. Kohlhoff, | 1 |
| T. Ramasawmy Moodeliar, | 1 |
| N. C. Mooroogasem Moodeliar, | 1 |
| ச. தியாகராஜசெட்டியார் | 1 |
| P. Chithambarum Chettiar, | 1 |
| C. Subraya Chettiar, | 1 |
| அ. வெங்கடாசலசெட்டியார், | 1 |
| Shukkeray Chettiar, | 1 |
| த. முனிப்பபிள்ளை, | 1 |
| A. Annasawmy Chettiar, | 1 |
| P. Ramalinga Chettiar, | 1 |
| M. Mylappa, Moodeliar, | 1 |
| J. Appajee Chettiar, | 1 |
| P. Mariasoosay Moodeliar, | 1 |
| P. Cothundaram Chettiar, | 1 |
| வா. பாலுசெட்டியார் | 1 |
| N. Casavarayan Naicker, | 1 |
| P. Savarinaden, | 1 |
| S. Puttaby Chettiar, | 1 |
| Mr. C. E. Kennet, | 1 |
| S. B. Kanagaraya Pillay, | 1 |

இது, K. Natesan

# நன்னூல் விருத்தியுரை.

சிறப்புப்பாயிரத்திலக்கியம்.

சிறப்புப்பாயிரமென்பதுமிது,

மலர்தலையுலகின்மல்கிருளகல - விலகொளிபரப்பியாவையும் விளக்கும் - பரிதியினொருதானாகி முதலீ - றொப்பளவாசைமுனி விகந்துயர்ந்த - வற்புதமூர்த்திதன்னலர்தருதன்மையின் - மனவிருளிரியமாண்பொருண் முழுவது - முனிவறவருளியமூவறு மொழியுளுங் - குணகடல்குமரிகுடகம்வேங்கட - மெனுநான்கெல்லையினிருந்தமிழ்க் கடலு - ளரும்பொருளைந்தையுமியாவருமுணரத் - தொகைவகைவிரியிற்றருகெனத் துன்னு - ரிகலறநூறியிருநில்முழுவதுந் தனதெனக்கோலித்தன்மதவாரணந் - திசைதொறுநிறுவியதிறலுறுதொல்சீர்க் - கருங்கழல்வெண்குடைக்கார்நிகர்வண்மைத் - திருந்தியசெங்கோற்சீய கங்க - னருங்கலைவிநோதனமராபரணன் - மொழிந்தனனாகமுன்னோர் நூலின் - வழியேநன்னூற்பெயரின் வகுத்தனன் - பொன்மதிற்சநகைச்சன்மதிமுனியருள் - பன்னருஞ்சிறப்பிற்பவணந்தி - யென்னுநாமத்திருந்தவத்தோனே. - - - - *

என்பது சிறப்புப்பாயிரம் - இது, நூல்செய்தோன் பெயர்முதலியபதினொன்றையும் விளக்கிநின்றது(இதன்பொருள்) மலர்தலையுலகில் - விரிந்த இடத்தையுடைய இவ்வுலகத்திலே, மல்கு - நிறைந்த, இருளகல - வெளியிருளொழிய, இலகு - விளங்குகின்ற, ஒளி - ஒளியையுடையகதிரை, பரப்பி - விரித்து, யாவையும் - (கண்ணுக்குத்தோன்றப்படும்) எல்லாவுருவங்களையும், விளக்கும் - காட்டுகின்ற, பரிதியின் - சூரியனைப்போல, ஒருதானாகி-(உலகுக்கெல்லாம்) தானொருமுதல்வனாகி, முதல் - பிறப்பும், ஈறு - இறப்பும், ஒப்பு - உவமையும், அளவு - பிரமாணமும், ஆசை - இச்சையும், முனிவு - வெறுப்பும், இகந்து-(ஆகிய இவற்றையெல்லாம் இயல்பாகவே) கடந்து, உயர்ந்த - மேலான, அற்புதமூர்த்தி - ஞானமேதிருமேனியாகிய கடவுள், தன் - தன்

னுடைய, அலர்தரு - மலர்ந்த, தன்மையின் - குணத்தினலே, (கிருபையினலே) மனவிருள் - மனத்திலிருக்கின்ற அஞ்ஞான மானது, இரிய - நீங்க, மாண் - பெருமைபொருந்திய, பொருண் முழுவதும்-அறம் - பொருள் - இன்பம் - வீடு - என்கின்ற நான்கு பொருளையும், முனிவற - வெறுப்பில்லாமல், அருளிய - அருளிச் செய்த, (தந்த) மூவருமொழியுளும்-பதினெண்பாடைகளுள்ளும், குணகடல் - கீழ்கடலும், குமரி - தென்குமரியாறும், குடகம்-குட கமென்னும்மேல்நாடும், வேங்கடம் - வடவேங்கடமென்னும்மலை யும், எனுநான்கெல்லையின் - என்றுசொல்லப்படும் இந்தநான்கெல் லைக்குட்பட்ட, இருந்தமிழ்க்கடலுள் - பெருமைபொருந்திய தமி ழாகிய கடலுள்ளிருக்கின்ற, அரும்பொருளைந்தையும் - அருமை யாகிய எழுத்துச் - சொல் - பொருள் - யாப்பு - அலங்காரம் - என் கின்ற ஐந்துபொருளையும், யாவருமுணர - எல்லாருஞ்சந்தேகப் படாமலே தெளியும்படியாக, தொகைவகைவிரியில்- தொகுத்துச் சொல்லுதலும் - வகுத்துச்சொல்லுதலும் - விரித்துச்சொல்லுதலு மாகிய மூவகைநூல்யாப்பினலே, தருகென- பாடித்தருகவென்று, துன்னூர் - பகைவரது, இகலற - பகைகெட, நூறி - அவணாத்து ணித்து, (வாளினலேதுண்டிட்டு) இருநிலமுழுவதும் - பெருமை பொருந்திய பூமிமுழுதையும், தனதெனை - தன்னதென்று சொல் லும்படியாக, கோலி - கைப்பற்றிக்கொண்டு, தன்மதவாரணம் - தன்மதயானைகளை, திசைதொறும் - எட்டுத்திக்கிலும், நிறுவிய - நிறுத்திவைத்த, திறல் - வெற்றியையும், உறு - மிக்க, தொல்சீர் - தொன்றுதொட்டுவந்த கீர்த்தியையும், கருங்கழல் - பெருமைபொ ருந்திய வீரகண்டாமணியையும், வெண்குடை - வெள்ளைக்குடை யையும், கார்நிகர் - மேகம்போன்ற, வண்கை - கொடைக்கையை யும், (மேகத்தைப்போலக் கைமாறுதவி வேண்டாதுகொடுக்குங் கையினையும்) திருந்தியசெங்கோல்-கோணதசெங்கோலையுமுடைய, அருங்கலைவிநோதன் - அரியநூல்களைக் (கற்பதுங் கேட்பதுமே) பொழுதுபோக்கும் விளையாட்டாகவுடையவனகிய, அமராபர ணன் - போர்செய்தலினலே தன்மேற்படும் வடுக்களையே ஆபரண மாகவுடையவனகிய, சீயகங்கன் - சீயகங்கனென்னும் இயற்பெய ரினையுடையவன், மொழிந்தனனக - சொன்னவனக, முன்னோர் நூலின்வழியே - பழைய நூலாசிரியருடைய நூலின்வழிப்பற்றியே, நன்னூற்பெயரின்வகுத்தனன் - நன்னூலென்கிறபெயராயிட்டுச் செய்தனன், (அவன்யாரெனின்) பொன்மதிற்சனகை - பொன் மதில்சூழ்ந்த சனகாபுரியென்னுநகரிலுள்ள, சன்மதிமுனியருள்-

சன்மதிமுனியென்பவன்பெற்ற, பன்னருஞ்சிறப்பின் - சொல்லு தற்கு அருமையாகியநன்மைகளையுடைய, பவணந்தியென்னுநா மத்து - பவணந்தியென்கிற இயற்பெயரையுடைய, இருந்தவத் தோன் - பெரியதவத்தையுடையவன், என்றவாறு.

இதனுள் - சூரியன் வெளியிருளகலத் தன்கதிரொளியைத் தந்ததுபோல - அற்புதமூர்த்தி தன் அருளினாலே யுள்ளிருளகலத் தந்தபதினெண்மொழியெனக்கூட்டிப் பொருளறிக. ஆனால்நான் குபொருளையுந்தந்த மொழியெனக்கூறியது - மலைவாமெனின், இல்லையென்க, என்னை நான்குபொருளையுந்தருதற்கு இடமாகிய மொழியென நிற்பதினாலும் - ஒளியுங்கதிரும் ஒருமைப்பட்டு நிற் பதுபோல மொழியும்பொருளும் ஒருமைப்பட்டு நிற்பதினாலு மென்க. இனி-தந்ததுபொருளும் மொழியும் எனவேற்றுமைப் படக்கொளினும் அமையும். இது ஒப்புமைக்கூட்ட உவமையலங் காரம். (சூத்திரம்.) கடல்விளிம்புடுத்தகண்ணகன்ஞாலத் - தட ரும்வல்லிருடீரந்தனைத்தையும்விளக்கும் - பல்கதிர்ப்பரிதியிற்பரம் பரனருளா - லுள்ளகத்திருள்கடிந்துறுபொருளவற்றையும் - பாற்படத்தொகுத்தபதினெண்மொழி - எனப்பிறர்கூறுதலுங்கா ண்க - மற்றையவெல்லாம் பொருள்விளங்கிக்கிடந்தன. இதனுள். பவணந்தியெனவே-நூல்செய்தோன்பெயரும்,முன்னோர் நூலின் வழியேயெனவே-வழியும்,எனுநான்கெல்லையினெனவே-எல்லையும், நன்னூற்பெயரினெனவே - நூற்பெயரும், தொகைவகைவிரியி னெனவே - யாப்பும், அரும்பொருளைந்தையுமெனவே - நூல் குறித்தபொருளும்,சீயகங்கன் தருகெனமொழிந்தனனெனவே - கேட்போனும்,மாண்பொருண்முழுவதுமெனவே- நூற்பயனும், சீயகங்கன்கேட்கவெனவே - அவன்காலத்திற்பாடி அவன் அவைக் களத்தில் அரங்கேற்றியதெனக்காலமும், அவைக்களமும், யாவரு முணரஎனவே-காரணமும்,ஆகியபதினொன்றும், வந்தவாறுகாண்க. யாப்பு - என்பது- நூலைத்தொகுத்து முடிப்பதும்-விரித்துமுடிப் பதும்-தொகுத்துவிரித்து முடிப்பதும்-மொழிபெயர்த்து முடிப் பதுமாகிய- நூற்கட்டு-இதனுள்-அரும்பொருளைந்தையும் வகுத்த னனென்றதினால்-எழுத்திலக்கணம் சொல்லிலக்கணந்தவிர-மற்றமூ ன்றிலக்கணங்களும்அக்காலத்திலிருந்தனபோலும்,இப்பாயிரம்-இ ந்தநூலுக்கேயுரித்தாதலால் பொதுமையில்நீங்கிச்சிறப்புப்பாயிர மெனப்பட்டது-வகுத்தனன்-பவணந்தி-எனமுற்றுப்பயனிலைகொ ண்டதாக இச்சூத்திரத்தைமுடித்துக்கொள்க - சீயகங்கன்கேட்டுக் கொண்டபடியேபவணந்தியிந்நூலைச்செய்தனனென்பதுகருத்து.

இனி - இன்றைனென்றெடுத்துச்சொல்லப்பட்டுச் சிறப்புபாயிரத்து ளடங்கிப் பொதுமையினீங்கிநிற்குங் கேட்போனை - இன்றைனெனக்கூறப்படாது பொதுப்பாயிரத்துளடங்கிப் பொதுமையினிற்குங்கொள்வோனாகிய கேட்போனைகவும் - அறப்பொருளின்பம் வீடடைதனூற்பயனே - எனவும் - நாற்பொருட்பயத்தோடெனவும் - மொழித்திறத்தின் முட்டறுத்தநல்லோன் முதனூற்பொருணுணர்ந்து கட்டறுத்து வீடுபெறும் - எனவுங்கூறுவதறிந்திருந்தும் - யாவருமுணர்தலைப்பயனெனவும், மொழித்திறத்தின் முட்டறுத்தலைப்பயனெனவுங்கூறுவர் - திருவேங்கடநாதனேறினைகவுரைத்தனன் வைத்தியநாததேசிகனெனவும் - ஊற்றுமலைமருதப்பன்பகர்கியென்றியம்பலினெனவும் - தென்னூற்றுமலைமருதப்பன்புகலப்பொருள்விளங்கச்செய்தானெனவும் செய்வித்தோன்பெயர்பற்றி நூற்குப்பெயர்வருமெனவும் - வழங்குகின்றவழக்கிற்குப் புகலிடமின்றுப் முடிவதன்றியும் - நூல்செய்தோனுக்குச் செய்வித்தோன் செய்நன்றி மறத்தலென்னுங் குற்றமேநேரிடுமாதலாலும் சிறப்புப்பாயிரத்துளடங்கிய கேட்போனும் பொதுப்பாயிரத்துளடங்கிய கேட்போனும் வேறுதலாலும், உணர்தலும் மொழித்திறத்தின் முட்டறுத்தலும் வீடுபெறுதற்பொருட்டாதலாலு மதுபொருந்தாதென்க. நால்வகையாப்பினுள் - தொகைவிரியாப்பென வொன்றுவந்ததேதவிரத் தொகைவகை விரியென வந்ததில்லையேயெனின் - நடுநின்றவகை பின்னின்றவிரியைநோக்கத்தொகையாகவும் - முன்னின்றதொகையைநோக்க விரியாகவும் அடங்குதலால் - தொகைவிரியெனவிரண்டாய் வரினும் - மாத்தினது பருத்தஅரையிலேநின்றுங் கவடுகோடுகொம்புவளார் எனப்பலவாயொன்றேடொன்று தொடர்ப்பட்டெழுந்து நிற்பதுபோலத் தொகையினின்றும் ஒன்றேடொன்று தொடர்ப்படப்பகுக்கப்பட்டு - வகைவிரியெனப்பலவாய்வரினுந் தொகைவிரியாப்பென் றதன்பாற்படுமென்க.

# பொதுப்பாயிரம்.

முகவுரைபதிகமணிந்துரை நூன்முகம் - - ✻

புறவுரைதந்துரைபுனைந்துரைபாயிரம். - - ✻

இது - பாயிரத்திற்குவந்த பெயர்க்காரணங்களை யுணர்த்துகின்றது, (இ-ள்.) (பாயிரத்தினிலக்கணங்களை முன்னுணர்ந்தாலல்லது நூல்களைச்செய்தலும் ஈதலும் ஏற்றலுமுடியாதென்றெண்ணி) முன்னுரைக்கப்படுதலால் - முகவுரையென்றும், (சூத்திரம்) பதிகக்கிளவிபல்வகைப்பொருளைத் - தொகுதியாகச்சொல்லுதற்றே. ✻ என்பராதலால் ஐந்துபொதுவும் பதினொருசிறப்புமாகிய பல்வகைப்பொருளையுந் தொகுத்துச்சொல்லுதலால் - பதிகமென்றும், அணிந்துரைத்தலால் - அணிந்துரையென்றும், (அணிந்துரைத்தல் - புனைந்துரைத்தலென்பன - அலங்கரித்துச்சொல்லுதல்) நூலுக்குமுகம்போலச்சிறந்திருத்தலால் - நூன்முகமென்றும், நூல்குறித்தபொருளல்லனவற்றை யதற்குத்தந்துரைத்தலால் - தந்துரையென்றும், புனைந்துரைத்தலால் - புனைந்துரையென்றும், பாயிரம் - பாயிரத்திற்குப்பெயர்களாம், எ-று.

பாயிரமென்பது - வரலாறு,

பாயிரஞ்சொல்லவந்தவர் நிகண்டுபோல அதன்பெயர் விகற்பங்களையெல்லாஞ் சொல்லியதென்னெனின் அப்பெயர்விகற்பங்களால் அப்பாயிரத்திற்கு - இலக்கண

ந்தோன்றிக் கிடத்தலாலெனக. எவ்வாறெனின் - பாயிரந்தொகுத்துச்சொல்லப்படுவதாய்ப் புறவுரையாய்த் தந்துரைக்கப்படுவதாய் நூலுக்கு இல்லாமற்கூடாத அணியாய் முன்னுரைக்கப்படுவதென்பது - இக்காரணக்குறிகளால் விளங்கவினெனக. முகவுரைபாயிரம் - பதிகம் பாயிரமெனத்தனித்தனிபெயர்முடிபாக்கினும் - முகவுரைபதிகம் அணிந்துரையென அடுக்கப்பாயிரமென ஒருபெயர்ப்பயனில கொண்டதெனினும் அமையும். - - - - - - (க)

பாயிரம்பொதுச்சிறப்பெனவிருபாற்றே. - - *

இது- மேற்பாயிரமென்றதைவகுத்துணர்த்துகின்றது, (இ-ள்.) பாயிரம் - மேலேபாயிரமென்று சொல்லப்பட்டது, பொதுச்சிறப்பெனவிருபாற்று - பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிரமுமெனவிரண்டுவகையினையுடையதாம், எ-று.

பாயிரமிருபாற்றுளனமுடித்துக்கொள்க. (உ)

நூலே நுவல்வோனுவலுந்திறனே, கோள்வோன்கோடற்கூற்றுமைந்து, மெல்லா நூற்குமிவைபொதுப்பாயிரம். *

இது-பொதுப்பாயிரமென்றதைவிரித்துணர்த்துகின்றது,(இ-ள்) நூலே - நூலினதுவரலாறும், நுவல்வோன்-ஆசிரியன்வரலாறும், நுவலுந்திறனே-(ஆசிரியன் மாணுக்கனுக்கு நூலைச்) சொல்லுதலின்வரலாறும், கொள்வோன் - மாணுக்கன்வரலாறும், கோடற்கூற்று - அவன்கற்றுக்கொள்ளுதலின் வரலாறும், ஐந்தும்-ஆகிய இவ்வைந்துவரலாறும், எல்லா நூற்கும்-எல்லா நூல்களுக்கும் ஆம், (ஆதலால்) இவைபொதுப்பாயிரம்-இவைவிளங்கியபாயிரம் பொதுப்பாயிரமாம், எ-று.

திறன்-கூற்று- என்றது- வரலாற்றையாதலால் அதனையொழிந்தனவற்றுள்ளுங்கூட்டி யுரைக்கப்பட்டது - ஆம் என்பதை எல்லா நூற்குமாமெனக்கூட்டுக - இவையென்பது - இவைவிளங்கியபாயிரமெனநிற்றலால் - ஆகுபெயர் ஆதலாலென்பது வருவிக்கப்பட்டது. (சூ.ம்.) ஈவோன்றன்மையீதலியற்கை, கோள்வோன்றன்மைகோடன்மரபென, வீரிரண்டென்பபொதுவின்றொகையே. எனப்பொதுப்பாயிரம் நால்வகைப்படுமென்பாருமுளரொனின் - பாயிரங்கூறுதல் நூல்களுக்கேதவிரப்பிறவற்றிற்கன்றே அதனல் - நூலின்வரலாறொன்றுமே கூறவேண்டும் - அதனோடு ஆசிரியன்வரலாறுமுதலிய நான்கினையுமுடன்கூறுவது- வரலாற்றுமுறைமையின்வாராதார் நூல்களைக் கற்பிக்கவுங் கற்கவும்புகின். (குறள்) பொய்படுமொன்றோபுனைபூணுங் கையறியாப்- பேதைவினைமேற்கொளின். என்றவாறேயாகி நூல்களினருமையும் பெருமையுங்கெட்டுப்பயன்படாமையைக்குறித்தென்க, இவை-பொதுப்பாயிரமென முடித்துக்கொள்க. (ந)

நூலினியல்பே நுவலினோரிரு - பாயிரந்தோற்றிமும்மையினொன்றாய் - நாற்பொருட்பயத்தோ டெழுமதந்தழுவி - யையிருகுற்ற மகற்றியம்மாட்சியோ-டெண்ணான்குத்தியினோத்துப்படல - மென்னுமுறுப்பினிற் சூத்திரங்காண்டிகை-விருத்தியாகும் விகற்பநடைபெறுமே. *

இது- நூலினதுவரலாற்றைவிரித்துணர்த்துகின்றது,(இ-ள்.) நூலினியல்பு-நூலினதுவரலாற்றை, நுவலின் - சொல்லப்புகின், ஓரிருபாயிரந்தோற்றி-பொதுவுஞ்சிறப்புமாகிய இருவகைப்பாயி

ரங்களையு முன்னேதோன்றச்செய்து, (முன்னுடைத்தாகி) மும்மையிலொன்றாய் - மூவகை நூலுளொன்றாகி, நாற்பொருட்பயத்தோடு-(அறம் பொருள் இன்பம் வீடென்னும்) நான்கு பொருட்பயனோடுகூடி, எழுமதந்தழுவி-(உடன்படல்முதலிய)வெழுவகை மதங்களையும் அணைத்துக்கொண்டு, ஐயிருகுற்றமகற்றி- (குன்றக்கூறல்முதலிய) பத்துவகைக்குற்றங்களையும் நீக்கி, அம்மாட்சியோடு-(சுருங்கச்சொலல்முதலிய) அப்பத்துவகையழகுடனே, எண்ணான்குத்தியின்-(நுதலிப்புகுதல்முதலிய)முப்பத்திரண்டுவகையுத்திகளைச்சார்ந்து, ஒத்துப்படலமென்னுமுறுப்பினில்- இயலும்படலமுமென்கின்ற அங்கத்துடன், சூத்திரம்-சூத்திரயாப்பெனவும், காண்டிகை - காண்டிகையுரையெனவும், விருத்தி - விருத்தியுரையெனவும், ஆகும் விகற்பநடைபெறும் - ஆகியவேறுபாட்டுநடைகளைப்பெற்றுவரும், எ-று.

ஒத்து-என்றது-வேதம்- அது-அதனங்கமாகிய வியாகரணத்திற்காகி-அதனங்கமாகிய இயலுக்கானமையால் இருமடியாகுபெயர், நூலினியல்புநவலின்-அது- இவ்வாறாகி. உத்தியின் உறுப்பின்சூத்திரத்தின் காண்டிகையின் விருத்தியின் விகற்பநடைகளைப்பெறுமென விரித்தும்- அதுபெறுமெனக்குவித்தும் முடித்துக்கொள்க. (௪)

முதல்வழிசார்பென நூன்மூன்றாகும். - *

இது - மும்மையிலொன்றாயென்றதை வகுத்துணர்த்துகின்றது, (இ-ள்.) முதனூல்வழிநூல் சார்புநூலென நூல் மூன்றுவகைப்படும், எ-று. (௫)

அவற்றுள், வினையினீங்கி விளங்கியவறிவின்-முனைவன்கண்டது முதனூலாகும். - - - *

இது, முதனூலித்தன்மைத்தென்கின்றது. (இ-ள்.) அவற்றுள்- அம்மூவகைநூலுள், வினையினீங்கிவிளங்கியவறிவின்- (இருவகைவினையிலேநின்றும் நீக்கிவிளக்கப்படும் அறிவினையுடைய வுயிர்களுக்கு) இயல்பாகவே வினையினீங்கித்தானே விளங்கிய அறிவினையுடைய, முனைவன்- ஆதிபகவன், கண்டது- (ஆதிகாலத்திலே) அறிந்தது, அறிந்துசெய்தது,(யாது-அது)முதனூலாகும், எ-று.

ஆதிபகவனுயிர்களின்பொருட்டுஆதிகாலத்திலேசெய்ததுமுதனூலெனக்கூட்டி முடித்துக்கொள்க, காட்சி-அறிவாதலால், கண்டதை - அறிந்ததெனவும், அதுகாரணமாதலால் - செய்ததெனவுசொல்லப்பட்டது. - - - (௬)

முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப், பின்னோன்வேண்டும் விகற்பங்கூறி, யழியாமரபி னதுவழி நூலாகும். *

இது - வழிநூல்இத்தன்மைத்தெனவுணர்த்துகின்றது, (இ-ள்.) முன்னோர் நூலின் - (ஆதிபகவனுமவனருள் வழிப்பட்டோருமாகிய) தொல்லாசிரியர் நூல்களினது, முடிபு - சொல்முடிவுபொருள் முடிவுகள், ஒருங்கொத்து - முழுவது மொத்திருக்கச்சொல்லி, பின்னோன் - வழிநூல்செய்யப்புகுந்தோன், வேண்டும்விகற்பம் - (முதனூலிருக்கவுந்தான் வழிநூல்செய்தற்குக்காரணமாக) வேண்டிய வேறுபாடுகளை, கூறி - (அதனொடுகூட்டிச்) சொல்லி, அழியாமரபினது - (அவ்வேறுபாடுகள் அறிவுடையோர்க்கு ஒத்திருத்தலால்) அழியாதுலகத்து நிலைநிற்குந்தன்மையையுடையது, வழிநூலாம், எ-று.

எனவே முதனூலைமுழுவது மொத்துச்சிறிது வேறுபட்டிருப்பதுவழிநூலென்பதாயிற்று. இதனுள் முன்னோர் நூலினெனப் பன்மையாற்கூறியது, இறைவனூலையும் அவனருள்வழிப்பட்டோர் பலர் நூலையும் முதனூலெனத்தழுவிக்கொளற்கென்க. வேண்டும் விகற்பங்கூறலாவது - பழைய இலக்கணங்களாகியிக்காலத்து வழங்காதாயின் அவற்றை - இறந்ததுவிலக்கலென்னும் உத்தியால்விலக்கியும் - புதிய இலக்கணங்களாகியிக்காலத்து வழங்கிவருமாயின் அவற்றை - எதிரதுபோற்றலென்னும் உத்தியினாலே தழுவியுங் கூறுதல்முதலியவாம். - - - (எ)

இருவர் நூற்குமொருசிறைதொடங்கித், திரிபுவேறுடையது புடைநூலாகும். - - - - *

இது - சார்புநூல் இத்தன்மைத்தென்கின்றது, (இ-ள்.) இருவர்நூற்கும் - இருதிறத்தவரோதிய இருதிறத்து நூல்களுக்கும், ஒருசிறை - ஒருபக்கம், தொடங்கி - (சொல்முடிவு பொருள்முடிவுகளொத்திருக்கும்படி) ஆரம்பிக்கப்பட்டு, வேறு - மற்றப்பக்கங்களெல்லாம், திரிபுடையது - (ஒவ்வாமல்) விகற்பத்தைக்கொண்டிருப்பது. புடைநூலாகும் - சார்புநூலாம், எ-று.

எனவே - முதனூல்வழிநூல்களுக்குச்சிறுபான்மையொத்துப்பெரும்பாலும் வேறுபட்டிருப்பது சார்புநூலென்பதாயிற்று. பான்மை - பங்கு, திரிபுடையது-புடைநூலெனமுடித்துக்கொள்க. (அ)

வெண்பா, முன்னோர்மொழிபொருளே யன்றியவர்மொழியும் - பொன்னேபோற்போற்றுவ மென்பதற்கு - முன்னோரின், வேறுநூல்செய்துமெனு மேற்கோளிலென்பதற்குங் - கூறுபழஞ் சூத்திரத்தின்கொள். - - - - *

இது-வழிநூற்குஞ் சார்புநூற்கும் பொதுவிதிமேற் சிறப்புவிதிகூறுகின்றது, (இ-ள்.) முன்னோர் - முன்புநூல்செய்தவர்கள், மொழிபொருளேயன்றி - சொன்னபொருள்களை (முழுவது மொத்திருக்கவும் ஏகதேசமொத்திருக்கவு மெடுத்துச்சொல்வதும்)அல்

லாமல், அவர்மொழியும் - அவர்சொற்களையும், (அவ்வாறெடுத்துக் கொண்டு) பொன்னேபோற்போற்றுவமென்பதற்கும் - பொன்னைப்போலேபாதுகாக்கக் கடவேமென்பதற்கு ஒரடையாளமாகவும், முன்னோரின் - முன்னோரினின்றும், (முன்னோர்செய்தநூலினின்றும்) வேறுநூல் - (வழிநூல்சார்புநூலென) வேறுநூல்களை, செய்துமெனும் - செய்தோமாயினும், மேற்கோளிலென்பதற்கும் - (இதனுள்) ஆசிரியவசன மில்லையென்பதற்காகவும், (இல்லையென்னும் அக்குற்றம் நீங்குதற்காகவும்) பழஞ்சூத்திரத்தின்கோள் - (அவர்கூறிய) பண்டைச்சூத்திரங்களையும், கூறு - (ஒரோரிடங்களில்) எடுத்துச்சொல், எ-று.

எனவே,வழிநூல் சார்புநூல்களில் முன்னோர்கூறிய சூத்திரங்களுமோரோரிடங்களிலிருக்கவேண்டுமென்பது நிச்சயமாயிற்று இவ்வாறே- கூறியதன்முன்னராய்தப்புள்ளியென்னுந் தொல்காப்பியச்சூத்திரம் இந்நூலிலும் இலக்கணவிளக்கத்திலு மெடுத்துவைக்கப்பட்டது - ஆசிரியவசனம் - மேற்கோள் - பழஞ்சூத்திரச்கோள் - என்பனமூன்றும் ஒரேயருத்தத்தில்வரப்பட்டசொற்கள், அடுக்கிநின்றகுவ்வுருபுகளும் எனீற்றுவினையெச்சமும்-கூறு. என்னுமுன்னிலையேவல்வினைகொண்டுமுடிந்தன- பலர்கூடிப்பேசிக்கொண்டுஒருவனைப்பார்த்துமுடிவுசொன்னதாகஇச்சூத்திரஞ்செய்யப்பட்டது(௯)

அறம்பொருளின்பம் வீடடைதனூற்பயனே. - *

இது - நிறுத்தமுறையே - நாற்பொருட்பயனென்றதை வகுத்துணர்த்துகின்றது, (இ-ள்.) இந்நான்கினையும் - நூலையோதினோர் அடைவது நூலால்வரும் பிரயோசனமாம், எ-று. அறம் - தருமம், பொருள்-அர்த்தம், இன்பம்- காமம், வீடு- மோக்ஷம்.

அறமும்பொருளும் இன்பமும் வீடடைதலும்- நூற்பயனெனினும் அமையும். - - - - (௰)

எழுவகைமதமேயுடன்படன்மறுத்தல், பிறர்தம்மதமேற்கொண்டுகளைவே, தாஅனாட்டித்தனாதுநிறுப்பே, யிருவர்மாறுகோளொருதலைதுணிவே, பிறர் நூற்குற்றங்காட்டலேனைப், பிறிதொடுபடாஅன் றன்மதங்கொளலே. - - *

இது-நிறுத்தமுறையே எழுவகைமதமென்றதை வகுத்துணர்த்துகின்றது, (இ-ள்.) எழுவகைமதமென்பன, உடன்படல் - பிறர்மதத்தினுக்குத் தானுடன்படுதலும். மறுத்தல் - அதனைவிலக்குதலும், பிறர்தம்மதமேற்கொண்டுகளைவு - பிறர்மதத்தையங்கிகரித்துத்தள்ளிவிடுதலும், தானாட்டித்தனாதுநிறுப்பு - தானேயொன்றைத்தாபித்து அதனையிடமிடந்தோறும் நிலைநிறுத்துதலும், இருவர்மாறுகோளொருதலைதுணிவு- இருவராலேமாறுபட்டவிரண்டினுள் ஒன்றைநீக்கி யொன்றைத் துணிந்தெடுத்துக்கொள்ளுதலும், பிறர்நூற்குற்றங்காட்டல்- பிறருடைய நூலிலுள்ள குற்றங்களையெடுத்துக்காட்டுதலும், ஏனை - மற்று, பிறிதொடுபடான்றன்மதங்கொ

ளல் - பிறர்மதத்தோடுகலவாதவனுகித்தன்மதத்தைத் தான் ஆண்டு கொள்வதுமாம், எ-று.

மதமென்பது - மனத்தின்கொள்கை, நூல்தழுவியமதங்கள் பலவாயிருக்கத்தலைமைநோக்கிமதமேழென்பது-நூல்வழக்கு, குற்றம்பத்து- அழகுபத்து- உத்திமுப்பத்திரண்டு என்பனவுமிப்படியே- இவ்வெழுவகைமதங்களுக்கும் குற்றம், அழகு, உத்தி, யென்பனவற்றிற்கும்- உதாரணமிந்தநூலுள்ளே வந்தவந்த இடங்களிற் காட்டப்படும் அந்தந்த இடங்களிற்கண்டுகொள்க - எழுவகைமதமென்பன இவையெனமுடித்துக்கொள்க. (யக)

குன்றக்கூறன்மிகைபடக்கூறல், கூறியதுகூறன்மாறுகொளக்கூறல், வழூஉச்சொற்புணர்த்தன்மயங்கவைத்தல், வெற்றெனத்தொடுத்தன்மற்றொன்றுவிரித்தல், சென்றுதேய்ந்திறுதனின்றுபயனின்மை, யென்றிவையீரைங்குற்றநூற்கே. - *

இது-நிறுத்தமுறையே பத்துக்குற்றமென்றதை வகுத்துணர்த்துகின்றது, (இ-ள்.) குன்றக்கூறல் - பொருள்குறைபடச்சொல்லுதலும், மிகைபடக்கூறல் - சொல் அதிகப்படச்சொல்லுதலும், கூறியதுகூறல்- சொன்னதைத்தானேமறுபடியுஞ்சொல்லுதலும், மாறுகொளக்கூறல் - முன்சொன்னதற்குப்பின்சொல்வது விரோதப்படச்சொல்லுதலும், வழூஉச்சொற்புணர்த்தல் - குற்றமுடைய சொற்களைச்சேர்த்துவைத்தலும், மயங்கவைத்தல்- இதற்குப்பொருளிதுவோஅதுவோவெனத்துணியப்படாமற்சொல்லுதலும், வெற்றெனத்தொடுத்தல் - (பொருளென்னுங் கருக்கொள்ளாமல்) வெளிறுபடச் சொற்களைச்சேர்த்துவைத்தலும், மற்றொன்றுவிரித்தல்-சொல்லத்தொடங்கியதுசிறக்க மற்றொன்றையிடையிலேவிரித்துச்சொல்லுதலும், சென்றுதேய்ந்திறுதல் - செல்லச் செல்லச் சொல்வலி பொருள்வலி தேய்ந்துமுடியச்சொல்லுதலும், நின்றுபயனின்மை- சொல்நின்று அதற்குப்பயனிலாதொழியச்சொல்லுதலும், என்றிவை - எனவிவையாம், ஈரைங்குற்றநூற்கு - நூலுக்குப்பத்துவகைக்குற்றமாவன, எ-று.

ஈரைங்குற்றமிவையெனமுடித்துக்கொள்க. (யஉ)

சுருங்கச்சொல்லல்விளங்கவைத்த, னவின்றோர்க்கினிமைநன்மொழிபுணர்த்த, லோசையுடைமையாழமுடைத்தாதல், முறையின்வைப்பேயுலகமலையாமை, விழுமியதுபயத்தல்விளங்குதாரணத்த, தாகுதனூலிற்கழகெனும்பத்தே. - *

இது நிறுத்தமுறையே பத்துவகையழகென்றதைவகுத்துணர்த்துகின்றது. (இ-ள்.) சுருங்கச்சொல்லல் - சொற்சுருங்கச்சொல்

லுதலும், விளங்கவைத்தல்- (அப்படிச்சொல்லினும் யாவர்க்கும்) பொருள்விளங்கித்தோன்றவைத்தலும், நவின்றோர்க்கினிமை - படித்தவர்க்கு இன்பந்தருதலும், நன்மொழிபுணர்த்தல்- நல்லசொற்களைச்சேர்த்துவைத்தலும், ஓசையுடைமை - சந்தவின்பமுடைத்தாயிருத்தலும், ஆழமுடைத்தாதல்- (பார்க்குந்தோறு மோரோர்பொருளைவெளியிட்டுக்கொண்டு இவ்வளவுதானென்று வரையறுக்கக்கூடாமல்)பொருள் ஆழ்ந்துகிடத்தலும், முறையின்வைப்பு - (சொற்களையும் பொருள்களையும் இயல்களையும் அதிகாரங்களையும் காரணகாரியமுறைப்படி) வரிசைப்படவைத்தலும், உலகமலையாமை - உலகமலைவில்லாமற் சொல்லுதலும், உலகமலைவாவது - உலகநடைக்குவிரோதம், பிரிபொருட்சொற்றொடொன்னும் - அணியியல் தொகை சூத்திரத்தில்-கலையேயுலக நியாயமாகமமெனுமலைவுள்ளுறுத்தவும் வரைந்தனர்புலவர்- என்பதினாலும்,உலகெனப்படுவ தீண்டொழுக்கின்மேற்றே - என்னும் அதன்வகைச்சூத்திரத்தாலுமுணர்க, விழுமியதுபயத்தல் - சிறந்தபயனைத்தருதலும், விளங்குதாரணத்ததாகுதல் - தெரியத்தக்க வுதாரணங்களையுடையதாதலுமாம், நூற்கழகெனும்பத்து - நூலுக்கு அழகென்றுரைத்தபத்து, எ-று.

நூற்குப்பத்துவகையழகாவன - சுருங்கச்சொல்லல்முதலியவாமென முடித்துக்கொள்க. (௰௩)

நுதலிப்புகுதலோத்துமுறைவைப்பே, தொகுத்துச்சுட்டல் வகுத்துக்காட்டல், முடித்துக்காட்டல்முடிவிடங்கூறல், றானெடுத்துமொழிதல்பிறன்கோட்கூறல், சொற்பொருள்விரித்தறொடர்ச்சொற்புணர்த்த, லிரட்டுறமொழிதலேதுவின்முடித்த, லொப்பினமுடித்தன்மாட்டெறிந்தொழுக, லிறந்ததுவிலக்கலெதிரதுபோற்றன், முன்மொழிந்துகோடல்பின்னதுநிறுத்தல், விகற்பத்தின்முடித்தன்முடிந்ததுமுடித்த, லுரைத்துமென்ற லுரைத்தாமென்ற, லொருதலைதுணிதலெடுத்துக்காட்ட, லெடுத்தமொழியினெய்தவைத்த, லின்னதல்லதிதுவெனமொழித, லெஞ்சியசொல்லினெய்தக்கூறல், பிறர்நூன்முடிந்ததுதானுடம்படுத, றன்குறிவழக்கமிகவெடுத்துரைத்தல், சொல்லின்முடிவினப்பொருண்முடித்த, லொன்றினமுடித்தறன்னினமுடித்த, லுய்த்துணர்வைப்பெனவுத்தியெண்ணான்கே. *

இது-நிறுத்தமுறையேயுத்தி முப்பத்திரண்டென்றதை வகுத்துணர்த்துகின்றது, (இ-ள்.) நுதலிப்புகுதல் - இதைச்சொல்லுவேனென்றுகுறித்துத்(துணிந்து)நடத்தலும், (இதனைவடநூலார்

சபதஞ்செய்தலென்பர்) ஒத்துமுறைவைப்பு - இயல்களைக்காரணகாரியமுறைப்படிவைத்தலும், தொகுத்துச்சுட்டல் - பலவற்றையுந்தொகையாக்கிச்சொல்லுதலும், வகுத்துக்காட்டல் - அவ்வாறு தொகுத்ததை யொவ்வொன்றாகப் பிரித்துச்சொல்லுதலும், முடித்துக்காட்டல்- (தான்சொல்லியஇலக்கணவிதிகளிருக்கும்படி இலக்கியங்களை) முடித்துக்காட்டுதலும், முடிவிடங்கூறல்- அதுமுடியுமிடத்தைச்சொல்லுதலும், தானெடுத்துமொழிதல்- (ஆசிரியவசனங்களைத்) தானெடுத்துச்சொல்லுதலும், பிறன்கோட்கூறல் - பிறன்கொண்டகோட்பாட்டைச்சொல்லுதலும், சொற்பொருள்விரித்தல் - சொல்லின்பொருளைவெளிப்படும்படி விரித்துச்சொல்லுதலும், தொடர்ச்சொற்புணர்த்தல் - ஒன்றிற்கொன்று சம்பந்தப்படும்படிசொற்களைச்சேர்த்துவைத்தலும், இரட்டுறமொழிதல் - இருபொருட்படச்சொல்லுதலும், ஏதுவின்முடித்தல் - முடிவுபெறுதலைக்காரணத்தால்முடியவைத்தலும், ஒப்பின்முடித்தல் - (அங்கேசொல்லக்கூடாதாயினுந்) தான்சொல்லுமிலக்கணமொத்திருத்தலால் இயைபில்லாததையும் அவ்விடத்துக் கூட்டிச்சொல்லுதலும், மாட்டெறிந்தொழுகல் - இது இதற்குமாமென மாட்டுதலும், (இதுவுமதுவென எடுத்தெறிந்துபோதலும்) இறந்ததுவிலக்கல் - முன்புள்ளதாய்ப் பின்புவழங்காதாயின் அதனைவிலக்குதலும், எதிரதுபோற்றல் - முன்பில்லதாய்ப் பின்பு வழங்கிவருமாயின் அதைத்தழுவிக்கொள்ளுதலும், முன்மொழிந்துகோடல் - முன்னேரிடத்தொன்றைச்சொல்லிப்பின்வேண்டுமிடந்தோறும் அதனையெடுத்துக்கொள்ளுதலும், பின்னதுநிறுத்தல் - முறைபிறழாமல்முன்வைக்கவேண்டியதைப்பின்வைத்தலும், விகற்பத்தின்முடித்தல் - தலைதடுமாற்றமாகச்சொல்லிமுடித்தலும், முடிந்ததுமுடித்தல் - அவ்வாறுசொல்லிமுடிந்ததைத்தொகுத்துமுடித்தலும், உரைத்துமென்றல் — இவ்விதிபின்புசொல்வோமென்றலும், உரைத்தாமென்றல் - அதுமுன்சொன்னோமென்றலும், ஒருதலைதுணிதல் - இருவராலேமாறுபட்ட விரண்டினுளொன்றைத்துணிந்தெடுத்துக்கொள்ளுதலும், எடுத்துக்காட்டல் - தான்சொல்லப்படுமிலக்கணம் அமைந்தசொற்களையெடுத்துக்காட்டுதலும், எடுத்தமொழியினெய்தவைத்தல் - அவ்வாறெடுத்துச்சொன்ன சொற்களிலே தானேதான்சொல்லுமிலக்கணம்பொருந்தவைத்தலும், இன்னதல்லதிதுவெனமொழிதல் - சந்தேகப்படவந்தவிடத்து இதுவன்று இதுதானெனத் துணிந்துசொல்லுதலும், எஞ்சியசொல்லினெய்தக்கூறல்-சொல்லாதனவற்றிற்குச்சொல்லியவற்றாலிலக்கணம்பொருந்தச்

சொல்லுதலும், (இதைவடநூலார் அருத்தாபத்தியென்பார்) பிற நூன்முடிந்தது தானுடன்படுதல்-பிறநூலிலேசொல்லப்பட்ட விதிகளுக்குத்தான்சம்மதிப்படுதலும், தன்குறிவழக்கமிகவெடுத்துரைத்தல் - தான்புதிதாகச்சொல்லிவழங்குவதையிடமிடந்தோறும் அதிகப்படவெடுத்தெடுத்துச்சொல்லுதலும், சொல்லின்முடிவி னப்பொருண்முடித்தல் - சொல்முடிந்தவிடத்து அதன்பொருளுமுடியவைத்தலும், ஒன்றின்முடித்தறன்னின்முடித்தல் - ஒன்றுகூறப்புகுந்தோன் அதையொத்திலாததனையும் அதற்கு இனமானதையும் அதனொடுகூட்டிமுடித்தலும், உய்த்துணர்வைப்பு - நீட்டித்து ஆராய்ந்துபொருளுணர்வைத்தலும், என - என்று, உத்தியென்னுன்கு - தந்திரவுத்திமுப்பத்திரண்டாம், எ-று.

இவற்றுள் - ஒன்றின்முடித்தறன்னின்முடித்தலென்பதை யிரண்டுஉத்தியாக்கி-உய்த்துணர்வைப்பென்பதை - உய்த்துணர்வைப்பெனுமுத்தியெனவுத்திக்கு விசேடணமாக்கினும் அமையும், மதத்தினுள்ளும்அழகினுள்ளும் வருவனசிலவற்றையுத்தியுள்ளுங்கூறியதென்னெனின் கொள்கைபற்றிமதமென்றும்- சிறப்புப்பற்றி அழகென்றும் இம்மதம் அழகுமுதலியவெல்லாம் புத்திநுட்பத்தினாலேயமைதல்பற்றி யுத்தியென்றுங் கூறப்படுமென்க. அப்படியாயின்மதம் அழகு எல்லாவற்றையும் உத்தியோடுகூட்டிக் கூறுமற் சிலவற்றைக் கூறியதென்னெனின்- அவ்வின்றியமையாத்திகளுள்ளே தலைமைபற்றிக்கூறிய இம் முப்பத்திரண்டினுள் வந்தனவற்றைச்சொன்னோர் ஒழிந்தன ஒழிந்தனவற்றுள் விரவிவருமென்க. (௰௪)

நூற்பொருள்வழக்கொடுவாய்ப்பக்காட்டி, யேற்புழியறிந்திதற்
கிவ்வகையாமெனத், தகும்வகைசெலுத்துதறந்திரவுத்தி. *

இது-உத்திக்கு இலக்கணமுணர்த்துகின்றது, (இ-ள்.) நூற்பொருள்- ஓரிலக்கணநூலினாலேசொல்லப்படும்பொருளை, வழக்கொடு - செய்யுள்வழக்கு உலகவழக்கென்னுமிருவகைவழக்கொடும், வாய்ப்பக்காட்டி - பொருந்தக்காண்பித்து, ஏற்புழியறிந்து - (அதைமற்றோரிலக்கியநூலிலும்) பொருந்துமிடத்தை யறிந்து, (பொருந்தப்பார்த்து) இதற்கிவ்வகையாமென - இவ்விடத்திற்குஇவ்வகையுத்தியாமென்றெண்ணி, தகும்வகைசெலுத்துதல் - தக்கபடியாக அவ்விடத்திலேயந்தவுத்தியைச்செலுத்துவது, தந்திரவுத்தி - நூலுத்தியாம். எ-று.

உத்தி - என்றது ஆகுபெயர் - தந்திரமென்றது - நூல், செலுத்துவது - உத்தியெனமுடித்துக்கொள்க. (௰௫)

நேரினமணியை நிரல்படவைத்தாங், கோரினப்பொருளையொருவழிவைப்ப, தோத்தெனமொழிப வுயர்மொழிப்புலவர். *

இது - ஒத்தென்கின்ற நூலுறுப்பினிலக்கணமுணர்த்துகின்றது, (இ-ள்.) நேர் - சமமான, இனமணியை - ஒருசாதிமணிகளை, நிரல்பட - வரிசைப்பட, வைத்தாங்கு - வைத்ததுபோல, ஓரினப்பொருளை - ஒருசாதியாயுள்ளபொருள்களை, ஒருவழிவைப்பது - ஒ

ருவழிப்படவைக்கப்படுவது, ஒத்தெனமொழிப - இயலென்று சொல்லுவர், உயர்மொழிப்புலவர் - உயர்ந்தமொழி யிலக்கணங்களை யுணர்ந்தபுலவர். எ-று.

ஒத்து - இயல், உறுப்பு - அங்கம். (௰௬)

ஒருநெறியின்றிவிரவியபொருளாற், பொதுமொழிதொடரி
ன துபடலமாகும். - - - - *

இது - படலமென்னும் நூலுறுப்பி னிலக்கணமுணர்த்துகின்றது, (இ-ள்.) ஒருநெறியின்றி- ஒருவழிப்படாமல், விரவியபொருளால் - கலந்தபொருளோடு, பொதுமொழிதொடரின்- (பலபொருள்களையுணர்த்தும்) பொதுச்சொற்கள்மிகுதியுந்தொடர்ந்துவருமாயின், அதுபடலமாகும் - அதுபடலவுறுப்பாம். எ-று.

எனவேஇடலென்றது-ஒருசாதிப்பொருள்கொண்டதென்பதும்,படலமென்பது-பலசாதிப்பொருள்கொண்டதென்பதுமாயிற்று. இயலென்பதற்குஉதாரணம்,இந்தநூலிலே எழுத்தியலென்பதில் எழுத்திலக்கணமேவருதலும், பதவியலெனபதிற்பதத்திலக்கணமேவருதலும், புணரியலென்பதிற் புணர்ச்சியிலக்கணமேவருதலும், படலமென்பதற்கு உதாரணம்,படலவுறுப்பைக்கொண்டிருக்கின்ற காவியங்களிலே (இதைப்போலவொருவழிப்படாமல்) பாட்டுடைத்தலைவன் கதையைச்சொல்வதுமல்லாமல்-மலைவருணனை கடல்வருணனை நாடுநகரமுதலிய பலவருணனைகளுங்கலந்துவருதலுங்காண்க. (௰௭)

சில்வகையெழுத்திற்பல்வகைப்பொருளைச், செவ்வனாடியிற்
செறித்தினிதுவிளக்கித், திட்பநுட்பஞ்சிறந்தனசூத்திரம். *

இது - சூத்திரத்திற்கு இலக்கணமுணர்த்துகின்றது. (இ-ள்.) ஆடியில் - சிறியகண்ணாடியைப்போல, சில்வகையெழுத்தில் - சிலவெழுத்துக்களால்முடிந்துசிறுகியசெய்யுளில், பல்வகைப்பொருளை- பலவகைப்பட்டுஅகன்றபொருளை, செவ்வன் - செவ்வாக, (ஒழுங்காக) செறித்து - அடக்கி, இனிதுவிளக்கி- (பார்ப்பவர்க்கு) இனிதாக அப்பொருள்விளங்கச்செய்து, திட்பம்- (குற்றமில்லாததினாலே) சொல்வலிபொருள்வலிகளும், நுட்பம் - (ஆழமுடைத்தாதலால்) பொருள் நுணுக்கங்களும், சிறந்தனசூத்திரம் - சிறந்துவருவன சூத்திரயாப்புக்களாம். எ-று.

சில்வகையெழுத்தென்ற பொருளடையாற் சிறியகண்ணாடியென்பது பெறப்பட்டது, சிறியகண்ணாடிபெரியதேகமுதலியவற்றின் சாயையைச் செவ்வாகச்செறித்து இனிதாகவிளக்கினாற்போல - என உவமையையும் விரித்துக்கொள்க. செவ்வன்செறித்தெனக்கூட்டுக, இவ்வாறுவருதற்கு உதாரணம், இச்சூத்திரத்துள்ளுங்காண்க. சிறந்தனசூத்திரம் எனமுற்றும்பயனிலையுமாக முடித்துக்கொள்க. (௰௮)

ஆற்றொழுக்கரிமானோக்கந்தவளைப், பாய்த்துப்பருந்தின்வீ
ழ்வன்னசூத்திரநிலை. *

இது - அச்சூத்திரங்கள் நிற்கும்நிலைகளை யுவமையாலுணர்த்துகின்றது. (இ-ள்.) ஆற்றொழுக்கு- (இடையறுமல் ஒருமுகமாக வேயோடுகின்ற) ஆற்றினது நீரோட்டத்தையும், அரிமாநோக்கம்- (முன்னும்பின்னுந்தெரிகின்ற) சிங்கத்தின் பார்வையையும், தவளைப்பாய்த்து- (இடைவிட்டுக்குதிக்கின்ற) தவளையின் பாய்ச்சலையும், பருந்தின்வீழ்வு - (தலைகீழாகவிழுகின்ற) பருந்தினது வீழ்ச்சியையும், அன்ன- ஒப்பனவாம், சூத்திர நிலை — சூத்திரங்களொன்றோடொன்றுதொடர்ந்து நிற்கும்நிலைகள், எ-று.

இவ்வாறுநிற்பதுஇந்நூலுள்வந்தவந்தஇடங்களிற்காட்டப்படும் அந்தந்தவிடங்களிற் கண்டுகொள்க. இச்சூத்திரமுடிபும் இனிவருஞ்சூத்திரமுடிபும்மேலைச்சூத்திரமுடிபுபோலக்கொள்க. (௰௯)

பிண்டந்தொகைவகைகுறிசெய்கை, கொண்டியல் புறனடைக்கூற்றனசூத்திரம். - - - *

இது - தொடர்ந்துநிற்கும்போது அச்சூத்திரங்களுக்குக்காரணவகையால்வரும் பெயர்வேறுபாடுஉணர்த்துகின்றது.(இ-ள்.)பிண்டம் - (பலதொகைகளையுமுள்ளடக்கிக்கொண்டுபொதுப்படநிற்கும்) பிண்டச்சூத்திரமெனவும், தொகை - பலவற்றையுந்தொகுத்துக்கூறுந்தொகைச்சூத்திரமெனவும், வகை - அத்தொகையினைவேறுவேறுவகைப்படவகுத்துக்கூறும் வகைச்சூத்திரமெனவும், குறி - பலவற்றையுங்குறித்து அறியவருங் குறிச்சூத்திரமெனவும், செய்கை - புணர்தல் முடிதல் முதலியசெய்கைப்படநிற்குஞ்செய்கைச்சூத்திரமெனவும், கொண்டியல்புறனடை - இவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு இவற்றின்புறத்துஅடையாய்வரும் புறனடைச்சூத்திரமெனவும், (சொல்லப்படும்) கூற்றனசூத்திரம் - கூறுகளையுடையனவாம்மேற்கூறியசூத்திரங்கள், எ-று. [உதாரணம்,] நன்கியம்புவனெழுத்தே - என்றாற்போல்வன - பிண்டச்சூத்திரம், பன்னிருபாற்றதுவே- என்றாற்போல்வன - தொகைச்சூத்திரம், எண்ணிலக்கணமுதலாகப்பிரித்தோதியசூத்திரங்கள்வகைச்சூத்திரங்கள், அம்முதலீராறுவி-எ-ம்-வல்லெழுத்தென்ப க ச ட த ப ற-எ-ம்- அறிதல் அளவாய்வருஞ்சூத்திரங்கள்-குறிச்சூத்திரங்கள், னைவலினம்வாட்டறவும் - எ-ம், எழுவாயுருபுதிரிவில்பெயரே வினைபெயர் வினாக்கொளலதன்பயனிலையே - எ-ம்- முதலறுபெயரலதேற்பிலமுற்றே.எ-ம்- வருவனபோல்வன-செய்கைச்சூத்திரங்கள்,மொழியாய்த்தொடரினும்-எ-ம்- இதற்கிதுமுடிபென்று- எ-ம்- சொற்றொறு மிற்றிதன்பெற்றி- எ-ம்- பழையன்கழிதலும் - எ-ம்- வருவனபோல்வன- புறனடைச்சூத்திரங்கள், இனிப்பிண்டம்-தொகை -

வகை-புறனடை. என்னு மிந்நான்குங் குறியுள்ளுஞ்செய்கையுள்ளு மடங்கும் அடங்கவே எல்லாச்சூத்திரங்களும் குறிச்சூத்திரம்-செய்கைச்சூத்திரமென விரண்டாயடங்குமெனவுங்காண்க. (௨௰)

பாடங்கருத்தேசொல்வகைசொற்பொரு, டொகுத்துரையுதார
ணம்வினாவிடைவிசேடம், விரிவதிகாரந் துணிவுபயனோ, டாசி
ரியவசனமென் றீரேழுரையே. - - *

இது - உரையினது பொதுவிலக்கண முணர்த்துகின்றது. (இ-ள்.) பாடம் - உரைசெய்தற்பொருட்டெடுத்தெழுதியமூலமும், மன்றுபறித் துண்ணேலென்பதை - மண்பறித் துண்ணேலெனப் பாடமோதுவாருமுளரென்றாற்போல்வனவும்-பாடவுரை, கருத்து- என்பதிதன்கருத்தெனச்சுருக்கியெழுதுமுரை-கருத்துரை, சொல்வகை - குன்றியக்கால் என்பது குன்றிக்காலென விகாரப்பட்டு நின்றதென்றாற்போலச்சொல்லுக்களைக் குறித்தெழுது முரைசொல்வகையுரை, சொற்பொருள் - சொல்லுக்குப் பொருளெழுதுமுரை சொற்பொருளுரை, இதைப்பதப்பொருளுரை பதவுரை எனவும்வழங்குவர், தொகுத்துரை - மதிமருட்டுஞ்சிறுநுதற்பேரமர்க்கட் செய்யவாயைய நுண்ணிடையாய் என்பதற்கு அறிவினைமயக்குஞ் சிறுநுதன்முதலிய வுறுப்புக்களையுடையாய் எனத்தொகுத்தெழுதுமுரை-தொகுத்துரை, இதைப்பொழிப்புரையெனவும்வழங்குவர், உதாரணம் - உதாரணமெடுத்தெழுதுமுரை உதாரணவுரை, இதைமேற்கோளுரை-காட்டுரை-எடுத்துக்காட்டுரை- எனவும்வழங்குவர், வினா-என்னுதலிற்றோவெனின், எ-ம், பொதுப்பாயிரநால்வகைப்படுமென்பாருமுளராலோவெனின், எ-ம், வினாவியெழுதுமுரை வினாவுரை, விடை - இதுகருதிற்று எ-ம், இதுகருதியென்க எ-ம், எதிர்மொழியெழுதுமுரை - விடையுரை, விசேடம்-சூத்திரத்துட்பொருளன்றி அங்கேவேண்டியிருந்தால் பெய்துரைப்பது-விசேடவுரை, இதைப்பெய்துரையெனவும்வழங்குவர், விரிவு- வேற்றுமையுருபுமுதலியனதொக்குநிற்பின் அவற்றை விரித்தெழுதுவது விரிவுரை, அதிகாரம்- அதிகாரத்தால்வருவிக்கப்பட்டதென அதிகாரத்தொடுபொருந்தக்காட்டியெழுதுமுரை-அதிகாரவுரை, துணிவு - சந்தேகப்படநின்றவிடத்து இதற்கு இதுவேபொருளெனத் துணிந்து எழுதுமுரை-துணிவுரை, பயன்-இப்படிச்சொன்னதினாலே வந்தபயனிதுவெனக்காட்டியெழுதுமுரை-பயனுரை, ஆசிரியவசனம் - ஆசிரியவசனங்களையெடுத்தெழுதுவது - ஆசிரியவசனவுரை, என்றீரேழுரை- எனப்பதினான்குவகைப்படுமுரை, எ-று. (௨௧)

கருத்துப்பதப்பொருள்காட்டுமூன்றினு, மவற்றொடு வினாவி

டையாக்கலானுஞ், சூத்திரத்துட்பொருடோற்றுவகாண்டிகை. *

இது - நிறுத்தமுறையே காண்டிகையுரையிலக்கண முணர்த்துகின்றது. (இ-ள்.) கருத்து - கருத்துரையும், பதப்பொருள்- பதவுரையும், காட்டு - உதாரணவுரையும், மூன்றினும்- ஆகியமூன்றினும், அவற்றொடு - அம்மூன்றினோடேகூட, வினாவிடையாக்கலானும் - வினாவுரைவிடையுரைகளைக்கூட்டியுரைத்தலாலும், சூத்திரத்துட்பொருள் - சூத்திரத்துள்ளேமறைந்திருந்தபொருளை, தோற்றுவகாண்டிகை-வெளிப்படுத்துவனகாண்டிகையுரைகளாம். எ-று.

மூன்றினுமெனப்பிரித்தது- வினாவிடையிரண்டுமின்றியுங்காண்டிகையுரைவழங்கப்படுமென்பதும் ஐந்துங்கூடிவருவது ஐங்காண்டிகையுரையென்பதுந் தெரிவித்தற்கெனக்காண்க. (௨௨)

சூத்திரத்துட்பொருளன்றியுமாண்டைக், கின்றியமையா யாவையும்விளங்கத், தன்னுரையானும்பிறர்நூலானு, மையமகலவைங்காண்டிகையுறுப்பொடு, மெய்யினையெஞ்சாதிசைப்பதுவிருத்தி.

இது - நிறுத்தமுறையே விருத்தியுரையிலக்கண முணர்த்துகின்றது, (இ-ள்.) சூத்திரத்துட்பொருளன்றியும்- சூத்திரத்துள்ளிருந்தபொருளைவெளிப்படுத்துவதன்றியும், ஆண்டைக்கு - அவ்விடத்துக்கு, இன்றியமையாயாவையும்- இல்லாமற்கூடாத பொருள்களெல்லாவற்றையும், விளங்க-தெரியும்படியாக, தன்னுரையானும்- தானெழுதுமுரையினாலும், பிறர்நூலானும் - ஆசிரியவசனங்களாலும், ஐங்காண்டிகையுறுப்பொடு - முன்சொல்லப்பட்ட ஐங்காண்டிகையுறுப்பைந்தினோடும், ஐயந்தீர - சந்தேகந்தீர, மெய்யினை - பொருளை, எஞ்சாது- குறையாமல், இசைப்பதுவிருத்தி - சொல்லப்படுவதுவிருத்தியுரையாம். எ-று.

சூத்திரத்துட்பொருளன்றியுமென்றதனால் - மேலேபொதுவிலக்கணமாகச்சொல்லப்பட்ட பதினான்குவகையுங்கொண்டுநிற்பது விருத்தியுரையென்பது பெறப்பட்டதென்பாருமுளர். அங்ஙனமாயின் காண்டிகைக்குச்சிறப்புவிதிசொல்லி விருத்திக்குச்சிறப்புவிதிசொல்லவந்தவர் மாட்டெறிந்து - அப்பதினான்கும் விருத்தியாகும்- எனக்கூறவேண்டும். அங்ஙனங்கூறாததினாலும் பதினான்கென்பது பொதுவிலக்கணமாதலாலும் அஃதிச்சூத்திரக்கருத்தன்று, தன்னுரையானும் பிறர்நூலானுமைங்காண்டிகையுறுப்பொடென்றதினால் - ஐங்காண்டிகை யுறுப்பின்மேற்பட்டுவருவனவெல்லாம் விருத்தியுரையென்பதே யிதன்கருத்தெனக்காண்க. - - - (௨௩)

வெண்பா, பஞ்சிதன்சொல்லாப் பனுவலிழையாகச்-செஞ்சொற்புலவனே சேயிழையா - வெஞ்சாத, கையேவாயாகக்கதிரே மதியாக - மையிலாநூன்முடியுமாறு. - - *

இது- நூலென்னும்பெயர்வந்தவாறுணர்த்துகின்றது (இ-ள்.) பஞ்சி - பஞ்சானது, தன்சொல்லா - அவனுடையவார்த்தையாகவும், பனுவல்- நூலகத்துள்ளசெய்யுளானது,(செய்யுள்-பாட்டு,) இ

ழையாக- பஞ்சிநூலாகவும், செஞ்சொற்புலவன் -செவ்வியசொற்களைஆராய்கின்றபுலவன், சேயிழையா - நூல்நூற்கு மடந்தையாகவும், எஞ்சாத - குறையாத, கைவாயாக - நூல்நூற்குங்கைபுலவன் வாயாகவும், கதிர்மதியாக - நூற்குங்கதிர்புலவன் அறிவாகவும், மையிலாநூன்முடியுமாறு - குற்றமில்லாதநூல்முடியுந்தன்மையிறு, எ-று.

சுட்டுப்பெயர்ப்பயனிலை வருவிக்கப்பட்டது, ஆதலால்- நூலென்றது உவமையாகுபெயரெனக்காண்க. (௨௪)

வெண்பா, உரத்தின்வளம்பெருக்கி யுள்ளியதீமைப் - புரத்தின்
வளமுருக்கிப்பொல்லா - மரத்தின் - கனக்கோட்டந் தீர்க்குநூ
லஃதேபோன்மாந்தர் -மனக்கோட்டந்தீர்க்குநூன்மாண்பு. *

இதுவுமது- (இ-ள்.) புரத்தினுரத்தின்வளம்பெருக்கி - சரீரத்தினதுஞானவளத்தைப்பெருகச்செய்து, உள்ளிய- நினைக்கப்பட்ட, தீமைவளம் - தீமையாகியஅஞ்ஞானவளத்தை, முருக்கி - கொன்று, பொல்லாமரத்தின் - கெட்டமரத்தினுடைய, கனக்கோட்டம்- மிக்ககோணலை, தீர்க்குநூலஃதேபோல் - போக்குகின்ற எற்றுநூலின் அம்மாட்சிமைபோலவே, மாந்தர்மனக்கோட்டம் - மனிதருடையமனக்கோணலை, தீர்க்கும் - போக்கும், நூன்மாண்பு - கல்விநூலினதுமாட்சிமை. எ-று.

ஆதலால்- நூலென்றது உவமையாகுபெயராமென்க. பெருக்கி- முருக்கி- மனக்கோட்டந்தீர்க்கும்நூன்மாண்பெனவும், புரத்தினதுரத்தினவளமெனவுங்கூட்டுக. நூலஃதே போலென்றவிடத்து நூலின் அம்மாட்சியேபோலவென விரித்து - தீர்க்கும்நூன்மாண்பு எனமுடித்துக்கொள்க. (௨௫)

குலனருடெய்வங்கொள்கைமேன்மை, கலைபயிறெளிவுகட்டுரைவன்மை, நிலமலைநிறைகோன்மலர்நிகர்மாட்சியு, முலகியலறிவோடுயர்குணமினையவு, மமைபவனூலுரையாசிரியன்னே. *

இது - நிறுத்தமுறையேஆசிரியனதுவரலாறு உணர்த்துகின்றது, (இ-ள்.) குலனருடெய்வங்கொள்கைமேன்மை - மேன்மையாகியகுலமும் மேன்மையாகியகருணையும் மேன்மையாகிய கடவுள்வழிபாடும், கலைபயிறெளிவு - பலநூல்களிற்பழகியதேற்றமும், கட்டுரைவன்மை - நூற்பொருளைமாணக்கர்க்குளளிதினுணர்த்தும்உரைவலியும், (இதனைவடநூலார்போதநாசக்தியென்பர்) நிலமலைநிறைகோன் மலர்நிகர்மாட்சியும் - நிலத்தையும்மலையையும் துலாக்கோலையும் பூவையுமொத்தமேன்மையும், உலகியலறிவோடு - உலகநடையையறிகின்ற அறிவுடனே, உயர்குணம் - உயர்ந்தகுணமும்,

**இனையவும் - இவைபோல்வனவும், அமைபவன் - பொருந்தியிருப்பவன், நூலுரையாசிரியன் - நூலைக்கற்பிக்கவல்ல ஆசிரியனும். எ-று.**

**இதனுள்** - மேன்மையென்றதைக் குலனருடெய்வங்கொள்கையென்பனவற்றிற்குவிசேடணமாக்குக, பின்னர்க்கலையயிறெளிவு கட்டுரைவன்மைமலர் நிகர்மாட்சியெனவரைந்தோதியதனால் - முன்னர்க்குலனுமருளுந்தெய்வங்கொள்கையுமேன்மையெனவரைந்தோதல்வேண்டிற்று. இவ்வாறன்றிக்குலனுமருளுந்தெய்வங்கொள்கையுமேன்மையும், அமைபவனெனின்மயங்கவைத்தலென்னுங்குற்றமாம் - அன்றியும் உயர்குணமினையவுமமைபவனென்றதில்மேன்மையடங்குதலால், கூறியது கூறலுமாம். இனி (சூத்திரம்) வலம்புரிமுத்திற்குலம்பிறப்பும், வான்யாறன்ன தூய்மையும்வான்யாறு---பன்னருஞ்சிறப்பினல்லாசிரியர், எனவிக்குற்றந்தீர்தற்பொருட்டு வரைந்தோதியதுகாண்க. (உசு)

தெரிவரும்பெருமையுந்திண்மையும்பொறையும், பருவமுயற்சி
யளவிற்பயத்தலு, மருவியநன்னில்மாண்மாகும்மே. - *

இது - மேற்சொல்லிய உவமையை விரித்துணர்த்துகின்றது, (இ-ள்.) தெரிவரும்பெருமையும் - (நின்றவிடத்துநின்று) காணுதற்கரியவுருவப்பரப்பின்பெருமையும், தெரிவருந்திண்மையும் - இவ்வளவென்றுகாணக்கூடாத உள்வலியும், தெரிவரும்பொறையும் - அவ்வாறுகாணக்கூடாதகனமும், (இதற்குப்பொறைமையெனக்கொளினும்) அமையும், பருவமுயற்சியளவிற்பயத்தலும் - காலத்தொடுபொருந்தச்செய்யு முயற்சியளவிற்குத்தக்கபடிபயனைத்தருதலும், மருவியநன்னில்மாண்பாகும் - நல்லநிலந்தழுவிய மாட்சிமையாம். எ-று.

மாட்சிமை-நற்குணம், இது உவமையாதலால் - தெரிவருங்கல்வியின் பெருமையும்-தெரிவரியகல்வியினுள்வலியும்- தெரிவரியகல்வியின்கனமும்- மாணாக்கர்செய்கின்றகல்விமுயற்சிக்குத்தக்கபடி யவர்க்குநூற்பயனளித்தலும்- ஆசிரியனது மாட்சியெனப்பொருளுரைத்துக்கொள்க. நன்னிலமாண்பு பயத்தலுமாமெனமுடித்துக்கொள்க. (உஎ)

அளக்கலாகாவளவும்பொருளுந், துளக்கலாகாநிலையுந்தோற்ற
மும், வறப்பினும்வளந்தருஉம்வண்மையுமலைக்கே. *

இதுவுமது - (இ-ள்.) அளக்கலாகாவளவும் - மதிக்கக்கூடாத நிறையளவைக்கொண்டிருத்தலும், அளக்கலாகாப்பொருளும் - எண்ணக்கூடாத பல்வகைப்பொருள்களையுடைத்தாயிருத்தலும், துளக்கலாகாநிலையும் - அசைக்கப்படாதநிலையும், தோற்றமும் - நெடுந்தூரந்தோன்றுகின்றவுயரமும், வறப்பினும் வளந்தரும்வண்மையும் - மழைபெய்யாது உலர்ந்துவிடினுந்தன்னிடத்துள்ள உயிர்களுக்குநீர்வளத்தைத்தருகின்றவள்ளன்மையும், (வள்ளன்மை-ஈகை) மலைக்கு - மலைக்குப்பொருந்தியமாட்சியாம். எ-று.

**இது** உவமையாதலால்-மதிக்கக்கூடாதகல்வியளவும் - மதிக்கக்கூடாதபலநூற்பொருளுடைமையும்- பிறரால்தள்ளியுரைக்கக்கூடாதகல்வியினுறுதிநிலையும், நெடுந்தூரத்திலும்விளங்குகின்ற கல்வியினுயர்புகழும், பொருள்வருவாய்சுருங்கினுமனங்கோணாமலே மாணாக்கர்க்குநூற்பொருள் அளித்தலும், ஆசிரியனுக்குப்பொருந்திய மாட்சியெனப்பொருளுரைத்துக்கொள்க. இதனுள்மாட்சியென்பது குறைந்துநின்றது, வண்மையும், மலைக்குமாட்சியென முடித்துக்கொள்க. (உஅ)

ஐயந்திரப்பொருளையுணர்த்தலு, மெய்ந்நடுநிலையுமிகு நிறைகோற்கே. *

இதுவுமது - (இ-ள்.) ஐயந்திரப்பொருளையுணர்த்தலும் - தன்னகப்பட்டபொருளைப்பிறர்க்கு இவ்வளவினையுடையது இதுவெனச்சந்தேகந்திரத்தெரிவித்தலும், மெய்ந்நடுநிலையும்- (அவ்வாறுதெரிவிக்கும்போது) மெய்மையோடுகூடியொருபாற்கோணாமல்நடுவாகநிற்பதும், (இங்கேநடுநிலைதராசுமுள்ளொருபுறத்துஞ்சாயாமல் நடுவாகநிற்பது) மிகுநிறைகோற்கு - நிறைகோலுக்குமிக்கமாட்சியாம். எ-று.

இது உவமையாதலால்-மாணாக்கர்க்குத்தான்கற்றகல்விப்பொருளைச் சந்தேகநீங்கும்படியறிவித்தலும், அவ்வாறு அறிவிக்கும்போது மனக்கோட்டமின்றிமெய்மையோடுகூடி நடுவுநிலையின்பாற்படுதலும், ஆசிரியனுக்குமிக்கமாட்சியெனப்பொருளுரைத்துக்கொள்க. ஆசிரியனிடத்தநடுநிலையாவது - கொள்வோனுணர்வு சிறிதாகிற்பெரிதாகவும் பெரிதாகிற்சிறிதாகவும் உணர்த்தப்புகாமையும், ஒருவன்மாட்டுவிருப்பாகவும் ஒருவன்மாட்டுவெறுப்பாகவும் உணர்த்தப்புகாமையுமாம். இதனுள்ளுவமித்தசூத்திரத்தின்னும் மாட்சியென்பதுகுறைந்துநின்றது. மேலைச்சூத்திரப்போலவே யிதனையுமினிவருஞ்சூத்திரத்தையுமுடித்துக்கொள்க. (௨௯)

மங்கலமாகியின்றியமையா, தியாவருமகிழ்ந்து மேற்கொள
மெல்கிப், பொழுதின்முகமலர்வுடையதுபூவே. - *

இதுவுமது - (இ-ள்.) மங்கலமாகி - மங்கலமென்றெடுத்ததாகி, (யாவரும்நற்கருமத்திற்கென்றுஎடுத்ததாகி) இன்றியமையாது- யாதொருநற்கருமமும்அதுவில்லாமற்கூடாததாகி, யாவருமகிழ்ந்துமேற்கொள - கண்டபொழுதேயெல்லாருமனமகிழ்ந்து தலைமேற்சூடிக்கொள்ள, மெல்கி- கனஞ்செய்யாதிருந்து, பொழுதின்முகமலர்வுடையதுபூ- தப்பாமலேயதன்காலத்திற்முகமலர்ச்சியையுடையதுபூவினதுமாட்சியாம், எ-று.

இது உவமையாதலால் - கல்வியின்நற்கருமத்திற்கு இன்றுனென்றுயாவராலுமெடுக்கப்பட்டவனாகி, அக்கருமம் அவனின்றிமுடியாததாகி, அவனைக்கண்டமாத்திரமே யாவருந்தலைமேற்கொண்டுவணங்க, அதனாற்செருக்கிக்கனங்காட்டாதவனாகித், தான்கற்றநூற்பொருளைமாணாக்கர்க்காயினும் பிறர்க்காயினுமுணர்த்தவருங்காலத்தில் முகமலர்ச்சியையுடையவனாதல், ஆசிரியன்மாட்சியெனப்பொருளுரைத்துக்கொள்க. மங்கலம்- நன்மை, மங்கலமென்றெடுத்ததற்குதாரணம், பூத்தேர்பொான்-எ-ம்- பூமலியசோகின்- எ-ம்- மலர்தலையுலகின் எ-ம்- கந்தமடிவில்கடிமலரெனவுங்காண்க. (௩௰)

மொழிகுணமின்மையுமிழிகுணவியல்பு, மழுக்காறவாவஞ்சமச்சமாடலுங், கழற்குடமடற்பனைபருத்திக்குண்டிகை, முடத்தெங்கொப்பனமுரண்கொள்சிந்தையு, முடையோரிலராசிரியராகுதலே. - - - *

இது- ஆசிரியராகாரிவரெனவுணர்த்துகின்றது, (இ-ள்.) மொழிகுணமின்மையும் - மேலேசொல்லியநற்குணங்களில்லாமையையும், இழிகுணவியல்பும் - தாழ்ந்தகுணங்களினியற்கையையும், அழு

க்காறு - பொறாமையும், அவா - ஆசையும், வஞ்சம் - வஞ்சனையு
ம், அச்சம்-அவைக்குஅஞ்சுதலும், ஆடலும்-ஆகிய இவற்றைத்தமக்
கு உரிமையாகஆளுதலையும், கழற்குடமடற்பனைபருத்திக்குண்டி
கைமுடத்தெங்கு- ஒப்பனமுரண்கொள்சிந்தையும்-இந்தநான்கை
யுமொப்பனவாகியமாறுபாட்டுநினைப்பையும், உடையோரிலராசிரி
யராகுதல் - உடையவராயினோர்ஆசிரியராகார், எ-று.
உடையோர்ஆசிரியராகுதலிலரெனமுடித்துக்கொள்க. (௩௧)

பெய்தமுறையன்றிப்பிறழவுடன்றருஉஞ்,செய்திகழற் பெய்கு
டத்தின் சீரே. - - - - *

இது - மேற்சொல்லியவுவமையை விரித்துணர்த்துகின்றது,
(இ-ள்.) பெய்தமுறையன்றி - முன்னேபோடும்போதிருந்தவரி
சைக்கிரமந்தப்பி, பிறழ - பிறழும்படியாக, உடன்றருஞ்செய்தி -
(கொட்டும்போது) விரைவிலேதருஞ்செய்கை, கழற்பெய்குடத்தி
ன்சீர் - கழற்காய்நிரப்பியகுடத்தின்குணம், எ-று.

இது உவமையாதலால் - தாங்கற்கும்போது கற்றநூல்வரிசைப்படி தம்மாணாக்க
ளைக்கற்பிக்கப்புகாமல் - பின்முன்னாகவும் முன்பின்னாகவும் விரைந்துகற்பிக்கப்புகுதல்
ஆசிரியராகாதவருடைய மாறுபாட்டுநினைப்பெனப்பொருளுரைத்துக்கொள்க. தரும்-
என்னும்பெயரெச்சஞ் சந்தவின்பம்நோக்கித் தரூஉம்- எனக்குறில்நெடிலாயளபெழு
ந்துநின்றது- செய்தி-சீரெனமுடித்துக்கொள்க. - - (௩௨)

தானேதரக்கொளினன்றித்தன்பான், மேவிக்கொளக்கொடாவி
டத்ததுமடற்பனை. - - - - *

இதுவுமது- (இ-ள்.) தானேதர- அதுவாகவேகொடுக்க,கொ
ளினன்றி - கொண்டாலல்லது, தன்பால் - அதனிடத்திலேபோய்,
மேவிக்கொள - விரும்பியேற்க, கொடாவிடத்தது - கனிகொடா
மைக்குஏதுவாகிய இடத்தையுடையது, மடற்பனை - மடலோடுகூ
டியபனையாம், எ-று.

மடல் - பனையேடு, அது ஆகுபெயராய்அதனையுடையமட்டைமேல்நின்றது,கனி
கொடாமைக்கு இடமுமோர்காரணமென்றுசொல்லவந்தவர்- கொடாவிடத்ததென்று
ர், அவ்விடமாவது - இடுகாடு-சூழவுமுள்ளமுள்ளகாடு-முதலியஇடம். இது உவமையாத
லால் - தாமாகவேசொல்லக்கொள்வதல்லதுமாணாக்கர்விரும்பிப்போய்க்கேட்கச்சொ
ல்லாமைக்கேதுவாகிய இடத்திலிருக்குமாறுபாட்டுநினைப்பையுடையவரெனப்பொருளு
ரைத்துக்கொள்க. இங்கேசொல்லாமைக்கேதுவாகிய இடத்திருப்பது-பாடஞ்சொல்ல
வீற்றிருக்கும் ஆசனத்தைவிட்டுப்போய் அந்தப்புரமுதலிய இடங்களிலிருப்பது. (௩௩)

அரிதிற்பெயக்கொண்டப்பொருடான்பிறர்க், கெளிதீவில்லது
பருத்திக்குண்டிகை. - - - *

இதுவுமது - (இ-ள்.) அரிதின் - அரிதாக, பெயக்கொண்டு -
செலுத்தக்கொண்டு, அப்பொருள் - அந்தப்பஞ்சியென்னும்பொ
ருளை, தான்- அது, பிறர்க்கெளிதீவில்லது- பிறர்க்குஎளிதாகக்கொ
டாதது, பருத்திக்குண்டிகை - பருத்தியடைத்தகரகம், எ-று.

எனவேவாய்சிறிதாதலால் சிறிதுசிறிதாகவே செலுத்தக்கொண்டு சிறிதுசிறிதாகவேகொடுப்பதென்பதாயிற்று, இது உவமையாதலால்-தம்முணர்வுசிறிதாதலாற்சிறிது சிறிதாகத்தாங்கற்றவாறே, மாணாக்கனுணர்வுபெரிதாயினும் ஈயப்புகுதல்- ஆசிரியராகாதவருடைய மாறுபட்ட நினைப்பெனப்பொருளுரைத்துக்கொள்க. (௩௪)

பல்வகையுதவிவழிபடுபண்பி, னல்லோர்க்களிக்குமது முடத்தெ
ங்கே. - - - - - *

இதுவுமது - (இ-ள்.) பல்வகையுதவி - பலவிதத்திலுமுதவி செய்து, வழிபடுபண்பின் - வழிபாடுசெய்யுந்தன்மையினின்றும், (போற்றிவளர்க்குந்தன்மையினின்றும்) அல்லோர்க்களிக்குமது-அல்லாதபிறருக்குக்கனிகளைக்கொடுக்கும் அத்தன்மையையுடையது, முடத்தெங்கு - (வழியருகே) வளைந்துவந்திருக்குந்தென்னமரம், எ-று.

அது என்பது இங்கேகுறிப்புவினையாலணையும்பெயராய்நின்று முடத்தெங்குஎன்னும்பெயர்கொண்டுமுடிந்தது, இது உவமையாதலால்-பல்வகையுதவிவழிபாடுசெய்யும் மாணாக்கர்க்கின்றிப் பிறர்க்குநூற்பொருள்அளிப்பது,ஆசிரியராகார் மாறுபட்ட நினைப்பெனப்பொருளுரைத்துக்கொள்க. (௩௫)

ஈதலியல்பேயியம்புங்காலைக், காலமுமிடனும்வாலிதினோக்கிச்,சி
றந்துழியிருந்துதன் றெய்வம்வாழ்த்தி, யுரைக்கப்படும்பொரு
ளுள்ளத்தமைத்து, விரையான்வெகுளான் விரும்பிமுகமலர்ந்
து, கொள்வோன்கொள்வகையறிந்தவனுளங்கொளக், கோட்ட
மின்மனத்தினூல்கொடுத்தலென்ப. - - *

இது - நிறுத்தமுறையேஆசிரியன் நூலைக்கற்பிக்குமிலக்கணமுணர்த்துகின்றது, (இ-ள்.) ஈதலியல்பு-(மாணாக்கர்க்குஆசிரியன்) நூலைக்கற்றுக்கொடுக்கிறவரலாற்றை, இயம்புங்காலை - சொல்லும்போது, காலமுமிடனும்- (இருதலைக்குமொத்திருக்கும்படி)ஒருகாலத்தையுமோரிடத்தையும், வாலிதினோக்கி - தூய்தாக ஆராய்ந்து, சிறந்துழியிருந்து - அவைசிறந்தஇடத்திருந்து, தன்றெய்வம்வாழ்த்தி- தான்வழிபடுகடவுளைத்துதிசெய்து,உரைக்கப்படும்பொருள்- தான்சொல்லப்படும்நூலினதுபொருளை, உள்ளத்தமைத்து - தன்மனத்துள்ளேசரிப்படச்சிந்தித்துக்கொண்டு, விரையான் - துரிதப்படாதவனும், வெகுளான் - கோபமில்லாதவனும், விரும்பி- விருப்பத்தோடுகூடி, முகமலர்ந்து - மலர்ந்தமுகத்தையுடையவனாகி,கொள்வோன்கொள்வகையறிந்து - மாணாக்கன்அதைத்தன்மனத்துட்கொள்ளுந்தன்மையைமுன்னுடியறிந்துகொண்டு, அவனுளங்

கொள - அவனுள்ளத்திற்பற்றும்படியாக, கோட்டமின்மனத்தின் - மாறுபாடில்லாத நன்மனத்தால், நூல்கொடுத்தலென்ப - நூற்பொருளைக்கொடுப்பதென்றுசொல்லுவர்புலவர், எ-று.

கொடுத்தல் இங்கேஅறிவித்தலின்மேல்நின்றது, இதிற்புலவரென்பதுதொக்குநின்றது - என்ப - என்னும்பன்மேலார்படர்க்கைவினைமுற்றிற்குஅதைப்பயனிலையாக்கிமுடித்துக்கொள்க. (௩௬)

தன்மகனாசான்மகனேமன்மகன், பொருணனிகொடுப்போன் வழிபடுவோனே, யுரைகோளாளற்குரைப்பது நூலே. - *

இது - நிறுத்தமுறையேமாணாக்கன்வரலாறுணர்த்துகின்றது.

(இ-ள்.) தன்மகன் - தன்மகனுக்கும், ஆசான்மகன்- தன்ஆசிரியன் மகனுக்கும், மன்மகன் - அரசன்மகனுக்கும், பொருணனிகொடுப்போன் - பொருளைமிகுதியாகக்கொடுப்பவனுக்கும், வழிபடுவோன் - வழிபாடுசெய்பவனுக்கும், உரைகோளாளற்கு-தான்சொல்லும்உரைமுழுமையையுமனத்துட்கொள்ளவல்ல அறிவாளனுக்கும், உரைப்பது நூல் - சொல்லப்படுவது நூல், எ-று.

தன்மகன்முதலியநால்வர்க்கும் வழிபாடின்றியுமுரைக்கவேண்டுமென்பார்-அவரைமுன்வைத்துஉரைகோளாளனைவழிபடுவோனைச்சாரவைத்தார் - வழிபடுதல்அவனுக்கும்வேண்டுமென்பதறிவித்தற்கு. (௩௭)

அன்னமாவேமண்ணொடுகிளிபோ, யில்லிக்குடமாடெருமைநெய்யரி, யன்னர்தலையிடைகடைமாணாக்கர். - *

இதுவுமது - (இ-ள்.) அன்னமாவன்னர் - அன்னப்பட்சியையும்பசுவையும்போல்வார், தலைமாணாக்கர் - முதல்மாணாக்கராம், மண்ணொடுகிளியன்னரிடைமாணாக்கர் - நிலத்தையுங்கிளியையும்போல்வார் இடைமாணாக்கராம், இல்லிக்குடமாடெருமைநெய்யரி யன்னர்கடைமாணாக்கர்- இல்லிக்குடத்தையும் ஆட்டையும் எருமையையும்நெய்யரிபன்னாடையையும்போல்வார்கடைமாணாக்கராம், எ-று.

இவற்றுள் - அன்னமானது பாலையும் நீரையும் வேறுபிரித்துப்பாலைமாத்திரமுண்பதுபோலச் சாரத்தையும் அசாரத்தையும்பிரித்துச்- சாரத்தையேயுட்கொள்ளுதலாலும், பசுவானது மேய்தலும் மெல்லுதலுமே முக்கியமானதொழிலாய்க்கொண்டது போல இடையீடின்றிப்பாடங்கேட்டலுஞ் சிந்தித்தலுமே முக்கியமானதொழிலாய்க் கொள்ளுதலாலும், இவ்விரண்டும் முதல்மாணாக்கர்க்குஉவமையாயின. நிலமானது-முயற்சியளவிற்பயன்தருவதுபோல-ஆசிரியன்கற்பிக்கும் முயற்சியளவிற்குத்தக்க கல்விப்பயன்விளைதற்கு இடமாகியதிறலும், கிளியானது- ஏறுமாறுதலையாமற்சொல்வித்தபடி சொல்வதுபோல - ஆசிரியன்கற்பித்தபடியே யறிந்துசொல்லுதலாலு,மிவ்விரண்டும் இடைமாணாக்கர்க்கு உவமையாயின. இல்லிக்குடம் - நீர்வார்க்குந்தோறுங் கீழொழிந்து நிரம்பாமைபோல - ஆசிரியன்கற்பித்தநூற்பொருளைத் தன்னுளம்பற்றும லொழுகவிடலாலும், ஆடானது - ஒருசெடியிலேதானேதன்வயிறுநிரம்பும்படிதழைகளிருப்பினும் அதைச்சிறிதுகடித்தமாத்திரமேவிட்டுக்காடெல்லாஞ்சென்றுசென்று மேயப்புகுதல்போல - ஓராசிரியனைவழிப்பட்டு ஒருநூலைமுடியக்கற்றல் அதினையேலபலமைக்

திறம் நிரம்பும்படியாயிருக்க அதைச்சிறிதுகற்றமாத்திரமே கைவிட்டுப்பற்பலரிடத்திற்சென்று பற்பலநூல்களைக்கற்கப்புகுதலாலும், எருமையானது - சேற்றின்மேல்நின்றநீரைவிழுந்துகலக்கி அருந்துதல்போல - ஆசிரியனது நன்மனத்தைக்கலங்கச்செய்துபின்பு அவர்வெறுத்துச்சொன்னதைக்கேட்டுப்போவதினாலும்- நெய்யரிபன்னாடையானது - நெய்யையுருக்கிவடிகட்டுதற்பொருட்டு - இதன்மேல்விடும்போது - சாரமானநெய்யையொழுகவிட்டுக்கசட்டைப்பற்றிக்கொள்வதுபோல் - ஆசிரியனுரைத்தநற்பொருள்களையெல்லாமொழுகவிட்டுத் தீப்பொருளைப்பற்றிக்கொள்வதினாலும், இந்தநான்குங்கடைமாணாக்கர்க்குஉவமையாயினவெனக்காண்க. இனிஇந்நெய்யரியை (சூ-ம்.) நல்லவையகத்திட்டுநவைபுறத்திடுவது, நெய்யரிமாண்பெனநினைதல்வேண்டும், எனச்சூத்திரஞ்செய்து முதல்மாணாக்கர்க்கு உவமையாக்குவாருமுளர் - அன்னர்என்னுங்குறிப்பு முற்றுமறையே முதலிடைகடையென்னு மூன்றிடத்துங்கூட்டிமுடித்துக்கொள்க. மாணாக்கருள் - அன்னமாவேயன்னர் - மண்ணொடுகிளியேயன்னர்; - எனப்பிரித்தலால் - ஏகாரம்பிரிநிலைக்கண்வந்தன - நெய்யரியென்புழி யேகாரந்தொக்குநின்றது.(௫௮)

களிமடிமானிகாமிகள்வன்,பிணியனேழைபிணக்கன்சினத்தன்,
றுயில்வோன்மந்தன்றொன்னூற்கஞ்சி, தடுமாறுளத்தன்றறுக
ணன்பாவி, படிறனின்னோர்க்குப்பகரார்நூலே. - *

இது-கற்பிக்கப்படார்இவரென்பதுணர்த்துகின்றது, (இ-ள்.) களி - கள்ளுண்டுகளிப்பவனும், மடி - சோம்பலுடையவனும், ஏழை - அறிவில்லாதவனும், பிணக்கன்-மாறுபாடுடையவனும்,தொன்னூற்கஞ்சி - ஆதிநூலின்பரப்பைக்கண்டுகற்கப்பயந்தவனும், தடுமாறுளத்தன் - ஒன்றினும்நிலைக்கொள்ளாத மனதையுடையவனும், தறுகணன்- இரக்கமில்லாதவனும், படிறன் - பொய்சொல்பவனும், இன்னோர்க்கு - ஆகியஇவ்வகைபோர்க்கு, பகரார்நூல் - நூலைச்சொல்லார் ஆசிரியர். எ-று.

இதனுள் - பதப்பொருளுரையாதன சில - அவைபொருள்விளங்கிக்கிடந்தன - ஆசிரியரொன்றும்பெயர்ப்பயனிலை குறைந்துநின்றது. (௫௯)

கோடன்மரபேகூறுங்காலைப், பொழுதொடுசென்றுவழிபடன்
முனியான், குணத்தொடுபழகியவன்குறிப்பிற்சார்ந், திருவென
விருந்துசொல்லெனச்சொல்லிப், பருகுவனன்ன வார்வத்தனா
கிச், சித்திரப்பாவையினத்தகவடங்கிச், செவிவாயாகநெஞ்சுக
ளனாகக், கேட்டவைகேட்டவைவிடாதுளத்தமைத்துப்,போவெ
னப்போதலென்மனார்புலவர். - - - *

இது - திருத்தமுறையேமாணாக்கன் நூலைக்கற்றுக்கொள்ளும் வரலாறுணர்த்துகின்றது, (இ-ள்.) கோடன்மரபு - மாணாக்கன்கற்றுக்கொள்ளுதலின்வரலாற்றை, கூறுங்காலை - சொல்லும்போது, பொழுதொடுசென்று - நியமித்தகாலந்தப்பாமற்போய், வழிபடன்முனியான் - வழிபாடுசெய்தற்குவிரும்பினவனாகி, குணத்தொடுபழகி - ஆசிரியன்குணத்துக்குத்தக்கபடியதனொடுபழகி, அவன் குறிப்பிற்சார்ந்து - வரலாமென்கின்றகருத்திருந்ததையறிந்துகி

ட்டி, இருவெனவிருந்து-இருவென்று ஆசிரியன் சொன்னபிற் பாடிருந்து, சொல்லெனச்சொல்லி - உன்பாடத்தைச்சொல்லெ ன்றபிற்பாடுசொல்லி, பருகுவனன்னவார்வத்தனாகி - பசித்துஉண் பவன்அவ்வுணவிலேவைத்த ஆசையைப்போலப் பாடங்கேட்குதலி லாசையுடையவனாகி, சித்திரப்பாவையின் - எழுதியசித்திரப்பிரதி மையினுடைய, அத்தகவு - அந்தஅசைவறுகுணம்போன்று, அடங் கி - மனமொழிமெய்களை அடக்கியிருந்து, செவிவாயாகநெஞ்சுக ளனாக - (பசித்துண்பவனுக்கு வாயும்வயிறும்போலத் தனக்குச்) செவியுமனமுமாக, கேட்டவைகேட்டவை - ஆசிரியனிடத்திற்கே ட்டகேட்டநூற்பொருள்களை, விடாதுளத்தமைத்து - (பசித்து ண்போனுண்ணும்பொருளையொழுகவிடாது வயிற்றினிடத்து அ மைத்துக்கொள்வதுபோல) ஒழுகவிடாமல் தன்மனத்தமைத்துக் கொண்டு, போவெனப் - ஆசிரியன்போவென்றுசொல்ல, போதலெ ன்மனார்புலவர் - போவதென்றுசொல்லுவர்புலவர், எ-று.

உண்டவைதங்குமிடமாதலால்- களனென்றது-இங்கேவயிற்றை, கேட்டவைகேட்டவை - அடுக்கு. (சய)

நூல்பயிலியல்பே நுவலின்வழக்கறிதல், பாடம்போற்றல்கேட் டவைநினைத்த, லாசாற்சார்ந்தவையமைவரக்கேட்ட, லம்மாண்பு டையோர்தம்மொடுபயிறல், வினாதல்வினாயவைவிடுத்தலென்றி வை, கடனாக்கொளினேமடநனியிகக்கும். - *

இதுவுமது - (இ-ள்.) நூல்பயிலியல்பு - நூலொடுபழகுந்த ன்மையை, நுவலின் - சொல்லுங்கால், வழக்கறிதல் - உலகவழக்க ஞ் செய்யுள்வழக்கமென்னுமிருவகைவழக்கங்களையறிதலும், பாட ம்போற்றல் - மூலபாடங்களைமறவாமற்பாதுகாப்பதும், கேட்ட வைநினைத்தல் - ஆசிரியனிடத்திற் கேட்டநூற்பொருள்களையடிக்க டிசிந்தித்தலும், ஆசாற்சார்ந்து - ஆசிரியனைமறுபடியும் அடுத்து, அவை- முன்கேட்டநூற்பொருள்களையே, அமைவர- தன்மனத்து ளமைய, கேட்டல் - மறுபடியுங்கேட்குதலும், அம்மாண்புடை யோர்தம்மொடுபயிறல்- அக்கற்குந்தொழிலாளரோடுபழகுதலும், வினாதல் - தான்சந்தேகப்பட்டவற்றைக்குறித்து அவர்களையும் அ வைக்களத்தாரையும்வினாவுதலும், வினாயவை - தான்வினாவியறிந் துகொண்டவற்றை, விடுத்தல்- தன்னைச்சந்தேகப்பட்டுவினாவினோ ர்க்கு விடைகொடுத்தலும், என்றிவை - என்றுசொல்லப்பட்டஇவ ற்றையெல்லாம், கடனாக்கொளின்- முறையாகக்கொள்வானாயின், மடம் - அறியாமையானது, நனியிகக்கும் - மிகுதியும்நீங்கிப்போ ம், எ-று.

என்ற இலவையென்பது - என்றிலவையெனத்திரிந்து நின்றது, இகத்தல் - நீங்குதல். (சக)

ஒருகுறிகேட்போனிருகாற்கேட்பிற், பெருகநூலிற்பிழைபாடிலனே. - - - - *

இதுவுமது- (இ-ள்.) ஒருநூலையொருகாற்கேட்பவன் இருதரங்கேட்பானாயின்-அவன் அந்தநூலிலே மிகுதியும்பிழைபடுதலிலனாவன், எ-று.

குறியென்றது, இங்கேகாலக்கிரமத்தையுணர்த்திநின்றது. (சஉ)

மூக்காற்கேட்பின் முறையறிந்துரைக்கும். - - *

இதுவுமது - (இ-ள்.) மூன்றுதரங்கேட்பானாயின் - அப்போது ஆசிரியன்கற்பித்தநூல் முறையையறிந்து பிறர்க்குச்சொல்வான். எ-று.

மேலைச்சூத்திரத்துட்சொல்லிய ஒருகுறிகேட்போனென்பதை-யிச்சூத்திரத்து,உரைக்குமென்னும்பயனிலைக்கும்,வருஞ்சூத்திரத்து,பற்றலனாகுமென்னும்பயனிலைக்குங், கூட்டிமுடித்துக்கொள்க. (சங)

ஆசானுரைத்ததமைவரக்கொளினுங், காற்கூறல்லதுபற்றலனாகும்.*

இதுவுமது - (இ-ள்.) மேற்சொல்லியவாறு ஆசிரியனுரைத்த நூற்பொருளைத்தன்மனத்துள் அமையக்கொள்வானாயினும்அவனது புலமைத்திறத்திற்காற்கூறுபற்றினவனாவதன்றியொழிந்தமுக்காற்கூறும் பற்றுதவனாவான். எ-று. (சச)

அவ்வினையாளொடுபயில்வகையொருகாற், செவ்விதினுரைப்பவவ்விருகாலு, மையமறுபுலமைமாண்புடைத்தாகும். - *

இதுவுமது- (இ-ள்.) அவ்வினை-யொருகால்- அக்கல்வித்தொழிலாளரோடு பழகும்வகையாலொருகாற்கூறும், செவ்வி-காலும்-ஆக அவ்விரண்டுகாற்கூறையுங்கொண்டு ஒழுங்காகத்தன்மாணாக்கர்க்கும் அவைக்களத்தார்க்குஞ்சொல்ல, மையமறுபுலமை - குற்றமற்றபுலமைத்திறமானது, மாண்புடைத்தாகும் - (நிறைந்து) மாட்சிமையுடைத்தாம், எ-று. (சரு)

அழலினீங்கானணுகானஞ்சி, நிழலினீங்கானிறைந்தநெஞ்சமோ, டெத்திறத்தாசானுவக்குமத்திற், மறத்திற்றிரியாப்படர்ச்சிவழிபாடே. - - - - - *

இதுவுமது -(இ-ள்.) அழலின்- அழல்காய்வோன்அவ்வழலைப்போலே, நீங்கானஞ்சியணுகான் - (ஆசனத்திருந்தபோது) ஆசிரியனைவிட்டு நீங்காதவனும் அஞ்சிநெருங்காதவனும், நிழலினீங்கான் - அவன்சென்றவிடத்தெல்லாம் அவனிழலைப்போலே நீங்காதுபின்செல்பவனாகியும், நிறைந்தநெஞ்சமோடு - அன்புநிறைந்த

மனத்துடனேகூடி, (பூரணமானமனத்துடனேயெனினும் அமையும்) எத்திறத்தாசானுவக்கும்-எவ்வகையாலாசிரியன் மகிழ்வானோ, அத்திறம் - அவ்வகைபுரிவதும், அறத்திற்றிரியாப்படர்ச்சி - தருமத்திநின்றும்மாறுபடாதநடையும், வழிபாடு - ஆசிரியனைமாணாக்கன்வழிபடும்வழிபாடாம், எ-று.

அறத்திற்றிரியாப்படர்ச்சியாவது - ஆசிரியனுக்குமாணாக்கன் நடந்துகொளவேண்டிய நால்புகலொழுக்கம், எத்திறத்தாசானுவக்குமத்திறம்புரிதலாவது - அதற்குமாறுபட்டநால்புகலாவொழுக்கம், இவ்விரண்டுமிவர்க்குத்தகுமென்பதுதோன்றஇவ்வாறுகூறினானெனக்காண்க. யாதுபற்றியிங்ஙனங்கூறினானெனின். எனையோருதவுமேனைப்பொருளுதவிகள்நிலையில்லாவுடலைப்பற்றிநின்று இந்திரியங்களைவளர்த்துக்கெடுப்பது - இவருதவுங்கல்விப்பொருளுதவி நித்தியமாகியவுயிரைப்பற்றிநின்று அறிவைவளர்த்துவீடுபேற்றைக்கொடுப்பதாதலாலெனக. எத்திறத்தாசானுவக்குமத்திறம்புரிந்ததை-மறையோன்வேண்டமாண்டாரைப்பண்டடைத்துத்தந்தகண்ணனிடத்தும் - துரோணாசாரியன்வேண்ட. வலக்கைப்பெருவிரலறுத்துத்தந்த வனசரன்முதலியோரிடத்துங்காண்க. இவ்வாறுமே - யத்திறம்புரிவதும்-படர்ச்சியும்-வழிபாடெனமுடித்துக்கொள்க. (சகூ)

பொதுப்பாயிரமுற்றிற்று.

# சிறப்புப்பாயிரத்திலக்கணம்.

ஆக்கியோன்பெயரேவழியேயெல்லை, நூற்பெயர்யாப்பே நுதலியபொருளே, கேட்போர்பயனோடாயெண்பொருளும், வாய்ப்பக்காட்டல்பாயிரத்தியல்பே. - - *

இது - நிறுத்தமுறையேசிறப்புப்பாயிரத்தின்பொது இலக்கணமுணர்த்துகின்றது, (இ-ள்.) ஆக்கியோன்பெயர் - நூலைச்செய்தவன்பெயரும், வழி - நூல்வந்தவழியும், எல்லை - நூல்வழங்கும் எல்லையும், நூற்பெயர் - நூலின்பெயரும், யாப்பு - தொகுத்தல்முதலியநால்வகை நூற்கட்டும், நுதலியபொருள் - நூல்குறித்தபொருளும், கேட்போர் - நூலைப்பாடித்தாவெனக்கேட்போரும், பயனோடு - நூலைக்கற்றறிவாலேபெறப்படும் அறமுதலாகிய நான்கு பொருட்பயனோடுகூட, ஆயெண்பொருளும் - அந்தஎட்டுவகைப் பொருளையும், வாய்ப்பக்காட்டல்- விளங்கக்காட்டுவது, பாயிரத்தியல்பு - சிறப்புப்பாயிரத்திலக்கணமாம், எ-று.

இவற்றுள் - யாப்பென்பதற்குஇன்னதுமுற்றியபின்இதுகேட்கற்பாற்றென்னும் இடைபெனவும், கேட்போரென்பதற்குப் - பாடங்கேட்போரெனவுங்கூறுவாருமுளர். அவை பொதுப்பாயிரத்திலக்கணமாதலால் அவற்றை - நூல்பயில்லியல்பேநுவலினென வும் - தன்மகனுசான்மகனே - எனவும்பொதுப்பாயிரத்துட்கூறிப்போந்தார் - ஈண்டுங் கூறிற்கூறியதுகூறலாமெனமறுக்க - பாயிரம்பொதுச்சிறப்பெனநிறுத்தமுறையே எல்லாநூற்குமிவைபொதுப்பாயிரமெனப்பொதுப்பாயிரங்கூறியீண்டுச்சிறப்புப்பாயிரங்கூறவந்தவராதலால்மிதைபடக்கூறுது பாயிரமெனவாளா கூறினானெனக்காண்க. (வாளா - சும்மா,) (க)

காலங்களனேகாரணமென்றிம்மூவகையேற்றிமொழிநருமுளரே. - - - - *

இதுவுமது - (இ-ள்.) காலம் - நூலுண்டாகியகாலமும், களன் - நூல்அரங்கேறிய அவைக்களமும், காரணம் - நூலுண்டாதற்குஇயைந்தகாரணமும், என்றிம்மூவகையேற்றி- எனஇம்மூன்றையும் அந்தஎட்டோடுகூட்டி,மொழிநருமுளர்- (சிறப்புப்பாயிரத்திலக்கணம்பதினொருவகைப்படுமென்று)சொல்லுவாருமுளர், எ-று.

இந்தமூன்றும்நூல்செய்தோன்காலத்தன்றி நூல்வழங்குங்காலத்தின்மையால் அவற்றுற்பயனின்றென்பது தோன்றப்பிறன்கோட்கூறலாகப்பிரித்துக்கூறினர். இது பிறன்கோட்கூறலென்னும் உத்தி. (உ)

முதனூல்கருத்தனளவுமிகுதி- பொருள்செய்வித்தோன்றன்மை முதனிமித்தினு, மிடுகுறியானு நூற்கெய்தும்பெயரே. *

இது- மேற்கூறியசிறப்புப்பாயிரத்தின்வகை பதினொன்றினுள் நூற்பெயர்க்கும்யாப்பிற்குஞ் சிறப்புவிதிகூறவேண்டுதலால் அந்த இரண்டினுள் நூற்பெயர்க்குச்சிறப்புவிதியுணர்த்துகின்றது, (இ-ள்.) முதனூல் - அந் நூலுக்குமுன்னிருந்த நூலும், கருத்தன்- அந்நூலைச்செய்தவனும், அளவு - அந் நூலினளவும், மிகுதி- அந் நூலிலேசொல்லப்படுவனவற்றுள் மிகுதியானகூறும், பொருள் - அந் நூலின்பொருளும், செய்வித்தோன் -செய்வோனுக்குஉதவிசெய்துசெய்வித்தவனும், தன்மை - அந்நூலின்குணமும், முதல் - முதலாகிய, நிமித்தினும் - காரணங்களாலும், இடுகுறியானும் - காரணமில்லாமலிடுகுறியினாலும், நூற்கெய்தும்பெயர் - நூலுக்குப் பெயர்வரும், எ-று.

நிமித்தத்தினுமென்பது - நிமித்தினுமெனவிகாரப்பட்டுநின்றது. [உதாரணம்,] முதனூலாற்பெயர்பெற்றன - பாரதமுதலாயின, கருத்தனாற்பெயர்பெற்றன - திருவள்ளுவர்முதலாயின, அளவாற்பெயர்பெற்றன. பன்னிருபடலமுதலாயின, மிகுதியாற்பெயர்பெற்றன - களவியல்முதலாயின, பொருளாற்பெயர்பெற்றன- அகப்பொருள்முதலாயின, செய்வித்தோனாற்பெயர்பெற்றன சாதவாகனமுதலாயின, தன்மையாற்பெயர்பெற்றன, சிந்தாமணி - நன்னூல்முதலாயின, இடுகுறியாற்பெயர்பெற்றன- நிகண்டு முதலாயின, பிறவுமிவ்வாறுவருதல்காண்க. (௩)

தொகுத்தல்விரித்தறொகைவிரிமொழிபெயர்ப், பெனத்தகுநூல்யாப்பீரிரண்டென்ப. - - - *

இது - யாப்பிற்குச்சிறப்புவிதியுணர்த்துகின்றது, (இ-ள்.)

தொகுத்தல் - விரிந்துகிடந்ததைத்தொகுத்துமுடித்தலும், விரித்தல் - தொக்குக்கிடந்ததைவிரித்துமுடித்தலும், தொகைவிரி-தொகுத்தும் விரித்தும் முடித்தலும், மொழிபெயர்ப்பு - ஒருபாடைமொழியைமற்றொருபாடைமொழியாகத்திருப்பிமுடித்தலும், என - என்று, தகுநூல்யாப்பு - தக்கநூல்யாப்பானது, ஈரிரண்டென்ப - நால்வகைப்படுமென்றுசொல்லுவர்புலவர், எ-று.

இதனுள் - புலவரொன்னும்பெயர்ப்பயனிலை குறைந்துநின்றது- தொகுத்தலுக்கும் மொழிபெயர்த்தலுக்கும்[உதாரணம்,] வான்மீகத்தைக்கம்பன் பன்னீராயிரமாக்கியதுபோல்வன, விரித்தலுக்கு நாரதவாக்கியத்தை வான்மீகர் இருபத்திநாலாயிரங் கவிகளாக்கியதுபோல்வன, தொகைவிரியென்பதற்கு - தொல்காப்பியத்துள் குற்றியலுகரப்புணரியலென்றதை உயிரீற்றுப் புணரியலுள் அடக்கியும்- அதனுட்சுருங்கிய காலஇடைநிலைகளை - தடறவொற்றின்னே-எ-ம்- ஆநின்றுகின்றுகிறு-எ-ம்-பவ்வமூவிடத்தெனவும்-விரித்துக்கூறியநன்னூல்முதலியபோல்வன,பிறவுமிவ்வாறுகாண்க(சு)

தன்னாசிரியன்றன்னொடுகற்றோன், றன்மாணுக்கன்றகுமுரைகாரனென், றின்னோர்பாயிரமியம்புதல்கடனே. - *

இது - சிறப்புப்பாயிரஞ்செய்தற்கு உரியவரிவரெனவுணர்த்துகின்றது, (இ-ள்.) ஒருவன்செய்தநூற்கு இந்தநால்வருள்ஒருவர் சிறப்புப்பாயிரஞ்செய்வது முறையாம், எ-று.

தகுமுரைகாரன் - நூலுக்குஉரைசெய்யத்தக்கபுலவன். (௫)

தோன்றுதோற்றித்துறைபலமுடிப்பினுந், தான்றற்புகழ்தறகுதியன்றே. - - - - *

இது - சிறப்புப்பாயிரம் பிறர்கூறுதற்குக்காரணமுணர்த்துகின்றது. (இ-ள்.) தோன்றுதோற்றி - தோன்றுதநுட்பங்களையெல்லாந்தோன்றச்செய்து, துறைபலமுடிப்பினும் - பலதுறைப்பட்டுவிரிந்தநூலைச்செய்துமுடிப்பானாயினும், தான்றற்புகழ்தல் - தானேதன்னைப்புகழ்ந்துகொள்வது,தகுதியன்று-தக்கதன்றும்.எ-று.

துறை - வழி, அது இங்கே ஆகுபெயராய் நூலையுணர்த்திநின்றது, நூல்செய்தோன்சிறப்புப்பாயிரஞ்செய்யின் - தன்னைப்புகழ்ந்தவனுவானென்பதுகருத்து. (சா)

மன்னுடைமன்றத்தோலைத்தூக்கினுந், தன்னுடையாற்றலுணராரிடையினு, மன்னியவவையிடைவெல்லுறுபொழுதினுந், தன்னைமறுதலைபழித்தகாலையுந்,தன்னைப்புகழ்தலுந்தகும்புலவோர்க்கே. *

இது - தன்னைப்புகழும்இடமுணர்த்துகின்றது. (இ-ள்.) மன்

னுடையமன்றத்து - இராசசபையிலும், ஒலைத்தூக்கினும் - சீட்டுக்க வியிலும், தன்னுடையாற்றலுணராரிடையினும் - தன்னுடையகு ல்வியின்வலிமையைச்செருக்கினாலே யறியாதிருந்தவரிடத்திலும், மன்னியவவையிடைவெல்லுறும்பொழுதினும் - நிலைபெற்றசபையி லே (பிறரொடுவாதித்து) வெற்றிகொள்ளுஞ்சமையத்திலும், தன் னைமறுதலைபழித்தகாலையும் - தனக்குவிரோதியாகிய புலவன்தன் னைப்பழித்த இடத்திலும், புலவோர்க்கு-புலவர்கூட்டத்திற்கு, தன் னைப்புகழ்தலுந்தகும் - (தனித்தனி) தன்னைப்புகழ்ந்துகொள்ளு தலுந்தகும், எ-று.

அம்மைதந்தையடுபோர்ச்செழியனொன்றுற்போல-தன்னையெவ் வும்ஒருமையிற்புலவனொன்னும்- பன்மைவந்தபால்வழுவமைதி, இ னி- புகழ்தலுந்தகுமென்றஇழிவுசிறப்பும்மையால் - இவ்விடங்களி லுந்தன்னைப்புகழலாகாதென்பதுகருத்து. (எ)

ஆயிரமுகத்தானகன்றதாயினும், பாயிரமில்லதுபனுவலன்றே.*

இது - இருவகைப்பாயிரங்களும் நூலுக்கு இருந்தேதீரவே ண்டுமென்பதுணர்த்துகின்றது, (இ-ள்.) ஆயிரமுகத்தான் - ஆயி ரமுகங்களோடுகூடி, அகன்றதாயினும் - விரிந்தநூலாயினும், பாயிரமில்லது - பாயிரமில்லாதது, பனுவலன்று - நூலன்றும், எ-று. (அ)

வெண்பா, மாடக்குச்சித்திரமுமாநகர்க்குக்கோபுரமு-மாடமை த்தோணல்லார்க்கணியும்போ- னாடிமுன் - னைதுலாயாநின்ற வ ணிந்துரையையெந்நூற்கும்-பெய்துரையாவைத்தார்பெரிது.*

இது - பாயிரமில்லதுபனுவலன்றுஎன்றதற்குக்காரணமுணர் த்துகின்றது, (இ-ள்.) மாடக்கு - மாடத்துக்கு,(மாளிகைக்கு) சித் திரமும் - சித்திரவேலையும், மாநகர்க்குக்கோபுரமும் - பெருமை தங்கியநகரத்திற்குக்கோபுரவாயிலும், ஆடு - நடனஞ்செய்யும், அ மைத்தோள் - மூங்கில்போன்றதோள்களையுடைய, நல்லார்க்கு-வி லைமாதர்க்கு, அணியும்போல் - ஆபரணமும்போல, நாடி - நூலுக் குப்பாயிரஞ்சிறந்ததென்றெண்ணி, ஐதுரையாநின்ற-அழகியபொ ருளையுரைக்கின்ற, அணிந்துரையை - பாயிரத்தை, உரையா- உரை த்து, எந்நூற்கும் - எவ்வகைப்பட்டநூல்களுக்கும், பெரிது - பெ ருமையையுடையதாக, முன்பெய்துவைத்தார் - முதலிலேசேர்த்து வைத்தார்புலவர், எ-று.

மாடத்துக்கு-என்பது-மாடக்குஎன்அத்துச்சாரியைகுறைந்துநி ன்றது-மாடமுதலியமூன்றிற்குஞ்சித்திரமுதலியமூன்றும்போல- ஐதுரையாநின்றவணிந்துரையைநாடி யுரையா எந்நூற்கும்பெரிது

முன்பெய்துவைத்தானெனக்கூட்டி- பெரிதுஎன்பதைப் பெரிதாக வெனமுற்றெச்சமாக்குக. (௬)

சிறப்புப்பாயிரத்திலக்கணமுற்றிற்று.

ஆகவகையிரண்டிற்குப்பாயிரச்சூத்திரம், (௫௫)

முதலாவது- எழுத்ததிகாரம்,

இது - எழுத்தின் (அகத்திலக்கணம்-புறத்திலக்கணமென்னும் இரண்டையும் உணர்த்திய) அதிகாரமெனவிரியும் - இந்தஅதிகாரமானது - எழுத்தியல்- பதவியல்- உயிரீற்றுப்புணரியல் - மெய்யீற்றுப்புணரியல்-உருபுபுணரியல் - என்னும் - ஐந்துஅங்கங்களோடு கூடிநின்றது- அதிகாரம்என்றது - முறைமை - இனி எழுத்ததிகாரமென்பதற்கு - எழுத்து அதிகரித்தல் - எனப்பொருள்கூறுவாரும் உண்டு- இந்தஅதிகாரத்துள்.

முதலாவது,

# எழுத்தியல்.

இது - எழுத்தின் (அகத்திலக்கணத்தையுணர்த்திய) இயலென விரியும் - இயலென்றது - மேற்சொல்லியஅதிகாரத்திற்கு அங்கம். இவ்வியலுள்,

பூமலியசோகின்புனைநிழலமர்ந்த,
நான்முகற்றொழுதுநன்கியம்புவனெழுத்தே.

என்ற - இத்தலைச்சூத்திரம் - தெய்வவணக்கமுஞ்செயப்படுபொருளும் உணர்த்தலால் - தற்சிறப்புப்பாயிரம்-என்னெனின். (சூ-ம்.) தெய்வவணக்கமுஞ்செயப்படுபொருளு, மெய்தவுரைப்பது தற்சிறப்பாகும். என்றாராகலின் - தற்சிறப்பாவது - சிறப்புப்பாயிரத்துச்சிறப்புப்பாயிரமெனக்காண்க. *

(இதன்பொருள்,)

பூமலியசோகின் - மலர்கள்நிறைந்தஅசோகமரத்தினுடைய, புனைநிழல்-அலங்கரிக்கப்பட்டநிழலிலே, அமர்ந்த - வீற்றிருந்த, நான்முகற்றொழுது - நான்குமுகங்களையுடையவனாகிய அருகதேவனைவணங்கி, எழுத்து- எழுத்திலக்கணத்தை, நன்கியம்புவன் - நன்றாகச்சொல்லுவேன்யான், எ-று.

ஏகாரம் - ஈற்றசை, எழுத்திலக்கணத்தை'எழுத்தென்றது- ஆகுபெயர், தான்வழிபடுகடவுளைவணங்கிஅதினாலே - எடுத்துக்கொண்டபொருள் இனிதாக முடியுமென்றெண்ணி, நன்கியம்புவனென்றபகுத்ததினாலே இது நுதலிப்புகுதலென்னும் உத்தி- நுதலல் - எண்ணல் - இச்சூத்திரத்தில் - யான் - என்பது தோன்றாஎழுவாயாகநின்றது. இயம்புவன் என்பதை அதற்குப்பயனிலையாக்கிமுடித்துக்கொள்க. (௧)

எண்பெயர்முறைபிறப்புருவமாத்திரை, முதலீறிடைநிலைபோலி
யென்றா, பதம்புணர்பெனப்பன்னிருபாற்றதுவே. - *

இது-அவ்வெழுத்திலக்கணம்இத்தனைவகையென உணர்த்துகின்றது, (இதன்பொருள்.)எண்-எழுத்துக்களின்கணக்கிலக்கணமும், பெயர்-அவற்றின்பெயரிலக்கணமும், முறை-அவைமுன்பின் நிற்கும் முறையிலக்கணமும், பிறப்பு - அவற்றின்பிறப்பிலக்கணமும், உருவம் - அவற்றின்வடிவிலக்கணமும், மாத்திரை - அவற்றின்அளவிலக்கணமும், முதல்- அவைமொழிக்குமுன்னிற்குமிலக்கணமும், ஈறு - அவைமொழியிறுதியிலே நிற்குமிலக்கணமும்,இடைநிலை-அவைமொழியிடையிலே நிற்குமிலக்கணமும், போலி- (சிலஎழுத்துகள்கூடிச் சிலஎழுத்துக்கள்போலேயொலிப்பதும், ஒரெழுத்து நின்ற இடத்தில் அதுபோலமற்றொரெழுத்துவந்துநிற்பதுமாகிய) போலிஇலக்கணமும், (ஆகியஎழுத்தின் அகத்திலக்கணம்பத்துடனே) பதம்- (அவ்வெழுத்தாலாகிய)பதத்திலக்கணமும், புணர்பு- (அப்பதம்ஒன்றோடொன்று) புணரும் புணர்ச்சியிலக்கணமும், என - என்று, (ஆகியபுறத்திலக்கணம்இரண்டையுங்கூட்ட) பன்னிருபாற்று - பன்னிரண்டுவகையினையுடையதாம், அது - அவ்வெழுத்திலக்கணமென்னுந்தொகை, எ-று.

ஏகாரம் - ஈற்றசை, அகத்திலக்கணம் புறத்திலக்கணமென்பது தோன்ற-என்றாவென்னும்எண்ணிடைச்சொற்கொடுத்துப்பிரித்தோதினர், இச்சூத்திரந்தொகுத்துச்சுட்டல், மேல்வருவனவெல்லாம் வகுத்துக்காட்டல் என்னும் உத்தி,- சுட்டல் - குறித்தல் உத்தி - புத்திநுட்பம், அது இங்கேபுத்திநுட்பத்தினாலே - அமைக்கப்பட்டபொருளின் மேல்நின்றது, இச்சூத்திரத்தில் - அதுவென்பதை எழுவாயாகக்கொண்டு - பன்னிருபாற்று- என்பதை- அதற்குப்பயனிலையாக்கிமுடித்துக்கொள்க. (௨)

மொழிமுதற்காரணமாமணுத்திரளொலி,யெழுத்ததுமுதல்சா
ர்பெனவிருவகைத்தே. - - - - *

(எழுத்தின் அகத்திலக்கணமாகியபத்தையும் எழுத்தியலென ஓரியலாகவும் - அவ்வெழுத்தாலாகிய பதத்திலக்கணத்தைப் பதவியலென ஓரியலாக்கி அதன்பின்னும், அப்பதம்புணரும் புணர்ச்சியிலக்கணத்தைஉயிரீற்றுப்புணரியல் - மெய்யீற்றுப்புணரியல்- உருபுபுணரியலெனமூன்று இயலாக்கி அவற்றுட்சிறந்த உயிரீற்றுப் புணரியலைப் பதவியலின்பின்னும்- மெய்யீற்றுப்புணரியலை அதன் பின்னும்- உயிரீறு மெய்யீறென்றவற்றுள் அடங்குதலால் உருபுபுணரியலென்றதைஅவ்விரண்டின்பின்னும்- ஒத்துமுறைவைப்பென்னும் உத்தியால்வைக்கப்புகுந்து முதலிலேவைத்தஎழுத்தியலின் - எழுத்தினது எண்ணிலக்கணத்தையுணர்த்தத்தொடங்கினாராதலால்) இச்சூத்திரம் எழுததாவது இன்னதென்பதும் அதன்வகையும் உண

ர்த்துகின்றது, (இ-ள்.) மொழிமுதற்காரணமாம் - மொழிக்குமுதற்காரணமாகின்ற, அணுத்திரளொலி - அணுத்திரளின்காரியவொலி, எழுத்து - எழுத்தாம், அது - அவ்வெழுத்து, முதல்சார்பென - முதலெழுத்துஞ்சார்பெழுத்துமென, இருவகைத்து - இரண்டுவகையினையுடையதாம், எ-று.

அணுத்திரளென்றது - நாதத்தை, ஒலியென்றது - அதன்காரியவொலி, அணுவென்றது - ஒலிநுட்பத்தை, அணுத்திரளொலியெழுத்தெனின் - முற்குவிளையிலைதமுதலியகுறிப்பிசைகளும் அணுத்திரளேயாதலால் - அவையெழுத்தாகாமையயாலும் - மொழிமுதற்காரணமாமொலியெழுத்தெனின் அவ்வொலிஇன்னவொலியெனவிளங்காமையால் - நிறையுயிர்முயற்சியினுள்வளிதுரப்ப வெழுமணுத்திரளொலியெனக்காட்டவேண்டுதலாலும் - மொழிமுதற்காரணமாமணுத்திரளொலியெழுத்தென்றார் - இனியிவ்வாறே - (சூத்திரம்) மொழிக்காரணமாநாதகாரியவொலி - யெழுத்ததுமுதல்சார்பெனவிருவகைத்தே எனப்பிறர்கூறுதலுங்காண்க. முற்குவிளையிலையென்பன - அடிநாவடியிற்காட்டப்படுவதோர் ஒலிக்குறிப்பு - அதற்கு, [உதாரணம்,] வெண்பா, மன்றலங்கொன்றைமலர் மலைந்தும்ம் - என்றுதிரியுமிடைமகனே - சென்று - மறியாட்டையுண்ணைமல் - வன்கையால்வல்லே - யறியாயோவன்றைக்குமாறு - என்றார்போல்வன - இச்சூத்திரத்தை - அணுத்திரளொலியெழுத்தென - ஒருமுடிபாகவும், அது இருவகைத்தென - மற்றொருமுடிபாகவும், முடித்துக்கொள்க. (௫)

உயிருமுடம்புமாமுப்பதுமுதலே, - - ✻

இது - முதலெழுத்தின்விரியுணர்த்துகின்றது. (இ-ள்.) உயிரும் - உயிரெழுத்துப்பன்னிரண்டும், உடம்பும் - மெய்யெழுத்துப்பதினெட்டும், ஆம் - ஆகிய, முப்பதுமுதல் - முப்பதெழுத்தும் முதலெழுத்தாம், எ-று.

உலகியத்திற்கு முதற்பணமென்றது காரணங்காட்டியதுபோலச்சார்பெழுத்திற்குமுதலெழுத்துக்காரணங்காட்டிநின்றது, அதைச்சார்ந்துவருதலாற் சார்பெழுத்தெனப்பட்டது, முப்பதுமுதலென - வரையாதுகூறியது, உரைத்துமென்னும் உத்தி. (௬)

உயிர்மெய்யாய்தமுயிரளபொற்றள, பஃகிய இ உ ஐ ஔ மஃகான், றனிநிலைபத்துஞ்சார்பெழுத்தாகும். ✻

இது - சார்பெழுத்தின்வகையுணர்த்துகின்றது, (இ-ள்.) உயிர்மெய் - உயிர்மெய்யெழுத்தும், ஆய்தம் - அக்கேனமும், உயிரளபு - உயிரளபெடையும், ஒற்றளபு - ஒற்றளபெடையும், அஃகிய இ - குற்றியலிகரமும், அஃகிய உ - குற்றியலுகரமும், அஃகி ஐகாரக்குறுக்கமும், அஃகிய ஔ - ஔகாரக்குறுக்கமும், அஃகிய மஃகான் - மகரக்குறுக்கமும், அஃகிய தனிநிலை - ஆய்தக்குறுக்கமும், பத்துஞ்சார்பெழுத்தாகும் - ஆகிய இப்பத்துஞ்சார்பெழுத்தின்வகையாம், எ-று.

அஃகுதல் - சுருங்குதல், குறைதல், ஆய்தம் - உயிரொடும்மெய்யோடுங்கூடாது தனிநிற்றலால் - தனிநிலையெனப்பட்டது. ([illegible])

உயிர்மெய்யிரட்டுநூற்றெட்டுயராய்தமெட்டுயிரளபெழுமூன் றொற்றளபெடை, யாறேழஃகுமிம்முப்பானே, ழுகரமாறுறை கான்மூன்றே, யௌகாரென்றேயஃகான்மூனறே, யாய்தமி ரண்டொடுசார்பெழுத்துறுவிரி, யொன்றொழிமுந்நூற்றெழு பானென்ப. *

இது - சார்பெழுத்தினவிரியு - ணு, (இ-ள்.) உயிர் - றெட்டு - உயிர்மெய்யெழுத்துகள் இருநூற்றுப்பதினாறு, உயரா - டு - குறு காதஆய்தம் எட்டு, உயிரள - ன்று - உயிரளபெடைஇருபத்தொ ன்று, ஒற்றள - றேழ் - ஒற்றளபெடைநாற்பத்திரண்டு, அஃகுமி - குற்றியலிகரம் - முப்பானேழ் - முப்பத்தேழு, உகரமாறுறு - கு ற்றியலுகரம்முப்பத்தாறு, ஐகான்மூன்று - ஐகாரக்குறுக்கம் மூ ன்று, ஔகாரென்று - ஔகாரக்குறுக்கம்ஒன்று, மஃகான்மூன் று - மகரக்குறுக்கம்மூன்று, ஆய்தமிரண்டொடு- ஆய்தக்குறுக்கம் இரண்டோடுகூட, சார்பெழுத்துறுவிரி - சார்பெழுத்தின்மிக்கவி ரி, ஒன்றொழி - ஒன்றுகுறைந்த, முந்நூற்றெழுபானென்ப - முந் நூற்றெழுபதென்றுசொல்லுவர்புலவர். எ-று.

அஃகுமென்னும்பெயரொச்சத்தைமூன்போல - உகரமுதலியவற்றொடுங்கூட்டிக் கொள்க - எழுத்துவேற்றுமைபற்றிஉயிர்மெய் இருநூற்றுப்பதினாறாயின - மற்றவை யெல்லாம் இடவேற்றுமைபற்றிச்சொலலப்பட்டன, இவற்றுள் - உயிரளபெடையும் ஒற்றளபெடையும் எழுத்துவேற்றுமைபற்றின்-எழுபத்திரண்டுமாம், இனி இதன ண்ணிலக்கணமாதலால்-முதலெழுத்திற்கு முதலென்றதுதொகையாகவும்-உயிருமுடம் புமென்றது வகையாகவும்-முப்பதென்றதுவிரியாகவும், சார்பெழுத்திற்கு - சார்பென் றதுதொகையாகவும் - தனிநிலைபத்துமென்றது - வகையாகவும்- ஒன்றொழிமுந்நூற்றெ ழுபானென்றது - விரியாகவும், இவ்விருநிலத்தெழுத்திற்கும்- எழுத்தென்றது-தொகை யாகவும் - முதல்சார்பென்றது வகையாகவும் - இவ்விருதிறத்தெழுத்தின் விரியுங்கூட் டி ஒன்றொழிநானூறென்பது விரியாகவுங்கண்டுகொள்க. இவை யிவ்வாறாதலைத் தத்த ம் விதிச்சூத்திரங்களுட்காண்க. இன்னுமிது தொகைவகைவிரிபடச்சொன்ன நூலாத லால்-உயிர்முதலியபன்னிரண்டுவகைக்கும்-தனித்தனிதொகைவகைவிரியுமிவ்வாறு கண் டுகொள்க. எண்ணிலக்கணமுற்றிற்று. (௯)

இடுகுறிகாரணப்பெயர்பொதுச்சிறப்பின, *

இனி யெழுத்தின்பெயரிலக்கணஞ் சொல்லத்தொடங்கினதினு லே-இச்சூத்திரம்பெயர்க்கெல்லாம்பொதுவிலக்கணமுணர்த்து-து. (இ-ள்.) இடுகுறிகாரணப்பெயர் - இடுகுறிப்பெயருங் காரணப்பெ யருமாகிய இரண்டும், பொதுச்சிறப்பின் - பலபொருட்குப்பொ துவாயும்-ஒருபொருட்கேசிறப்பாகியும்-வருவனவாம், எ-று.

[உதாரணம்,] மரம்- இடுகுறிப்பொதுப்பெயர், பனை- இடுகுறி ச்சிறப்புப்பெயர், அணி - காரணப்பொதுப்பெயர், முடி - காரண ச்சிறப்புப்பெயர், அணியப்படுதலாலும் - முடியின்மேல் வைக்கப் படுதலாலுமெனக்காரணங்காண்க. முடி - என்றது- தலை, இனி - இ ரட்டுறமொழிதலென்னும் உத்தியால்-இச்சூத்திரத்திற்கு - இடுகுறி

காரணமென்றஇரண்டும்- அவ்விரண்டிற்கும்பொதுவாகியும் - இடு குறிக்கேசிறப்பாகியுங்காரணத்திற்கேசிறப்பாகியும் வருவனவாமென்றும்-பொருளுரைத்துக்கொள்க. [உ-ம்-] பரம்- எது-இடுகுறிச்சிறப்பு, பரமன்- எது- காரணச்சிறப்பு, முக்கணன்- மறவன்- பங்கயம்- முள்ளி- என்றாற்போல்வன - இடுகுறிகாரணமிரண்டிற்கும் பொது, இவையிரண்டிற்கும்பொதுவாயினதெவ்வாறெனின்- இவற்றுள் - முக்கணனென்பது - காரணம்பற்றிப்பார்க்கும்போது - மூன்றுகண்ணுடையவிநாயகர் முதலியோர்க்கெல்லாம் பொதுவாகியுங் காரணம்பற்றாதபோது இடுகுறிமாத்திரையாய்ச் சிவனுக்கே சிறப்பாகியுஞ் செனறுவருதலால் இரண்டிற்கும்பொதுவாயிற்று. மறவன்-எது- மறமுடையோர்க்கெல்லாம்பொதுவாயினுமொருசாதியானுக்கே சிறப்பாயிற்று, பங்கயம்-சேற்றிலேபிறந்தனவெல்லாம்பங்கயமெனப்பொதுவாயினுந்தாமரையொன்றிற்கேசிறப்பாயிற்று-முள்ளி-எது-முள்ளுடையவைக்கெல்லாம்பொதுவாயினுமொருசாதிச்செடிக்கேசிறப்பாயிற்று-ஆதலாலிவைபோல்வனவெல்லாங் காரணவிடுகுறிப்பெயரெனக்காண்க. இவ்வாறேவடநூலார்- இடுகுறியை ரூடியென்றும்- காரணத்தையோகமென்றும்-காரணவிடுகுறியை யோகரூடியென்றும்- வழங்குவர், இவ்விலக்கணத்தால்-எழுத்துக்களின்பெயர்வருதல்காண்க. (எ)

அம்முதலீராறாவிகம்முதன், மெய்ம்மூவாறென விளம்பினர் புலவர். *

இது - ஒருசார்எழுத்தினதுபெயர் பிறபெயராமாறுஉணர்-து, (இ-ள்.) அம்முதலீராறு - அகரமுதலியபன்னிரண்டையும்,ஆவி - உயிரெழுத்தென்றும், கம்முதன்மூவாறு - ககரமுதலிய பதினெட்டையும், மெய்யென - மெய்யெழுத்தென்றும், விளம்பினர் புலவர் - சொன்னார்புலவர், எ-று.

ஆவி - மெய் - எனப்பிறபொருட்குவரும்பெயர்- இவ்விருவகையெழுத்திற்கும்உவமையாகுபெயராய்வந்தன - இவைகாரணப்பொதுப்பெயர்- பிறவுமிவ்வாறுவருதல்காண்க. (அ)

அவற்றுள் - அ இ உ எ ஒக்குறிலைந்தே, - *

இது - ஒருசாரெழுத்திற்குப்பெயர்கூறுகின்றது, (இ-ள்.) அவற்றுள்-மேல் ஆவிபன்னிரண்டென்றவற்றுள், அ இ உ எ ஒ ஐந்தும்- இவ்வைந்தும்,குறில்-குற்றெழுத்தெனப்பெயர்பெறும், எ-று, (க)

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔநெடில், - - *

இதுவுமது - (இ-ள்.) இவ்வேழும் நெட்டெழுத்தெனப் பெயர் பெறும், எ-று. (ω)

அ இ உ அம் மூன்றும் சுட்டே, - - *

இதுவுமது - (இ-ள்.) அ இ உ - இம்மூன்றும், முதல்-ஒருமொழிக்கு முன்னே, தனிவரின் - தனித்து ஒருபொருளைச்சுட்டி வருமாயின், சுட்டு - சுட்டெழுத்தெனவும்பெயர்பெறும், எ-று.

முதலெனப்பொதுப்படச்சொன்னதினாலே - மொழியின் அகம்புறமென்னுமிரண்டிடமுமுதலெனக்கொள்க. [உதாரணம்,] அவன்- இவன்- உவன் என- அகத்தும், அக்கொற்றன் - இக்கொற்றன் - உக்கொற்றன் - எனப்புறத்தும்வந்தன, மற்றப்பால்களிலும் இவ்வாறேயொட்டிக்கொள்க. அகரந் தூரப்பொருளையும் - இகரஞ் சமீபப்பொருளையும் - உகரம் எதிர்முகமின்றிப் பின்னிற்கும் பொருளையுஞ்சுட்டுமெனக்காண்க - உகரம் அவ்வாறு சுட்டுதற்பதை-உஙைழயுமுப்பக்கங்காண்பமொன்றதற்கு - பின்பக்கமாய் முதுகுகாட்டக்காண்பமொனப்பொருள்கூறுதலாற்காண்க. (௰௧)

எய்யாமுதலுமாவோவீற்று, மேயிருவழியும்வினவாகும்மே. *

இதுவுமது- (இ-ள்.) எய்யாமுதலும்-எகரமும்-யாவும்- மொழிமுதலிலும், ஆவோவீற்றும்- ஆகாரமும்-ஒகாரமும்-மொழியிறுதியிலும், ஏயிருவழியும் - ஏகாரம் இவ்விரண்டிடத்திலும், வினவாகும் - (வினாப்பொருளையுணர்த்தித்தனிவருமாயின்) வினவெழுத்தெனப்பெயர்பெறும், எ-று.

ஒன்றின்முடித்தலென்னும் உத்தியால் - யாவினவுமுடன்கூறப்பட்டது, மேலைச்சூத்திரத்தில்-தனிவரினென்றதை- இச்சூத்திரத்திற்குங்கூட்டிக்கொள்க. இவையகத்தும் புறத்தும்வருதல்-எற்றபடியெனக்கொள்க. [உ-ம்,] எவன்- யாவன்-என அகத்தும்- எக்கொற்றன் - யாங்ஙனம்- எனப்புறத்தும்- எகரமும்-யாவும்- மொழிமுதல்வினவாய்வந்தன, கொற்றனா கொற்றனோ - என ஆகார ஒகாரங்கள் புறத்துமொழியிறுதிவினவாய்வந்தன - ஏவன்- கொற்றனே- என- ஏகாரம் - அகத்தும் புறத்தும் - மொழிமுதலிலும் இறுதியிலும்வந்தது - மற்றப்பெயர்வினைகளோடு மிவ்வாறேயொட்டிக்கொள்க. (௰௨)

வல்லினங்கசடதபறவெனவாறே, - *

இதுவுமது - (இ-ள்.) இவ்வாறும் வல்லினமெனப்பெயர்பெறும், எ-று. (௰௩)

மெல்லினம்ஙஞணநமனவெனவாறே, - *

இதுவுமது - (இ-ள்.) இவ்வாறும் மெல்லினமெனப்பெயர்பெறும், எ-று. (௰௪)

இடையினம்யரலவழளவெனவாறே. - *

இதுவுமது - (இ-ள்.) இவ்வாறும்இடையினமெனப்பெயர்பெறும், எ-று.

இன்னும் இம்மூவகையெழுத்துகளும்-வலி மெலி இடை எ-ம்-வன்கணம்-மென்கணம்- இடைக்கணம்- எ-ம்- வல்லெழுத்து,மெல்லெழுத்து, இடையெழுத்து,எ-ம், வன்மை, மென்மை,இடைமை, எ-ம்,பெயர்பெறுதல்உரையிற்கோடலென்னும்உத்தியாற்கொள்க.

ஐஔ இஉச்செறியமுதலெழுத், திவ்விரண்டோரின்மாய்வரன்முறையே. *

இதுவுமது - (இ-ள்.) ஐஔ இஉச்செறிய- இனமில்லாதஐகார ஔகாரங்களை இகரஉகரங்கள்அடுத்துநிற்க, முதலெழுத்து - மற்ற முதலெழுத்துகளெல்லாம், இவ்விரண்டு - இரண்டிரண்டுகூடி, ஒரினமாய்வரல் - ஒவ்வோரினமாகிவருவது, முறை - நெடுங்கணக்கின் முறையாதலால், ஐகாரஔகாரங்களுக்கும் இகரஉகரங்கள் இனவெழுத்தெனப்பெயர்பெறும், எ-று.

இரண்டிரண்டோரினமாய்வருதற்கு- [உதாரணம்,] அஆ- இஈ- உஊ- எஏ- ஐஇ- ஒஓ- ஔஉ- எ-ம்- கங- சஞ- டண- தந-பம-யர-லவ- ழள- றன- எ-ம், காண்க, முறைமேற்கூறப்படுதால் - இங்கே முறையென்றது நெடுங்கணக்கின்ஒழுங்கு, இச்சூத்திரத்தை-வரல்முறையெனமுடித்து-அதையேதுவாக்கி - இகரவுகரங்கள் இனவெழுத்தென்று பெயர்பெறுமென்றுமுடித்துக்கொள்க. என்னெனின்- இதுபெயரிலக்கணமாதலினென்க. (௰௬)

தானமுயற்சியளவுபொருள்வடி, வானவொன்றுதியோர்புடையொப்பினமே. *

இது- மேல் - இனமென்றதற்குக்காரணமுணர் - து, (இ-ள்.) தானம் - நால்வகைப்பிறப்பிடமும், முயற்சி - நால்வகைத்தொழிலும், அளவு- மாத்திரையும், பொருள் - (குறிலினதுவிகாரமேநெடிலாதலால் அவையிரண்டிற்கும் பொருள் ஒன்றென்று முதனூலாலேநியமிக்கப்பட்ட) பொருளும், அல்வழிவேற்றுமையிற் படுஞ்செய்கைகளும், வடிவு- உருவமும், ஆன-ஆயின இவற்றுள், ஒன்றுதி- ஒன்றுமுதலாக, ஓர்புடையொப்பு - ஒருசிறையொத்திருத்தல், (சிலவொத்திருத்தல்) இனம்- ஓரெழுத்திற்குஓரெழுத்துஇனமாதற்குக்காரணமாம், எ-று.

எல்லாம்பொருளாய்அடங்குதலால்-இங்கேசெய்கையையும்பொருளென்றுகூறினர். வடிவு-ஒலிவடிவு - வரிவடிவிரண்டுமெனக்கொள்க. [வரலாறு,] அ ஆ - என்பனவிரண்டிற்குந்தானம் - கண்டம், முயற்சி- அங்காத்தல், பொருள்- அந்த - ஆந்த- பலாவரிது- பலா

வானது, குரங்கரிது- குரங்கானது, எ-ம்- வடிவு- அ ஆ- எ-ம்- மாத்திரையொழிந்தனஒத்திருத்தலால்-இனமாயிற்றெனவும். கங-இரண்டிற்கும்- முயற்சி - அடிநாவடியண்ணஞ்சேர்தல், அளவு-தனித்தனி- அரைமாத்திரை, பொருள்- மரங்கரிந்தது - மரங்காய்ந்தது- எனத்தானமும்வடிவுமொழிந்தன ஒத்திருத்தலால்-இனமாயிற்றெனவுங்காண்க. ஒழிந்தனவுமிவ்வாறேயொத்து இனமாதல்காண்க. இச்சூத்திரம்- எதுவிஃமுடித்தலென்னும் உத்தி, என்னெனின்-சார்பெழுத்திற்குப்பெயர் கூறுதொழிந்தார்-ஆய்தந்தனிநிலையாதலாலும்- ஒழிந்தசார்பெழுத்திற்குச்- சுட்டுவிகுவென்றெடுத்துச்சொல்லியவையொழித்து - ஒழிந்தமுதலெழுத்தின் பெயரேபெயராயடங்குதலாலுமென்க- இதனுள் - உத்தி - யாது- முடித்ததுயாதெனின்- இங்கேகாட்டியகாரணங்களாற்சார்பெழுத்திற்கும்பெயர்கூறிறுவென்பதுதான் - இதனுள்- ஆதற்குக்காரணமென்பதுகுறைந்துநின்றது-ஒப்பு- இனமாதற்குக்காரணமெனமுடித்துக்கொள்க. பெயரிலக்கணமுற்றிற்று.　(யஎ)

சிறப்பினுமினத்தினுஞ்செறிந்தீண்டம்முதல், னடத்தருனேமுறையாகும்மே. - - - - ✻

இது- நிறுத்தமுறையேஎழுத்தினதுமுறையிலக்கணமுணர்- து. (இ-ள்.) சிறப்பினும் - சிறப்பினுலும், இனத்தினும் - மேற்சொல்லியஇனத்தினுலும், செறிந்து-ஒன்றின்பின்னென்றுவந்து, ஈண்டு- இங்கே, அம்முதனடத்தருனே - அகரமுதலாக நடந்துவருவதே, முறையாகும்- எழுத்துக்களின் (கிடக்கை) முறையாம், எ-று.

உயிருள்- குறிலினதுவிகாரமே நெடிலாதலாற்குறில் முன்நிற்பதினுலும், மெய்யுள்- வலியோர்மெலியோர்க்குமுன்னிற்றல்போல- வல்லெழுத்துமுன்னிற்பதினுலுஞ்சிறப்பினுமென்றும், நெடிலும் - மெல்லெழுத்தும் இனமாய்அவற்றின்பின்னிற்றலால் - இனத்தினுமென்றும், குறிலுந்தினுள்- அகரமானது - சைதந்நியமாத்திரமாய்த்தனித்தும்- எல்லாவுயிர்கட்குங்காரணமாகியவற்றெறுகலந்துமவற்றினமுன்னிற்கும் ஆகிபகவனேபோல -நாதமாத்திரையாய்த்தனித்தும், எல்லாவெழுத்திற்குங்காரணமாய்அவற்றெறுகலந்தும்-அவற்றின்முன்நிற்றலால் அம்முதலென்றும் .. எல்லாவெழுத்திற்கும் வைத்தமுறைக்காரணம் உயிர்களாலேமுற்றும் உணரலாகாமையால் - நடத்தருனேயென்றுங்கூறினர், ஆயினும்- மெய்களுள் -முதல்நாமுதலண்ணமுறப்பிறக்குஞ்சிறப்புப்பற்றிக்- கம்முதலென்றும், வலிமெலியுணர்ந்தாலல்லது இடைமையுணரலாகாமையால் அச்சிறப்பின்மைபற்றியவற்றின்பின் இடையெழுத்தாறும், னகரம்வீடுபெறுதற்கு உரிய ஆண்மகனையுணர்த்தலால் அச்சிறப்புநோக்கி இறுதியிலும் - அதற்குஇனமாயினும்- றகரம்வல்லெழுத்தாதலால் அதன்முன்னும்வைக்கப்பட்டனவெனஉய்த்துணர்ந்துகொள்க. முறையிலக்கணமுற்றிற்று.　(யஅ)

நிறையுயிர்முயற்சியினுள்வளிதுரப்ப, வெழுமணுத்திரளுரங்கண்டமுச்சி, மூக்குற்றிதழ்நாப்பல்லணத்தொழிலின், வெவ்வேறெழுத்தொலியாய்வரல்பிறப்பே. - - - ✻

இது- நிறுத்தமுறையேயெழுத்துக்களின் பிறப்பிலக்கணமு

ணர்த்தத்தொடங்கி - அதன்பொருளிலக்கணமுணர் - து. (இ-ள்.) நிறையுயிர் - (ஒலியெழுத்தாகிய காரியத்திற்குவேண்டுங் காரணங்கள்) நிறைந்தவுயிரினது, முயற்சியின் - தொழிலினாலே, உள்வளி - உள்ளே நின்றஉதானனென்னுங்காற்றானது, துரப்ப-எழுப்ப, எழும்- எழாநின்ற, அணுத்திரள் - (செவிக்குவிடையமாகிய) நாதமானது, உரம்- மார்பும், கண்டம்-கழுத்தும், உச்சி-தலையும், மூக்கு-நாசியுமாகிய இந்தநான்கிடத்தையும், உற்று - பொருந்தி, இதழ் - உதடும், நா- நாக்கும், பல்- தந்தமும், அணத்தொழிலின்- கீழ்வாயுமாகியஇந்தநான்கு அவயவங்களினுடையமுயற்சியினாலே, வெவ்வேறு - வேறுவேறுவகைப்பட்ட, எழுத்தொலியாய்வரல - எழுத்தோசைகளாய்வருவது, பிறப்பு - அவ்வெழுத்துக்களின் பிறப்பாம். எ-று. (௰௯)

அவ்வழி- ஆவியிடைமையிடமிடறாகு, மேவுமென்மைமூக்குரம்பெறும்வன்மை. *

இது - முதலெழுத்துகட்குஇடங்கூறுகின்றது. (இ-ள்.) அவ்வழி - முன்சொல்லியநெறியே, ஆவியிடைமையிடம் - உயிரெழுத்தும் இடையெழுத்துமாகிய இருவகையெழுத்துகட்கும் இடம், மிடறாகும் - கண்டமாகும், மென்மைமூக்குமேவும்- மெல்லெழுத்துகள்மூக்கையிடமாகப்பொருந்தும், உரம்பெறும்வன்மை வல்லெழுத்துகள்மார்பைஇடமாகப்பெறும். எ-று.

இச்சூத்திரத்தில் - அவ்வழி - என்றதும் - வருஞ்சூத்திரத்தில் - அவற்றுள் - என்பதும் - கூன், எனினெனின் - பொருளோடடிமுதனிற்பதுகூன் - என்றாராகலினென்க, இடம் - மிடறு, மென்மைமேவும், வன்மைபெறும் - என - இச்சூத்திரத்தைமூன்றுமுடிபாகமுடித்துக்கொள்க. (௨௰)

அவற்றுள் - முயற்சியுள் அ ஆ அங்காப்புடைய, *

இது-சிலவெழுத்திற்குமுயற்சிவகையாற்பிறப்புணர்-து.(இ-ள்.) அவற்றுள்- மேல்இடம்வகுக்கப்பட்டமுதலெழுத்துக்களுள், அஆ- அகரஆகாரங்களிரண்டும், முயற்சியுள்- நால்வகைமுயற்சியுள், அங்காப்புடைய- அண்ணமுயற்சியாகிய அங்காத்தல்முயற்சியையுடையனவாம். எ-று.

அம்முயற்சியாற்பிறக்குமெனக்கொள்க, அங்காத்தல்- வாயைத்திறத்தல், அங்காப்பு - என்பதும் - அது, (௨௧)

இஈஎஏஐயங்காப்போ, டண்பன்முதனாவிளிம்புறவருமே, *

இதுவுமது- (இ-ள்.) இஈஎஏஐ- இந்தஐந்தும், அங்காப்போடு - மேற்கூறிய அங்காத்தல்முயற்சியோடுகூட, அண்பல் - முன்னை

44416

ம்பல்லை, அடிநாவிளிம்புற-அடிநாவினது விளிம்பு பொருந்த, வரும்- பிறக்கும்- எ-று- அண்பல்- நாவிளிம்பு அணுகுதற்குக்காரணமாகிய பல்லெனக்கொண்டு-முன்னம்பல்லெனக்காண்க-அங்காப்போடென்பதையிப்பிறப்பிலக்கணமுடியுமளவும் வருஞ்சூத்திரந்தோறுங்கூட்டுக - ஐந்தும்வருமெனமுடித்துக்கொள்க. (௨௨)

உஊஒஓஔவிதழ்குவிவே, *

இதுவுமது- (இ-ள்.) உஊஒஓஔ-இவ்வைந்தும்பிறத்தற்குஉரிய முயற்சி, இதழ்குவிவு-உதட்டைக்குவித்துக்கூறுதலாம், எ-று. (௨௩)

கஙவுஞ்சஞவுமடணவுமுதலிடை, நுனிநாவண்ண முறமுறைவருமே. *

இதுவுமது - (இ-ள்.) முதலிடைநுனிநாவண்ணம்-முதலிடைநுனிநாவும் முதலிடைநுனியண்ணமும், உற - பொருந்த, முறை-முறைநிரனிறையாகவே, கஙவுஞ்சஞவுமடணவும்வரும் - முதனாமுதலண்ணமுற - கஙவும், இடைநாஇடையண்ணமுற-சஞவும், நுனிநாநுனியண்ணமுற- டணவும்பிறக்கும், எ-று.

முறைபிறழ்ந்துவருவது, எதிர்நிரனிறையாதலின் இது முறைநிரனிறையெனக்காண்க. நிரல்-வரிசை, நிறுத்துதல்- நிறை, இங்கே அண்ணமென்றது மேல்வாயகமெனக்காண்க. இச்சூத்திரம், நிரனிறைப்பொருள்கோளும் அவ்வலங்காரமும்படநின்றது. (௨௪)

அண்பலடிநாமுடியுறத்தநவரும், *

இதுவுமது - (இ-ள்.) அண்பலடி - முன்னம்பல்லடியை, நாமுடியுற - நாவினது நுனியானது பொருந்த, தநவரும் - தவ்வும்நவ்வும்பிறக்கும், எ-று. (௨௫)

மீகீழிதழுறப்பம்மப்பிறக்கும், *

இதுவுமது - (இ-ள்.) மீகீழிதழுற - மேலுதடுங்கீழுதடும்பொருந்த, பம்மப்பிறக்கும் - பவ்வும் - மவ்வும்பிறக்கும், எ-று. (௨௬)

அடிநாவடியணமுறயத்தோன்றும், *

இதுவுமது- (இ-ள்.) அடிநாவானது - அடியண்ணத்தைப்பொருந்த, யத்தோன்றும் - யகரம்பிறக்கும், எ-று. (௨௭)

அண்ணநுனிநாவருடரழவரும். *

இதுவுமது - (இ-ள்.) அண்ணம் - மேல்வாயகத்தை, நுனிநா - நாவினது நுனியானது, வருட - தடவ, ரழவரும் - ரவ்வும் ழவ்வும்பிறக்கும், எ-று. (௨௮)

அண்பன்முதலுமண்ணமுமுறையி, னாவிளிம்புவீங்கியொற்றவும்வருடவும், லகாரளகாரமாயிரண்டும்பிறக்கும். *

இதுவுமது - (இ-ள்.) அண்பன்முதலும் - முன்னம்பல்லடி

யையும், அண்ணமும் - மேல்வாயகத்தையும், முறையின் - நிரனிறையே, நாவிளிம்பு - நாவினதுஓரமானது, வீங்கி - மேலெழுந்து, ஒற்றவும் - தீண்டவும், வருடவும் - தடவவும், லகாரளகாரமாயிரண்டும்பிறக்கும் - லகாரளகாரங்களாகிஅவ்விரண்டும்பிறக்கும், எ-று.

இதுவும் முறைநிரனிறைப்பொருள்கோளாதலால்- அண்பன்முதலைநாவிளிம்பு தீண்ட-லகாரமும்,அண்ணத்தைவருட-ளகாரமும், பிறக்குமெனக்கூட்டுக. (௨௯)

மேற்பல்லிதழுறமேவிடும்வவ்வே. *

இதுவுமது - (இ-ள்.) மேற்பல் - மேல்வாய்ப்பல்லை, இதழுற- கீழ்வாயுதடுபொருந்த, மேவிடும்வ - வகரம்பிறக்கும், எ-று.

இதழுவள் - இதழ்என்பது கீழிதழென்பதும், அது-உறவென்னும் வினைக்குவினைமுதலென்பதும் - மேற்பல்செயப்படுபொருளென்பதுங்கூறிக்காண்க. (௩௰)

அண்ண நுனிநா நனியுறிற்றனவரும். *

இதுவுமது - (இ-ள்.) அண்ணம் - மேல்வாயகத்தை, நுனிநா-நாவினது நுனியானது, நனியுறின்-மிகுதியும்பொருந்துமாயின்,றன வரும் - றவ்வும்-னவ்வும்-பிறக்கும். எ-று.

லகரப்பிறப்பினுக்கும் இவற்றிற்கும் வேறுபாடுதோன்ற- நனியுறினென்றார். (௩௧)

ஆய்தக்கிடந்தலையங்காமுயற்சி, சார்பெழுத்தேனவுந் தம்முதலனைய. *

இது-சார்பெழுத்திற்குஇடமுயற்சிவகைகளாற்பிறப்புணர்-து. (இ-ள்.) ஆய்தக்கு - ஆய்தவெழுத்திற்கு, இடம் - பிறப்பிடமானது, தலை - தலையாகும், முயற்சி - அதுபிறத்தற்கு உரிரியதொழில், அங்கா - அங்காத்தலாகிய அண்ணமுயற்சியாம், சார்பெழுத்தேனவும் - ஒழிந்தசார்பெழுத்துகளும், தம்முதலனைய-(இடமுயற்சிவகைகளால்) தத்தம் முதலெழுத்துக்களையொப்பனவாம், எ-று.

ஒப்பனவாய்ப்பிறக்குமெனவிரித்துக்கொள்க. ஏனவும் என்றவும்மை - எதிரதுதழுவிய எச்சவும்மையாதலால்- சார்பிற்சார்பாகிய ஆய்தக்குறுக்கமும்தனமுதலெழுத்தாகிய இந்த முற்குப்தத்தைப்போலவே தலையிடத்தில்நின்றும் அங்காத்தல்முயற்சியாற் பிறக்குமெனக்காண்க. இச்சூத்திரத்தை - இடந்தலை - முயற்சியங்கா- ஏனவுமுதலனைய-என மூன்றமுடிபாக்கி முடித்துக்கொள்க. (௩௨)

எடுத்தல்படுத்தனலிதலுழப்பிற்,றிரிபுந்தத்தமிற்சிறிதுளவாகும். *

இது- மேற்சொல்லியபிறப்பிலக்கணத்திற்குப்புறனடைகூறுகின்றது, (இ-ள்.) எடுத்தல் - உயர்த்திக்கூறுதலும், படுத்தல் - தாழ்த்திக்கூறுதலும், நலிதல்- வருத்திக்கூறுதலுமாகிய, உழப்பின் -

(எழுத்திற்குஉரிய) மூவகைமொலிமுயற்சிகளாலே, திரிபும்- வேறுபாடுகளும், தத்தமில் - (பல்வெழுத்துகளைக்கூட்டிப் பிறப்புஒன்றாகச்சொல்லப்பட்ட) அவற்றவற்றுள்ளே, சிறிதுளவாகும் - சிறிதுசிறிதாகஉண்டாம், எ-று.

சிறிது- என்பதை-சிறிதுசிறிதுஎன அடுக்காக்கி - சிறிதுசிறிதாக என அவற்றைமுற்றெச்சமுமாக்கித்-திரிபும் உளவாமெனமுடித்துக்கொள்க. இனிஒலிமுயற்சிநான்கெனக்கூறி-ஐ விளங்குவுண்டயதென உதாரணமெடுத்துக்காட்டுவாருமுளர். (௮௮)

— புள்ளிவிட்டவ்வொடுமுன்னுருவாகியு, மேனையுயிரோடுருபுதிரிந்து, முயிரளவாயதன்வடிவொளித்திருவயிற், பெடரொடுமொற்றுமுன்னாய்வருமுயிர்மெய். *

இது - (மேலேபிறப்புச்சொல்லப்பட்ட சார்பெழுத்திற்குச் சார்ந்துவருதலுமோர்பிறப்பாதலால் அதையுமிப்பிறப்பிலக்கணத்துள்ளடக்கிச்சொல்லத்தொடங்கி அவற்றுள்) உயிர்மெய்சார்ந்துவருதலுணர் - து, (இ-ள்.) புள்ளிவிட்டு - (ஒற்றுக்கள்பெற்றுநின்ற) புள்ளிகளைப்போக்கி, அவ்வொடு - அகரத்தோடுகூடியபோது, முன்னுருவாகியும்- (புள்ளிவிடப்பட்ட) பழையவடிவேவடிவாகியும்- ஏனையுயிரோடு - மற்றவுயிர்களோடுகூடியபோது,உருபுதிரிந்தும், தத்தம்வடிவுவேறுபட்டும், உயிரளவாய் - (தம்மாத்திரைவெளிப்படாமல் தம்மேலேறிய) உயிரினளவேதமக்குஅளவாகி, அதன்வடிவொளித்து அவ்வுயிரின்வடிவைத்தம்முள்ளேமறைத்து, இருவயிற்பெயரொடும்- (உயிருமெய்யுமாகிய) இரண்டிடத்துப்பிறந்த உயிர்மெய்யென்னும்பெபரோடும், ஒற்றுமுன்னாய் - ஒற்றொலிமுன்னாகவும் உயிரொலிபின்னாகவும், வருமுயிர்மெய்-உயிர்மெய்யெழுத்துக்கள்வரும். எ-று.

இதனுள் - புள்ளிவிடுதற்கும் முன்னுருவாதற்கும் - திரிதற்கும் - வடிவொளித்தற்கும்-முன்னைந்தனுக்கும் - வினைமுதல்- ஒற்றெனவும்,உயிரளவாதற்கும்-இருவயிற்பெயரொடுவருதற்கும்- வினைமுதல் - உயிர்மெய்யெனவுங்கொண்டு- முன்னாய்என்னுஞ்செய்தெனெச்சந்தைச்செயவெனெச்சமாக்கி- வருமென்பதனோடுகூட்டி முடித்துக்கொள்க. இனி பிவ்விலக்கணத்தால் ஒவ்வொருமெய்யிலே பன்னிரண்டுயிருங்கூடப் - பதினெட்டுப்பன்னிரண்டாய் இருநூற்றுப்பதினாறு வருவதைவழங்குகின்ற வரிவடிவினுள்ளும் ஒலிவடிவினுள்ளுங்காண்க. [வரலாறு,] க்அ- க- க்ஆ- கா- க்இ- கி- க்ஈ- கீ- க்உ- கு- க்ஊ- கூ- க்எ- கெ- க்ஏ- கே - க்ஐ - கை - க்ஒ - கொ - க்ஓ - கோ - க்ஔ - கௌ - எனவரும் - இவ்வாறேயொழிந்தமெய்களோடுங்கூட்டிக்காண்க. (௮௯)

— குறியதன்முன்னராய்தப்புள்ளி, யுயிரொடுபுணர்ந்தவல்லாறன்மிசைத்தே, - - - - *

இது - முற்றாய்தம்வருமாறுகூறுகின்றது - (இ-ள்.) ஆய்தப்புள்ளி - புள்ளிவடிவாகியஆய்தமானது, குறியதன்முன்னர் - குற்

றெழுத்தின்முன்னதாகி, உயிரொடுபுணர்ந்த- உயிரொடுகூடிய, வல்லாறன்மிசைத்து- ஆறுவல்லெழுத்தினுள்ஒன்றின்மேலதாம், (மேலதாகிவரும்) எ-று.

[உதாரணம்,] எஃகு- கஃசு- கஃடு- இருபஃது- அஃபு- கஃறு- எனவிவை வல்லினவகையால் ஒருமொழிக்கண்வந்த ஆய்தம்- ஆறு, அஃகடிய- இதுபுணர்ச்சிவிகாரத்தால்வந்தது - விலஃஃகி வீங்கிருளோட்டுமேமாத - நிலஃஃகுமுத்தினினம்- இக்குறட்பாவில்வந்த ஆய்தஞ்செய்யுள் விகாரத்தால்வந்தது - ஆகமுற்றாய்தம் எட்டாய் வருதல்காண்க. தனிக்குறிலென்றமையால் - குறிலிணைக்கீழும் ஆய்தம்வருமெனக்காண்க. இச்சூத்திரம் - மேற்கோளென்னும் ஆசிரியவசனமாதலால் - தானெடுத்துமொழிதலென்னும் உத்தி.(௫௫)

இசைகெடின்மொழிமுதலிடைகடைநிலைநெடி, லளபெழுமவற்றவற்றினக்குறில்குறியே. - - - *

இது - உயிரளபெடைவருமாறுணர் - த்து, (இ-ள்.) இசைகெடின் - செய்யுள்ஓசைகுறையுமாயின், மொழிமுதலிடைகடை- (அவ்வோசைகுறைந்த) மொழியின்முதலிலாவது, இடையிலாவது - கடையிலாவது, நிலைநெடில்- நின்றநெட்டெழுத்துக்கள், அளபெழும் - (அவ்வோசைநிரம்பும்படி) தத்தம்மாத்திரையின் மேற்பட்டொலிக்கும், அவற்று - அவற்றிற்கு, (அவ்வாறு அளபெடுத்தன அறிதற்கு) அவற்றினக்குறில் - அவற்றிற்குஇனமாகிய குற்றெழுத்துக்கள், குறி- (அவற்றின்பின்) அறிகுறியாய்வரிவடிவில்வரும், எ-று.

[உ-ம்,] வாஅகை - ஈஇகை- ஊஉகம் - பேஎகன் - தைஇயல் - தோஒணா - மௌஉவல் - எ-ம்- செய்யுள் - ஆஅவளியவலவன்றன் பார்ப்பினோ - டுஇரிணக்கொண்டுரளைப்பள்ளியுட் - டூஉந்திரைய லைப்பத்துஞ்சாதிறைவன்றோஒண் - மேஎவலைப்பட்டநம்போனறுநு தா- லோஒவுழக்குந்துயர்- எனவும்வரும் - இவைமுதனிலையளபெடை, படாஅகை- பரீஇகம்- கழூஉமணி- பேஎரம் - வளைஇயம் - பரோஒரம்- மனௌஉகம்- எ-ம்- செய்யுள் - உறாஅர்க்குறுநோயு ரைப்பாய்கடலைச்- செறாஅஅய்வாழியநெஞ்சு - எனவும்வருமிவை இடைநிலையளபெடை, கடாஅ- குரீஇ- குழூஉ- மிலேஎ - கடைஇ- அரோஒ- அளௌஉ- எ-ம்- செய்யுள் - அனிச்சப்பூக்கால்களையாள் பெய்தாணுசுப்பிற்கு - நல்லபடாஅபறை- எனவும் வருமிவை இறுதிநிலையளபெடை- பிறவுமிவ்வாறுகாண்க.

இனி - இவை இயற்கையளபெடை - செயற்கையளபெடை- யெனவிருவகைப்படும் - குரீஇ - ஆடூஉ - மகடூஉ - குழூஉ - என்றற்போல்வன இயற்கையளபெடை - இசைநிறைதற்பொருட்டுச்செய்யுளில் அளபெடுத்துவருவன செயற்கையளபெடை யெனக்காண்க. குறினெடிலென்றது பொதுப்பட இசைகெடினென்றதினால் - கெடுப்ப

தூஉங்கெட்டார்க்குச்சார்வாய்மற்றாங்கே- யெடுப்பதூஉமெல்லாமழை. எனக்குறில்- நெடிலாயளபெடுத்து இன்னிசைநிறைக்கவருவனவும் - உரனசைஇ யுள்ளந்துணையா கச்சென்றார் - வரனசைஇயின்னுமுளேன்- என அளபெடுத்துச்சொல்லிசை நிறைக்க வருவனவுங்கொள்க, சொல்லிசைநிறைத்தலாவது - நசை- என்பது ஆசை - ஆசைப் பட்டு எனவினையெச்சம் நிறைதற்பொருட்டு - நசைஇ- என அளபெடுத்துநிற்பது,இ தனுள் இடவகையால் உயிரளபெடை இருபத்தொன்றாய்வருதல்காண்க. இனி இவற் றொடு தனிநிலையளபெடையென ஒன்றுகூட்டி இருபத்தெட்டென்பாருமுளர்- அது- இவர்கூறிய மூவகையுளடங்குமெனக்கொள்க. இச்சூத்திரத்தை - நெடில் அளபெழு ம்- குறில்- குறி, என இரண்டுமுடிபார்க்குக. (௩௯)

ஙஞணநமனவயலளவாய்த, மளபாங்குறிலிணை குறிற்கீழிடைக
டை, மிகலேயவற்றின்குறியாம்வேறே. *

இது - ஒற்றளபெடைவருமாறுணர்த்- து, (இ-ள்.) - ஙஞண நமனவயலளவாய்தம் - (செய்யுளோசைகுன்றுமாயின்) இப்பதி னொற்றும், குறிலிணைகுறிற்கீழ் - இரண்டுகுற்றெழுத்தின்பின் னும்ஒருகுற்றெழுத்தின்பின்னும், இடைகடை - மொழியிடையி லுங்கடையிலும், அளபாம்-தத்தம்மாத்திரையின்மேற்பட்டு ஒலிக் கும், வேறேமிகல் - மற்றும்அவ்வொற்றுக்களே (வரிவடிவில்) அவ ற்றின்பின்மிக்கிருப்பது, அவற்றின்குறியாம் - அவற்றிற்கு அறிகுறி யாம். எ-று.

மேலிசைகெடினென்றதையிதற்குங்கூட்டுக. [உதாரணம்,] அர ங்ங்கம் - முரஞ்ஞ்சு - முரண்ண்டு- பருந்ந்து- அரும்ம்பு - முரன் ன்று- குரல்ல்கள் - திரள்ள்கள்- விலஃஃகி - எ-ம் - செய்யுள்- இல ங்ங்குவெண்பிறைசூடீசனடியார்க்குக் - கலங்ங்குநெஞ்சமிலைக்கா ண் - எனவும்இவைகுறிலிணைக்கீழ்மொழியிடையில் அளபெடுத்த ன, மங்ங்கலம்- மஞ்ஞ்சு - மண்ண்ணு- பந்ந்து- அம்ம்பு - மின்ன் னு- தெவ்வ்வர் - வெய்ய்யர் - செல்ல்க-கொள்ள்க-எஃஃகு- எ-ம்- செய்யுள்- எங்ங்கிறைவனுளனென்பாய்மனனேயா - னெங்ங்கெண த்திரிவாரின் - எனவுமிவைகுறிற்கீழ்மொழியிடையில் அளபெடுத் தன, பரண்ண்- மரம்ம்- நலன்ன் - குரல்ல்-திரள்ள் - எ-ம்- செய் யுள் - அரண்ண்கொண்டவடுதோளினர் - வலம்ம் பட்டவாள்வயவ ர் - பகல்ல்லன்னபண்புளாயீர் - திரள்ள்சேனைசெலநீக்கி - எனவுமி வைகுறிலிணைக்கீழ்மொழியீற்றில்அளபெடுத்தன, மண்ண்- அம்ம்- பொன்ன்- கல்ல்- கொள்ள்- எ-ம் - செய்யுள்- கண்ண்டண்ணெனக் கணடுங்கேட்டும் - தம்ம்படையைத்தாஞேக்கி - மின்ன்னன்னவே ல்விளக்கி - யிவ்வ்வுலகையினிதாண்டு - செய்ய்தொழிற்செயநோக் கிக் - கல்ல்லன்னவன்னெஞ்சிற் - கொள்ள்ளென்றுகொடுக்கலரா ய் - எனவுமிவைகுறிற்கீழ்மொழியீற்றில் அளபெடுத்தன.

ஆய்தத்திற்கு ஒற்றுந்தன்மையுமுளதாதலால் இங்கேஒற்றளபெடையொடு கூட் டியுணர்த்தார் - ஆய்தங்குறிலிணைக்கீழுங் குறிற்கீழும் மொழியிறுதியில் வாராமையால்

அதனை அவ்விரண்டிடத்தும் விலக்கி ஒற்றளபெடை நாற்பத்திரண்டாய் மேற்கூறிய வாறு வருதல்காண்க - உதாரணங்காட்டாதொழிந்தன வந்தவிடத்திற்கண்டுகொள்க. இச்சூத்திரத்தை - பதினொரோற்றும் அளபாம்- எ-ம்- மிகல்- குறி- எனவும் - இருமுடிபாகமுடித்துக்கொள்க. (௯எ)

யகரம்வரக்குறளுத்திரியிகரமு, மசைச்சொன்மியாவினிகரமுங் குறிய, - - - - - - *

இது - குற்றியலிகரம்வருமாறுணர் - று. (இ-ள்.) யகரமவர- யகரமுதல்மொழிவந்துபுணர், குறளு- (நிலைமொழியிறுதியிலே நின்ற) குற்றியலுகரமானது, திரியிகரமும்-திரிந்தஇகரமும், அசைச்சொன்மியாவின்- உரையசைச்சொல்லாகியமியாவென்னுஞ்சொல்லினது, இகரமும் - (மகரஒற்றின்மேலேறிநின்ற) இகரமும், குறிய- குற்றியலிகரங்களாம். எ-று.

[உ-ம்,] நாகு- யாது- நாகியாது- எஃகு- யாது- எஃகியாது- வரகு-யாது- வரகியாது-கொக்கு - யாது- கொக்கியாது- குரங்கு- யாது- குரங்கியாது - தெள்கு - யாது - தெள்கியாது - எ-ம் - கேண்மியா- சென்மியா- எனவும்வரும் - பொதுப்படக்கூறியகுற்றியலுகரம்முப்பத்தாறினும் - அசைச்சொல்மியாவினும் - குற்றியலிகரம்முப்பத்தேழாய்வருதல்காண்க. (௯அ)

நெடிலோடாய்தமுயிர்வலிமெலியிடை, தொடர்மொழியிறுதி வன்மையூருகர, மஃகும்பிறமேற்றொடரவும்பெறுமே. *

இது - குற்றியலுகரம்வருமாறுணர்த் - து, (இ-ள்.) நெடிலோடு - தனிநெடிலுடனே, ஆய்தமுயிர்வலிமெலியிடை - இந்த ஐந்தெழுத்தையும், தொடர்- தொடர்ந்த, மொழியிறுதிவன்மை- மொழியின் இறுதியிலே நின்றவல்லொற்றை, ஊருகரம் - நடத்தியஉகரமானது, அஃகும் - குறுகும், பிற - (இங்கேயிறுதியெழுத்திற்கு அயலெழுத்தாகச்சொன்ன தனிநெடிலொழிந்த ஐந்தெழுத்துமல்லாமல்) பிற எழுத்துக்களும், மேற்றொடரவும்பெறும் - மேலேதொடர்ந்துவரவும், பெறும்.எ-று.

நெடிலோடு-எனநெடிலை ஒடுக்கொடுத்துப்பிரித்தது - பிறமேற்றொடர்தல்அதற்கு இன்றென்பது தோன்றுதற்கு - உயிரொன்றது- குறில் நெடில்இரண்டையும், பெறுமேஎன்றதற்குவினைமுதல்தனி நெடிலொழிந்த ஐந்துதொடருமெனக்கொள்க. என்னெனின்- உகரங்குறுகுதற்கும் மொழிநிரம்புதற்கும் பிறஎழுத்துக்கள்மேலே தொடர்ந்துவாராமற்கூடாது ஆதலாலென்க-[உதாரணம்,] காகு- காசு- காடு- காது- காபு- காறு- இவைநெடிற்றொடர்,எஃகு-கஃசு- கஃடு- இருபஃது- அஃபு- கஃறு- இவை ஆய்தத்தொடர்-வரகு-பலாசு- முருடு- எருது- துரபு- கயிறு- இவையுயிர்த்தொடர்-கக்கு-

கச்சு- கட்டு- கத்து- கப்பு- கற்று- இவைவன்றொடர்- கங்கு- பஞ்சு- வண்டு- பந்து- அம்பு- கன்று- இவைமென்றொடர், ஆய்கு- ஆய்சு- ஆய்து- ஆய்பு - இவைஇடைத்தொடர்- இடையொற்றுக்கள் ஆறையும் டகரறகரங்கள்தொடராது ஆதலால் இதனுள் நால்கேவருமெனக்காண்க.

ஆயின் - முப்பத்தாறென்றதென்மெனின் - ஒருமகட்குறைந்த ஆனைமுகக்கடவுளை முக்கமத்தனென்றாற்போல இலக்கணையென்னும் விதப்பற்றிக்கூறினரென்க. இனி யீற்றுக்குஅடலெழுத்தையிடமாகக்கொண்டுநெடில் ஏழும் - ஆய்தமொன்றும் - மொழியிடையிலும் இறுதியிலும் வாராதஔகாரம்நீங்கியஉயிர்பதினொன்றும் - வல்லொற்றாறும் - மெல்லொற்றாறும் - வல்லெழுத்தோடு தொடராதயகர ஒற்றுநீங்கிய இடையொற்றைந்தும் - ஆகக்குற்றியலுகரம் முப்பத்தாறெனக்கூறுவாருமுளர். இனிஆசிரியர்தொல்காப்பியனார் - (சூத்திரம்,) நெட்டெழுத்திம்பருந்தொடர்மொழியீற்றும், குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே. எனத்தொகுத்துக்கூறியவாறுகூறுமியல் - இவர் அறுவகையாகவகுத்துக்கூறியது, குற்றுகரத்தை அறுவகையாகப்புணரியல் முதலியஇடங்களிலேவழங்குதற்கு இலக்கணைந்தான்றவெனக்காண்க. இதமுன்மொழிந்துங்காடலென்னுமுத்தி, அவ்வாசிரியர் சூத்திரத்தையெடுத்தின் உகரத்தைக்குற்றுகரமென்றார் அதுஇவர்க்குஉடன்பாடல்லாததினுஞ்சொல்லாதொழிந்தார் - இஃதொருதலையென்னும் மதம், ஒழிந்தன - உடன்பாடென்னும் மதம், இச்சூத்திரத்தை - உகரம் - அஃதும் எனவும் - ஐந்தொடரும் பெறும் எனவும் - முடித்துக்கொள்க. தனிநெடில் பெறுது ஐந்தொடருப்பெறுமெனநிற்றலால் - தொடரவும் என்றஉம்மை - எதிர்மறையும்மை யென்பதேதெளிவு, இதனைஇறந்ததுதழுவிய எச்சவும்மையென்பாருமுளர். (சசு)

தற்சுட்டளபொழிஐம்மூவழியு, நையுமௌவுமுதலற்றாகும். *

இதுஐகாரகுறுக்கம்வருமாறுணர்த்-து. (இ-ள்.) தற்சுட்டளவு- தன்னைக்குறிக்குமளவு, ஒழிமூவழியும்-ஒழிந்த (மொழி) முதல்இடைகடையென்கின்றமூன்றிடத்தும், ஐயையும்- ஐகாரங்குறுகும், ஔவுமுதலற்றாகும் - ஔகாரமும்மொழிமுதலிலேஅவ்வாறுகுறுகும், எ-று.

அளவுஎன்றது - எழுத்தின்சாரிலைதொடரினுங்குறுகுமென்பதுஅறிவித்தறகு, எனவே-ஓரெழுத்தொருமொழியாய்த்தனித்துவரின் ஒரோரிடங்களில் - குறுகாதென்பது - அருத்தாபத்தியென்னும்உத்தியாற்பெறப்பட்டது, [உ-ம்.] ஐப்பசி- மைப்புறம் - எ-ம் - இறைவன்- பொறையன்- எ-ம்- குவளை- திணை- எ-ம்- மௌவல்-எ-ம் ஐகாரமூன்றிடத்தும் ஔகாரம்மொழிமுதலிலுங்குறுகுதலால் இடவகையால்மேற்கூறியவாறே - ஐகாரக்குறுக்கமூன்றும் - ஔகாரக்குறுக்கம் ஒன்றும்வந்தவாறுகாண்க. (சரு)

ணனமுன்னும்வஃகான்மிசையுமக்குறுகும், *

இது - மகரக்குறுக்கம்வருமாறுணர்த் - து. (இ-ள்.) ணனமுன்னும் - ணகானகாங்களிலொன்றின்முன்னும், வஃகான்மிசையும் - வகரத்தின்பின்னும், மக்குறுகும் - மகரவொற்றுக்குறுகும். எ-று.

[உதாரணம்,] மருளினுமெல்லாமருண்ம் - எ-ம் - திசையறிமீ

காணும்போன்ம் - எ-ம் - தரும்வளவன் - எ-ம்- மகரக்குறுக்கம் இடவகையால்மூன்றாய்வந்தவாறுகாண்க.

இனி - இந்நணகாரனகாரங்களின் முன்வந்தமகரம் - செய்யுமென்னும் - வினைமுற்றின் இறுதியெனபதூஉம் அந்தணனக்கள்மருளும் - போலும்- என்பதில் உகரங்கெட லகரளகரங்கள் திரிந்துநின்றன என்பதூஉம், சொற்றொடனிலையாய்நிற்பின் மகரங்குறுகுமென்பதூஉம், இவ்வாறுகுறுகுதல் செய்யுளிடத்தென்பதூஉம் - பிறவும் - மேல்வருஞ்சூத்திரங்களெல்லாவற்றையும் வேண்டிப்பருந்தின்வீழ்வாய்நின்ற இச்சூத்திரத்துள் உய்த்துணர்ந்துகொள்க. இதுஉய்த்துணர்வைப்பென்னும் உத்தி. (சக)

ளவீற்றியைபினுமாய்தமஃகும். *

இது - ஆய்தக்குறுக்கம்வருமாறுணர் - த்து. (இ-ள்.) ளவீற்றியைபினும்- லகாரளகாரவீற்றுப்புணர்ச்சியிலேவரும், ஆய்தமஃகும் - ஆய்தந்தன் அரைமாத்திரையிற்குறுகும். எ-று.

[உதாரணம்,] கஃறீது- கஃறீது-முள்தீது-முஃடீது- எனவரும். இது முடிவிடங்கூறலென்னும்உத்தி- என்னெனின்- மெய்யீற்றுப் புணரியலுள் - குறில்வழிலளத்தவ் வணையினெனன் னுஞ்சூத்திரத்தை நோக்கிக் கூறுதலாலென்க. பிறப்பிலக்கணமுற்றிற்று. (சஉ)

தொல்லைவடிவினவெல்லாவெழுத்துமாண், டெய்துமேகார மோகாரமெய்ப்புள்ளி. *

இது - நிறுத்தமுறையேஉருவிலக்கணமுணர்த் - து, (இ-ள்.) எல்லாவெழுத்துந்தொல்லைவடிவின - எல்லா எழுத்துக்களும் பலவேறுவகைப்படஎழுதிவழங்கும் பழையவடிவையே யுடையனவாம், ஆண்டு - அவ்வாறுவழங்குமிடத்து, ஏகாரமோகாரமெய்- ஏகார ஓகாரங்களுந்தனிமெய்களும், புள்ளியெய்தும் - பழையபுள்ளியைப்பெறும், எ-று.

இவ்வாறுகூறுதலாற்பிற்காலத்தார் அந்தப்புள்ளியை நீக்கிச்சந்தேகப்படவழங்கிவந்தனரென்பதாயிற்று. [வரலாறு,] எ ஏ- ஒ ஓ- கெ கே- கொ கோ- க்க- ங்ங- எனவரும் - மற்ற உயிர்மெய்களுந் தனிமெய்களுமிவ்வாறே புள்ளிபெறுமெனக்காண்க, தொல்லாசிரியர்முதலாயினோர் - (சூ-ம்.) பழையனகழிதலும் புதியனபுகுதலும், வழுவலகாலவகையினானே. எனவும்- இறந்ததுவிலக்கல் எதிரதுபோற்றல் - எனவுங்கூறினமையால் - எகரமொகர மெய்புள்ளிபெறுமென்ற இச்சூத்திரத்தை - ஏகாரமோகாரமெய்ப்புள்ளிபெறுமெனத்திருப்பவேண்டிற்று- என்னெனின் - இக்காலத்தார்-எகாரஒகாரங்களுக்கேபுள்ளியிட்டெழுதுவது பெருவழக்காயினமையாலென்க. உருவிலக்கணமுற்றிற்று. (சரு)

மூன்றுயிரளபிரண்டாநெடிலொன்றே, குறிலோடையௌக்குறுக்கமொற்றளபு, பளையொற்றிஉக்குறுக்கமாய்தங், கால்குறண் மஃகானாய்தமாத்திரை, *

இது - நிறுத்தமுறையேமாத்திரை யிலக்கணங்கூறுகின்றது. (இ-ள்.) மூன்றுயிரளபு-உயிரளபெடைக்குமூன்றுமாத்திரை, இரண்டாநெடில் - நெட்டெழுத்திற்கு இரண்டுமாத்திரை, ஒன்றேகுறிலோடையௌக்குறுக்கமொற்றளபு- குற்றெழுத்திற்கும் ஐகாரஔகாரக்குறுக்கங்களுக்கும், ஒற்றளபெடைக்கும் - தனித்தனிமாத்திரையொன்றும், அரையொற்றிஉக்குறுக்கமாய்தம் - ஒற்றுக்களுக்கும் இகரஉகரக்குறுக்கங்களுக்கும் ஆய்தத்திற்கும் தனித்தனிஅரைமாத்திரையாம், கால்குறண்மஃகானாய்தமாத்திரை- மகரக்குறுக்கத்திற்கும் ஆய்தக்குறுக்கத்திற்கும் தனித்தனிகால்மாத்திரையாம், எ-று.

மேலேஉயிரளபாயெனற்றஇனலே இங்கேஉயிர்மெய்க்குஅளவுகூறுதொழிந்தார், இது - உரைத்தாமென்னுமுத்தி, இனி - உயிரளபெடைநான்குமாத்திரையாய்ச்சிறுபான்மைவருதலுமுண்டு - அதுசெய்யுள்வழுவமைதியாதலான்மூன்றுயிரளபென்றார். இச்சூத்திரத்தை - ரு - உ - க - ற - வ - எனஐந்தடிபாகமுடித்துக்கொள்க.(சச)

இயல்பெழுமாந்தரிமைநொடிமாத்திரை, *

இது- மேற்சொல்லியமாத்திரைக்குஅளவுகூறுகின்றது. (இ-ள்.) மாந்தரியல்பெழுமிமைநொடிமாத்திரை - மனிதருடையசுபாவத்திலெழுகின்ற கண்ணிமைப்பொழுதுங் கைநொடிப்பொழுதும் தனித்தனி ஒருமாத்திரையென்னுங் காலவரையறைப்பொழுதாம். எ-று.

இமைத்தலையும் நொடித்தலையுங்குறித்துக் காலத்தையுணர நின்றதினலே- இமைநொடியென்பன - ஆகுபெயர் - இவ்வளவுகருவியைமுற்கூறாதுபிற்கூறியது-பின்னதுநிறுத்தலென்னும்உத்தி.(சரு)

ஆவியுமொற்றுமளபிறந்திசைத்தலு, மேவுமிசைவிளிபண்டமாற்றாதியின், - - - - *

இது - மேலேமாத்திரைவரையறுத்துச்சொன்ன எழுத்துகட்குப் புறனடையுணர்த்- து, (இ-ள்.) ஆவியுமொற்றும் - (முதல்சார்புமுழுவதுமாகிய) உயிரெழுத்தும் மெய்யெழுத்தும், இசை- இராகம்பாடலும், விளி - அழைத்தலும், பண்டமாற்று- விலைகூறுதலும், ஆதியின் - முதலியவைகளிலே, அளபிறந்து- மேற்சொல்லியஅளவைக்கடந்து, இசைத்தலும்- ஒலித்தலையும், மேவும்-பொருந்தும். எ-று.

ஆதியென்றதினலெ - நாவல் - குறிப்பிசை - முறையீடு - புலம்பலுங்கொள்க, இராகத்திலேஅளவிறந்துஒலிக்குங்கால் - உயிர்பன்னிரண்டுமாத்திரைவரையிலும் - ஒற்றுப்பதினொருமாத்திரைவரையிலும்ஒலிக்குமென்றார். இசைநூலுடையார், இதுபிறநூன்முடிந்தது தானுடம்படுதலென்னும்உத்தி, மற்றையவற்றில்அளபிறந்தொ

லிக்குங்கால். உலகநடைபிறழாது - ஒலிப்பதேவாயறைவெனக் கொள்க. நாவல் - என்பது - நெல்லின்போர் அடிப்போர் எருமைக்கடாக்களை அதட்டுவதோர் சொல், [உ-ம்.] வெண்பா, காவலுழவர்களத்துப்போறேி - நாவலோஓஒவென்றிசைக்குநாளோதை - மாவலவன் - கொல்யானைமேலிருந்துகூற்றிசைத்தாற்போலுமே - நல்யானைக்கோக்கிள்ளிநாடு - இது நாவல்- கஂஂஂஂெறன்னுங் கல்லதரத்தஞ்சுஂஂஂஂெறன்னுந்தண்டோட்டுப்பெண்ணை - இது-குறிப்பிசை - மற்றைப்பவைபொருள்வெளிப்பட்டுக்கிடத்தலால் - அளவிறந்தொலித்தல்வந்தவந்த இடங்களிற்கண்டு கொள்க. இச்சூத்திரம் இயல்பெழுமென்னுஞ்சூத்திரத்தைத்தழுவாமல்- இடைவிட்டு அதற்குமுன்னின்ற- மூன்றுயிரளபென்னுஞ்சூத்திரத்தைத்தழுவிநின்றதிறுலே- தவளைப்பாய்த்து. மாத்திரையிலக்கணமுற்றிற்று. (சகூ)

பன்னீருயிருங்கசதநபமவய, ஞநவீரைந்துயிர்மெய்யுமொழிமுதல். *

இது - நிறுத்தமுறையேயெழுத்துகள் மொழிக்குமுதலாமிலக்கணமுணர் - து. (இ-ள்.) பன்னீ-ரும்-உயிர்பன்னிரண்டும், கசதநபமவயஞநவீரைந்துயிர்மெய்யும் - இப்பத்து உயிர்மெய்யுரும், மொழிமுதல் - மொழிக்குமுதலாம், எ-று.

[உ-ம்.] அடை- ஆடை- இடை- ஈடு- உடை - ஊடை- எடை - ஏடு- ஐவனம்- ஒடை- ஓடை- ஔவியம் - எ-ம்- கனி-சனி-தனி-நனி-பனி- மனை- வனம்- யவனர்- ஞமலி- அங்ஙனம்- எனவும்வரும்-பிறவுமிவைபோலவேகாண்க, உயிர்போலேதனித்து முதலாநதன்மையவல்லஆதலால்உயிர்மெய்யென்றார். இதுஇன்னதல்லதுவெனமொழிதலென்னும் உத்தி. (சஎ)

உ ஊ ஒ ஓவலவொடுவம்முதல், - - - *

இது - மேற்கூறியபொது விதிக்குச்சிறப்புவிதி கூறுகின்றது. (இ-ள்.) இந்தநான்குஉயிருமல்லாத எட்டுஉயிர்களோடுங்கூடிவகரம்மொழிக்குமுதலாம், எ-று.

[உ-ம்,] வளி- வாளி- விளி-வீளி - வெளி - வேளை - வைக்கோல்- வௌவால் - எனவரும். (சஅ)

அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல், *

இதுவுமது - (இ-ள்.) இந்த ஆறு உயிரோடுங்கூடி யகரம் மொழிக்கு முதலாம், எ-று.

[உ-ம்.] யவனர்- யானை- யுகம்- யூகி- யோகம்-யௌவனம்-எனவரும்- மேலைச்சூத்திரத்துச்சொன்ன ஒடுவை - இச்சூத்திரத்தும்- ஒடுவொடுயம்முதலெனகூட்டிக்கொள்க. (சகூ)

அ ஆ எ ஒவ்வோடாகுஞ்ஞமுதல், - - *

இதுவுமது- (இ-ள்.) இந்தநான்குஉயிரொடுங்கூடி ஞகரம்மொழிக்குமுதலாம். எ-று.

[உ-ம்,] ஞமலி - ஞாலம் - ஞெகிழ் - ஞொள்கல் - எனவரும் - ஞொள்கல்- இளைத்தல், (ருய)

சுட்டியாவெகரவினாவழியவ்வை,யொட்டிஙவ்வுமுதலாகும்மே*

இதுவுமது - (இ-ள்.) சுட்டு - மூன்றுசுட்டெழுத்தும், யாவெகரவினாவழி - யாவினாஎகரவினாவுமாகிய இவற்றின்பின், அவ்வையொட்டி - அகரம்ஒன்றைமாத்திரஞ்சார்ந்து, ஙவ்வுமுதலாகும் - ஙகரமுமொழிக்குமுதலாம். எ-று.

[உ-ம்,] அங்ஙனம் - இங்ஙனம் - உங்ஙனம் - யாங்ஙனம் - எங்ஙனம் - எனவரும் - இவற்றை - அங்கு இங்கு என்றாற்போலத்தொடர்மொழிகளெனக்கொள்க.

ஙனம் - என்பது - இடத்தையும் - தன்மையையும் உணர்த்தும்பலபொருளொருசொல்லாய்வரினுந்தனித்துவருந் தன்மையின்றிமுடவன் கோலூன்றிவந்தாற்போலச்சுட்டுவினாவாகிய இடைச்சொற்களைமுன்னிட்டுவருதலால் - வழியென்றும், அவ்வையொட்டியென்றும் - ஒருவிதத்தில்முதலாதலால் - இழிவுசிறப்பு உம்மைகொடுத்து ஙவ்வுமென்றுங்கூறினர். இவ்வாறுகூறுதலால் - ஙகரமொழிக்குமுதலாகாதென்பார்க்கு உடன்படலும் மறுத்தலுமாய் - பிறர்தம்மதமேற்கொண்டுகளைவென்னும் மதம்படக்கூறினரெனக்காண்க- இனிமுதலாமென்றபடத்துயிர்மெய்யுள்- வகரமுதலியநான்கையும் எடுத்துக்கூறவே ஒழிந்த ஆறுமெய்களும்பன்னிரண்டுஉயிரோடுங்கூடி மொழிக்குமுதலாமென்பது அருத்தாபத்தியென்னும் உத்தியாற்கொள்ளக்கிடந்தமைகாண்க. மொழிமுதலிலக்கணமுற்றிற்று. (ருக)

ஆவிஞண நமனயரலவழளமெய், சாயுமுகர நாலாறுமீறே, *

இது - நிறுத்தமுறையே எழுத்துக்கள்மொழிக்கு ஈறுமிலக்கணமுணர்த் - து. (இ-ள்.) ஆவி - தனித்தும் மெய்யொடுகூடியும் வரும்உயிர்பன்னிரண்டும், ஞணநமனயரலவழளமெய் - இந்தப்பதினொற்றும், சாயுமுகரம் - குற்றியலுகரமும், நாலாறும் - ஆகியஇருபத்திநான்குஎழுத்துக்களும், ஈறு - மொழியிறுதியிலேவருமெழுத்துக்களாம். எ-று.

[உ-ம்,] ஆ- ஈ- ஊ - ஏ- ஐ- ஓ- ஔ - எனவும் - அ- இ- உ- எ- ஒ- எனவும்வருமிவைதானே நின்றுஈறாயின - இவற்றுள் - ஊ- இறைச்சி- ஏ- அம்பு - ஐ- அழகு- ஓ- மதகுநீர்தாங்குபலகை - ஔ - அவ் - என்னும்வகரவீற்றுச்சுட்டுப்பெயர்ப்பொருளைஒப்புமையாற்காட்டிநிற்கும், அகரமுதலியமூன்றுஞ்சுட்டுஇடைச்சொல் - எகரம் - வினாவிடைச்சொல் - ஒகரம்- ஒத்தான் - என்னும்வினையில் - முதனிலை, விள- பலா- கரி- குரீ- கடு- மரூ- சே- தை- கோ- கௌ-ம் - இவைமெய்யொடுகூடியீறாயின- இவற்றுள்- சே- எருது, உரிஞ் - மண் - பொருந்- மரம்- பொன்- வேய்- வேர்- வேல்- தெவ்- வாழ்- வாள்- ஏண்

வரும்- இவையெய்பீறு - இவற்றுள்- உரிஞ்-தேய்த்தல் - பொருந்- ஒருவர்மற்றொருவர்போல- வேடந்தரித்தல் - காட்டாதொழிந்தன வருஞ்சூத்திரத்தாற்காண்க. குற்றுகரமும் உயிரீறாயடங்குமாயி னும் புணர்ச்சிவேறுபாடுதோன்ற வேறெடுத்துக்கூறினா னெனக் காண்க. (௫௨)

குற்றுயிரளபினீறாமெகரமெய், யோடேலாதொந்நவ்வோடா மௌ, ககரவகரமோடாகுமென்ப. - - *

இது - குற்றுயிர்க்கும் ஒகரத்திற்கும் ஔகாரத்திற்கும் எய்தி யதன்மேற் சிறப்புவிதியும் எகரத்திற்குஎய்தியது ஒருபுறம்விலக்கு தலுமுணர்த் - து, (இ-ள்.) குற்றுயிரளபினீறும் - குற்றுயிரைந்து ம்நெட்டுயிர் அளபெடுக்கும்போது (வரிவடிவிலே அறிகுறியாகத்) தனித்தும் ஈறாகும், எகரமெய்யோடேலாது -எகரமெய்யோடு கூ டியீறாகாது, ஒந்நவ்வோடாம் - ஒகரம்நகரமொன்றுடனேகூடியீ றாகும், ஔககரவகரமோடாகுமென்ப - ஔகாரங் ககரத்தோடும் வகரத்தோடுங்கூடி யீறாகுமென்றுசொல்லுவர் புலவர், எ-று.

[உ-ம்,] ஆஅ வளிய - ஈஇ ரிலா- தூஉ உந்நிரை - மேஎ ஏவலே- ஓஒ வுழக்கும்- எனக்குற்றுயிரைந்தும் (தானேநின்றும் மெய்யொடுகூ டியும் ஈறானதுமன்றி) அளபெடுக்கும்போதும்ஈறாயின, நொ- எ னஒகரம் நகரமோடுகூடியீறாயிற்று- கௌ- வௌ - எனஔகாரங் ககரவகரங்களோடுகூடியீறாயிற்று. நொ கௌ வௌ என்பன மு றையே- நீதுன்பப்படு- வாயாற்பற்று - கொள்ளையிடு என்னும் ஏவ ல்வினைகள்.

எகர ஒகர ஔகாரங்களை யெடுத்துச்சொல்லவேமற்ற உயிர்கள் தமக்கேற்றமெ ய்களோடுகூடி யீறாகுமென்பதுதானே கிடைத்தது - இனி முதலசார்புஎன எடுத்துக் கொண்ட எல்லாவெழுத்துகளுள் உயிர் மெய் ஆய்தமென மூவகையாயடங்குதலால் இ வற்றுள் - முதலும் ஈறுமாகாதஆய்தத்தை யொழிந்து நின்ற இரண்டையும்- உயிர்மு தல் - மெய்முதல்- உயிரீறு- மெய்யீறுஎன வகுத்துக்கொண்டார் இனிவரும்புணர்ச்சு விதியடங்குதற்பொருட்டெனக்காண்க. இச்சூத்திரத்துள் - புலவரென்பது குறைந்து நின்றது ஆதலால் - ஈறும் - ஏலாது - ஆம்- ஆகும்- என்றநான்குவினைகளையும் என்ப- வென்னுமுற்றுவினைச்சொற்குத் தனித்தனி அடையாக்கிப்புலவரொன்னும் பயனிலை கூ ட்டிமுடித்துக்கொள்க. (௰௧)

நின்றநெறியேயுயிர்மெய்ம்முதலீறே. - - *

இது - எழுத்தின்முதலும் ஈறுமாவதுணர்த் - து. (இ-ள்.) உயிர் மெய்முதலீறு - உயிர்மெய்க்குமுதலும் ஈறும், நின்றநெறியே - ஒற்றொலிமுன்னும் உயிரொலிபின்னுமாக அதுஒலித்துநின்றநெ றியேயாம், எ-று.

எனவே - மெய்முதலும் உயிரீறுமாமென்பதாயிற்று. ஆகவே உயிரும்ஒற்றும் - ஆய்தமுதலியஒன்பதுசார்பெழுத்துக்களும்ஒவ்

வோரெழுத்தென்பதும் அவற்றிற்குமுதலுமீறும் அவையேயாமெ ன்பதும் அருத்தாபத்தியாற்கூறினாராயிற்று. இது - எஞ்சியசொல் லினெய்தக்கூறலென்னும்உத்தி - இத்தொடக்கத்தன அல்லனவெல் லாம்- சொல்லின்முடிவினப்பொருண்முடித்தலென்னும்உத்தி.

முன்பு - மொழிக்குமுதலும்ஈறுங்கூறியவற்றுள்ளும்பின்பு- இடைநிலை - போலி- பதம்- புணர்ப்பு - என்பவற்றுள்ளும் - உயிர்மெய்யைப்பிரித்துத்தனிமெய்யுந் தனியுயி ரும்போலவைத்து இலக்கணங்கூறலால் - மொழிக்குமுதலுமீறுங்கூறியதன்றி எழுத் திற்கும் முதலும் ஈறுங்கூறினாரெனக்காண்க. இச்சூத்திரஞ்செய்கநோக்கம்- எண்ணில க்கணத்துள் உயிர்மெய்யை ஓரெழுத்தாகஎண்ணி - பிங்கேயிரண்டெழுத்தாகவைத்து இலக்கணஞ்சொல்லவதென்னெனின் - அப்பொழுதேசேர்த்தஉப்பேபோல - (அப்பு-நீர்) உயிரொடுபுணர்ந்தமெய்தன்மாத்திரை தோன்றமைலொன்றாய்நிற்றலின்ஒன்றுமாகி - ஒ ற்றெலிமுன்னும் உயிரொலிபின்னுமாகியொலித்தலால்இரண்டுமாகிநிற்பதிறலையென் க - இநிலைஉயிர்மெய்யென்னுஞ் சொல்மாத்திரைவகையால் - உம்மைத்தொகைப் புறத்துப்பிறந்தஅன்மொழித்தொகையாகவும் - ஒலிவகையால் உம்மைத்தொகையாக வுங்கொள்ளப்படுமெனக. மொழியிறுதியிலக்கணமுற்றிற்று. (௫௪)

கசதபவொழித்தவீரேழன்கூட்டம், மெய்ம்மயக்குடனிலைரழவொ ழித்தீரெட், டாகுமிவ்விருபான்மயக்குமொழியிடை, மேவுமு யிர்மெய்ம்மயக்களவின்றே. *

இது - நிறுத்தமுறையே இடைநிலைமயக்க முணர்த் - று, (இ-ள்.) கசதபவொழித்தவீரேழன்கூட்டம் - இந்தநான்கு ஒற்றை யுமொழித்து - ஒழிந்தபதினான்குமெய்களும் பிறமெய்களோடுகூ டுங்கூட்டம், மெய்ம்மயக்கு - பிறநிலைமெய்ம்மயக்கமாம், ரழவொழி த்தீரெட்டு-இந்த இரண்டுஒற்றையுமொழித்து ஒழிந்த பதினாறுமெ ய்களுந்தம்மோடுகூடுங்கூட்டம், உடனிலையாகும் - உடனிலைமெய் மயக்கமாம், இவ்விருபான்மயக்கும் - இந்த இருவகைமயக்கங்க ளும், மொழியிடைமேவும் - மொழியிடையிலேவரும், உயிர்மெ ய்மயக்களவின்று - (இவ்வாறன்றி) உயிருடன்மெய்யும்மெய்யுடன் உயிரும்மாறிமயங்கும் மயக்கத்திற்கு இந்த வரையறையின்றி வே ண்டியபடி மயங்கும், எ-று.

உடனிலையென்றதனாலே பிறநிலையெனப்பட்டது, மொழியிடை யன்றி ஓரெழுத்தினுமயங்குதலால் உயிருமெய்யும் மயங்குதற்கு இ டங்கூறுதொழிந்தார், இச்சூத்திரத்தால் மெய்யுடன்மெய்மயங்குங் கால்- கசதப- என்கின்றநான்குந் தம்மொடுதாமே மயங்குமெனவு ம், ரழவென்னுமிரண்டும்- தம்மொடுபிறவே மயங்குமெனவும், ஒ ழிந்தபன்னிரண்டு ஒற்றுக்களும் தம்மொடுதாமும்பிறவும் மயங்கு மெனவும்பெறப்பட்டன - உயிருமெய்யும் மயங்குதற்கு [உ-ம்,] அல்- வில்-எ-ம்- கா- பூ-எ-ம்- மொழியிடைமயங்கின-க- ச- த- என எழுத்திடைமயங்கின- மெய்யுடன் மெய்மயங்குதற்கு உதாரணம், மேல்வருஞ் சிறப்புச்சூத்திரங்களிற்காண்க. மயக்கம்- கூட்டம்- ம

யங்குதல் - கூடுதல் - ஒருமொழிதொடர்மொழி யிரண்டையுமிங் கேமொழியென்றது.

இனி உயிர்மெய்மயக்களவின்றென்பதற்கு- உயிருந்தனிமெய்யும் உயிரும் உயிர்மெய்யும் - உயிர்மெய்யுந்தனிமெய்யும் உயிர்மெய்யும் உயிர்மெய்யும் மயங்குதல்வரையறையின் றெனப்பொருள்கூறுவாருமுண்டு. இவர் உயிர்மெய்யை இரண்டெழுத்தாகப்பிரித்து இலக்கணங்கூறுவாராதலால் அது பொருந்தாதென்க. கூட்டம் மெய்மயக்கு, உடனிலை- ஈரொட்டாகும்,மயக்கும்- மேவும், அளவு-இன்று, என இச்சூத்திரத்தை நான்குமுடிபாகமுடித்துக்கொள்க.

ஙம்முன்கவ்வாம்வம்முன்யவ்வே. *

இது - பிறநிலைமெய்மயக்கத்துள்ளெடுத்துச்சிறப்புவிதிகூறுகின்றது, (இ-ள்.) ஙகரத்தின்முன் ககரமும் வகரத்தின்முன் யகரமும்வந்து மயங்கும், எ-று.

[உ-ம்,] கஙகன்- தெவ்யாது- எனவரும். (ருசு)

ஞநமுன்றம்மினம்யகரமோடாகும், *

இதுவுமது - (இ-ள்.) ஞநமுன்- இந்தஇரண்டுமெய்களின்முன், தம்மினம்- தமக்கினமாகியசகரதகரங்கள், யகரமோடாகும்- யகரத்தோடுகூடமயங்கும், எ-று.

எனவே - ஒன்றுடன் இனமும்யகரமுமயங்குமென்பதாயிற்று. [உ-ம்,] கஞ்சன் - உரிஞ்யாது- கந்தன் - பொருந்யாது - எனவரும் - இனமும்யகரமுமயங்குமெனமுடிக்க. (ருஎ)

டறமுன்கசபமெய்யுடன்மயங்கும், *

இதுவுமது - (இ-ள்.) டறமுன்- இவ்விரண்டின்முன், கசபமெய் - இம்மூன்றுமெய்களும், உடன்மயங்கும்-கூடிமயங்கும்,எ-று.

[உ-ம்,] வெட்கம்- வெட்சி- வெட்பாலை- எ-ம். கற்க- கற்சிலை-கற்ப- எனவும்வரும். (ருஅ)

ணனமுன்னினங்கசஞபமயவவ்வரும். *

இதுவுமது - (இ-ள்.) ணனமுன் - இவ்விரண்டு மெய்களின்முன், இனம்- அவற்றிற்குஇனமாகிய டகர றகரங்களும், கசஞபமயவ- இந்த ஏழெழுத்துக்களும், வரும்- வந்துமயங்கும், எ-று.

[உ-ம்,] விண்டு - வெண்கலம்- வெண்சுடர் - வெண்ஞமலி - வெண்பா- வெண்மலர்- மண்யாது - மண்வலிது- எ-ம். கன்று - புன்கண்- புன்செய்- புன்ஞமலி- புன்பயிர்-புன்மலர்-பொன்யாதுபொன்வலிது- எனவும்வரும். (ருகூ)

மம்முன்பயவமயங்குமென்ப. *

இதுவுமது- (இ-ள்.) மகரத்தின்முன்பயவ- என்னும்மூன்றுமெய்களும் இணங்குமென்றுசொல்லுவர் புலவர், எ-று.

[உ-ம்,] கலம்பெரிது- கலம்யாது- கலம்வலிது.எனவரும்.(சுய)

யரழமுன்னர்மொழிமுதன்மெய்வரும். *

இதுவுமது- (இ-ள்.) யரழமுன்னர் - இந்தமூன்றுமெய்களின் முன், மொழிமுதன்மெய்வரும் - மொழிக்குமுதலாமெனவெடுத்துக்காட்டிய பத்துமெய்களும்வந்துமயங்கும், எ-று.

[உ-ம்,] வேய்- வேர்- வீழ்- என நிறுத்தி- கடிது- சிறிது - தீது, பெரிது- ஞான்றது- நீண்டது- மாண்டது- யாது-வலிது- எனவருவித்து - வேய்கடிது- வேய்சிறிது- வேய்தீது-வேய்பெரிது - வேய்ஞான்றது- வேய்நீண்டது- வேய்மாண்டது- வேய்வலிது- என ஒட்டிக்கொள்க. மற்ற- வேர்- வீழ்-என்பனவற்றொடுமிவ்வாறேயொட்டுக. இனி ஙகரத்திற்கு- வேய்ங்குழல் ஆர்ங்கோடு- பாழ்ங்கிணறு-எனக்காண்க. சுருங்கச்சொல்லலென்னும் அழகுபற்றி இவ்வாறு கூறினாராயினும் யகரத்தின்முன் யகரம்மயங்குதல் உடனிலைமயக்கமாதலால் அதனையிங்கேவிலக்குக. (சுக)

லளமுன்கசபவயவொன்றும்மே. *

இதுவுமது- (இ-ள்.) லளமுன் - இவ்விரண்டின்முன், கசபவயவொன்றும் -இந்த ஐந்துஒற்றுக்களும் வந்துமயங்கும். எ-று.

[உ-ம்,] வேல்- வாள்- என நிறுத்தி-கடிது -சிறிது-பெரிது- வலிது- யாது-எனவருவித்து முன்போலவொட்டிக்காண்க. (சுஉ)

ரழவல்லன தம்முற்றாமுடனிலையும். *

இது- உடனிலைமயக்கத்திற்குச்சிறப்புவிதிகூறுகின்றது,(இ-ள்.) ரழவல்லன - இந்த இரண்டும் அல்லாதபதினாறுமெய்களும், தம்முற்றாமுடனிலையும் - தம்முன்தாமேவந்து உடனின்றுமயங்கும், எ-று.

[உ-ம்,] அக்கம்- அங்ஙனம் -அச்சம்- அஞ்ஞை- அட்டை- அண்ணை- அத்தை- அந்நிலம்- அப்பம்- அம்மை- அய்யன் -அல்லி-அவ்வை-அள்ளல்- அற்றம்- அன்னை- எனவரும். (சுரு)

- யரழவொற்றின்முன்கசதபஙஞநம, வீரொற்றும்ரழத்தனிக்குறிலணையா. *

இது - தனிமெய்யுடன்தனிமெய்யாய்மயங்குவன இவையென்பதும் - மொழிக்குஉறுப்பாக மயங்காதன இவையென்பதுமுணர்த் - து. (இ-ள்.) யரழவொற்றின்முன் - இந்தமூன்றுமெய்களின்முன், கசதபஙஞநம - இந்தஎட்டுஒற்றுக்களும், (தனிமெய்யும்உயிரோடியமெய்யுமாகமயங்குதலும்அல்லாமல்) ஈரொற்றும் - இரண்டுவொற்றாகவும்மயங்கிநிற்கும், ரழ- (உயிர்மெய்மயக்கத்துள்) இந்தஇரண்டுமெய்களும், தனிக்குறிலணையா - (மொழிக்கு அவயவமாக) தனித்தகுற்றெழுத்தைச்சேர்ந்துஇணங்காவாம். எ-று.

ஈொற்றுமாம். என்னும்உம்மையிடைச்சொல்லும் - மொழிக் குஅவயவமாக - என்னுஞ்சொற்களுங்குறைந்துநின்றன. [உ-ம்,] வேய் - வேர்- வீழ்எனநிறுத்தி - குறை - சிறை- தலை - புறம்எனவ ருவித்து - வேய்க்குறை - வேய்ச்சிறை- வேய்த்தலை- வேய்ப்புறம்- எனஒட்டிக்கசதபக்கள்ஈொற்றாய்நின்றனவெனவும் - இவ்வாறே வேர்-வீழ்-என்பனவற்றொடுமொட்டுக, வேய்ங்குழல்-ஆர்ங்கோடு- பாழ்ங்கிணறு- எ-ம். தேய்ஞ்சது, கூர்ஞ்சிறை- பாழ்ஞ்சுனை-எ-ம். காய்ந்தது- நேர்ந்தது-வாழ்ந்தது-எ-ம். வேய்ம்புறம் - ஈர்ம்பணை பாழ்ம்பறி - எனவும்முறையே - ஙஞநமக்கள் - ஈொற்றாய் நின் றனவெனவுங்காண்க. அணையாவென்றரமுக்களுக்கு உதாரணங்கா ட்டலாகாமைபுணர்க - இனிஉரையிற்கோடலென்னும் உத்தியால்- ரகரவொற்றுத்தனிக்குறிலைச்சேர்ந்துமொழிக்கு உறுப்பாகிவிகுதி யிடைச்சொல்லாய்வருமெனக்கொள்க, [உ-ம்,] வந்தனர் - வாழ் ந்தனர் - எனக்காண்க. (௬௪)

ளளமெய்திரிந்தனணமுன் மகார, நைந்தீொற்றாஞ்செய்யுளு ள்ளே. - - - - ✻

இது - செய்யுளிடத்துஈொற்றாய் நிற்பனஇவையென்கின்ற து- (இ-ள்,) ளளமெய்திரிந்தனணமுன் - இந்தஇரண்டுவொற்றுக் களுந்திரிந்த னகரணகரங்களின்முன், மகாரநைந்து - மகரம்மே ற்சொல்லியபடியேகுறுகி, ஈொற்றாஞ்செய்யுளுள் - ஈொற்றுட னிலைமயக்கமாஞ்செய்யுளிடத்து.எ-று.

[உ-ம்,] திசையறிமீகானும்போன்ம்-மயிலியன்மாதர்மருண்ம், எனவரும் , மேலேமக்குறுகுமெனக்கூறி- இதனுள்ளும்- மகரநை ந்தெனஅநுவதித்தார் அதற்குப்பயன் - லகரளகரமெய்கள்திரிந்த- னகரணகரங்களென்பதும் - மகரக்குறுக்கஞ்செய்யு ளிடத்துவரு மென்பதுந்தெரிதலாம் - அநுவதித்தல் - கூறியதுகூறல், இனிமு ன்பின்என்பனகாலம்பற்றியும்இடம்பற்றியும்மாறிவரும்- உதாரண ம் - கங - என்றதில் - ககரம்முன்னெழுதப்படுதலால் காலம்பற்றி முன்னாயிற்று-அதுவே-தனக்குஎதிர்முகமாக-ஙகரமுன்னிருத்தலா ல் இடம்பற்றிப்பின்னுமாயிற்றுஎனக்காண்க. (௬௫)

தம்பெயர்மொழியின்முதலுமயக்கமு, மிம்முறைமாறியுமிய லுமென்ப, - - - - ✻

இது - மொழிமுதலிடைநிலையென்னுமூன்றிற்கும் புறன டையுணர்த்திற்று - (இ-ள்.) தம்பெயர்மொழியின் -எழுத்துக்களி ன்பெயராச்சொல்லவருங்காலத்தில், முதலுமயக்கமும் - மொழி முதலுக்கும், இடைநிலைமயக்கத்திற்குஞ்(சொன்ன) இம்முறைமா

றியும் - இந்தஇலக்கணம்பிறழ்ந்தும், இயலுமென்ப - நடக்குமென்றுசொல்லுவர் புலவர், எ-று.

எனவே - மொழிமுதற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லாவெழுத்துக்களும் முதலாமென்பதும், இடைநிலை மயக்கத்திற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லாவெழுத்துக்களும் இடைநின்று மயங்குமென்பதுமாயிற்று. இவ்வாறே எல்லாவெழுத்துந் தனித்தனி அதற்குஅதுவேமுதலாகவருமெனவே ஈற்றிற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லாவெழுத்துக்களுந்தனித்தனி அதற்கதுவே ஈறாகவருமென்பது அருத்தாபத்தியால் அமைதலால்- ஈறுமென -மிகைபடச்சொல்லாதொழிந்தார், [உ-ம்,] (சூ-ம்.) அவற்றுள்ளளஃகான்முன்னர்யவவுந்தோன்றும்-என்றதில்- லகரம்மொழிக்குமுதலாகியும், அவற்றுள் என்ற கூன் இறுதியிலே நின்ற - ளகர ஒற்றொரும்மயங்கியும் நின்றது, கெட்பெரிது - என்னும் புணர்மொழியில் எகரம் மெய்யொடுகூடி ஈறாகிநின்றது - பிறவுமிவ்வாறு கண்டுகொள்க. ஆய்தத்திற்குமுன்னே பிறப்பிலக்கணஞ்சொன்ன இடத்துமயக்கவிதி அமைந்திருத்தலாலுந் தன்பெயர் கூறவாராததினாலும் சொல்லாதொழிந்தார் - இச்சூத்திரத்திற் புலவரென்னும் பயனிலைகுறைந்துநின்றது. இடைநிலையிலக்கணமுற்றிற்று. (௬௬)

மகரவிறுதியஃறிணைப்பெயரின், னகரமோடுறழா நடப்பனவுள
வே. - - - *

இது - நிறுத்தமுறையேபோலியிலக்கணஞ்சொல்லத்தொடங்கி மொழியிறுதிப்போலிபுணர்த்துகின்றது, (இ-ள்,) மகரவிறுதியஃறிணைப்பெயரின் - பால்பகாஅஃறிணைப்பெயர்களின் இறுதிமகரமானது, னகரமோடுறழா - னகரத்தோடொத்து, நடப்பனவுள - நடப்பனவுஞ்சில உளவாம், எ-று.

மகரம் னகரத்தோடு ஒத்தலாவது - மகரம் நின்ற இடத்தில் னகரம்வந்து நிற்பினும் வேற்றுமையில்லாதிருத்தல்.

[உ-ம்,] குறள் - அகனமர்ந்துசெய்யா ளுறையுமுகனமர்ந்து- நல்விருந்தோம்புவானில். இதனுள்- அகம்- அகன் - முகம்-முகன்- எனவருதலும் - இன்னும் - அறம் - அறன் - நிலம்- நிலன்- கலம்- கலன்- வலம்- வலன்- நலம் - நலன் - எனச்செய்யுளிடத்துவருவனவுங்காண்க, பிறவுமிப்படியே, உறழா நடப்பனவுள - என்றது - உறழாதுநடப்பனவுளவெனப்பொருள்படுதலால் அவ்வாறுவருதல் பெரும்பாலவென்க்கொள்க. அவைவருமாறு - வட்டம்- குட்டம்- மாடம்- கூடம் - என்றாற்போல்வன - இனியிவ்விறுதிப்போலியை

முன்சொன்னதலைதடுமாற்றத்தால் - சுரும்பு - சுரும்பர் - அரும்பு- அரும்பர்- சாம்பல்- சாம்பர்- பந்தல்- பந்தர்- குடல்- குடர்- மதில்-மதிள்- குறல்-குறள்- முதலியனவுங்கொள்க. இவ்வாறுகூறுதல்- தலைதடுமாற்றந்தந் துபுணர்ந்துரைத்தலென்னுந்தந்திரஉத்தி. (கூஎ)

அஐமுதலிடையொக்குஞ்சஞயமுன் - *

இது - மொழிமுதற்போலியும் மொழியிடைப்போலியு முணர்த் - து. (இ-ள்.) அஐமுதலிடையொக்கும்- அகரஐகாரங்கள்மொழிமுதலிலும் மொழியிடையிலும் (வேற்றுமையின்றி) ஒத்துநடக்கும், சஞயமுன்-சகரஞகரயகரங்களுக்குமுன்வருமாயின். எ-று.

இங்கேமுன்னென்றது காலமுன்எனக்காண்க. எவ்வாறெனின் - இறந்தகாலம்பட அகரஐகாரங்களானவை அம்மூன்றிற்கும், முன்னிற்குமாயினென்க, [உ-ம்,] பசல்- பைசல், மஞ்சு-மைஞ்சு, மயல் - மையல், எனவருமிவைமொழிமுதற்போலி-அமச்சன் - அமைச்சன், இலஞ்சி - இலைஞ்சி, அரயன் - அரையன், எனவருமிவை மொழியிடைப்போலி, பிறவுமன்ன, ஒக்குமென்பதையொத்துநடக்குமெனவிரித்து - அகரஐகாரங்களையெழுவாயாக்கி முடித்துக்கொள்க.

இனி - இச்சூத்திரத்தில் அகரத்தைமுன்வைத்ததினாலும் பசல் - மஞ்சு - மயல் அரசன் - என்பனவழக்காதலாலும் - அகரம்இயற்கையெனவும் ஐகாரம்போலியெனவும் காணவேண்டுதலால் - அகரமானது ஐகாரத்தை யொத்துநடக்கு மென்பதே தெளிவு. (கூஅ)

ஐகான்யவ்வழிநவ்வொடுசில்வழி,ஞஃகானுறழுமென்மருமுளரே,*

இதுவுமொழியிடைப்போலியுணர்த். து - (இ-ள்.) சில்வழி - (மொழியிடையிலே) சிலஇடத்து, ஐகான்யவ்வழி - ஐகாரத்தின்பின்னும்யகரத்தின்பின்னும், நவ்வொடு-இயல்பாய்வருகின்ற நகரத்தோடு, ஞஃகான் - ஞகரமானது, உறழுமென்மருமுளர்- ஒத்துநடக்குமென்றுசொல்வாருமுண்டு. எ-று.

[உ-ம்.] மைந்நின்ற -மைஞ்ஞின்ற -கைந்நின்ற- கைஞ்ஞின்ற- செய்ந்நின்ற - செய்ஞ்ஞின்ற - நெய்ந்நின்ற- நெய்ஞ்ஞின்ற - எனஇவைசெய்யுளிடத்துவந்தன -ஐந்நூறு - ஐஞ்ஞூறு - இதுவழக்கிடம், இச்சூத்திரம் - பிறன்கோட்கூறலென்னும்உத்தி, மண்யாத்தகோட்டமழகளிறு- மண்ஞாத்தகோட்டமழகளிறு- பொன்யாத்ததார் - பொன்ஞாத்ததார் - என - யாநின்றஇடத்து - ஞாநிற்பினும்அமையுமெனத்தொல்காப்பியனார். (சூ-ம்.) ணனவென்புள்ளிமுன்யாவுஞாவும்வினையோரனையவென்மனார்புலவர் - எனச்சூத்திரஞ்செய்தவாறு-இவர்செய்யாதொழிந்தது-இறந்ததுவிலக்கலென்னும்உத்தி, இனியுரையிற்கோடலென்னும் உத்தியால் - நண்டு -

ஞண்டு-ஞெண்டு - நயம்- ஞயம், நாயிறு- ஞாயிறு, நாஞ்சில்- ஞாஞ்சில், நேயம்- ஞேயம், எனநகரத்திற்குஞகரம்வரும்- மொழிமுதற்போலியும் - ஆடு - யாடு, ஆறு -யாறு, ஆமை - யாமை - ஆனை, யானை, எனஆகாரத்திற்கு - யகரம்வரும் - மொழிமுதற்போலியுங்கொள்க. (௬௯)

அம்முனிகரம்யகரமென்றிவை, யெய்தினையொத்திசைக்குமவ்வோ, டுவ்வும்வவ்வுமௌவோரன்ன, - - *

இது - எழுத்துப்போலியுணர்த் - து. (இ-ள்.) அம்முனிகரம்யகரமென்றிவையெய்தின் - அகரத்தின்முன்இகரமும் யகரஒற்றுமாகியஇவைதனித்தனிவருமாயின், ஐயொத்திசைக்கும் - ஐகாரத்தைஒத்துஒலிக்கும், அவ்வோடுவ்வும்வவ்வுமெய்தின் - அகரத்தோடுஉகரமும்வகரஒற்றுமாகிய இவைதனித்தனிவருமாயின், ஔவோரன்ன - ஔகாரத்தைஒத்துஒலிக்கும். எ-று.

ஓர்என்பது - இடைச்சொல், [உ-ம்,] அஇ- ஐ, அய்- ஐ, எ-ம்- அஉ - ஔ, அவ் - ஔ, எனவும் - கஇ- கை, கய்- கை, கஉ- கௌ, கவ் - கௌ, எ-ம்- குறள் - கய்வேல்களிற்றொடுபோக்கிவருபவன்- மெய்வேல்பறியாநகும்- எ-ம்- அவ்வியநெஞ்சத்தானாக்கமுஞ்செவ்வியான் - கேடுநினைக்கப்படும் - எ-ம் - இவைசெய்யுளிலேதொடைநோக்கி ஐகாரஔகாரங்கள்நின்ற இடத்துப்போலிவந்தவாறுகாண்க.

இனிஇவ்வாறே ஆசிரியர்தொல்காப்பியனார். அகரஇகரமைகாரமாகும் - அகரஉகரமௌகாரமாகும் - அகரத்திம்பர்யகரப்புள்ளியுமையெனெடுஞ்சினைமெய்பெறத்தோன்றும் - எனக்கூறியதறிந்தும் - அஇ -இந்தமூன்றுங்கூடி ஐகாரமாயிற்றெனவும், அஉ - இந்தமூன்றுங்கூடி ஔகாரமாயிற்றெனவும் - பொருள்கூறுவாருமுளர்- அதுபோலியிலக்கணமாகாமையுணர்க - அம்முன்னிவை ஐயொத்தொலிக்கும்- அதன்முன்னிவைஔவன்ன - எனஇருமுடிபாக்குக. போலியிலக்கணமுற்றிற்று. (௭௰)

மெய்களகரமுநெட்டுயிர்காரமு, மையௌக்கானுமிருமைக்குறிலிவ். விரண்டொடுகரமுமாஞ்சாரியைபெறும்பிற, *

இது - எழுத்தின்சாரியைகளைத்தொகுத்து இனமடைத்தலையுணர்த்திற்று. (இ-ள்.) மெய்களகரமும் - தனிமெய்கள்அகரச்சாரியையும், நெட்டுயிர்காரமும் - உயிர்நெடில்களெல்லாங்காரச்சாரியையும், ஐயௌக்கானும் - ஐகாரஔகாரங்கள் காரச்சாரியையோடு கான்சாரியையும், இருமைக்குறில் - உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும், இவ்விரண்டொடு - இந்தக்காரச்சாரியைகான்சாரியையோடு, கரமுமாஞ்சாரியைபெறும் - கரச்சாரியையுமாகிய மூன்றுசாரியையும்பெறும். எ-று.

[உ-ம்,] கஙசஞடணதநபமயரலவழளறன - எனவருமிவை- ஒற்றுக்கள் அகரச்சாரியைபெற்றுநின்றன, ஆகாரம்- ஈகாரம் - ஊ

காரம் - ஏகாரம் - ஐகாரம் - ஒகாரம் - ஔகாரம் - எனஉயிர்நெடில்காரச்சாரியைபெற்றன, ஐகான் - ஔகான் - எனஇவ்விரண்டுங் கான்சாரியையும்பெற்றன, அகாரம் - அஃகான் - அகரம் - ககாரம் - கஃகான் - ககரம் - எனஇருவகைக்குறிலும் மூன்றுசாரியையும்பெற்றுநின்றன - பிறவுமிவ்வாறேகொண்க, பிறவென்றதினாலே - குறிலொடுகான்சாரியைபுணரும்போது இடையிலேஆய்தந்தோன்றுதலும் - அ- ஆன -எ- ஏன - ஒ- ஓன - ஐயன - ஔவன - என - ஆன- ஏன - ஓன- அன - முதலியசாரியைகளும் - அ- இ- உ- ஆ- ஈ- ஊ- எனச்சாரிபெறுதுவருதலுங்கொள்க.

உயிர்மெய்நெடில் இங்கேசொல்லப்பட்டமூன்றுசாரியைகளையுங் கொள்ளாததினாலேசொல்லாதொழிந்தார், விகற்பத்தின்முடித்தலென்னும் உத்தியினாலேமேல்விரிந்துமுடிந்துகிடந்தனவற்றைத்தெரியவேண்டி இங்கேதொகுத்துமுடித்ததினாலே - இது முடிந்தது முடித்தலென்னும்உத்தி - சாரியையென்றதையெல்லாவற்றோடுங்கூட்டுக. மெய்கள்-நெட்டுயிர்-ஐ ஔ-இருமைக்குறில், பெறுமெனமுடிந்துக்கொள்க. (௭௧)

மொழியாய்த்தொடரினுமுன்னனைத்தெழுத்தே, *

இது - இந்தஇயலுக்குப்புறனடையுணர்த் - து. (இ-ள்.) எழுத்துமொழியாய்த்தொடரினும் - (இந்தப்பத்துஇலக்கணத்தையுமுடைய) எழுத்துக்களேமொழியாகிஅம்மொழிநிலைமொழிவருமொழியாய்த்தொடர்ந்துவரினும், முன்னனைத்து- (பிறழாமலே) முன்சொல்லிய அவ்வளவையுடைத்தாம், (முன்சொல்லிய அந்தப்பத்திலக்கணத்தையுமுடையதாம். எ-று.

எழுத்துத்தூளிலேமஞ்சள்புகையிலைமுதலியவடிவுவேறுபடுவதுபோலவேறுபடாமல் - மாலையினிடத்தில்மலர்போலநிற்பதினாலே - முன்னனைத்தென்றார் - எழுத்தென்றது சாதியொருமையாதலால் - அனைத்தென்னும் ஒருமையோடுமுடிந்தது. எழுத்தியல் முற்றிற்று. (௭௨)

இரண்டாவது,

# பதவியல்.

எழுத்தேதனித்துந்தொடர்ந்தும்பொருடரிற், பதமாமதுபகா
ப்பதம்பகுபதமென, விருபாலாகியியலுமென்ப. - *

இது - நிறுத்தமுறையேபதத்தின் இலக்கணமுணர்த்தத்தொடங்கி.. எழுத்தினாற்பதமாவதும்அதன்வகையுமுணர்த்- து. (இ-ள்.) எழுத்தே - (மேலேசொல்லியபத்திலக்கணத்தையுமுடைய) எழுத்துக்களே, தனித்துந்தொடர்ந்தும் - ஒவ்வொன்றாகத்தனித்தும் இரண்டுமுதலியவாகத்தொடர்ந்தும், பொருடரிற்பதமாம்- பிறபொருளைத்தருமாயின் அதுபதமாம், அது - அந்தப்பதம், பகாப்பத

ம்பகுபதமெனவிருபாலாகி - பகாப்பதமெனவும்பகுபதமெனவும் இரண்டுவகையாகி, (பகுதல்- பிளவுபடல்)இயலுமென்ப- நடக்குமென்றுசொல்லுவர் புலவர், எ-று.

(சூ-ம்,) தன்னையுணர்த்தி னெழுத்தாம் பிறபொருளைச் சுட்டுதற் கண்ணேயாஞ்; சொல் என்றாராதலால்- இநிஞி - மிநிஞி - எனில்- தொடருமாயினுந் தன்னையுணர்த்துவதன்றிப் பிறபொருளைத்தராததினாலே அஃதுபதமாகாதென்று சொல்லவந்தவர் - பொருடரிற்பதமாமென்றார். (சூ-ம்.) ஓரெழுத்தொருமொழி யீரெழுத்தொருமொழியிரண்டிறந்திசைக்குந் தொடர்மொழியுளப்பட மூன்றேமொழிநிலைதோன்றிய நெறியே- என ஆசிரியர் தொல்காப்பியனார் இரண்டல்லவை பலவென்னும் வடநூல் நடைபற்றி இரண்டிறந்திசைக்குந்தொடர் மொழியுளப்பட மொழிநிலைமூன்றென்றார்- இவர்-ஒன்றல்லவை பலவென்னுந்தமிழ்நடைபற்றிமொழிநிலையிரண்டென்றொனக்காண்க.(௧)

உயிர்மவிலாறுந்தபநவிலைந்துங், கவசவினாலும்யவ்விலொன்று,
மாகுநெடினொதுவாங்குறிலிரண்டோ, டோரெழுத்தியல்பதமா
றேழ்சிறப்பின. - - *

இது - ஓரெழுத்தொருமொழியிவையென்பதும் இவ்வளவினவென்பதுமுணர்த்திற்று, (இ-ள்.) உயிர்மவிலாறும் - உயிர்வருக்கத்தும் மவ்வருக்கத்தும் அவ்வாறும், தபநவிலைந்தும் - தவ்வருக்கத்தும் பவ்வருக்கத்தும் நவ்வருக்கத்தும் ஐவைந்தும், கவசவினாலும் - கவ்வருக்கத்தும் வவ்வருக்கத்தும் சவ்வருக்கத்தும் நந்நான்கும், யவ்விலொன்றும் - யவ்வருக்கத்திலொன்றும், ஆகுநெடில் - ஆகியநெட்டெழுத்து நாற்பதும், நொதுவாங்குறிலிரண்டோடு - நொவ்வும் துவ்வுமாகிய குற்றெழுத்து இரண்டுடனே, ஓரெழுத்தியல்பதம் - ஆகஓரெழுத்தால்முடிந்தபதங்கள், ஆறேழ்சிறப்பின - நாற்பத்திரண்டுஞ்சிறந்தனவாம், எ-று.

[உ-ம்,] ஆ- ஈ- ஊ- ஏ- ஐ- ஓ- எ-ம்- மா- மீ- மூ- மே-மை-மோ எ-ம்- தா- தீ- தூ- தே- தை, பா- பூ- பே- பை- போ, நா- நீ- நே- நை- நோ- எ-ம்- கா- கூ- கை- கோ, வா- வீ- வே- வை, சா- சீ- சே- சோ, எ-ம்- யா- எ-ம்- நொ- து - எனவும் முறையேகாண்க. இவற்றுள் - பே - நுரை, நே- அன்பு, சோ- அரண், நொ-து- என்பன-ஏவல்வினை- துன்பி- பொசி- என்பனபொருள் - ஒழிந்தனவற்றிற்குப் பொருள்மேலேசொல்லப்பட்டன, இவை சிறப்பினவெனவே-அ- என்னுஞ்சுட்டுப்பெயர்ப்பொருளை ஒப்புமையாற்காட்டுகின்ற-ஔ என்பதும்- சுட்டிடைச்சொல்லும் வினாவிடைச்சொல்லும் முதனிலையிடைச்சொல்லுமாய்வருகின்ற - அ- இ- உ- எ- ஒ- என்னுங்குற்றுயிரைந்தினாலாகிய ஓரெழுத்தொருமொழிகளும், கௌ- வௌ-ஞ- கு- சை- என்பனவும் இவைபோல்வனவுஞ் சிறப்பிலவெனக்காண்க.

பகாப்பதமேழும்பகுபதமொன்பதும், மெழுத்தீறாகத்தொடருமென்ப.

இது-தொடரெழுத்தொருமொழியுணர்த்துகின்றது, (இ-ள்.) பகாப்பதமேழெழுத்தீறுகவும் - (தொடருங்கால்) பகாப்பதம்இரண்டெழுத்துமுதல் ஏழெழுத்துவரைக்கும், பகுபத மொன்பதெழுத்தீறுகவும் - பகுபதம் இரண்டெழுத்துமுதல் ஒன்பதெழுத்துவரைக்கும், தொடருமென்ப - தொடருமென்றுசொல்லுவர் புலவர், எ-று.

[உ-ம்,] அணி- அறம்- அகலம்- அருப்பம்- தருப்பணம்- உத்திரட்டாதி- எனவருமிவை பகாப்பதம் - கூனி - கூனன் - குழையன்- பொருப்பன்- அம்பலவன்- அரங்கத்தான் - உத்திராடத்தான்- உத்திரட்டாதியான்- எனவருமிவைபகுபதம், எழுந்திருக்கின்றார் - நடத்துவிப்பிக்கிறார் - நடத்துவிப்பிக்கின்றார்- நடத்துவிப்பிக் கின்றவர்கள் - எனப்பகுதிமுதலிய வேறுபட்டு வருவனவற்றிற்கு இந்தவரையறையில்லையென்க. இதனுள்- பயனிலைகுறைந்துநின்றது. (௩)

பகுப்பாற்பயனற்றிடுகுறியாகி, முன்னேயொன்றாய்முடிந்தியல்கின்ற, பெயர்வினையிடையுரிநான்கும்பகாப்பதம். *

இது - பகாப்பதம் இன்னவென்பதும் இவ்வளவின வென்பதுமுணர்த் - று, (இ-ள்.) பகுப்பாற்பயனற்று - பகுத்துப்பார்த்ததினாலே பகுதிவிகுதிமுதலியபொருள்விளைவுமின்றி, இடுகுறியாகி - காரணமில்லாமல், முன்னேயொன்றாய் - பூருவந்தொடங்கித்தானொருபதமேயாகி, முடிந்தியல்கின்ற- முடிந்துநடக்கின்ற, பெயர்வினையிடையுரிநான்கும் பகாப்பதம் - இந்த நான்குசொல்லும் பகாப்பதமாம், எ-று.

[உ-ம்,] நிலம்- நீர்- என்றாற்போல்வன பெயர்ப்பகாப்பதம்-நட- வா- என்றாற்போல்வன- வினைப்பகாப்பதம்- மன்- மற்று-உ-ம்,என்றாற்போல்வன-இடைப்பகாப்பதம்- உறு- கழி- நனி - என்றாற்போல்வன- உரிப்பகாப்பதம்- பிறவுமிவ்வாறுகாண்க. (௪)

பொருளிடங்காலஞ்சினைகுணந்தொழிலின், வருபெயர்பொழுதுகொள்வினைபகுபதமே. - - *

இது - பகுபதம் இன்னவென்பதும் இவ்வளவின வென்பதுமுணர்த் - று, (இ-ள்.) பொருள்- இடம்- காலம்- சினை-குணம்-தொழிலின் வருபெயர்-இவ்வாறுங்காரணமாகவரும் பெயர்ச்சொற்களும், (சினை- அவயவம்,) பொழுதுகொள்வினைபகுபதம் - (தெரிநிலையாகவுங்குறிப்பாகவும்) காலத்தைக்கொண்டுவருகின்ற வினைச்சொற்களும் பகுபதங்களாம், எ-று.

புளி- கடு- முதலிய ஆகுபெயர்களுங் காரணத்தால்வருமாயினும், நட- வா- முதலிய ஏவல்வினைகளும்பொழுதுகொள்வினையாயி

னும் - பகுத்தற்கு விகுதிமுதலியஉறுப்பில்லாததிறுவே இவையொழிந்தனவற்றையே-வருபெயரொன்றும் - பொழுதுசொல்வினையென்றுங் கூறினுமெனக்கொள்க. [உ-ம்,] பொன்னன் - பொருள்-அகத்தன்- இடம்- ஆதிரையான்- காலம்- கண்ணன்- சினை- கரியன்- குணம் - ஊணன் - தொழில் - எனமுறையேபொருளாதி ஆறுங்காரணமாகப் பெயர்ப்பகுபதம்வந்தன, நடந்தான்- நடக்கின்றான்- நடப்பான்- எனமுக்கால் வினைமுற்றுப் பகுபதம்வந்தன-நடந்த - நடக்கின்ற - நடக்கும் - என முக்காலப்பெயரெச்சப்பகுபதம்வந்தன - நடந்து - நடக்க - நடக்கின் - எனவினையெச்சப்பகுபதம்வந்தன, (இவையெல்லாமுடன்பாடு) நடவான் - நடவாத - நடவாது - (இவையெதிர்மறை) இவைமுறையே உடன்பாட்டுவினைமுற்றும்பெயரெச்ச வினையெச்சங்களும், எதிர்மறைவினைமுற்றும் பெயரெச்சவினையெச்சங்களுமாகிய தெரிநிலைவினைப்பகுபதங்கள், பொன்னன் - அகத்தன் - ஆதிரையான் - கண்ணன் - கரியன் - ஊணன் - அற்று - இற்று- எற்று- எனஇவைகுறிப்புவினைமுற்று, கரிய.- பெரிய - எனஇவைகுறிப்புப்பெயரெச்சம், (இவையுடன்பாடு) அல்லன் - இல்லன் - அன்று - இன்று - எனவிவைமுற்று, அல்லாத - இல்லாத - இவைபெயரெச்சம், அன்றி - இன்றி - அல்லாமல் - இல்லாமல் - இவைவினையெச்சம், இவைமுறையேஎதிர்மறைமுற்றும் - எதிர்மறைப்பெயரெச்சவினை யெச்சங்களுமாகியகுறிப்புவினைப்பகுபதங்கள்வந்தன, நடந்தான் - நடந்தானை - நடந்தவனை - எனத்தெரிநிலைவினையாலணையும்பெயர்ப்பகுபதம்வந்தன- பொன்னன்- பொன்னனை - ஊணன் - ஊணனை - எனக்குறிப்புவினையாலணையும்பெயர்ப்பகுபதம்வந்தன, பொன்னன் என்பதுகுறிப்புவினைமுற்றாயின் - பொன்னையுடையனுயினனெனவிரிந்து உருபு ஏறாது நிற்பதும் - குறிப்புவினையாலணையும்பெயராயின் - உருபேறி நிற்பதும் - தம்முள்வேற்றுமை, இதுதெரிநிலைவினையாலணையும் பெயர்க்குமொக்கும்.

அவன் - இவன் - உவன் - எவன் - யாவன் - தமர் - நமர் - நுமர் - தந்தை - எந்தை - நுந்தை - எனவரும் - இவைமுறையே - சுட்டுப்பொருளும்வினாப்பொருளும்-கிளைப்பொருளும் - முறைப்பொருளுங்காரணமாகப்பிறபொருளுக்கு வரும்பெயராய்ப்பகுதிவிகுதிமுதலியஉறுப்பும் உறுப்பின் பொருளுந்தந்துவெளிப்பட்டுநிற்கும் பகுபதங்களாய்ப்பகுக்கப்படுதலால் இவற்றைப்பகுபதமென்னுது பகாப்பதமென்பாருமுளர் - அதுபொருந்தாதெனமறுக்க - சொன்மை - பொருண்மை - செம்மை - வின்மை - நடத்தல் - வருதல் - முதலியனபகுதிவிகுதியாகப்பகுக்கப்படினும் - விகுதிக்குவேறு பொருளின்றிப்பகுதிப்பொருள் விகுதியாய்நிற்பதினுலேசொல்நிலை பற்றிப்பகுபதமென்றும் பொருள்நிலைபற்றிப்பகாப்பதமென்றுங்கொள்ளப்படுமென்க. இச்சூத்திரத்தை - பெயர் - வினை - பகுபதமெனமுடித்துக்கொள்க. (௬)

பகுதிவிகுதியிடைநிலைசாரியை, சந்திவிகாரமாறினுமேற்பவை,
முன்னிப்புணர்ப்பமுடியுமெப்பதங்களும், - *

இது- பகுபதஉறுப்புஇவ்வளவினஎன்பதுணர்த்-து. (இ-ள்.) பகுதி-மாறினும்- இப்படிச்சொல்லியஆறுவகை உறுப்புகளுள்ளும், ஏற்பவை - (அப்பொருள்அமைதிக்கு) பொருந்துவனவற்றை, முன்னி - நினைத்து, புணர்ப்ப - கூட்டிமுடிக்க, எப்பதங்களுமுடியும் - எவ்வகைப்பட்டபகுபதங்களுமுடியும், எ-று.

பிரகிருதி - விகிருதி - என்னும் ஆரியமொழிகள் - பகுதி - விகுதியெனத்திரிந்துநின்றன, தன்னியல்பினால்நிற்பது பற்றிப்பகுதியென்றும், அவ்வாறுநிற்கும் பகுதிப்பொருளைத்தன்னகப்படப்பின்னின்று விகாரப்படுத்தலால்விகுதியென்றும், பகுதிவிகுதிகளின் இடைநிற்பதால் - இடைநிலையென்றும், பகுதிவிகுதிகளைச்சார்ந்து இயைந்துநிற்றலால் - சாரியையென்றும், நிலைமொழிவருமொழிசந்தித்தலால்உண்டாகிய - தோன்றல்திரிதல் - கெடுதல்களைச்சந்தியென்றும், செய்யுள்அடிதொடைமுதலியவற்றால் - வலித்தல்மெலித்தல்முதலிய விகாரப்படுதலால் அவற்றைவிகாரமென்றுங்காரணக்குறியாய்வந்தன, அல்வழிவேற்றுமைக்குச்சொல்லியமூன்றுவிகாரங்களையும் செய்யுளுக்குச்சொல்லிய ஒன்பதுவிகாரங்களையும் இப்பகுபதம்பெறுமெனமாட்டுதலால் இதுமாட்டெறிந்தொழுகலென்னும் உத்தி. (௬)

தத்தம்பகாப்பதங்களேபகுதியாகும், - *

சாரியைசந்திவிகாரமூன்றும்புணரியலிலேசொல்லப்படுதலால் அவற்றையொழித்துப்பகுதிமுதலிய மூன்றினுள்ளேபகுதிகள் இவையெனவுணர்த் - து. (இ-ள்.) தத்தம் - (பெயர்ப்பகுபதம்வினைப்பகுபதமென்னும் இரண்டினுள்ளும்) அவற்றவற்றின், பகாப்பதங்களே - முன்னின்றபகாப்பதங்களே, பகுதியாகும் - முன்சொன்னபகுதியென்னும்முதனிலைகளாம். எ-று.

பகுபதத்துள்ளே பகுதிவிகுதிமுதலிய வுறுப்புகளெல்லாம்பகாப்பதமாயினும் - விகுதிமுதலியவற்றைமேலெடுத்துக் கூறுதலால் இங்கேதத்தம்பகாப்பதங்களென்றது- முதனிலைகளையென்பதுபாரிசேடத்தாற்பெறப்பட்டது, பாரிசேடமென்பது-ஒழிந்துநின்றதினாலுணரப்படுவதோர்உத்தி, முதனிலைப்பெயர்வினையென்னமல்-தத்தம்பகாப்பதங்களேயென்றதினால் இருவகைப்பகுபதத்துள்ளே பகுதியும்ஒருஉறுப்பாதலால் விகுதிமுதலியவற்றொடு சேர்ந்துநிற்பதேதவிரப்பிரிந்துநில்லாமையாலும் பிரிந்தவழிப்பகுதி யாகிய உறுப்பின்பொருளைத்தராமையாலும் இருவகைப்பகுதி உறுப்புக்களும் - இடைப்பகாப்பதமென்பது பெறப்பட்டது - ஏகாரம்பிரிநிலை. (௭)

செம்மைசிறுமைசேய்மைதீமை, வெம்மைபுதுமைமென்மைமேன்மை, திண்மையுண்மைநுண்மையிவற்றெதிர், இன்னவும்பண்பிற்பகாநிலைப்பதமே, - - - *

இது - பண்புப்பகுதிக்குஎய்தியதன்மேற்சிறப்புவிதியுணர்த்-

து. (இ-ள்.) செம்மைமுதல் - நுண்மைகடையாகச் சொல்லப்பட்டபதினொன்றும், இவற்றெதிர்-இவற்றிற்குமறுதலைப்பட்ட, வெண்மை - கருமைபொன்மைபசுமைகளும், பெருமை அணிமை நன்மை தண்மை பழமை வன்மை கீழ்மை நொய்மை இன்மை பருமைகளும், இன்னவும் - இவைபோல்வனபிறவும், பண்பிற்பகா நிலைப்பதம் - பண்புப்பொருளிலேநின்றும் வேறுபொருள்பகுக்கப்படாதநிலைமையையுடையபதங்களாம், எ-று.

இங்கேசொல்லியபதங்கள் முதலாயினவெல்லாம் சொல் நிலையாற்பகுபதமாயினும்பொருள் நிலையாற்பகாப்பதமென்றுசொல்லவந்தவர் பண்பிற்பகாவென்றும், இப்பதங்கள் மைவிகுதியின்றி நடக்காததினாலே இந்தவிகுதியையும் பகுதியாகவைத்து மேல்வரும் விகுதிகளோடுசேர்க்கப்படுமென்றுசொல்லவந்தவர் - நிலைப்பதமென்றுங்கூறினர்- பண்புப்பகாப்பதமென்னாது பண்பிற்பகாநிலைப்பதமென்றது- சொற்பொருள்விரித்தலென்னும் உத்தி, செம்மை சிறுமைமுதலாக எடுத்துக்காட்டியது - எடுத்துக்காட்டலென்னும்உத்தி- எழுவாய்பயனிலைகள்உரையுள்விளங்கிக்கிடந்தன. (அ)

ஈறுபோதலிடையுகரமிய்யாத, லாதிநீடலடியகரமையாத, றன்
னொற்றிரட்டன்முன்னின்றமெய்திரித, லினமிகலினையவும்பண்
பிற்கியல்பே. *

இது - மேற்கூறியபண்புப்பதங்களுக்கு ஆவதொருஇலக்கணமுணர்த்திற்று. (இ-ள்.) ஈறுபோதல் - (மேற்சொன்னபண்புப்பதங்களின்) இறுதி விகுதி நீங்குதலும், இடையுகரமிய்யாதல் - இடையிலேநின்ற உகரம் இகரமாகத்திரிதலும், ஆதிநீடல் - முதல்நின்ற குறில் நெடிலாதலும், அடியகரமையாதல் - முதல்நின்ற அகரம் ஐகாரமாதலும், தன்னொற்றிரட்டல் - அப்பண்புப்பதத்தினது ஒற்று இரட்டித்து நிற்றலும், முன்னின்றமெய்திரிதல் - முன்னிருந்த மெய் மற்றொருமெய்யாகவிகாரப்படுதலும், இனமிகல்- வருமெழுத்திற்கு இனவெழுத்துமிகுதலும், இனையவும் - இவைபோல்வனபிறவும், பண்பிற்கியல்பு- அப்பண்புப்பகுபதங்களுக்கு இயற்கையாம், எ-று.

இந்த விகாரங்கள் விகுதிப்புணர்ச்சிக்கு அன்றிப்பதப்புணர்ச்சிக்கும் பொருந்துமென்றுசொல்லவந்தவர் - பொதுமையிற் பண்பிற்கியல்பென்றார், பதப்புணர்ச்சிக்கும் இங்கேசொல்லியது ஒப்பின்முடித்தலென்னும் உத்தி, [உ-ம்,] நல்லன்-வல்லன்- இவை- நன்மை- வன்மை- என்பன- ஈறுகெட்டுப்புணர்ந்தன, சிறியன் - பெரியன் - இவை - சிறுமை - பெருமை - என்பனஈறுகெட்டு- இடைநி

ன்றஉகரம் இகரமாகத்திரிந்தன, பாசி - பாசடை - என்பன - பசுமை- என்பதில் - ஈறுகெட்டுஆதிநீண்டுமுடிந்தன, பைங்கண் - பைந்தார் - என்பன - பசுமையென்றதில் இடைநின்றஉயிர்மெய்யும் - மைவிகுதியுங்கெட்டு - முதல்நின்ற அகரம் ஐகாரமாகிவருமெழுத்திற்கு இனமிகுந்துமுடிந்தன, வெற்றிலை - நெட்டிலை - என்பன - வெறுமை - நெடுமை - என்பதில் - மைவிகுதிபோய்இடையிலே ஒற்றிரட்டித்துநின்றன, சேதா - சேதாம்பல் - என்பன - செம்மை என்பதில் ஈறுகெட்டுமுதல்நீண்டுமுன்னிருந்தமகரஒற்று தகரஒற்றாகத்திரிந்துநின்றன, கருங்கோழி - நெடுங்காலம் - என்பன - கருமை - நெடுமைகளில் - மைவிகுதிகெட்டுவருமெழுத்திற்கு இனமிகுந்துமுடிந்தன, பிறவுமிவ்வாறேகொண்க, இனிஇப்பண்புவாய்பாட்டுவிகற்பங்களெல்லாம் மேற்சொன்னபொதுவிதியாலும் இதிற்சொன்னசிறப்புவிதியாலும் - விகுதிபதங்களொடுபுணர்ந்து அமைந்துகிடந்தமைஉற்றுணர்ந்துகொள்க, இனிஇவ்விகாரங்கள் அன்பன - அழகன்முதலியவற்றிற்கு ப்பொருந்தாமையாலும் - செம்மைசிறுமைமுதலியவாகஎடுத்துக்காட்டிய இவற்றிற்கேபொருந்தினமையாலும் - இது எடுத்தமொழியினெய்தவைத்த லென்னும் உத்தி - இவையும் இவைபோல்வனவுமியல்பென முடித்துக்கொள்க. (௯)

நடவாமடிசீவிடுகூவேவை, நொப்போவெளவுரிஞுண்பொருந்
திருந்தின், றேய்பார்செல்வவ்வாழ்கேளஃகென், றெய்தியவிரு
பான்மூன்றாமீற்றவுஞ், செய்யெனேவல்வினைப்பகாப்பதமே*

இது - தெரிநிலைவினைப்பகுதிகளுக்குஎய்தியதன்மேற்சிறப்புவிதியுணர்த்திற்று. (இ-ள்.) நட - அஃகென்று, நட - வா- மடி- சீ- விடு- கூ- வே- வை- நொ- போ- வெள- உரிஞ்- உண் - பொருந் - திரும்- தின்- தேய்- பார்- செல்- வவ்- வாழ்- கேள்- அஃகு- என, எய்தியவிருபான்மூன்றாமீற்றவும் - பொருந்தியஇந்தஇருபத்துமூன்றாகும், உயிரும் - ஒற்றுங்குற்றுகரமுமாகிய ஈற்றையுடைய பதங்களெல்லாம், செய்யெனேவல் - செய் என்னும் ஏவல்வினையும், செய்யென்வினைப்பகாப்பதம் - செய்யென்னும் வினைப்பகாப்பதமாகிய பகுதியுமாம், எ-று.

எகர உயிர் - வினாவிடைச்சொல்லிலன்றி மற்ற இடங்களில் ஈறுகாமையால் அதுதவிர்ந்தன ஆமென்றுசொல்லவந்தவர் - ஆமீற்றவெனவும், விகற்பத்தின்முடித்தலென்னும் உத்தியால்இருபத்துமூன்று ஈற்றனவாக விகற்பித்து எடுத்துக்காட்டியபதங்கள் - இந்தப்பொதுவாய்பாட்டில் அடங்குமென்றுசொல்லவந்தவர் - முடிந்த

து முடித்தலென்னும் உத்தியால் செய் - எனவும் அடக்கிக்கூறினுர் - ஏவற்கு - [உ-ம்,] இச்சூத்திரத்தெடுத்துக்காட்டிய பதங்களைப்பகுதிப்பொருளை நீக்கிக்காண்க, பகுதிக்குதாரணம் - நடந்தான் வந்தான் - மடிந்தான் - சீத்தான் - விட்டான் - கூவினான் - வெந்தான் - வைத்தான் - நொந்தான் - போயினான் - வெளவினான் - எ-ம் உரிஞினான் - உண்டான் - பொருநினான் - திருமினான் - தின்றான் - தேய்ந்தான் - பார்த்தான் - சென்றான் - வவ்வினான் - வாழ்ந்தான் - கேட்டான் - அஃகினான் - எனவரும் - கிடந்தான் - சுரந்தான் - பறந்தான் - கலந்தான் - மறந்தான் - இறந்தான் - கறந்தது - என்றாற்போல்வனவெல்லாம் - அகரவீற்றுளடங்கினவெனவும் - எண்ணினான் - மண்ணினான் - கண்டான் - பூண்டான் - நாணினான் - கோணினான் - என்றாற்போல்வனவெல்லாம் - ணகரமெய்யீற்றுளடங்கினவெனவும் - ஒழிந்தனவும் - இவ்வாறடங்கிநிற்குமெனவும் - குற்றுகரப்பகுதியைவேறுபிரித்ததினால் - ஏகினான் - குறுகினான் - கட்டினான் - பொருந்தினான் - வெள்கினான் - எனஒழிந்தஐந்தொடருங்காட்டவேண்டுமெனவும் - எஃகினான் - வெஃகினான், ஒதினான் - மோதினான் - பருகினான், உருகினான் - திருடினான், எட்டினான் - வெட்டினான், கக்கினான் - நச்சினான் - பற்றினான், சுருங்கினான் - அஞ்சினான் - வருந்தினான் - நம்பினான் - பொன்றினான், எய்தினான் - நல்கினான் - என்றாற்போல்வனவெல்லாம் அந்த அறுவகைத்தொடர்க்குற்றுகரப்பகுதியுளடங்கிநின்றனவெனவும் இவ்வாறேபல்வேறுவகைப்பட்ட எல்லாவினைகளும் இந்தஇருபத்துமூன்றுகூற்று - மூவகைப்பகுதிகளுள் அடங்கிநின்றன எனவுங்காண்க. இவற்றுள் பகுதிகள்முதனிலையாய் நின்றமைகாண்க.

இரட்டுறமொழிதலென்னும் உத்தியாலெடுத்துக்கொண்ட ஏவற்பொருளும் பகுதிப்பொருளுந்தந்துநிற்கும் - நடவாமுதலியபதங்களையெண்ணித்தொகுத்த - இருபான்மூன்றாமீற்றவென்னுந்தொகை - செய்யென்னேவல்என்னும்பயனிலையோடும் - செய்யென்வினைப்பகாப்பதமென்னும்பயனிலையோடுந் தனித்தனிமுடிந்தன, மேல்விகுதிப்புணர்ச்சியோடு பதப்புணர்ச்சிக்கும் இலக்கணங்கூறியதுபோலப் - பகுதியோடு ஏவல்வினைக்குமிங்கே இலக்கணங்கூறலால் இதுவும் - ஒப்பின்முடித்தலென்னும் உத்தி, வடநூல்மேற்கோளாக மொழிகளையெடுத்துப்பகாப்பதம் பகுபதமெனக்காரணக்குறி தாமேதந்து அவற்றைஎழுத்தேதனித்துமென்றசூத்திரமுதல் இச்சூத்திரம்வரைக்கும் பகாப்பதம்பகுபதமெனப்பலகாற்கூறுதல் - தன்குறிவழக்கமிகவெடுத்துரைத்தலென்னும் உத்தி, இனிஉரையிற்கோடலென்னும்உத்தியால் இத்தெரிநிலைவினைப்பகுதிகள் - இயற்றும்வினைமுதலால் இயற்றப்படுந்தெரிநிலைவினைப்பகுதிகளெனவும், ஏவும்வினைமுதலால் - ஏவப்படுந்தெரிநிலை வினைப்பகுதிகளெனவும் - இருவகைப்படும் - அவற்றுள் - இவை இயற்றப்படுந்தெரிநிலை வினைப்பகுதிகள் எனவும் - ஏவப்படுந்தெரிநிலை வினைப்பகுதிகள் வருஞ்சூத்திரத்தாற்கூறப்படுமெனவும் - இன்னும் இப்பகுதிகள் பெயர்ப்பகாப்பதம் இடைப்பகாப்பதம் உரிப்பகாப்பதங்களினும் பிறக்கும் அவையெல்லாம் பகுபதமுடிக்கும்போது காட்டப்படுமெனவுங்கொள்க. இச்சூத்திரம் நூலியற்றும் அறிவுடையோர்க்கு விளக்கப்படுத்துவகையுங்கொண்டுகூறிநின்றது. (ம)

செய்யென்வினைவழிவிப்பிதனிவரிற், செய்வியென்னேவலிணை
யினீரேவல், - - - *

இது-ஏவல்வினைக்குஎய்திய தன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது.
(இ-ள்.) செய்யென்வினைவழி - மேற்கூறியசெய்யென்னும்பொது
வாய்பாட்டையுடைய நடவாமுதலிய ஏவற்சிறப்புவாய்பாடுகளின்பி
ன், (வாய்பாடு - பதம்,) விப்பிதனிவரின் - வி- பி- என்னும்இவ்வி
ரண்டுவிகுதியுளொான்று தனிவருமாயின், செய்வியென்னேவல் -
(செய்யென்னும்ஏவல்மேலோரேவலாய்ச்) செய்வியென்னும்வாய்
பாட்டுஏவல்வினைகளாம், இணையினீரேவல் - (அவற்றின்பின்) இந்த
விகுதிகள்தன்னொடும்பிறிதொடும் இணைந்துவருமாயின் செய்யெ
ன்னும் ஏவல்மேலிரண்டேவலாய்ச்செய்விப்பியென்னும்வாய்பா
ட்டுஏவல்வினைகளாம். எ-று.

நடவாமுதலியசிறப்பு வாய்பாடுகளையெல்லாம் செய்யென்னும்
பொதுவாய்பாட்டுள் அடக்கிமேற்கூறினாராதலால் - செய்யென்வி
னைவழியென்றார், [உ-ம்,] நடப்பி - வருவி - எ-ம் - நடப்பிப்பி - வ
ருவிப்பி - எனவும்வரும் - பகுதியோடுஏவல்வினைக்கு இலக்கணங்
கூறினாராதலால் - ஏவப்படுந்தெரிநிலைவினைப்பகுதிகட்கும்இவற்
றைவிகுதியொடுபுணர்த்து - நடப்பித்தான் - வருவித்தான் - எ-ம்.
நடப்பிப்பித்தான் - வருவிப்பித்தான் - எனவுங்காண்க. மற்றப்பகு
திகளோடுமிவ்வாறேகூட்டிக்கொள்க. நட - நடப்பி - நடப்பிப்பி-
என்பனமுறையே - ஏவல்வினைமுதல் - இயற்றும்வினைமுதல் - ஒன்
றும் - இரண்டும் - மூன்றும், இருவருள் - மூவருள் - நால்வருள்,
ஒருவர்க்குஒருகருத்தனையும் - இருவர்க்குஒருகருத்தனையும் - மூவ
ர்க்குஒருகருத்தனையுந்தருமெனக்காண்க- பிறவுமன்ன, இனித்தனி
வரின்என்றும் - இணையின் - என்றும்பராமுகமாகக்கூறியதிறலே
இவைவாராக்கால்பிறவிகுதிகள்வரு மென்பதுபெறப்பட்டது - அ
வையாவன - கு- சு- டு- து- பு- று- என்பன- [உ-ம்,] போக்கு - பா
ய்ச்சு - ஊட்டு - நடத்து - எழுப்பு- பயிற்று - எனமுறையேகாண்
க - இனியுரையிற்கோடலென்னும்உத்தியால் - சிறுபான்மைவிகா
ரங்களும் பிறவினைப்படுத்தவருமெனக்கொள்க. [உ-ம்,] இறுகு -
இறுக்கு - ஆடு - ஆட்டு- வருந்து - வருத்து - எழும்பு - எழுப்பு -
தேறு- தேற்று - எனவரும் - இனிவிகுதியொடுபுணர்ந்துவிகாரப்ப
ட்டுஞ்சிறுபான்மைபிறவினையாவனவுமுளவெனக் கொள்க. [உ-ம்]
தேய்ந்தான் - தேய்த்தான் - தீர்ந்தான் - தீர்த்தான்- தெரிந்தான்-
தெரித்தான்- பிரிந்தான் - பிரித்தான்- எரிந்தான் - எரித்தான் - என்
றற்போல்வனவெனக்காண்க. (௰௧)

விளம்பியபகுதிவேறாதலும்விதியே, - *

இது - வினைப்பகுதிகளுக்குப்புறனடையுணர்த்திற்று. (இ-ள்.) விளம்பியபகுதிவேறாதலும் - (ஏவற்பகுதிகள்வேறாதல்போல)மேற்சொல்லிய வினைப்பகுதிகள்வேறாதலும், விதி - இலக்கணமுறையாம். எ-று.

[உ-ம்,] நடப்பித்தான் - வருவித்தான் - நடத்துவித்தான் - நடத்துவிப்பித்தான் - எனவரும் - பிறவுமன்ன - இவற்றுள்- நடவா என்னுந்தன்வினைப்பகுதிபிறவினைப்பகுதிகளாய் - நடப்பி- வருவி நடத்துவி - நடத்துவிப்பி - எனநின்று - மேல்வரும்விகுதிகளொடு புணர்ந்து - ஏவப்படுந்தெரிநிலை வினைப்பகுதிகளாய்நின்றமை

இனி - இச்சூத்திரத்திற்கு - வா வென்பகுதிமுதலியன - வந்தான்- வருகின்றான்- எனவிகாரப்படுதலைப்பொருளாகக்கூறுவாருமுளர் - அவ்விகாரங்கள் பகுபதவுறுப்பாகிய மூன்றுசந்தியுள்ளும் ஒன்பதுவிகாரத்துள்ளும் அமைந்துகிடத்தலால் அது பொருந்தாதென்க. (௰௨)

அன்ஆன்அள்ஆள்அர்ஆர்பம்மார், அஆகுடுதுறுஎன்ஏன்அல்அ
ன், அம்ஆம்எம்ஏம்ஓமொடும்மூர், கடதறவையாய்இம்மின்இர்
ஈர், ஈயர்கயவுமென்பவும்பிறவும், வினையின்விகுதிபெயரினுஞ்
சிலவே, - - - *

இது - விகுதிகள்இன்னனவென்பதுணர்த்திற்று. (இ-ள்.) அன்ஆன்—என்பவும்- அன் - ஆன்-முதல்முப்பத்தேழாகச்சொல்லப்பட்டனவும், பிறவும் - இவைபோல்வனபிறவும், வினையின்விகுதி - தெரிநிலைவினையின்விகுதிகளாம், பெயரினுஞ்சில - பெயரிடத்தும் இவற்றுட்சிலவிகுதிகளாய்வரும், எ-று.

உம்மூர்கடதற - உம்மென்னும்இடைச்சொல்லையூர்ந்த - கடதறவொற்றுக்களாகிய - கும் - டும் - தும்- றும் - எனப்பொருள்காண்க) [உ-ம்,] நடந்தனன் - நடந்தான் - இவையாண்பாற்படர்க்கை, நடந்தனள் - நடந்தாள் - இவைபெண்பாற்படர்க்கை, நடந்தனர் - நடந்தார்- நடப்ப- நடமார் - இவைபல்லோர்படர்க்கை, நடந்தன - நடவா- இவைபலவின்படர்க்கை, நடக்கு -உண்டு-வருது - சேறு-நடந்தனென் - நடந்தேன் - நடப்பல் - நடப்பன் - இவைதன்மையொருமை, நடந்தது-கூயிற்று - குண்டுகட்டு - இவையொன்றன்படர்க்கை, நடப்பம்-நடப்பாம்-நடப்பெம்-நடப்பேம் நடப்போம் - உண்கும்-உண்டும்-வருதும்-சேறும் - இவைதன்மைப்பன்மை, நடந்தனை - நடந்தாய் - நடத்தி - இவைமுன்னிலையொருமை, நடமின்- நடந்தனிர்- நடந்தீர்- இவைமுன்னிலைப்பன்மை, நீவியர் - வாழ்க- வாழிய- இவைவியங்கோள்விகுதிகள், நடக்கும்-

இதுவும்-நற்றுச்செய்புமென்னும்முற்று-இவைமுறையே-திணை-பால் - இடங்களையுணர்த்தும்வினைவிகுதிகளாய்வந்தன - வில்லன் - வில்லாளர் - குழையள் - குழையாள்- ஊரர்- ஊரார் - வில்லி - வாளி- அரசி - செட்டிச்சி - காதறை- மூக்கறை - இவைபெயரிடத்துச்சிலவந்தன.

பிறவுமென்றதனால் - ஆல் ஏல் காண்- என்பனமுன்னிலையொருமைவிகுதிகளாய் - மரீஇயதொரால் - அழேல் - சொல்லிக்காண - எனவருதலும் பெயரெச்சவினையெச்சவிகுதிகளும் - நடத்து - நடப்பி முதலியபிறவினைவிகுதிகளும் - கொள்க - பெயரெச்சவினையெச்சவிகுதிகளுக்கு உதாரணம் - வினையியலுட்காட்டப்படும் - அன் என்னுந்தன்மையொருமை விகுதிபுதிதாகக்கண்டெடுக்கப்பட்டு எதிரதுபோற்றலென்னுமுத்தியாலதழுவிக்கொண்டதாதலால் அதைவலியுறுத்தவேண்டிப்பின்னும் அன்- எனஎடுத்தார் - இனி யிங்கேகாட்டியவிகுதிகளுள் வேறுவினைக்குரியனவுஞ் சிலவுள் அவற்றைஎழுத்தொப்புமைபற்றிச்சூத்திரஞ்சுருங்குதற்பொருட்டுத்தொகுத்துக் கூறினார் - அவைவருமாறு - காணன்மாரெமர்எனமாரீறு - எதிர்மறைவியங்கோளிடத்தும் - டு- து- று - என்பன - ஒன்றன்படர்க்கையிடத்தும், அல்விகுதி - மகனெனல் மக்கட்பதடியெனல் - என - வியங்கோளெதிர்மறையிலும் உடன்பாட்டிலும், ஐயீறு அஞ்சாமையஞ்சுவதொன்றின்- எனவியங்கோளெதிர்மறையிலும், இகரவிகுதி செவியிலி-எனப்படர்க்கைமுக்கூற்று ஒருமையிலும் - உ-ம், விகுதி - வாழுகல்லெயன்றீர் - என வியங்கோளிடத்தும் - உண்ணும் - எனமுன்னிலைப்பன்மையே வல்வினையிலும்வந்தவாறுகாண்க. பெயரினுஞ்சிலவெனவேகுறிப்பு வினையினுஞ்சிலவென்பது கூறாதேயமைதலால் - வினையின்விகுதியென்றது தெரிநிலைவினைவிகுதிகளெனக்காண்க. என்பவும்பிறவும்வினையின்விகுதி - எனவும் - சிலவரும் - எனவுமுடித்துக்கொள்க. (௰௫)

இலக்கியங்கண்டதற்கிலக்கணமியம்பலிற், பகுதிவிகுதி பகுத்திடைநின்றதை, வினைப்பெயரல்பெயர்க்கிடைநிலையெனலே. *

இது - இடைநிலையுணர்த்தத்தொடங்கிப்பெயர்க்கு இடைநிலையுணர்த்திற்று, (இ-ள்.) இலக்கியங்கண்டு - (அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட இலக்கியநூல்களிலும் உலகவழக்கிலும் நின்ற) எழுத்துஞ்சொல்லுமாகிய இலக்கியத்தைப்பார்த்து, அதற்கு - அந்தஇலக்கியத்துக்கு, இலக்கணங்கூறலின் - (அதன்அமைதியே)இலக்கணமாகச்சொலவது மரபாதலால், பகுதிவிகுதிபகுத்து- (இங்கேபெயர்ப்பகுபதமாகிய இலக்கியத்தைப்பார்த்து அதனுள்ளிருந்தஇலக்கணமாகிய) பகுதிவிகுதிமுதலிய உறுப்புகளைப்பிரித்து, இடைநின்றதை - இடையிலேநின்றதை, வினைப்பெயரல்பெயர்க்கு - வினையாலணையும்பெயரல்லாதபெயர்ப்பகுபதத்திற்கு, இடைநிலையெனல் - இடைநிலையென்றுசொல்லுக, எ-று.

குறிக்கப்படும் இலக்கணத்தையுடையனவெல்லாம் இலக்கியமாயினும் இங்கேயிலக்கியமென்றது - பெயர்ப்பகுபதத்தை, எனவும் - இலக்கியத்தின் அமைதியெல்லாம் இலக்கணமாயினும் இங்கே இலக்கணமென்றது- அதனுள்ளிருந்த பகுதிவிகுதிமுதலிய வுறுப்புக்களையெனவுங்காண்க. [உ-ம்,] அறிஞன் - வினைஞன் - கவிஞன் - இவை ஞகரவொற்று இடைநிலைபெற்றன- ஓதுவான்- பாடுவான்-இவை

வகரவொற்று இடைநிலைபெற்றன, வலைச்சி- இடைச்சி-இவற்றில்-சகரஒற்றுஇடைநிலை-செட்டிச்சி-தச்சிச்சி-இச்சுஇடைநிலை,கரியவனே கதிரவன் - வல்லவன் - வில்லவன்- வானவன்-மீனவன்- அகர இடைநிலை, சேரமான் - கட்டிமான் - கோமான் - வடமன்- மகரஇடைநிலை- பிறவுங்காண்க.

சாரியைசந்திவிகாரங்களும் இடைநிற்குமாயினும் அவைமேல் எடுத்துச்சொல்லப்படுதலால் அவற்றைநீக்கி - இடைநின்றதையென்றும் - மேலேவினைக்குச் சொல்லும்இடைநிலைகள்வினையாலணையும்பெயர்க்கும் அமைதலால் வினைப்பெயரல்பெயர்க்கென்றும் - இந்தப்பெயர்ப்பகுபத இடைநிலைகள் இப்பொழுது வழங்கப்பட்டன அல்ல அக்கங்கேயுணர்ந்துஉரைத்துக்கொள்கவென்றுசொல்லவந்தவர் - எனவே - என்றெடுத்தெரிந்துங்கூறினார் - இச்சூத்திரத்தால- இடைநிலைகூறுவார்போன்று இலக்கியமென்பதும் இலக்கணமென்பதும் இன்னதெனவிளக்கினாரென்பதுமாயிற்று. இதுஒன்றியொன்றெப்சவைத்தவென்னும் உத்தி - இதனுள் - எனவென்னும்வியங்கோள்மூற்றிற்குப்பயனிலைகுறைந்துநின்றதுகூட்டிமுடித்துக்கொள்க. (௰௪)

தடறவொற்றின்னேயைம்பான் மூவிடத், திறந்தகால நந்தரு நீ
தொழிலிடைநிலை. - - *

இது - இறந்தகாலவினைக்கு இடைநிலையுணர்த்திற்று, (இ-ள்.) தடறவொற்று - இந்தமூன்றுஒற்றுக்களும், இன் - இந்தஇடைச்சொல்லும், ஐம—து - ஐந்துபாலிலும் மூன்றிடத்திலும், இறந்—லை - இறந்தகாலத்தைக்காட்டும் வினைப்பகுபதங்களுக்கு இடைநிலைகளாம், எ-று.

[உ-ம்,] நடந்தான் - நடந்தாள்- நடந்தார் - நடந்தது - நடந்தன- எ-ம்- நடந்தேன்- நடந்தேம்- எ-ம்- நடந்தாய்-நடந்தீர்- எ-ம்- இவையைம்பால்மூவிடங்களிலே தகரஇடைநிலைவந்தது, உண்டான்- கண்டான்- என- டகர இடைநிலையும்- சென்றான்- நின்றான்- என- றகரஇடைநிலையும்- உறங்கினான்-ஓடினான்- என- இன்- இடைநிலையும்வந்தன- மற்றப்பால் இடங்களிலும் ஒட்டிக்கொள்க, இனியுரையிற்கோடலால்- எஞ்சியது - தப்பியது- நீங்கியான்- என- இகரத்தையடுத்த யகரவொற்றும்- போயது- போய - என யகர ஒற்றும்- போனான்- போனது- என- னகரஒற்றும் சிறுபான்மை இறந்தகாலங்காட்டுமெனவுங்கொள்க- பிறவுமன்ன. (௰௫)

ஆநின்றுகின்றுக்று மூவிடத்தி,னைம்பானிகழ்பொழுதறைவினையிடைநிலை. - - - *

இது - நிகழ்காலவிடைநிலையுணர்த்திற்று. (இ-ள்.) ஆநின்றுகின்றுகிறு - இம்மூன்றுஇடைச்சொற்களும், மூவிடத்தினைம்பால்- மூன்றுஇடத்திலும் ஐந்துபாலிலும், நிகழ்பொழுதறைவினையிடைநிலை- நிகழ்காலத்தைக்காட்டும் வினைப்பகுபதங்களுக்கு இடைநிலைகளாம், எ-று.

[உ-ம்,] நடவாநின்றான் - நடக்கின்றான்- நடக்கிறான் - எனவரும். மற்றப்பாலிடங்களினு மொட்டிக்கொள்க.

இனி யுரையிற்கோடலால்- உண்ணாநின்றான்- உண்ணாவிருந்தான் - என ஆநின்று - ஆவிருந்து - என்பனவும் - வருதி- பெயர்தி - வருந்துதி - பொருதி - புலம்புதி - எனத்தகரவொற்றும்- உண்பல்- வருவல்- எனவும்- நோக்குவேற்கு-உண்பேற்கு-என்வும்- முறையேவினையும் வினையாலணையும்பெயருமாகிய இவற்றில் - பகரவகரவொற்றுக்களும் சிறுபான்மைநிகழ்காலங்காட்டுமெனவுங்கொள்க. பிறவுமன்ன. (யசு)

பவ்வமூவிடத்தைம்பாலெதிர்பொழு, திசைவினையிடைநிலையா
மிவைசிலவில. - - - *

இது - எதிர்காலஇடைநிலையும் மூக்கால இடைநிலைகளுக்குப் புறனடையும் உணர்த்திற்று, (இ-ள்.) பவ்வ - இவ்விரண்டெழுத்துக்களும், மூவிடத்தைம்பால் - மூன்றிடத்திலும் ஐந்துபாலிலும், எதிர்பொழுதிசைவினையிடைநிலையாம் - எதிர்காலத்தைக்காட்டும் வினைப்பகுபதங்களுக்கு இடைநிலைகளாம், இவை - இந்தமுக்கால இடைநிலைகளும், சிலவில - சிலமுற்றுவினை எச்சவினைகளுக்குஇல்லாம், எ-று.

[உ-ம்,] நடப்பான்- வருவான்- எனவரும்- மற்றப்பாலிடங்களினும் ஒட்டிக்கொள்க. இவைசிலவிலஎனவே - பகுதியாயினும் விகுதியாயினும் பிற இடைநிலைகளாயினுங் காலங்காட்டு மென்பதாயிற்று அவையெல்லாம் வருஞ்சூத்திரத்தாற்கூறுவர்.

இனி யுரையிற்கோடலால்- பாடுகம்வாவாழிதோழி - அந்தணனை நகுகம்யாமே- எனக்ககரவொற்றும் - ஒத்தி - உரைத்தி - என்பன ஒப்பாய் உரைப்பாய் எனநிற்றலால் தகரவொற்றும் - சிறுபான்மை எதிர்காலங்காட்டுமெனவுங்கொள்க. பவ்வ - என்றஇடத்தில்- வகரவொற்றுச்சந்தியால்மிகுந்துநின்றது - அங்கேஒற்றென்பது குறைந்துநின்றது, காலங்காட்டும்வினைகளை- அறைவினை- இசைவினையென்றது - இலக்கணை, அறைதல்- இசைத்தல்- என்பன - சொல்லுதல், பவ்வ- இடைநிலை, இவைஇல-எனஇருமுடிபாகமுடித்துக்கொள்க. (யஎ)

றவ்வொடுகரவும்மைநிகழ்பல்லவுந், தவ்வோடிறப்புமெதிரவும்
டவ்வொடு, கழிவுங்கவ்வோடெதிர்வுமின்னேவல், வியங்கோளிம்
மாரெதிரவும்பாந்தஞ், செலவொடுவரவுஞ்செய்யுநிகழ்பெதிர்வு,
மெதிர்மறைமும்மையுமேற்குமீங்கே. - - *

இது-மேற்சிலவிலஎன்றவைஇவையெனஉணர்த்திற்று.(இ-ள்) றவ்வொடுகரவும்மை- றகரவொற்றொடுகூடிய உகர ஈறும் உம்மீறுமாகிய- று- றும்-என்பன, நிகழ்பல்லவும் - இறந்தகாலமும் எதிர்காலமும், தவ்வொடு - தகரவொற்றொடுகூடிய அந்தஇரண்டீறுகிய- து- தும்- என்பன, இறப்புமெதிர்வும்- அந்த இரண்டுகாலமும், டவ்வொடு- டகரவொற்றொடுகூடிய அந்தஇரண்டீறாகிய- டு-டும்- என்பன, கழிவும் - இறந்தகாலமும் - கவ்வொடு - ககரவொற்றொடுகூடிய அந்தஇரண்டீறாகிய - கு-கும் - என்பன, எதிர்வும் - எதிர்காலமு

ம், மின்னேவல்வியங்கோள் - மின்விகுதியும் - ஏவலிலேவருகின்றவெல்லாஈறுகளும் - வியங்கோள்விகுதிகளும், இம்மாரொதிர்வும் - இகரவிகுதியும் மார்விகுதியுமாகிய இவையெல்லாம் எதிர்காலமும், பாந்தம் - பகரவிகுதி, செல்வொடுவரவும் - இறந்தகாலமுமெதிர்காலமும், (இது- ப- அந்தம் - என்பது- பாந்தமெனவடபதசந்தியாய் முடிந்தது) செய்யுநிகழ்வெதிர்வும்- செய்யுமென்னும்முற்றுவினை நிகழ்காலமும் எதிர்காலமும், எதிர்மறைமும்மையும் - (முற்றுவிகுதிஎச்சவிகுதிகளுடன் புணர்ந்துவருகின்ற) எதிர்மறைஆகாரஈறு மூன்றுகாலமும், ஏற்கும் - கொள்ளும், ஈங்கு-சிலவிலவென்ற) இவற்றுள். எ-று,

அந்தமென்பதைஎல்லாவற்றொடுங்கூட்டிக்கொள்க, செய்யுமென்னும்வாய்பாட்டுப்பெயரொச்சமும் இடைநிலையில்லாமல் ஈறுகாலங்காட்டுமாயினும் அது எதிர்காலங்காட்டுமெனமேலெடுத்துக்கூறுதலால் இங்கேசெய்யுமென்றது - முற்றுவினையெனக்கொள்க - மூன்றுகாலமும் அவைபற்றிப்புடைபெயரும் வினையுமில்லனவாகியஎதிர்மறைவினைமுக்காலமும் ஏற்குமென்பது இலக்கணையாதலால் அதனைப்பின்புகூறினுர். (புடைபெயர்ச்சி- எது- அசைவு) இலக்கணையென்பதுமேலேசொல்லப்பட்டது - [உ-ம்,] சென்று - சென்றும் - இறந்தகாலம், சேறு - சேறும் - எதிர்காலம், வந்து- வந்தும் - இ- வருது - வருதும் - எ- உண்டு- உண்டும் - இ- உண்கு - உண்கும் - எ- உண்மின் - உண்- உண்க- சேறி - உண்மார் - எதிர் - உண்ணும்- நி- எ- உண்ணுன்- உண்ணுத - உண்ணுது - இதுமுற்றுவிகுதிஎச்சவிகுதிகளொடுபுணர்ந்த எதிர்மறைஆகாரவீறு- இ- நி- எ- எனக்காண்க. சிலவிலவென்றவற்றுள் இறுதிநிலைகாலங் காட்டியவற்றையெடுத்துச்சொல்லிமுதனிலையும்பிறஇடைநிலையுங்காலங்காட்டுவனவற்றையெடுத்துச்சொல்லாததினுலே அவைசிறுபான்மையவந்த இடத்திற்காண்கவென்றாராயிற்று. அவைவருமாறு- தொட்டான்-உற்றுன்- புக்கான்- என்பவற்றுள்- தொடு- உறு- புகு-என்னும் முதனிலைகள்விகாரப்பட்டு இடைநிலையின்றி இறந்தகாலங்காட்டின - என்மனுர்- என்றிசினுேர்- என்மர்- என்பவற்றுள்- மன் - இசின்- ம்- எனப்பற இடைநிலைகள்நின்று- முன்னையஇரண்டும் இறந்தகாலமும் பின்னையது- எதிர்காலமுங்காட்டின- பிறவுமன்னஇனி மீங்கேயென்றமிகையால் - யாமிவணின்றும் வருதும் - எனத்தும் ஈற்றுத்தன்மைப்பன்மைவினைமுற்றுச்சிறுபான்மை நிகழ்காலங்காட்டுதலும் தோற்றுது- வருது- போகுது - எனத்தவ்வீற்று ஒன்றன்படர்க்கைவினை நிகழ்காலங்காட்டுதலும் இன்னுங்காலம் பிறழ்ந்துவருவன

உளவாயின் அவையும் பெயரெச்சவினையெச்சங்களுள் இடைநிலை
யின்றி இறுதிநிலைகாலங்காட்டுவனவும்- குறிப்புமுற்றுப்பகுபதங்க
ள் இந்தஇடைநிலைஇறுதிநிலைவகையாற்காலங்காட்டாமற் குறிப்பி
னிலே ஏற்றபடி முக்காலங்காட்டுதலும் உய்த்துணர்ந்துகொள்க-
இன்னும் வினையெச்சங்களுள் பரீஇ - முனைஇ - கொளீஇ- உடீஇ-
நசைஇ- எனமுதனிலைவிகாரப்பட்டு அளபெடுத்துஇறந்தகாலங்கா
ட்டுதலுங்கொள்க. இனிப்பகுதிமுதலிய உறுப்புக்களாற் பகுப
தமுடியுமாறு - அவன் - என்னுஞ் சுட்டுப்பெயர்ப்பகுபதம் - அ -
என்னும்பகுதியும் - அன் என்னும் விகுதியும்பெற்று - எகரவினா
முச்சுட்டென்னுஞ்சூத்திரத்தால் வகர ஒற்றுத்தோன்றி - உடன்
மேலுயிர்வந்தொன்றுஞ் சூத்திரத்தால் வகர ஒற்றின்மேல் விகுதியு
யிரேறிமுடிந்தது, தமன் என்னுங் கிளைப்பெயர்ப்பகுபதம் தாம்
என்னும் பகுதியும் அன் என்னும்விகுதியும்பெற்று - தான்றாநா
முதல்குறுகுமென்னுஞ்சூத்திரத்தால் - பகுதிமுதல்குறுகி- உடன்
மேலுயிரேறிமுடிந்தது, குறிஞ்சியான் என்னும் இடப்பெயர்ப்ப
குபதம் - குறிஞ்சிஎன்னும்பகுதியும் ஆன்என்னும்விகுதியும்பெற்
று இஈஐவழியென்னுஞ்சூத்திரத்தால் - யகரவுடன்படுமெய்தோ
ன்றி - உடன்மேல உயிரேறிமுடிந்தது - ஓணத்தான் - என்னும் -
காலப்பெயர்ப்பகுபதம் - ஓணம் என்னும்பகுதியும் - ஆன்என்னு
ம்விகுதியும்பெற்று- பதமுன்விகுதியும் பதமுமுருபும் புணர்வழி
யென்னுஞ் சூத்திரத்தால் - அத்துச்சாரியைதோன்றி - மவ்வீறொ
ற்றழிந்தென்னுஞ்சூத்திரத்தால்- பகுதியிறுதிமகரஒற்றுக்கெட அ
த்தினகரமகரமுனையில்லை - என்னுஞ்சூத்திரத்தால் - அத்துச்சா
ரியையின்அகரங்கெட - உயிர்வரினுக்குறண்மெய்விட்டோடுமென்
னுஞ்சூத்திரத்தால் - சாரியைஉகரங்கெடநின்றஉடல்மேல்விகுதியு
யிரேறிமுடிந்தது - நடந்தனன்என்னும் இறந்தகால்வினைப்பகுப
தம் - நடவென்னும்பகுதிக்கும் - அன்விகுதிக்கும் - இடையிலே
இறந்தகாலங்காட்டும் தகரஒற்றுஇடைநிலைபெற்று- அதன்மேல்சா
ரியைஅகரமும் அந்தச்சாரியையிறுதி னகரஒற்றின்மேல் விகுதியு
யிருமேறி - இயல்பினும்விதியினுமெனனுஞ் சூத்திரத்தால் - தக
ரஒற்றுச்சந்தியில் மிகுந்து நடத்தனன் என்றாகி வலித்தன்மெலித்
தலென்னுஞ் சூத்திரத்தால் - தகரவல்லொற்று மெல்லொற்றாகி - ந
டந்தனன் எனப்பகுதிவிகுதியிடைநிலை சாரியைசந்திவிகாரமென்
னும் பகுபதஉறுப்புக்கள் ஆறுங்கூடிமுடிந்தது - நடவான்என்னு
ம் - எதிர்மறைவினைப்பகுபதம் - நடஎன்னும்பகுதிஎதிர்மறைஆகா
ரவிகுதியொடுபுணர்ந்து - இரண்டும் ஓர்பகுதியாய் நின்றுஆன்வி

ம், பின்னேவல்லியங்கோள் - பின்விகுதியும் - ஏவலிலேவருகின்றன வல்லாஈறுகளும் - வியங்கோள்விகுதிகளும், இம்மாரொதிர்வும் - இக ரவிகுதியும் மார்விகுதியுமாகிய இவையெல்லாம் எதிர்காலமும், பா ந்தம் - பகரவிகுதி, செல்வொடுவரவும் - இறந்தகாலமும்எதிர்கால மும், (இது- ப- அந்தம் - என்பது- பாந்தமெனவடபதசந்தியாய் முடிந்தது) செய்யுநிகழ்பெதிர்வும்- செய்யுமென்னும்முற்றுவினை நிகழ்காலமும் எதிர்காலமும், எதிர்மறைமும்மையும் - (முற்றுவி குதிஎச்சவிகுதிகளுடன் புணர்ந்துவருகின்ற) எதிர்மறைஆகாரஈறு மூன்றுகாலமும், ஏற்கும் - கொள்ளும், ஈங்கு-சிலவிலவென்ற) இ வற்றுள். எ-று,

அந்தமென்பதைஎல்லாவற்றொடுங்கூட்டிக்கொள்க, செய்யுமெ ன்னும்வாய்பாட்டுப்பெயரெச்சமும் இடைநிலையில்லாமல் ஈறுகா லங்காட்டுமாயினும் அது எதிர்காலங்காட்டுமெனமேலெடுத்துக்கூ றுதலால் இங்கேசெய்யுமென்றது - முற்றுவினையெனக்கொள்க - மூன்றுகாலமும் அவைபற்றிப்புடைபெயரும் வினையுமில்லனவாகி யஎதிர்மறைவினைமுக்காலமும் ஏற்குமென்பது இலக்கணையாதலா ல் அதனைப்பின்புகூறினர். (புடைபெயர்ச்சி- எது- அசைவு) இலக் கணையென்பதுமேலேசொல்லப்பட்டது - [உ-ம்,] சென்று - செ ன்றும் - இறந்தகாலம், சேறு - சேறும் - எதிர்காலம், வந்து- வந்து ம் - இ- வருது - வருதும் - எ- உண்டு- உண்டும் - இ- உண்கு - உண் கும் - எ- உண்மின் - உண்- உண்க- சேறி - உண்மார் - எதிர் - உண் ணும்- நி- எ- உண்ணன்- உண்ணாத - உண்ணாது - இதுமுற்றுவிகுதி எச்சவிகுதிகளொடுபுணர்ந்த எதிர்மறைஆகாரவீறு- இ- நி- எ- என க்காண்க. சிலவிலவென்றவற்றுள் இறுதிநிலைகாலங் காட்டியவற்றை யெடுத்துச்சொல்லிமுதனிலையும்பிறஇடைநிலையுங்காலங்காட்டுவன வற்றையெடுத்துச்சொல்லாததினாலே அவைசிறுபான்மையவந்த இ டத்திற்காண்கவென்றாராயிற்று. அவைவருமாறு- தொட்டான்-உற் றான்- புக்கான்- என்பவற்றுள்- தொடு- உறு- புகு-என்னும் முதனி லைகள்விகாரப்பட்டு இடைநிலையின்றி இறந்தகாலங்காட்டின - என் மனார்- என்றிசினோர்- என்மர்- என்பவற்றுள்- மன் - இசின்- ம்- என ப்பற இடைநிலைகள்நின்று- முன்னையஇரண்டும் இறந்தகாலமும் பின்னையது- எதிர்காலமுங்காட்டின- பிறவுமன்ன இனி யீங்கேயெ ன்றமிகையால் - யாமிவணின்றும் வருதும் - எனத்தும் ஈற்றுத்தன் மைப்பன்மைவினைமுற்றுச்சிறுபான்மை நிகழ்காலங்காட்டுதலும் தோற்றது- வருது- போகுது - எனத்துவ்வீற்று ஒன்றன்படர்க்கை வினை நிகழ்காலங்காட்டுதலும் இன்னுங்காலம் பிறழ்ந்துவருவன

முப்பதாமெய்முதலான எட்டினுள் - ளகரமொழிந்த ஏழுமான இருபத்தெட்டும், திரியும் - ஆரியத்திற்குச்சிறப்பெழுத்தாயினுந் தமக்கேற்றபொதுவெழுத்தாய்த்திரிந்து வடமொழியாம், எ-று.

மேல் - ஏழாமுயிரெனக்கூறுவாராதலால் இடையிலுன்கெனவ வையாறுகூறினர் - வரைதல் - பொதுமையினீக்குதல், சிறப்பெழுத்துத்திரியுமெனவே பொதுவெழுத்து இயல்பாகியுந் தமக்கேற்ற விகாரமாகியும் வருமென்பதாயிற்று - ஐயைம்பொது - எ-ம் - நாலெழுந்திரியும் - எ-ம்- முடித்துக்கொள்க. (மகூ)

அவற்றுள், ஏழாமுயிரிய்யுமிருவுமைவருக்கத், திடையின்மூன் றுமவ்வம்முதலு, மெட்டேயவ்வுமுப்பதுசயவு, மேலொன்றுச டவுமிரண்டுசதவு, மூன்றேயகவுமைந்திருகவ்வு, மாவீறையுமீ யீறிகரமும். - - - - - *

இது - மேற்கூறியதற்குச்சிறப்புவிதியுணர்த்திற்று, (இ-ள்.) அவற்றுள் - முன்னேதிரியுமென்றவற்றுள், ஏழாமுயிர் - ஏழாமுயிராகிய-ஐ-எது, இய்யுமிருவும்- இகரமாகவும் இருவாகவுந்திரியும் - [உ-ம்.] இடபம்- விடபம்- திட்டி- எ-ம்.இருடி- மிருகம் - விருத்தி- எ-ம். ஐவருக்கத்திடையின்மூன்றும் - கசடதபஎன்னும் ஐந்துவருக்கங்களினிடையிலே- (உரப்பியும் - படுத்தும் - கனைத்துஞ்சொல்லப்படும்) மும்மூன்றும், அவ்வம்முதலும் - அந்தந்தவருக்கங்களின் முதலெழுத்துக்களாகவுந்திரியும். உ-ம்,நகம்- நாகம்- மேகம், எ-ம் சலவாதி- விசயம் - சருச்சரை - எ-ம் - பீடம்- பீடை- திடம்- எ-ம்- தலம்- தினம்- தரை- எ-ம்- பலம்- பந்தம்-பாரம்- எ-ம் - ஐவருக்கத்திடையின்மூன்றும் அந்தந்த முதலெழுத்துகளாய்த் திரிந்தன, எட்டேயவ்வும்- சவ்வருக்கத்திலெடுத்துச்சொன்ன எட்டாமெய் ஒரோரிடத்து யகரமாகவுந்திரியும்- உ-ம், அயம்-பங்கயம்- எனக்காண்க, முப்பதுசயவும் - முப்பதாமெய் மொழிமுதலிலேசகரமாகவும் இடையிலேயகரமாகவுந்திரியும்- உ-ம், சாலை- சூலை-எ-ம்-மயானம்- எனவுங்காண்க, மேலொன்றுசடவும் - முப்பத்தொன்றுமெய்முதலிலே சகரமாகவும் இடையிலே டகரமாகவுந்திரியும், உ-ம், சட்டி- எ-ம்- இடபம்- எனவுங்காண்க, இரண்டுசதவும்- முப்பத்திரண்டாமெய்முதலிலேசகரமாகவும் இடையிலே தகரமாகவுந்திரியும்- உ-ம், சித்தி- சூத்திரம்- சேனை- எ-ம்- ஆதனம்- வாதனை- எனவுங்காண்க. மூன்றேயகவும்- முப்பத்துமூன்றுமெய்முதலிலே அகரமாகவும் இடையிலேககரமாகவுந்திரியும்-உ-ம்- அரன்-அரி-எ-ம்-சிங்கம்- மோகம்-எனவுங்காண்க,ஐந்திருகவ்வும்- முப்பத்தைந்தாமெய் இரண்டுக்கரமாகத்திரியும்- உ-ம், பக்கம்-தக்கணம் எனவரும்-ஆ

வீற்றையும்- பொதுவெழுத்துள் - மொழியிறுதிஆகாரம் ஐகாரமாகவும், ஈரீறிகாரமும் - மொழியிறுதிஈகாரம் இகரமாகவுந்திரியும், உ-ம், வேலை- சாலை- மாலை- உவமை- எ-ம்- புரி- மேதினி-கவுரி-எனவுமுறையேகாண்க. பிறவுமன்ன- பயின்றுவருவனவற்றிற்குத்திரிபுகூறி ஒழிந்தன வந்தஇடத்திற் காண்கவென்றுசொல்லவந்தவர் இச்சூத்திரத்திற்குப் பயனிலைகொடாமல் அவாய் நிலையாய்முடித்தார்- அவாய்நிலை- மேலொன்றைவேண்டியே நிற்கும்நிலை, இனியுரையிற்கோடலால்- முப்பத்தைந்தாமெய்மொழியிடையிலே இரண்டிககரமாகத்திரிதலன்றி மொழிமுதலிலே கமித்தல்-க்ஷமை- என ஒருககரமாகத்திரிந்துவருதலுங்கொள்க. (௨௰)

ரவ்விற்கம்முதலாமுக்குறிலும், லவ்விற்கிம்முதலிரண்டும் யவ்விற், கிய்யுமொழிமுதலாகிமுன்வருமே. - - *

இதுவுமது - (இ-ள்.) ரவ்விற்கு - (ரகரலகர யகரங்களை முதலாகவுடைய ஆரியமொழிகள் தமிழ்மொழியாங்கால்) ரகரமுதல்மொழிக்கு, அம்முதலாமுக்குறிலும்- அகர இகர உகரங்களாகிய மூன்றுகுற்றெழுத்துக்களும், லவ்விற்கு- லகரமுதல்மொழிக்கு, இம்முதலிரண்டும்- இகர உகரங்களாகிய இரண்டுகுற்றெழுத்துக்களும், யவ்விற்கிய்யும் - யகரமுதல்மொழிக்குஇகரமும், மொழிமுதலாகி - அந்தஆரியமொழிகளுக்குமுதலாகி, முன்வரும்- அந்தமூன்று எழுத்துக்களுக்கும் முன்வரும், எ-று.

[வ-று,] அரங்கம் - இராமன் - உரோமம் - எ-ம் - இலாபம் - உலோபம் - எ-ம்- இயக்கன் - இயமன்-எ-ம்-முறையேகாண்க.(௨௧)

இணைந்தியல்காலையரலக்கிகரமு, மவ்வக்குகரமுநகரக்ககரமு,
மிசைவரும்ரவ்வழியுவ்வுமாம்பிற, - - *

இதுவுமது - (இ-ள்.) இணைந்தியல்காலை - (அந்தஆரியமொழிகளுள்) இரண்டெழுத்துக்கூடி யோரெழுத்தாயிணைந்துநடக்குங்கால், யரலக்கிகரமும் - பின்னிற்கின்றயகர ரகர லகரங்களுக்கு, இகரமும், மவ்வக்குகரமும் - மகரவகரங்களுக்குஉகரமும், நகரக்ககரமும்- நகரத்திற்கு அகரமும், மிசைவரும் - மேலேவரும், ரவ்வழியுவ்வுமாம் - ரகரத்தின்பின் உகரமும் வரும், எ-று.

[வ-று,] வாக்கியம் - வாச்சியம் - நாட்டியம் - எ-ம்- வக்கிரம் - வச்சிரம் - சத்திரம்- எ-ம்- சுக்கிலம்- ஆமிலம்- எ-ம்- பதுமம்-எ-ம்- பக்குவம்- எ-ம்- அரதனம்- எ-ம்- அருத்தம்- கருப்பம்- எ-ம்-வரும் பிறவென்றமிகுத்துச்சொன்னதிலே- சத்தி-கட்சி- காப்பியம்-பருப்பதம்- என்பனபோலத்திரிந்துவருவனவும்- தூலம் - அத்தம்- ஆதித்தன்- அநத்தம்- என்பனபோலக்கெட்டுவருவனவும்- பிறவிகா

ரத்தால்வருவனவுங்கொள்க. இகரமும் உகரமும் அகரமும்- வரும்- எனவும்- உவ்வும் ஆம்- எனவும்- இருமுடிபாக்குக. (உஉ)

றனழஎஒவ்வுமுயிர்மெய்யுமுயிரள, பல்லாச்சார்புந் தமிழ்பிற பொதுவே. - - - *

இது - ஆரியத்திற்குப்பொதுச்சிறப்பெனவகுத்ததினலே- தமிழிற்குமுண்டோ இன்ருவென்று ஐயப்படுபவர்க்கு ஐயமறுத்துணர்த்திற்று, (இ-ள்.) றனழஎஒவ்வும் - (முதலுஞ் சார்புமாகிய நாற்பதெழுத்துள்ளும்) இந்த ஐந்துமுதலெழுத்தும், உயிர்மெய்யு முயிரளபல்லாச்சார்பும் - இந்த இரண்டுமல்லாத எட்டுச்சார்பெழுத்தும், தமிழ்-தமிழிற்குச்சிறப்பெழுத்தாம், பிறபொது-ஒழிந்த இருபத்தேழுந் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்தாம், எ-று.

எகர ஒகரங்கள்- பிராகிருதத்திற்கு முரியவாதலால் - மெய்யை முற்கூறினர். பிறபொதுவென்றதினல் தமிழிற்குச்சிறப்பென மிகைபடக்கூருதொழிந்தார். பதவியல்முற்றிற்று.

---

மூன்ருவது,

## உயிரீற்றுப்புணரியல்.

மெய்யுயிர்முதலீருமிருபதங்களுந், தன்ெெடும்பிறிதொடுமல் வழிவேற்றுமைப், பொருளிற்பொருந்துழி நிலவருமொழிகளி யல்பொடுவிகாரத்தியைவதுபுணர்ப்பே. - *

இது - நிறுத்தமுறையேமேலையியலுட்கூறியபதங்களொன்ருெடொன்றுபுணருமாறுணர்த்தத்தொடங்கிப்புணர்ச்சியின்னதென்பதும்பொதுப்புணர்ச்சியும் உயிரீற்றுப்பதம்புணருஞ்சிறப்புப் புணர்ச்சியும் இவ்வியலாற்கூறுவாராதலால்வைத்தமுறையே இச்சூத்திரம்புணர்ச்சியின்னதென்பதுணர்த்திற்று, (இ-ள்.) மெய்யுயிர் முதலீருமிருபதங்களும் - மெய்யையும்உயிரையும்முதலும் ஈறுமாகவுடையபகாப்பதம்பகுபதமென்னும் இரண்டுபதங்களும், தன்ெெடும்பிறிதொடும் - தன்ெெடுதானும் பிறிதொடுபிறிதுமாகி, அல்வழிவேற்றுமைப்பொருளிற்பொருந்துழி - அல்வழிப்பொருளினலாவது வேற்றுமைப்பொருளினலாவதுபொருந்துமிடத்து, நிலவருமொழிகள் - நிலமொழியும்வருமொழியும், இயல்பொடு விகாரத்து - இயல்போடாவதுவிகாரத்தோடாவது, இயைவதுபுணர்ப்பு - பொருந்துவதுமேற்கூறியபுணர்ச்சியாம். எ-று.

மெய்யையும் அல்வழியையும்முன்வைத்தது - உயிர்மெய்யென்றும் வேற்றுமையல்லாதவழியென்றும் பொருள்படுமாதலால் அதனைவிலக்குதற்பொருட்டெனக்காண்க.

(இயல்பு - இயற்கை - தன்மை - சுபாவம் - என்பனவொருபொருள், செயற்கை - செயல் - விகாரம் - விதி - என்பனவொருபொருள்) இவ்விரண்டினுள் - நின்றசொன்மூன்றியல்பாகும்மே - என இயற்கையைச்செயற்கையாகவும் - இல்லென்றல் வகையன்றுவையத்தியற்கை - எனச்செயற்கையை இயற்கையாகவுங் கூறுவது - இலக்கணை, இலக்கணையென்பது ஒன்றையொன்றாகவும் - ஒருபொருளின்தன்மையை மற்றொருபொருளின்தன்மையாகவுங்கூறுவது, இவ்வாறுபுணரியல்மூன்றினுள்ளும் - இயற்கைசெயற்கையாகவும்-செயற்கைஇயற்கையாகவும்வருதல்காண்க. ணனவல்லினம்வரட்டறவுமென்பது செயற்கையைச்செயற்கையாகக்கூறியது இயற்கையை இயற்கையாகக்கூறலாகாமையுணர்க, இவ்வியலுள் - புணர்ச்சிஇன்னதென்பதும் பொருட்புணர்ச்சியும் உயிரீற்றுப்புணருஞ் சிறப்புப்புணர்ச்சியுங்கூறுவோர் இவ்வியலை உயிரீற்றுப்புணரியலென்றது - என்னெனின் - அவைசிறுபான்மையாதலால் - கமுகந்தோட்டமென்றாற்போலமிகுதிபற்றியகுறியாய் இந்தஇயலுக்குஉயிரீற்றுப்புணரியலெனப்பெயர் தந்தாரென்க. இயைவதுபுணர்ப்புஎனமுற்றும்பயனிலையுமாகமுடிந்தது இச்சூத்திரம். (க)

வேற்றுமையைமுதலாறுமல்வழி, தொழில்பண்புவமையும்மையன்மொழி, யெழுவாய்விளியீரெச்சமுற்றிடையுரி, தழுவுதொடரடுக்கெனவீரேழே, - - - ✱

இது - அல்வழிவேற்றுமையென்பனஇவையெனவுணர்த்துகின்றது. (இ-ள்.) வேற்றுமை-வேற்றுமைப்பொருட்புணர்ச்சி, ஐமுதலாறும் - ஐ- ஆல்- கு- இன்- அது- கண் - என்னும்ஆறு உருபுகளும் - தொக்காவதுவிரிந்தாவதுநிற்கப்படுதங்கள்புணரும் அறுவகைத்தொடர்ச்சியாம், அல்வழி-அல்வழிப்புணர்ச்சி, தொழில்தழுவுதொடர் - வினைத்தொகையும், பண்புதழுவுதொடர் - பண்புத்தொகையும், உவமை - ர் - உவமைத்தொகையும், உம்மை - ர் - உம்மைத்தொகையும், அன்மொழி - ர் - அன்மொழித்தொகையும், எழுவாய் - ர் - எழுவாய்த்தொடரும், விளி - ர் - விளித்தொடரும், ஈரெச்ச - ர் - பெயரெச்சத்தொடரும் வினையெச்சத்தொடரும், முற்று - ர்- தெரிநிலைமுற்றுத்தொடரும்குறிப்புமுற்றுத்தொடரும், இடை- ர்- இடைத்தொடரும், உரி - ர் - உரித்தொடரும், அடுக்கு- அடுக்குத்தொடரும், எனவீரேழ் - எனப்படுதங்கள்பொருந்துந்தொடர்ச்சிப காம், எ-று.

வேற்றுமைத்தொகைநிலை தொகாநிலையெனஎடாததினாலேஅந்தஇரண்டுமேவேற்றுமைப்புணர்ச்சியென்பதும், வினைத்தொகைமுதலைந்தும் விரிந்தவழிவேறுவேறுதொடர்களாய் முடிதலாலும்- வேற்றுமைத்தொகையன்றி இந்தத்தொகைகள் தொகாநிலையுமாமென்று மேற்சூத்திரஞ்செய்யாததினாலும்இந்தஐந்துதொடரும் தொகைநிலையேயென்பதும்பெறப்படும், இரண்டென்பதை மூற்றென்பதனோடும், தழுவுதொடரென்பதை எல்லாவற்றோடுங்கூட்டுக, அடுக்குந்தழுவுதொடராயினும் ஒருசொல் அடுக்கிவருதலால் மற்றையபோலத்தழுவுதொடரன்று என்பது அறிவித்தற்கு அதையிறுதியிலேவைத்தார் - எட்டுவேற்றுமையென மேற்சொல்லுவோர் இங்கேஎழுவாயும் விளியுந்தவிர்த்துவேற்றுமை ஐமுதலாறென்றதுஎன்னெனின் - அங்கேபெயர்ப்பொருளைவே

ற்றுமைசெய்தலால் வேற்றுமைஎட்டென்பார்- இங்கே - எழுவாய்க்கும்விளிக்கும் உ
ருபு - பெயரும் பெயரின்விகாரமுமேயன்றிவேறில்லாமையால் அந்த இரண்டையுந்நீ
க்கித் தமக்கெனஉருபுடையன இடைநின்ற ஆறுவேற்றுமையுமே ஆதலால் அவற்றின்
உருபு ஆறுந்தொக்கும்விரிந்தும் இடைநிற்க அந்த ஆறும் பதங்கள்புணரும்புணர்
ச்சிவேற்றுமைப்புணர்ச்சியென்றார் என்க, வேற்றுமையல்லாதவழி அல்வழி- எனவும.
பயனிலைக்குஅல்லாதமொழி- அன்மொழி-எனவுங்காண்க, பொற்றொடிவந்தாள் என்
பதில் - பொற்றொடி என்பது - அன்மொழி, வந்தாள் - என்பதுபயனிலை, பொற்றொ
டியையணிந்தாள்- எனவிரியின் அதற்குப்பொருந்தும் - அப்படிவிரியாது தொகுதலி
ன் அதுதொகையாயிற்றெனக்காண்க.

[உ - ம்,] பொன்னுடையான் - பொன்னையுடையான் - ஐ - உ,
கல்லெறிந்தான்- கல்லாலெறிந்தான்- ஆல்- ௩, சாத்தன்மகன்- சாத்
தனுக்கு மகன்- கு- ௪, மலைவீழருவி- மலையின் வீழருவி- இன்-௫,
மலையுச்சி- மலையினதுச்சி, அது- ௬, மலைமுழை- மலையின்கண் மு
ழை- கண்- ௭, எனவேற்றுமைத்தொகைநிலை - தொகாநிலையென்னு
ம் இருவகைப்புணர்ச்சியும்வந்தன, கொல்யானை- வினைத்தொகை,
கொன்றயானை- கொல்கின்றயானை, கொல்லும்யானை-எனவிரியும்,
(இனிப்பண்புத்தொகை- பண்புதொக்கதொகையும்- பெயர்தொக்
கதொகையுமெனஇருவகைப்படும்) கருங்குவளை-பண்புத்தொகை,
ஆயன்சாத்தன்- பெயர்த்தொகை, கருமையாகியகுவளை - ஆயனாகி
யசாத்தன் எனவிரியும், மதிமுகம் - உவமைத்தொகை, மதிபோன்
றமுகமெனவிரியும், இராப்பகல் - உம்மைத்தொகை, இராவும்பக
லும் எனவிரியும், பொற்றொடிவந்தாள் - அன்மொழித்தொகை,
பொற்றொடியை அணிந்தவள்வந்தாள் எனவிரியும், கொற்றன்வந்
தான்- எழுவாய்த்தொடர்- இது முதல்வேற்றுமை, கொற்றாகொள்-
விளித்தொடர், இதுஎட்டாம்வேற்றுமை, (இனிப்பெயரெச்சத்தொ
டரும் வினையெச்சத்தொடரும்முற்றுத்தொடரும்இரண்டிரண்டுவ
கைப்படுமெனக்கொள்க) உண்டசாத்தன் - தெரிநிலைப்பெயரெச்
சத்தொடர், பெரியசாத்தன்குறிப்புப்பெயரெச்சத்தொடர், உண்
டுவந்தான்-தெரிநிலைவினையெச்சத்தொடர், விருந்தின்றியுண்ணான்-
குறிப்புவினையெச்சத்தொடர், உண்டான்-சாத்தன்-தெரிநிலைமுற்று
த்தொடர், குழையன் கொற்றன்- குறிப்புமுற்றுத்தொடர், அணங்
குகொல் - இடைத்தொடர், அணங்கோஎன்பதுபொருள், நனிபே
தை - உரித்தொடர், மிகவும்பேதை என்பதுபொருள்- பாம்புபாம்
பு- படைபடை- அடுக்குத்தொடர், ஆக அல்வழிப்புணர்ச்சிபதினொன்
றும் வந்தவாறுகாண்க. தழுவுதொடர் ஆறும் பதினொன்றுமெனவே-
தழுவாதொடருஞ்சிலவுள அந்த இருவழியிலுமென்றாராயிற்று.
அவைவருமாறு - கைக்களிறு - பொற்குடம்- ஆடகப்பூண் - என்ப
ன - தழுவுதொடராகிய உருபும்பொருளும், உடன்தொக்கதினாலே

களிறு- குடம் - பூண் - என்னும்வருமொழிகளோடு-கை - பொன்- ஆடகம் -என்னும் நிலைமொழிகள் தழுவாயலேதொடர்ந்து - முறை யே - தோன்றல் - திரிதல் - கெடுதலென்னுமூன்றுவிகாரமும்பெ ற்றுவந்தவேற்றுமைப்புணர்ச்சி, மருப்பிற்பரலவனைடையவிரலைதெ திப்பஎன்பதில் - மருப்பினிரலையெனக்கொண்டு கூட்டாகவந்து - மருப்பினையுடையஇரலையென்னும்ஐயுருபும்பொருளுமுடன்தொ க்கு - மருப்புஎன்பது இரலைஎன்பதனொடுடனராமல் - மருப்பிற் பரல்எனப்புணர்ந்துதிரிந்தது - இத்தொடக்கத்தனவெல்லாம்தழா த்தொடராயவேற்றுமைப்புணர்ச்சி, சுனையாழவம்பி மிதப்பவனை யனைய- யானைக்குநீத்துமுயற்குநிலையென்ப - கானகநாடன் சுனை- என்னும் இச்சிந்தியல் வெண்பாவினுள் - சுனைமிதப்ப எனத்தழுவு தொடராய்வரின் இயல்பாகமுடியும் எழுவாய்ப்புணர்ச்சி - மொழி மாற்றாய்வந்து சுனையாழ எனத்தழாத்தொடராய்- யகர உடன்படு மெய்தோன்றிமுடிந்தது, இத்தொடக்கத்தனவெல்லாந்தழாத்தொ டராய அல்வழிப்புணர்ச்சியாமெனக்காண்க. (உ)

விகாரமனைத்துமேவலதியல்பே. - - ✻

இது - மேல் இயல்பொடுவிகாரத்தி யைவதுஎன்றார் அவற்றுள் இயல்புப்புணர்ச்சி புணர்த்திற்று, (இ-ள்.) விகாரமனைத்தும் - மேற் சொல்லப்படும் விகாரவகைமுழுவதும், மேவலது - பொருந்தாத து, இயல்பு- இயல்புப்புணர்ச்சியாம், எ-று.

[வ-று,] பொன்மலை - புகழ்மகிது - ஒளிமணி - எனவரும் - இய ல்புக்குவிதிகூறவேண்டுமெதென்னெனின் - மலர்க்கணைதொடுத்தான் - எனவிகாரமானபோது - மலராகியகணையைத்தொடுத்தான் - எ-ம்- மலர்கணைதொடுத்தான்- என- இயல்பாகியபோது-மலரையுங்கணை யையுந்தொடுத்தான் - எனப்பொருள்வேறுபடுதலாற்கூறவேண்டு மென்க. (௩)

தோன்றறிரிதல்கெடுதல்விகார,மூன்றுமொழிமூவிடத்துமாகும்✻

இது - விகாரப்புணர்ச்சிபுணர்த்திற்று, (இ-ள்.) தோன்றல் - (மெய்யாயினும் உயிராயினும் உயிர்மெய்யாயினுஞ் சாரியையா யினும்) மிகுதலும், திரிதல்-அவைவேறுபடுதலும், கெடுதல்-அவை ஒழிதலும், விகாரம் - மேற்கூறியவிகாரப்புணர்ச்சியாம், மூன்று ம் - இந்தமூவகைவிகாரங்களும், மொழி - நிலைமொழிவருமொழி களின், மூவிடத்துமாகும் - முதல்இடை கடை யென்கின்ற மூன் றிடத்தும் ஏற்றபடிவரும், எ-று.

[வ-று,] பூக்கொடி - பூங்கொடி - இவை - வருமொழிமுதலிலே மெய்தோன்றின - பல்தலை- என்பது- பஃறலைஎனத்திரிந்தபோது

வருமொழிமுதலினும் நிலைமொழியீற்றினும் மெய்திரிந்தன, நிலவலயம் - எ-து - நிலைமொழியீற்றில்மெய்கெட்டது, அறுபது, எ-து - நிலைமொழியுயிர்திரிந்து வருமொழியிடை ஒற்றுக்கெட்டது, பல்பொருள் - நிலைமொழியீற்றுயிர்கெட்டது, நாழியுரி - என்றது- நாடுரியென்றுஆனபோது - நிலைமொழியீற்று உயிர்மெய்கெட்டு - டகரந்தோன்றிற்று, தமிழப்பிள்ளை - நிலைமொழியீற்றிற் சாரியைதோன்றிற்று, பனங்காய் - நிலைமொழியீற்று உயிர்கெட்டுச்சாரியைதோன்றிற்று, பிறவும்வந்தவழிக்காண்க - இவ்விகாரங்களெல்லாம் நிலைமொழிவருமொழிகளுள் ஒருமொழியைச்சார்ந்து வந்தன - பொதுப்படமொழிமூவிடத்துமாகுமென்றதினால் இருமொழியைச்சார்ந்துவருவனவுமுளவெனக்கொள்க. அவைவருமாறு - ஆவழகிது - இது- வகரஉடம்படுமெய்தோன்றிற்று- உரியநெய் - யகரஉயிர்மெய்தோன்றிற்று, புளியங்காய் - அம்முச்சாரியைதோன்றிற்று, இத்தோன்றல்விகாரம் நிலைவருமொழிகளிரண்டையுஞ்சார்ந்துவந்தனபிறவுமிவ்வாறுகாண்க - விகாரம்தோன்றல் திரிதல் கெடுதலாமெனவும்- மூன்றும்மூவிடத்துமாகுமெனவும் இருமுடிபாகமுடித்துக்கொள்க. (ச)

வலித்தன்மெலித்தனீட்டல்குறுக்கல், விரித்தறொகுத்தலும்வருஞ் செய்யுள்வேண்டுழி, - - - *

இது- செய்யுளவிகாரமுணர்த்திற்று. (இ-ள்-) வலித்தல்- மெல்லொற்றை வல்லொற்றாக்கலும், மெலித்தல் - வல்லொற்றைமெல்லொற்றாக்கலும், நீட்டல் - குற்றெழுத்தைநெட்டெழுத்தாக்கலும், குறுக்கல்- நெட்டெழுத்தைக்குற்றெழுத்தாக்கலும், விரித்தல்- இசைசுருங்குமாயின் - எழுத்தாயினுஞ்சாரியையாயினும்பெய்து விரிப்பதும், தொகுத்தல்-இசைநீளின்-எழுத்தாயினுஞ்சாரியையாயினுங்குறைத்துச்சுருக்குதலும், (ஆகியஅறுவகைவிகாரங்களும்) செய்யுள் - பாட்டுக்களிலே, வேண்டுழிவரும் - (அடிதொடைமுதலியநோக்கிஅமைக்க) வேண்டுமிடத்துவரும், எ-று.

இன்னதுநோக்கி இவ்விகாரங்கள் வருமெனக்கூறுதொழிந்தார்- இந்த அதிகாரத்திலேகூறப்படுஞ்செய்யுள் முடிபும் பிறவும் அடங்குதற்பொருட்டு- [வ-று,] குறுத்தாட்பூதம்- இது குறுந்தாளெனப்படுவது- வலித்துநின்றது, தண்டையினக்கிளிகடிவோள் - இது-தட்டையின் எனப்படுவது - மெலிந்துநின்றது, போத்தரூர் புல்லறிவினார்- இது-பொத்தரூர் எனப்படுவது நீண்டுநின்றது, திருத்தார் நன்றென்றேன்றியேன் - இது - தீயேன் - எனப்படுவது - குறுகிநின்றது, நெல்விளையும்மே - இது - விளையுமே - எனப்படுவது - ம

கார ஒற்றுவிரிந்து நின்றது, சிறியிலைவெதிரின் - இது - சிறியவிலையெனப்படுவது - யகரங்குறைந்து நின்றது, பிறவுமிவ்வாறு காண்க. - தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் - கற்றனைத்தூறு மறிவு - இக்குறளினுள் - தொட்டது - கற்றது - எனப்படுவது - தொட்டு - கற்று - எனவும் - அண்டிரண்முழுத்தங்கொண்டுவந்து - இதனுள் - வந்தது - என்பது - வந்தெனவுங்குறைந்து நிற்பது, மேலிவையுந்தொகுத்தல் விகாரமாமென்க. (௫)

ஒருமொழி மூவழிக்குறைதலு மனைத்தே. - - *

இதுவுமது - (இ-ள்.) ஒருமொழி - ஒவ்வொருசொற்கள், மூவழிக்குறைதலும் - முதலிலாவது - இடையிலாவது கடையிலாவது குறைந்துவருதலும், அனைத்து - அந்தன்மைத்தாகிய செய்யுள் விகாரமாமென்றவாறு - [வரு,] மரையிதழ்புரைய மருங்கெழுந்திறழ - இதில் - தாமரையிதழ் - எனப்படுவது - முதல்குறைந்தது - வேதின வெரிநினோதிமுதுபோத்து - இதில் - ஓந்தி - எனப்படுவது - இடைக்குறைந்தது, நீலுண்டுகிலிகைகடுப்ப - இதில் - நீலம் - என்பதுகடைக்குறைந்தது, பிறவுங்காண்க.

செய்யுளுக்கே உரிய இந்த ஒன்பது விகாரங்களையிங்கே சொல்லியதென்னெனின் - செய்யுளிடத்தும் அல்வழி வேற்றுமையால்வரும் - மூன்றுவிகாரமும் இந்த ஒன்பதுவிகாரமும்வருதலால் வேறுபாடறிதற்கும் - விரித்தல் - தோன்றல்விகாரமாகவும் - வலித்தலும் - மெலித்தலும் - நீட்டலும் - குறுக்கலும் - திரிதலாகவும் - தொகுத்தலும் - மூவழிக்குறைதலும் கெடுதலாகவும் - இந்தமூவகையுள் அவ்வொன்பதுவகைவிகாரங்களும் - அடங்குமென்பது அறிவித்தற்குமென்க - இனியிச்சூத்திரத்திற்கு - வழக்கின்கண்மாடே போலச் செய்யுட்கண்மரூஉவாயடிப்பாடாக இவ்விகாரங்கள்வருமெனப்பொருள் கூறுவாருமுளர், அது இச்சூத்திரக்கருத்தன்றாமென்னெனின் - மேலைச்சூத்திரக்கருத்து அறுவகைவிகாரங்களுஞ்செய்யுட்செய்யுஞ்சான்றோரது பொருள் - அச்செய்யுளில்வேண்டியவாவிக்கவருமென்பதன்றே - அதைநோக்கி யிச்சூத்திரத்தை மாட்டெடுத்தாராதலால் - இதற்குஞ்செய்யுட்செய்யுஞ்சான்றோர்வாவித்துழிவருமென்பதேகருத்தாதல்வேண்டும் - இதுகருதியன்றே ஒவ்வொருமொழியென்பதை ஒருமொழியென இவரிச்சூத்திரஞ்செய்ததுமென்க - இன்னுமது பொருந்தாதென்பதற்கு - பசும்புற்றலைகாண்பரிது - இதிற்காண்பதென்பது காண்பெனக்கடைக்குறைத்ததும் - சான்றோனெனப்பிலவர்தோழி - இதிற்சான்றோனெனபாரில்லொன்பது - என்பிலனெனக்கடைக்குறைத்ததுமே சான்றாதலுணர்க, சான்றுகாட்சி, இனிவழக்கிடத்து இலைக்கறியை - லைக்கறி - எனவும் - நிலாவுதித்ததென்பதற்கு - லாவுதித்ததெனவும் - இராப்பகலென்பதற்கு - ராப்பகலெனவும், தேன்வரகு - கேவரகு - தீர்ச்சீலை நச்சீலை - போகிறான் போறான் - பாடுகிறான் - பாடுறான் - எனவும் - ஆனோயுறப்பெறும் புறைமனென் துமரபுபற்றிவந்த, தோட்டியான்என்பதைத் - தோட்டி - எம் - தண்ணீர் - தண்ணி - வெந்நீர் வெந்நி - எனவும் - முறையேயிம்மூவகை விகாரங்களும் வருதலுமாயிற்கொள்க, பிறவுமன்ன. (௬)

ஒருபுணர்க்கிரண்டுமூன்றுமுறப்பெறும். *

இது - புணர்ச்சிவிகாரம்பற்றி வருவதோர் சந்தேகம் அகற்றுகின்றது - (இ-ள்., ஒருபுணர்க்கு - ஒருபுணர்ச்சிக்கு, இரண்டும் - மூ

றுவிகாரமேயன்றியிரண்டு விகாரங்களும், மூன்றும் - மூன்றுவி காரங்களும், உறப்பெறும் - வரப்பெறும், எ-று.

யானைக்கோடு - இதிலேதோன்றல் விகாரமொன்றுவந்தது- நி லப்பனை - இதிலே - கெடுதலுந் தோன்றலுமாகிய இரண்டுவிகா ரங்கள்வந்தன, பனங்காய் - இதிலேமுறையே கெடுதலுந்தோன் றலுந்திரிதலுமாகியமூன்றுவிகாரங்களும்வந்தன, பிறவுமன்ன - இதிலே - அதுவென்னுஞ்சுட்டுப்பெயர்குறைந்துநின்றது - பெ றுமென்பதையதன் பயனிலையாக்கிமுடித்துக்கொள்க. (எ)

எண்மூவெழுத்தீற் றெவ்வகைமொழிக்கு, முன்வருஞநமயவக் களியல்பும், குறில்வழியத்தனியை நொதுமுன்மெலி, மிகலு மாம் ணளனலவழிநத்திரியும். *

இது - பொதுப்புணர்ச் சியுணர்த்துகின்றது- (இ-ள்.) எ ண்மூவெழுத்தீற்று - இயற்கையாகவாயினும் செயற்கையாகவா யினும் இருபத்துநான்கெழுத்தையும்ஈறாகவுடைய, எவ்வகை மொழிக்கும் - (பெயர் - வினை -இடை - உரி - திசை- வடசொ ல்-எனப்பட்ட)எல்லாமொழிகளுக்கும், முன்வரு-முன்னேவருகி ன்ற, ஞநமயவக்களியல்பும்- இவ்வைந்தெழுத்தும் (அல்வழிவே ற்றுமை யிரண்டிடத்தும்) இயல்பாதலும், குறில்வழிய- குற்றெ ழுத்தின் பின்னின்ற யகர ஒற்றும்,தனியை- தனித்த ஐகாரமும், நொதுமுன்- நொவ்வுந் துவ்வுமாகிய இவற்றின்முன், மெலி- ஞ நமக்கள், மிகலுமாம்- (பிறசொற்களின் முன்இயல்பாதலன்றி) மிக்குமுடியவும் பெறும், ணளனலவழி- இந்தநான்கு மெய்யீ ற்றின்பின், நத்திரியும்- வருகின்ற நகரம் (பிறஈற்றின் முன்னிய ல்பாதலன்றி) வடிவுவேறு படுமென்றவாறு.

செயற்கை- விதி- என்பன ஒருபொருள், விதியீறுவது- இயல் பாகநின்ற உயிராவது ஒற்றுவது போய்மற்றொரு உயிரீறுகவா வது ஒற்றீறுகவாவது நிற்பது, நகரத்திரிபு மேல்வகுத்துக்கூறு வாராதலால் இங்கே இவ்வாறு திரியுமென்றது தொகுத்துக்கூறி ஞர் - புணரியலிலே எந்த இடத்திலாயினும் அல்வழிவேற்றுமை யெனக்குறிப்பாக ஆயினும் வெளிப்படையாக ஆயினுங்கூறா யின் இருவழிக்குங் கூறினுரெனக்கொள்க.

[உ-ம்,] விள- பலா- புளி- தீ- கடு- பூ -சே- பனை-கோ-கௌ- உரிஞ்- மண்-பொருந்-மரம்-பொன் -வேய்- வேர் -வேல் -தெ வ்- யாழ் -வாள் -எஃகு-என-நிறுத்தி- ஞான்றது- நீண்டது-மா ண்டது-யாது -வலிது- எம -ஞாற்சி- நீட்சி-மாட்சி - யாப்பு- வ

ளவை- எம்-வருவித்து- விளஞான்றது -விளநீண்டது -விளமா
ண்டது -விளயாது-விளவலிது-எம்-விளஞாற்சி - விளநீட்சி -வி
ளமாட்சி- விளயாப்பு-விளவலிமை- எனவும்-ஒட்டி அல்வழிவே
ற்றுமையிரண்டிடத்தும் முறையே இயல்பாதல்காண்க, பிறவ
ற்றொடுமிவ்வாறேயொட்டுக, ஒழிந்த உயர்திணைப்பெயர்முதலிய
அறுவகைச்சொற்களிலும் இவ்வாறேயொட்டி இயல்பாதல்காண்
க, மெய்-கை -எனநிறுத்தி- ஞான்றது- நீண்டது - மாண்டது-
எம்- ஞாற்சி-நீட்சி-மாட்சி-எனவும்வருவித்து-மெய்ஞ்ஞான்றது
கைஞ்ஞான்றது- மெய்ஞ்ஞாற்சி - கைஞ்ஞாற்சி- என. ஒட்டிக்கு
றில்வழி -யகரத்தின் முன்னுந்தனி ஐம்முன்னும் இருவழியும் மெ
லி மிகுதல்காண்க, பிறவற்றையுமொட்டுக - நொ - து -எனநிறுத்
தி -ஞெள்ளா-நாகா -மாடா - எனவருவித்து -நொஞ்ஞெள்ளா
துஞ்ஞெள்ளா-எனஒட்டி நொதுமுன்- மெலிமிகுதல்காண்க, பி
றவற்றையுமொட்டுக -இந்த- இரண்டும் வினைச்சொல்லாதலால் அ
ல்வழியில்மிக்கன,உரிஞுஞான்றது பொருநுஞான்றது-எனஉரிஞ்
பொருந் என்னுந்தொழிற்பெயர் உகரம்பெறுதலும், நகரத்திரிபு
ம்பின்வருஞ்சிறப்புச்சூத்திரங்களாற்காண்க,மெலிமிகுமாமென்
றஉம்மையால் .நொ - து-முன் இடையினமிகுமாமெனக்கூறின
ராயிற்று.அவைவருமாறு-நொய்யவளு- துய்யவளு-நொவ்வளவா
துவ்வளவா எனவரும்.

இடையினமிகல் - குறில்வழியவ்வீற்றுந் தனியைக்கும் -பொருந்தாமையா
ல் உம்மையால்தழுவினர் நொ - து- என்னுமிவ்விரண்டின்முன்மெல்லினமும் இ
டையினமு மிகாதாயின் -புணர்ச்சியின்றி விட்டிசைத்துநிற்குமெனக்காண்க.
இவற்றின்முன் வல்லினமிகுதல் கூறுமேயமைதலால் உயிர்வரின் உடன்படுமெ
ய்பிரட்டுமென்பதுபெறும்-[உ-ம்,]நொ அரசா-நொவ்வரசா து அரசா -து
வ்வரசா -எனவரும். இனி ஒப்பின்முடித்தலால் ஒழிந்ததனிக்குறில முன்னும்-இ
வ்விதி பெறுதல்கொள்க- உ-ம். க முன் - கவ்வாம்- வ முன்- யவ்வவே-குவ்வரும்
உவ்வரும்ம -உக்கூறுகும்- பவ்வீ - எய்யாமுதலும்- எனவரும்-பிறவுமன்ன -இனி
உரையிற்கோடலால் -பிறவற்றின்முன்னும் மெலிமிகுமாமெனக்கொள்க,

[உ-ம்,] கதிர்ஞெரி-கதிர்ஞ்ஞெரி கதிர்நுனை-கதிர்ந்நுனை-கதிர்முனை -கதிர்ம்
முனை- எம்-இதழ்ஞெரி இதழ்ஞ்ஞெரி நுனை- முனை எம் - பூஞெரி-பூஞ்ஞெரி
நுனை -முனை -எம். காய்ஞெரி - காய்ஞ்ஞெரி -நுனை முனை எனவுங்காண்க-எக
ரம் விறுவிடைச்சொற் கண்ணன்றிப்பிறவழி யீறுகாமையாலிங்கேவிலக்கப்பட்
டது -இச்சூத்திரமுதலியன தொடர்ச்சொற்புணர்த்தலென்னும் உத்தி இவைவு
யிவைஇயல்பாதலும்மிகலும் ஆம்-எம- நத்திரியும் -எம் இரண்டுமுடிபாக முடி
த்துக்கொள்க. (௮)

பொதுப்பெயருயர்திணைப்பெயர்களீற்றுமெய், வலிவரினியல்
பாமாவியரமுன், வன்மைமிகாசிலவிகாரமாமுயர்திணை. ⁕

இதுவுமது (இ-ள்.) பொது - வீற்றுமெய்- பொதுப்பெ
யரும் உயர்திணைப்பெயர்களுமாகிய இவற்றிற்குஈறாகிவருமெய்

ன், வலிவரினியல்பாம் - வல்லினமுதல்மொழிவந்து புணரின்வி
காரப்படாமலியல்பாம், ஆவியரமுன் -உயிரீறும் யரவென்னும்
இரண்டொற்றீறு மாகிய அவ்விருவகைப்பெயர்களுக்குமுன், வன்
மையமிகா-வல்லெழுத்துமிகாதுமுடியாவாம், உயர்திணை-உயர்திணை
யிடத்து( நிலைமொழிவருமொழிகள் )சில்விகாரமாம்-சிலதமக்கே
ற்றவிகாரப்பட்டும் வருவனவாமென்றவாறு.

வல்லினத்துள்ளே மயங்காதன மயங்குமாயின் ஈற்றுமெய்வி
காரப்படுவனவுமுளவாகலின் - பொதுப்பட வலிவரினென்றும்,
வன்கணமேயன்றி மற்றக்கணம் வரினும்விகாரப்படுவனவுமுள
வாகலின் - இறந்தது தழீஇயஎச்சவும்மைகொடுத்து விகாரமுமா
மென்னுமை - விகாரமாமென்றும், அந்தவிகாரங்கள் நிலைமொழி
வருமொழியிரண்டினும் ஏற்றபடி வருமாதலின் - உயர்திணை ஈற்
றொன்றுமல் -உயர்திணையென்றுங்கூறினார். [உம்,] சாத்தன்- கொற்
றன்- ஆண்- என நிறுத்தி-குறிது- சிறிது- தீது- பெரிது- குறியன்
சிறியன்- தீயன்-பெரியன்-எம்-கை- செவி- தலை- புறம்- என- வரு
வித்து- சாத்தன்குறிது- சாத்தன்குறியன்- சாத்தன்கை - எனமு
றையே ஒட்டி அவ்வழிவேற்றுமையிரண்டிடத்தும்பொதுப்பெ
யரீற்று ணகரனகரங்கள் - வலிவரஇயல்பாயினவாறு காண்க -
பிறவற்றோடும் ஒட்டுக- ஊரன்- அவன்- என நிறுத்தி- குறியன்-
சிறியன்- தீயன்- பெரியன்- எம்- கை- செவி-தலை- புறம்- என- வ
ருவித்து அவ்வாறு ஒட்டிஉயர் திணைப்பெயரீற்றுனகரம் இரண்
டிடத்தும் இயல்பாதல் காண்க- சாத்தி- கொற்றி- தாய்-என நிறு
த்தி- குறிது- சிறிது- தீது-பெரிது-குறியள்-சிறியள்- தீயள் -பெரி
யள்-எம்-கை- செவி- தலை-புறம்-எம்- வருவித்து ஒட்டிப்பொது
ப்பெயரீற்று இகரயகரங்களின்முன்வந்தவல்லினம் இருவழியும்
இயல்பாதல்காண்க-நம்பி- விடலை- என நிறுத்தி- குறியன்- சிறிய
ன் - தீயன்-பெரியன் - எம்- கை-செவி-தலை-புறம் - எம் - வருவி
த்துஒட்டிமுறையேஉயர்திணை இகரஐகாரங்களின்முன்வந்தவல்லி
னம்இருவழியும் இயல்பாதல்காண்க, கபிலபரணர்- வடுகநாதன்
அரசவள்ளல்- இவையீறுகெட்டுப்புணர்ந்த அல்வழிச்சந்தி - வா
ணிகத்தெரு-ஆசீவகப்பள்ளி- இவையீறுகெட்டுவல்லெழுத்துமிக்
குப்புணர்ந்தவேற்றுமைச்சந்தி - பிரமகோட்டம்-பிரமக்கோட்
டம்-வாசுதேவகோட்டம்-வாசுதேவக்கோட்டம்- இவையீறுகெட்
டுவல்லெழுத்துஇயல்பாயும்மிக்கும் புணர்ந்தவேற்றுமைச்சந்தி,
இவ்வாறுஉயர்திணையிடத்துச்சிலதமக்கேற்ற விகாரமாய்வந்தன

இனி ஒட்டின்மூடைத்தலால் - உயர்திணைப்பெயர்ச்சொல் விகுதிகள்போல உயர்திணை வினைச்சொல்விகுதிகளும் வலிவரின் இயல்பாமெனக்கொள்க. அவை வருமாறு உண்டான்கொற்றன் - உண்டாள்சாத்தி - உண்டார்குமார் - ஒழுகுபலவர் - எனவரும். பிறவுமிவ்வாறே காண்க, மெய்யியல்பாம் - வன்மையினா - சிலவிகாரமாம் எனமுன்னும் முடியாக முடித்துக்கொள்க. (க)

ஈற்றியா வினாவிளிப் பெயர்முன் வலியியல்பே. *

இதுவுமது - (இ-ள்.) ஈற்றுவினா - முடிவின்று ஈற்றுவினாச்சொல் முன்னும், யாவினா - இவ்வினாச்சொன்முன்னும், விளிப்பெயர்முன் - உயர்திணை அஃறிணையாகிய விளிவேற்றுமைப்பெயர்கள்முன்னும், வலியியல்பு - வரும் வல்லெழுத்து இயல்பாமென்றவாறு.

[உ-ம்] நம்பியா கொண்டான் - நம்பியோ கொண்டான் - நம்பியே கொண்டான் - சென்றான் - தந்தான் - போயினான் - எம். உண்ணா கொற்றா - சாத்தா - தேவா - பூதா - எம் - (உண்ணா - என்பது - உண்பேனென்னும் பொருளில் வினாவிடை) யாகுதிய - சிறிய - தீய - பெரிய - எம் - வினைமுன்னியல்பாயின, நம்பி - நம்பீ - விடலை - விடலாய் - எம் - கிள்ளை - கிள்ளாய் - எம் - சாத்தி - சாத்தீ - தாய் - தாயே - எம் - திருத்தி - கொள் - செல் - தா - போ - எனவருவித்து நம்பிகொள் - நம்பீகொள் - நம்பிசெல் - நம்பீசெல் - நம்பிதா - நம்பீதா - நம்பிபோ - நம்பீபோ - என்றாற்போல முறையே ஒட்டி - உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் - பொதுப்பெயர்களின் அண்மைவிளிமுன்னும் சேய்மை விளிமுன்னும் வந்தவல்லினம் இயல்பாயினவாறு கண்டுகொள்க. அண்மை - சமீபம், சேய்மை - தூரம், ஏகாரஓகாரவினாமுன்வரும் வல்லினமியல்பாதற்குவிதி - இடைச்சொல்லேயோ - என்னுஞ் சூத்திரத்தாற்பின்பு கூறுவாராதலால் இங்கே ஐயமறுத்தற்கு உதாரணங்காட்டப்பட்டது. (ய)

ஆவியர வீற்றுமுன் னிலைவினை, யேவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே. *

இதுவுமது - (இ-ள்,) ஆவியரமுவீற்று - உயிரையும் - யரழ வென்னும் மூன்று ஒற்றையும் இறுதியாகவுடைய, முன்னிலைவினை ஏவல்முன் - முன்னிலைவினைச்சொற்களும் ஏவல்வினைச்சொற்களுமாகிய இவற்றின்முன், வல்லினமியல்பொடுவிகற்பு - வந்த வல்லினம் இயல்பாதலோடு விகற்பமாதலுமுடையதென்றவாறு. [உ-ம்,] உண்டி - தின்றி - உண்டனை தின்றனை - உண்டாய் தின்றாய் - உண்டனிர் - தின்றனிர் - என நிறுத்தி - கொற்றா - சாத்தா - தேவா - பூதா - கொற்றரோ - சாத்தரோ - தேவரோ - பூதரோ - எனவருவித்து - உண்டிகொ

ற்றா- உண்டனிர்கொற்றோ- எனஒட்டி -முன்னிலைவினைமுன் இயல்பாதல்காண்க- பிறவற்றோடும்மொட்டுக, கொணா- எறி - விடு- ஆய்- சேர்- தாழ்- எனநிறுத்தி- கொற்றா- சாத்தா- தேவா- பூதா- எனவருவித்து- முன்போலவே ஒட்டி ஏவல்முன்- இயல்பாதல்காண்க- முன்னிலைவினைமுன்விகற்பம் வந்தவழிக்காண்க- நடகொற்றா- நடக்கொற்றா-எய்கொற்றா- எய்க்கொற்றா-ஈர்கொற்றா- ஈர்க்கொற்றா தாழ்கொற்றா- தாழ்க்கொற்றா- எனஏவல்முன் விகற்பித்தன-பிறவுமன்ன- முன்னிலைவினையென்றவர் ஏவலெனவேறு கூறியதென்னெனின்- முன்னிலைவினையெனவே-படர்க்கைவினை தன்மை வினைகளுக்கு இனமாகியதெனவேபொருள்படுவதன்றி இனமின்றிமுன்னிலை யொன்றிற்கேயுரிய ஏவல்வினையெனப்பொருள்படாதன்றேலென்க. வல்லினமியல்பொடு விகற்பமாமெனமுடிக்க. (௰௬)

இஈஐவழியவ்வு மேனை, யுயிர்வழிவவ்வு மேமுனிவ்விருமையு,
முயிர்வரினுடம்படுமெய்யென் றாகும். *

இது-உயிரீற்றுப்பதம் புணருஞ்சந்திப்புணர்ச்சிகூறத்தொடங்கிஉயிரீற்றின்முன் உயிர்புணருமாறுணர்த்துகின்றது- (இ-ள்,) இஈஐவழியவ்வும்- இந்தமூன்றுஉயிர்களின்பின் யகரஒற்றும்,ஏனையுயிர்வழிவவ்வும்- ஒழிந்தஉயிர்களின்பின்வகரஒற்றும், ஏமுனிவ்விருமையும்-ஏகாரத்தின்பின்யகரவகரஒற்றுக்களிரண்டும், உயிர்வரின்-உயிர்முதல்மொழிவந்துபுணருமாயின், உடம்படுமெய்யென்றாகும்-உடம்படுமெய்யெனப்பெயர்பெற்றுவருமென்றவாறு- இருமையென்றது- இங்கேபன்மையன்றிருமைவகைதெரிந்து-மும்மைத்தமிழ்என்றாற்போல்-பண்புடையதையெனக்காண்க[உ-ம்,] மணிஅழகிது-மணியழகிது,தீஎரிந்தது- தீயெரிந்தது, அவைஅஞ்சாமை-அவையஞ்சாமை,எ-ம்-விளஅழகிது- விளவழகிது- பலாஅழகிது- பலாவழகிது, கடுவழகிது,பூவழகிது- நொவ்வழகிது-கோவழகிது-கௌவழகிது-எ-ம்-ஏயெயிவளொருத்திபேடி-அவனேயிவன்-சேவழகிது-எனவுமுறையே அவ்வழியில்உடம்படுமெய்பெற்றன,மணியொளி-தீயொளி-பனையடி-எ-ம்- விளவடி-பலாவடி-கடுவருமை - பூவருமை-கோவழகு- கௌவழகு-எனவும்வேற்றுமையில் உடம்படுமெய்பெற்றனபிறவுமன்ன.

இனிஅளபெடை எகரத்தின்பின்னும் யகர வகரஉடம்படுமெய் பெறுதலைவிற்கொள்க -வரலாறு-உண்டேஎயிகல்-சேஎவடைந்தது- எனவரும்,மாபிருஞாலமென ஆகாரஈற்று உரிச்சொல்முன்னும் - போயினன் -என-இகார ஈற்றுப்பகுதியிடைச்சொல முன்னும்யகர உடம்படுமெய்பெற்றதென்னெனின் அது - இடையுரிவடசொலினியம்பிய கொளாதவுமென்னுஞ்சூத்திரத்தால் அ

மையமென்க, விண்வத்துக்கொட்குமெனமெய்யீற்றின்பின்னும் உயிர்வரினுடம்படுமெய்பெறுமென்பாருமுளரெனின் - உயிரோடு உயிர்க்குமயக்கமில்லாத நிலைமே - [மயக்கம் - இணைக்க] அவ்விரண்டிடையும் உடம்படுதற்பொருட்டு இடையே வரும்மெய்யை உடம்படுமெய்யென்பாராதலால் - வருமுயிரோடு ஒன்றுபடுதற்கு உரியமெய்யீற்றின் - பின்வரும் மெய்யை உடம்படுமெய்யென்பது பொருந்தாது - அந்நவக மெய்தோன்றுதற்குவிதிவருநன்னூற்கிரத்தாற்காண்க, உடன்படலென்பது உடம்படலெனமருவாயிற்று (மருஉ - என்பது ஒருவர்செய்யவேண்டாததானே திரிந்துள்ளதைத் திருந்தச்சொல்லுஞ்செய்கை.) இனி - வருமுயிர்க்கு உடம்பாக அடுக்குமெய் உடம்படுமெய்யெனினும் அமையும். இந்த உடம்படுமெய்யின்தோற்றந்தான் தலைவிகாரம்போலாகாது - இடைவிட்ட உலோகங்களை இணைக்கும்பற்றாசுபோலவொருதலின் இப்புணர்ச்சியை இயல்புபுணர்ச்சியென்றுசொல்லவைத்தவர் உடம்படுமெய்தோன்றுமென்றுமல் - உடம்படுமெய்யென்றதுமென்றார், இவ்விடத்து எகரஈற்றைவிலக்குக (உ. லோகம் - பொன் வெள்ளி செம்புமுதலியன) பற்றுவிடல - பொடிவைத்துக்கூட்டுதல், யவ்வும்வவ்வும் உடம்படுமெய்யாமெனமுடிக்க. (௱௨)

எகரவினாமுச்சுட்டின்முன்னர், உயிரும்யகரமுமெய்தின் வவ்வும், பிறவரினவையுந்தூக்கிற்சுட்டு, நீளின்யகரமுந் தோன்றுதனெறியே. *

இது - இ-ஈ-ஐவழியென்னுஞ் சூத்திரத்தாலும் - எண்மூவெழுத்தீற்றென்னுஞ் சூத்திரத்தாலும் - எய்தியவிதிவிலக்கிப் பிறிதுவிதிகூறு - று. (இ-ள்.) எகரவினாமுச்சுட்டின்முன்னர் - எ - என்னும்வினாவிடைச்சொல்லும் - அ-இ-உ- என்னும் மூன்றுசுட்டிடைச்சொல்லுமாகிய இவற்றின்முன், உயிரும்யகரமுமெய்தின்வவ்வும் - உயிர்முதல்மொழியும்யகரமுதல்மொழியும் வந்தால் வகரவொற்றும், பிறவரினவையும் - ஒழிந்தமெய்முதல்மொழிகள்வந்தால் அவ்வந்தமெய்களும், தூக்கிற்சுட்டுநீளின் - செய்யுளிலேசுட்டெழுத்து நீளுமாயின், யகரமும் - யகரவொற்றும், தோன்றுதனெறி - மிகுதல்முறையாமென்றவாறு.

[உ-ம்,] எவ்வணி - எவ்யானை - அவ்வணி - அவ்யானை - இவ்வணி - இவ்யானை - உவ்வணி - உவ்யானை - என - எகரவினாமுச்சுட்டின்முன் உயிரும்யகரமும்வரவகரந்தோன்றிற்று, எக்குதிரை - எச்சேனை - எத்தானை - எப்படை - எஞ்ஞாலம் - எந்நாடு - எம்மன்னை - எவ்வளை - எங்ஙனம் - என - யகரமொழிந்தமெய்கள் வந்துபுணர அவ்வந்தவந்தமெய்கள்மிக்கன, ஒழிந்தமூன்றுசுட்டிற்குமிவ்வாறேயொட்டிக்காண்க, அ - இடை - ஆயிடைத்தமிழ் கூறுநல்லுலகத்து - எனச்சுட்டுநீண்டவழியகரவொற்றுத்தோன்றியவாறுங்காண்க - பிறவுமன்ன.

யகரமுமெய்தினென்றதனால் - இங்கேதோன்றிய - யகரவகரவொற்றுக்கள் உடம்படுமெய்யல்லவென்பதும், - சுட்டுநீளினெனவேறுகூறுதல் உடன்பாடென்பதும் - அதுநிச்சயமன்றென்பதும், யகரந்தோன்றுமெனவே - இந்தநீட்சியடி-

தொடைமாநலியநோக்கி - நீட்டுவழிநீட்டல்விகாரமன்றென்பதூஉம், யகரமு
மென்றதிழிவுசிறப்புஉம்மையால் - யகரந்தோன்றுதல் உயிர்வருவழியன்றிப்பிற
வழித்தோன்றுமென்பதூஉம் - வல்கணைவரின்சுட்டுநீளாதென்பதூஉம், நெறியென்
றதனால் இவ்வாறுநெறிப்படவருவனவெல்லாங்கொள்ளவேண்டுமென்பதூஉம்பெ
றப்பட்டன, ஆவயினான் - எனச்சுட்டுநீண்டவழி - உயிர்வாராமையால்யகரந்
தோன்றாதாயிற்று, இவ்வாறுநெறிப்படவருவனவருமாறு - யாங்ஙனம் என -
யாவினுமுன்னும் - ஆங்ஙனம் - ஈங்ஙனம் - ஊங்ஙனம் -எனச்சுட்டுநீண்டவழியும்
வருமொழிககரமிருந்தது, ஈது - ஆங்கு - ஈங்கு - ஊங்கு - ஆண்டு - ஈண்டு-என
ச்சுட்டுநீண்டன, விண்வத்துக்கொட்கும்- செல்வுழிச்செல்க - சார்வுழிச்சார்ந்
து - என - மெய்யீற்றின் முன் உயிர்வருங்கால் - உடம்படுமெய்யன்றெனவிலக்கி
ய- வகரஒற்றுத்தோன்றிற்று - பிறவுமன்ன - தோன்றுதல் - நெறியெனமுடித்து
க்கொள்க. (௱௬௩)

உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும், யவ்வரி னிய்யாமுற் றுமற்
றொரோவழி. *

இது - குற்றியலுகரத்திற்கு- இசைவழியென்னுஞ்சூத்திர
த்தாலெய்திய துவிலக்கிப்பிறிதுவிதியும் - முற்றியலுகரத்திற்கு அ
ந்தச்சூத்திரத்தாலெய்தியதன்மேற்சிறப்புவிதியுங்கூறு-து.(இ-ள்,)
உயிர்வரின் - உயிர்முதன்மொழிவந்துபுணரின், உக்குறள்- குற்றி
யலுகரமானது, மெய்விட்டோடும் - தானேறிநின்றவல்லொற்
றைவிட்டுநீங்கும், யவ்வரினிய்யாம் - யகரமுதல்மொழிவந்து பு
ணரின் உகரம் இகரமாகத்திரியும், முற்றுமற்று - முற்றுகரமும்
அந்தஇரண்டுவிதிகளையும்பெறும், ஒரோவழி -ஒரோரிடங்களிலெ
ன்றவாறு.

[உ-ம்,] நாகு -எஃகு-வரகு-கொக்கு-குரங்கு- தெள்கு -என
நிறுத்தி - அரிது-ஆன்றது- அருமை - ஆண்மை -எனவருவித்து,
நாகரிது-எஃகரிது -எ-ம்-நாகருமை-எஃகருமை - எனவும்- ஒட்டி
இருவழியும் உயிர்வந்துபுணரக்குற்றுகரங்கெட்டவாறும், இனிய
வற்றோடு - யாது- யாப்பு-எனவருவித்து நாகியாது-எஃகியாது
எ-ம்- நாகியாப்பு- எஃகியாப்பு - எனவும்ஒட்டி இருவழியும்யகரம்
வரஉகரம் இகரமாகத்திரிந்தவாறுங்காண்க. பிறவற்றொடுமிவ்வா
றே ஒட்டிக்கொள்க. இனி -கதவு-கனவு- என நிறுத்தி - அவ்வாறு
வருவித்து-கதவரிது- கனவரிது-கதவியாது-கனவியாது-எனவும்
கதவருமை - கனவருமை - கதவியாப்பு -கனவியாப்பு -எனவும்
ஒட்டி முற்றுகரமும்-ஒரோரிடத்து -அவ்வாறுமுடிந்தவாகாண்க
மெய்யென்னாமல் - ஒற்றென்றதனால் - குற்றியலுகரமோரோரி
டங்களில் - இசைவழியென்னுஞ்சூத்திரப்பொதுவிதி பெறுத
லுங்கொள்க. [வ - று,] தன்முடமாகத்தானழைப்பதுவே - இ
தில்-அழைப்பது - என்பதுகுற்றுகரமொழி - அதனோடேகாரஇ
டைச்சொல்வந்து - அழைப்பதேவெனமுடியவேண்டியது - வகர

உடம்படுமெய்பெற்று - அழைப்பதுவேனநின்றது, ஆறனுருமைக்கதுவுமாதுவும் - இதில் - ஆதுஎன்பதுகுற்றுகரமொழி அதனொடு உம் என்னும்இடைச்சொல்வந்து - ஆதும் எனமுடிய வேண்டியது -வகரஉடம்படுமெய்பெற்று- ஆதுவும் - எனநின்றது- பிறவுங்காண்க, உக்குமார் - ஓடும்- இய்யாம்- எனவும்- முற்றும்- அற்று-எனவும்- முடித்துக்கொள்க. (௯௪)

இயல்பினும்விதியினுநின்றவுயிர்முன், கசதபமிகும்விதவாதனமன்னே. *

இது - உயிரீற்றின் முன்வல்லினம் புணருமாறுஉணர்த்தத்தொடங்கி -உயர்திணைப்பெயர்பொதுப்பெயர்களுக்கு - எய்திய தன்மேற்சிறப்புவிதியும் - அஃறிணைப்பெயர்க்கும் வினைமுதலியவற்றிற்கும் - எய்தாததுஎய்துவித்தலுமுணர்த்திற்று - (இ-ள்.) இயல்பினும் - இயற்கையாகவாயினும், விதியினும்- செயற்கையாகவாயினும், நின்றவுயிர்முன் - நிலைமொழியாக நின்றஉயிரீற்றுமொழிகளுக்கு முன்னே, கசதபமிகும்-வருங்க சதபக்கள்மிக்கு முடியும், விதவாதனமன் -பின்பு எடுத்துச்சொல்லாதனவற்றுள்ளேபெரும்பாலும்; எ-று,

விதப்பு- பின்புகூறப்படுஞ்சிறப்புவிதி, [உ-ம்,] ஆடூஉக்குறியன் - ஆடூஉச்சிறியன்- தீயன் - பெரியன் - நம்பிக்கொற்றன் - எம்-சாத்திப்பெண்-எம்-தாராக்கடிது-எம்-ஒற்றைக்கை- வட்டக்கல்-தாழக்கோல்- எம்- முறையே-உயர்திணை- விரவுத்திணை- அஃறிணை என்னும் மூவகைப்பெயர்ச்சொல்முன் அல்வழியில்மிக்கன-இவற்றுள்- ஒற்றை-வட்ட- தாழ- என்பனவிதியீறு, ஆடூஉக்கை-செவி-தலை-புறம்-நம்பிப்பூ- காவிதிப்பூ-எட்டிப்பூ-எம்- விளக்கோடு-கடுக்காய்-ஆட்டுக்கபல-எம்-முறையே- உயர்திணைஅஃறிணைப்பெயர்ச்சொற்கள்முன் வேற்றுமையில்மிக்கன - ஆடிக்கொண்டான்- ஆடாக்கொண்டன்- ஆடூஉக்கொண்டான் - ஆடெனக்கொண்டான்- ஆடக்கொண்டான்- உண்பாக்குச்சென்றான் - - எம் - பூத்துக்காய்த்தது- பொள்ளெனப்பரந்தது- சாலப்பகைத்தது - எம் - இருளின்றிக்கண்டார்- பொருளன்றிக்காணார்-எம்- பல்வகைவினையெச்சங்களின் முன்மிக்கன, மற்றைச்சாதி - எம்- கடிக்கமலம்- எம்- சொன்றிக்குழிசி- எம்-கங்கைச்சடை- எம்- இடை- உரி- திசை- வடசொற்களின்முன் முறையேமிக்கன - பிறவுமன்ன.

விதவாதனபெரும்பாலுமிகுமெனவேவிதத்தன சிறுபான்மைமிகுமென வும்- விதவாதனசிறுபான்மை மிகாதெனவுங்கூறினாராயிற்று, அவைவருமாறு- தொக்கொற்று- துக்கொற்று- சாத்தா- தேவா - பூதா - என்பன - எவன்முன்வ ல்வினமியல்பொடுவிகற்பே - என்றவிதப்புவிதிபெறுமல்மிக்கேவந்தன, எரிக ை- குழந்தைகை- குழவிகை- மலைகிழவோன்- எம் - கூப்புகரம் - ஈட்டுதனம் - நாட்டுபுகழ் - எம் - இருவழியுப்பின்விதவாதன சிறுபான்மைமிகாவாயின - மன்- என்பது - மிகுதிப்பொருள்குறித்தஇடைச்சொல்லாதலால்- பெரும்பாலுமென ப்பொருளுரைக்கப்பட்டது, கசதப-மிகும்- எனமுடிக்க, (௰௫)

மரப்பெயர்முன்னரினமெல்லெழுத்து, வரப்பெறுனவுமு ளவேறுற்மைவழியே. ※

இது- உயிரீற்றுச்சிலமரப்பெயர்களுக்கு எய்தியதுஒருவழியி லக்கிப்பிறிதுவிதிகூறுகின்றது- (இ-ள்,) மரப்பெயர்முன்னர்- உ யிரீற்றுச்சிலமரப்பெயர்களின்முன், இனமெல்லெழுத்து- (வல் லினம்வந்துபுணரின்- மேற்கூறியபொதுவிதியால் இருவழியும்வ ல்லெழுத்துமிகாமல்) அவற்றிற்கு இனமாகியமெல்லெழுத்துக ள், வரப்பெறுனவுமுள வேற்றுமைவழி- மிகப்பெறுவனவுஞ்சில வுளவாம்வேற்றுமைச்சந்தியிலென்றவாறு.

[உ-ம்,]விளங்காய்-களங்கனி-மாங்கனி-செதிள்- தோல்-பூ- எனவரும்பிறவுமன்ன-யாங்கோடு- யாக்கோடு- காயாங்கோடு-கா யாக்கோடு-உகாங்கோடு- உகாக்கோடு - செதிள் தோல் - பூ-என மெல்லெழுத்தும்வல்லெழுத்தும்பெற்றுவிகற்பித்துவருதலுமை யிற்கொள்க - இனமெல்லெழுத்தும்என உம்மைகொடாததினு லே- பொதுவிதிக்குப்பொருந்தாமைகாண்க-வரப்பெறும்புண ர்ச்சிகளும்உள-எனமுடிக்க. (௰௬)

செய்யியவென்னும்வினையெச்சம்பல்வகைப்- பெயரினெ ச்சமுற்றுறனுருபே - யஃறிணைப்பன்மையம்மமுன் னியல் பே- ※

(இ-து,) உயிரீற்றிற்குத்தனித்தனி சிறப்புவிதிகூறத்தொடங்கி னாராதலால்- அகரஈற்றுச்சிலசொற்களுக்கு எய்தியதுவிலக்குகி ன்றது - இள் - செய்யியவென்னும் வினையெச்சம்- செய்யிய எ ன்ற இந்தவாய்பாட்டு அகரவீற்றுவினையெச்சமும், பல்வகைப் பெயரினெச்சம்- பலவகைப்பட்ட அகரவீற்றுப்பெயரெச்சங் களும், முற்று - பலவகைப்பட்ட அகரவீற்றுமுற்றுவினைச்சொ ற்களும், ஆறனுருபு- ஆறும்வேற்றுமை அகரஉருபும், அஃறிணை ப்பன்மை- அகரவீற்று அஃறிணைப்பன்மைப்பெயர்களும், அம் ம- இந்த அகரவீற்று இடைச்சொல்லும், (ஆகிய) முன்- இவற்றி ன்முன், இயல்பு-(வல்லினம்வந்துபுணரின்)மிகாமல்இயல்பாமெ

ன்றவாறு- பல்வகை யென்றதை-முற்றென்றஇடத்திலுங்கூட்டுக-
இச்சூத்திரத்தின் முதலிலும் ஈற்றிலும் அகரவீற்றுச்சொல்லைத்
தந்ததனாலே இடைநின்றனவும் அகரவீறென்பதும்,பல்வகையென்
றதனால்- வினையடிமுதலிய நான்கினும் பிறந்தபெயரெச்சமென்
பதும், அவ்வாறுபிறந்தமுற்றுவினைசொலென்பதும், முற்றெனவே
று கூறினமையால்- அஃறிணைப்பன்மைஎன்றது - பெயரென்ப
தும், பெறப்படும்.வினையடிநான்காவன- இயல்பாகியவினையடியொ
ன்றும்-மற்றப்பெயர்-இடை-உரி-அடியாகப்பிறந்தசெயற்கைவி
னையடிமூன்றுமாம். [உ-ம்,]உண்ணியகொண்டான்-சென்றான்-
தந்தான் - போயினான் - எனச்செய்தியவென்னும் வினையெச்ச
முன் இயல்பாயின. உண்டகுதிரை- உண்ணாநின்றகுதிரை- உண்
கின்றகுதிரை- உண்ணுநகுதிரை- செந்நாய்- தகர் - பன்றி- எம்-
கடைக்கணித்த- சித்திரித்த- வெளுத்த- சினவிய- உறுவிய- அம
ரிய - எம் - திண்ணென்ற-பொன்போன்ற - எம்-சான்ற - உற்ற-
எம் - நிறுத்தி- குதிரை- செந்நாய்- தகர்- பன்றி-எனவருவித்து-
கடைக்கணித்தகுதிரை- சித்திரித்தகுதிரை- எனமுறையே ஒட்டி
நால்வகைத்தெரிநிலைப்பெயரெச்சமுன்னும்,அமர்முகத்த- கடுங்
கண்ண- சிறிய- பெரிய - உள- இல-பல- சில- எம்- பொன்னன்
ன - எம் - கடிய - எம் - நிறுத்தி- குதிரை- செந்நாய் - தகர் - ப
ன்றி- எனவருவித்து- அவ்வாறேஒட்டி மூவகைப்பெயரெச்சக்கு
றிப்பின்முன்னும், இயல்பாயினவாறுகாண்க. இக்குறிப்பிற்கு இ
யற்கைவினையடியேலாததனாலே - மூவகையாயிற்று. உண்டன -
சென்றன- கரியன- எனநிறுத்தி- செந்நாய் - தகர்- பன்றி- என
வருவித்தொட்டிமுற்றின் முன்னியல்பாதல்காண்க. இனிஅன்சாரி
யைபெறாதஅகரவீற்றுப்பல்வகைமுற்றிற்கும்-பொருள்வேறுபா
டேயன்றிச்சொல்வேறுபாடின்மையால்-இப்பெயரெச்சஉதாரண
ங்களையேஉதாரணமாகக்கொள்க . வாழ்க- வாழிய- எனநிறுத்தி-
கொற்றா- சாத்தா- தேவா-பூதா- எனவருவித்தொட்டிவியங்கோ
ள்முற்றின்முன்இயல்பாதல்காண்க. முற்றின்முன் இயல்பாமெ
ன்றதனால்- அருத்தாபத்தியால் - இந்தவினைமுற்றுக்கள் வினையெ
ச்சமாகியுங்குறிப்புமுற்றுக்கள் பெயரெச்சமாகியும் நின்றபோதுவரு
ம்வல்லினம் இயல்பாதலுங்கொள்க. உ-ம், உண்டகண்டன
இது - உண்டுகண்டனஎனநிற்றலால்- வினைமுற்றுவினையெச்
சமாயிற்று- அமர்முகத்தகலக்கின - இது - அமர்முகத்தவா
கிக்கலக்கின-எனநிற்றலால் - குறிப்புமுற்று

வினையெச்சமாயிற்று. அமர்முகத்தகுதிரைவந்தன - இது - அமர்முகத்தவாகியகுதிரைவந்தன எனநிற்றலால் - குறிப்புமுற்றுப்பெயரெச்சமாயிற்று. இவற்றின்முன்வல்லெழுத்து இயல்பாதல்காண்க. தனகைகள் - தனசெவிகள் - தனதாள்கள் - தனபுயங்கள் - என ஆறாம்வேற்றுமை அகரஉருபின்முன் இயல்பாயின, பலகுதிரை - சிலகுதிரை - செந்நாய் - தகர் - பன்றி - எம் - பலகொடுத்தான் - சிலகொடுத்தான் - செய்தான் - தந்தான் - படைத்தான் - எனவும் - இருவழியும் அஃறிணைப்பன்மைப்பெயர்முன் இயல்பாயின. பிறவற்றோடுமொட்டுக - அம்மகொற்றா - அம்மசாத்தா - தேவா - பூதா - எனஉரையசைஇடைச்சொல்முன் இயல்பாயின - பிறவுமன்ன.

ஒருசொல்லேயேபலஇடத்துங்காட்டியதென்னெனின் - இங்கேகாட்டியபலவற்றுள் - பல - என்னும்ஒருசொல் - பெயரெச்சக்குறிப்பாகியும், குறிப்புவினைமுற்றாகியும், குறிப்புமுற்றெச்சமாகுப் பெயரெச்சக்குறிப்பாகியும், வினையெச்சக்குறிப்பாகியும் - குறிப்புவினையாலணையும் அஃறிணைப்பன்மைப்பெயராகியும், பொருளாதியாறினுள் - பண்புகாரணமாகவரும் அஃறிணைப்பன்மைப்பெயராகியும், அறுவகைப்பட்டுப்பொருள் நோக்கமுதலியவற்றால் - இன்னதென்றுதெரியப்படுமாதலாலென்க. இந்தவிகற்பங்களெல்லாஞ்சொல்லதிகாரத்துட்காண்க - இனியுரையிற்கோடலால - அம்மஎன்னும் இடைச்சொல் - அம்மாகொற்றாஎனநீளினும் வல்லெழுத்து இயல்பாதலும், தணகடல் - குடகடல் - வடகடல் - வடதலை - எனவிதி அகரவீற்றுப்பெயர்ச்சொல்முன் இயல்பாதலுங்கொள்க. வல்லெழுத்து - இயல்பாமெனமுடித்துக்கொள்க. (௭)

வாழியவென்பதனீற்றினுயிர்மெய், யேகலுமுரித்தஃதேகினு மியல்பே. *

இது - நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தலும் - வருமொழிக்குஎய்தியதுபிறழாமற்காத்தலுமுணர்த்திற்று. (இ-ள்.) வாழியவென்பதன் - வாழிய என்னும்வியங்கோள் முற்றுச்சொல்லினது, ஈற்றினுயிர்மெய் - இறுதியிலேநின்றயகர உயிர்மெய்யானது, ஏகலுமுரித்து - நீங்கலும்உரியதாம், அஃதேகினுமியல்பு - அதுநீங்கினும் அதின்முன் வந்தவல்லெழுத்துப்பொதுவிதியால்மிகாமல் சிறப்புவிதியிற்சொன்னஇயல்பே ஆமென்றவாறு.

[உ-ம்,] வாழிகொற்றா - சாத்தா - தேவா - பூதா - என - வாழியகொற்றாஎன்பது ஈற்றுயிர் மெய்குறைந்து வல்லெழுத்துஇயல்பாய்முடிந்தவாறுகாண்க. ஏகலுமுரித்து எனமுடித்து - பின் அஃது எனச்சுட்டிக்கூறினதினாலும், செய்யுளிறுதியிலே - வாழி - எனமுடிந்துநிற்றலாலும், இது புணர்ச்சிவிகாரமன்றெனவும் - கடைக்குறைந்தசெய்யுள் விகாரமெனவும் - இது முற்றுவினைச்சொல்லெனவுங்காண்க - இனியிவ்வாறுகூறவேயிவ்வாய்பாடு

கொண்டவினையெச்சச்சொல் ஒன்றுளதென்பதும், அதுஇவ்வாறு குறைந்து நில்லாதென்பதும், பெறப்பட்டது.ஈறுமுரித்து-வல்லெழுத்து இயல்பு-என இருமுடிபாக்குக. (௰௮)

சாவவென்மொழியீற்றுயிர்மெய்சாதலும்விதி. *

இதுவுமது- (இ-ள்) சாவவென்மொழியீற்று-சாவவென்னுஞ்செய-வென்வாய்பாட்டுவினையெச்சத்து இறுதியிலே நின்ற உயிர்மெய்சாதலும்விதி- உயிர்மெய்கெட்டுப்புணர்தலும் இலக்கணமாமென்றவாறு.

[உ-ம்,] சாக்குத்தினான்-எனவரும்- இப்புணர்ச்சி- சாவக்குத்தினான்என்பதுபோலச்சிறந்திலாமையால் - இழிவுசிறப்பு உம்மைகொடுத்துச்சாதலுமென்றும்-ஒரோரிடங்களிற்குறைந்துவழங்கலால்விதி-என்றுங்கூறினார்.சாதலும்விதியெனமுற்றிற்று.(௰௯)

பலசிலவெனுமிவைதம்முன்றாம்வரின்,இயல்புமிகலுமகரமேக,லகரம்றகரமாகலும்பிறவரின், அகரம்விகற்பமாகலுமுளபிற *

இது-வருமொழிக்குஎய்திய துபிறழாமற்காத்தலும்,அதன்மேற்சிறப்புவிதியும்- நிலைமொழிக்குஎய்தாததனைஎய்துவித்தலுமுணர்த்திற்று, மிகுதல்செய்யியமென்னுஞ்சூத்திரத்தால்விலக்கி இங்கேசொல்லுதலால்- சிறப்புவிதியாயிற்று. (இ-ள்,) பலசிலவெனுமிவை- இவ்விரண்டுசொற்களும், தம்முன்றாம்வரின் - அவற்றின்முன் அவையேவந்துபுணருமாயின், இயல்புமிகலும்- இயல்பாயிருத்தலும்மிகுமுடிதலும், அகரமேகலகரம் றகரமாகலும் - இறுதியில்நின்ற அகரம் நீங்கநின்ற லகரஒற்று றகரவொற்றாகத்திரிதலும், பிறவரின்- (இவ்விரண்டுசொல்முன்னும்) பிறசொற்கள்வந்துபுணரின், அகரம்விகற்பமாகலுமுள - அந்த அகரம் நிற்பதும்-நீங்குவதுமாகி விகற்பித்தலுமுளவாமென்றவாறு.

[உ-ம்]பலபல - சிலசில- எனவியல்பாயின.பலப்பல-சிலச்சில எனமிக்கன.பற்பல-சிற்சில- எனஅகரமேகலகரம்றகரமாயிற்று. பலகலை-பல்கலை-பலசாலை- பல்சாலை- பலதாழிசை- பஃறாழிசை,பலபடை-பல்படை,பலஞானம்-பல்ஞானம்,பலநாள்-பன்னாள்,பலமணி-பன்மணி, பலயானை- பல்யானை, பலவளை - பல்வளை,பலவணி-பல்லணி,பலவாயம்-பல்லாயம்,எனப்பிறவரஅகரம்விகற்பமாயிற்று. சிலவென்பதனொடும்இவ்வாறேஒட்டிக்கொள்க.

இனிப்பிறவென்றதினாலே- பல்பல-சில்சில-எனஅகரம்நீங்க லகரம்றகரமாகாது சிறுபான்மைவருதலும், பலா அஞ்சிலா அமென்மனார் புலவர்-எனச்செய்யுளில்-ஒரோரிடத்துப்பலவென்பதன் முன்சிலவென்பது வந்துபுணர்ந்தஇடத்து இறுதி அகரம்நீண்டு அளபெடுத்துமகரஒற்றுப்பெற்று முடிதலும் -

இன்னும் அகரவீற்றுப்புணர்ச்சியுள் அடங்காதன உளவாயின் அவை யுங்கொள்க. அகரம் நீங்கநின்றபலவாயும் முதலியன - நன்மை-வன்மை என்பன போல- லகரமெய்யீற்றுப்பண்புப்பகுதியாய் - நின்றுவருமொழியொடு- புணர்ந்த தன்றோ அவற்றை அகர ஈறுகவைத்துப்புணர்த்தது என்னெனின்- அந்தப் பண்புப்பகுதி பன்மை- சின்மை-எனப்பகுதிப்பொருள் விகுதியோடாயினும்- பலர்-பல- சிலர்-சில எனவிகுதிப்பொருள் விகுதியோடாயினும் அன்றித்தனித்து நில்லாத ஒருமைப்பாடுபற்றி அகரவீற்றனவாகவைத்துப்புணர்த்தனரென்க - இதுவொன்றி முடித்தலென்னும் உத்திக்கு இனம். பிறவரின் அகரம் விகற்பமாமென்றமாத்திரமே பண்புப்பகாப்பதம் விளங்கிநிற்றலானும் - தம்முன்றும்வரின் எனவே அடுக்கு என்பது தோன்றலானும் இவ்விதியல்வழிக்கேயென்பது-கூறாதேயமையுமென்க. எண்ணும்மையோடு கூடிநின்ற நான்கையுங்கூட்டி ஊவென முடித்துக்கொள்க. (உ௰)

அல்வழியாமாமியாமுற்றுமுன்மிகா ❊

இது - ஆகார ஈற்றுச்சொற்களிற்சிலவற்றிற்கு எய்தியது - ஒருபக்கம்விலக்குகின்றது. (இ-ள்.) அல்வழி - அல்வழிச்சந்தியில், ஆமாமியா- ஆவும்- மாவும்-மியாஎன்னும் இடைச்சொல்லும், முற்று- ஆகாரஈற்றுமுற்று வினைச்சொல்லுமாகிய, முன்- இந்தநான்கு சொற்களின் முன்னும், மிகா - (வல்லினம்வந்துபுணரின்) அவைமிக்குமுடியாவாம். எ-று.

[உ-ம்,] ஆகுறிது- மாகுறிது - சிறிது - தீது - பெரிது -எம்- கேண்மியாசொற்று- சாத்தா- தேவா-பூதா - எம் - உண்ணுகுதிரைகள்- செந்நாய்கள் - தகர்கள் - பன்றிகள் - எம் - வரும், ஆமா என்றமாத்திரமே-காட்டுப்பசுவெனவும்பொருள்பட இரட்டுறமொழிந்ததினாலே - ஆமாகுறிது-சிறிது- தீது-பெரிது- எனமிகாமையும், முற்றுமுன்மிகா எனவே அருத்தாபத்தியால்-அந்தவினையாலணையும்பெயர்முன்- உண்ணகிடந்தன-சென்றன-தந்தன- போயினஎனமிகாமையும், அவ்வினைமுற்று வினையெச்சமாயவற்றின் முன்னும் அவ்வாறு மிகாமையுங்கொள்க. உண்ணகிடந்தன-என்றபோது வினையாலணையும் பெயராயின்-உண்ணுதனவாகிய குதிரைகள் கிடந்தன-எனவும், வினைமுற்று வினையெச்சமாயின் - உண்ணுதனவாய்க்கிடந்தன - எம்- விரியும், உண்ணக்குதிரைகள்- உண்ணக்கிடந்தன- எனப்பொதுவிதியால் மிகுமாயின்- ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சமும்- செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சமுமாமென்க. உண்ணக்கிடந்தன- என்பதற்கு உண்டுகிடந்தன- என்பதுபொருள். வல்லினம்மிகாவெனமுடித்துக்கொள்க. (உக)

குறியதன்கீழாக் குறுகலுமதனோ டுகரமேற்றலுமியல்புமாந் தூக்கின். ❊

(இ-து,) நிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தலும் ஆங்கு

வருவதோரையமறுத்தலு முணர்த்திற்று. (இ-ள்,) குறியதன்கீழாக் குற்றெழுத்தின்பின்னின்ற ஆகாரம், குறுகலும்- குறுகி அகரமாய் நிற்றலும், அதனோடு- அக்குறுகுதலுடனே, உகரமேற்றலும் உகரச்சாரியைபெறுதலும், இயல்புமாந்தூக்கின்- அந்தஇரண்டுமின்றித் தன்னியல்பாய்நிற்றலுமாகிய மூன்றுவிதிகளுமாம்செய்யுளிடத்தென்றவாறு- எனவே- வழக்கிடத்துஇரண்டும் ஒன்றுமாமென்றாயிற்று. [உ-ம்,] சுறா- சுறமறிவன துறையெல்லாம்- நிலா- நிலவிரிகானல்வாய்- எ-ம். இறா- இறவுப்புறத்தன்ன- சுறா- சுறவுக்கோட்டன்ன- நிலா- மருவிமலப்செய்யுமோ நிலவு- எ-ம். நிலாவணங்குவெண்மணன்மேலின்று- நெடியகழியுமிரா- எனவுஞ்செய்யுளிடத்து மூன்றுவிதிகளும் முறையேவருதல்காண்க. இங்கே இயல்பு ஐயமறுத்தற்கு உரைத்தாரெனக்கொள்க. உதித்ததுநிலவு- நிலா- கண்டேன்கனவு- கனா- எனக்குறுகி உகரமேற்றலும்- தன்னியல்புமாகிய இரண்டும், நரா- மிடா- என்பன தன்னியல்பு ஒன்றும்- வழக்கிடத்துவந்தனபிறவுமன்ன. நறவங்கண்ணிநற்போர்ச்செம்பியன்- குரவநீடிய கொன்றையங்கானல்- என்பன ஆகாரங்குறுகியவழி அம்முச்சாரியைபெறுதலுமாயிற்கொள்க. இந்தவிகாரங்கள் அல்வழிவேற்றுமைப்புணர்ச்சியால் வந்தன அல்லவென்று ஐயமறுத்தற்குக்கூறப்பட்டனவென்க. (உஉ)

அன்றியின்றியென் வினையெஞ்சிகரந், தொடர்பினுளுகரமாய்வரினியல்பே.

(இ-து) இகரஈற்று வினையெச்சக்குறிப்பிற்கு- எய்தாததெய்துவித்தலும்- அதன்முன்வரும் வல்லினத்திற்கு எய்தியதுவிலக்கலுமுணர்த்திற்று- (இ-ள்,) அன்றியின்றியென்வினையெஞ்சிகரம்- இந்த இரண்டு வினையெச்சக்குறிப்பினது இறுதிஇகரமானது, தொடர்பினுள்- செய்யுளிலே, உகரமாய்வரின்- உகரமாகத்திரிந்துவருமாயின், இயல்பு- (அதன்முன்வரும்வல்லெழுத்து) மிகாதுஇயல்பாமென்றவாறு. உகரமாய்வரினெனவே- உகரமாகத்திரிதல் உடன்பாடென்பதும்- அது நிச்சயமன்றென்பதுமாயிற்று. [உ-ம்,] நாளன்றுபோகிப் புள்ளிடைதட்பப்பதனன்றுபுக்குத்திறனன்றுமொழியினும்வறிதுபெயர்குநரல்லர்- எ-ம். விண்ணின்றுபொய்ப்பின்- உப்பின்றுபுற்கையுண்கமாகொற்கையோனே- எ-ம். காண்க. உகரமாகத்திரியாவிடின் - நாளன்றிப்போகி- பதனன்றிப்புக்கு- விண்ணின்றிப்பொய்ப்பின- உப்பின்றிப்பு

றலைகையுண்டை- என வல்லெழுத்து மிகுமெனக்காண்க. வலியெ
ழுத்தியல்பு எனமுடிக்க. (உரு)

உரிவரினாழியினீற்றுயிர்மெய்கெட,மருவும்டகரமுரியின்வழி
யே,யகரவுயிர்மெயாமேற்பனவரினே. *

இது-எய்திய தவிலக்கிப்பிறிதுவிதிகூறுகின்றது- (இ-ள்.)
உரிவரின் - உரியென்னும் அளவுப்பெயர்பின்வருமாயின், நாழி
யினீற்றுயிர்மெய்கெட- நிலைமொழியாக நின்றநாழியென்னும்
அளவுப்பெயரினதுஈற்றிலேநின்ற உயிர்மெய் கெட்டுப்போக,
மருவும்டகரம் -அவ்விடத்திலே- டகரஒற்றுவரும், உரியின்வழி-
உரியென்பதுநிலைமொழியாகநிற்க அதன்பின், ஏற்பனவரின் -
அதற்குப்பொருந்திய வருமொழிகள்வந்து புணருமாயின், யக
ரவுயிர்மெய்யாம-யகரஉயிர்மெய்வருமென்றவாறு.[உ-ம்.]நாடு
ரி-எம- உரியவுப்பு-உரியப்பயறு-உரியமிளகு- உரியவரகு-எனவு
ம்வரும் - ஏற்பனவரினெனவே ஏலாதனவரின் -உரியரிசி- உரியா
ழாக்கு- உரியெண்ணெய் - என இச்சிறப்பு விதிபெறாமல் - பொ
துவிதியேபெறுமென்க. நாடுரியென்பது - பழையனகழிதலாக
வழங்காதாயிற்று. அதுபுதியனபுகுதலாக - நாவுரிஎன இக்காலத்
துவழங்குகின்றது. டகரம்மருவும் -யகரவுயிர்மெய்ஆம் - என இ
ருமுடிபாக முடித்துக்கொள்க (உச)

சுவைப்புளிமுன்னினமென்மையுந்தோன்றும். *

இது- எய்தியதன்மேற்சிறப்புவிதியுணர்த்திற்று. (இ-ள்,)
சுவைப்புளிமுன் -(அறுசுவையுளொன்றைபுணர்த்தும்) புளியென்
னும்பெயர்முன்,இனமென்மையுந்தோன்றும்- (வல்லினம் - வந்
துபுணரின்அந்தவல்லினமிகுதலேயன்றி)அவற்றிற்குஇனமாகிய
மெல்லினமும் ஒரோரிடங்களில் மிகும்- எ - று.

[உ-ம்,] புளிங்கறி-புளிஞ்சோறு புளிந்தயிர்-புளிம்பாளிதம்-
எனவரும்-இப்புணர்ச்சி- மிகுதிபற்றிப்-புளிப்பாகியகறியெனவு
ம்- குறைவுபற்றிப்புளிப்பையுடையகறியெனவும்விரிதலின் அல்
வழி வேற்றுமை யிரண்டிற்கும் பொதுப்படக்கூறினாரெனக்கா
ண்க. மென்மையுமென்ற இறந்ததுதழீஇய இழிவுசிறப்புஉம்
மையால்- புளிக்கறியெனப்பொதுவிதியால் வரும்வல்லெழுத்து
மிடலேசிறப்புடைத்தெனக்கொள்க. (யரு)

அல்வழிஇஐமுன்னராயி,னியல்புமிகலும்விகற்பமுமாகும். *

(இ-அ,) இகரஐகாரஈற்று அஃறிணைப்பெயர்முன் வரும்வ
ல்லினத்திற்கு எய்தியது ஒருபக்கம்விலக்கலும்- எய்தியது பிற

ழாமற்காத்தலும்- எய்தியதுவிலக்கலுடன்விலக்காமையுமுணர்த்திற்று. (இ-ள்,) அல்வழி ஐமுன்னராயின்- அல்வழிச்சந்தியில் இர ஐகாரஈற்று அஃறிணைப்பெயர்முன் வல்லினம்வந்து புணருமாயின், இயல்புமிகலும்விகற்பமுமாகும்- இயல்பாதலும்- பொதுவிதியால் மிகுந்தும்- ஒன்றிற்கே ஒருகால்மிகுந்து- ஒருகால்மிகாது விகற்பித்தும்-புணருமென்றவாறு.

இவ்விதி-மிகுதியொன்றுமே பொதுச்சூத்திரத்தால் அமைந்துகிடந்த அஃறிணைப்பெயர்க்கெனக்கொள்க - ஒப்பின்முடித்தலென்னும் உத்தியால் ஐகாரஈறுமுடன்கூறினர். [உ-ம்,] பருத்தி-ஒதி - யானை- குதிரை- எனநிறுத்தி-குறிது-சிறிது- தீது-பெரிது - எனவருவித்து ஒட்டியியல்பாதல்காண்க. ஆடித்திங்கள் -சித்திரைத்திங்கள் -எனமிக்கன. கிளிகுறிது- கிளிக்குறிது- தினைகுறிது- தினைக்குறிது- எனவிகற்பித்தன- பிறவுமன்ன-இவ்விதிமூன்றினுள்மிகுதி-எய்தியது இகந்துபடாமற்கூறினர் - (இகந்துபடுதல-பிறழுதல்.) (உசு)

ஆமுன்பகரவீயனைத்தும்வரக்குறுகு,மேலனவல்வழியியல்பாகும்மே. *

(இ-து,) ஈகாரங்குறுகுமெனஎய்தாததனைய்துவித்தலும் வரும் வல்லினத்திற்குஎய்தியது பிறழாமற்காத்தலுமுணர்த்திற்று-

இ-ள், ஆமுன்பகரவீ - ஆவென்னுஞ்சொல்லின் பின்னின்ற பகரஒற்றின் மேலேறியஈகாரமானது, அனைத்தும்வரக்குறுகும்- (இருவழியிலும்) நாற்கணங்களும் வந்துபுணரக்குறுகி இகரமாய்நிற்கும், மேலன- மேற்கூறிய விதிமூன்றினுள், அல்வழி-(அல்வழியியல்புபோல) அல்வழிச்சந்தியில், இயல்பாகும்- இயல்புவிதியைப்பெறுமென்றவாறு.

இதிற்பகரவீ - என்றதும்- 'வருஞ்சூத்திரத்திற்பய்வீ-என்பதும்- இடக்கரடக்கல், இடக்கரடக்கல்என்றது-மறைத்துச்சொல்லுஞ்சொல்,இருமொழியைநிலைமொழியாகவைத்துப்புணர்த்த-செயற்கைஇகரஈறுதலால் எய்தியது பிறழாமல் இயல்பாகுமென்றார்.

[உ-ம்,] ஆப்பியரிது - ஆப்பிகுளிரும்- ஆப்பிநன்று- ஆப்பிவலிது- எனக்குறுகுதலும்வல்லெழுத்தியல்பாதலுங்காண்க-அல்வழியியல்பாகுமெனவே-ஆப்பிக்குளிர்ச்சி-ஆப்பிச்செறிவு-ஆப்பித்திரட்சி- ஆப்பிப்பொலிவு எனவேற்றுமையில் பொதுவிதியா

ல் மிக்குமுடியுமெனக்காண்க. பகரவீறுறும்- வல்லெழுத்திய ல்பாம் எனமுடிக்க. (உஎ)

பவ்வீ நீமீமுன்னரல்வழி, யியல்பாம்வலிமெலிமிக லுமா மீக்கே. *

(இ-ளு,) இம்மூன்றுஈகார ஈற்றுப்பெயர்முன் வரும்வல்லி னத்திற்கு ஒருவழியெய்திய துவிலக்கலும்- இவற்றுள்மீஎன்பதன் முன்வரும் வல்லினத்திற்கு எய்தியது பிறழாமற்காத்தலும்- எய் திய துவிலக்கிப்பிறிது விதியுங்கூறுகின்றது. (இ-ள்,) பவ்வீ நீமீ முன்னர்- பகரஈகாரமும்நீயும் மீயுமாகிய இந்தமூன்றுபெயர்க் குமுன, அல்வழியியல்பாம் - அல்வழியில்வல்லினம்வந்துபுணரி ன்மிகாவாம்,மீக்கு- மீஎன்னுஞ்சொல்லுக்கு, வலிமெலிமிக லுமா ம்-வல்லெழுத்தும்மெல்லெழுத்துமிக்குமுடியவும்பெறும், எறு.

[உ-ம்,] பீகுறிது- சிறிது- தீது - பெரிது - எம். நீகுறியை - சிறியை- தீயை- பெரியை- எம்- மீகண்- எம். இயல்பாயின-மீக் கூற்று- மீக்கொள்- மீத்தோல் - எனமிக்கது, மீந்தோல்-எனமெ லிமிகுந்தது- பிறவும் ஏற்றபடிவருமாயிற்கொள்க- மீகண்எம்ப து-கண்ணினதுமேலிடம்எனமாறிநின்றதிறலேஇலக்கணப்போ லியாய் அல்வழியாயிற்று - மீக்கூற்று என்பது - புகழ், அதுமே லாயசொல்லாற்பிறந்த புகழென்னுமேம்பாடெனப் பொருடந் துநிற்றலால் - பண்புத்தொகைப் புறத்துப்பிறந்தஅன்மொழித் தொகை. மீக்கொள்என்பது - மேற்போர்வை, அது-தேகத்தின் மேற்கொள்ளுதலையுடைய போர்வையெனப்பொருடந்துநிற்றலி ன் ஏழாம்வேற்றுமைத்தொகைப்புறத்துப்பிறந்தஅன்மொழித் தொகை. மீந்தோல்என்பது- மேற்றோல் அதுமேலாய்த்தோலெ னப்பொருடருதலிற்பண்புத்தொகை. இது - இக்காலத்துப்பீ ந்தோலெனமருவிற்று. நீயென்பதன்முன்வல்லினமியல்பாதல் - பொதுப்பெயருயர்திணைப்பெயர்களீற்றுமெய்யென்னுஞ்சூத்தி ரத்தாலமையாதோவெனின்- அமையாதென்க-என்னை-அல்வழிக் கண் -நீயெனவ்யியீறாகியும்- வேற்றுமைக்கண்- நின்னென ஒற்றீ றாகியும்- நிற்பதொன்றாகலினென்க- வல்லெழுத்தியல்பாம்- வலி மெலிமிக லுமாமெனமுடிக்க. (உஅ)

மூன்றாறுருபெண்வினைத்தொகைசுட்டீ, றாகுமுகர முன்னரி யல்பாம். *

(இ-ளு,) மூன்றுகரவீற்றுட்சில வற்றிற்குமுன் வரும்வலலி

னத்திற்கு எய்தியது விலக்குகின்றது. (இ-ள்,) மூன்றாறுருபு-முற்றுகரவீற்றுமூன்றாம்வேற்றுமையுருபும்ஆறாம்வேற்றுமையுருபும், எண்- இயல்பாகியும் விகாரமாகியும் வரும் எண்ணுப்பெயரும், வினைத்தொகை- வினைத்தொகைச்சொல்லும், சுட்டு- சுட்டுப்பெயர்களுமாகிய இவற்றிற்கு, ஈறாகுமுகரமுன்னரியல்பாம் - ஈறாகிவருமுற்றுகரத்தின் முன்வல்லினம் வந்து புணரின்மிகாது இயல்பாகுமென்றவாறு.

[உ-ம்,] சாத்தனொடுகொண்டான்- சென்றான்-தந்தான்- போயினான்- எம்- சாத்தனதுகை-செவி-தலை-புறம் -எம் - ஈருகை - ஒருகை- இருகை- அறுகை-செவி- தலை-புறம்- எம்- அடுகளிறு- அடுசேனை-அடுதானை-அடுபடை - எம் - அது - இது - உது- குறிது - சிறிது- தீது- பெரிது-எம்- அதுகண்டான்-செகுத்தான்- தந்தான்- படைத்தான்- எம்- முறையேகாண்க. உதுகாண உதுக்காண எனவிகற்பித்துவரப்பெறுமெனின்- அது இரண்டாம் வேற்றுமைப்புறனடைச்சூத்திரத்து அன்னபிறவுமென்பதினாலமையுமென்க. ([illegible])

அதுமுன்வருமன்றான்றாந்துக்கின். *

(இ-து,) எய்தாததுஎய்துவிக்கின்றது-(இ-ள்,)அதுமுன்வருமன்று- அதுவென்னுஞ்சுட்டுப்பெயர்முன்வரும் அன்றென்னும் வினைக்குறிப்புச்சொல், ஆன்றாந்துக்கின்- ஆன்றெனமுதல்நீளுஞ்செய்யுளகத்தென்றவாறு.

[உ-ம்,] அதான்றம்மவெண்பாவிறே- எனவரும். ஆன்றேயாமெனத் தேற்றேகாரங்கொடாமையால்- அதுவன்று - அதன்று- என வருவனவுங்கொள்க. இவ்விதி - மற்றை-இது-உது-என்பனவற்றிற்கு இல்லையென்பதை - அது முன்வருமன்றெனப்பிரித்ததனானுணர்க. (௬௭)

வன்றொடரல்லன முன்மிகாவல்வழி. *

(இ-து,)குற்றுகரவீற்றுட்சிலவற்றிற்கு எய்தியதுவிலக்குகின்றது-(இ-ள்,) வன்றொடரல்லன முன்-வன்றொடர்க்குற்றுகரமொழிந்தமற்ற ஐந்தொடர்க்குற்றுகரமொழி முன்னும், மிகா அல்வழி- அல்வழியில்வரும்வல்லினமிகாவாமென்றவாறு.

[உ-ம்,] நாகுகடிது- எஃகுகடிது-வரகுகடிது-குரங்குகடிது- தெள்குகடிது- சிறிது-தீது - பெரிது- எம் - ஏகுயால் - அஃது பிணி-பொருதுசென்றான் - அரிந்துதந்தான் - எய்துகொன்றான்-எம் - இயல்பாயின- பிறவுமன்ன. ([illegible])

இடைத்தொடராய்த்தொடரொற்றிடையின், மிகாநெடிலு
யிர்த்தொடர்முன்மிகாவேற்றுமை. *

இதுவுமது. [இ-ள்,] இடை- முன்- இந்தநான்குகுற்றுகர மொழிமுன்னும், மிகாவேற்றுமை- வேற்றுமைக்கண் வல்லினம் வந்துபுணரின் மிகாவாமென்றவாறு.

[உ-ம்,] தெள்குகடுமை-எஃகுகடுமை-நாகுகடுமை வரகுகடுமை- சிறுமை- தீமை- பெருமை- எனவரும். தெள்கின்கடுமை- எஃகின் கடுமை- எனச்சாரியைகூட்டி வல்லெழுத்துமிகாமைக்கு உதாரணங்காட்டுவாருமுளர் - அதுகூடாமைக்கு அவர்காட்டிய -வரகுகதிரொன்னுமுதாரணமே சான்றாதலுணர்க - சான்று-சாட்சி, நாக்குஎன்பது ஒற்றிடையின் மிக்கநெடிற்றொடரொன்றலா நோக்கி நாகு-என்பது- ஒற்றிடையின்மிகாநெடிலென்றார். (௬௨)

நெடிலோடுயிர்த் தொடர்க்குற்றுகரங்களுட், டறவொற்றிரட்
டும்வேற்றுமைமிகவே. *

இது மேற்கூறிய நிலைமொழிக்கு ஓர் புறநடையாக எய்தாதது எய்துவித்தலும் எய்தியதின்மேற் சிறப்புவிதியுங்கூறுகின்றது, (இ-ள்.) நெடிலோடுயிர்த்தொடர்க்குற்றுகரங்களுள்- நெடில்தொடரும் உயிர்த்தொடருமாகிய குற்றுகரமொழிகளுள், டறவொற்று- (அவ்வுகரப்பற்றுக்கோடாகிய வல்லொற்று ஆறினுள்) டகரறகரவொற்றுக்களிரண்டும், இரட்டும்வேற்றுமைமிக- பெரும்பாலும் வேற்றுமைச்சந்தியில் இரட்டித்துநிற்குமென்றவாறு.

வருமொழியை யெடுத்துச்சொல்லாததினாலே நாற்கணமுங்கொள்க. [உ-ம்] ஆட்டுக்கால்- பாற்றுக்கால்-முருட்டுக்கால்- முயிற்றுக்கால்- செவி- தலை- புறம்- ஞாற்சி- நிறம்- மயிர்- யாப்பு- வன்மை- அடி - என்பனவற்றோடுமொட்டி வேற்றுமையில் - டறவொற்று இரட்டித்து நிற்றல்காண்க. (பாறு - பருந்து, முயிறு- மந்தி,) இவ்விரண்டொற்றும் பெரும்பாலும் வேற்றுமைக்கண் இரட்டுமெனவே. சிறுபான்மை - வேற்றுமைக்கண் இரட்டாமையும் - சிறுபான்மை அல்வழிச்சந்தியில்இரட்டுதலும் - சிறுபான்மை பிறவொற்றுக்கள்இரட்டுதலுங்கொள்க. வ - று, காவிரிபுரக்குநாடுகிழவோனே - காடகமிறந்தார்க்கே - கறைமிடறணியலு மணிந்தன்றக்கறை - எனவருவனவற்றுள் - நாடுகிழவோன்-காடகம்- கறைமிடறணியல்- எனவேற்றுமைச்சந்தியில்- டறவொற்றுஇரட்டாமைகாண்க. காட்டரண்- களிற்றியானை - என்பன-காடாகியஅரண்-களிறாகியயானை- என அல்வழிச்சந்தியிற்சிறு

டானன்மையிரட்டின. வெருக்குக்கண்வெங்கூனை - எருத்துக்கா ல் - எ-ம். எருத்துமாடு - எ-ம். இருவழியுங்கோரநகரவொற்றுக்கனி ரட்டின. பிறவுமன்ன. ([illegible])

மென்றொடர்மொழியுட்சிலவேற்றுமையிற், றம்மினவன்றொ டராகாமன்னே. *

இது - மென்றொடர்க்குற்றுகரமொழிகளுள்ளே சில நிலை மொழிகளுக்கு எய்தாதது எய்துவித்தலும் எய்தியதன்மேற்சிற ப்புவிதியும் உணர்த்துகிறது. (இ-ள்.) மென்றொடர்மொழியுள்-மெ ன்றொடர்க்குற்றுகரமொழிகளுள், வேற்றுமையில்தம்மினவன் றொடர்சில - வேற்றுமைச்சந்தியில் தம்இனவன்றொடர்க்குற்று கரமொழிகளாகத்திரிவன சிலவாம், ஆகாமன் - ஆகாதனபலவா மென்றவாறு.

[உ-ம்,] மருந்து- மருத்துப்பை, கரும்பு-கருப்புநாண், கரும் பு- கருப்புவில், கன்று- கற்று, குரங்கு-குரக்குக்கால், கழஞ்சு- கழச்சுக்கோல், எண்கு - எட்குக்குட்டி - பாம்பு - பாப்புக்கால், எனவரும் - வண்டுக்கால் - பந்துத்திரட்சி. ஞெண்டுக்கால்-குர மபிற்சான்றோர் - பறம்பிற்பாரி-என்றாற்போல்வன-வன்றொடரா காதன. சிலவன்றொடராமெனவே-ஆகாதன - பலவென்பது தா மேவந்தது இவையவும் - மன் என்ற மிகையாலே - என்பு-எற்புட ம்பு, குரங்கு-குரக்குமனம், என அல்வழியிலுஞ்சிறுபான்மைவ ன்றொடராதலும், குரங்குக்குட்டி-குரக்குக்குட்டி-பாம்புத்தோ ல் - பாப்புத்தோல் - என்வேற்றுமையில் விகற்பித்துவருதலும், அன்புத்தளை - அற்புத்தளை - என இது- அன்பாலாகியதளை- அன் பாகியதளை- எனவுருதலால்அல்வழிவேற்றுமையிரண்டிலும் ஒன் றுதானேவிகற்பித்துவருதலுங்கொள்க. பிறவுமன்ன - இச்சூத்தி ரத்தில் - சிலஎன்றதினால் - பலவென்பதும்,ஆகா - என்றதினால் - ஆவன, என்பதும், தாமேவந்தமையத்தன ஆதலால்- ஆவனசில- ஆகாபல - என முடித்துக்கொள்க. ([illegible])

ஐயீற்றுடைக்குற்றுகரமுமுளவே. *

இதுவுமேலைநிலைமொழிக்கு எய்தாதது எய்துவித்தலும்எய் தியதன்மேற்சிறப்புவிதியுமுணர்த்துகின்றது,(இ-ள்.) ஐகாரச்சா ரியையையபிறகிலேபெற்றுவருமென்றொடர்க்குற்றுகரமொழி களுஞ்சிலவுளவாமென்றவாறு.

மேலைச்சூத்திரத்தைச்சாரவைத்ததினாலே இதுவுமென்றொ டரென்கொள்க. [உ-ம்,] பண்டு- பண்டைக்காலம், இன்று - இன்றை

த்திணைப், எம் - அன்று - அற்றைக்கூலி, இன்று-இற்றைநலம், எனவும்வரும். ஐயீற்றுடைக்குற்றுகரமெனப்பொதுப்படக்கூறினதிருலே - நேற்று - நேற்றைப்பொழுது, எனவன்றொடர் ஐகாரம்பெறுதலும்-ஐயீற்றுடையெனவுடைமையாக்கிக்கூறினதிருலே-ஒருமொழிப்புணர்ச்சியின்றி- ஒன்று-ஒற்றை, இரண்டு-இரட்டை, வெட்டு - வெட்டை, எனவொருமொழியாய்நின்று ஐகாரம்பெறுதலும். ஓராண்டு - ஓராட்டை, ஈராண்டு- ஈராட்டை, எனத்தொடர்மொழியாய்நின்று ஐகாரம்பெறுதலுங்கொள்க. (௫௫)

திசையொடு திசையும் பிறவுஞ்சேரி, னிலையீற்றுயிர் மெய்கவ்வொற்று நீங்கலும், றகரம்னலவாய்த்திரிதலுமாம்பிற. *

இது, குற்றுகரவீற்றுத்திசைப்பெயர்க்கு - எய்தாதது எய்துவிக்கின்றது, (இ-ள்.) திசையொடுதிசையும்பிறவுஞ்சேரின் - குற்றுகர வீற்றுத்திசைப்பெயரொடுதிசைப்பெயரும் பிறபெயரும்புணருமாயின், நிலையீற்றுயிர்மெய்கவ்வொற்றுநீங்கலும் - நிலைமொழியீற்றிலே நின்றவுயிர்மெய்யும் அதன்மேல்நின்ற ககரவொற்றுங்கெடுதலும், றகரம்னலவாய்த்திரிதலுமாம் - அங்கே நின்ற றகரவொற்றுனகரவொற்றாகவும் லகரவொற்றாகவுந்திரிவனுமாமென்றவாறு.

பிறவென்றமிகையாலே - திசையொடுதிசைபுணரும்போது - நிலைமொழிபெருந்திசை எனவும், வருமொழிசிறுதிசை எனவும், நிலைமொழியாய்நிற்பன வடக்குந்தெற்குமே எனவுங்கொள்க,

[உ-ம்,] வடக்-குவடகிழக்கு, வடமேற்கு, வடதிசை, எம். வடமலை, வடவேங்கடம், எனவும் - தெற்கு - தென்கிழக்கு, தென்மேற்கு, எம் - தென்குமரி, தென்மலை, தென்வீதி, எம். மேற்கு- மேற்றிசை, மேல்பால், மேனாடு, எம் - குடக்கு- குடதிசை, குடநாடு, எம். குணக்கு - குணகடல், குணதிசை, குணபால், எனவும்வரும். இன்னும்-பிறவென்றமிகையாலே-மேற்கு- மேற்றிசை, மேலைத்திசை, மேலைத்திசை, எம். கிழக்கு- கீழ்திசை, கீழ்த்திசை, கீழ்கரை, கிழக்கரை, கீழைச்சேரி, எம்-கிழக்கு- மேற்கு- தெற்கு- வடக்கு- என்பன - கீழ்மேற்றென்வடல், எம். வடக்கூர், தெற்கூர், வடக்குமலை, தெற்குமலை, எனவிகாரமின்றியும்வருமெனவும், இவ்விதிகளெல்லாமேற்றபடிகொள்ளல்வேண்டுமெனவுங்கொள்க. வடகிழக்கென்பது- வடக்குங்கிழக்குமாகியதோர்கோணம்-எனவும்மைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொ

கை. வடதிசை - எ-து- வடக்காகியதிசை, எனப்பண்புத்தொகை. வடமலை - எ-து- வடக்கின்கண்மலை, எனஏழாம்வேற்றுமைத்தொகை. கீழ்மேற்றென்வடல்-எ-து- கிழக்கும்மேற்குந்தெற்கும்வடக்கும், எனஉம்மைத்தொகை. பிறவுமன்ன. (கசு)

தெங்குநீண்டீற்றுயிர்மெய்கெடுங்காய்வரின். ✽

இது, எய்தாதது எய்துவிக்கின்றது, (இ-ள்.) காய்வரின் - காயென்னுஞ்சொல்வந்துபுணருமாயின், தெங்குநீண்டு - தெங்கென்னுங்குற்றுகரமொழிமுதல்நீண்டு, ஈற்றுயிர்மெய்கெடும் - இறுதியிலே நின்றகுகரவுயிர்மெய்கெட்டுப்போமென்றவாறு.

[உ-ம்,] தேங்காய் - எனவரும். கெட்டேபுணருமென்றமையாலே- தெங்கங்காய் எனவருதலுங்கொள்க. (கஎ)

எண்ணிறையளவும் பிறவுமெய்தி, னொன்றுமுதலெட்டீறாமெண்ணுண், முதலீரெண்முதனீளுமூன்றாறேழ், குறுகுமாறேழல்லவற்றி, னீற்றுயிர்மெய்யுமேழனுயிரு, மேகுமேற்புழியென்மனார்புலவர். *

இது - ஒன்றுமுதலெட்டீற்றெண்ணுப்பெயர்களுக்குஉயிர்வரின் எய்தியதன்மேற் சிறப்புவிதியும்- மெய்வரின்- எய்தாதது எய்துவித்தலு முணர்த்திற்று, (இ-ள்.) எண்ணிறையளவும் பிறவுமெய்தின்- எண்ணலளவுப்பெயரும் நிறுத்தலளவுப்பெயரும் - முகத்தலளவுப்பெயரும்-பிறபெயர்களும்வருமொழியாக வந்துபுணருமாயின், ஒன்றுமுதலெட்டீறாமெண்ணுள் - ஒன்றுமுதலாக எட்டிறுதியாகக்கிடந்த எண்ணுப்பெயர்களுள், முதலீரெண்முதனீளும் - முதலிலே நின்றஒன்றுஇரண்டு என்னுமிரண்டெண்களும்முதல்நீண்டுமுடியும், மூன்றாறேழ்குறுகும் - இம்மூன்றுபெயர்களும் முதல்நின்றநெட்டெழுத்துக்கள் குறுகப்பெறும், ஆறேழல்லவற்றின் - ஆறுமேழுமல்லாதவெண்ணுப்பெயர்களுடைய, ஈற்றுயிர்மெய்யுமேழனுயிரும் - இறுதியிலேநின்றஉயிர்மெய்களும்ஏழென்பதின் இறுதியுயிரும், ஏகுமேற்புழியென்மனார்புலவர்-ஏற்குமிடங்களிலேகெடுமென்றுசொல்லுவர்புலவரென்றவாறு.

இச்சூத்திரத்துட்கூறியவிகாரமும் இப்புணர்ச்சிமுற்றமுடிந்தற்குப்பின் ஐந்துசூத்திரத்தாற்கூறும்விகாரமும் உயிர்வரின்உகரமெய் விட்டோடுதலையும் மற்றக்கணங்கள்வரின் தன்னியல்பினிற்றலையும் விலக்கினவல்ல - இவ்விகாரமெல்லாமுமுழுதும்

வேண்டுமென்னும் நியதிபவல்லபண்புத்தொகைக்கேயுரியவென்று சொல்லவந்தவர் ஏற்புழியென்றார். ஏழென்பதை உயிரீறாகவும் ஒற்றீறாகவுங்கொள்வர் இவர் மூற்றுகரவீறாகக்கொண்டு ஒன்றின்முடித்தறன்னின்முடித்தலென்பதனால் - குற்றுகரங்களோடு கூட்டிக்கூறினர். [உ-ம்,] ஓராயிரம்- ஈராயிரம்- முப்பது- அறுபது- எழுபது - எம் - ஓர்கழஞ்சு- ஈர்கழஞ்சு- முக்கழஞ்சு- அறுகழஞ்சு- எழுகழஞ்சு - எம் - ஓர்கலம்- ஈர்கலம்- முக்கலம்- அறுகலம்- எழுகலம் - எம் - ஓர்மரம்- ஈர்மரம் - மும்மீன் - அறுமீன்-எழுமீன் - எம்- முறையேமுதலீரெண்முதனீண்டதும்- மூன்று ஆறுள்ஞ்குறுகின துங்காண்க.ஏழ்கடல் - எனஏழனுயிர்கெட்டது-ஆறேழல்லவற்றின்ஈற்றுயிர்போதலுக்கும்பிறவற்றிற்கும்உதாரணம் வருஞ்சூத்திரங்களுட்காண்க. இரண்டாயிரம் ஏழாயிரம் எனஉயிர் வரக்குற்றுகரமும் முற்றுகரமுங்கெட்டுப்புணர்ந்தன. இரண்டுகழஞ்சு- மூன்றுபடி- நான்குபொருள்- ஏழுகடல் - எனத்தன்னியல்பி னின்று புணர்ந்தன- பிறவுமன்ன. (௲அ)

ஒன்றன்புள்ளிரகரமாக, விரண்டனொற்றுயிரேகவுவ்வருமே.*

இதுவுமது. (இ-ள்) ஒன்றன்புள்ளிரகரமாக. (மேற்கூறிய நால்வகைப்பெயரும்வந்து புணருமிடத்து ஈற்றுயிர்மெய் யெகுமென்றவாறே இறுதியுயிர்மெய்கெட்டுநின்ற) ஒன்றென்னுமெண்ணுப்பெயரின துனகரவொற்றுரகரவொற்றாகத்திரிய, இரண்டனொற்றுயிரேக. (அவ்வாறுநின்ற) இரண்டென்னுமெண்ணின துணகரவொற்றும் அதற்குமேல் ரகரத்தை யூர்ந்துநின்ற அகரவுயிருங்கெட, உவ்வரும்- அவ்விரண்டு ரகரத்தின்மேலும்உகரம் வந்து நிற்குமென்றவாறு.

[உ-ம்,] ஓராயிரம்- ஈராயிரம் - எனவிவையுகரம்பெறாது நின்றன. ஒருபது-இருபது-ஒருகழஞ்சு- இருகழஞ்சு- ஒருநாழி-இருநாழி - ஒருவகை- இருவகை - எனவருநிவையுகரம்பெற்றுநின்றன. ஓராயிரம்-இராயிரம் - எனவரின்உகரக்கேடு முற்றுமற்றொரோவழியென்பதனாற்கொள்க- பிறவுமன்ன. (௲௯)

மூன்றனுறுப்பழிவும் வந்ததுமாகும். *

இதுவுமது. (இ-ள்) மூன்றனுறுப்பழிவும். (ஈற்றுயிர்மெய் கெடநின்ற) மூன்றென்னுமெண்ணுப்பெயரினது னகரவொற்றுக்கெடுதலும், வந்ததுமாகும்- அவ்வொற்று வந்தவொற்றாகத்திரிதலுமாமென்றவாறு.

[உ-ம்,] மூவொன்று- மூவெடை-மூவுழக்கு- மூவெயில்-என

நால்வகைப்பெயரும்வந்து புணரனகரவொற்றுக்கெட்டது. மு ப்பது- முக்கழஞ்சு- முந்நாழி-மும்மொழி- என அவ்வொற்றுவ ந்ததாகத்திரிந்தது- பிறவுமன்ன. (சங)

நான்கன்மெய்யேலறவாகும்மே. *

இதுவுமது. (இ-ள்) (நான்கன்மெய் - ஈற்றுயிர்மெய்போகநி ன்ற) நான்கென்னும் எண்ணுப்பெயரினது னகரவொற்று, லற வாகும். லகரவொற்றாகவும்றகரவொற்றாகவுந்திரியுமென்றவாறு.

[உ-ம்,] நாலொன்று - நாலெடை- நாலாழாக்கு-நால்வீதி-எம். நாற்பது - நாற்கழஞ்சு - நாற்கலம்- நாற்கவி- எனவும். லக ர றகரவொற்றுக்களாய்த்திரிந்தனகாண்க. பிறவுமன்ன. (சச)

ஐந்தனொற்றடைவதுமினமுங்கெடும். *

இதுவுமது, (இ-ள்.) ஐந்தனொற்று - ஈற்றுயிர்மெய்போக நின்ற, ஐந்தென்னுமெண்ணுப்பெயரிடைநின்ற நகரவொற்று அது, அடைவதும் - வந்தவொற்றாகத்திரிதலும், இனமும் - வந் ததற்கு இனமாகத்திரிதலும், கேடும் - கெடுதலுமாய் எ-று.

[உ-ம்,] ஐம்மூன்று-ஐம்பஞ்சாடி - ஐவ்வண்ணம் - எனவந்த தாகத்திரிந்தது. ஐம்பது- ஐங்கழஞ்சு-ஐங்கலம்-ஐம்பொறி-என வந்ததற்கு இனமாகத்திரிந்தது. ஐயாயிரம் - ஐயெடை - ஐயா ழாக்கு- ஐயம்பு- எனக்கெட்டது. அடைவதுமென்றதினு லநகரதகரங்கள்வந்துபுணரின்அருத்தாபத்தியால்- ஐந்நூறு- ஐந் தூணிஎன அவ்வொற்றுத்தன்னியல்பாகநிற்றலுங்கொள்க. (சரு)

எட்டனுடம்புணவ்வாகுமென்ப. *

இதுவுமது, (இ.ள்.) எட்டனுடம்பு- ஈற்றுயிர்மெய்கெடநி ன்றஎட்டென்னு மெண்ணுப்பெயரிடைநின்றடகரவொற்று, ண வ்வாகுமென்ப- ணகரவொற்றாகத்திரியுமென்றுசொல்லுவர்புல வரொன்றவாறு.

[உ-ம்,] எண்பது-எண்கழஞ்சு-எண்கலம்-எண்குணம்-எனவரு ம்- எண்ணிறையளவுமென் னுஞ்சூத்திரத்திற்கூறிய புணர்ச்சிக்கு வேண்டும்விகாரம் இதுவனாக்குமென்பதுதோன்ற அச்சூத்திரத் திற்கூறியபுலவரொன் றுமெழுவாயைக்குறித்து அதன்பயனிலையா கஇச்சூத்திரத்தின் இறுதியிலே என்ப-எனக்கூறினர். (சசு)

ஒன்பானொடுபத்து நூறுமொன்றின், முன்னதினேனையமுரண ணியொவ்வொடு, தகரநிறீஇப்பஃதகற்றி னவ்வை,நிரலேணள

வாத்திரிப்பதுநெறியே. *

இது, ஒன்பதென்னுமெண்ணுப்பெயர்க்கு எய்தாததனைத் தலும்- அதனொடுபுணரும்பத்து-நூறு-என்னும்வருமொழிகட்கு எய்தியது விலக்கிப்பிறிது விதியுமுணர்த்துகின்றது, (இ-ள்.) ஒன்பானொடு பத்துநூறு மொன்றின் - ஒன்பதுடனே பத்தென்பதும் நூறென்பதும் வந்துபுணருமாயின், முன்னதின் - எட்டின்மேலொன்று வரத்திரிந்தஅவ்வொன்பதென்னும் நிலைமொழியைப்போல, ஏனைய - மற்றைப்பத்தையும் நூற்றையும், முரணி- திரித்து, ஒவ்வொடு தகரநிறீஇ - நிலைமொழிக்குமுன்னின்ற ஒகரவுயிரொடு தகரமெய்யை அதற்கு ஆதாரமாகநிறுத்தி, பஃதகற்றி - அந்தநிலைமொழியீற்றிலே நின்றபதத்தைக்கெடுத்து, னவ்வை - (அம்மொழிமுதற்கு அயலிலே நின்ற) னகரவொற்றை, நிரலே - வரிசையாகவே, ணளவாத்திரிப்பதுநெறி - பத்தின்திரிபாகிய நூற்றின்புணர்ச்சிக்கு- ணகரமாவும் நூற்றின்திரிபாகிய ஆயிரத்தின்புணர்ச்சிக்கு- ளகரமாகவுந்திரித்துக்கொள்வது முறையாகும், எ-று.

[உ-ம்,] தொண்ணூறு- எம்.தொள்ளாயிரம்-எம்.வரும்- இது தொளாயிரமெனவிக்காலத்துவழங்கிற்று.

ஒன்பஃது நின்றுபுணரினும் ஒன்பதுநின்றுபுணரினும்- இந்தமுடிபே யாமென்பார். பஃதகற்றியென்பதனோடுபொருந்த ஒன்பஃதோடென்னாது- ஒன்பானொடென்றும், இவ்வாறுதலிற் சொல்முழுதும்விகாரப்படுமென்று சொல்லவந்தவர் ஒன்றின்என்றும், ஒன்பஃதுஎன்பதுஇறுதியிலே பஃதென்னும்ஒலிதோன்றமுரணிற்றென்பார்-அதனையுவமையாக்கி முன்னதினென்றும், (முரணுதல்-விகாரப்படுதல்) ஒன்றுபத்தாறற்போலப் பத்தைநூறாகவும் நூற்றையாயிரமாகவுந்திரிக்க வென்பார் முரணியென்றும், இப்புணர்மொழிகள் ஒகாரவுயிரொன்றொழிய விகாரப்பட்டுக்கிடந்தமையால் குறிப்பின்றிமுடியும் மரூஉமுடிபென்றுகொள்ளாதொழிகவென்பார திரிவதென்னாது திரிப்பதென்றும், இவற்றைத்தொல்லாசிரியர்முடித்தவாறே முடித்தோமென்பார்நெறியேயென்றுங்கூறினர். (சூத்) ஒன்பானொகரமிசைத்தகரமொற்று - முந்தையொற்றேணகாரமிரட்டும், பத்தென்கிளவியாய்தபகரங்கெட, நிற்றல்வேண்டுமூகாரக்கிளவி, யொற்றியதகரம்றகரமாகும். எம். ஒன்பான்முதனிலைமுந்துகிளந்தற்றே, முந்தையொற்றேளகாரமிரட்டு - நூறென்கிளவிநகாரமெய்கெட, ஊவாவாகுமியற்கைத்தென்ப, வாயிடைவருதவிகாரரகார, மீறுமெய்கெடுத்து மகாரமொற்றும்- எம். ஆசிரியர்தொல்காப்பியனார் கூறுதலுங்காண்க. (௬௪)

முதலிருநான்காமெண்முனர்ப்பத்தி, னிடையொற்றேகலாய்தமாக, லெனவிருவிதியுமேற்குமென்ப. *

இது, சிலவெண்ணுப்பெயர்கள் முன்வரும் பத்தென்னும் எண்ணிற்கு எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதி வகுக்கின்றது.(இ-ள்.)

முதலிருநான்காமெண்முனர் - ஒன்றுமுதலாகியஎட்டெண்களின் முன்வரும், பத்தினிடையொற்றேகல் - பத்தென்னுமெண்ணுப் பெயரிடைநின்ற தகரவொற்றுக்கெடுதலும், ஆய்தமாகல் - கெட்டவிடத்து - ஆய்தந்தோன்றுதலும், எனவிருவிதியுமேற்குமென்ப - என்றிவ்விரண்டுவிதிகளையுமேற்குமென்றுசொல்லுவர்புலவரென்றவாறு.

[உ-ம்,] ஒருபது - இருபது - முப்பது - நாற்பது - ஐம்பது - அறுபது - எழுபது - எண்பது எ-ம். ஒருபஃது - இருபஃது - முப்பஃது - நாற்பஃது - ஐம்பஃது - அறுபஃது - எழுபஃது - எண்பஃது - எ-ம். வரும். இதனுள் புலவரென்னும் பயனிலை குறைந்து நின்றது. (சரு)

ஒருபஃதாதிமுன்னொன்றுமுதலொன்பா, னெண்ணுமவையூ
ர்பிறவுமெய்தின், னாய்தமழியவாண்டாகுந்தவ்வே. *

இது, ஒருபஃதாதியாகியநிலைமொழிக்கு எய்தியதன்மேற்சிறப்புவிதியும் - எய்தாதது எய்துவித்தலுமுணர்த்திற்று-இ-ள். ஒருபஃதாதிமுன் - ஒருபஃதுமுதலிய எட்டெண்களின்முன், ஒன்றுமுதலொன்பானெண்ணும் - ஒன்றுமுதலொன்பதெண்ணுப்பெயர்களும், அவையூர்பிறவுமெய்தின் - அவைதொடர்ந்த பிறவெண்ணுப்பெயர்களும்வந்துபுணருமாயின், ஆய்தமழியவாண்டாகுந்த - ஆய்தங்கெட அவ்விடத்தியல்பாகியதகரம்வரும், எ-று.

ஐயமறுத்தற்கு அவையூர்பிறவுமென்றார். [உ-ம்,] ஒருபத்தொன்று - இருபத்தொன்றேகாலேயரைக்கால் - முப்பத்தொருகழஞ்சு - எழுபத்தெண்கலனேதூணி - எண்பத்தொன்பதியாண்டு - எனவரும். பிறவுமன்ன ஆய்தமழியவாண்டாகுந்தவ்வென்றதினாலே - ஆய்தமழிந்தவற்றிற்கும் ஒருபதுமுதலியமுற்றுகரவீற்று எண்ணுப்பெயர்கட்கும் வேற்றுமையில்லாததினாலே - அருத்தாபத்தியால் - அவற்றோடு இவ்வருமொழிகள்புணரினும் ஆண்டாகுந்தவ்வென்றாராயிற்று - அவற்றிற்குதாரணமிவையேயாமென்க. (சசூ)

ஒன்றுமுதலீரைந்தாயிரங்கோடி, யெண்ணிறைபளவும் பிறவ
ரிற்பத்தி, னீற்றுயிர்மெய்கெடுத்தின்னுமிற்று, மேற்பதேற்கு
மொன்பதுமினைத்தே. *

இது, பத்தென்னுநிலைமொழிக்குஎய்தியதுவிலக்கிப்பிறிது விதியும்எய்தாததுஎய்துவித்தலும்-ஒன்பதென்னுநிலைமொழிக்கு

எய்தியதன்மேற்சிறப்புவிதியும் எய்தாததனைய்துவித்தலும் - உண ர்த்திற்று.(இ-ள்.)ஒன்றுமுதலீரைந்து- ஒன்றுமுதலாகியபத்தும், ஆயிரங்கோடி - ஆயிரமுங்கோடியுமாகிய, எண்ணிறைபளவும்பிற வரின்- எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும்- அளவுப்பெயரும்- பிறபெயரும்வந்து புணருமாயின், பத்தினீற்றுயிர்மெய்கெடுத் து- நிலைமொழியாகிய பத்தென்னு மெண்ணினதுஈற்றுயிர்மெ ய்யை நீக்கி, இன்னுமிற்றும். (அவ்விடத்தில்) இன்சாரியையாயி னும் இற்றுச்சாரியையாயினும், ஏற்பதேற்கும்- பொருந்துவது ஒன்றையேற்று நிற்கும், ஒன்பதுமினைத்து - ஒன்பதென்னு நிலை மொழியும் மேற்காட்டிய வருமொழிகள்வந்துபுணரின் இவ்விர ண்டுசாரியையுள்ஒன்றைக்கொண்டு அதுபோல நிற்கப்பெறுமெ ன்றவாறு.

[உ-ம்,] பதினொன்று- பதின்மூன்று-பதினாயிரம் - பதின்கழ ஞ்சு-பதின்கலம்- பதின்மடங்கு- எம். பதிற்றொன்று - பதிற்றிர ண்டு-பதிற்றுமூன்று-பதிற்றுப்பத்து - பதிற்றுக்கோடி- பதிற்று த்தூணி - எம். ஒன்பதினாயிரம். ஒன்பதின்கழஞ்சு- ஒன்பதின்க லம்-ஒன்பதின்மடங்கு-எனவும். ஒன்பதிற்றொன்று- ஒன்பதிற்றி ரண்டு- ஒன்பதிற்றுக்குறுணி -எம். வரும்பிறவுமன்ன - பதினொ ன்று- உம்மைத்தொகை,பதிற்றொன்று - பண்புத்தொகை, பிறவு ங்கண்டுகொள்க.

பத்துக்கோடி- ஒன்பதுகோடி- என. இந்நிலைமொழிகள் தன்னியல்பி ன்நிற்றலேயன்றி வழக்கிடத்துஞ்செய்யுளிடத்தும் இவ்வாறு அமைந்துகிடந் தனவுங்கொள்க வென்றுசொல்லவந்தவர் ஏற்பதேற்குமென்றும் ஒன்பதின்ஈ ற்றுயிர்மெய்கெடாது குற்றுகரவீற்றுப்பொதுவிதியால்- உயிரொன்றுமேகெ டஇன்னும்இற்றும் ஏற்பதேற்றுநிற்றலின்-ஒன்பதுமினைத்தேனனத்தன்மையணியா க்காதுஒன்பதுமினைத்தேனனஉவமையணியாக்கியுங் கூறினர். ஒன்பது என்பத ன் இறுதிபத்தென்பதுபோல நிற்றலின் அதனைஇத்தனைமாட்டெறியப்பட்ட தென்க. இதுமாட்டேறிந்தொழுகலென்னும்உத்தி. இப்புணர்ச்சியேற்கு,ஒ ன்பதும்இனைத்து-என இருமுடிபாக்குக. (சஎ)

இரண்டுமுன்வரிற் பத்தினீற்றுயிர்மெய், கரந்திடவொற்றுன வ்வாகுமென்ப. *

இதுவும். பத்தென்னுநிலைமொழிக்கு எய்தியதுவிலக்கிப்பி றிதுவிதிவகுக்கின்றது,(இ-ள்.)இரண்டுமுன்வரின்- இரண்டென்ப துவருமொழியாகவந்துபுணரின், பத்தினீற்றுயிர்மெய்-பத்தெ ன்னும்நிலைமொழியிறுதியுயிர்மெய்யானது, கரந்திட-கெட்டுப் போக, ஒற்றுனவ்வாகுமென்ப - நடுநின்றதகரவொற்று னகர வொற்றாகத்திரியுமென்றுசொல்லுவர்புலவரென்றவாறு.

[உ-ம்,] பன்னிரண்டு- எனவரும்- உம்மைத்தொகையிடத்தும் பண்புத்தொகையிடத்தும் இரண்டென்னுமெண்வருமொழியாய் வருமாயினும் முன்வரின்என வருதலைச்சிறப்பித்ததினுலேஒரு சொற்றுணமாய்ச்சிறந்த உம்மைத்தொகைக்கே யிவ்விதி கூறினுரென்க. (சஅ)

ஒன்பதொழித்தவெண்ணென்பதுமிரட்டின், முன்னதின்முன்னலவோடவுயிர்வரின், வவ்வுமெய்வரின் வந்ததுமிகனெறி. *

இது, ஒன்றுமுதலிய பத்தெண்களுள் ஒன்பதொழிந்தவற்றுள். மூன்று ஆறு ஏழிற்கு எய்தியதன்மேற்சிறப்புவிதியும்- எல்லாவற்றிற்கும் உயிர்வரின் எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதியும்- மெய்வரின்- எய்தாததனைய் துவிதிதலுமுணர்த்துகின்றது, (இ-ள்.) ஒன்பதொழித்த வெண்ணென்பதுமிரட்டின்-ஒன்பதென்பதையொழித்துநின்ற ஒன்றுதிபத்து முடிவாகிய ஒன்பதெண்களையும் இரட்டித்துக்கூறினுல், முன்னதின்முன்னலவோட- முன்னின்றநிலைமொழியின்முதலெழுத்தல்லாதனவெல்லாங்கெட, உயிர்வரின்வவ்வும் - உயிர்முதலானஎண்வந்துபுணரின் வகரவொற்றும், மெய்வரின்வந்ததும் - மெய்முதலான எண்வந்துபுணரின் அவ்வந்த மெய்யெழுத்தும், மிகனெறி-மிகுகிருப்பதுமுறையாம். எ - று.

[உ-ம்,] ஒவ்வொன்று- இவ்விரண்டு- மும்மூன்று-நந்நான்கு- ஐவைந்து - அவ்வாறு - எவ்வேழு- எவ்வெட்டு - பப்பத்து- எனவரும். நெறியென்றதனுல் - நான்கிற்குக்குறுக்கமும் - ஐகாரக்குறுக்கத்தின்முன் ஒற்றிரட்டாமையும் - ஒரோவொன்று- ஒவ்வொன்று- கழக்கழஞ்சு - கலக்கலம் - எனவிரட்டித்தலும்- குற்றுகரப்புணர்ச்சிவிதியுட்கூறுதொழிந்துநெறிப்படவருவனவுளவாயின் அவையுங்கொள்க.

ஒவ்வொன்று கொடுவென்றல் - இப்படையேபல வற்றையுங்கொடுவெனப்பொருள்தந்துநிற்றலால் இது அடுக்குத்தொடரன்று - வேற்றுமையல்லனவெல்லாம் அல்வழியாதலால் - தழாஅத்தொடராகிய அல்வழியுள் ஒன்றென்க. (ருகூ)

பூப்பெயர்முன்னினமென்மையுந்தோன்றும். *

இது. பூவென்னும் ஊகார வீற்றுப்பல்பொருளொருசொலின்முன் வரும்வல்லினத்திற்கு எய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது, (இ-ள்.) பூப்பெயர்முன் - பூவென்னும்பலபொருட்பெயர்ச்சொன்முன், இனமென்மையுந்தோன்றும்- வல்லினம்வரிற்பொதுவிதியாற்கசதபமிகுதலேயன்றி அவற்றிற்கு இனமாகியமெல்லொற்றுக்களு மிகும். எ-று.

இப்பொருளையுடையபூப்பெயரென்று எடுத்துச்சொல்லாததி
னாலே - பலபொருளொரு சொல்லெனக்கொள்க. [உ-ம்,] பூங்
கொடி- பூஞ்சோலை- பூந்தடம்-பூம்பணை- எனவரும்-இவற்றுள்-
பூவென்பதுமலராயின் இரண்டாம்வேற்றுமையுருபும்பொருளு
முடன்றொக்க தொகையாகவும் - அழகாயினும் - பூங்கரும்பெ
னப்பொலிவாயினும்-பண்புத்தொகையாகவும்-வருமெனக்கொ
ள்க. விகற்பித்துவருமென்று உறுதிகூறாமல்- பூக்கொடியெனவ
ல்லினமிகுதலையும்மையால் தழுவிக்கொண்டதினாலே இவ்விருவ
கைத்தோன்றல்விகாரங்களுமின்றியபடிவருமெனக்கொள்க.(௫௰)

இடைச்சொல்லேயோமுன்வலியியல்பே. *

இது, வரும் வல்லினத்திற்கு எய்தியது விலக்குகின்றது, (இ-ள்.) இடைச்சொல்லேயோமுன்- இடைச்சொல்லாகிய ஆறு
ஏகாரமும் எட்டு ஓகாரமுமாயவற்றின்முன், வலியியல்பு - வல்லி
னம்வருமாயிற்பொதுவிதியால் மிகாது இயல்பாம்- எ-று.

[உ-ம்,] அவனேகொண்டான்-எ-து-பிரிநிலையும்வினாவும்- ஈற்ற
சையும்- தேற்றமுமாம்- அறமேபொருளேகாம்மேதுறவே- என்
பன- எண் - ஏயெதனையென்றோரிருடிவினவ- எ-து- இசைநிறை,
அவனோகொண்டான்- எ-து- ஒழியிசைமுதலிய எட்டுமாம்- இவ
ற்றுள்வல்லினம் இயல்பாயினவாறுகாண்க. இவ்விடைச்சொல்ப
லபொருளைத்தருதல் இடைச்சொல்லியலுள்ளேகாண்க. (௫௧)

வேற்றுமையாயினைகானிறுமொழி, யீற்றழிவொடு மம்மேற்ப
வுமுளவே. *

இது, ஐகாரவீற்றுநிலைமொழிக்கு எய்தாததுஎய்துவிக்கி
ன்றது. (இ-ள்.) வேற்றுமை யாயினைகானிறுமொழி- ஐகாரஈற்
றுச்சொல் வேற்றுமைச்சந்தியில்வருமாயின், ஈற்றழிவொடுமம்
மேற்பவுமுள - இறுதிஐகாரங்கெட்டுஅம்சாரியைபெற்றுமுடிவ
னவும் கெடாதுஅம்முச்சாரியைபெற்றுமுடிவனவுஞ் சிலவுளவா
மென்றவாறு.

அழிவொடுமென்ற உம்மையால்அழியாமையோடு அம்முச்சா
ரியை பெற்றுமுடிவனவுமுள வெனப்பொருளுரைக்கப்பட்டது
[உ-ம்,] வழுதுணங்காய்- ஆவிரம்பூ- தாழங்காய்- பூ- பழம்-
எ-ம். புன்னையங்கானல்- கொல்லையஞ்சாரல்-கொன்றையந்திங்கு
ழல்- முல்லையம்புறவம்- எனவுமுறையேகாண்க.அம்மேற்பவுமெ

ன்ற இரிவுசிறப்பு உம்மையால் - மூவிலைப்புறவம் சொல்லிச்சார ல் எனவரினுங்கொள்க. வருமொழியையெடுத்துச்சொல்லாதவினு லேநாற்கணத்துள் ஏற்பனகொள்க. (ருஉ)

பனைமுன், கொடிவரின்மிகலும்வலிவரினைபோ, யம்முறத்திரள் வரினுறழ்வுமட்டிறி, னைகெட்டநீளலுமாம்வேற்றுமை. ❋

இது, பனையென்னுநிலைமொழிக்கும் அதனொடுபுணருந்தி லவருமொழிகட்கும் எய்தியதுபிறழாமற்காத்தலும் - விலக்கிப் பிறிது விதிவகுத்தலுமுணர்த்துகின்றது, (இ-ள்.) பனைமுன்கொ டிவரின்,மிகலும்- பனையென்னும்ஐகாரவீற்றுப்பெயர்முன்கொ டியென்னுஞ்சொல்வந்து புணரின்ககரவல்லெழுத்துமிகலும், வ லிவரினைபோயம்மும் - கசதபக்கள்வரின்நிலைமொழியீற்று ஐகா ரங்கெட்டு அம்முச்சாரியையைபெறுதலும், திரள்வரினுறழ்வும் - திர ளென்னுஞ்சொல்வந்து புணரின் வந்ததுமிகுந்தும் ஐகாரங்கெ ட்டு அம்முப்பெற்றுந்தம்முள்விகற்பித்தலும், அட்டிறின் - அட்டெ ன்னுஞ்சொல்வந்துபுணரின், ஐகெட்டு - ஐகாரங்கெட்டு, அந்நீள லுமாம்வேற்றுமை - அவ்வருமொழிக்கு முதனின்ற அகரம் ஆகா ரமாதலுமாம். வேற்றுமைச்சந்தியிலென்றவாறு.

கெட என்கின்ற செயவென்னெச்சம் - கெட்டு.எனத்திரிந்துநி ன்றது. [உ-ம்,] பனைக்கொடி- எம். பனங்காய்- பனஞ்செதும்பு- பனந்தூண்- பனம்பழம்-எம். பனைத்திரள்- பனந்திரள்-எம்.பனா ட்டு- எனவும்வரும்.பனைக்கொடி-பனையையெழுதியகொடியென வும்- பனாட்டு- பனையினதுஇங்கட்டி- எனவும்விரிபும். மிகலும்- அம்மும்- உறழ்வும்-நீளலும்-ஆம்- எனமுடித்துக்கொள்க,

(கு) பனையுமனையுமாவிரைக்கிளவியு, நினையுங்காலையம்மொ டுசிவணு,மைமையெனிறுதியரைவரைந்துகெடுமே, மெய்யவணொ ழியவென்மனார்புலவர் - எம். பனையின்முன்னரட்டுவருகாலை, நிலையின்றாகுமையெனுயிரே, யாகாரம் வருதலாவயினை. எம், கோடிமுன்வரினே ஐயவணிற்பக்,கடநிலையின்றேவல்லெ ழுத்துமிகுதி. எம்.ஆசிரியர்தொல்காப்பியனார்கூறுதலுங் கா ண்க. (ருங)

உயிரீற்றுப்புணரியல் முற்றிற்று.

❋

# மெய்யீற்றுப்புணரியல்.

---

உடன்மேலுயிர்வந்தொன்றுவதியல்பே. *

மெய்யீற்றுப்பதம் புணருஞ்சிறப்புப்புணர்ச்சி யிந்த இயலாலே சொல்லப்படுதலால் - இது, மெய்யீற்றின்முன் உயிர்வந்து புணருமாறு உணர்த்துகின்றது, (இ-ள்.) உடன்மேல் - நிலைமொழியீற்றிலே நின்ற ஒற்றின்மேல், உயிர்வந்தொன்றுவது-(வருமொழிமுதலிலே நின்ற) உயிர்வந்து ஒன்றுபட்டு நிற்பது, இயல்பே- இயல்புப்புணர்ச்சியேயாம். எ-று.

[உ-ம்,] தோன்றலழகன்- உரிஞழகிது - புகழழகிது- எம். வேலெறிந்தான்- வாளோச்சினான் - எனவும்முறையே. அல்வழிவேற்றுமை யிரண்டிலும் வந்தன - பிறவுமிப்படியேகாண்க. இவ்வாறுமெய்யும் உயிருங்கூடிஉயிர்மெய்யாய்மெய்யினதுபுள்ளியும் உயிர்வடிவுங்கெட்டுநிற்பதினாலே இது, விகாரப்புணர்ச்சியென்பவு, ளாவிலக்கிச்சிறந்த ஒலிவடிவினைநோக்கியுடனுமுயிரும் போல மெய்யினதுமாத்திரையுள்ளடங்க ஒன்றுபட்டுஇரட்டையிலைபோல் ஒற்றொலிமுன்னும் உயிரொலிபின்னுமாக இணங்கி நிற்பதினாலும். ஒன்றாத்தனிக்குறில் முன் ஒற்றுவிகாரப்படுதலாலும்ஒன்றுவதியல்பே என்றார். ஏகாரம்பிரிநிலை. (சூ) புள்ளியீற்றின்முன்னுயிர் தனித்தியலாது, மெய்யொடுசிவணு மவ்வியல்கெடுத்தே,என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங்காண்க. (க)

தனிக்குறின்முன் னொற்றுயிர்வரினிரட்டும். *

இது, எய்தியதன்மேற்சிறப்புவிதி கூறுகின்றது. (இ-ள்.) தனிக்குறின்முன்னொற்று - தனித்தகுற்றெழுத்தின்முன்னின்ற ஒற்றானது, உயிர்வரினிரட்டும - உயிர்முதல்மொழிவந்து புணருமாயின் இரட்டித்துநிற்கும். எ-று.

[உ-ம்,] மண்அரிது-மண்ணரிது, பொன்அரிது-பொன்னரிது,மண்அகம்-மண்ணகம், பொன்ஒளி- பொன்னொளி, என அல்வழி வேற்றுமையிரண்டிடத்தும்வந்தன - பிறவும் இப்படிக்காண்க. (உ)

தன்னொழிமெய்ம்முன் யவ்வரின் இகரந், துன்னுமென் றுணிநரு முளரே. *

இ-து, யகரமொழிந்த பத்துமெய்ம்முன்வரும் யகரத்திற்கு எண்ணுமெழுத்தின்றென் னுஞ்சூத்திரத்தால் எய்திய தன்மேற் சிறப்புவிதிகூறுகின்றது, (இ-ள்.) -தன்னொழிமெய்ம்முன்யவ்வரின்- யகரமானது- தன்னையொழிந்த-ஞ-ண-ந-ம-ன-ர-ல-வ-ழ-ளஎன்னும் பத்துமெய்ம்முன்னும்வருமாயின், இகரந்துன்னுமென்று துணிநருமுளர்-இகரச்சாரியைவந்தடையுமென்று துணிந்துசொல்வோருஞ்சிலர் உண்டு. எ-று.

[உ-ம்,] உரிஞ்யாது - உரிஞியாது, மண்யாது - மண்ணியாது, வேள்யாவன் - வேளியாவன், எ-ம். உரிஞியாப்பு - மண்ணியானை- வேளியானை எனவும்வரும். பிறவுமிப்படியேகாண்க. துணிநருமென்ற எதிர்மறையிழிவுசிறப்பு உம்மையினாலே-இகரந்தானின்றாஎண்ணுமெழுத்தின்றென் னுஞ்சூத்திரத்திற்சொல்லியபடி இயல்பாமென்பார்பலரென்க. மண்ணியாது - என்றவிடத்து - இகரம் நோக்கித் தனிக்குறில்முன் ஒற்றுஇரட்டித்து நின்றதெனக் காண்க. (௩)

ஞணநமலவளனவொற் றிறுதொழிற்பெய, ரேவல்வினைநனி யவ்வன்மெய்வரி, னுவ்வுறுமேவலுறுசிலசில்வழி. *

இது, முதனிலைத்தொழிற்பெயர்க்கும் ஏவல்வினைக்கும் பொதுவாகிய சில நிலைமொழிகளுக்கு எய்தாததுஎய்துவிக்கின்றது. (இ-ள்.) ஞணநமலவளனவொற்றிறுதொழிற்பெயரேவல் வினை- இவ்வெட்டொற்றுமுதனிலைத்தொழிற்பெயரும் ஏவல்வினையும், யவ்வன்மெய்வரின்- யகரம் ஒழிந்தமெய்ம்முதன்மொழிகள் வரின், நனியுவ்வுறும்- பெரும்பாலும் உகரச்சாரியையையிறுதியிலேபெறும், ஏவலுறுசிலசில்வழி - சில ஏவல்வினைகள் அவ்வுகரச்சாரியையைச்சில இடங்களிலே பொருந்தாவாமென்றவாறு.

ஏவல்வினையொடு சேர்த்ததினாலே, முதனிலைத்தொழிற்பெயரொன்பது பெறப்பட்டது. [உ-ம்,] உரிஞ்-உரிஞுக்கடிது, உண்-உண்ணுக்கடிது, பொருந்- பொருநுக்கடிது, திரும்- திருமுக்கடிது, தின்-தின்னுக்கடிது, நீண்டது- வலிது- எம்- உரிஞுக்கடியை- நீட்சி-வன்மை- எம்- தொழிற்பெயர்கள் இருவழியும் உகரச்சாரியைபெற்றன. உரிஞுகொற்றா- உண்ணுகொற்றா -பொருநுகொற்றா- திருமுகொற்றா- தின்னுகொற்றா- தின்னுமாளவு

ளவா - என் ஏவல்வினைகள் உகரம்பெற்றன, மற்றையவுமிப்படி யே. உரிஞு- உண்ணு-எனவருமொழியின்றியுகரம் பெறுதலும்- மணலிவாரு- சருகைவாரு - எனச்சிறுபான்மையிலக்கிய ஈறுஉ கரம்பெறுதலும் உளவென்றுசொல்லவந்தவர்- நனியென்றும், உ ண்ணுகொற்றா- உண்கொற்றா- என உகரம்பெற்றும்பெறாதும் வருவனவும், உரிஞுகொற்றா - என்றாற்போல உகரம்பெற்றேவ ருவனவும் உளவென்பார், சில ஏவலுமுளசில்வழி யென்றுங்கூறினா ர். காட்டாதொழிந்தனவும்இவ்வாறுவருமாயிற்காண்க. தொழிற் பெயர்-ஏவல்வினை-உவ்வுறும்-எம். சிலஉறா-எம்.இருமுடிபாகமு டித்துக்கொள்க. (௬)

நவ்விறுதொழிற்பெயர்க் கவ்வுமாம்வேற்றுமை. *

இது, நகரவீற்றுத்தொழிற்பெயர்க்கு எய்தியதன்மேற்சிற ப்புவிதிபுணர்த்துகின்றது. (இ-ள்.) நவ்விறுதொழிற்பெயர்க்கு- நகரவீற்று முதனிலைத்தொழிற்பெயர்க்கு, அவ்வுமாம் வேற்று மை- வேற்றுமைச்சந்தியில் உகரச்சாரியையன்றிஅகரச்சாரியை யும்வரப்பெறும். எ-று.

[உ-ம்,] பொருநக்கடுமை- நன்மை-வன்மை -எனவரும்.பிறவு மன்ன-பொருநதல்-ஒத்தல்,அதுஒருவர்மற்றொருவர்போலவே டங்கொள்ளும்பொருநர்தொழில்,பொருநர்-கூத்தாடிகள். (௫)

ணனவல்லினம்வரட்டறவும்பிறவரி, னியல்புமாகும்வேற்றுமை க்கல்வழிக், கனைத்துமெய்வரினு மியல்பாகும்மே. *

இது, மேலைச்சூத்திரம் வரைக்கும் மெய்யீற்றுப்பொதுப் புணர்ச்சிசொல்லிஅவற்றிற்கேயுரியணகர நகரங்களையொழித்துமற்றையவற்றிற்கு முறையேதனித்தனி சிறப்பு விதிசொல்லத்தொ டங்கி- ணகரனகரங்கள் புணரும்விதங்கூறுகின்றது. (இ-ள்.) வே ற்றுமைக்கு - வேற்றுமைப்புணர்ச்சிக்கு, ணனவல்லினம் வரட்ட றவும்- ணகரனகரங்கள் வல்லினம் வந்துபுணரின் முறையே டகர மாகவும் றகரமாகவுந்திரியும், பிறவரினியல்புமாகும்- மெல்லின மும் இடையினமும்வந்துபுணரின் இயல்பாயிருத்தலுமாம், அல் வழிக்கு- அல்வழிச்சந்தியில், அனைத்துமெய்வரினுமியல்பாகும்- மூவினம் வந்துபுணரினும் இயல்பாகும், எ-று.

இயல்பாகும்மேஎன்றதில்- ஏகாரம் ஈற்றசை,மகரஒற்றுவிரித் துநின்றது-அது விரித்தல்விகாரம். [உ-ம்,] கண்- சிறுகட்களிறு

பேரமர்க்கட்பேதை, எ-ம். பொன் - பொற்குடம், பொற்றட்டு,
எம். வேற்றுமையில் ணனக்கள் - டறக்களாகத்திரிந்தன. பிறவல்
லினங்களோடு மிவ்வாறேயொட்டுக- மண்ஞாற்சி - பொன்ஞாற்சி-
நீட்சி- மாட்சி- யாப்பு- வன்மை- எனவேற்றுமையில் மெல்லின
மும் இடையினமும்வர இயல்பாயின- மண்கடிது - பொன்கடி
து- சிறிது - தீது - பெரிது - ஞான்றது- நீண்டது - மாண்டது-
யாது - வலிது - எம். உண்டான்கொற்றன் - உண்டான்ஞெள்ள
ன்- வளவன் - எம். அல்வழியில் மூவினமும்வர இயல்பாயின.
பிறவுமன்ன. ஒப்பின்முடித்தலென்னும் உத்தியால் - னகரத்தை
யும் உடன்கூட்டிக்கூறினார். இப்படியினிச்சேர்த்துக்கூறுவனவெ
ல்லாம் அந்தஉத்தியெனக்காண்க. ணன - டறவும் - இயல்புமாகு
ம்-எனவும், இயல்பாகும்-எம். இருமுடிபாக்குக. (௬)

*குறில்வழிலிலாணனக்கள்வந்த, நகரந்திரிந்துழி நண்ணு*
*ங்கேடே.* *

இது, அவ்விரண்டீற்றுள் - ஒருசார்பினவற்றிற்கு- எய்திய
துவிலக்கிப்பிறிது விதிவகுக்கின்றது, (இ-ள்.) குறில்வழிலில்லா
ணனக்கள்- தனிக்குறிலொன்றையுந் தவிர்ந்து ஒருமொழி தொ
டர்மொழிகளைச்சார்ந்துநின்ற ணகரனகரங்கள், வந்த நகரந்திரி
ந்துழி- வருமொழிக்குமுதலாகவந்தநகரமான துமயங்காதிறு
லே திரிந்தஇடத்து, (மயங்கல்-இணங்குதல்) நண்ணுங்கேடு-செ
டுதலைப்பொருந்தும், எ- று.

[உ-ம்,] அரணன்று- தூணன்று- பசுமணன்று-எம். அரணன்
மை- எம். பயனன்று - மானன்று- பசும்பொனன்று-எம்.பயன
ன்மை - எம். இருவழியுங்கெட்டன-பிறவுமன்ன, ணனக்கள்-கெ
ட்டைநண்ணும்- எனமுடிக்க. (௭)

*சாதிகுழூஉப்பரண்கவண்பெயரிறுதி, யியல்பாம்வேற்றுமைக்*
*குணவெண்சாண்பிற, டவ்வாகலுமாமல்வழியும்மே.* *

இது, ணகரவீற்றுள்ளே சிலவற்றிற்கு எய்தியதுவிலக்கலும்
சிலவற்றிற்கு எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தலுமுணர்த்து
கின்றது. (எய்தியது அடைந்தது) (இ-ள்,) சாதிகுழூஉப்பரண்க
வண்பெயரிறுதி-சாதிபற்றியும் திரள்பற்றியும் பரண்-கவண் என்
னுமிருபெயர்பற்றியும் ஈறாகிநின்றணகரம், இயல்பாம் வேற்று
மைக்கு - வேற்றுச்சந்தியிலும் வல்லினம்வந்து புணரின் இயல்
பாகும், உணவெண்சாண்-உண்ணப்படுவதாகியஎள்ளின்திரிசொல்

ணாகியனன்னென்றும்பெயரும்- சாண்என்றும் நீட்டலளவைப்பெ பெரும், டவ்வாகலுமாமல்வழியும்- வல்லினம்வந்துபுணரின் அல்வ ழிச்சந்தியிலும் டகரமாகத்திரிதலுமாம், எ-று.

அல்வழியும்என்ற இறந்தது தழுவிய எச்சவும்மையை - வேற் றுமைக்கு எல்றஇடத்துக்கூட்டுக. [உ-ம்,] பாண்குடி - உமண் குடி- பாண்சேரி - தோட்டம் - பாடி - எம். பரண்கால் - கவண் கல் - எம். வேற்றுமையிலும் இயல்பாயின - எண் - எட்கடிது, சிறிது, தீது, பெரிது, எம். சாண் - சாட்கோல், எனவும். அல்வ ழியிலுந்திரிந்தன. டவ்வாகலுமாமென்னும் இறந்ததுதழுவி யஎச்சஇழிவுசிறப்பு உம்மையால்- எண்கடிது சாண்கோல் என இயல்பாதலே வலியுடைத்து எனக்கொள்க. பிறவென்றமிகையா லேவேற்றுமையில்-பாணக்குடியென அகரச்சாரியைபெறுதலு ம், அட்டேண்டிழனி- என்னும் இயல்பும்-மண்குடம் - மட்குடம்- என்னும் விகற்பமும்- இருவழியிலும் இன்னும்- ணகரவீற்றுள் அமையாதனவுளவாயின் அவையுங்கொள்க. சாதியுங்குழுவும் ஆகுபெயராய் அவற்றையுடையாராகிய உயர்திணைப்பொருளையு ணர்த்தி நின்றனவாயினும் - தெய்வம் என்றாற்போலச்சொல்லா ல் அஃறிணையாதலின் - பொதுப்பெயருயர்திணைப்பெயர்களீற் றுமெய் என்னுஞ்சூத்திரத்தால் அமையாவாயின - மேல்வரும் ணஃகான்கிளைப்பெயரொன்பதும் இத்தலைமைத்து.எண்-சாண்-என் னும்-பொழிபுறுதி-ணகரத்தை- எண்சாண்-டவ்வாகலுமென் றது - இலக்கணை,இதன்முடிபு விளங்கிக்கிடந்தன, (அ)

ணஃகான்கிளைப்பெயரியல்புமஃகா, னடைவுமாகும் வேற்று மைப்பொருட்கே. *

இது, ணகரஈற்றுச்சாதிப்பெயர்க்கு எய்தியதுவிலக்கலும்- பிறிதுவிதிவகுத்தலும் உணர்த்துகின்றது, (இ-ள்.) ணஃகான்கி ளைப்பெயர்- ணகரவீற்றுச்சாதிப்பெயர், இயல்பும் - வல்லினம் வந்துபுணரின் ஈறுதிரியாமல் இயல்பாதலும்,அஃகானடைவுமா கும் - அகரச்சாரியைபெறுதலுமாம், வேற்றுமைப்பொருட்கு- வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கு- எ-று.

[உ-ம்,]எயின்குடி-சேரி- தோட்டம்-பாடி-எம்.எயினக்குடி- எயினச்சேரி-தோட்டம்-பாடி-எனவும்வரும். பொருட்கேயென் றமிகையிலுலே- எயினமரபு- எயினவாழ்வு-எயினவணி-எனமெற் றக்கணங்கள்வந்துபுணர அகரச்சாரியைபெறுதலும். எயினக்கன்

னி- எயினப்பிள்ளை-எயினமன்னன்- என அவ்வழிச்சந்தி
க்ரச்சாரியைபெறுதலுங்கொள்க. எயின்-வேடர்சாதி, இனை-என்
னும்பலபொருளொருசொல் இங்கேசாதிமேல் நின்றது. எயின
ர்-வேடர். (௯)

மீன்றவ்வொடு பொரூஉம்வேற்றுமைவழியே. *

இது, ஒருவிதத்திலேமீன் - என்னும்னகரவீற்றுச்சொற்
குஎய்தியதுவிலக்குகின்றது. (இ-ள்.] மீன்- இதின்ஈற்றுனகரம்,
வேற்றுமைவழி-வேற்றுமைச்சந்தியில்,றவ்வொடுபொரூஉம்- (வ
ல்லெழுத்துவந்துபுணரின்) றகரத்தொடு விகற்பித்து நிற்
கும். எ-று.

[உ-ம்,] மீன்கண்-மீற்கண், மீன்செவி- மீற்செவி-தலை-புறம்-
எனவரும். (௰)

தேன்மொழிமெய்வரி னியல்புமென்மை, மேவினிறுதியழிவு
ம்வலிவரி, னீறுபோய்வலிமெலிமிகலுமாமிருவழி. *

இது, தேனென்னுஞ்சொல்லுக்கு- எய்தியது விலக்கலும்-
எய்தியது பிறமாமற்காத்தலும் - எய்தியதன் மேற்சிறப்புவிதியு
ம்- வரும்வல்லினத்திற்கு எய்தியதன்மேற்சிறப்புவிதியும் - உண
ர்த்துகின்றது, (இ-ள்,) தேன்மொழிமெய்வரின் - தேனென்னு
ஞ்சொல்- மூவினங்களும் வந்துபுணரின், இயல்பும்- இறுதினக
ரம் முன்போலவேயியல்பாயிருத்தலும், மென்மைமேவினிறுதி
யழிவும்- மெல்லினம்வந்து புணரின் இறுதினகரம் இயல்பாதல
ன்றிக்கெடுதலும்,வலிவரின் - வல்லினம்வந்துபுணரின், ஈறுபோ
ய்வலிமெலிமிகலுமாம்.(இயல்பாதலன்றி)அவ்விறுதினகரங்கெட்
டுவந்தவல்லினமாயினும் அதற்கு இனமாயினும் மிகலுமாம், இ
ருவழி- அல்வழிவேற்றுமையிரண்டிடத்தும், எ-று.

குறிலணைவில்லா னனக்கள் வந்தநகரந்திரிந் துழிநணவும்
கேடே- என்றதினால் இயல்பிற்கு நகரம் ஒழிந்த எட்டுமெய்யும்
வருவித்துக்கொள்க. [உ-ம்,] தேன்கடிது-சிறிது- தீது-பெரிது-
தேன்ஞான்றது- தேன்மாண்டது- யாது-வலிது-எம். தேன்மொ
ழி- தேமொழி- எம். தேன்குழம்பு- தேக்குழம்பு-தேங்குழம்பு-
எம். அல்வழியில்வந்தன - தேன்பெருமை- தேன்மலிவு - தேன்யா
ப்பு-எம். தேன்மலர்- தேமலர்- எம். தேன்குடம்- தேக்குடம்-
தேங்குடம்- எனவும். வேற்றுமையில் வந்தன பிறவுமிப்படியே
காண்க.

ந்தேன்- என்பதுபலபொருளொருசொல்லாதலால்- மணங்கமழ்சோலையென்றும் பொருளைக்கொண்டு- தேன்கமழ்ச்சோலை- தேங்கமழ்சோலை-யென இத்தவிகாரங்களையேற்றுவருவனவுங்கொள்க. ணனவல் லினம்வரட் டறவுமென- எய்தியதை- இதில்- மெய்வரினியல்பென்றதனுள்- வேற்றுமையில்வலிவர இயல்பாதலும், வலிவரின் றுபோய் வலிமெலிமிகலுமாமென்றதும் விலக்கிற்றெனவும். அல்வழிவலிவர இயல்பாமென எய்தியதை- இதில்- மெய்வரினியல்பென்றதனுள்-அல்வழியில்வலிவரஇயல்பாதல்- காத்ததெனவும், ணன-எனகறுபற்றிச்சொன்ன பொதுவிதியை ஒருபக்கந்தழுவி இச்சூத்திரத்தால் இந்த ஒருசொல்லுக்கு விதிகூறுதலால் - எய்தியதன்மேற் சிறப்புவிதியெனவும், அல்வழிக்கணத்துமெய்வரினுமியல்பாமென்றதனுள் அல்வழியில்- இயல்பாக- வலிவருதலெய்தியது இச்சூத்திரத்தில் வேற்றுமையில- இயல்பாகவலிவருதல் அதன்மேற்சிறப்பாதலால் - வருமொழிக்கு எய்தியதன்மேற்சிறப்புவிதி யெனவுங்காண்க. (இயல்பும் - இறுதியழிவும் - மிகலும்- ஆம்என்முடித்துக்கொள்க.

(௫) தேனென்கிளவி வல்லெழுத்தியையின், மேனிலையொத்தலும் வல்லெழுத்துமிகுதலு, மாமுறையிரண்டுமுரிமையுமுடைத்தே, வல்லெழுத் துமிகுவழியிறுதியில்லை - எம். மெல்லெழுத்துமிகினுமானமில்லை - எம். மெல்லெழுத்தியையினிறுதியோடுறழும் - எம். ஆசிரியர்தொல்காப்பியனார் கூறுதலுங்காண்க. (௰௧)

மரமல்லெகினின் மொழியியல்புமகர, மருவவலிமெலிமிகலுமாகும். *

இது, எகின் என்னுஞ்சொல்லுக்கு எய்தியது விலக்கலும்- எய்தியதுவிலக்கிப்பிறிது விதிவகுத்தலும்- வரும்வல்லினத்திற்கு எய்தியதன்மேற்சிறப்புவிதியும் உணர்த்துகின்றது. (இ-ள்.) மரமல்லெகின்மொழி-மரமன்றிப்பறவையாகிய அன்னத்தையுணர்த்தும் எகினென்னுஞ்சொல், இயல்பும் (வேற்றுமைச்சந்தியிலும் வல்லினம்வந்து புணரின்) இயல்பாதலும், அகரமருவ வலிமெலிமிகலுமாகும்- (இருவழியிலும்) அகரச்சாரியைபொருந்தவந்தவல்லெழுத்தாயினும் அதற்குஇனவெழுத்தாயினும் மிகுதலுமாமென்றவாறு.

[உ-ம்,] எகின்கால்- எகின்சிறை - தலை- புறம்- எனவேற்றுமையிலுமியல்பாயிற்று. எகினப்புள்- எகினம்புள் - எம்.எகினக்கால்- எகினங்கால்- எம். இருவழியும் அகரமருவ வலிமெலி மிகுந்தன, அகரமருவுதற்கு வருமொழியெடுத்துச்சொல்லாததினாலே-நாற்கணங்களுங்கொள்க. [வ-து,] எகினமாட்சி - எகினவாழ்க்கை - எகினவழக்கு - எனவரும்பிறவுமன்ன. (௰௨)

குயினூன்வேற்றுமைக் கண்ணுமியல்பே. *

இது, இவ்விருவகைச்சொல்லுக்கும்எய்தியதுவிலக்குகின்றது - (இ-ள்.) குயினூன்-இவ்விரண்டுனகரவீற்றுச்சொற்களும், வேற்றுமைக்கண்ணுமியல்பு. (வல்லினம்வரின் அல்வழியில்இயல்பாதலுமன்றி) வேற்றுமையிலும்இயல்பாம், எ-று.

[உ-ம்.] குயின்கடுமை- ஊன்கடுமை- குயின்சிறுமை- ஊன்சி றுமை-தீமை-பெருமை- எனவரும்-குயின்-மேகம். (௰௬)

மின் பின் பன்கன்றொழிற் பெயரனைய, கன்னவ் வேற்றுமெ ன்மைமேயாடுறழும். *

இது, இந்த நான்கு சொல்லுக்கும் எய்திய துவிலக்கிப்பி றி துவிதிவகுத்தலும் - அகரச்சாரியைமுன்வரும்வல்லினத்திற்கு இயல்பிலும்விதியினுமென்ற சூத்திரத்தால் எய்தியதன்மேற்சிற ப்புவிதியும்உணர்த்துகின்றது. (இ-ள்.) மின் பின் பன் கன்-இந் நான்குனகரவீற்றுச்சொற்களும், தொழிற்பெயரனைய - தொழி ற்பெயர்போலயகரமல்லாத மெய்வரின் உகரச்சாரியையைப்பொ ருந்தும், கன்னவ்வேற்று-இவற்றுள்-கன்என்னுஞ்சொல் உகரச்சா ரியையன்றி அகரச்சாரியையும்பெற்று, மென்மைமேயாடுறழும்- (வல்லினம்வந்துபுணரின்)வல்லெழுத்தாயினும் அதற்கு இனமெ ழுத்தாயினுமிக்கு விகற்பித்துவரும், எ-று.

அவ்வும் என்கின்ற உம்மைகுறைந்துநின்றது. [உ-ம்.] மின் னுக்கடிது-பின்னுக்கடிது-பன்னுக்கடிது-கன்னுக்கடிது - நன் று-வலிது- எம். மின்னுக்கடுமை- நன்மை-வன்மை - எம். கன்ன த்தட்டு- கன்னந்தட்டு- எம்.கன்னத்தூக்கு-கன்னந்தூக்கு- எம். அல்வழிவேற்றுமையிடத்துமுறையேவந்தன - பிறவுமிப்படியே காண்க - கன்-என்பது-சிறுதராசுத்தட்டு, முன் எனபதை-முன்ன ம் என்றாற்போல - இதைக்கன்னம்-என்றுங்கூறுவர். (௰௭)

தன்னென்னெனம்பவற்றீற்றுனவ்வன்மையோடு, றுறழு நின்னீறி யல்பாமுறவே. *

இது, தன் என் என்னும்விகார மொழிகட்கு எய்தியதுவி லக்கலுடன்விலக்காமையும் - நின் என்னும் விகாரமொழிக்குஎய் திய துவிலக்கலுமுணர்த்திற்று-(இ-ள்.) தன்னென்னெனபவற்றீ ற்றுன-தான் என்பதும்யான் என்பதுந்திரிந்ததன் என்-என்னும்- இவ்விரண்டுசொற்களின் ஈற்றுனகரமானது, வன்மையோடுற றுழும் - வல்லினம்வந்துபுணரின் ஒருகால் இயல்பாகியும் ஒருகால் விகாரமாகியும்விகற்பித்துமுடியும், நின்னீறியல்பாம் - (நீயென் பதுவிகாரப்பட்ட) நின்என்னுஞ்சொல் இறுதினகரம்வல்லினம் வந்துபுணரின்திரியாது இயல்பேயாம், எ-று.

[உ-ம்.] தன்பகை-தற்பகை-என்பகை-எற்பகை-எம். நின்பகை எம்,வரும்- உறவேயென்றமிகையாலே - மின்பின்முதலியன-மின்

கடிது-மின்கடுமைஎன இருவழியுஞ்சாரியைபெறாதலுந்திரிதலுமின்றிவருதலும் - மான்குளம்பு-அழன்கை-என வேற்றுமைச்சந்தியில்- எடுத்துச்சொல்லாதன இயல்பாதலும் - வரிற்கொள்ளும் - எனச்செயின் என்னும்வாய்பாட்டு வினையெச்சம் பொதுச்சூத்திரத்தால்இயல்பாகாது திரிதலும், இன்னும் னகரவீற்றுள் அமையாதனவுளவெனின் அவையுங்கொள்க. நின்றபதவிகாரமொழியாதலால் - 'பொதுப்பெயருயர்திணைப் பெயர்களீற்றுமெய்வலிவரினியல்பாமென்னுஞ்சூத்திரத்துள் அடங்காதாயிற்று. (௰௫)

மவ்வீறொற்றழிந்துயிரீறொப்பவும், வன்மைக்கினமாத்திரிப
வுமாகும். *

இது, மகரவீறுபுணருஞ்செய்கை கூறுகின்றது - (இ-ள்.) மவ்வீறொற்றழிந்து-மகரவீற்றுச்சொற்களின் இறுதிமகரங்கெட, உயிரீறொப்பவும் - இயல்பாகியவுயிரீறுபோல உயிர்வரின் உடம்படுமெய்தோன்றியும் - வல்லினம்வரின்மிக்கும் - மெல்லினமும் இடையினமும்வந்துபுணரின் இயல்பாகியும்புணர்வனவும், வன்மைக்கினமாத்திரிபவுமாகும் - வல்லினம்வந்து புணரின் அந்த மகரம்வந்ததற்கு இனமாகத்திரிதலுமாம், எ-று.

[உ-ம்,] வட்டம்ஆழி-வட்டவாழி, கடல்-வட்டக்கடல், நேமி-வட்டநேமி, வாரி-வட்டவாரி, எம்- இவை- அல்வழி. மரம்அடி-மரவடி, கால்-மரக்கால், நார்-மரநார், வேர்- மரவேர், எம். இவை வேற்றுமை. ஆக இருவழியினும் ஒற்றழிந்து உயிரீறொத்துமுடிந்தன. நாம்கடியம்-நாங்கடியம், அம்களிறு-அங்களிறு, எம். நம்கை-நங்கை, நும்செவி- நுஞ்செவி, தலை- நுந்தலை, எம். வன்மைக்கினமாகத்திரிந்தன. பிறவுமன்ன. பகரம்வரின் அது அதற்கு இனமாதலால்திரியாதென்பதுபெறப்படும். (௰௬)

வேற்றுமைமப்போய்வலிமெலியுறழ்வு, மல்வழியுயிரிடைவரி
னியல்பும்முள. *

இது, சிலமகர வீற்றிற்குமேலைச் சூத்திரத்தால் எய்தியது பிறழாமற்காத்தலும்- விலக்கலும்- வரும்வல்லினத்திற்கு இயல்பினும்விதியினுமென்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற்சிறப்புவிதியுங்கூறுகின்றது, (இ-ள்.) வேற்றுமைமப்போய்-வேற்றுமைச்சந்தியிலேமகரங்கெட, வலிமெலியுறழ்வும் - (அவற்றின்முன்வரும்) வல்லினமாவது அதற்கு இனமாவதுமிகுந்துவிகற்பித்தலும், அல்வழியுயிரிடைவரின் - அல்வழிச் சந்தியிலே உயிரும் இ

டையினமும்வரின், இயல்பும்முள. (வெடாது) இயல்பாதலுமாம், எ-று.

[உ-ம்,] குளம்கரை - குளக்கரை, குளங்கரை, எம் - குளம்அழகிது - குளமழகிது, குளம்யாது, குளம்வலிது, எம்- அருளுடரசன் - கொல்லும்யானை - எம். வரும்பிறவுமிப்படியே காண்க. (மஎ)

நுந்தம், எம்நம்மீறாமவ்வருஞநவே. *

இது, சிலமகரவீற்றுப்பெயர்க்கு எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுக்கின்றது, (இ-ள்.) நும்-தம்-எம்- நம்- என்றுமிந்நான்குவிகாரமொழிகளினிறுதிமகரம், வருஞநமேல்வருமொழுக்களாகத்திரியும், எ-று.

[உ-ம்,] நுஞ்ஞாண்-நுந்நூல் - தஞ்ஞாண்- தந்நூல்- எஞ்ஞாண்-எந்நூல்- நஞ்ஞாண்- நந்நூல் - எனவரும்- ஞநவரிற்றிரியுமெனவே-மகரம்வரின்- திரியாதென்பது பெறப்படும். ய-வரும்ஞநக்களாகத்திரியுமெனமுடிக்க. (மஅ)

அகமுனர்ச்செவிகைவரினிடையனகெடும். *

இது, அகமென்பதற்குஎய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது, (இ-ள்.) அகமுனர்- அகம்என்னும் இடப்பெயர்முன், செவிகைவரின் - செவி- கை- என்னுஞ்சினைப்பெயர்கள்வந்துபுணரின், இடையனகெடும் - (மகரம்வன்மைக்கினமாய்த்திரிதலேயன்றி) அதனிடைநின்றககரவொற்றும் அதையூர்ந்துநின்ற அகரவுயிருங்கெடும், எ-று.

ஊர்தல்-நடத்துதல். [உ-ம்,] அகம்செவி-அஞ்செவி, அகம்கை - அங்கை, எனவரும். கெட்டேவருமென்று உறுதிகூறாததினால் - அகஞ்செவி - அகங்கை- எனவருதல்விலக்கப்பட்டனவல்லவென்க-செவியகம்- கையகம் - என்னும்இடவுறுப்புத்தற்கிழமைப்பெயரொடுமுடிந்தஆறும்வேற்றுமைத் தொகைச்சொல்லை முன் பின்னாகமாற்றிவழங்கலால் இவ்விரண்டும் இலக்கணப்போலியாய்த்தழாத்தொடராகிய அல்வழிச்சந்தியில் ஒன்றுமென்க. அகஞ்சிறையென்பது- அகத்தின்கண்ணதாகியசிறையெனவருதலால்- ஏழாம்வேற்றுமைத்தொகை. (மகூ)

ஈமுங், கம்முமுருமுந்தொழிற்பெயர்மானு, முதலனவேற்றுமைக்கவ்வும்பெறுமே. *

இது, இந்தமூன்றுசொற்கும்எய்தியதுவிலக்கிப்பிறிதுவி

கின்றது, (இ-ள்.) ஈமுங்கம்முமுருமும் - இந்தமூன்று சொல்லும், தொழிற்பெயர்மாறும்- முதனிலைத்தொழிற்பெயர் போல- யவ்வல்லாதமெய்கள் வரின் இருவழியும் உகரச்சாரியை பெற்றுமுடியும், முதலன- இவற்றுள்- முதனின்ற ஈமுங்கம்முமு, வேற்றுமைக்கவ்வும்பெறும் - வேற்றுமைச்சந்தியில் அகரச்சாரியையையும் பெறும், எ-று.

இவற்றுள் - கம் என்பது- பலபொருளொருசொல்லாதலால்- எந்தப்பொருளையுணர்த்தி நிற்பினும் இந்தவிதிபொருந்துமெனக்கொள்க. [உ-ம்,] ஈமுக்கடிது - கம்முக்கடிது- உருமுக்கடிது- நீண்டது - வலிது - எம். கடுமை - நீட்சி - வன்மை-எம். ஈமக்குடம்- கம்மக்குடம- எம். முறையேகாண்க.பிறவுமிப்படியேகொள்க. கம் - என்பது கம்மியரதுதொழில் - அத்தொழிலாற்செய்த குடமெனக. ஈம் - என்பது - ஈமமென அம்முச்சாரியைபெற்றுத்தனிமொழியாயுஞ்சுடுகாட்டையுணர்த்தி நிற்கும். உரும் - இடி, அம்மு - தம்மு- நம்மு - நும்மு- உம்மை- எனச்சாரியை இடைச்சொற்கள் - உகரமும்-ஐகாரமும்-பெறுதல் உரையிற் கொள்க. (௨௰)

யரழமுன்னர்க்கசதபவல்வழி, யியல்புமிகலுமாகும்வேற்றுமை, மிகலுமினத்தோடுறழ்தலும்விதிமேல். *

இது, யரழக்கள் கசதபக்களோடு புணருஞ்செய்கை கூறுகின்றது (இ-ள்.) யரழமுன்னர்-இந்தமூன்று ஒற்றுக்களின்முன்னும், கசதப - இந்தநான்குமெய்களும் வந்துபுணரின், அல்வழி - அல்வழிச்சந்தியில், இயல்புமிகலுமாகும் - இயல்பாய்முடிதலும்மிக்குமுடிதலுமாம், வேற்றுமை - வேற்றுமைச்சந்தியில், மிகலும் - மிக்குமுடிதலும், இனத்தோடுறழ்தலும்விதி- வந்தவல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிக்குவிகற்பித்தலும் விதியாம், எ-று.

விதி-இலக்கணம்,[உ-ம்,] வேய்கடிது - வேர்கடிது - வீழ்கடிது - சிறிது - தீது - பெரிது - எனஇயல்பாயின - மெய்க்கீர்த்தி- போய்க்கொண்டான்- கார்ப்பருவம் - பூழ்ப்பறவை - எனமிக்கன- இவை அல்வழி, நாய்க்கால் - தேர்க்கால் - பூழ்க்கால்-என வேற்றுமையில்மிக்கன- வேய்க்குழல் - வேய்ங்குழல் - ஆர்க்கோடு- ஆர்ங்கோடு - எனவேற்றுமையில் இனத்தோடுறழ்ந்தன-பிறவுமிப்படிக்காண்க. மேலென்றுமிகையில்லை- வரட்புருவுகளிலு

க்கனவேற்றுமையில் இயல்பாதலும் - பாழ்க்கிணறு - பாழ்ங்கிணறு- எனப்பண்புத்தொகையில்விகற்பித்தலும் - சீர்க்கொடி- சீரங்கொடி - குமிழ்ங்கோடு- குமிழங்கோடு - என ரகாரழகாரவீறுகள்- வேற்றுமையில் - மெல்லெழுத்தும்- அம்மும்பெற்றுறழ்தலும்- வேயாது - வேயாப்பு - எனயகரவீறு - யகரத்தின்முன் இருவழியுஞ்செய்தலும்இன்னும் அமையாதனவுளவாயின் அவையுங்கொள்க. பாழ்க்கிணறு- பாழங்கிணறு என்பதைப்பாழினுட்கிணறுஎனப்பொருள்கூறிவேற்றுமையில்உறழ்ந்தனவென்பாருமுண்டு-உறழ்தல்-விகற்பித்தல். (உக)

தமிழவ்வுறவும்பெறும்வேற்றுமைக்கே, தாழுங்கோல்வந்துறுமேலற்றே. *

இது, இந்த இரண்டுசொற்கும் எய்தாதது எய்துவிக்கின்றது-(இ-ள்.)தமிழவ்வுறவும்பெறும்வேற்றுமைக்கு-வேற்றுமைப்புணர்ச்சிக்குத்தமிழ் என்னுஞ்சொல்(நான்கு கணங்களும்வந்துபுணரின்) அகரச்சாரியை பொருந்தவும்பெறும், தாழுங்கோல்வந்துறுமேலற்று- தாழ்என்னுஞ்சொல்லும் அதனோடுகோல்என்னுஞ்சொல்வந்துபுணருமாயின் அவ்வாறுஅகரச்சாரியையைப்பெறும், எ-று.

தமிழ்க்குவருமொழியெடுத்துச்சொல்லாததினாலே நாற்கணமுங்கொள்க. நாற்கணமாவன- வன்கணம்-மென்கணம்- இடைக்கணம் - உயிர்க்கணமெனக்காண்க. [உ-ம்,] தமிழப்பிள்ளை - தமிழநாகன் - தமிழவளவன்- தமிழவரசன் - எம். தாழக்கோல்- எம். வரும் - பிறவுமிப்படியேகாண்க. அவ்வுறவும்பெறும் என்றதிரந்து தழுவிய எச்சவும்மையால்- தமிழின்சுவை என இன்சாரியைபெறுதலுங்கொள்க. தமிழையுடையபிள்ளை - தாழைத்திறக்குங்கோல்- எனவிரியும்- தாழக்கோல்- என்பது - திறவுகோல், தாழாகிடகோல் - எனவிரித்து இருபெயரொட்டுப் பண்புத்தொகையெனினும்- அமையும். (உஉ)

கீழின்முன் வன்மைவிகற்பமுமாகும். *

இது, கீழென்னுஞ்சொன்முன் வரும் வல்லினத்திற்குஎய்தியது பெரும்பாலும்விலக்குகின்றது-(இ-ள்.)கீழின்முன்வன்மை- கீழென்னுஞ்சொன்முன்வரும் வல்லினம்,விகற்பமுமாகும்-ஒருகால் இயல்பாகியும் ஒருகால்மிக்கும் வரும்விகற்பத்தையும் பொருந்தும், எ-று.

[உ-ம்,] கீழ்குலம் - கீழ்க்குலம் - கீழ்சாதி - கீழ்ச்சாதி - என வரும். விகற்பமும் - என்றஇழிவுசிறப்பும்மையால் - இயல்பேசிறப்புடையது. கீழ்மைஎன்னும் பண்புடன் புணர்வது பதவியலிலேசொல்லிவந்தமையால் - இது, கீழிருந்துங்கீழல்லர்கீழல்லவர்-என்றதுபோலக்-கீழ்என்பது-பண்பாகுபெயராய் நின்று-குலம்- சாதி- என்பனவற்றொடு புணர்ந்து- கீழாகியகுலம்- கீழாகிய சாதி- எனவிரிந்து- இருபெயரொட்டுப் பண்புத்தொகையாமென்க. (உகூ)

லளவேற்றுமையிற்றடவுமல்வழி, யவற்றோடுறழ்வும்வலிவரினாம், மெலி, மேவினணவுமிடைவரினியல்பு, மாகுமிருவழியானு மென்ப. *

இது, லளக்கள் புணருஞ்செட்கைகூறுகின்றது, (இ-ள்.) லளவேற்றுமையில் - வேற்றுமைச்சந்தியிலே லளவென்கின்ற இரண்டிறும், றடவும் - முறையேறகரமாகவும் டகரமாகவும், அல்வழி- அல்வழிச்சந்தியிலே, அவற்றோடுறழ்வும், அந்த றகர டகரங்களுடனே அந்த லளக்கள் விகற்பித்தலும், வலிவரினாம் - வல்லினம்வந்து புணரினாகும், மெலிமேவின்-மெல்லினம்வந்துபுணரின், னணவும்- அவைனகர ணகரங்களும், இடைவரின் - இடையினம் வந்துபுணரின், இயல்பும் - திரியாது இயல்பாதலும், ஆகுமென்ப- ஆமென்றுசொல்லுவர்புலவர். இருவழியானும் - அல்வழிவேற்றுமையிரண்டிடத்தும், எ-று.

[உ-ம்,] கற்குறை - முட்குறை - எம். இது, வேற்றுமை - கல்குறிது- கற்குறிது - முள்குறிது - முட்குறிது- எம்- இது, அல்வழிஉறழ்வு - கன்ஞெரிந்தது - முண்ஞெரிந்தது - மலிந்தது - எம். கன்ஞெரி - முண்ஞெரி - மலிவு - எம். மெலிமேவஇருவழியும் னணக்களாயின - கல்யாது - முள்யாது - வலிது - எம். கல்யாப்பு - முள்யாப்பு - வன்மை - எம். இடையினம்வர இருவழியுமியல்பாயின- பிறவுமிப்படியேகாண்க. அல்வழியவற்றோடுறழ்வுமென்றாராயினும் - இவற்றொடு மய்ங்காதெனவிலக்கியதகரம்வரின் ஏற்புழிக்கோடல்என்னும் உத்தியினாலே திரிபொன்றுமேபெறுமெனக்கொள்க. அவைவருமாறு-கற்றீது - முட்டீது-எனக்காண்க. (உச)

குறில்வழிலளத்தவ்வணையினாய்த, மாகவும்பெறூஉமல்வழியானே. *

இது, அவ்விரண்டொற்றினுக்குமெய்தியதன்மேற்சிறப்புவிதி கூறுகின்றது - (இ-ள்.) குறில்வழிலள - தனிக்குறிலின் பின்னின்ற லகர ளகரங்கள், தவ்வணையின் - தகரம்வந்தடையுமிடத்து, ஆய்தமாகவும்பெறூஉம் - (றகரடகரங்களாகத்திரிவதுமன்றி) ஆய்தமாகத்திரிதலையும் பொருந்தும், அல்வழியான் - அல்வழிச்சந்தியிலென்றவாறு.

[உ-ம்,] கல் - தீது- கஃறீது, முள் - தீது- முஃடீது, எனவரும்.புணர்ச்சிபெறுமெனமுடிக்க. (உரு)

குறில்செறியாலளவல்வழிவந்த தகரந்திரிந்தபிற்கேடுமீரிடத்தும், வருநத்திரிந்தபின்மாய்வும்வலிவரி, னியல்புந்திரிபுமாவ னவுளபிற. *

இது, ஏய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுக்கின்றது-(இ-ள்.) குறில்செறியாலள - தனிக்குறிலொன்றையுஞ்சாராமல் (நெடிலையுங்குறிலெடிலையுங்குறிலிணையையுஞ்) சார்ந்துவரும் லகாரளகாரங்கள், அவ்வழி- அல்வழிச்சந்தியில், வந்ததகரந்திரிந்தபிற்கேடும் - வருமொழிக்குமுதலாக வந்ததகரந்திரியும்இடத்துக்கெடுதலும், ஈரிடத்தும்- அல்வழிவேற்றுமை யிரண்டிடத்தும், வருநத்திரிந்தபின்மாய்வும்-வருமொழிக்கு முதலாகவரும் நகரந்திரியும் இடத்துக்கெடுதலும், வலிவரின்-மற்றவல்லினம்வந்துபுணரின், இயல்புந்திரிபும் -(அல்வழியிலே விகற்பித்துவாராமல்)இயல்பாதலுந்திரிந்தேவருதலும்- (வேற்றுமையில்-திரியாமல்)இயல்பாதலும், ஆவனவுள- பொருந்துவனவுளவாமென்றவாறு.

திரியுமுன்கெடுவனவற்றைத்திரிந்தபிற்கேடும்மாய்வும்என்றது காலவழுவமைதி. [உ-ம்,] வேல் - தீது-வேறீது, விரால் - தீது- விராறீது, விரல்- தீது-விரறீது, ஆரல் - தீது - ஆரறீது, கருங்கோல் - தீது - கருங்கோறீது,எம். வாள்-தீது- வாடீது,வராள்-தீயள்-வராடீயள், பொருள்- தீது- பொருடீது, மஞ்சள்-மஞ்சடீது, எம். அல்வழியிலே தகரந்திரிய-லளக்கள்கெட்டன. வேல்-நன்று-வேனன்று, வரால்-நன்று-வரானன்று, விரனன்று -ஆரனன்று-கருங்கோனன்று - எம். வாள்-நன்று-வாணன்று, வராள்-நல்லள் - வராணல்லள், பொருள்-நன்று,பொருணன்று - மஞ்சணன்று - எம். நன்மை-எம். ஈரிடத்தும் வருநத்திரிந்தபின் - லளக்கெட்டன.கால்கடிது-தேள்கொடிது - சிறிது - பெரிது -எம். பழுங்கல்-பழுங்கற்கறி-சோறு - பயறு, அழுங்கல் - அழுங்கற்காய்- சோறு- போ

ச், சுழங்கற்கடீ-ஆரற்கவர்-புழற்கால்-இயல்புவிதிற்கெண்ணடை வத்தால்-வந்தாற்கொள்ளும்-செல்லும்-போம்-எம். வலிவர அல்வழியிலே இயல்பாகியுந்திரிந்தும்வந்தன-கால்குதித் தாடிக்கட ல்புகமண்டிவாள்போழ்ந்தட்ட நீள்கழன்மறவர் - எனவேற்றுமையிலேதிரியாமல்இயல்பாயின.

இனிப்பிறவென்றமிகையாலே - தோன்றநிமை-வேஊமை-எனவேற்றுமையிலுங்ககரந்திரியுமிடத்துக்கெடுதலும், காற்றுணை - தாம்பிணையெனக்கெடாமையும், கொல்களிறு- சொல்பொருள்-எனவினைத்தொகையில்இயல்பாதலும், வேழ்தூ வேற்றீது - வாஊது - வாட்டூது - எனநெடிலிறுதியல்வழியிலே கெட்டுத்திரிந்தும்விகற்பித்தலும், விழல்காடு, விழன்காடு-சேறு-தாள்-புறம்-என. லகரம் வேற்றுமையிலே றகரமாகத்திரியாதுனகரமாய்த்திரிதலும், மூன்றுணவாழ்வு-ஒரு நாவைச்சுழவி- எனளகரமுறையகாரம்பெறுதலும்இன்னுமிவ்விரண்டீற்றுள் அமையாதனபிறவுங்கொள்க. இங்கேயுயர்திணையிலே காட்டியவிகாரங்கள் - மயக்கவிதியில்லாதநிறைலே வந்தன ஆதலால்- சிலவிகாரமாமுயர்திணையென்பதில அடங்காமைகாண்க. ஆவனஉன எனமுடித்துக்கொள்க. (உகூ)

ளவிறுதொழிற்பெயரீரிடத் துமுவ்வுறு, வலிவரினல்வழியிய
ல்புமாவனவுள. *

இது, விகுதிபெற்றதொழிற்பெயர்க்கும் முதனிலைதிரிந்ததொழிற்பெயர்க்கும் வருவதோர்சந்தேகமறுத்தலும் ஒருவிதத்தால் எய்தியது விலக்கலுமுணர்த்துகின்றது, (இ-ள்.) லளவிறுதொழிற்பெயர்- லகரத்தையிறுதியாகவுடைய விகுதிபெற்றதொழிற்பெயரும்-ளகரத்தையிறுதியாகவுடைய முதனிலைதிரிந்ததொழிற்பெயரும், ஈரிடத்துமுவ்வுறு- அல்வழிவேற்றுமை யிரண்டிடத்தும்- முதனிலைத்தொழிற்பெயர்போல யவ்வல்லாதமெய்வரின் உகரச்சாரியைபெறுவாம், வலிவரினல்வழி யியல்புமாவனவுள-அல்வழிச்சந்தியிலே வல்லினம்வந்துபுணரின் உறழாமல் இயல்பாவனவுஞ் சிலவுளவாமென்றவாறு.

[உ-ம்] ஆடல்சிறந்தது-ஆடற்சிறந்தது-ஆடனன்று-ஆடல்வலிது- எம்-ஆடற்சிறப்பு- ஆடனன்மை- ஆடல்வலிமை-எம். விகுதிபெற்றதொழிற்பெயர் இருவழியுமுகரச்சாரியைபெறாதுபொதுவிதியால்முடிந்தது. கோள்கடிது-கோட்கடிது - கோணன்று-கோள்வலிது - எம். கோட்கடுமை- கோணன்மை-கோள்வலிமை எம். இருவழியும் கொள்- என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயருமவ்வாறேமுடிந்தது. நடத்தல்கடிது- நடப்பித்தல்கடிது-என அல்வழியிற்சிலவுறழாமல் இயல்பாயின. இயல்புமாவனவுமென்ற-இறந்ததுதழுவிய எச்சஇழிவுசிறப்புஉம்மையால்-பின்னல்கடிது-பின்னற்கடிது-உன்னல்கடிது- உன்னற்கடிது-என

ப்பொதுவிதியால் உறழ்ந்துவருதலேபெரும்பாலனவெனக் காண்க. (உ௭)

வல்லேதொழிற் பெயரற்றிருவழியும், பலகைநாய்வரினும்வே
ற்றுமைக்கவ்வுமாம். *

இது, எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுக்கின்றது. (இ-ள்.) வல்லேதொழிற்பெயரற்றிருவழியும் - வல்லென்னும்லகரவீற்றுச்சொல் அல்வழிவேற்றுமையென்னும்இரண்டிடத்தும் யகரமல்லாதமெய்கள் வந்துபுணர்ந்தால் தொழிற்பெயர்போல உகரச்சாரியைபெற்றுமுடியும், பலகைநாய்வரினும்-அதன்முன் பலகை-நாய்-என்னுமிரண்டுபெயரும்பிறபெயரும்வந்துபுணர்ந்தாலும், வேற்றுமைக்கவ்வுமாம்-வேற்றுமைச்சந்திக்குஉகரச்சாரியையன்றி அகரச்சாரியையும்வரும்- எ-று.

வரினுமென்ற எதிரதுதழீஇய எச்சவும்மையினாலே- பிறபெயர் என்பதும், அவ்வும் என்ற இறந்ததுதழீஇய எச்சவும்மையினாலே- உகரச்சாரியையன்றி- என்பதும், பெறப்பட்டன. [உ-ம்,] வல்லுக்கடிது- வல்லுநன்று- வல்லுவலிது- எ-ம்.வல்லுக்கடுமை - நன்மை - வன்மை - எ-ம். முறையேஇருவழியும் தொழிற்பெயர்போல உகரச்சாரியைபெற்றது. வல்லப்பலகை- வல்லநாய்- வல்லப்புலி. வல்லக்குதிரை- எ-ம். வல்லுப்பலகை-வல்லுநாய்- வல்லுப்புலி- வல்லுக்குதிரை- எ-ம். வேற்றுமைச்சந்தியில் அகரச்சாரியையும் உகரச்சாரியையும் வந்தன. வல்லப்பலகை - வல்லினது அறைகீறியபலகை - எ-ம். வல்லநாய்-வல்லினுவ்நாய் - எ-ம். விரியும் - வேற்றுமைக்கவ்வுமென்றதினாலே-வல்லாகிய நாயென-இருபெயரொட்டுப்பண்புத்தொகையாகவிரியும்போது-அகரச்சாரியைபெறாதென்க.வல்-சூதாடுகருவி. (உ௮)

நெல்லுஞ்செல்லுங்கொல்லுஞ்சொல்லு, மல்வழியானும்றகர
மாகும். *

இதுவுமது, (இ-ள்.)நெல்லுஞ்செல்லுங்கொல்லுஞ்சொல்லும்- இந்தநான்குலகரவீற்றுச்சொற்களும், (வல்லினம்வந்துபுணரின்) அல்வழியானும்றகரமாகும்- (பொதுவிதியால்உறழ்ந்துமுடியாமல்)அல்வழிச்சந்தியிலும்வேற்றுமைச்சந்திபோல - றகரமாகத்திரிந்துமுடியும், எ-று.

[உ-ம்,] நெற்கடிது- செற்கடிது - கொற்கடிது- சொற்கடிது- சிறிது- தீது- பெரிது- எனவரும். செல்- மேகம், கொல்-

என்பது - குரி - என்றாற்போலச்சொல்லன் - என்னும் உயர்திணைப்பொருளைக்காட்டிநின்ற அஃறிணைச்சொல், இந்தநான்குசொல்லிறுதி - லகரம்றகரமாகுமெனமுடிக்க. (உக)

இல்லெனின்மைச்சொற்கையடைய, வன்மைவிகற்பமுமாகா ரத்தொடு வன்மையாகலு மியல்புமாகும். *

இது, இல்லென்னும் பண்புச்சொல்லுக்கு எய்தியதுவிலக்கிப்பிறிது விதிவகுத்தலும் - வரும்வல்லினத்திற்குஎய்தியதுபிறழாமற்காத்தலும்உணர்த்திற்று - (இ-ள்.) இல்லெனின்மைச்சொற்கு - (இடத்தைக்குறியாமல்) இன்மைப்பண்பைக்காட்டிநிற்கும் இல் - என்னுஞ்சொல்லுக்கு, ஐயடைய - ஐகாரச்சாரியை பொருந்த, வன்மைவிகற்பமும் - வந்தவல்லினமிக்கும்மிகாதுமாகவிகற்பித்தலும், ஆகாரத்தொடு வன்மையாகலும் - ஆகாரச்சாரியைபொருந்த அவ்வழிவந்தவல்லினமிக்குமுடிதலும், இயல்புமாகும் - (இந்தஇரண்டுவிதியும்பெறாமல்) இயல்பாதலுமாம், எ-று.

சாரியைபெறுதற்கு வருமொழியெடுத்துச்சொல்லாததினாலே நாற்கணமுங்கொள்க. [உ-ம்,] இல்லைபொருள் - இல்லைப்பொருள் - எம். இல்லாப்பொருள் - இல்பொருள் - எம். முறையேகாண்க. இவற்றுள் - இல்பொருள் என்னு மியல்புப்புணர்ச்சிபோலச்சாரியைபெற்றுப்புணர்ந்த இரண்டும்பண்புத்தொகையேயாமென்க.

என்னை - இதுமெய்யீற்றுப்புணரியல் ஆதலாலும், லகரவீற்றிற்குப்பொதுவிதிகூறிச்சிறப்புவிதிகூறும் இடத்து - இன்மைப்பொருளைத்தரும் இல்லென்னுஞ்சொற்கெனவெடுத்துச் சொன்னதினாலும் - விகுதிபுடைவது பதவியலுளன்றியிங்கேகூறவேண்டாமையாலும் - ஆகாரத்தொடுவன்மையாகலுமென வல்லினம்பெறுதலுடனே ஆகாரத்தையுடனிகழ்த்திக்கூறுதலாலும் - இயல்புமாகுமென்றமையாலும் - எதிர்மறைப்பொருளைஇல் - என்னும் பகுதியன்றி-ஆகாரத்தரவேண்டாமையாலும்- அதுதருமாயின்- இன்மைக்கு மறையாகிய - உண்மைப்பொருளைத்தரவேண்டும் ஆதலாலும் - ஆகாரமறைவிகுதி தெரிநிலைக்கேயவிரக்குறிப்புக்கு வாராமையாலும்- இங்கேபெறுகின்ற ஐகாரஆகாரங்கள்சாரியையேயன்றிக்-குறிப்புமுற்று விகுதியும், எச்சத்திலே வந்தமறைவிகுதியுமல்லவென்க. இல்லைபொருள்- இல்லைப்பொருளென்பன இங்கேசொல்லியபடிபண்புத்தொகையாகவும் - பதவியலிற்சொல்லியபடி - ஐகாரவீற்றுக்குறிப்புமுற்றுப்பயனிலையொடுமுடிந்ததொகாநிலை யாகவுங்கொள்ளப்படும் - ஆதலால்-தம்முள் வேற்றுமையாதோவெனின், தொகைநிலையொருமொழிபோல் நடத்தலுந்தொகாநிலைவிட்டிசைத்துநடத்தலும்-தம்முள்வேற்றுமையென்க. இல்லாப்பொருள் என்பது இங்கேசொன்னபடியே - பண்புத்தொகையாகவும்- இல்லாதவென்னும்பெயரெச்சக்குறிப்பு ஈறுகெட்டுப்பயனிலையொடுமுடிந்ததொகாநிலையாகவுங்கொள்ளப்படும் இவற்றிற்குந்தம்முள்வேற்றுமை அதுவாமென்க. இவ்வாறே ஆசிரியர்தொல்காப்பியரும். (ரு) இல்லென்கிளவியின்மைசெ

ட்பின் - வல்லெழுத்துமிகுதலுமையிடைவருதலு, மியற்கையாதலுமாகாரம்வ
ருதலுங்,கொளத்தகமர பினுவிட லுடைத்தே- என்றார்எனக்காண்க. (௩௰)

புள்ளும்வள்ளுந்தொழிற்பெயருமாறும். *

இது, எய்திபதன்மேற்சிறப்பு விதிகூறுகின்றது - (இ-ள்.) புள்ளும்வள்ளும் - இந்தவிரண்டுசொற்களும், தொழிற்பெயருமாறும் - இருவழியும் யவ்வல்லாதமெய்வரிற்பொதுவிதியால்முடிதலேயன்றித்தொழிற்பெயர்போல உகரச்சாரியைபெற்றும் புணரும்- எ-று.

[உ-ம்,] புள்ளுக்கடிது - வள்ளுக்கடிது- நன்று-வலிது- எம். கடுமை- நன்மை-வன்மை- எம்-வரும். (௩௧)

சுட்டுவகரமூவின முறமுறையே, யாய்தமுமென்மையு மியல்புமாகும். *

இது, வகரவீற்றுச்சுட்டுப்பெயர் மூவினத்தொடுபுணருஞ்செய்கைகூறுகின்றது.(இ-ள்:) சுட்டுவகரம் - அவ்- இவ்- உவ்-என்னும் அஃறிணைப்பன்மைச் சுட்டுப்பெயர்களின் ஈற்றுவகரவொற்று, மூவினமுற - வலிமெலியிடையென்னு மூவினங்களும் வந்துபுணர, முறையே-வரிசையாகவே,ஆய்தமுமென்மையுமியல்புமாகும்- வல்லினத்திற்கு ஆய்தமாகவும் மெல்லினத்திற்கு மெல்லினமாகவும் இடையினத்திற்கு இயல்பாகவும் திரிதும், எ-று.

[உ-ம்,] அவ்-கடிய- அஃகடிய, இவ்- இஃகடிய, உவ்- உஃகடிய எம். அவ்ஞானம்-அஞ்ஞானம், இவ்-இஞ்ஞானம், உவ்-உஞ்ஞானம், அவ்-நாடு-அந்நாடு, இவ்-இந்நாடு, உவ்-உந்நாடு, அவ்-மாலை, அம்மாலை, எம். அவ் யாவை-இவ்யாவை-உவ்யாவை-அவ்வாழை-எம்.வரும். வேற்றுமைப்புணர்ச்சிக்கு அற்றுச்சாரியைபெறுமெனமேலேவிதித்துக்கூறுதலால்- இவ்விதி யல்வழிக்கெனக்காண்க. (௩௨)

தெவ்வென்மொழியேதொழிற்பெயரற்றே, மவ்வரின்வஃகானமவ்வுமாகும். *

இது, தெவ் என்னுஞ்சொல் யவ்வல்லாதமெய்களொடு புணருஞ்செய்கை கூறுகின்றது. (இ-ள்.) தெவ்வென்மொழி-தெவ் என்னும் மொழி யவ்வல்லாதமெய்களொடு புணரும்போது, தொழிற்பெயரற்று - தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெற்றுமுடியும்; மவ்வரின் -. அதன்முன்மகரம்வந்துபுணரின், வஃகான்மவ்வுமாகும்-உகரச்சாரியைபெறுதலேயன்றியொரோரிடத்துவகரவொற்று மகரவொற்றாகத்திரியவும்பெறுமென்றவாறு.

[உ-ம்,] தெவ்வுக்கடிது - தெவ்வுமாண்டது - தெவ்வுவலிது- எம். தெவ்வுக்கடுமை- தெவ்வுமாட்சி- வன்மை - எம். தெவ்வுமன்னர்- தெம்மன்னர், எம். தெவ்வுமுனை-தெம்முனை, எம். இருவழியும்முறையேகாண்க. தெவ்-பகை, இந்தப்பகையென்னும்பண்புப்பெயர் பண்பியாயிப்பகைப் பொருளையுணர்த்தி ஆகுபெயராய்நின்றபோதும் இவையேயுதாரணமென்க. (௩௩)

னலமுன்றனவும்ணளமுன்டணவு,மாகுந்தநக்களாயுங்காலே*

இது, முன்னேபுணர்ந்த வருமொழிக்குமுதலாகிய மெய்களுள்ளேதிரிதற்குரியனஇவையெனஎடுத்துணர்த்துகின்றது. (இ-ள்.) னலமுன்றனவும் - னகரலகரங்களின் முன்வருந்தகரம் றகரமாம். அவற்றின்முன்வரும் நகரம்னகாரமாம், ணளமுன்டணவுமாகும் - ணகரளகரங்களின்முன்வரும் தகரம்டகரமாம் அவற்றின்முன்வரும் நகரம் ணகரமாம், ஆயுங்கால் - ஆராயுமி

[உ-ம்,] பொன்றீது- கற்றீது - பொன்னன்று - கன்னன்று - எம்,மண்டீது-முட்டீது-மண்ணன்று-முண்ணன்று - எம், முறையே- னலணளமுன்தநக்கள் அல்வழிச்சந்தியிற் றிரிந்தன.பொற்றீமை-கற்றீமை- பொன்னன்மை-கன்னன்மை-எம், மட்டீமை-முட்டீமை - மண்ணன்மை- முண்ணன்மை- எம், வேற்றுமையில் அவ்வாறுதிரிந்தன. ஆயுங்காலேயென்றதனால் அல்வழிவேற்றுமைப்பொருளினுமேயன்றிமயக்கவிதியில்லாததினாலேயிங்கேபுணருகின்ற முதல் ஈறு - இரண்டினுள் ஒன்றாயினும் இரண்டுமாயினும்விகாரப்பட்டுப்புணர்தற்கு உரியனவாய்நின்றுபுணருமென்பதும், மயக்கவிதியுள்ளனவற்றிற்குவரும் விகாரம் அல்வழிவேற்றுமைப்பொருளின் நோக்கத்தால் வருமென்பதும்பெறப்பட்டன. (௩௪)

உருபின்முடிபவை யொக்குமப்பொருளினும். *

இது, உயிரீற்றுப்புணரியலிலும் இந்தவியலிலும் முடிந்தவேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கு எய்திய தன்மேற்சிறப்புவிதியுணர்த்துகின்றது. (இ-ள்.) உருபின்முடிபவை - மேலுருபுப்புணர்ச்சியிலேமுடிபுமுடிபுகள், ஒக்குமப்பொருளினும்-அவற்றின்பொருட்புணர்ச்சியினும் ஒக்கும், எ-று.

[உ-ம்,] எல்லாவற்றையும் - எனவுருபுப்புணர்ச்சிக்கு அஃறிணையில் அற்றும் உருபின்மேலும்உம்வந்தாற்போல எல்லாவழி

துக்கோடும் - எனப்பொருட்புணர்ச்சிக்கும் வந்தது - எல்லா நமதும் - என உயர்திணையில் நம்முமுருபின்மேல் உம்மும் வந்தாற்போல - எல்லா நங்கையும் - எனப்பொருட்புணர்ச்சிக்கும் வந்தது - எல்லார்தமதும் - எல்லார்தங்கையும், எல்லீர்நுமதும் - எல்லீர்நுங்கையும், தனது - தன்கை, தமது - தங்கை, நமது - நங்கை, எனது - என்கை, எமது - எங்கை, நினது - நின்கை, நுமது - நுங்கை, எனவுருபுப்புணர்ச்சிபொற்பொருட்புணர்ச்சியுமுடிந்தவாறு கண்டுகொள்க - பிறவுமிப்படியேகாண்க. (௫௫)

இடையுரிவடசொலினியம்பியகொளாதவும், போலியுமருவும்
பொருந்தியவாற்றிற், கியையப்புணர்த்தலியாவர்க்கு
நெறியே. *

இது, இப்புணரியலுக்கு ஆவதோர் புறனடையுணர்த்துகின்றது - (இ-ள்.) இடையுரிவடசொலின் - இடைச்சொல்லிலும் உரிச்சொல்லிலும் வடசொல்லிலும், இயம்பியகொளாதவும் - உயிரீறும் ஒற்றீறுமாகிய புணரியலிலே தோன்றல் - திரிதல் - கெடுதல் - இயல்பு - எனவோதியபுணர்ச்சியிலக்கணங்கள்பொருந்தாதுவேறுபட்டுவருவனவும், போலியுமருவும் - இலக்கணப்போலிமொழிகளும்மரூஉமொழிகளும், பொருந்தியவாற்றிற்கு - இருவகைவழக்கிலும் நடக்குமுறையறிந்து அதற்கு, இயையப்புணர்த்தல் - பொருந்தும்படி புணர்க்கை, யாவர்க்குநெறி - அறிவுடையோரெல்லார்க்குமுறையென்றவாறு.

[உ-ம்,] ஆன்கன்று - வண்டின்கால் - எனவேற்றுமைப்புணர்ச்சியிலே சாரியையிடைச்சொல் - திரியாது இயல்பாயின - மழகளிறு - தடந்தோள் - என அகரவீற்று உரிச்சொல் முன்வல்லெழுத்து மிகாமல் இயல்பாகியும் - மெல்லெழுத்து மிகுந்தும்வந்தன. அளிகுலம் - தனதடம் - என, இயல்பீறும்விதியீறுமாகியவுயிரீற்றுவடசொற்களின்முன் வல்லெழுத்துமிகாதியல்பாயின. இல்முன்என்பது முன்றில் - எம், பொதுவில் - என்பது - பொதியில் - எம், வேட்கைநீர் - எது - வேணீர் - எம், வேட்கைஅவா - எது - வேணவா - எம், வருமிலக்கணப்போலிகளும் - அருமருந்தன்னபிள்ளை - என்பது - அருமந்தபிள்ளை, அவர்யாவர் - எது - அவர்யார், அதுயாது - எது - அதுயாவது, எம், குணக்குள்ளது - குணாது, தெற்குள்ளது - தெனாது, வடக்குள்ளது - வடாது, சோழநாடு - சோணாடு, பாண்டியநாடு - பாண்டிநாடு, மலைய

மானாடு - மலாடு, தஞ்சாவூர் - தஞ்சை, ஆற்றூர் - ஆறை, ஆதன்றந்
தை - ஆந்தை, பூதன்றந்தை - பூந்தை, வடுகன்றந்தை - வடுகந்தை,
எனவும் வருமருமொழிகளும், நிலைமொழிவருமொழிகளுள்ளே
ற்குஞ்செய்கையறிந்து முடிக்க - பிறவுமிப்படியேகாண்க. புண
ர்த்தல் - நெறி - எனமுடித்துக்கொள்க. (௬௯)

நான்காவது - மெய்யீற்றுப்புணரியல்முற்றிற்று.

---

ஐந்தாவது.

# உருபுபுணரியல்.

ஒருவனொருத்திபலவொன்றுபலவென, வருபெயரைந்தொடு
பெயர்முதலிருநான், குருபுமுறழ்தர நாற்பதாமுருபே. * (௧)

இது, வேற்றுமையுருபுகள் நிலைமொழியோடும்வருமொழி
யோடும்புணருஞ்செய்கை - இந்தஇயலினாலே சொல்லத்தொடங்
கி - அந்த எட்டுருபுகளுஞ்சாரும் இடவகையால் இவ்வளவென்ப
து உணர்த்துகின்றது - (இ-ள்.) ஒருவனொருத்திபலவொன்றுப
லவெனவருபெயரைந்தொடு - இந்தப்பாலுக்கு உரியனவென்று
நினைக்கவரும் இவ்வைந்துபெயரோடும், பெயர்முதலிருநான்கு
ருபும் - பெயர்வேற்றுமைமுதல் விளிவேற்றுமை வரையிற்கிடந்
த எட்டுருபுகளையும், உறழ்தர - பெருக்க, நாற்பதாமுருபு - உருபு
கள் நாற்பதாம், எ-று.

சொல்லின்மேல்வைத்துக்கூறினால் இப்பெயர்களோடன்றிப்
பொதுப்பெயர்களோடேயுருபுகள் வாராவெனப்பொருள்படுமா
தலால் எல்லாப்பெயருமடங்குதற்குப்பொருளின்மேல்வைத்து
எனவருபெயரைந்தொடென்றார். [வ-று] நம்பி - சாத்தி - மக்கள் -
மரம் - மரங்கள் - என்னுமிவற்றுள் - நம்பி - நம்பியை - நம்பி
யால் - நம்பிக்கு - நம்பியின் - நம்பியது - நம்பிகண் - நம்பீ
என ஒருவனென்னும் வாய்பாட்டு உயர்திணையாண்பாற்பெயரோ
டு எட்டுருபுகளும்வந்தன - மற்றநான்குபெயரோடு மிப்படியே
யொட்டுக.

பெயர்வழித்தம்பொருடரவருமுருபே. *

இது, வேற்றுமையுருபுகள் வருதற்குக்காரணமும் - அவை வருமிடமுங்கூறுகின்றது, (இ-ள்.) உருபு- வேற்றுமையுருபுகள், தம்பொருடர- தம்பொருள்களைத்தரும்பொருட்டு, பெயர்வழிவரும்- பெயர்க்குப்பின்வரும், எ-று.

[வ-று,] நம்பிபெற்றான் - நம்பியைப்பெற்றான் - நம்பியாற்பெற்றான் - எனவரும். பிறவுமிப்படியேகாண்க. தம்பொருடரவருவன- எழுவாயுருபுமுதலிய எட்டுருபுகளும்- பின்வருவன- பெயர்முழுவதும்உருபாகியஎழுவாயுருபொழிந்தவுருபுகளுமெனக்கொள்க. (உ)

ஒற்றுயிர்முதலீற்றுருபுகள் புணர்ச்சியி,னொக்குமன்னப்பெயர்வேற்றுமைப்புணர்ப்பே. *

இது, ஐமுதலாகிய ஆறுஉருபும்- நிலைமொழி வருமொழியோடு புணருஞ்செய்கைகூறுகின்றது, (இ-ள்.) ஒற்றுயிர்முதலீற்றுருபுகள்- (இடையிலே விரிந்துநின்று நிலைமொழிவருமொழியொடுபுணரும்) ஒற்றையும் உயிரையும்முதலும்ஈறுமாகப்பெற்ற ஐமுதலிய ஆறுஉருபுகளும், (இடைச்சொல்லாயினும்) புணர்ச்சியினொக்குமன் - இயல்பொடு விகாரத்தினையும் புணர்ச்சிவகையிலேபெரும்பாலுமொக்கும், அப்பெயர்வேற்றுமைப்புணர்ப்பு - போனஇரண்டியலுள்ளும் வேற்றுமைப்புணர்ச்சியில்இயல்பொடுவிகாரத்துஇயைந்தஒற்றுயிர்முதலீற்றுப்பெயர்களை, எ-று.

மன்- என்றதினாலே சிறுபான்மை ஒவ்வாது- என்பது பெறப்பட்டது. [உ-ம்,] நம்பிகண்வாழ்வு- என்றவிடத்து- ஆவியரமுன்வன்மைமிகாவென்றும்- ணனவல்லினம் வரட்டறவும்பிறவரினியல்புமாகும்-என்றுங்கூறியபடியே- கண்- உருபின்முதலும்ஈறும் இயல்பாயின. உறிக்கட்டயிர்-என்றவிடத்து-இயல்பினும்விதியினு நின்றவுயிர்முன் கசதபமிகுமென்றும்- ணனவல்லினம்வரட்டறவுமென்றுங்கூறியபடியே - கண் - உருபின் முதலுமீறும்விகாரமாயின. பழிக்கஞ்சி - என்றவிடத்து - இயல்பினும் விதியினு நின்றவுயிர்முன் கசதப மிகுமென்றும் - முற்றுமற்றொரோவழியென்றுங்கூறியபடியே - குவ்வுருபின்முதலுமீறும்விகாரமாயின - நம்பிக்குப்பிள்ளையென்றவிடத்து- ஆவியரமுன்வன்மைமிகாவென்றவிதியொவ்வாது குவ்வுருபின்முதல் வல்லொற்றுமிக்கது- பிறவுமிப்படியேகாண்க.

இந்தஉருபு-சாத்திக்கு-கிளிக்கு எனப்பொதுப்பெயர் அஃறிணைப்பெயர்ஆயிருத்தலால்-சிலவிகாரமா முயர்திணையென்ற விதியன்றெனக.ஒற்றுயிர்முதலீற்றுருபுகளென்றதிலே நாற்பதாமுருபேயெனத்தொகைகொடுத்துக்கூறியவற்றுள் எழுவாயும்விளியும் ஒழித்துத்தமக்கெனமுத லுமீறுமாகவுடையஐமுதலிய ஆறுருபிற்கும்இந்தவிதிகூறிறுரென்பதும்- இந்தஉருபுகளின்முதலீறுகட்குமாட்டேற்றால் இவ்விதிகூறவேயுருபின் இருமருங்கும்புணரும் நிலைமொழியீறும் வருமொழிமுதலும் படுஞ்செய்கைகளுக்கு விதிபோன இரண்டியலுள்ளும்வேற்றுமைப்புணர்ச்சிக்கென விதித்தவற்றுள்அடங்குமாதலின் அவையும்இந்தமாட்டேற்றால்அமைத்திலரென்பதும்-அப்படியடங்குதற்கு-மூன்றுருபெண்வினைத்தொகைசுட்டீறுருமுகரமுன்னரியல்பென்னுஞ்சூத்திரமே- சான்றென்பதும். (சான்று-சாட்சி,) தான்குநாமுதல்குறுகுமென்னுந்தொடக்கத்துஉருபொடுபுணரும் நிலைமொழிகளின்விகாரங்கள்தொகைநிலையிலும் நாற்கணத்தின்முன்னும் வருதலின் அந்தவிகாரம் எழுத்துப்புணர்ச்சியால்வந்தனவல்லவேற்றுமைப்பொருள் நோக்கத்தால்வந்தனவாதலால் இந்த இயலிலேகூறப்படுமென்பதும் - ஒக்குமன்னப்பெயரென்றமையால்வினையினிறுதிவேற்றுமைப்புணர்ச்சிக்கு வாராமையால் அதனையொழித்துப்பெயரையுவமித்தாரென்பதும்-வேற்றுமைப்புணர்ப்பேயென்றதினாலே- வேற்றுமையுருபின்புணர்ச்சியாதலின்அதற்கு அல்வழிப்புணர்ச்சியொவ்வாதென்பதும்பெறப்படும். உருபுகள் ஒக்கும்- எனமுடிக்க. (௫)

பதமுன்விகுதியும் பதமுமுருபும், புணர்வழியொன்றும் பலவுஞ்சாரியை, வருதலுந்தவிர்தலும் விகற்பமுமாகும். *

இது, உருபுப்புணர்ச்சிக்கு எய்தியதன்மேற்சிறப்புவிதியாகச்சாரியைகளை இனிவிதிக்கத்தொடங்கி- அவைவருகிறவிதமிப்படியென்றுசொல்லுமிடத்தில ஒப்பின்முடித்தலென்னும் உத்தியால்- விகுதிப்புணர்ச்சிக்கும் பதப்புணர்ச்சிக்கும் அதனோடுகூட்டிச்சொல்லுதலைபுணர்த்துகின்றது. (இ-ள்.) பதமுன்விகுதியும்பதமுமுருபும் புணர்வழி - பதத்தின்முன் விகுதியாயினும்பதமாயினும் உருபாயினும்புணருமிடத்து, ஒன்றும்பலவுஞ்சாரியை - ஒருசாரியையாயினும் பலசாரியையாயினும், வருதலுந்தவிர்தலும்விகற்பமுமாகும்- வேண்டியேவருதலும்வேண்டாதொழிதலும்இவ்விரண்டுமாகியவிகற்பமுமாம், எ-று.

[வ-று,] நடந்தனன் - இதில்அன்சாரியைவேண்டியேநின்றது-நடந்தான்-சாரியைவேண்டாதுநின்றது-நடந்தனை-நடந்த-வேண்டியும்வேண்டாதும்நின்றது-இவைவிகுதிப்புணர்ச்சி.புளியமரம்-ஏம்புளிக்கறி-எம்,நெல்லின்குப்பை-நெற்குப்பை,எம்,பதப்புணர்ச்சிக்கும்-அவற்றை-மரத்தை-எம், தன்னை- என்னை-எம், ஆனை-ஆவை-எம், உருபுப்புணர்ச்சிக்கும்முறையேசாரியையவ்வாறுதல்காண்க.முகத்திலன்-குளத்தாங்கரை-அவற்றினை- அற்றினுக்கு-மரத்தினுக்கு-என்றாற்போல்வனவற்றில்-முறையே-அத்து-இன்,அத்து

ஆம், அற்று-இன், அற்று-இன்-உ, அத்து-இன்-உ, எனப்பலசாரியை வருதல்காண்க. பிறவுமன்ன. நிலக்கு- மாடக்கு-என்றாற்போல்வன. நிலத்துக்குமாடத்துக்கு-எனச்சாரியைவேண்டியவழிஇல்லாததினாலே செய்யுள் விகாரமாமென்க. (௪)

அன்னானின்னல்லற்றிற்றத்தந், தம்நம்நும்மேஅஉஐகுன, வின்னபிறவும்பொதுச்சாரியையே. *

இது, சாரியையிவையென்கின்றது. (இ-ள்.) அன்- ஆன் இன்-அல்-அற்று- இற்று- அத்து - அம் - தம்- நம் - நும்- ஏ - அ - உ - ஐ - கு - ன - என்பனவும், இன்னபிறவும் - இவை போல்வனபிறவும், பொதுச்சாரியை- விகுதி பதம் உருபென்னும் மூவகைப்புணர்ச்சியினும்தனிமொழியினும்வருதலாற்பொதுச்சாரியையென்னும் பெயராயுடையனவாம், எ-று.

[வ-று,] அன்-ஒன்றன்கூட்டம், ஆன்- ஒருபாற்கு, இன்-வண்டின்கால், அல்- தொடையல், அற்று- பலவற்றை, இற்று-பதிற்றுப்பத்து, அத்து-மரத்திலே, அம்- புளியங்காய், தம்-எல்லார்தம்மையும், நம்-எல்லாநம்மையும், நும் - எல்லீர்நும்மையும், ஏ-கலனேதூணி, அ- நடந்தது, உ-சாத்தனுக்கு, ஐ- பண்டைக்காலம், கு- உய்குவாய், ன - ஆன்கன்று, எனமுறையேகாண்க. இன்னபிறவுமென்றதினாலே தன் - அவன்றன்னை, தான்- அவன்றான், தாம்-அவர்தாம், ஆம்-புற்றாஞ்சோறு- மண்ணாங்கட்டி, ஆ-இல்லாப்பொருள், என்பனவும். இன்னும்வருவனவுளவாயின் அவையுங்கொள்க. இதில்-னகரச்சாரியைஈற்றில்வரும்போது- ஆன்கன்று-என.ஈற்றுனகரமாகவும்-இடையில்வரும்போது- மொழிநடுவென மொழிமுதல் நகரமாகவும்வருமெனக்காண்க. பெறுனவும்-என்பது-பெறுவனவும்-என்பது-குறைந்துநின்றது. (௫)

எல்லாமென்பதிழிதிணையாயி, னற்றோடுருபின்மேலும்மூறுமே, யன்றேனம்மிடையடைந்தற்றாகும். *

இது, நிலைமொழியோடு உருபுபுணர்தற்கு எய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுகின்றது - (இ-ள்.) எல்லாமென்பது - எல்லாம் என்னும்பொதுப்பெயர், இழிதிணையாயின் -அஃறிணைப்பொருளில்வருமாயின், அற்றோடுருபின்மேலும்மூறும் - (அதனோடே யாறுருபுகளும் புணர்தற்கு) இடையேஅற்றுச்சாரியையும் உருபின்பின்முற்று உம்மையும்வரும், அன்றேல் - அல்லாமல் உயர்

திணைப்பொருளில்வரின், நம்மிடையடைந்து - இடையிலே நம்முச்சாரியைவந்து, அற்றுகும்- அதுபோல உருபின்பின் முற்றும்மையும்வரும், எ-று.

[உ-ம்,] எல்லாவற்றையும் - எல்லாவற்றாலும் - எம். எல்லாநம்மையம்- எல்லாநம்மாலும்- எனவும்வரும். ஒழிந்தஉருபுகளோடுமொட்டிக்கோள்க. இனியிரட்டுறமொழிதலால் - எல்லாமென்பது- இருதிணையாய்-இன்னதன்று எனப்பிரிந்து- அஃறிணையிலேவந்து, இன்சாரியைஅற்றுச்சாரியையோடெனப்பொருள்பட- எல்லாவற்றினையும் எனவருதலுங்கொள்க. இச்சொல்லுக்கு இருதிணையிலும் - அற்றுச்சாரியையும் நம்முச்சாரியையும்- பதமுன்விகுதியும் பதமுமென்னுஞ்சூத்திரத்திற் சொல்லியபடியே - உருபுப்புணர்ச்சிக்குவேண்டியேநிற்பதும்தோன்றஇல்லாமற்கூடாததுவாகியமுற்றும்மையோடு உடனிகழ்ச்சிப்பொருளனவாக அற்றென்றும் - அடைந்தற்றுகும் - என்றுங்கூறினர். (ப) தாம் (த) நாம் (மு) நீர் - என்னுமூவிடப்பெயர் வேற்றுமைப்புணர்ச்சியில்வந்ததினாலே- தம் - நம் - நும் - எனவிகாரப்பட்டுத்தம்க்கினமான அம்மூவிடப்பெயர்களைமுறையேசார்ந்து சிறப்புப்பொருள் தாராததினாலே-ஒருபொருட்பன்மொழியல்லவாகி வருதலால் இம்மூன்றுஞ்சாரியையிடைச்சொல் எனப்படுமாதலால்-தம்-என்பதைப்படர்க்கைக்கும் - நும்மென்பதை முன்னிலைப்பெயர்க்கும் - வருஞ்சூத்திரத்தில் அமைத்ததுபோல - நம்மென்பதையிங்கே- தன்மைப்பெயர்க்கு அமைத்தாரென்பதும்- தன்மையாயினுந்திணைப்பொதுமையிலேநில்லாமல்- யாணோம்- என்றாற்போல - எல்லாநம்மையும்-என்றஅளவிலே- உயர்திணைத்தன்மையையுணர்த்துமென்பதும்பெறப்பட்டன. அற்றென்றும் முற்றும்- அற்றுகும்-எனமுடித்துக்கொள்க. (சூ)

எல்லாருமெல்லீருமென்பவற்றும்மை, தள்ளிநிரலேதம்நும்
சாரப்,புல்லுமுருபின்பின்னரும்மே. *

இதுவுமது, (இ-ள்.) எல்லாருமெல்லீருமென்பவற்று-ஆறுருபுகளும்புணருமிடத்துப்படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயருமாகிய இவ்விரண்டினது, உம்மைதள்ளி- முற்றும்மைகளை நீக்கி, நிரலே-முறையாகவே, தம்நும்சார - படர்க்கைப்பெயர்க்குத்தம்முச்சாரியையும்- முன்னிலைப்பெயர்க்கு நும்முச்சாரியையும்பொருந்த,புல்லுமுருபின்பின்னரும்மே- (அத்தன்றுபட்ட) முற்றும்மைகள்உருபின்னேவந்துபொருந்தும், எ-று.

தம் - நும்மே யெனத்தேற்றேகாரங்கொடாததினாலே - சாரி
யையின்றிவருதலுங்கொள்க. [உ-ம்,] எல்லார்தம்மையும்- எல்லா
ரையும்- எல்லீர் நும்மையும்- எல்லீரையும் - எனவிகற்பித்துவந்த
ன. ஒழிந்தவுருபுகளோடு மிவ்வாறேயொட்டுக- நந்தம்மை- நுந்
தம்மை- எனப்படர்க்கைக்குரியதம்சாரியை தன்மை முன்னிலை
யிலேவருதல் - ஓரிடம்பிறவிடந்தழுவலுமுளவே- எனற்சூத்திர
த்தின்படி வழுவமைதியென்க (எ)

நான்குநாமுதல்குறுகும்யான்யா, நீநீர்என்எம்நின்னும்மாம்
பிற, குவ்வினவ்வருநான்காறிரட்டல. *

இது, எய்தியதன்மேற்சிறப்புவிதியும்- எய்தியதுவிலக்கலு
முணர்த்திற்று. (இ-ள்.) தாஞ்நாமுதல்குறுகும் - (இங்கே
சொல்லப்பட்ட விணைப்பொதுவாகிய மூவிடப்பெயரோடும்
ஆறுருபுப்புணருமிடத்து)தான் - தாம் - நாம் - என்னும்மூன்று
பெயரும் நெடுமுதல்குறுகிமுறையே-தன்னை- தம்மை- நம்மை-
எனவரும். யான்- யாம்- நீ - நீர் - இந்தநான்குபெயரும்முறை
யே, என் எம் நின் நும்மாம் - என்னை - எம்மை - நின்னை- நு
ம்மை, எனவரும் - ஒழிந்தவுருபுகளோடுமொட்டுக. குவ்வி ன
வ்வரும் - இந்தமூபெயரோடுங்குவ்வுருபுபுணரும்பொது இடை
யிலே தனக்கு- தமக்கு- எனஅகரச்சாரியைவரும்,ஒழிந்தசொற்
களோடுமொட்டுக. நான்காறிரட்டல - குவ்வுருபின் அகரச்சாரி
யைவரினும்- ஆறும்வேற்றுமையுருபுயிர்கள்வரினும்இவ்வேழுவி
காரமொழிகளின் இறுதியிலுள்ளனவாகியதனிக்குறின்முன்னொ
ற்றுக்களிரட்டித்துநில்லாவாம், எ- று.

பிறவென்றதினாலே-நீயென்பது- உன்னையெனவும், நீர்- என்
பது-உம்மையெனவும், வருதல்கொள்க. முன்னும்பின்னுஞ்சாரி
யைபெறுவது சொல்லவந்தவர் - சாரியைபெறாது விகாரப்படு
மொழிகளை யிச்சூத்திரத்தினாலே யிடையிலேதோன்றக்கூறியது
எதற்காகவெனின்- இந்தப்பொதுப்பெயர்களேயிப்படித்- தம்-
நம்- நும்- எனக்கூறியசாரியையிடைச்சொற்களுமாயின வென
மனதூன்றி யுணர்தற்காகவென்க. இச்சூத்திரத்தில் நான்காறிர
ட்டலவென்றதொன்றும்- எய்தியதுவிலக்கல்- இச்சூத்திரத்தைநான்
குமுடிபாகமுடித்துக்கொள்க. (அ)

ஆமாகோனவ்வணையவும்பெறுமே.

[மஅ]

இது, உருபுபுணர்தற்கு எய்தியதன்மேற்சிறப்பு விதியுணர்த்துகின்றது - (இ-ள்.) ஆ - மா - கோ - இம்மூன்றுபெயர்களும், னவ்வணையவும்பெறும்- உருபுபுணர்தற்கு - னகரச்சாரியையுந்தடையவும்பெறும், எ-று.

அடையவுமென்றவும்மையால் அடையாமையையும்பெறுமென்றதாயிற்று ஆகவேவிகற்பித்து வருமெனக்கொள்க. [உ-ம்,] ஆனை – ஆவை - மானை - மாவை - கோனை - கோவை - எனவரும். ஒழிந்தவுருபுகளோடு மிவ்வாறேயொட்டுக. இன்னுமவ்வும்மையைனவ்வணையவும்பெறும் பிறசாரியை யணையவும்பெறுமென.எதிரதுதழுவிய எச்சவும்மையாக்கிக்குவ்வுருபிற்குனகரச்சாரியையொன்றுமேயமையாமல் - ஆனுக்கு - மானுக்கு - கோனுக்கு என-உகரச்சாரியையுமுடன்வருதலும்.ஆவுக்கு-மாவுக்கு.என உகரச்சாரியையொன்றேவருதலும்-ஆவினுக்கு-மாவினுக்கு-கோவினுக்கு என இன்சாரியையுமுகரச்சாரியையும் வருதலும்- ஆவினை- மாவினை என இன்னுருபொழிந்தவற்றிற்கு இன்சாரியைவருதலுங்கொள்க.அணையுமென்று நிறுத்தாமல் அணையவும்பெறுமேயென்றமிகுதியினாலே- ஆன்- மான்- கோன்- என- னகரச்சாரியைதனிமொழியில்வருதலுங்கொள்க. ஆமா- எனவிரண்டினையுஞ்சேர்த்துக்கோவென்பதையிறுதியிலே வைத்ததினாலேயவையிரண்டும்மிருகங்களையுணர்த்துமென்பதும்மற்றையது அரசனையுணர்த்தியஉயர்திணைப்பெயரொன்பதும்பெறப்படும். (கூ)

ஒன்றுமுதலெட்டீறுமெண்ணூர், பத்தின்முன்னான்வரிற்பவ்
வொற்றொழியமே, லெல்லாமோடுமொன்பதுமிற்றே. *

இதுவுமது,(இ-ள்.)ஒன்றுமுதலெட்டீறுமெண்ணூர்-ஒன்றுமுதலெட்டுமுடிவாகக்கிடந்த எண்களோடேபுணர்ந்த, பத்தின்முன் - பத்தென்னுமெண்ணின்முன்,ஆன்வரின்-(உருபுபுணர்தற்கு) ஆன்சாரியைவருமாயின்,பவ்வொற்றொழியமேலெல்லாமோடும்-பகரவொற்றுஒன்றுதவிரமேலே நின்றவெழுத்தெல்லாங்கெடும்,ஒன்பதுமிற்று- ஒன்பதென்னுமெண்ணுப்பெயர்முன்னும் உருபுகள்புணர்தற்குஆன்சாரியைவரின் இவ்வாறே பகரவொற்றுநிற்க மேல்நின்ற எழுத்தெல்லாங்கெடும், எ-று.

ஆன்வரின்எனப்பொதுமுகமாகச்சொன்னதினாலே விகற்பித்து வருமெனவும்- ஒருபானுக்கு- ஒருபானினை- என உகரச்சாரியை

இன்சாரியை ஈறுகெட்டுவருமெனவுங்கொள்க. [உ-ம்,] ஒருபானை - ஒருபதை - ஒருபஃதை - இருபானை - இருபதை - இருபஃதை - எ-ம். ஒன்பானை-ஒன்பதை-ஒன்பஃதை-எனவும் விகற்பித்துவந்தன- பிறவற்றோடு மிவ்வாறேயொட்டுக. என்னூர்பத்தென்பது - ஒருபது இருபதுஎனவிகாரப்பட்டுவரும்பத்தெனக்கொள்க. (௰)

வவ்விறுசுட்டிற்கற்றுறல்வழியே. *

இதுவுமது, (இ-ள்.) வவ்விறுசுட்டிற்கு - அஃறிணைப்பன்மையவாகிய வகரவீற்றுமூன்றுசுட்டுப்பெயர்களுக்கு, அற்றுறல் வழி- (உருபுபுணர்தற்கு) அற்றுச்சாரியைபொருந்துவது முறைமை, எ-று.

[உ-ம்,] அவற்றை - இவற்றை - உவற்றை - எனவரும்.வழியே யென்றமிகுதியினாலே- அவற்றினை- இவற்றினை- உவற்றினை-என அற்றுச்சாரியையோடு இன்சாரியைவருதலுங்கொள்க. ஒழிந்தவுருபுகளோடு மிவ்வாறேயொட்டுக. (௰க)

சுட்டின்முன்னாய்தமன்வரிற்கெடுமே. *

இதுவுமது, (இ-ள்.) சுட்டின்முன்னாய்தம் - அஃது-இஃது - உஃது - என்றுமூன்றுசுட்டுப்பெயர்களில்அம்மூன்றுசுட்டெழுத்துக்களின் முன்னின்ற ஆய்தம், அன்வரிற்கெடும் - (உருபுபுணர்தற்கு) அன்சாரியைவரிற்கெடும், எ-று.

அன்வரினெனப்பராமுகமாகச்சொன்னதினாலே-விகற்பித்துவருமெனக்கொள்க. [உ-ம்,] அதனை- அஃதை-இதனை-இஃதை-உதனை - உஃதை - எனவிகற்பித்து வந்தமையும் வந்தவழியாய்தங்கெட்டமையுங்காண்க. ஆய்தமில்லாதியல்பாகநின்றஅது- இது- உது - என்னுஞ்சுட்டுப்பெயர்களும் பின்பு அன்சாரியைபெறுதலின் அவற்றிற்குமிதுவே விதியெனக்கொள்க.இன்னுமதினாலே-குவ்வுருபுணரும்போது - அதற்கு - என அன்சாரியைதனித்துவருதலேயன்றி - அதனுக்கு என உகரச்சாரியையுடன் வருதலுங்கொள்க. (௰உ)

அத்தினகரமகரமுனையில்லை. *

இது, அத்துச்சாரியைக்கு எய்தியதுவிலக்கிப்பிறிது விதிவகுக்கின்றது (இ-ள்.) அத்தினகரம் - அத்துச்சாரியையின்அ,

அகரவுயிர், அகரமுனையில்லை- இயற்கையாகவுஞ் செயற்கையாக வும்நின்ற அகரவுயிரீற்றின் முன்னெடும், எ-று.

[உ-ம்,] மகத்தை- மரத்தை - எம். மகத்துக்கை – மரத்துக் குறை - எனவும். இரண்டகரவீற்றின்முன்னும் அத்தின் அகரங் கெட்டமைகாண்க.மகத்துக்கை-மரத்துக்குறையென்பன பொரு ட்புணர்ச்சி. மாட்டேற்றினாலே- உருபுப்புணர்ச்சிபொருட்புணர் ச்சியையொக்குமென்றலின் ஐயப்படவேண்டா. (௰௩)

இதற்கி துசாரியையெனினளவின்மையின், விகுதியும்பதமுமு ருபும்பகுத்திடை, நின்றவெழுத்தும் பதமுமியற்கையு, மொ ன்றவுணர்த்தலுரவோர்நெறியே.

*

இது, சாரியைக்காவதோர்புறனடையுணர்த்துகின்றது.

(இ-ள்.) இதற்கிதுசாரியையெனின் - விகுதிமுதலிய புணர்ச்சிக ளில் (இதற்கு இதுசாரியையென்றுவரையறுத்துவிதித்தனவற் றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளுந்) தனித்தனிசொல்லப்புகின், அளவின்மையின்-வரையறைப்படாமையால், விகுதியும்பதமுமு ருபும்பகுத்து - விகுதிப்புணர்ச்சியில்விகுதியையும் பதப்புணர் ச்சியிற்பதத்தையும் உருபுப்புணர்ச்சியில் உருபையும்பிரித்து, இ டைநின்றவெழுத்தும்பதமுமியற்கையும்- இடையிலே நின்றனகா ரமுதலிய எழுத்தையெழுத்துச்சாரியையெனவும். அன்ஆன்முத லியபதத்தைப்பதச்சாரியையெனவும். இவ்விரண்டுமில்லாதஇய ல்பை இயற்கையெனவும், ஒன்றவுணர்த்தல்-தெரியஅறிவித்தல், உரவோர்நெறி- அறிவுடையோர்வழியாம், எ-று.

[உ-ம்,] என்றிசினோர்- எனவிகுதிப்புணர்ச்சியிலே - யாகா வெல்லுஞ்சூத்திரத்தாற்சொல்லப்பட்ட- சின்- அன்றி-இகரச்சா ரியையுமுடன்வந்தது- ஆனநெய்தெளித்துநானநீவி- எனப்பத ப்புணர்ச்சியிலே- ஆமாகோனவ்வணையவும்பெறுமென விதித்த னகரச்சாரியையன்றி- அகரச்சாரியையுமுடன் வந்தது - இனிவி தியாதொழிந்தனவற்றுள்ளே- பாட்டின்பொருள் - எனக்குற்றிய லுகரத்தின்முன் இன்சாரியையும் - மரத்தில - என மகரவீற்றி ன் முன் அத்துச்சாரியையும்வந்தன - என்கை- தன்கை-எனச்சா ரியையின்றியியல்பாய்வந்தன- இவ்வாறே மூவகைப்புணர்ச்சிக ளையும் பிரித்துணர்ந்துகொள்க. எல்லாமிடைச்சொல்லாயினும் இப்படியெழுத்துச்சாரியை பதச்சாரியையெனப்பிரித்தது-அவற்

றுள்வேறுபாடறிதற்குவைத்தகுறியெனவுணர்க. உணர்த்தல்-மெறியெனமுடிக்க. (௱௪)

விகுதிபதஞ்சாரியை யுருபனைத்தினும், உரைத்தவிதியுளோர்ந் தொப்பனகொளலே.

இது, இங்கேசொல்லியநால்வகைப்புணர்ச்சிக்குமாவதொரு புறனடை கூறுகின்றது- (இ-ள்) விகுதிபதஞ்சாரியையுருபனைத்தினும்- விகுதிப்புணர்ச்சி பதப்புணர்ச்சி உருபுப்புணர்ச்சி சாரியைப்புணர்ச்சியென்னும் நால்வகைப்புணர்ச்சியுள்ளும்- உரைத்தவிதியுள்- சொன்னவிதிகள்பொதுப்படநிற்பவற்றுள், ஓர்ந்து-(இவ்விதியிதற்குப்பொருந்து மிதற்குப்பொருந்தாதென) ஆராய்ந்துணர்ந்து, ஒப்பனகொளல் - எவ்விதியெதற்குப்பொருந்துமோ அவ்விதியையதற்குஒத்திருப்பனவாகக்கொள்க, எ-று.

[வ-று,] விகுதிப்புணர்ச்சியுள்- றவ்வொடுகரவும்மைநிகழ்பல்லவுமெனப்பொதுப்பட விதித்தாராயினும் - விதியுளதென்றெண்ணி-இவ்விகுதிவந்தவிடத்தெல்லாம் இந்தவிரண்டுகாலமும்பொருந்துமென்றுகொள்ளாது-சென்று - சென்றும்-என்பன. இறந்தகாலமும்- சேறு-சேறும்- என்பனஎதிர்காலமும்பொருந்துமெனக்கொள்க. தவ்வொடிறப்புமெதிர்வுமென்பதற்கு மிவ்வாறேகொள்க. பதப்புணர்ச்சியுள் - அல்வழி இஐமுன்னராயினியல்பு மிகலும்விகற்பமுமாகுமெனப்பொதுப்படவிதித்தாராயினும்- விதியுளதென்றெண்ணி- ஆடிதிங்களென இயல்பாமென்றும் - பருத்திக்குறிது எனமிகுமென்றுங்கொள்ளாது- ஆடித்திங்களெனப்பண்புத்தொகைக்கு மிகுமென்றும்- பருத்திகுறிதுஎனஎழுவாய்ச்சந்திக்குமிகாதென்றுங்கொள்க. சாரியைப்புணர்ச்சியுள் - பதமுன் விகுதியும்பதமுமுருபும்புணர்வழியொன்றும்பலவுஞ்சாரியைவருதலுந்தவிர்தலும் விகற்பமுமாகுமெனப்பொதுப்பட விதித்தாராயினும்- விதியுளதென்றெண்ணி- நாட்டினினீங்கினானென- இன்உருபிற்குஇன்சாரியைவருமென்றும் - நாட்டிக்கண்ணிருந்தானெனக்கண்உருபிற்குஇன்சாரியைவாராதென்றுங்கொள்ளாது-இனனுருபிற்குஇன்சாரியைவாராதென்றும்-நாட்டின்கண்ணெனக்கண்ணுருபிற்குஇன்சாரியைவருமென்றுங்கொள்க. உருபுப்புணர்ச்சியுள்-ஒற்றுயிர்முதலீற்றுருபுகள்புணர்ச்சியினொக்கு மன்னப்பெயர்வேற்றுமைப்புணர்ப்பே- எனப்பொதுப்பட விதித்தாராயினும்- விதியுளதென்றெண்ணி- நம்பிகுஎன உயிரீ

ற்றுயர்திணைப்பெயர்முன்குவ்வுருபுமிகாதென்றும்- நம்பிக்கண் என-மன்னென்றதினாலே மிகுமென்றுங்கொள்ளாது - நம்பிக்கு என டன்னென்றதினாலே குவ்வுருபுமிகுமென்றும் - நம்பிகண் எனக்கண்ணுருபுமிகாதென்றுங்கொள்க. பிறவுமிப்படியேகாண்க. சாரியைப்புணர்ச்சி - மற்றைமூவகைப்புணர்ச்சியையுஞ்சார்ந்திடையேதோன்றல் விகாரமாய்வந்துபுணர்தலின் - விகுதியதுஞ்சாரியையுருபென- உருபிற்கு முற்கூறினர்.

இனியிச்சூத்திரத்திற்கு இவ்வாறுபொருள்கொள்ளாமலிந்தநால்வகைப்புணர்ச்சியுள்ளேயொன்றிற்குச்சொன்னவிதி மற்றொன்றிற்குங்கொள்கவெனப்பொருள்கொள்வாருமுண்டு அப்பொருளுக்கு அமைந்தசொல் இச்சூத்திரத்திலில்லாததினாலும் - பகுதிவிகுதியிடைநிலைசாரியைசந்தி விகாரமாறினுமேற்பவை முன்னிப்புணர்ப்பமுடியுமெப்பதங்களுமென்றும்- ஈறுபோதலென்னுஞ்சூத்திரத்திற்சொன்னவிகாரங்கள் விகுதிப்புணர்ச்சிக்காவது மன்றிப் பதப்புணர்ச்சிக்குமாமென்பது தோன்றப்பண்பிற்கியல்பென்றும்- புணரியல்விதிபெயர்வினையிடையுரிநான்கிற்கும் பொருந்துமென்பது தோன்ற- மெய்யுயிர்முதலீறாமிருபதங்களுமென்றும்- எடுத்துரைத்த சிறப்புவிதிகளுள் உருபின்முடிபவையொக்குமப்பொருளினும்- என்றும்- ஒற்றுயிர் முதலீற்றுருபுகள் புணர்ச்சியி, னொக்குமன்னப்பெயர்வேற்றுமைப் புணர்ப்பே- என்றுங்கூறியதினாலே- அப்பொருளமைந்து கிடப்பதினாலும் - அதுபொருந்தாதென்க. கொளல் - என்பதுவியங்கோளாதலால் இதற்குப்பயனிலை- மூன்றிடத்தைம்பாலினுள்யாதொன்றையாயினும்வருவித்து முடித்துக்கொள்க. (௧௫)

இயல்பின்விகாரமும் விகாரத்தியல்பு, முயர்திணையிடத்துவி
ரிந்துந்தொக்கும்,விரவுப்பெயரின் விரிந்துநின்று, மன்னபி
றவுமாகுமையுருபே. *

இது, வேற்றுமைப்புணர்ச்சிக்குப் புறனடை யுணர்த்துகின்றது- (இ-ள்.) இயல்பின்விகாரமும் - (வேற்றுமைப்புணர்ச்சிக்கு விதித்தபொதுவிதியோடு தானுமுழுவதுமொத்துமுடிதலுமன்றி) அங்கேவிதித்த இயல்பிலே விகாரமாகியும், விகாரத்தியல்பும்- விகாரத்திலேயியல்பாகியும், உயர்திணையிடத்துவிரிந்துந்தொக்கும் - உயர்திணைப்பெயரிடத்து விரிதலே தகுதியாகியுந்தொகுதலே தகுதியாகியும், விரவுப்பெயரின விரிந்தும்- பொதுப்பெயரிலேவிரிதலேதகுதியாகியும், நின்றும்- அவ்விரிதலொழிந்தும், அன்னபிறவுமாகுமையுருபு- அவைபோல்வனவாகியபிற வேறுபாடாகியும்வரும்இரண்டாம்வேற்றுமைப்புணர்ச்சி, எ-று.

உயிரும் ஒற்றும்- சாரியையும் என்றிவை- தோன்றலும் - திரிதலும் - கெடுதலும் - உறழ்ச்சியாகிய விகற்பமும் என்றிவற்றையெல்லாமுள்ளடக்கி- இயல்பின்விகாரமும்விகாரத்தியல்புமென்

றும்- எல்லாவேற்றுமையும்விரிந்துந்தொக்கும்வருவதுபோலா
காமல்- இவ்வேற்றுமையுயர்திணைப்பெயரினும் பொதுப்பெயரி
னும் - விரிதலேதகுதியாயுந்தொகுதலே தகுதியாயும் வலிந்து
கொள்ளலாகியும் வருமென்பதுதோன்ற - விரிந்துந்தொக்கும்-
விரிந்தும் விரிதல்நின்றும்- என்றுங்கூறினார். மேலைச்சூத்திரத்து
ஒப்பன கொளலேயென்றதினாலே இவ்விதிகளை யிரண்டாம்வே
ற்றுமைப்புணர்ச்சி வந்தவிடத்தெல்லாங்கூட்டாமல் வேற்றுமை
ப்பொதுப்புணர்ச்சியோடொத்து முடிவனவிவை இப்புறனடை
ச்சிறப்புவிதியால் முடிவனவிவையெனப்பகுத்துணர்ந்து ஏற்ப
னவற்றொடுங்கூட்டுக. [வ-று,] வழிபடுதெய்வநிற்புறங்காப்ப- இது
நின்னீறியல்பாமுறவே-என்ற இயல்புவிதியைக்கொள்ளாது விகா
ரமாயிற்று - மண்கொணர்ந்தான் - இது ணனவல்லினம்வரட்ட
றவுமென்றவிதியைக்கொள்ளாது இயல்பாயிற்று-நம்பியைக்கொ
ணர்ந்தானென - உயர்திணையிடத்து விரிந்தது - ஆடூஉவறிசொ
ல்- மகடூஉவறிசொல் - பல்லோரறியுஞ்சொல்- என அதனிடத்து
த்தொக்கது - கொற்றனைக்கொணர்ந்தான் - எனப்பொதுப்பெ
யரில் விரிந்தது-ஆண்பெற்றாள்- பெண்பெற்றாள்- தற்காத்துத்த
ற்கொண்டாற்பேணி- என- அதனிடத்துத்தொக்கது - இந்தவிர
ண்டிடத்துத்தொகையுள்ளே சிலதகுதியாயுஞ்சிலவலிந்து கொள்
ளலாயும் வருதல்காண்க. அன்னபிறவுமென்றதினாலே- தற்கொண்
டான்- எற்பணியாள் - என - தன்னென்னென்பவற்றீற்று னவ்வன்
மையோடுறழுமென்றவிதியைக்கொள்ளாது திரிந்தேவருதலும் -
இன்னும்வருவனவுளவாயின் அவையுங்கொள்க.

இங்கே யெண்ணிநின்ற இழிவுசிறப்பு உம்மைகளாலே-வேற்றுமைக்கெ
னவிதித்தபொதுவிதியோடொத்து- உயிர்ந்தொடர்முன் மிகாவேற்றுமை-எ
ன்றவிதியைப்பெற்று- வரகுகட்டினானெனவியல்பிலே யியல்பாகியும் - இயல்பினு
ம் விதியினுநின்றவுயிர்முன் கசதபமிகுமென்ற விதியையொத்து-விளக்குறைத்
தான் - பலாக்குறைத்தான் - என விகாரத்திலே விகாரமாகியும் வருதலைபெ
றும்பாலவெனக்காண்க. (யசு)

புள்ளியுமுயிருமாயிறுசொன்முன், றம்மினாகியதொழின்மொ
ழிவரினே, வல்லினம்விகற்பமுமியல்புமாகும். *

இதுவுமது, (இ-ள்.) புள்ளியுமுயிருமாயிறு சொன்முன்-
(மூன்றாம்வேற்றுமைப்புணர்ச்சியுள்) ஒற்றுமுயிருமிறுதியா
ன்றசொற்களின்முன், தம்மினாகியதொழின்மொழிவரின்- க
கருத்தாவுடனிகழ்வதன் பொருளென்றவற்றுள் கருத்தாவாகிய தீ

லைமொழிப்பொருள்தம்மாலாகிய தொழிற்சொற்கள்வரின், வல்லினம் விகற்பமுமியல்புமாகும் - அங்கேவரும்வல்லினம் வேற்றுமைப்பொது விதியைக்கொள்ளாமல் விகற்பித்தும் இயல்பாயுமுடியும், எ-று.

மேலொப்பனகொளவேயென்றதனுலிரண்டாம் வேற்றுமைக்குச்சொன்னபடியிதற்குங்கொள்க. [வ-று,] பேய்கோட்பட்டான் பேய்க்கோட்பட்டான்-சூர்கோட்பட்டான்-சூர்க்கோட்பட்டான், புலிகோட்பட்டான் - புலிக்கோட்பட்டான், எம். பேய்பிடிக்கப்பட்டான் - புலிகடிக்கப்பட்டான்- எனவும்வரும். உம்மையால்-சுருப்பாயப்பட்டான்- அராத்திண்டப்பட்டான்-எனவேற்றுமைப்பொது விதியினுலேமிக்குமுடிவனவே பெரும்பாலமவென்க. இவற்றுள்- தம்மினுகியதொழில் பட்டானென்பதாம்- கோளென்பது முதலியவாய் இடைவருவன - தந்தொழிலாம், இப்படியாயினு மிவ்விரண்டினையு மொருசொல்லாக்கித் - தம்மினுகியதொழிலேமொழியென்றார்-பட்டானென்றபோது இதுபட்டானென்னும் பொருள்தோன்றக் - கோளென்பதுமுதலாயினஅதைவிசேடித்து நிற்கும் ஒருமைப்பாடுபற்றியென்க.

வேறுபடுத்தறியவேண்டின் - கோட்பட்டானென்பது ஒழியமற்றையவை- எழுவாய்ப்பயனிலையாகிய வினையெச்சம் முற்றுவினைகொண்டன - ஆனல்- எழுவாயிலும் மூன்றும்வேற்றுமையிலும் கருத்தாவுளவாதலால் - தந்தொழிலே யிங்கே தம்மினுகிய தொழிலென்றொனின் - பேய்பிடித்ததென்னுமெழுவாயிலே பேயாற்பிடித்ததென மூன்றும்வேற்றுமையுருபு விரிந்துநிற்கக்கூடாமையால் - தந்தொழிலும் - தம்மினுகியதொழிலும்- எழுவாய்க்கருத்தாவும் - மூன்றும்வேற்றுமைக்கருத்தாவும் - தம்முள்வேறுபாடுடையனவாம் - அவ்வேறுபாடு அவ்விலக்கணங் கூறும்போது காட்டப்படும். வல்லினம் விகற்பமுமியல்புமாகுமென முடித்துக்கொள்க. (மள)

இதற்கிதுமுடிபென்றெஞ்சாதியாவும், விதிப்பளவின்மையி
ன்விதித்தவற்றியலான், வகுத்துரையாதவும் வகுத்தனர்
கொளலே. *

இது, இவ்வதிகாரத்திற்கு ஓர்புறனடையுணர்த்துகின்றது- (இ-ள்.) இதற்கிதுமுடிபென்று- இதனுக்கு இதுமுடிந்த இலக்கணமென்று, எஞ்சாது - சுருங்காமல், யாவும் - இவ்வதிகாரத்துள் விதிக்கத்தகுவனவற்றையெல்லாம், விதிப்ப - தனித்தனிவரையறுத்து விதிக்கப்புகின், அளவின்மையின்- அதற்கொருவரம்பில்லையாதலால், விதித்தவற்றியலான்-வகுத்துவிதித்தவற்றினிலக்கணங்களையேதுவாகக்கொண்டு, வகுத்துரையாதவும் - வகுத்து

விதியுளையாதனவற்றையும், வகுத்தனர்கொளல்- (அனுமானப்பி ரமாணத்தினாலே) வகுத்துவிதியுளைத்துக்கொள்கவென்றவாறு.

விதிப்ப- என்பதும்- அகரங்குறைந்துநின்றது - அவற்றுட்சில வருமாறு-எழுத்தியலுள்-மொழிமுதற்காரணமாமணுத்திரளொ லியெழுத்தெனவுளைத்ததினாலே - கண்ணுக்குத்தெரியப்படாதக டவுளைக்காட்டும் விக்கிரகம்போலச்செவியினாலுணரப்படும்ஒலி யைமனத்துட்கொள்ளுதற்கு இடப்பட்ட வுருவுவடிவெழுத்து- என்னும்பொருளைக்கொண்ட - கட்புலனில்லாக்கடவுளைக் காட் டுஞ், சட்டகம்போலச்செவிப்புலவொலியை, யுட்கொளற்கி டுமூ ருபாம்வடிவெழுத்தே-எனப்பிறர்கூறிய இச்சூத்திரத்தின்படியே ஒலிவடிவைக்காட்டுதற்கு ஒருகருவியாகவட்டஞ்சதுரமுதலியவ டிவையுடையனவாக எழுதிக்கொள்ளப்பட்டது- வடிவெழுத்தெ னவும் - பதவியலுள் - அன்ஆன்அள்ஆள்என்னுஞ் சூத்திரத்து முறையே. அன் - ஆன்- விகுதியாண்பாற்கெனவுளைத்ததினாலே- பெருமாள் - என்னும்பதம் - பெருமையையுடையான் என்னு ம்பொருள் தோன்றநின்ற பெருமான் என்னும் பதத்தினதுஇ றுதி - ஆன்விகுதி ஆள்விகுதியாகி யோரோரிடங்களிலே திரிந் து ஆண்பாலையேபுணர்த்திநின்றதெனவும். உயிரீற்றுப்புணரிய லுள்- இயல்பினும்விதியினுநின்றவுயிர்முன்கசதப மிகுமெனவு ளைத்ததினாலே- ணனவல்லினம் வரட்டறவுமென்றபோது- டகர மும் வல்லினமாதலால் டகரவொற்றுமிக்கதெனவும்- மெய்யீற் றுப்புணரியலுள்- நுந்தம்- எம் நம்மீறுமவ்வருஙநவே. எனவு ளைத்ததினாலே- அம் என்னுஞ்சொல்லிறுதி மகரமுங்குற்றெழுத் தைச்சார்ந்தஒற்றாதலால்-தன்னொடுமயங்காத மெல்லினம்வந்தா ல் அம்மெலினமாகத்திரிந்து-அந்நலம் என அழகினது நலமென் னும்பொருளையுடையதாய் வருமெனவும் - உருபுபுணரியலுள் - வவ்விறுசுட்டிற்கற்றுறல்வழியே- எனவுளைத்ததினாலே- அதுபோ ல விளவும்- எவற்றை- என அற்றுச்சாரியைபெறுமெனவும்-இர ண்டாம்வேற்றுமைக்குமூன்றாம்வேற்றுமைக்கும்புறனடையளை த்ததினாலே- ஏழாம்வேற்றுமையும் - மண்புகுந்தும் விண்பற ந்தும்-என-ணனவல்லினம்வரட்டறவுமென்றவேற்றுமைப்பொ துவிதியைக்கொள்ளாமற்சிறுபான்மை யியல்பாமெனவுங்கொள் க. இன்னுமிவ்வைந்தியலுள்ளும் வகுத்துளையாதனவற்றையெல் லாம் இடர்ப்படாமல்இதுவேயிடமாகவகுத்துளைத்துக்கொள்க. அறிவுடையோர்வகுத்தனர்கொளலெனமுடிக்க.(யஅ)முற்றிற்று

# சொல்லதிகாரம்.

இது, எட்டுவகையானும்பிறவகையானும் உணர்த்தப்படுஞ் சொல்லினது இலக்கணத்தையுணர்த்திய அதிகாரமெனவிரியும்- எட்டுவகைபிறவகையென்பனவற்றை-இருதிணைமூவிடநான்மொழியைம்பாலறுதொகையேழ்,வழூஉவுருவெட்டொன்பதாகுந்தொகாநிலைவாய்ந்தவெச்ச, மொருபதுகோளெட்டுமுப்பொழுதீரிடமோரியல்பான், வருமொழிமூன்றுமுணரச்சொல்வண்மைவருந்திருவே, என்னுமிக்கட்டளைக்கலித்துறையாலுணர்க, இந்த அதிகாரம்- பெயரியல்- வினையியல் - இடையியல் - உரியியல்- பொதுவியல் - என்னும் ஐந்துறுப்புக்களோடு கூடிநின்றது - இதனுள்- பெயர்ச்சொல்- பொருளைவிளக்குதலாற்பெயரியலெனப்பெயர்தந்து முதலினும்-வினைச்சொல்- பொருளினதுபுடைபெயர்ச்சியை விளக்குதலால் வினையியலெனப்பெயர்தந்து அதன்பின்னும்- இடைச்சொல் இப்பெயர்வினை இரண்டிற்கும் உறுப்பாகியவற்றைச்சார்ந்துவருதலால் இடையியலெனப்பெயர்தந்து அவற்றின்பின்னும்- உரிச்சொல் முற்கூறிய பொருளினது குணப்பண்பு தொழிற்பண்புகளைவிளக்கிநிற்றலால் உரியியலெனப்பெயர்தந்து அவற்றின்பின்னும்-இப்பெயர் வினையிடையுரியென்னும் நால்வகைச்சொற்களினொழிபையும் பொதுமையின் விளக்கி நிற்றலால் - பொதுவிய லெனப்பெயர்தந்து ஈற்றின்கண்ணும் ஒக்குமுறைவைப்பென்னும்உத்தியால்வைக்கப்பட்டன- இனிச்சிங்கநோக்கமென்று - பெயர்வினையிடையுரிநான்கிற்குமிடையிலேபொதுவியலைவைத்து இம்முறைபிறழக்கூறுவாருமுண்டு- அது- பெயர்வினையிரண்டிற்கும்பொதுமையெனப்பொருள் படுமென்றிப்பின்னிற்பனவற்றிற்கும் பொதுமையெனப்பொருள்படாமையானும், படினும்- பெயர்வினை யிரண்டிற்குமொருகூறு பொதுமைமற்றொருகூறு இடையுரி யிரண்டிற்கும் பொதுமையெனப்பொருள்பட்டு இடர்ப்படநிற்குமாதலானும், அவ்வாறுகூறுதல் - முன்னோர்நூலின்வழியே நன்னூற்பெயரின்

வருத்தனனென்றதற்கு மாறுகொளக்கூறலாமாதலாலும் - நூலாசிரியர் முதலியோர் வருத்தன்றாதலாலும், நான்முறையன்றாதலாலுமது பொருந்தாதெனமறுக்க. இஃறுமந்து இந்நூலுடையார்க்கும் வருத்தனென்பதை - அவர்பெயர்வினையிடையுரியெனச் செவ்வெண்ணுகை இடமிடந்தோறுமெண்ணியிலக்கணங்கூறுதலாற்காண்க. இந்தஅதிகாரம் - மேலையதிகாரத்தாற்கூறியஎழுத்தினலாக்கப்பட்டசொல்லிலக்கணத்தை யுணர்த்துதலால் அதன்பின்வைக்கப்பட்டது.

இதனுள் - முதலாவது பெயரியல்-இது பெயரிலக்கணத்தையுணர்த்திய இயலெனவிரியும்.

இவ்வியலுள்.

முச்சகநிழற்று முழுமதிமுக்குடையச்சுதனடிதொழுதறைகுவன்சொல்லே. *

என்ற, இத்தலைச்சூத்திரம் - தெய்வவணக்கமுஞ்செயப்படுபொருளுமுணர்த்துகின்றது - (இ-ள்) முச்சகம்- மூன்றுலகத்திற்கும், நிழற்றும்- நிழலைச்செய்கின்ற, முழுமதிமுக்குடை-பூரணசந்திரனையொத்தமூன்று குடையையுடைய, அச்சுதனடிதொழுது- அழியாதவனுகிய அருகதேவன் அடிகளைவணங்கி, சொல்லறைகுவன் - சொல்லிலக்கணத்தைச்சொல்லுவேன்யான், எ-று.

சுதந்தரமில்லாமலேதோன்றியழியும் உயிரும் பிறவுமாகியசகத்திற்கு - அவ்வாறுதோன்றியழியாதவன் தலைவனுகவேண்டுமென்றுசொல்லவந்தவர் - அச்சுதனென்றார், சுதம் - அழிவு, அச்சுதம்-அழிவின்மை, இங்கேகாப்பதுகுறித்து - அச்சுதனெனவும். மேலையதிகாரத்திற்படைப்பதுகுறித்து நான்முகனெனவுஞ்சொல்லியதுபோலும் . சொல்லிலக்கணத்தைச்சொல்லென்றது - ஆகுபெயர், ஏகாரம் - ஈற்றசை, இங்கேயும் - யானென்பதுதோன்ரு எழுவாயாகநின்றது, யானறைகுவனெனமுடித்துக்கொள்க. (க)

ஒருமொழிதொடர்மொழி பொதுமொழியென்று, விருதினையைம்பாற்பொருளையுந்தன்னையுமூவகையிடத்தும்வழக்கொடுசெய்யுளின்,வெளிப்படைகுறிப்பின்விரிப்பதுசொல்லே. *

இது, மேலேசொல்லெனப்பட்டது இதுவெனவுணர்த்துகின்றது - (இ-ள்.) ஒருமொழிதொடர்மொழி பொதுமொழி

யென்று - இம்மூன்றுவகையினையுடையதாகி, இருதிணையைம் பாற்பொருளையுந்தன்னையும் - உயர்திணை யஃறிணையாகிய ஒருவன் - ஒருத்தி - பலர் - ஒன்று - பல - வென்னுமைம்பாற்பொருளினையும் பொருளையன்றிச்சொல் தன்னையும், மூவகையிடத்தும்-தன்மைமுன்னிலைபடர்க்கையென்கின்ற மூன்றிடத்தும், வழக்கொடுசெய்யுளின்-உலகவழக்காகியவார்த்தையினிடத்தும்- செய்யுளாகிய பாட்டினிடத்தும், வெளிப்படைகுறிப்பின் - வெளிப்படையானுங்குறிப்பினானும், விரிப்பதுசொல்- விளக்குவதுசொல்லாமென்றவாறு.

எனவேயெல்லாச்சொல்லும்பொருளும் - ஒருமொழி - தொடர்மொழி பொதுமொழியெனமூன்றாயும் - இருதிணையைம்பாலாகியும் அடங்குமென்பதும், இருதிணைமுதலாகியகாரணத்தால் - உயர்திணைச்சொல் - அஃறிணைச்சொல் - ஆண்பாற்சொல் - பெண்பாற்சொல் - பலர்பாற்சொல் - ஒன்றறிசொல் - பலவறிசொல் - தன்மைச்சொல் - முன்னிலைச்சொல் - படர்க்கைச்சொல் - வழக்குச்சொல் - செய்யுட்சொல் . வெளிப்படைச்சொல் - குறிப்புச்சொல் - எம். உயர்திணைப்பொருள் - அஃறிணைப்பொருள் - ஆண்பாற்பொருள் - பெண்பாற்பொருள் - பலர்பாற்பொருள் - ஒருபொருள் - பலபொருள் - தன்மைப்பொருள் - முன்னிலைப்பொருள் - படர்க்கைப்பொருள் - வழக்குப்பொருள்- செய்யுட்பொருள் - வெளிப்படைப்பொருள் - குறிப்புப்பொருள் எம். வழங்கப்படுமென்பதும், உயிர்க்கு அறிவுகாரணமாய்நின்றுதன்னையும்பொருளையுமுணர்த்துவதுபோல - ஒருவனுக்குச்சொல் - காரணமாய்நின்றுதன்னையும் உள் பொருள் இல் பொருள் - மெய்ப்பொருள் - பொய்ப்பொருள் - சித்துப்பொருள் - சடப்பொருள் - நித்தியப்பொருள் - அநித்தியப்பொருள் - உருவப்பொருள் - அருவப்பொருள் - காட்சிப்பொருள் - கருத்துப்பொருள் - இயற்கைப்பொருள் - செயற்கைப்பொருள் - முதற்பொருள் - சினைப்பொருள்- இயங்கியற்பொருள்- நிலையியற்பொருள்-எனப்பலவழியானும்பகுத்துச்சொல்லப்படும்இருதிணையைம்பாற்பொருளையுமுணர்த்துமென்பதும், பெறப்படும். பொருளையுந்தன்னையும் விரிப்பதுசொல் - எனமுற்றும்பயனிலையுமாகமுடித்துக்கொள்க. (உ)

ஒருமொழியொருபொருளனவாந்தொடர்மொழி, பலபொருள
னபொதுவிருமையுமேற்பன. *

இது, மேலேநிறுத்தமுறையே மூவகைமொழிகளாவனஇவையெனவுணர்த்துகின்றது - (இ-ள்.) ஒருமொழி - ஒருமொழிகளாவன, ஒருபொருளனவாம் - பகாப்பதமாயினும் பகுபதமாயினுமொன்றுநின்றுதந்தம்மொருபொருளைத்தருவனவாம், தொடர்மொழி-தொடர்மொழிகளாவன, பலபொருளன-அவ்விருவகைப்பதங்களுந்தன்னொடும்பிறிதொடும் தொகைநிலைதொகாநிலைகளாகிய அல்வழிவேற்றுமைப்பொருள்நோக்கத்தாலிரண்டுமுதலியவாகத்தொடர்ந்துநின்று இரண்டுமுதலியபல பொருள்களை

த்தருவனவாம், பொது - பொதுமொழிகளாவன, இருமையுமேற்பன - ஒன்றாய்நின்று ஒருபொருளைத்தந்தும் அதுவேதொடர்ந்துநின்று பலபொருளைத்தந்து மிவ்விரண்டிற்கும் பொதுவாய்நிற்பனவாம், எ-று.

[வ-று,] நிலம் - நிலத்தன் - நட - நடந்தான் - இல் - மன்-தவ - நனி - என்றாற்போல்வனஒருமொழிகள். நிலம்வலிது - அதுகொல் - சாலப்பகை - நிலங்கடந்தான்- நிலத்தைக்கடந்தான் - நிலங்கடந்தநெடுமுடியண்ணல்- என்றாற்போல்வன - தொடர்மொழிகள். எட்டு - கொட்டு - தாமரை - வேங்கை - எழந்திருந்தான் - வாராநின்றான்- உரைத்திட்டான் - என்றாற்போல்வன பொதுமொழிகள். இவையொருமொழிகளாயொருபொருளைத் தந்ததுமன்றிமுறையே - எள்ளைத்து - கொள்ளைத்து - தாவுகின்றமரை- வேகின்றகை-எழுந்துபின்னிருந்தான்- வந்துநின்றான் - உரைத்துப்பின்னிட்டான் -எனத்தொடர்மொழிகளாய்ப்பலபொருளைத்தருதலுங்காண்க. (து - என்பது-உண் என்னும்வல்வினை)

மொழிகள்தொடராமல்எவ்விடத்துந்தனித்து! நில்லாவாயினும்இப்பொருளுக்கு இச்சொல் எனஇறைவனானும் அறிவுடையோராலும்படைக்கும்படைப்புக்காலத்துந்,தொடர்மொழியிடத்து நின்ற இரண்டுமுதலியசொற்களுள் ஒன்றுநின்றுமற்றையவைகுறைந்தபோதுந், தனித்துநிற்குமாதலால் - ஒருமொழியென்றார் - குறைந்தபோது தனித்துநிற்றல் வருமாறு ஒருவனிடத்து ஒருவன் வந்தபோது வாவென்பது உலகியல் - அங்கேவருதற்குவினைமுதலாகிய நீயென்பதுகுறைந்து வாவென்னுஞ்சொல் தனித்து ஒருமொழியாய்நின்றது இத்தொடக்கத்தன வெல்லாங்கொள்க. (சூ) தனிமொழிசமையவாற்றலாற்றனித்துந்,தொடர்மொழியவாய்நிலைதகுதியண்மையிற்,றொகைநிலைதொகாநிலையாயிருவகையாற்,றொடர்ந்துப்பொருளைத்தோற்றுவதியல்பே. எனத்தனிமொழிசங்கேதவலியினாலே தனித்தெனவும் - தொடர்மொழி - அல்வழிவேற்றுமைத்தொகைநிலைதொகாநிலைவகையால்தொடர்ந்தென்றும்பிறர்கூறுதலுங்காண்க. அவர்மொழிகள்ஒன்றோடொன்றுதொடர்தற்குக்காரணம் அவாய்நிலை - தகுதி - அண்மையெனக்கூறிய மூன்றுமிவர்கூறிய - தொடர்மொழி பலபொருளன வென்றவற்றுளமைந்து கிடந்தன - அவைவருமாறு - ஆவைக்கொணுவெளிதைக்கோலால் - என்றாற்போல்வனஅவாய்நிலையாலே தொடர்ந்துநின்றன- அது ஒருசொல்லையொருசொல் வேண்டியேநிற்பது. தீச்சுடுந்தன்மைத்து - நீர்குளிருந்தன்மைத்து - என்றாற்போல்வனதகுதியால்தொடர்ந்துநின்றன - தகுதியால்தொடர்தல்- தக்ககுணத்தினாலேதொடர்ந்துநிற்பது. ஆற்றங்கரையிலைந்துகனிகளுள - என்றாற்போல்வன - அண்மையால்தொடர்ந்துநின்றன. அண்மை-ஆற்றிற்குக்கரை சமீபமாதலாலவ்வாறுதொடர்தல். சேனை-குழாம்- என்றாற்போல்வன - ஒருமொழி - பலபொருளைத்தந்ததென்னையெனின் - இங்கே- தொடர்மொழிபலபொருளனவென்றது - பலசொல்லிற்பலபொருளையன்றி-இவ்

வொருசொல்லிற் பலபொருளையன்றெனக. இசை (சூத்திரம்) பலவினியைந்தவு மொன்றெனப்படுமே, யடிசில்புத்தகஞ்சேனையமைந்த, தவமாலைகம்பலமனை யு, எனப்பலபொருளாலியைந்தவொருபொருளென - ஆசிரியர் அகத்தியனார்கூ றுதல்காண்க. (௫)

மக்கடேவர் நரகருயர்திணை, மற்றுயிருள்ளவு மில்லவு மஃறிணை. *

இது, நிறுத்தமுறையே யிருதிணையாமாறு உணர்த்துகின்றது. (இ-ள்,) மக்கள் - மனிதரும், தேவர் - வானவரும், நரகர் - நரகமென்கின்றதோருலகத்தாரும், உயர்திணை - உயர்வாகியகுலமாம், மற்றுயிருள்ளவுமில்லவும் - அவரையொழிந்தமிருகமுதலியவுயிருள்ளனவும் - நிலம் நீர்முதலியவுயிரில்லனவும், அஃறிணை - தாழ்வாகியகுலமாம், எ-று.

மக்கடேவர்நரகரெனப்படுவது அந்தந்தவுடலுமுயிருங்கூடி நின்றபோது ஆதலால் அவைபிரிந்தபோதும் வேறுபடுத்திய போதும் அவருயிரையும் உடம்பையும் உயிரில்லனவாகிய அஃறிணையாகக்கொள்ளப்படுமென்க. மிருகமுதலியவற்றின் உயிருடம்புகளுமப்படியே. மனிதராகப்பிறந்து புண்ணிய பாவங்களைச்செய்து புண்ணியமிகுதியால் தேவராகவும் பாவமிகுதியால்நரகராகவும் பிறப்பதினாலே மக்கடேவர்நரகரெனக்காரணகாரியக்கிரமமாக வைத்தாரெனக்காண்க.

திணைநிலங்குல மொழுக்கமென்பதுநிகண்டாதலால் - திணையென்னும் பலபொருளொருசொல்லிங்கே குலத்தையுணர்த்திநின்றது, உயர்திணையல்லாததிணை - அஃறிணையெனப்பட்டது, உயர்திணையஃறிணையென்பனவிரண்டும் பண்புத்தொகை - உயர்வாகியதிணை - அன்மையாகியதிணையென விரியும் - இனியிதற்கு - அடைபடுத்த விவ்விரண்டு சாதிப்பண்புகளும் ஆகுபெயராகி அப்பண்புடைப்பொருள்களை யுணர்த்திநின்றனவெனவும் - திணையென்பது ஒழுக்கம் அது ஆகுபெயராகி யொழுக்கத்தையுடைய பொருள்களையுணர்த்திநின்றதெனவும் - உயர்திணையென்பது வினைத்தொகை யெனவுங்கூறுவாருமுண்டு - சாதிவேற்றுமைகுறித்து உலகப்பொருள்களையெல்லாம் உயர்திணை யஃறிணையெனவிரண்டாகவகுத்து அவற்றுள்ளும் வேற்றுமைகுறித்து அவற்றையைம்பாலாகப்பகுத்தலே யெல்லா ஆசிரியர்க்குங்கருத்தாவதன்றியிங்கேயொழுக்கங்குறிக்கவேண்டுவதில்லாததினாலும் அந்தவொழுக்கந்தானுமுயிரில்லனவற்றிற்குப்பொருந்தாமையாலு மிங்கேதிணையென்றதற்கு அதுபொருளன்றெனவும் - உயர்திணை - உயர்ந்ததிணையென இறந்தகாலவினைத்தொகையாக விரித்தால் - மரமானதுநின்றோறுமுயர்ந்ததைநோக்கி - உயர்மரமெனவும் - கல்வியறிவு தினந்தோறுமுயர்ந்ததைநோக்கி - அதனையுடையார்மேலேற்றி உயர்மக்கள் - எனவுங்கூறுகின்ற வினைத்தொகைபோல உயர்திணையென்பதற்குவ

யாரும் (பண்டைபெயர்ச்சி) வினைகணுக்காயினுமனைக்காயினுந்தோன்றும்ப டியில்லாததிறலே அதுவினைத்தொகையன்றெனவுங்காண்க. மக்களுந்தே வரும் நரகருமுயர்திணையாமெனவும் - ஒழிந்தவுயிருள்ளனவுமில்லனவும் அஃ றிணையாமெனவும் - இவண்டுமுடிபாக்கிக்கொள்க, (ரு) உயர்திணையென்மனார்ம க்கட்சுட்டே, யஃறிணையென்மனாரவரலபிறவே, யாயிருதிணையினிசைக்குமன் சொல்லே. என ஆசிரியர் தொல்காப்பியனார்கூறுதலுங்காண்க. (௪)

ஆண்பெண்பலரெனமுப்பாற்றுயர்திணை. *

இது, நிறுத்தமுறையே ஐம்பாலுட்சிலபாலும் அவற்றிற்கு ரியதிணையுமுணர்த்துகின்றது - (இ-ள்-) ஆண்பெண்பலரென- ஆண்பாலும்பெண்பாலும்பலர்பாலுமென, முப்பாற்றுயர்திணை- மூன்றுபாலையுடையதாம் உயர்திணை, எ-று.

ஆடவனொன்றனையொத்த ஆண்பன்மையும் - பெண்டிரொன்றனையொத்தபெண்பன்மையும் - மக்களென்றனையொத்த அவ்விருவர்பன்மையும் அடக்கிப் பலரெனப்பட்டதென்க - மேற்பால வென்பதற்கு மிப்படியேகொள்க. உயர்திணை முப்பாற்று - என முடித்துக்கொள்க. (ரு) ஆடூஉவறிசொன்மகடூஉவறிசொல், பல்லோரறியுஞ்சொல்லொடுசிவணி, யம்முப்பாற்சொல்லுயர்திணையவ்வே, எனக்கூறுதலுங்காண்க. (௫)

ஒன்றேபலவென்றிருபாற்றஃறிணை. *

இதுவுமது, (இ-ள்.) ஒன்றேபலவென்று - ஒன்றன்பாலும் பலவின்பாலுமென, இருபாற்றஃறிணை - இரண்டுபாலையுடையதாம் அஃறிணையென்றவாறு.

அஃறிணையிடத்தும்- சேவலென்றதையொத்த ஆண்பாலும் பேடையென்றதையொத்தபெண்பாலுமுளவாயினும் அவ்வாண்பாலும்பெண்பாலும்உயிருள்ளனவற்றிற்சிலவற்றிற்கும்உயிரில்லனவற்றிற்கும்இல்லாததிறலே அப்பகுப்பையொழித்துஎல்லாவற்றிற்கும்பொருந்தஒன்றெனப்பட்டதென்க. அஃறிணையிருபாற்றெனமுடித்துக்கொள்க. (ரு) ஒன்றறிசொல்லேபலவறிசொல்லென், றாயிருபாற்சொல்லஃறிணையவ்வே, எனக்கூறுதலுங்காண்க. (௬)

பெண்மைவிட்டாணவாவுவபேடாண்பா, லாண்மைவிட்டல்ல தவாவுவபெண்பா, லிருமையுமஃறிணையன்னவுமாகும். *

இது, திணைபால்களுக்காவதோர்புறனடை யுணர்த்துகின்றது - (இ-ள்.) பெண்மைவிட்டு - பெண்தன்மைகுறைந்து, ஆணவாவுவபேடு - ஆண்தன்மை மேற்படுவனவாகிய பேடுகள், ஆண்

பால்-உயர்திணையாண்பாலெனப்படும், ஆண்மைவிட்டு- ஆண்தன்மைகுறைந்து, அல்லதவர்வுவ- பெண்தன்மை மேற்படுவனவாகிய பேடிகள், பெண்பால் - அத்திணைப்பெண்பாலாம், இருமையும் - இவ்விருவகைப்பேடிகளும், அஃறிணையன்னவுமாகும் - அஃறிணையையொப்பனவுமாம், எ-று.

ஆணிலக்கணமும் பெண்ணிலக்கணமுங் கலந்து ஒருவகையாயினும் நிரம்பாமல் நிற்கும்பேடிகளைப்பாற்பொதுமையில் நீக்கி உயர்திணையாண்பாலொடும்பெண்பாலொடுஞ்சேர்த்ததினுலே யவ்விலக்கணங்களுள் - விட்டவிலக்கணமும் அவாவுமிலக்கணமும் சிறந்தனவென்பதூஉம் - இப்பேட்டிலக்கணங்களுள் - சிறவாதனவற்றையுமுடன் குறித்தபோது இருவகைப்பேடிகளும் - ஆண்பெண்ணென்னுமிரண்டினுள் ஒன்றின்பாற்படுதல் கூடாமையால் உயர்திணையாகாமல்உயிருள்ளனவற்றுள் ஆண்பெண்ணென்னும் பகுப்பின்றிநின்ற அஃறிணையையொக்குமென்பதூஉம்பெறப்படும், பேடி-அலிது-அலி-மகண்மா - என்பனவொருபொருளுடைய சொற்கள்-அலி-மகண்மா - என்பனவற்றைவேறுகச்சொல்வாருமுண்டு. [வ-று,] வெண்பா-பெண்ணவாயாணிழந்தபேடியணியாளோ, கண்ணவாத்தக்ககலம்-எனப்பெண்ணிலக்கணஞ்சிறந்ததினுற்பெண்பாற்பட்டது - ஆண்பாற்பட்டதற்கும் அஃறிணையொத்துநின்றதற்கும்- இலக்கியம்வந்தவழிக்காண்க. ஆணவாவுவபேடி-ஆண்பால் - எம். அல்லதவாவுவ-பெண்பால் - எம். இருமையும் அஃறிணையன்னவுமாம் - எம். முடித்துக்கொள்க. (கூ) பெண்மைசுட்டிய வுயர்திணைமருங்கி, னாண்மைதிரிந்தபெயர்நிலைக்கிளவியுந், தெய்வஞ்சுட்டியபெயர்நிலைக்கிளவியு, மிவ்வெனவறியுமந்தந்தமக்கில வே, யுயர் திணை மருங்கிற்பால் பிரிந்திசைக்கும். எனக்கூறுதலுங்காண்க. (எ)

படர்க்கைவினைமுற்று நாமங்குறிப்பிற், பெறப்படுந்திணைபாலனைத்துமேனை, யிடத்தவற்றொருமைப்பன்மைப்பாலே. ✻

இது, நிறுத்தமுறையே மூன்றிடத்துஞ்சொல்- தன்னையும் பொருளையுமுணர்த்துந்தன்மைகூறுகின்றது-(இ-ள்.) படர்க்கைவினைமுற்றுநாமங்குறிப்பின்- (வெளிப்படைச்சொல்லாகியுங், குறிப்புச்சொல்லாகியும் உலகவழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் நிற்கும்) படர்க்கைமுற்றுவினைச்சொல்லையும் படர்க்கைப்பெயர்ச்சொல்லையுமுன்குறித்தால், பெறப்படுந்திணைபாலனைத்தும்-பி

ன் அவ்விருவகைச்சொல்லுங்காரணமாக- இருதிணையுமைம்பாலும்பெறப்படும், ஏனையிடத்து -ஒழிந்ததன்மைமுன்னிலையிடத்து, வினைமுற்றுச்சொல்லையும் பெயரையு முன்குறித்தால்பின்பு அந்தநாலவகைச்சொல்லுங்காரணமாக, அவற்றொருமைப்பன்மைப்பால்-அத்தன்மைமுன்னிலைகளின் ஒருமைப்பாலும்பன்மைப்பாலும்பெறப்படும், எ-று.

வினைமுற்றுநாமம் என்பனவற்றையும்- குறிப்பின் என்னும்வினையெச்சத்தையும் பெறப்படுமென்பதையும் ஒழிந்த இடங்களிலுங்கூட்டுக. [வ-று,] நடந்தான்-ள்-ர்-து-ன-எம். அவன்-ள்-ர்-து-வை-எம். படர்க்கைவினைமுற்றுச்சொல்லும்-படர்க்கைப்பெயர்ச்சொல்லும் - முன்புதம்மை யுணர்த்திப்பின்பு இருதிணையைம்பாலாகியபொருள்களையுணர்த்தின - நடந்தேன் - நடந்தேம்-எம். யான்- யாம்- எம். நடந்தாய் -நடந்தீர்-எம். நீ- நீர்- எம். ஒழிந்த இரண்டிடத்துவினைகளும்பெயர்களும் முன்புதம்மையுணர்த்திப்பின்பு இருதிணையைம்பாலுள்- ஒருமைப்பாலும்பன்மைப்பாலுமுணர்த்தின -பிறவுமிப்படியேகாண்க.

குறிப்பினென்றதினாலே சொல்தன்னை யுணர்த்துமென்பதும் - தன்னைமுன்னுணர்த்திப்பொருளைப்பின்னுணர்த்துமென்பதும் - ஒலியெழுத்தை யுணர்தற்குவரிவடிவோர்குறியாய் நின்றாற்போலப் பொருளையுணர்தற்குச்சொல்லொருகுறியாய் நின்றதென்பதும் - அந்தக்குறியைக்குறித்தாலன்றி - யிருதிணையைம்பாலாகியபொருளைப்பெறக்கூடாதென்பதும் - பெறப்படுமென்றதினாலே - செவியுணர்வாகியசொல்லை யொழிந்துகண்ணுணர்வுமாத்திரையினிருதிணையைம்பாற்பொருள்களை யொருவனுணரும் உணர்ச்சி யிருகவுணர்ச்சிபோல்வதன்றி - அதுபொருட்பேறு அன்றென்பதும் - ஒருமைப் பன்மைப்பாலே - யென்றதினாலே - தன்மை முன்னிலைகளில் - ஆண் - பெண் - பலர் - ஒன்று - பல - என்னும்பால் விகற்பத்தொடு இருதிணையுந்தோன்றுதென்பதும் - மூவிடங்களில் ஒவ்வொன்றிற்குரியவினையும்பெயரும் தம்மையும்பொருளையுமுணர்த்துமிதமிவ்வாறெனவே - இவ்விடங்களுக்குப் பொதுவாகிய வினைமுற்றுக்களும்பெயர்களும் பொதுமைநீங்கியோரிடத்திற்குரியவாகி-இவ்வாறேதம்மையும்பொருளையுமுணர்த்துமென்பதும் - பெயரெச்சமும்வினை யெச்சமும்-வினைத்தொகையும் பண்புத்தொகையுங் குறைச்சொல்லாதலால்தம்பயனிலையாகிய வருமொழிகளோடு புணர்ந்துபொருள் முற்றியிம்மூவிடவினை முற்றுள்ளும் பெயருள்ளும் அடங்குதலால் இவ்வாறேதம்மையும்பொருளையு முணர்த்துமென்பதும்- இடைச்சொல்லும் உரிச்சொல்லும் - பெயர்வினையுள்டங்குதலால் அவையும்- அவ்வாறேதம்மையும்பொருளையுமுணர்த்துமென்பதும், இவ்வாறுகவே- எல்லாச்சொல்லையும் - வினைமுற்றுள்ளும் பெயருள்ளும்அடக்கிமூவகையிடத்தும்நின்றசொல்லானது இருதிணையைம்பாற்பொருளையுந்தன்னையு முணர்த்துஞ்சிறப்புவிதிகூறினதென்பதும் பெறப்படும், இவ்வாறேயாசிரியர் அகத்தியனாரும் - வயிரவூசியுமயன் வினையிரும்புஞ் - செயிரறு பொன்னைச்செம்மைசெய்யாணியுந் - தமக்

கமைகருவியுந்தாமாமவைபோ - லுரைத்திறமுணர்ந்தது மாயதுதொழி லே - எனச்சொன்னானெனக்காண்க. இனிச்சூத்திரத்திற்குஇவ்வாறன்றி- இரு திணையைம்பாலைப்- பொருளிடத்தறிவித்தன்றிச்சொல்லிடந்தறியும்படிகூறி னானெனப்பொருள்கூறுவாருமுண்டு-அப்படியாயின் (௬) இருதிணைமருங் கினைம் பாலறிய,வீற்றினின்றிசைக்கும்பதினோரெழுத்துந்,தோற்றந்தாமேவினையொ டுவருமே. எனஆசிரியர் தொல்காப்பியனார் கூறியவாறே படர்க்கைவினைமுற் று ஒன்றுமேகூறவேண்டும். படர்க்கை நாமமென்றது - மிகைபடக்கூறலாம். வினையிடத்தவற்றொருமைப்பன்மைப்பாலேயென்றது - மற்றொன்றுவிரித்தலா ம், இவ்வாறன்றி-மூவிடங்களிலொவ்வொன்றிற்குரியமுற்றும்பெயருமேயிருதிணை யைம்பாற் பொருள்களை விளக்கும் ஒழிந்தன விளக்காவெனப் பொருள் கூறினா ல் - எல்லாச்சொல்லு மூவகையிடத்துநின்று இருதிணையைம் பாற்பொருளைவி ளக்குமெனக்கூறிய - ஒருமொழிதொடர்மொழி யென்னும் பொதுச்சூத்திரத் தொடு மாறுகொளக்கூறலாமெனக்காண்க. இனிச்சூத்திரத்தில் - குறிப்பி னென்னுஞ்சொல்லைவினை யெச்சமாக்காது - குறிப்பினுமிருதிணையைம்பாலு ம் விளங்குமெனப்பொருள்கூறுவாருமுண்டு. வெளிப்படையுங்குறிப்புமாகிய சொற்கள்- இருதிணையைம்பாற்பொருள்களைவிளக்குநெறியினிம்மூவிடச்சொ ல்லுளடங்கலேயன்றி - இவைம்பாலக்குறிப்புச்சொல்லென்வேறில்லாமையா லும் - ஒருவரறிவுதந்தானென்றால் - நுண்ணறிவுடையோர்நூலொடுபழகினும் பெண்ணறிவென்பதுபெரும்பேதைமைத்தே-என்றுசொல்லுவாராதலால்- அ றிவுபெண்பாலாற்பெறுதல்கூடாமையாலதைநீக்கி-ஒருவர்என்னும்படர்க்கை ப்பெயரும் அதின்பயனிலையாகிய- தந்தார் - என்னும் - படர்க்கைவினைமுற்று முயர்திணையையும் ஆண்பாலையுங்குறிப்பினாலே விளக்கலின் இப்பெயர்வினைக ளை நீக்கிப் -படர்க்கைவினைமுற்று நாமமென்று சூத்திரஞ்செய்திலராதலாலும், சொற்கள்வெளிப்படையானுங்குறிப்பினாலு மிருதிணையைம்பாற் பொருள்களை விளக்குவதை - நிறுத்தமுறையே- ஒன்றொழிபொதுச்சொல்என்னுஞ்சூத்திரத் தாற்பிற்கூறுதலாலும், இவ்விடத்துக்கூறுதல்- கூறியது கூறலென்னுங்குற்ற மாம் ஆதலாலும் அதுபொருளன்றென வுணர்க. திணைபாலனைத்தும்பெறப்ப டுமெனவும்-ஒருமைப்பன்மைப்பால்பெறப்படுமெனவுமுடித்துக்கொள்க. (௮)

தன்மைமுன்னிலைபடர்க்கைமூவிடனே. *

இது, நிறுத்தமுறையேமூவிடமாவதையுணர்த்துகின்றது-

(இ-ள்.) தன்மை- மூவிடன் - மூவிடமாவன தன்மையுமுன்னி லையும் படர்க்கையுமாம், எ-று.

[வ-று,] யான் - நீ - அவன் - எனவும். வந்தேன் - வந்தாய்- வந்தான் - எனவும்வரும். சொல்வானுங்கேட்பானுமாகியவிருவ ர் கூட்டத்துப்பிறந்தசொல் அவ்விருவரிடத்தும் நில்லாமல்அய லானிடத்துப்படர்தலாற் படர்க்கையெனப்பட்டது - இதனுள் எழுவாய்ப்பயனிலை விளங்கிக்கிடந்தன. (௯)

இலக்கணமுடையதி லக்கணப்போலி, மரூஉவென்றாகு மூவ கையியல்பு, மிடக்கரடக்கல் மங்கலங்குழூஉக்குறி, யெனுமு த்தகுதியோடாறும்வழக்கியல். *

இது, நிறுத்தமுறையே வழக்காமாறுகூறுகின்றது - (இ-ள்)
இலக்கண-முவகையியல்பும்-இலக்கணமுடையதென்றும் இலக்
கணப்போலியென்றும் மரூஉவென்றும் வழங்குமுவகையியல்
புவழக்கும், இடக் - முத்தகுதியோடு -இடக்கரடக்கலென்றும்-
மங்கலமென்றும் - குழூஉக்குறியென்றும்வழங்குமூன்றுதகுதி
வழக்குடனேகூட, ஆறும்வழக்கியல் - அறுவகைப்படும் வழக்கி
லக்கணமென்றவாறு.

[வ-று,] நிலம்-நீர்-தீ-காற்று-ஆகாயம்-நன்னிலம்-தண்ணீர்-
என்றாற்போல்வன - இலக்கணமுடையன - இவையிலக்கணமு
டையனவாவன- முறையே- ஒருமொழியென்றும் -இயற்சொல்
லென்றும்-தொடர்மொழியென்றும் - அடைமொழியென்றும்-
பண்புத்தொகையென்றும் - இயல்புவிகாரமென்றுஞ்சொல்லப்
படுமிலக்கணமுதலியனகொண்டுநிற்றல். இல்முன் என்பதைமுன்
றில் - என்றும், நகர்ப்புறம் - என்பதனைப் - புறநகர்என்றும்,
புறவுலா - என்பதனை - உலாப்புறம் என்றும், கண்மீ என்பதை-
மீகண் என்றும், கோவில்என்பதைக் - கோயில -என்றும், பொ
துவில்என்பதைபொதியில் - என்றும், வழங்குமிவைபோல்வன
இலக்கணப்போலி. அருமருந்தன்னபிள்ளை-என்பதை-அருமந்த
பிள்ளை - என்றும், மலையமானாடு- என்பதை - மலாடு - என்றும்,
சோழநாடு - என்பதைச்- சோணாடு-என்றும், பாண்டியநாடு-என்
பதைப்- பாண்டிநாடு-பாண்டிஎன்றும்,இந்நாடு-அந்நாடு- எந்
நாடு - என்பதை - இந்த-அந்த- எந்தநாடு-என்றும்,ஆதன்றந்தை
பூதன்றந்தை- என்பதை- ஆந்தை - பூந்தை - என்றும்-மரவடி-
குளவாம்பல்-என்பதை- மராடி - குளாம்பல்- என்றும்-யாவர்-
என்னும்வினைப்பெயரை- யார் - ஆர் - என்றும் - யார் - என்னு
ங்குறிப்புவினையை - ஆர் - என்றும் - எவன் - என்னுங்குறிப்பு
வினையை-என்- என்னை - என்ன - என்றும் - ஆற்றூர் - சென்ன
பட்டணம்என்பதை - ஆறை -சென்னை-என்றும்- வழங்குமிவை
போல்வன- மரூஉ. கண்கழீஇவருதும்-கால்கழீஇவருதும் -பவ்
வீ-பகரவீ - அல்குல்குடிஞள் - என்றாற்போல்வன. இடக்கரட
க்கல். செத்தாரைத்-துஞ்சினாரென்றும், ஓலையைத்திருமுகமென்
றும், காராட்டை -வெள்ளாடென்றும், சுடுகாட்டை - நன்காடெ
ன்றும், தீயபாம்பை - நல்லபாம்பென்றும், வழங்குமிவைபோ
ல்வன மங்கலம். பொற்கொல்லர் - பொன்னைப்-பறி - என்றும்,
யானைப்பாகர் ஆடையைக் - காரையென்றும்-வேடர் - கள்ளைச்-

சொல்விளம்பியென்றும்- வணிகர்பதத்தென்றுமென்றுப்பெயரைப்-புல்-என்றும், வழங்குமிவைபோல்வன-குழூஉக்குறி. இலக்கணநெறியால்வருவதைஇலக்கணமுடையதென்றும்- இலக்கணமுடையதன்றிப் படைப்புக் காலத்தில் இலக்கணமுடையதோடு கூடப்படைக்கப்பட்டதுபோலவருவதை- இலக்கணப்போலியென்றும்- தொன்றுதொட்டுவருதலின்றி யிடையிலே எழுத்துகள் திரிந்துங்கெட்டு மிலக்கணஞ்சிதைந்துதானேமரீஇ இவருவதைமரூஉவென்றும் (மருவியென்னும்வினையெச்சம் மரீஇ யெனத்திரிந்துநின்றது)மருவுதல்-தழுவுதல்,வழுவுதல்-வழூஉ,எனவிகாரப்பட்டு அளபெடுத்துநின்றதுபோல - மரூஉ- எனநின்றது இங்கேமருவிநிற்றலாவது-எழுத்துகள் திரியினுங்-கெடினும்மேலே நின்றஎழுத்துகளோடுதொடர்ந்துநிற்றல். இலக்கணம்-போலி-மரூஉ-என்றஇம்மூன்றும்-தகுதிவழக்குப்போலாகாமல் எந்தப்பொருட்கு எந்தச்சொல் அமைந்ததோஅந்தப்பொருளையந்தச்சொல்லாலேதானேசொல்வதுஇயல்புவழக்கென்றும், இடக்கர் என்பது-மறைத்துச்சொல்லவேண்டிய பொருளையுடையதானதினாலே அப்பொருள்தோன்றாமலதைமற்றோர்பொருளுடையசொல்லால்மறைத்துச்சொல்லுஞ்சொல்லை இடக்கரடக்கலென்றும், இதுபோற்சொல்லத்தகாதது அன்றாயினும் - மங்கலமில்லாததையொழித்து மங்கலமாகச்சொல்வதை - மங்கலமென்றும், ஒவ்வொருகூட்டத்திலுள்ளோர் யாதாயினுமோர் காரணம்பற்றி ஒருபொருளின்சொற்குறிப்பை யொழித்து மற்றொருசொற்குறியாற்சொல்வதைக் - குழூஉக்குறியென்றும் - சொல்லப்பட்ட இம்மூன்றும் - இப்பொருளையறிதற்கு அமைந்துநின்ற இந்தச்சொல்லாற்சொல்வதுதகுதியன்றுவேறோர்சொல்லாற்சொல்வது தகுதியென்றுநினைத்துச்சொல்லுதலால் - தகுதிவழக்கென்றும் பெயர்பெற்றன.

இலக்கணப் போலியையும் - மரூஉவினையும் வேறுபாடறிதற்குச் சான்றோர்கள் அவற்றையாண்டுவருகின்ற ஆட்சியேகாரணமென்க. அல்லாவிட்டால் நிலைமொழிவருமொழிகள்முன்பின்னாக மாறிநிற்பன இலக்கணப்போலி- ஒழிந்தகெடுதியெல்லாம் மரூஉவென்றுகொள்ளினும் அமையும், இந்த அறுவகைவழக்குந்திரிசொல்விடத்தும்வருதலின் - இயற்சொல்லாகிய உலகவழக்கையும்- திரிசொல்- திசைச்சொல்- வடசொல்லாகிய செய்யுள் வழக்கையும்- தொகுத்து இந்தச்சூத்திரத்திலே வழக்கெனப்பட்டதென்க, அப்படியானால்-செய்யுளென்றுவேறுபிரித்துச்சொல்வதென்னெனின்-இந்தவுலகவழக்குஞ்செய்யுள்வழக்கும் வழக்காகவே நில்லாமல் - தொடைப்பட்டதினாலென்க, தொடைப்படுதல்-வாக்கியமாதல்-செய்யுளாதல்,செய்யுள்- பாட்டு, வழக்கென்பது சொல்நடை(கு)தகுதியும்வழக்குந்தழீஇனவொழுகும்,பகுதிக்கிளவி வரைநிலை

பிலவே- அவையயல்கிளவிமறைத்தனர்கிளத்தல் மறைக்குங்காலைமரீஇயதொர ல் எனச்சூறுதலுங்காண்க. (௰)

பல்வகைத்தாதுவினுயிர்க்குடல்போற்பல, சொல்லாற்பொருட் கிடனாகவுணர்வினின், வல்லோரணிபெறச்செய்வனசெய்யுள். ❋

இது, நிறுத்தமுறையேசெய்யுளாமாறுகூறுகின்றது, (இ-ள்.) பல்வகைத்தாதுவின் - தோல்-இரத்தம்-இறைச்சி- நரம்பு-எலும்பு மூளை - சுக்கிலம் - என்னும் - எழுவகைத்தாதுக்களால், உயிர்க் குடல்போல் - உயிர்க்குஇடமாகச்செய்யப்பட்டவுடம்புபோல, பலசொல்லால் - இயற்சொல்-திரிசொல்-திசைச்சொல்- வடசொ ல் - என்னும் நால்வகைச்சொற்களால், பொருட்கிடனாக - அகப் பொருள் - புறப்பொருள் - எனவிருவகைப்பட்டபொருளுக்கு இடமாக, உணர்வினின்வல்லோர் - கல்வியறிவினாலேவலியராயி னோர், அணிபெறச்செய்வனசெய்யுள் - அணியிலக்கணம் பெறச் செய்யப்படுவனசெய்யுளாம், எ-று.

இப்படிச்சொல்லவே- எழுத்தாலாகியதுசொல்லாதலால்-எழு த்துச்-சொல்- பொருள்-அணி -யென்னும்நான்கினுலும்நடப்ப து-யாப்புஎன்பதாயிற்று-யாப்பு- என்பது - செய்யுள், [வ-று.] வருங்குன்றமொன்றுரித்தோன்றில்லையம்பலவன்மலையத்- திருங் குன்றவாணரிளங்கொடியேயிடரெய்தலெம்மூர்ப் - பருங்குன்ற மாளிகைநுண்களபத்தொளிபாயநும்மூர்க், கருங்குன்றம்வெண் ணிறக்கஞ்சுகமேய்க்குங்கனங்குழையே, என்ற - இக்கட்டளைக்க லித்துறைச்செய்யுள் - இடமணித்தென்றல் என்னும்பொருளுக் கு இடமாகித், தன்மையுவமை உருவகஅணிகளும் பிறவுமுடைத் தாகிவருதல்காண்க.பிறவுமன்ன, செய்வனசெய்யுள் எனவினையா லணையும்பெயரும்பயனிலைபடமுடித்துக்கொள்க. (௰க)

ஒன்றொழிபொதுச்சொல்விகாரந்தகுதி, யாகுபெயரன்மொ ழிவினைக்குறிப்பே, முதலொருகைதகுதி குறிப்போடின்னவுங், குறிப்பிற்றருமொழியல்லனவெளிப்படை. ❋

இது, நிறுத்தமுறையே-வெளிப்படைச்சொல்லுங்குறிப்புச் சொல்லுமாமாறுஉணர்த்துகின்றது -(இ-ள்.)ஒன்றொழிபொதுச் சொல்-இருதிணையாண்பெண்ணுளொன்றையொழிக்கும் பொது ச்சொற்களும், விகாரம்- வலித்தல்மெலித்தல்முதலிய ஒன்பதுவ கைவிகாரச்சொற்களும், தகுதி-மூன்றுதகுதிவழக்குச்சொற்களு ம், ஆகுபெயர் - ஆகுபெயர்ச்சொற்களும், அன்மொழி - அன் மொழித்தொகைச்சொற்களும், வினைக்குறிப்பு - குறிப்புவினைச் சொற்களும், முதலொருகைகுறிப்போடு - முதற்குறிப்புச்சொற்க

ளும் -தொகைக்குறிப்புச்சொற்களும்- இம்முதல்தொகையல்லா
பலவழியானும் வருங்குறிப்புச்சொற்களோடு, இன்னபிறவும்-
இவைபோல்வனபிறவும், குறிப்பிற்றருமொழி - குறிப்பினுலே
யிருதிணையைம்பாற்பொருள்களைத்தருஞ்சொற்களாம், அல்லன
வெளிப்படை- இவையல்லாதனவெல்லாம் வெளிப்படையால் அ
ப்பொருள்களைத்தருஞ்சொற்களாம், எ-று.

வெளிப்படையல்லாதன வெல்லாங்குறிப்புச்சொல்லாயினும்
அக்குறிப்புச்சொற்களுள்ளும் வேறுபாடுதோன்ற இவ்வாறுபகு
த்துக்கூறினுரெனக்கொள்க. ஏகாரம்- எண்ணேகாரம்- அதனுல-
ஒன்மொழிபொருட்சொல்லேவிகாரமேயெனமேனுங்கூட்டிபெ
ண்ணிக்கொள்க. என்னெனின் - எண்ணேகாரமிடையிட்டுக்கொ
ளினுமெண்ணுக்குறித்தியலுமென்மனுர்புலவர்- எல்பது இலக்க
ணமாதலாலென்க, [வ-று,] ஆயிரமக்கள்பொருதார் - பெருந்
தேவிபொறைபயிர்த்தகட்டிற்கீழ்நால்வர்மக்களுளர் - எனின் -ம
க்களென்னும் பொதுப்பெயரும் - பொருதார் - உளர் - என்னு
ம் பொதுவினையு முயர்திணை யாண்பால் பெண்பாலுள் ஒன்றை
யொழித்து ஒன்றைக்குறிப்பானுணர்த்தின. இப்பெற்றமுழவொ
ழித்தன . இப்பெற்றங்கறக்கும் எனின் - பெற்றமென்னும்பொ
துப்பெயரும் , உழவொழிந்தன - கறக்கும் - என்னும் பொது
வினையும் அஃறிணையாண்பால் பெண்பாலுள் ஒன்றையொழித்து
ஒன்றைக்குறிப்பானுணர்த்தின. குறுத்தாட்பூதம் - படைபொலி
மடி - எனின் - இவ்விகாரச்சொற்கள் - குறுந்தாள் - தாமரை -எ
ன்பனவற்றைக் குறிப்பானுணர்த்தின. கால்கழீஇவருதும் - ந
ன்கோடு - பறி - எனின் - இந்தமுத்தகுதி வழக்குச்சொற்கள் - ந
ந்தம்பொருளைக்குறிப்பானுணர்த்தின , புளித்தின்றான் - கடுத்
தின்றான் - எனின் - இந்த ஆகுபெயர்கள் அவற்றின் பழத்தைக்
குறிப்பானுணர்த்தின, பொற்றொடிவந்தாள் - ஆயிழைவந்தாள்-
எனின் - இந்த அன்மொழித்தொகைச்சொற்கள் - பொற்றொடி
யையும்- ஆயிழையையும்அணிந்தமகளிரைக்குறிப்பானுணர்த்தி
ன(குறள்)சொலல்வல்லன்சோர்விலனஞ்சானவனையிகல்வெல்லல்
-யார்க்குமரிது-எனின்- வல்லன் இல்லன் - என்னுங்குறிப்புவினை
ச்சொற்கள் பெயர்ப்பொருளையொழித்துவினைக்குறிப்புப்பொ
ருளைக் குறிப்பானுணர்த்தின. முதற்குறிப்பு இருவகைப்படும்.
ஒருபாட்டிலேமுதல்நிற்குஞ்சொல்லை மாத்திரங்குறித்ததும். ஒரு
சொல்லில்முதல்நிற்கும் எழுத்தைமாத்திரங் குறித்ததுமெனக்கொ
ள்க. அறத்தாறிதுவெனவெள்ளைக்கிழிப்பு - குன்றக்குறவனைவலே-

எனின்- இம்முதற்குறிப்புச்சொற்கள்- அறத்தாறிதுவெனவேண்டாசிவிகை பொறுத்தானோடூர்ந்தானிடை - எம்-குன்றக்குறவன் காதன்மடமகள் - எனவும்வரும்பாட்டுக்களைக்குறிப்பாலுணர்த்தின. குன்றுவிளையுளுயர்நிலந்துஞ்சுபுற்றுத்தாவென்றிப்பாடலை -எனின். இம்முதற்குறிப்பெழுத்துக்கள்- குரலும்- விளரியும்- உழையும்- துத்தமும்- தாரமும்- இளியும்- கைக்கிளையும் - ஆகியஏழிசைகளைக்குறிப்பாலுணர்த்தின. அலங்குளைப்புரவியைவரொடுசினைஇநிலந்தலைக்கொண்ட- எனின் - ஐவரென்றதொகைக்குறிப்புச்சொல்- பாண்டவரைக்குறிப்பாலுணர்த்திற்று- வெண்பா- ஒன்றிரண்டாயுந்துழைமறடக்கிநான்கிருமை- வென்றுவைந்துகொண்டவேலவேந்தே- சென்றுலா- மாழ்கடலருட்டையத்துப்போர் இ வென்றடக்கியேழ்கடந்தின்புற்றிரு - இரசெய்யவிட்டதுவதொகைக்குறிப்புச்சொற்களுங் குறிப்பாற்பொருளையுணர்த்துந்திறங்கண்டுகொள்க. ஒன்று-வீடு, இரண்டு-நல்வினை- தீவினை, பத்து- திக்கு, பதினெட்டு - புராணம், என்றற்போல்வனவுமன்ன, இவ்விப்பலவழியானும்வருங் குறிப்புச் சொற்கள் பொருளைக்குறிப்பாலுணர்த்துமாறு- கற்கறிந்தநன்கட்டாய் - நீயிர்பெரியமறிதிர் - பறவாக்குளவி - பாயாவேங்கை - உவர்க்கடலன்னசெல்வருமுளரோகிலைநற்றாற்றன்னநீயாருளையே - பல்சான்றீரோ - பல்சான்றீரோ, அறிவுடைமற்றிதுவிறல்மாண்குடுமி- யின்னாவாகப்பிறமண்கொண்டினியசெய்திநின்னார்வலர்முகத்தே - எனவருமித்தொடக்கத்தனவெல்லாங்குறிப்பினாலே தத்தம்பொருளையுணர்த்தின.

இன்னபிறவு மென்றதனாலே - தெரிநிலைவினை குறிப்புவினையாலணையும்பெயர்களும்- அவ்விருவகைமுற்றுக்களால்வரும் எச்சங்களும்- செய்யுமென்னும்- முற்றுவினையும்- அன்றி- இன்றி- என்பன- அன்று- இன்று- எனவரும்வினையெச்சக்குறிப்புகளும்- கேட்குநபோலவுங்கிளக்குநபோலவுமியங்குநபோலவு மியற்றுநபோலவு மஃறிணைமருங்கினு மறையப்படுமே - எனச்சொல்லிய இலக்கணைகளும் இவைபோல்வனபிறவுங்கொள்க. இவ்வாறன்றி - நிலம்- நீர்- தீ- காற்று- ஆகாயம்- பார்ப்பான்- அரசன்- வணிகர்- மரங்களென்றற்போல்வனவெல்லாம் வெளிப்படையாகிருதிணையைம்பாற்பொருளையுணர்த்திய வெளிப்படைச்சொற்களாம் - வடநூலார் - சொற்பொருளை - வாச்சியம்- வெங்கியம் - இலக்கணை யென்மூன்றெனவும்- இலக்கணையை வெங்கியத்துள் அடக்கியிரண்டெனவுங்கூறுவர்- இவற்றுள்வாச்சியமென்பது- வெளிப்படை- வெங்கியமென்பது குறிப்பு- இலக்கணையென்பதுஒருபொருளினது இலக்கணத்தைமற்றொருபொருளுக்குவைத்துச்சொல்வது- அது விட்டவிலக்கணை- விடாதவிலக்கணை- விட்டுவிடாதவிலக்கணை யெனமூவகைப்படும்- அவைவருமாறு- செய்றதுகொல் பொருந்ததுகொல் செவ்விபெறுந்துணையும், நின்றதுகொ னேர்மருங்கிற்கையூன்றி - மன்றில், முழங்குங்கடாயானையூரித்தேர்மாறர், குழந்தைபின்சென்றவென்னெஞ்சு. எனின் - மருங்குங்கையும் ஊன்றுதலும்முதலியவிலக்கணைத்

கன்னெஞ்சினுக்கில்லாததினாலே - விட்டவிலக்கணை. கங்கையின்கண்ணிடைச்சேரி -புளித்தின்றான் - எனின் - இடைச்சேரிகங்கையிலில்லாவிடினும் அதன் கரையிலிருத்தலும் - புளியைவிட்டு அதன்பழத்தைத் தின்றலுமின்மையால் விடாதவிலக்கணை. அகலிருவிசும்பிற்பாயிருள் பருகிப்பகல்கான்றெழுதரும்பல்கதிர்ப்பரிதி - எனின் - இருளைக்குடித்தலும் பகலைக்கக்குதலும் பரிதிக்கில்லாததினாலும் - இருளைப்போக்குதலும் பகலைத்தருதலும் அதற்குண்டாதலினாலும் - விட்டுவிடாதவிலக்கணை • இவையுங்குறிப்பினுளடங்குமாதலால் - வெளிப்படைகுறிப்பெனவிரிப்பதுசொல்லெனத்தொகுத்தும்-இவ்வாறு வகுத்துக்கூறினாரெனவுணர்க, குறிப்பொடிவ்வெனப்பிறவுங்குறிப்பிற்றருமொழியெனவும் - அல்லவ் - வெளிப்படையெனவுமிரண்டுமுடிபாக்கிக்கொள்க. (௰௨)

அதுவே-இயற்சொற்றிரிசொலியல்பிற்பெயர்வினை,யெனவிரண் டாகுமிடையுரியடுத்து, நான்குமாந்திசைவடசொலணுகாவழி.*

இது - மேலைச் சூத்திரம் வரைக்குஞ் சொல்லாவது இது வெனக்காட்டக்கண்ட அச்சொல் இவ்வளவினையுடைய தென்ப தை யுணர்த்துகின்றது. (இ-ள்,) அதுவே - மேலேகாட்டக் கண் டச்சொல், இயற்சொற்றிரிசொலியல்பின்- இயல்புந்திரிபுமா கிய இவ்விரண்டுதன்மையினாலே, பெயர்வினை யெனவிரண்டா கும் -பெயரியற்சொல் வினையியற்சொல் பெயர்த்திரிசொல்வி னைத்திரிசொல்லெனவிருவகைப்படும், இடையுரியடுத்துநான்கு மாம் - அவற்றுடன் இடைச்சொல்லும் உரிச்சொல்லு மடுத்து. நான்குவகையுமாம், திசைவடசொலணுகாவழி - அவற்றுடன் திசைச்சொல்லும் வடசொல்லும் அணுகாதவிடத்து, எ-று.

செய்யுட்குரியவையுரிச்சொல்- எனக்கூறுதலாலும்- வருஞ்சூத் திரஞ்செந்தமிழாகித்திரியாது- எனக்கூறுதலாலும் - இயற்சொ ல் என்றதைப்பெயர்வினை - இடையிலும் - திரிசொல் என்றதை- யெல்லாவற்றிலும்பிரித்துக்கூட்டுக, எனவே - அதுவேயெனச்சு ட்டியசொல்- பெயரியற்சொல்- பெயர்த்திரிசொல்- வினையியற் சொல்- வினைத்திரிசொல்- இடையியற்சொல்- இடைத்திரிசொல் உரித்திரிசொல்- எனஎழுவகைப்படுமென்பதும்-திசைச்சொல்லு ம்- வடசொல்லும் அணுகியபோது - ஒன்பதுவகைப்படுமென்ப தும்பெறப்படும்- உரியியற்சொல் இல்லாதாகவும் உரித்திரிசொ லியலென்றது - என்னெனின் - இயற்சொற்றிரி சொல்லென்னும் பொதுவிலக்கணம்நோக்கியென்க. அங்ஙனமாயின்,அன்பு-அ ழகு என்றாற்போல்வன உரியியற்சொலன்றோவெனின், அவை- மரங்குறைந்தது- மலைவளர்ந்தது என்றாற்போல - அழகுகுறை ந்தது-அன்புவளர்ந்தது - எனப்பெயர்த்தன்மைப்பட்டுப் பெய ருளடங்குமென்க - இனியிவற்றையுரியியற்சொல்லெனக்கூட் டிப்பத்துவகைப்படுமென்பாருமுளர்.

இச்சொற்களைத் திரட்டிச்சொல்லாமல் இப்படிப்பிரித்துச் சொல்லியதென்னையெனின் - ஒருவன்-ஒருத்தி-யென்றஅளவிலே யவர்கைகால் முதலியஅகத்துறுப்பும்-ஆடையாபரணமுதலிய புறத்துறுப்பும் அடங்குதல்போலப்-பெயர்வினையென்ற அளவிலே-அவற்றின் அகத்துறுப்பாகிய விகுதிமுதலிய இடைச்சொற்களும்-புறத்துறுப்பாகிய வேற்றுமையுருபுமுதலிய இடைச்சொற்களும்-அடங்குதலாலும்-உரிச்சொல்- பல்வகைப்பண்புப் பகர்பெயராகி - என்ச்சொல்லுதலால்- பெயருளடங்குதலாலும் - திசைச்சொல்லும்-வடசொல்லும்-இவற்றுள்ளே யாதாயினுமொன்று யடங்குதலாலும்- இவற்றை யடக்கிநின்ற நிலைமையுஞ்சிறப்புந்தோன்றப்-பெயர்வினையென விரண்டாகுமென்றுவனாயறுத்துப்-அப்பெயர்வினையுள் அடங்கிநின்றவற்றையே - வேறுபாடறிதற்கு-வேறுபடுத்துத்தொகைகொடுத்தலினாலே இடையுரிச்சூத்திநிலைமையுஞ்சிறப்புமில்லையென்பதுதோன்ற - அடுத்துநான்குமாமென்றும் - கொடுந்தமிழ்முதலியசொல் - செந்தமிழொடுகலந்தபோது அவற்றைத்திசைச்சொலலென்றும் - ஆரியச்சொல் தமிழ்நடைபெற்றுச்செந்தமிழொடுகலந்தபோது அதைவடசொல்லென்று - தம்மொடுசேர்க்கப் படுமாயினும்-செந்தமிழ்ச்சொல்லொடு கூட்டித் தொகைகொடுத்துக் கூறுவது நியமமன்றென்பது தோன்றச் அனுகாவழியென்றும் - முறைதெரிவித்து இவ்வாறு பிரித்தோதினரென்க. வடக்கும் ஒருதிசையாயிருக்க - த்திசைச்சொலலன்றி வடசொலலென்வேறுபிரித்துச் சொன்னதென்னெனின்- தமிழ்நாட்டிற்கு-வடக்குத்திக்கிலேபதினெட்டுப்பாடைகளுள்- ஆரியமுதலியபலமொழிகளும்-உளவாயினும், தென்தமிழ்க்கு எதிராகியது- கடவுள்மொழியாகிய ஆரியமொன்றுமேயென்பது தோன்ற அவ்வாரியத்துள் தமிழ்நடைபெற்றதை- வடசொல்லென்றும்,ஒழிந்தவற்றுள் தமிழ்நடைபெற்றதைத்- திசைச்சொல்லென்றும், சான்றோராலே நியமிக்கப்பட்டனவென்க. இச்சொற்களைப்பெயர்முதலியவாகவைத்த தென்னெனின்- பெயர்ச்சொல் பொருளை விளக்குதலாலும், வினைச்சொல் - பொருளினது தொழிலை விளக்குதலாலும், இடைச்சொல் - வேற்றுமையுருபுமுதலியவாகி - வேறோர்சொல்லாய் நிற்பினும், இவற்றிற்கே உறுப்பாவதன்றித்- தனித்துநில்லாமையாலும், உரிச்சொல் - மேற்பெயர்ச்சொல் விளக்கியபொருட்கு- உரிமைபூண்டு பண்புப்பெயருள்ளே சிலவற்றையே ஒருவிதத்தினாலே வேறுவகுத்துச்சொல்லப் பட்டதாதலாலும், திசைச்சொல- கொடுந்தமிழ்மொழியாகியும், அன்னியமொழியாகியும் - வருதலாலும், வடசொல்-அன்னியமொழியேயாகிவருவதினாலும், இம்முறையாகவைக்கப்பட்டனவென்க, இனி-ஆசிரியர்தொல்காப்பியனாரும், (சூத்திரம்) -சொல்லெனப்படுவபெயரேவினையென்றாயிரண்டென்பவறிந்திசினோரே, இடைச்சொற்கிளவியு முரிச்சொற்கிளவியு மவற்றுவழிமருங்கிற்றோன்றுமென்ப. எனஇவ்வாறுகூறினாரென்க. (அனுகாவழி) அதுவேயிரண்டாகும். அதுவேநான்குமாகும். எனமுடித்துக்கொள்க (யரு)

செந்தமிழாகித்திரியாதியார்க்குந், தம்பொருள்விளக்குந்தன்மையவியற்சொல். *

இது, மேலைச்சூத்திரத்து நிறுத்தமுறையேஇயற்சொல்லிலக்கணமுணர்த்துகின்றது. (இ-ள்.) செந்தமிழாகி-செந்தமிழ்நாட்டுமொழியாகி, திரியாது-இனிச்சொல்லப்படுந் திரிசொற்போலாகாமல், யார்க்கும்-கற்றோர்க்குங்கல்லாதார்க்குமொப்ப, தம்பொருள்விளக்குந்தன்மையவியற்சொல்- தம்பொருளைத்தாமே

விளக்குந்தன்மையை யுடையன. (உலகவழக்காகிய) இயற்சொல். எ-று.

யார்க்குமென்றதினால் -உலகவழக்குளென்பதுபெறப்பட்டது, [வ-று,] மண்-பொன்-என்றாற்போல்வன- பெயரியற்சொல். நடந்தான்- வந்தான்-என்றாற்போல்வன -வினையியற்சொல். அவனை-அவனால்எனவரும் வேற்றுமையுருபுமுதலியன - இடையியற்சொல் எனக்காண்க.

செந்தமிழ்நிலமாவது - யாதெனின் (௫) . சந்தனப்பொதியச் செந்தமிழ்முனியுஞ், சவுந்தரபாண்டியனெனுந் தமிழ்நாடனுஞ், சங்கப்புலவருந் தழைத்தினிதிருந்த, மங்கலப்பாண்டி வளநாடென்ப. என்னுமிதனாற்காண்க. இவ்வாறன்றி-ச்செந்தமிழ்நிலம், வையையாற்றின்வடக்கெனக்கூறுவாருமுண்டு-அப்படியாயிற் கொடுந்தமிழ்நிலத்துள்ளே- புனலூரெனப்படுவது. சோழநாடாதலாலும்- மருவுறுத்தமிழை முன்னாள்வளர்த்தபாண்டியனைப்போல -எனப்பாண்டியனையே தமிழ்வளர்த்தவனென்றுந்- தமிழ்நாடனென்றுஞ் சான்றோர்கூறுதலாலும், செந்தமிழ்முனிதன்மாணாக்கர் பன்னிருவருள்ளே பாண்டியனொருவனாதலாலும், செந்தமிழியற்கைசிவணியநிலத்தொடு முந்துநூல்கண்டியற்றப்பட்ட தொல்காப்பியமென்னுஞ்செந்தமிழிலக்கணநூல அவனவைக்களத்தரங்கேற்றப்படுதலாலும் அது - உரையன்றென்க. விளக்குந்தன்மையன, இயற்சொற்கள் - எனமுற்றுப்பயனிலையாக்கிமுடித்துக்கொள்க. (௫) அவற்றுளியற்சொற்றாமே, செந்தமிழ்நிலத்துவழக்கொடுசிவணித்தம்பொருள்வழாமையிசைக்குஞ் சொல்லே எனக்கூறுதலுங்காண்க. (௰௬)

ஒருபொருள்குறித்த பலசொல்லாகியும், பலபொருள்குறித்த வொருசொல்லாகியு, மரிதுணர்பொருளன திரிசொல்லாகும்.

இது, நிறுத்தமுறையே திரிசொல்லாமாறு கூறுகின்றது, (இ-ள்,) ஒருபொருள்குறித்த பலசொல்லாகியும்-ஒருபொருளைக்குறித்துவரும் பலசொற்களாகியும்-பல-யும்-பலபொருளைக்குறித்துவருமொருசொல்லாகியும், அரிதுணர்பொருளன திரிசொல்லாகும் - கற்றால்-அருமையாகவுணரப்படும் பொருளை யுடையன திரிசொற்களாம். எ-று.

அரிதுணர்பொருளனவென்றதினாலே- ஒருபொருள்குறித்த பலசொல்லுள்ளும்- பலபொருள்குறித்தவொருசொல்லுள்ளும்வருமியற்சொல்லொழியக்கொள்க.[வ-று.] கிள்ளை-சுகம்- தத்தை-என்றாற்போல்வன- கிளியென்னுமொருபொருள்குறித்தபலபெயர்த்திரிசொல்- வாரணமென்பது- யானை- சங்கு- கோழிமுதலிய வற்றைக்குறித்தலால் இவைபோல்வன- பலபொருள்குறித்த- ஒருபெயர்த்திரிசொல்- படர்ந்தான் - சென்றான் - ஏகினான்-என்பன-போயினான்-என்னுமொருபொருள்குறித்தலால் இவைபோல்வன ஒருபொருள்குறித்தபலவினைத்திரிசொல். வரைந்

தான் என்பது நீக்கினான்- கொண்டான்- எனவும்- ஆர்த்தான் எ
ன்பது- ஒலித்தான் -கட்டினான்- எனவும்வருதலால் இவைபோல்
வன பலபொருள்குறித்த ஒருவினைத்திரிசொல்- சேறும்-வருது
ம்-என்னும்-தன்மைப்பன்மைவினைகளில்- றும்-தும்-என்னும்வி
குதிகள் - தன்மைப்பன்மையென்னுமொருபொருள்குறித்தபல
விடைத்திரிசொல். சொல்-என்பது, ஐயத்தையும் அசைநிலையாவ
தையுங்குறித்துநிற்பதால்-இதுபோல்வன - பலபொருள்குறித்த
ஒரிடைத்திரிசொல்-சால-உறு-தவ-நனி-கூர்-கழி - என்பன, மிக
லென்னுமொருபொருள்குறித்து நிற்பனவே - இவைபோல்வ
ன, ஒருபொருள்குறித்தபலவுரித்திரிசொல், கடி-என்பது, காப்
பு-கூர்மை-விரை-விளக்கம்-அச்சம்-சிறப்புமுதலிய பலபொருள்
குறித்தனவே-இதுபோல்வன பலபொருள்குறித்த ஒருரித்திரி
சொல்- பிறவுமிப்படியேகண்டுகொள்க. இனித்திசைச சொல்லு
ள்ளும்வடசொல்லுள்ளும்இவ்வாறுவருவனவுளவாயினிவ்விலக்கண
த்தாற்பிரித்துணர்ந்துகொள்க. அரிதுணர்பொருளனதிரிசொ
ல்-எனமேலைச்சூத்திரப்பயனிலைபோலமுடித்துக்கொள்க. (ரு) ஒ
ருபொருள்குறித்தவேறுசொல்லாகியும், வேறுபொருள்குறித்த
வொருசொல்லாகியுமிருபாற்றென்ப திரிசொற்கிளவி - எனக்கூ
றுதலுங்காண்க. (௰௫)

செந்தமிழ்நிலஞ்சேர்பன்னிருநிலத்தினு, மொன்பதிற்றிரண்
டினிற்றமிழொழிநிலத்தினுந், தங்குறிப்பினவேதிசைச்சொல்
லென்ப. *

இது, நிறுத்தமுறையே இயற்சொற்றிரிசொலென்றவற்றின்
பின்னின்றபெயர்வினையிடையுரிகளை இந்தஇயலுள் இடுகுறிகார
ணமென்னுஞ்சூத்திரந்தொடங்கி யிவ்வதிகாரத்திலேந்நியலானுஞ்
சொல்லும்படிநிறுத்தி - ஒழிந்த - திசைவடசொற்களுள் - இ
துதிசைச்சொல்லாமாறு கூறுகின்றது, (இ-ள்,) செந்தமிழ்நி
லஞ்சேர்பன்னிருநிலத்தினும் - செந்தமிழ்நிலத்தைச் சேர்ந்தப
ன்னிரண்டுகொடுந்தமிழ்நாட்டினும், ஒன்பதிற்றிரண்டினில் -
பதினெண்பாடைகளுள், தமிழொழிநிலத்தினும்- தமிழ்ப்பாடை
யும் இனிச்சொல்லப்படும் வடசொற்குக்காரணமாகிய ஆரியமு
மொழிந்தபதினாறுமொழிகளும் வழங்கப்படும்பதினாறு நாட்டி
லும், தங்குறிப்பினவேதிசைச்சொல்லென்ப- உள்ளோர்தமதுகு
றிப்பினவாகிச்செந்தமிழோர்குறிப்பின்றி யந்தந்தத்திசையிலே
நின்றுஞ் செந்தமிழ்நாட்டில்வந்து வழங்குகின்றவற்றைத்திசைச்
சொல்லென்றுகூறுவர்புலவர். (எ-று.)

செந்தமிழென்றதினாலே கொடுந்தமிழென்பது அருத்தாபத்திப்பிரமாணத்தினாலேபெறப்பட்டது, ஆரியத்தின்காரியமாகியவடசொல்லைவேறுகூறுதலாலே தமிழொழிந்தநிலம் பதினெனக்காண்க, கொடுந்தமிழ்நாடுபன்னிரண்டாவன (வெண்பா) தென்பாண்டி. குட்டங்-குடங்-கற்கா- வேண்-பூழி, பன்றி-யருவா-வதன்வடக்கு,நன்றாய், சீத-மலாடு-புன்னாடு-செந்தமிழ்சேர், ஏதமில்பன்னிருநாட்டெண், என்பதிற்காண்க. இவற்றுள்-செந்தமிழ்ப்பாண்டிநாட்டின் தென்றிசையிலிருப்பதாகிய-தென்பாண்டிநாட்டார்-பசுவைப்-பெற்றமென்றும், சோற்றைச்- சொன்றியென்றும்,குட்டநாட்டார், தாயைத்-தள்ளையென்றும், குடநாட்டார்-தந்தையை-அச்சனென்றும், கற்காநாட்டார்-வஞ்சரைக் - கையரென்றும், வேணாட்டார்-தோட்டத்தைக்-கிழாரென்றும், பூழிநாட்டார்-சிறுகுளத்தைப்-பாழியென்றும், அருவாநாட்டார் - செறுவை- ச்செய்யென்றும், சிறுகுளத்தைக்-கேணியென்றும்- அருவாவடதலைநாட்டார்-புளியமரத்தை- எகினென்றும், சீதநாட்டார்-தோழனை-எலுவனென்றும்-தோழியை-இகுளை-என்றும், மலைநாட்டார்-நன்னிரை-வெள்ளமென்றும், புனனாட்டார்- அம்மானை-அம்மாஞ்சியென்றும்,வழங்குவர். இவைமுதலியனவும், பிறவுங்காண்க.

இனிஇவற்றைச்சூழ்ந்த தமிழொழிபதினேழ் - நிலத்தையும் , கவித்துறை - சிங்களஞ்சோனகஞ்சாவகஞ்சீனந்துளுக்குடகங், கொங்கணங்கன்னடங்கொல்லந்தெலுங்கங்கலிங்கம்வங்கம், கங்கமகதங்கடாரங்கவுடங்கடுங்குசலர், தங்கும்புகழ்த்தமிழ்சூழ்பதினேழ்புவிதாமிவையே- இதினலறிக- அருமணம்-காம்போசம் ஈழம் - கூவிளம்-பல்லவம்- அங்கம் - என்றற்போல்வனவும், இவற்றின்பரியாயப்பேர்களும் - இவற்றின்பகுதியாயும் - இவற்றுள் அடங்கும். அந்தோ - என்பது- சிங்களச்சொல் - எருத்தைப்-பாண்டில்-என்பது-தெலுங்குச்சொல், மாமரத்தைக்-கொக்கு-என்பது- துளுவச்சொல், ஒழிந்தன வந்தஇடங்களிற்காண்க. இதனுள் புலவரொன்றும்பயனிலகுறைந்து நின்றது. (கு) செந்தமிழ்சேர்ந்தபன்னிருநிலத்தூர், தங்குறிப்பினவேதிசைச்சொற்கிளவி- எனக்கூறுதலுங்காண்க. (மகூ)

பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத்தானு, மீரெழுத்தானு மியைவனவடசொல். ✻

இது,வடசொல்லாமாறுணர்த்திற்று,(இ-ள்.) பொதுவெழுத்தானும்(ஆரியத்திற்குந்தமிழிற்கும்) பொதுவாகிய எழுத்தினாலும், சிறப்பெழுத்தானும்-ஆரியத்திற்கேயுரியசிறப்பெழுத்துத்திரிந்தவெழுத்தினாலும்,ஈரெழுத்தானும்- இந்தஇருதிறத்துவெழுத்தினாலும்,இயைவனவடசொல்- செந்தமிழ்ச்சொல்லையொப்பனவாகிச்செந்தமிழ்நிலத்துவந்துவழங்குவனவடசொல்லாம். எ-று,

புதவியதுள்- பொதுவெழுத்தொழிந்தநாலேழுந்திரியுமெனக்கூறினமையால் - சிறப்பெழுத்துத்திரிந்தஎழுத்தினாலுமெனப்படுபெறப்பட்டது. அந்தவடசொற்குஆரியச்சிறப்பெழுத்துத்திரிந்த எழுத்து ஆதிகாரணமாகியும்-அந்தச்சிறப்பெழுத்து அனுதிகாரணமாகியும்-நின்றதினாலே, சிறப்பெழுத்தாலும் எனக்கருவிப்பொருள்படக்கூறினார், அனுதிகாரணம்- பருத்தியாலமைந்தபடாம்என்பதில்-பருத்தி-ஆதிகாரணம் - நூலாலமைந்தபடாம்-என்பதில்-நூல்-[வ-று,]அமலம்-கமலம்-விமலம்-காரணம்-காரியம்-என்றாற்போல்வன பொதுவெழுத்தாலியைந்தன-சுகி-போகி-சுத்தி-சித்தி-என்றாற்போல்வன - சிறப்பெழுத்தாலியைந்தன- அரன்-அரி-கடினம்- சலம்-என்றாற்போல்வன். ஈரெழுத்தாலு மியைந்தன-பிறவுமிப்படியேகாண்க. (கூ) வடசொற்கிளவிவடவெழுத்தொரீஇ - யெழுத்தொடுபுணர்ந்தசொல்லாகும்மே - சிதைந்தன வரினுமியைந்த னவரையார். என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாருமென்க, இயைவன வடசொல் எனமுடிக்க, (டுஎ)

இடுகுறிகாரணமரபோடாக்கந், தொடர்ந்துதொழிலலகாலந்தோற்று,வேற்றுமைக்கிடனாய்த்திணைபாலிடத்தொன்- றேற்பவும்பொதுவுமாவனபெயர், *

இது, இந்தஅதிகாரத்திலே சொல்லும்படி நிறுத்துவைத்த பெயர்வினையிடையுரியென்னும் நான்கினுள்ளே பெயரினிலக்கணஞ்சொல்லத்தொடங்கியப்பெயரின்பொதுவிலக்கணமுணர்த்துகின்றது. (இ-ள்.)இடுகுறிகாரணம் - இடுகுறியுங்காரணக்குறியும், மரபொடாக்கந்தொடர்ந்து - மரபையும்ஆக்கப்பாட்டையும்பற்றி - தொழிலல-வினையாலணையும் பெயரல்லாதன, காலந்தோற்ற- காலத்தைவிளக்காதனவாகி, வேற்றுமைக்கிடனாய்-எட்டுவேற்றுமையுருபுகளுஞ்சார்தற்குஇடமாகி,திணைபாலிடத்து- இருதிணையும் ஐம்பாலும்மூவிடமுமாகிய இவற்றுள், ஒன்றேற்பவும் - ஒன்றையேற்றுவருவனவும், பொதுவுமாவனபெயர்-பலவற்றையேற்றுவருவனவுமாவன பெயர்களாம், எ-று.

[வ-று,]ஆண்-பெண்-மரம்-தெங்கு-கமுகு-என்றாற்போல்வன-இடுகுறிமரபுதொடர்ந்துவந்தன, அவன்-அவள்-காளை-காரிகை-விலங்கு-பறவை-என்றாற்போல்வன-காரணக்குறிமரபு தொடர்ந்துவந்தன, மானவேன்முட்டைக்கு மாறாய்தெவ்வர்போங் -

இடுகுறியாக்கந்தொடர்ந்துவந்தன, பொன்னன்-பூணன்-பல்லன்-உதடன்-கூனன்-மலைமகள்பகனைமாற்றோர்கூற்று - என்றாற்போல்வன-காரணக்குறியாக்கந்தொடர்ந்துவந்தன, நடந்தவனை - நடந்தானை-படித்தவனை-படித்தானை-என்றாற்போல்வன,வினையாலணையுங்காரணக்குறிப்பெயர், காலங்காட்டின, மற்றையிலக்கணங்கள்- மூன்றும்- பின்னும்- பெறப்படுதலால் இங்கேகாட்டாமல் விடப்பட்டன. இடுகுறிமரபு - காரணமரபு- இரண்டும் ஒருவராலே ஆக்கப்பட்டனவன்றித்தொன்றுதொட்டு வருவனவாம், இடுகுறியாக்கம்-காரணவாக்கமிரண்டும், ஒருவரால்ஆக்கப்பட்டு இடையிலேவருவனவாம்.

இனி இடுகுறிப்பெயர்காரணப்பெயர்- மரபுப்பெயர்-ஆக்கப்பெயர்என நால்வகைப்படுமென்பவருமுளரே. இடுகுறிகாரணப்பெயர்பொதுச்சிறப்பின.என-வரையறுத்துச்சொன்னதிறனும்- எல்லாப்பெயருமிடுகுறி காரணமென இரண்டாயடங்குவதன்றிவேறேயில்லாததிறனும் அதுபொருந்தாமைதனைக்கண்டுகொள்க - ஆவனபெயரென - முற்றும்பயனிலையாகமுடித்துக்கொள்க. (௰௮)

அவற்றுட்,கிளையெண்குழூஉமுதற்பல்பொருடிணைதே-மூர்வா
னகம்புறமுதலநிலன்யாண், டிருதுமதிநாளாதிக்காலந்,தோ
ள்குழன்மார்புகண்காதுமுதலுறுப்,பளவறிவொப்புவடிவுநிற
ங்கதி, சாதிகுடிசிறப்பாதிப்பல்குண, மோதலீதலாதிப்பல்வி
னை, யிவையடைசுட்டுவினாப்பிறமற்றோ, டுற்றனவ்வீறுநம்பி
யாடூஉ, விடலைகோவேள்குரிசிறோன்ற, லின்னனவாண்பெய
ராகுமென்ப. *

இது,மேலேதிணைபாலிடத்தொன்றேற்பவுமென்றவற்றுள்-உயர்திணை ஆண்பாலுக்கு உரியபெயர்களை யுணர்த்துகின்றது. (இ-ள்.) கிளையெண்குழூஉமுதல்-சுற்றமும், ஒன்றென்னுமெண்ணும், கூட்டமும்முதலிய, பல்பொருள் - பலபொருள்களையும், திணை-ஐவகைநிலங்களும், தேம்-தேசங்களும், ஊர்-பேரூர்-சிற்றூர்களும், வான்-ஆகாயமும், அகம்-உள்ளிடமும், புறம்- வெளியிடமும், முதலநிலன் -முதலாகிய இடங்களையும்,யாண்டு- வருடங்களும், இருது- இரண்டிரண்டுமாதங் கொண்டுவருகின்ற இளவேனிற்காலமுதலியபருவங்களும், மதி-மாதங்களும், நாள்-அசுவனிமுதலியநட்சத்திரங்களும், ஆதிக்காலம்-முதலியகாலங்களையும், தோள்-புயமும், குழல் - கேசமும், மார்பு-நெஞ்சும், கண்-நேத்திரமும், காது-செவியும், முதலுறுப்பு-முதலியஅவயவங்களையும், அளவு - பெருமை சிறுமைமுதலிய பிரமாணங்களும், அறிவு-கல்வியறிவு மெய்யறிவு முதலியஞானமும், ஒப்பு-உவமிக்கப்படுங்குணமும், வடிவு-வட்டஞ்சதுரமுதலியவுருவுகளும், நிற

ம்-வெண்மைகருமைமுதலியவண்ணங்களும், கதி-மக்கள்-தேவர்-நரகர்-மிருகம்-என்னும்நால்வகைக்கதிகளும், சாதி-அந்தணர்முதலியநால்வகைச்சாதிகளும், குடி-குலமும், சிறப்பு-நன்மைபெருமை உயர்வு தகுதிமுதலியபற்றிவரும் மேன்மையும், ஆதிப்பல்குணம்-முதலியபலவகைப்பண்புகளையும், ஓதல்-வேதமுதலியநூல்களைப்பயிற்சிசெய்தலும், ஈதல்-இரப்போர்க்குப்பொருள்கொடுத்தலும், ஆதிப்பல்வினை-முதலியபலவகைப்பட்ட தொழில்களையும், இவையடை-இவற்றையடுத்துவருகின்ற, (இப்பொருளிடங்காலஞ் சினைகுணந்தொழில்களாகிய ஆறையுமடுத்து வருகின்ற) சுட்டிவினாப்பிறமற்றோடு-சுட்டெழுத்துகளையும், வினாவெழுத்துகளையும், பிறவென்பதனையும், மற்றென்பதனையும், உற்றனவீறு - பொருந்தியனவாகநின்றபெயர்களும், நம்பி - ஆடூஉ-விடலை-கோ-வேள்-குரிசில்-தோன்றல் - இவ்வேழுபெயர்களும், இன்னன-இவைபோல்வனவும், ஆண்பெயராகுமென்ப-ஆண்பாற்பெயர்களாமென்றுசொல்லுவர் புலவர். எ-று. ✽

சுட்டுமுதலியநான்கு இடைச்சொற்குந்தமக்கென ஒருபொருளின்றிப்பொருளாதியாறினுள்யாதாகினுமொன்றைச் சொல்பவன் குறிப்பின்வழிநின்று உணர்த்தலால்- இவையடைசுட்டிவினாப்பிறமற்றென்றார். [வ-று,] தமன்-நமன்-நுமன்-எமன் - என்பனகிளையால்வருபெயர், ஒருவன்-என்பது, எண்ணால்வருபெயர், அவையத்தான்-அத்திகோசத்தான்- என்பனகூட்டத்தால்வருபெயர்-வலங்கையான்-இடங்கையான்-என்பனவுமப்படியே, பொருளன்-பொன்னன்-முடியன்- குழையன்-வில்லன்- வாளன்-என்றாற்போல்வன- முதலென்றதினால்வருபெயர்-இவையெல்லாம் பொருளால்வருபெயர், வெற்பன்-பொருப்பன்-சிலம்பன்-எ-ம்- மறவன்-எயினன்-எ-ம்-இடையன்-ஆயன்-முல்லையான் எ-ம் ஊரன்-மகிணன்-நாடன்-மள்ளன்- எ-ம்-சேர்ப்பன் - துறைவன் - கரையான்-எ-ம்-முறையே-குறிஞ்சி-பாலை-முல்லை-மருதம்-நெய்தல்-என்னும் ஐந்திணையால்வருபெயர், சோழியன்-கொங்கன்-சீனத்தான்-என்பன- தேசத்தால் வருபெயர், பருவூரான் - கருவூரான்-சிற்றூரான் என்பன - ஊரால்வருபெயர்-வானத்தான், அகத்தான் - புறத்தான்-என்பன- வான்முதலியமூன்றிலும் வருபெயர் -மண்ணகத்தான்-பாதலத்தான்- என்றாற்போல்வன, முதலென்றதினால் வரும்பெயர்- இவையெல்லாம் இடத்தால்வருபெயர், மூவாண்டினன் - ஐயாண்டினன் - எ-ம்-வேனிலான் - எ-ம்-தையான்-மாசியான்-எ-ம்-ஆதிரையான்-ஓணத்தான்-எனவும்முறையே-

ஆண்டு-இருது-மதி-நாள்-ஆகிய நான்கானும்வருபெயர், நெரு
நலான்-காலையான்-மாலையான்-என்றாற்போல்வன-ஆதியென்றதி
னால்வருபெயர் - இவையெல்லாங்காலத்தால்வருபெயர், திணி
தோளான்-எ-ம்-செங்குஞ்சியான்-எ-ம்-வரைமார்பான்-எ-ம்-செ
ங்கண்ணன்-எ-ம்-குழைக்காதான்-எ-ம்-முறையே-தோள்-குழ
ல்-மார்பு-கண்-காது-ஆகியஐந்தானும்வருபெயர்; குறுந்தாளன்-
நெடுங்கையன்-மதிமுகத்தான்-பல்லன் - உதடன்-என்றாற்போல்
வன-முதலென்றதனால்வருபெயர் - இவையெல்லாம்அவயவத்தா
ல்வருபெயர், பெரியன் - சிறியன்-எ-ம்-புலவன்-அறிஞன்-எ-ம்-
பொன்னொப்பான்-புலியனையன்- எ-ம் - கூனன்-குறளன்-எ-ம்-
கரியன்-செய்யன்-எ-ம்-மானுடன்-தேவன்-எ-ம்-பார்ப்பான்-அ
ரசன்-எ-ம்-சேரன்-சோழன்-பாண்டியன்-எ-ம்-ஆசிரியன்-படை
த்தலைவன்-எ-ம்-முறையே-அளவு-அறிவு-ஒப்பு-வடிவு-நிறம்-கதி-
சாதி-குடி-சிறப்பு-ஆகியஒன்பதினானும்வருபெயர், நல்லன்-தீய
ன் - நெடியன்-கொடியன் - என்றாற்போல்வன - ஆதியென்றதி
னால் வருபெயர்-இவையெல்லாங்குணத்தால்வருபெயர், ஓதுவா
ன் - ஈவான் - என்பன, ஓதல்-ஈதல்-என்கின்ற இரண்டானும் வரு
பெயர், கணக்கன்-பிணக்கன்- உளணன்-கடுநடையன் - என்றாற்
போல்வன, ஆதியென்றதினால்வருபெயர்- இவையெல்லாம் தொ
ழிலால்வருபெயர், அவன்-இவன்-உவன்-எ-வும்- எவன்-யாவன்-
ஏவன்-எ-ம்-பிறன்-எ-ம்-மற்றையான்- எ-ம் - முறையே - சுட்டு-
வினா-பிற-மற்று-என்னும்நான்கானும் வருபெயர், நம்பிமுதலி
யபெயர்கள் ஏழுஞ்சூத்திரக்கிடக்கையிற்காண்க, இன்னனவென்
றமையால்-வில்லி-வாளி-சக்கிரி-வழுதி-சென்னி- கிள்ளி - பாரி-
என்றாற்போல உயர்திணை யாண்பாற்பொருள் குறித்துவருவன
வெல்லாங்கொள்க. என்ப-புலவரென முற்றுப்பயனிலையாகமுடி
த்துக்கொள்க. (௬௧)

கிளைமுதலாகக்கிளந்தபொருள்களுள், எவ்வொற்றிகரக்கேற்
றவிற்றவுந், தோழிசெவிலிமகடூஉநங்கைதையலோடின்னன
பெண்பாற்பெயரே. *

இது, உயர்திணைப்பெண்பாலுக்குஉரியபெயருணர்த்துகி
ன்றது. (இ-ள்.)கிளைமுதலாகக்கிளந்த பொருள்களுள் -மேலைச்
சூத்திரத்திலே-கிளைமுதலாகப் பகுத்துச்சொல்லிய அறுவகைப்
பொருள்களுள்ளே, எவ்வொற்றிகரக்கேற்றவிற்றவும் - எகரவொற்
றும் இகரவுயிரும் பொருந்துதற்கு ஏற்றஅவ்விரண்டீற்றுப்பெ
யர்களும், தோழி-செவிலி-மகடூ-நங்கை-தையலோடு- இந்தஐந்

றுபெயர்களோடுகூட, இன்னன-இவைபோல்வனவும்,பெண்பாற்பெயர்-உயர்திணைப்பெண்பாற்கு உரியபெயர்களாம். எ-று.

[வ-று,]தமள்-நமள்-நுமள்-எமள்-(கிளை)ஒருத்தி-(எண்)அவையத்தாள் - அவையத்தி - அத்திகோசத்தாள் - அத்திகோசத்தி-(குழூஉ) பொன்னாள்-பொன்னி- கனங்குழையாள் - முடியாள்-பொருளாள் - வளையள்-பூஞ்சிலம்பினள்- பூஞ்சிலம்பி-என்றாற்போல்வன-முதலன்றதனால்வருபெயர்-இவையெல்லாம்பொருளால்வருபெயர், மற்ற-இடங்-காலஞ்-சினை-குணந்-தொழில்களுள்ளும்- ளகரவொற்றிற்கும்-இகரவுயிர்க்கும் - ஏற்பனவறிந்து-ஒட்டிக்கொள்க. ஏற்றவீற்றவுமென்றதினாலே -கிளைப்பெயர் இகரவீறொடு பொருந்தாமையும் - எண்ணுப்பெயர் - ளகரமெய்யீறொடு பொருந்தாமையுங்காண்க. இன்னனவென்றதினாலே-இகுளை- மாது - அரிவை - அங்கனை - மடந்தை-என்றாற்போல உயர்திணைப்பெண்பால்குறித்துவருவனவெல்லாங்கொள்க, மற்றவும் இன்னனவும் பெண்பாற்பெயரெனமுடித்துக்கொள்க. (உ௰)

கிளந்தகிளைமுதலுற்றரவ்வீற்றவுங், கள்ளெனீற்றினேற்பவும்
பிறவும், பல்லோர்பெயரின்பகுதியாகும். *

இது, பலர்பாற்குரியபெயர்களுணர்த்துகின்றது. (இ-ள்.) கிளந்த - மேற்சொல்லிய, கிளைமுதலுற்ற - கிளைமுதலாகிய அறுவகைப்பட்டபொருள்களையும் சுட்டிவிருப்பிற மற்றென்பனவற்றையும்பொருந்திய, ரவ்வீற்றவும் - ரகரவொற்றீற்றுப் பெயர்களும், கள்ளெனீற்றின் - கள் என்னும்விகுதியை யிறுதியாகவுடைய பெயர்களுள், ஏற்பவும் - இவ்விடத்திற்குப்பொருந்திவருவனவும், பிறவும் - இவைபோல்வனபிறவும், பல்லோர்பெயரின்பகுதியாகும் - பலர்பாற்பெயரின்பகுப்பாம் எ-று.

கள்ளீறு - பகுதிப்பொருள்விகுதியாகவும்- விகுதிமேல்விகுதியாகவும்வருதலால்-கள்ளெனீற்றினேற்பவுமென்றார்.

[வ-று,]தமர் - நமர் - நுமர் - எமர் - (கிளை)- இருவர் - மூவர்-பதின்மர் - (எண்) அவையத்தார் - அத்திகோசத்தார் - (குழூஉ) குழையார்- வில்லர் - முடியினர் - என்றாற்போல்வன - முதலென்றதனால்வருபெயர் - இவையெல்லாம் பொருளால்வருபெயர்-மற்ற இடமுதலியவற்றோடு மிவ்வாறேயொட்டிக்கொள்க. கோக்கள் - மனுக்கள் - என்றாற்போல்வனவற்றுள்- கோ-மனு-என்பன-பகுதிப்பொருளாகிநிற்க. கள்விகுதிக்குவேறுபொருளில்லா
பொருள் விகுதியீற்றுப்பெயர்கள்- தம

ரீகள்- நம்பர்கள் - அரசர்கள்- என்றாற்போல்வனவிகுதிமேல்விகுதியீற்றுப்பெயர்கள் - பிறவென்றதனால் - மாந்தர்- மக்கள் - மனிதர் - என்றாற்போலப் பலர்பாலைக்குறித்து வருவனவெல்லாங்கொள்க. ரவ்வீற்றவும்- எற்பவும்- பிறவும் - பல்லோர்பெயரின்பகுதியாமெனமுடித்துக்கொள்க. (௩.) நிலப்பெயர்குடிப்பெயர்குழுவின்பெயரே - வினைப்பெயருடைப்பெயர் பண்புகொள்பெயரே - பல்லோர்க்குறித்தமுறைநிலைப்பெயரே - பல்லோர்க்குறித்ததிணைநிலைப்பெயரே-கூடிவருவழக்கினாடியற்பெயரே- யின்றிவரென்னுமெண்ணியற்பெயரோ, டன்றியனைத்து மவற்றியல்பினவே- எனவுயர்திணைமுப்பாற்கும்பொதுவாகஆசிரியர்தொல்காப்பியனார்கூறுதலுங்காண்க- (௨௧)

வினைச்சுட்டுடனும்வேறுமாம்பொரு, ளாதியுறுதுச்சுட்டணை
யாய்த், தொன்றனெண்ணின்னனவொன்றன்பெயரே. *

இது, அஃறிணையொருமைப்பாற்கு உரியபெயருணர்த்துகின்றது. (இ-ள்.) வினைச்சுட்டுடனும் - வினையினுஞ்சுட்டினுமமைந்து அவற்றுடனேயும், வேறுமாம் - வினையுஞ் சுட்டும் படாது வேறாகியும் வரும், பொருளாதியுறுது - பொருளாதியாறையும் பொருந்திய துவ்விகுதியீற்றுப்பெயரும், சுட்டணையாய்தம்- சுட்டொடுகூடிய ஆய்தத்தைப்பொருந்திய துவ்விகுதியீற்றுப்பெயரும், ஒன்றனெண் - ஒன்றென்னும் எண்ணுப்பெயரும், இன்னன - இவைபோல்வனபிறவும், ஒன்றன்பெயர் - அஃறிணையொருமைப்பாற்கு உரியபெயர்களாம். எ-று.

[வ-று.] எது-யாது-ஏது-எ-ம்- அது- இது-உது-எ-ம்- குழையது - நிலத்தது-மூலத்தது-கோட்டது-கரியது - ஆடலது- எ-ம்-அஃது- இஃது-உஃது-எ-ம்- ஒன்று - எ-ம்-காண்க- இன்னனவென்றதனாலே-பிறிது-மற்றையது-அனையது-இனையது- என்றாற்போல அஃறிணையொருமைப்பொருள்குறித்துவருவனவெல்லாங்கொள்க. சுட்டணையாய்தம் இப்பகுதிவிகுதிப்புணர்ச்சியிற்சந்திவகையால்வந்ததல்லாததனாலேவேறோதப்பட்டனவென்பதும் இவைபோல் எடுத்துச்சொல்லாததனாலே ஆய்தமணையாச்சுட்டுப்பெயர்களே - வினைச்சுட்டுடனுமென்றவற்றுள் அமைந்துகிடந்தனவென்பதும்பெறப்பட்டன, துச்சுட்டணையாய்தம் ஒன்றனெண்இன்னன-ஒன்றன்பெயரெனமுடித்துக்கொள்க. (௨௨)

முன்னரவ்வொடுவருவையவ்வுஞ், சுட்டிறுவவ்வுங்களிறு
மொழியு, மொன்றலெண்ணுமுள்ளவில்ல, பல்லசில்லவுளவில,

பல்சில, வின்னவும்பலவின்பெயராகும்மே.

இது, அஃறிணைப்பன்மைப்பாற்குஉரிய பெயர்களுணர்த்துகின்றது. (இ-ள்.) முன்னரவ்வொடு - முற்கூறியவினைச்சுட்டுடனும் வேறுமாம்பொருளாதி ஆறேழும், வருவையவ்வும் - ஏற்றபடிவரும்வையீற்றுப்பெயர்களும் அகரவீற்றுப் பெயர்களும், சுட்டிறுவவ்வும் - வகரவொற்றீற்றுச்சுட்டுப்பெயரும், கள்ளிறுமொழியும் - கள்ளென்னும்பகுதிப்பொருள் விகுதியீற்றுப்பெயர்களும், ஒன்றலெண்ணும் - ஒன்றுஅல்லாதஇரண்டுமுதலிய எண் ஆகுபெயர்களும், உள்ள - இல்ல- பல்ல- சில்ல- உள- இல- பல - சில-என்கின்ற(குறிப்புவினையாலணைந்த)- இந்தஎட்டுப்பெயர்களும், இன்னவும் - இவைபோல்வனபிறவும், பலவின்பெயராகும் - அஃறிணைப்பன்மைப்பெயர்களாம். எ-று.

மேலைச்சூத்திரங்களிற்கூறியவாறே யுறுதிகூறாமல் வருவையென்றதினால் ஏற்றபடியென்பதும், உள்ள- இல்ல - முதலியபண்பொடுவரும் அகரவீற்றுப்பெயர்கள்- முன்னரவ்வொடுவருவையவ்வும் என்றவற்றுள் அடங்குதலால், பின்னர்க்கூறிய-உள்ள-இல்ல-முதலிய எட்டுங்குறிப்பு வினையாலணையும்பெயரொன்பதும் பெறப்பட்டன. [வ-று.] எவை- யாவை- எ-ம்- அவை - இவை - உவை- எ-ம்- நெடியவை- கரியவை- நல்லவை- தீயவை- உள்ளவை- இல்லவை- எ-ம்- பொருள- பொருளன- (பொ) அகத்த- அகத்தன- (இ) மூலத்த - மூலத்தன(கா) கோட்ட - கோட்டன் - (சி) கரிய - கரியன் - (கு) சுவ - சுவன - உள்ள - உள்ளன் - இல்ல - இல்லன - (தொ) எ-ம்- அவ்- இவ்- உவ்- எ-ம்- யானைகள் - குதிரைகள் - எ-ம்- இரண்டு - மூன்று - பத்து- நூறு-ஆயிரம் - கோடி - எ-ம்- முறையேகாண்க. உள்ளமுதலியஎட்டும் - சூத்திரக்கிடக்கையிற்காண்க. இன்னவுமென்றதினாலே- யா- பிற - மற்றைய- என்றாற்போல அஃறிணைப்பன்மைப்பொருள்குறித்து வருவனவெல்லாங்கொள்க. பெயராகும்மே என்பதில் மகரவொற்று விரித்தல் விகாரமாகநின்றது, வையும்- அவ்வும்- வவ்வும் - கள்ளிறுமொழியும் ஒன்றலெண்ணும் உள்ளமுதலியஎட்டும் இன்னவும்- பலவின்பெயராகும் எனமுடித்துக்கொள்க. (சூ.) அதுவிதுவுதுவெனவருஉம்பெயரு, மவைமுதலாகிய வாய்தப்பெயரு, மவையிவையுவையெனவருஉம்பெயரு, மவைமுதலாகியவகரப்பெயரும், யாதுயாயாவையென்னும்பெயரு, மாவயின்மூன்றோடப்பதினைந்தும், பாலறிவந்தவஃறிணைப்பெயரே, எ-ம்- பவ

லபலசிலவென்னும்பெயரு, முள்ளவில்லவென்னும்பெயரும்,வி னைப்பெயர்க்கிளவியும்பண்புகொள்பெயரு, மினைத்தெனக்கிள க்குமெண்ணுக்குறிப்பெயரு, மொப்பிறுகியபெயர்நிலையுளப்ப ட, வப்பாலொன்பதுமவற்றோரன்ன, எ-ம்- கள்ளொடுசிவணுமவ் வியற்பெயரோ, கொள்வழியுடையபலவறிசொற்கே. எ-ம் - அ ஃறிணையிருபாற்கும்பொதுவாக ஆசிரியர்தொல்காப்பியனார் கூ றுதலுங்காண்க. (உரு)

பால்பகாவஃறிணைப்பெயர்கள்பாற்பொதுமைய. *

இது, அஃறிணையிருபாலுக்கும்உரியபெயருணர்த்துகின்றது. (இ-ள்.) பால்பகாவஃறிணைப்பெயர்கள் - இப்படி ஒருமைபன் மையாகப்பகுத்ததை யொழிந்துநின்ற - அஃறிணைப்பெயர்கள் அனைத்தும், பாற்பொதுமைய - அந்தத்திணையின் இருபாலுக்கு ம் பொதுவாகியபெயர்களாம். எ-று.

[வ-று.] யானைவந்தது-யானைவந்தன, குதிரைவந்தது-குதி ரைவந்தன, மரம்வளர்ந்தது-மரம்வளர்ந்தன, கண்சிவந்தது - க ண்சிவந்தன, எனவரும். இச்சூத்திரத்தைத்திணைப்பொதுப் பெ யரின்பின்னே கூறாமல் - இங்கேகூறியது விளங்குதற்பொருட் டெனவுணர்க. பெயர்கள் - பாற்பொதுமைய - எனமுடித்துக் கொள்க. (சூ) தெரிநிலையுடையவஃறிணையியற்பெய, ரொருமை யும்பன்மையும்வினையொடுவரினே.எனக்கூறுதலுங்காண்க. (உசு)

முதற்பெயர்நான்குஞ்சினைப்பெயர்நான்குஞ், சினைமுதற்பெ யரொரு நான்குமுறையிரண்டுந், தன்மைநான்கு முன்னிலை யைந்து, மெல்லாந்தாந்தானின்னனபொதுப்பெயர். *

இது, இருதிணைக்குமுரிய பொதுப்பெயர்களைத்தொகுத் துச்சொல்லுகின்றது. (இ-ள்-) முதற்பெயர்நான்கும்- முதலைப் பற்றிவரும்பெயர்வகைநான்கும், சினைப்பெயர்நான்கும்- சினை யைப்பற்றிவரும்பெயர்வகைநான்கும்,சினைமுதற்பெயரொருநா ன்கும் - சினையையும் முதலையும் பற்றிவரும்பெயர்வகைநான்கு ம், முறையிரண்டும் - முறையைப்பற்றிவரும் பெயர்வகையிரண் டும், தன்மைநான்கும் - தன்மைப்பெயர் வகைநான்கும், முன் னிலையைந்தும் - முன்னிலைப்பெயர்வகை ஐந்தும், எல்லாந்தாந் தான் - எல்லாம் தாம் தான்-என்னும், இவையொருமூன்றும்கூ ட்ட ஒன்பது கூற்றுப்பெயர்களும், இன்னன-இவைபோல் வன வும், பொதுப்பெயர் - இருதிணைக்குமுரிய பொதுப்பெயர்க ளாம். எ-று.

பெயர்என்பதை - முறைமுதலியவற்றொடுங் கூட்டுக, இன்னனவென்றதிறலே - சூரியனுதித்தான், சூரியனுதித்தது - சந்திரனுதித்தான், சந்திரனுதித்தது - என, ஒன்றையேஉயர்திணையாக்கியும் அஃறிணையாக்கியும் கூறும்பொதுப்பெயர்முதலியவும், ஊமைவந்தான்-ஊமைவந்தாள்-என, உயர்திணை இருபாலையுணர்த்தும்- பொதுப்பெயர்முதலியவும், தன்மை- முன்னிலை-வினையாலணையும் பெயரும் - பிறவுங்கொள்க. முதற்பெயர்முதலாக முன்னிலைப்பெயர் கடையாகக்கூறிய அறுவகைப்பெயர்களுக்கும் உதாரணம் பின்வரும் தத்தம்வகைச்சூத்திரங்களிற்காண்க- இப்பொதுப்பெயர்களை விரவுப்பெயரொன்றுங் கூறுவர், இதனை முன்னரவ்வொடு என்னுஞ்சூத்திர முடிபுபோல முடித்துக்கொள்க. (சூ) இயற்பெயர்சினைப்பெயர் சினைமுதற்பெயரோ, முறைப்பெயர்க்கிளவி தாமேதானே, யெல்லாநீயிர் நீயெனக்கிளந்து, சொல்லியவல்லபிறவுமாஅங், கன்னவைதோன்றினவற்றொடுகொளலே. எனக்கூறுதலுங்காண்க. (உரு)

ஆண்மை பெண்மை யொருமைபன்மையி, னாமந் நான்மைக ளாண்பெண்முறைப்பெயர். ❋

இது, மேலேதொகுத்துச்சொல்லப்பட்டவற்றுள் முதற்பெயர்முதல் முறைப்பெயர் ஈறாகக்கிடந்தவற்றைக் காரணவகையால் வகுத்துச்சொல்கின்றது. (இ-ள்.) ஆண்மைபெண்மையொருமைபன்மையின் - ஆண்மைமுதலிய இந்தநான்குபாலுங்காரணமாக, ஆமந் நான்மைகள் - மேற்கூறியமுதற்பெயர் சினைப்பெயர் சினைமுதற்பெயரொன்றுமூன்றும் ஒவ்வொன்று நான்கு நான்காகும், ஆண்பெண்முறைப்பெயர்-ஆண்மைபெண்மையென்னுமிரண்டுபாலுங்காரணமாகமுறைப்பெயரிரண்டாம், எ-று.

முறையிரண்டெனமேலேசொன்னதிறலே யிங்கேதொகைகொடாமல்விட்டார், அவைகாரணமாகப்பெயர்வருமாறு - ஆண்மைமுதற்பெயர் பெண்மைமுதற்பெயர் ஒருமைமுதற்பெயர் பன்மைமுதற்பெயர் - எ-ம்- ஆண்மைச்சினைப்பெயர் - பெண்மைச்சினைப்பெயர்-ஒருமைச்சினைப்பெயர்- பன்மைச்சினைப்பெயர்- எ-ம்- ஆண்மைச்சினைமுதற்பெயர் - பெண்மைச்சினைமுதற்பெயர் - ஒருமைச்சினைமுதற்பெயர் - பன்மைச்சினைமுதற்பெயர் - எ-ம்- ஆண்மைமுறைப்பெயர்- பெண்மைமுறைப்பெயர்- எ-ம்- காண்க. [வ-று,] சாத்தன் - சாத்தி- கோதை - கோதைகள் - இவைமுதற்பெயர்நான்கு, முடவன்-முடத்தி - செவியிலி - செவி

யிலிகள் - இவைசினைப்பெயர் நான்கு, முடக்கொற்றன் - முடக்கொற்றி - கொம்புறமருதி - கொம்புறமருதிகள் - இவைசினைமுதற்பெயர் நான்கு, தந்தை - தாய் - இவைமுறைப்பெயர் இரண்டு, இவற்றுள் - ஒருமைப்பொதுப்பெயரொடுகள்விகுதிபுணர்ந்து பன்மைப்பொதுப்பெயராயிற்று - என்னெனின் - கள்விகுதி அஃறிணைப்பன்மைக்குச்சிறந்ததாயினும் உயர்திணைப்பன்மையினும் விரவிவருதலாலெனக. (விரவுதல் - கலத்தல்) அந் நான்மைகள் ஆமெனவும் - ஆண்பெண்முறைப்பெயரெனவு முடித்துக் கொள்க.

(கு) அவற்றுள், நான்கேயியற்பெயர் நான்கே சினைப்பெயர், நான்கே மொழிமனூர் சினைமுதற்பெயரே, முறைப்பெயர்க்கிளவி யிரண்டாகும்மே, பெண்மைப்பெயரோ தத்தமரபின. எ-ம். அவைதாம் - பெண்மையியற்பெயராண்மையியற்பெயர், பன்மையியற்பெயரொருமையியற்பெயரென், றந்நான்கென்ப வியற்பெயர் நிலையே. எ-ம், பெண்மைச்சினைப் பெயராண்மைச் சினைப்பெயர், பன்மைச்சினைப்பெயரொருமைச்சினைப்பெயரென், றந்நான்கென்பசினைப்பெயர் நிலையே. எ-ம். பெண்மைசுட்டிய சினைமுதற்பெயரே, யாண்மைசுட்டிய சினைமுதற்பெயரே, பன்மைசுட்டியசினைமுதற்பெயரே, யொருமைசுட்டிய சினைமுதற்பெயரென், றந்நான்கென்பசினைமுதற்பெயரே, எ-ம். பெண்மை முறைப்பெயராண்மைமுறைப்பெயரென், றுயிரண்டென்ப முறைப்பெயர் நிலையே. எ-ம் - ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங்காண்க. (௨௬)

அவற்றுள், ஒன்றேயிருதிணை தன்பாலேற்கும். *

இது, திணைப்பொதுவாய் நின்றபெயர்கள் பாற்பொதுவாய் நிற்குமாறுகூறுகின்றது. (இ-ள்.) அவற்றுள் - முதற்பெயர் முதலாகச்சொல்லப்பட்ட இருபத்தாறும்பிறவுமாகியபொதுப்பெயர்களுள், ஒன்றே - ஒவ்வொன்றுதானே, இருதிணை தன்பாலேற்கும் - இருதிணையிலுமுள்ள தன் தன் பால்களை க்கொள்ளும். எ-று.

எனவே - ஆண்மைப்பொதுப்பெயர் - உயர்திணையாண்பாலையும் - அஃறிணையாண்பாலையும், பெண்மைப்பொதுப்பெயர் - உயர்திணைப்பெண்பாலையும் - அஃறிணைப்பெண்பாலையும், ஒருமைப்பொதுப்பெயர் - உயர்திணை ஆணொருமைபெண்ணொருமையையும் - அஃறிணையொருமையையும், பன்மைப்பொதுப்பெயர் - உயர்திணைப்பன்மையையும் - அஃறிணைப்பன்மையையும் - ஏற்குமென்பதாயிற்று. [வ-று,] சாத்தனிவன் - சாத்தன் இவ்வெருது, எ-ம் - சாத்தியிவள் - சாத்தி இப்பசு - எ-ம் - கோதைஇவன் - கோதைஇவள் - கோதைஇது - எ-ம் - கோதைகள்இவர் - கோதைகள் இவை - எ-ம் - தந்தைஇவன் - தந்தைஇவ்வெருது - எ-ம் - தாய்இவள் - தாய்இப்பசு - எ-ம் - யான் நம்பி - யான் நங்கை - யா

ன்பூதம்- எ-ம்- யாம்- மக்கள்- யாம்பூதங்கள்- எ-ம்- நீநம்பி- நீநங்கை- நீபூதம்- எ-ம்- நீயிர்மக்கள்- நீயிர்பூதங்கள்- எ-ம்- அவரெல்லாம் அவையெல்லாம்-எ-ம்- அவர்தாம்- அவைதாம- எ-ம்- அவன்தான் - அவள்தான்- அதுதான் - எ-ம்- வரும்-இவற்றுள்- காட்டாதொழிந்தனவும் பிறவும் இவ்வாறேயொட்டிக்கொள்க. இனி ஆண்மைப்பொதுப்பெயர் - பெண்மைப்பொதுப்பெயர்கட்கு ஆண்மக்கள் - ஆண்விலங்கு- பெண்மக்கள்- பெண்விலங்கு- யானைவந்தான் - யானைவந்தது- மான்வந்தாள் - மான்வந்தது- என இக்காலத்துப்பயின்றுவருவனவற்றைக்காட்டலும் அமையும் பிறவுமன்ன.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் - பன்மைப்பொதுப்பெயர்கள் ஐம்பாலுள் உயர்திணைப்பன்மைப்பாலொழியமற்றநான்குபாலையுமேற்குமென்றார். இந்தஆசிரியர்-ஆண்மை-பெண்மை - ஒருமை-பன்மை-எனஇனச்சுட்டினவாய்வருதலின் இவற்றுட்பன்மைப் பொதுப்பெயர் பன்மையை ஒழிதலும் ஒருமையை ஏற்றலும் பொருந்தாது என்பதைநினைத்து மறுத்தலென்னும் - மதம்பற்றித் - தன்பாலேற்குமென்றார், ஆயின் - அந்த ஆசிரியர் கூறியவாறே - பன்மைப்பொதுப்பெயர்க்கு - யானை வந்தது - யானை வந்தன - யானை வந்தான் - யானை வந்தாள் - என உதாரணங்காட்டினாரும் உளரெனின் - யானை என்னும் பால்பகா அஃறிணைப் பெயர்க்குக்கள் விகுதியின்மையின் அஃறிணை ஒருமைக்கேசிறந்ததாய் அதன் பன்மையிலும்விரவியும் - உவமை ஆகுபெயராய் உயர்திணை ஆணொருமை - பெண்ணொருமையிலும், வருதலின் முதற்பெயர் நான்குமென்னுஞ் சூத்திரத்தில் இன்னன வென்றமையால் அமைந்ததன்றிப் பன்மைப்பொதுப்பெயராகாவென்க. (சு) பெண்மைசுட்டியவெல்லாப்பெயருமொன்றற்கு மொருத்திக்கு மொன்றியநிலையே - ஆண்மைசுட்டியவெல்லாப்பெயருமொன்றற்கு மொருவற்குமொன்றியநிலையே - எ-ம், பன்மைசுட்டியவெல்லாப்பெயருமொன்றே பலவேயொருவனொன்று மென்றிப்பாற்குமோரன்னவ்வே. எ-ம் - ஒருமைசுட்டிய வெல்லாப்பெயரு, மொன்றற்கு மொருவர்க்குமொன்றியநிலையே- எ-ம்- தாமென்கிளவி பன்மைக்குரித்தே- எ-ம்- எல்லாமென்னும் பெயர்நிலைக்கிளவி - பல்வழிநுதலியநிலைத்தாகும்மே,எனவும் - ஆசிரியர்தொல்காப்பியனார் கூறுதலுங்காண்க. (உஎ)

தன்மையானுன்யா நா முன்னிலை, யெல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ,
யல்லனபடர்க்கை யெல்லாமெனல்பொது. ✱

இது, தன்மை முன்னிலைப் பெயர்களுக்குத் தொகை கூறினார். அவை யிவையென்பதும் இடத்தொன்றேற்பவும்பொதுவுமென்றார் அவைஇவையென்பது முணர்த்திற்று. (இ-ள்.) தன்மை - தன்மைப்பெயர் நான்காவன, யானுன்யா நாம்- யான்- நான்-யாம்- நாம்- என்பனவாம், முன்னிலை-முன்னிலைப் பெயரைந்தாவன, எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ-எல்லீரும் - நீயிரும் - நீவிரும்- நீரும்-நீயுமாம், அல்லனபடர்க்கை - இந்த இரண்டிடத்து மொன்

பது பெயருமல்லாத பெயர்களனைத்தும் படர்க்கை யிடத்திற்கு உரியவாம், எல்லாமெனல்பொது-அவற்றுள் எல்லாம் என்னும் பெயரொன்றும் மூன்றிடத்திற்கும் உரித்தாம்.எ-று.

எல்லாமென்னும்பெயர்மூன்றிடத்தும்வருமாறு. யாமெல்லாம்-நீயிரெல்லாம், அவரெல்லாம்-அவையெல்லாம், எனவரும்.

இந்தத்தன்மைமுன்னிலைப்பெயர்களையுரைத்தலுங்கேட்டலுமில்லாத அஃறிணையிலே இந்தஒன்பதுபெயருங்கலந்து பொதுப்பெயராந்தன்மைஎவ்வாறெனின் (சூத்திரம்,) கேட்குநபோலவுங்கிளக்குநபோலவு-மியங்குநபோலவுமியற்றுநபோலவு-மஃறிணைமருங்கினுமரபின்வழிப்படுமே, என்பதுவிதியாதலாலும்- பேய்பூதங்கள் இவற்றையுரைத்தலுங்கேட்டலுமுளவாதலாலுந்தன்மைமுன்னிலையிரிடத்து ஒன்பதுபெயரும்பொதுப்பெயரெனப்பட்டனவென்க. மேல்வருந்தன்மைமுன்னிலைவினைகளும் வினையாலணையும்பெயர்களுமவ்வாறேயாமென்க.இதுநான்குமுடிபாகமுடிந்துநின்றதுஉரையிறுலேவிளங்கிற்று.(உ௯)

வினையின் பெயரே படர்க்கை வினையா, லணையும்பெயரேயாண்டுமாகும். *

இது, சிலவினையின் பெயர்களுக்கு எய்திய இடம்பிறழாமற்காத்தலும், வினையாலணையும்பெயர்க்கு அதனைவிலக்கிஇடம்வகுத்தலு முணர்த்திற்று. (இ-ள்.) வினையின் பெயரே படர்க்கை-(யானுணல் நீயுணல் அவனுணல் எனமூன்றிடத்துவினையாய்வரினும்) அந்தஉணல்-தினல்என்னுந் தொடக்கத்துவினையின் பெயர்படர்க்கைக்கே உரியவாம், வினையாலணையும்பெயரேயாண்டுமாகும்-வினையாலணையும்பெயர் உண்டானை-உண்டாயை, உண்டேனை- எனமூன்றிடத்திற்குந் தனித்தனி யுரித்தாம்.எ-று.

யானுண்டேன்- நீயுண்டாய்- அவனுண்டான் - என இடத்தாலொன்றுபடநின்றநிலைமொழிவருமொழி போலத்தொழிற்பயனிலையாகி- யானுணல் - நீயுணல்- அவனுணல்- என ஒன்றுபடநிற்பனவற்றிற்கேயன்றி - எனதுணல்- நினதுணல்- அவனதுணல்- என்றும்- உணல்;- என்றும்வேறுபட்டுநிற்கும் வினையின் பெயர்களுக்கு - அல்லனபடர்க்கை யென்றதினலெய்திய இடம்பிறழ்ந்துபடுத வில்லையெனவுணர்க, இனிஇவ்வாறன்றி வினையின்பெயரே படர்க்கையென்பதற்கு - வினையின்பெயரனைத்தும் படர்க்கையெனப்பொருள்கூறின் அது கூறியது கூறலென்னுங் குற்றமாமாதலாலது பொருந்தாதென்க. இச்சூத்திரமும் இரண்டு முடிபாக முடிந்து நின்றது உரையால் விளங்கிற்று. (உ௬)

தான்யானானியொருமைபன்மைதாம், யாநாமெலாமெலீர் நீயிர்நீர்நீவிர், *

இது, இப்பன்னிரண்டுபொதுப்பெயர்களும் இருதிணைக்கும்பொதுவாகிய ஆண்மைமுதலிய நான்குபொதுப்பால்களுள் இந்தப்பாலுள் அமைந்து கிடந்தனவென்பதுணர்த்திற்று. (இ-ள்.) தான்-யான்-நான்-நீ-என்னுமிந்தநான்கும், ஒருமை(இ

ருதிணைக்கும் பொதுவாகியமுக்கூற்று) ஒருமைப்பெயர்களாம், தாம்-யாம்-நாம்-எலாம்-எஃலீர்-நீயிர்-நீர்-நீவிர்-என்னும்இந்த எட்டுப்பெயர்களும், பன்மை-(இருதிணைக்கும்பொதுவாகிய இருகூற்றுப்பன்மைப்பெயர்களாம். எ-று.

ஒருமையென்றது போலப்பன்மையென்பதனை யிறுதியிற் கூட்டுக. (௩௰)

ஒருவனொருத்திப்பெயர்மேலெண்ணில. ✱

இது, எண்பற்றிவருமுயர்திணைப்பெயர்க்குப்புறனடையுணர்த்திற்று. (புறனடை - ஒழிந்துநின்றதைச் சொல்வது.) (இ-ள்.) ஒருவனொருத்திப்பெயர்மேல்- (உயர்திணைஆண்பாற்பெயரும்-பெண்பாற்பெயரும் எண் பற்றிவரும்போதுஒன்றென்னும் எண்பற்றி) ஒருவன் ஒருத்தி - எனவருவதேதவிர அதன்மேல் நின்ற, எண்ணில-இரண்டுமுதலிய எண்களைப்பற்றி-இருவன்- இருத்தி எனவருவன இலவாம். எ-று.

எண் இல எனமுடிந்தது. (௩௧)

ஒருவரென்பதுயரிருபாற்றாய்ப், பன்மைவினைகொளும்பாங்கிற்றென்ப. ✱

இதுவுமது. (இ-ள்.) ஒருவரென்பது-ஒருவரென்றுவழங்குஞ்சொல்லானது, உயரிருபாற்றாய்-உயர்திணைஆண்பால் பெண்பாலிரண்டிற்கும்பொதுவாகி, பன்மைவினைகொளும்பாங்கிற்றென்ப- அத்திணைப்பன்மைவினையைக்கொண்டுமுடியும்உரிமையையுடைத்தாமென்று சொல்லுவர் புலவர், எ-று.

[வ-று.] ஆடவருளொருவர் அறத்தின்வழிநிற்பார்- பெண்டிருளொருவர் கொழுநன்வழிநிற்பார், எ-ம்-யாவரொருவருலகத்தோர் சொல்லில்லார்-எனவும்வரும்.

இந்தஒருவரென்னுஞ்சொல் - பொதுவியலிலேசொல்லப்படும்-உவப்பு உயர்வு முதலியவற்றால். ஒருவர்வந்தார்-ஒருவர்அவர் - எனவினையு பெயருங்கொள் வருவது அன்று, இதுதன்னியல் பாய்வழங்கிவருதலினிங்கே சொல்லப்பட்டதென வுணர்க. இதுவினையும் வினைக்குறிப்புமேகொள்ளுமென்று சொல்லவந்தவர் பெயரையொழித்து வினைகொளுமென்றார் - இந்தச்சொல்ஒருமைப்பகுதியொடு பன்மைவிகுதிமயங்கிப்பால்வழுவமைதியாய் நின்றதாயினுந்தன்னியல்பாய்மயங்கிநின்றதினாலே-வழாநிலைபோலுமெனக. பன்மைவினையென்றது சொல்லன்வேதவிரப்பொருளளவால் ஒருமைவினையெனக்காண்க. (௬) ஒருவரென்னும் பெயர்நிலைக்கிளவி; யிருபாற்குமுரித்தேதெரியுங்காலை, எ-ம்-தன்மை சுட்டிற்பன்மைக்கேற்கும். எ-ம், ஆசிரியர்தொல்காப்பியனார்கூறுதலுங்காண்க. (௩௨)

பொருண்முதலாறோடளவைசொற்றானி, கருவிகாரியங்கருத்
தனுதியு, மொன்றன்பெயரானதற்கியைபிறிதைத், தொன்மு
றையுரைப்பனவாகுபெயரே. *

இது. திணைபாலிடதொன்றேற்பவும் பொதுவுமாமென
மேற்கூறியபெயர்களில்வருங்காரணப்பெயர்களுள் ஆகுபெயரா
மாறுணர்த்திற்று - (இ-ள்.) பொருண்முதலாறோடு - பொருள்-
இடம்-காலம்-சினை-குணம்-தொழில்-என்றஆறுடனே, அளவை-
எண்ணல்-எடுத்தல்-முகத்தல்-நீட்டல்-என்னும்நால்வகையளவும்,
சொல்-அடையடுத்தும்தனித்தும்வரும்மொழியும், தானி-தானத்
தையுடையதும், கருவி-காரணமும், காரியம்-கருமமும், கருத்
தனுதியுள்-வினைமுதலுமாதியாயுள்ள இவற்றுள், ஒன்றன்பெயரா
ன்-ஒருபொருளினது இயற்பெயரினாலே, அதற்கியைபிறிதை-அ
ப்பொருளுக்கு இயைந்தபிறிதுபொருளை, தொன்முறை- தொ
ன்றுதொட்டுவரும்முறைப்படியே, உரைப்பனவாகுபெயர்-சொ
ல்லப்பட்டுவருவன ஆகுபெயர்களாம். எ-று.

பொருளாதியாறினுள் அடங்கிநின்றனவற்றையேபிரித்து அளவை
முதலாகச்சொன்னதினாலே பொருண்முதலாறென்றவை, இவை
யொழிந்தனஎனவும் - அதற்கியைபிறிதையென்றதினாலேஇயை
யாதனவற்றிற்குவருவனஆகுபெயராகாவெனவும், தொன்முறை
யுரைப்பன என்றதினாலே - ஆகுபெயர்மேலாகுபெயராகியும்அ
டையடுத்தும் இருபெயரொட்டாகியும்-வழக்கிடத்தும்செய்யுளி
டத்தும் பயின்று பலபொருளொருசொற்போலவருவனஅன்றி
இடையிலேதோன்றியபடி ஆக்கப்படுவன அல்ல எனவும் உய்த்
துணர்ந்துகொள்க. [வ-று.] தாமரையன்னயதாள் - ஆம்பலனைய்
தேம்பொதிசெவ்வாய்-என்பனமுதற்பொருளின்பெயர் அதன் சி
னைப்பொருளாகிய மலர்களுக்கு ஆயின, அகனமர்ந்துசெய்யா
ளுறையும் -புறங்கொடையறியாமறந்திகழ்வேலோன்-என அகம்
புறம்-என்னும் இடப்பெயர்கள்மனத்திற்கும்முதுகிற்குமாயின,
காரறுத்தது-கார்த்திகைபூத்தது.எனக்கார் -கார்த்திகை என்னுங்
காலப்பெயர்-அக்காலத்திலுண்டாகும்பயிர்க்கும்- வேந்தோன்
றிக்குமாயின, இவற்றுள்- கார்என்பது-நிறம் - அதுமேகத்திற்
காகி - மேகத்தின்பெயர் - பருவத்திற்காகிஅப்பருவ
த்தின்பெயர் பயிருக்கானதினாலே - மும்மடியாகுபெயர், அ
டைபுமாலும்- மருக்கொழுந்துநட்டான்-புளிமுளைத்தது- என
அடையடுத்துந் தனித்தும் வந்தசினைப்பெயர்கள் முதலுக்காயி

ண், இவற்றுள்-புளியென்பது சுவைப்பெயர் அதுபழத்திற்காகி
அப்பழத்தின்பெயர் மரத்திற்கானதினாலே இருமடியாகுபெ
யர், (சினை-அவயவம்-முதல்-அவயவத்தையுடையது) நீலஞ்சூடி
னாள்-கார்நிகர்வண்ணை-புளித்தின்றான்- என நிறமுஞ் சுவையுமாகி
யகுணப்பெயர்கள்-அக்குணத்தையுடையகுவளைமலருக்குமே
கத்திற்கும் பழத்திற்குமாயின, எழுத்தறியத்தீருமிழிதகைமை-
பாட்டின்பொருள்-எனஎழுத்துப்பாட்டு என்னுந் தொழிற்பெய
ர்கள் அக்கரத்திற்குஞ் சொல்லைத்தொடுத்த தொடைக்குமாயின,
ஒன்று-இரண்டு- அரை-கால்-என்னும் எண்ணலளவைப்பெயர்க
ள்-அவ்விணையொருமைக்கும்பன்மைக்கும்-உடலிலுள்ள அவயவ
ங்களுக்குமாயின, துலாக்கோல்-துலாவிறைத்தான்- துலாபாரந்
தூங்கினான்-எனவரும் எடுத்தலளவைப்பெயர் - நிறைகோலுக்கு
ம் கிணற்றுஇறைவைமரத்திற்கும்தராசுக்குமாயிற்று-இவற்றுள்-
துலாக்கோல் என்பது-இருபெயரொட்டுப்பண்மொழிஆகுபெய
ர், நாழி-உழக்கு-ஆழாக்கு-என்னும் முகத்தலளவைப் பெயர்க
ள்-அந்தந்தஅளவுகருவிகளுக்காயின, கீழைத்தடி- மேலைத்தடி-
எனவரும் தடியென்னும்நீட்டலளவைப்பெயர் அதினாலளக்கப்
பட்டவிளைநிலத்திற்கு ஆயிற்று, அவன்மொழிபுணர்ந்தான் - இந்
நூலுக்குஉரைசெய்தான்-எனவரும்-மொழிஉரையென்னுஞ்சொ
ல்லின்பெயர் அதன்பொருளுக்காயிற்று-விளக்குமுறிந்தது-நெ
ஞ்சுநொந்தது - எனவரும்- விளக்குகின்றஒளியினையுடையசுடரு
ம்- மனமுமாகிய தானிகளின்பெயர் அவற்றினுக்குத் தானமாகி
யவிளக்குத்தண்டினுக்கும்- மார்பினுக்குமாயின. திருவாசகம்-
திருவாய்மொழிஎன அடையடுத்துவந்த-வாசகம்-மொழி -என்
னும் முதற்கருவிப்பெயர்-அவற்றின்காரியமாகிய நூல்களுக்கா
யின, இந்நூல்அலங்காரம் - இந்நூல்-பாட்டியல்-எனவரும் இந்
த இலக்கணங்களாகியகாரியத்தின்பெயர் அவற்றைத்தருதற்குக்
காரணமாகிய நூல்களுக்காயின, இந்நூல்-திருவள்ளுவர்-எனக்க
ருத்தாவின்பெயர் அவராற்செய்யப்பட்ட நூலிற்காயிற்று,. ஆதி
யென்றதினாலே - காளைவந்தான் - எனவருஉவமைஆகுபெயரும்
தேவர்முதலியோர்பெயரைமனிதர்க்குவைத்துவழங்குவனவும் பி
றவுங்கொள்க.

இதனுள், அருபதமுதலியவற்றைப் பொற்றொடிமுதலாயினபோல அ
ன்மொழித்தொகையென்றலென்னையெனின் - அன்மொழித்தொகைச்சொல்-
செய்யுளாக்குவோன்ஒருவரை அதிசயமுதலாயினகாரணம்பற்றித்தான்சொல்
லுவதாகவும் பிறர்சொல்வதாகவுஞ் சொல்லும்போது அந்தந்த இடங்களில்வரு

வதன்றி - இதுபோலதியதிப்பெபராய்வருவதன்றெனக. அவ்வாறயினும் அன்மொழித்தொகைச்சொல்லும் ஆகுபெயரும் தம்பொருளுணர்த்தாமலேபிறிதுபொருளுணர்த்துதலால் ஒக்குமாதலின்தம்முள்வேற்றுமை யாதோவெனின்-ஆகுபெயர்ஒன்றன்பெயரால் அதனொடுஇயைபுபற்றிப்பிறிதொன்றையுணர்த்தி ஒவ்வொருசொல்லிலேதானே வருவதாம் - அன்மொழித்தொகைச்சொல் இயைபுவேண்டாமல் இருமொழிகள்தொக்கதொகையாற்றலினாலேபிறிதுபொருளுணர்த்தி இருமொழியிடத்துவருவதாம் இவைதம்முள் வேற்றுமையெனக, அவ்வாறயின் இருபெயரொட்டாகுபெயர் இருமொழியிடத்துவந்த தன்றோவெனின்-அன்று, என்னெனின். வகரக்கிளவி-அதுவாகுகிளவி -மக்கட்சுட்டு-என்னும் இருபெயரொட்டாகுபெயர்களுள்-வகரமும்அதுவாதலும்-மக்களுமாகிய அடைமொழிகள், கிளவி-சுட்டுஎன்னும்இயற்பெயர்பொருளைவிசேடித்துநில்லாமல்-எழுத்தும் சொல்லின்பொருளும் பொருளுமாகிய ஆகுபெயர்ப்பொருளைவிசேடித்துநிற்க- கிளவி-சுட்டென்பனவே ஆகுபெயர்ப்பொருளையுணர்த்த-இருபெயருமொட்டிநிற்குமாதலாலெனக, இனிப்பொற்றொடியென்னும் அன்மொழித்தொகைச்சொல்விற்பொன்என்பது. அவ்வாறு அன்மொழித்தொகைப்பொருளைவிசேடித்துநில்லாமல்தொடியையேவிசேடித்துநிற்க- அந்தஇரண்டுசொற்களின்தொகையாற்றலினாலே அன்மொழித்தொகைப்பொருளையுணர்த்தலுமறிக - இக்கருத்தேபற்றிமக்கட்சுட்டு முதலியவற்றைப்பின்மொழியாகுபெயரென்பாருமுளரெனவறிக இனித்திருவாய்மொழி-திருவாசகமென்பன-அன்மொழித்தொகையெனினும் அமையும், இனிஇந்தஆகுபெயர்ச்சொற்கள்தத்தம்பொருளைவிட்டு நீங்காது நின்றுதம்பொருளின்வேறல்லாதபொருளையுணர்த்தலும்-பொருத்தமில்லாதமொழியாய்நின்று பிறிதுபொருளுணர்த்தலுமாகிய அவ்விரண்டிலக்கணத்தையுடையவிடாதஆகுபெயரும் விட்டஆகுபெயருமென இருவகையென்வும் அவற்றிற்குஉதாரணம்முறையே-கடுத்தின்றான்- புளித்தின்றான்-தாம்ரைத்தாளினான் - (எனவருமிவற்றில்-தம்பொருளின்வேறல்லாதபொருள்-காய்-கனி-மலர்-என்பன ஆதலால)விடாதஆகுபெயரெனவும் குழிப்பாடிநேரிது-உயர்நிலந்துன்புற்றது - (எனின்குழிப்பாடியென்னும் ஊரிலுள்ளோர்நேர்மையிது- என்றும் - உயர்நிலத்துள்ளகுடிகள்துன்புற்றன - எனவும் இடத்தைவிட்டுஇடத்துநிகழ்பொருளையுணர்த்துதலால்)விட்டஆகுபெயரெனவும் பிறர்கூறுதலுமுய்த்துணர்ந்துகொள்க.உரைப்பனஆகுபெயரென முடித்துக்கொள்க (கு)முதலிற்கூறுஞ்சினையறிகிளவியுஞ் - சினையிற்கூறுமுதலறிகிளவியும்-பிறந்தவழிக்கூறலும்பண்புகொள்பெயரு- மியன்றதுமொழிதலுமிருபெயரொட்டும்,வினைமுதலுரைக்குங்கிளவியொடுதொகைஇ,யனையமரபினவேயாகுபெயர்க்கிளவி-எ-ம் - அவைதாம்-தத்தம்பொருள்வயிற்றம்மொடுசிவணலு,மொப்பில்வழியாற்பிறிதுபொருள்சுட்டலு,மப்பண்பினவேநுவலுங்காலே-எ-ம்-அளவுநிறையுமவற்றொடுகொள்வழி,யுளவெனமொழிபவுணர்ந்திசினோரே-எ-ம்-கிளந்தவல்லவேறுபிறதோன்றினுங் கிளந்தவற்றியல்பானுணர்ந்தனர் கொளலே-எ-ம்- ஆசிரியர்தொல்காப்பியனார்கூறுதலுங்காண்க. (கூ)

ஏற்குமெவ்வகைப்பெயர்க்குமீறாய்ப்பொருள், வேற்றுமை செய்வனவெட்டேவேற்றுமை. *

இது, மேல்வேற்றுமைக்கிடனுமென்ற வேற்றுமையித்தன்மையையுடையனவென்பதும் இவ்வளவினையுடையன வென்பது

ம் உணர்த்திற்று. (இ-ள்.) ஏற்கும்எவ்வகைப்பெயர்க்குமீறாய் - தம்மையேற்றுக்கொள்ளுதற்குஉரிய எவ்வகைப்பட்டபெயர்களுக்கும் இறுதியாகி, பொருள்வேற்றுமைசெய்வன-பெயர்ப்பொருளைவேறுபடுத்துவனவாகிய, எட்டேவேற்றுமை- வேற்றுமையுருபுகளெட்டேயாம், எ-று.

வேற்றுமைசெய்வன வேற்றுமையெட்டேஎனக்கூட்டுக. வினைமுதலியமூன்றும்வேற்றுமைகொள்ளாமையால்அவற்றைநீக்கிப்பெயர்க்கென்றார், மேல்எழுவாயுருபிற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிகூறுதலால் அதனையொழித்து விளியுருபிற்குப்பெயரின் இறுதியாகிய அகப்பாட்டெல்லையையும்-மற்றஆறுஉருபிற்கும் அதன்இறுதியாகிய புறப்பாட்டெல்லையையும் தழுவுதற்குப் பொதுவையினீறாயென்றார், பொருளையன்றிச்சொல்லையும்வேறுபடுத்துவது எழுவாயுருபிற்குஇல்லாததினாலும்-பொருளைவேறுபடுத்துவது எட்டுருபிற்கும்உண்மையாலும் சொல்லையொழித்துப்பொருள்வேற்றுமைசெய்வன வேற்றுமையெட்டென்றுங் கூறினார், வேற்றுமையென்னுங்காரியத்தைச்செய்யுங்கருத்தாவாகிய எட்டுவேற்றுமையுருபிற்கும்வேற்றுமைஎனப்பெயர்தந்தது காரியஆகுபெயர்.

(சூத்திரம்) ஏழியன்முறையதெதிர்முகவேற்றுமை, வேறெனவிளம்பான்பெயரதுவிகாரமென்-றோதியபுலவனுமுளனொருவகையா, னிந்திரனெட்டாம்வேற்றுமையென்றனன். என ஆசிரியர்அகத்தியனார்கூறுவராகலின் விளியுருபுபடர்க்கைச்சொல்லையும் பொருளையும் முன்னிலைச்சொல்லும் பொருளுமாக வேற்றுமைசெய்தலால் அதையெழுவாயுள் அடக்காமல்வேறாக்குதலே தமது துணிவென்றுசொல்லவந்தவர்-எட்டேவேற்றுமையென்றார், (சூ) வேற்றுமை தாமேழெனமொழிப, விளிகொள்வதன்கண்விளியோடெட்டே, எனஆசிரியர்தொல்காப்பியனார்கூறுதலுங்காண்க, (ருச)

பெயரேஐஆல்குஇன்அதுகண், விளியென்றாகுமவற்றின்பெயர்முறை. ✱

இது, அவ்வேற்றுமைகளின்பெயரும் முறையுங்கூறுகின்றது,(இ-ள்.) மேல்-எட்டேவேற்றுமைஎன்றவற்றின்பெயரும் அவற்றின்கிடக்கைமுறையும்-இங்கேபெயர்முதலாகவிளியீறாகக்கூறியபெயரும் இங்கேநின்றமுறையுமேயாம்,எ-று.

ஏகாரம்-எண்.

மேலெட்டேயென்றதொகைக்குவகைதோன்றக்கூறியதன்றி அவ்வேற்றுமைகளின்பெயர்விகற்பங்கூறவந்தவர் அல்லர்அவையெல்லாமினிவருஞ்சிறப்புச்சூத்திரங்களாலுணர்க.இவையிம்முறைநிற்றற்குக்காரணம்-பரமசிவனோர்வரத்தைக்கொடுத்து,நாராயணனால்அசுரனுக்கஞ்சித்தோலிட்டசிறுமையினீங்கித்தனதுவடபாற்கயிலைக்கட்சென்றான்-எனக்கூறியஇதினாலுமுணர்க. அவற்

றின்பெயர்முறைமையவையாமெனமுடிக்க. (௯) அவைதாம்,பெயரெழுவாய் இன்னதுகண் விளியேற்றது.எனஆசிரியர்தொல்காப்பியனார்கூறுதலுங்காண்க.(௫௰)

ஆறனுருபுமேற்குமவ்வுருபே. *

இது, எழுவாயுருபுமற்றவுருபுகளையு மேற்குமென்பதுணர்த்திற்று. (இ-ள்.) ஆறனுருபுமேற்கும்-ஐமுதலிய ஆறுஉருபுகளையுங்கொண்டுநிற்கும், அவ்வுருபு-அந்தஎழுவாயுருபு, எ-று.

எனவேவிளியுருபுபெயரதுவிகாரமேயாதலால் எழுவாயுருபின்வேறன்றென்பதுபற்றியதனை நீக்கிஆறுருபுமேற்கு மென்றொன்பதாயிற்று. *

இனியிச்சூத்திரத்திற்கு இவ்வாறுபொருள்சொள்ளாமல்- ஆறாம்வேற்றுமையுருபும் அவ்வுருபுகளையேற்குமெனப்பொருள்கூறிச் - சாத்தனதை சாத்தனதால்-சாத்தனதற்கு-சாத்தனதனின்-சாத்தனதனது-சாத்தனதன்கண்-என உதாரணங்காட்டினாருமுளர்- உருபேற்பதுபெயர்க்குரிய இலக்கணமேயன்றி வினைமுதலியவற்றிற்கு அன்றதலாலும், பெயர்வழிவருமுருபென்றும் எவ்வகைப்பெயர்க்குமீறுமென்றும்வரையறைகூறியதிறலே இங்கேஇடைச்சொல்உருபேற்குமெனினது மாறுகொளக்கூறலாம் ஆதலாலும் சாத்தனது - சாத்தனதென்பன-குழையது - கோட்டதுஎன்றாற்போலத்துவ்விகுதியும் அகரச்சாரியையும் பெற்றுநின்றகுறிப்புவினையாலணையும் பெயராமாதலாலும் - பெயர்போலத்தனித்துநின்று உருபேற்றல்கூடாமையாலும், அதுபொருந்தாதென்க. (௫௧)

நீயிர்நீவிர்நானெழுவாயலபெறா. *

இது, மேலேற்கு மெவ்வகைப்பெயர்க்கு மென்றதனாலெல்லாப்பெயர்களுமுளவென்றார் அவைஇவையென்பதுணர்த்திற்று. (இ-ள்.) நீயிர்-நீவிர்-நான்-இம்மூன்றுபெயர்களும், எழுவாயலபெறா - எழுவாய்வேற்றுமையையன்றிமற்றனுருபுகளையுங்கொள்ளா. எ-று.

எனவேயிம்மூன்றுபெயரும்-யான்- நீ-என்பனபோலத்திரிந்துநின்றுமுருபுகளையேலாவென்பதுமாயிற்று-நீயிர் நீவிர் நான்பெறாவெனமுடித்துக்கொள்க. (௫௨)

அவற்றுள் -எழுவாயுருபுதிரிவில்பெயரே, வினைபெயர்வினாக்கொளலதன்பயனிலையே. *

இது, நிறுத்தமுறையே-பெயர்வேற்றுமையிலக்கணமுணர்த்திற்று.(இ-ள்.) அவற்றுள்-மேற்கூறியஎட்டுவேற்றுமையுருபுகளுள், எழுவாயுருபு- முதல்வேற்றுமையுருபாவது, திரிவில்பெயரே-விகாரமில்லாதபெயரேயாம், அதன்பயனிலை - அதன்பொருளாவது, வினைபெயர்வினாக்கொளல்-வினையையும்பெயரையும்வினாவையுங்கொண்டுமுடிந்துநிற்பதாம். எ-று.

திரிவில்லாமையாவது-உருபும்விளியுங்கொள்ளாமல்முடிக்குஞ்சொல்லையும் நோக்காமல்-ஆ- என்றாற்போலத்தன்னிலையில் நிற்பதாம், பயனிலையென்றது- இங்கேமுடிக்குஞ்சொல்லையன்று பொருள்நிலையையென உணர்க. பயனிலையெனினும்- பொருள்நிலையெனினுமொக்கும், பெயரோஎன்றதினாலிதற்கு வேறுஉருபின்றென்பதும், அதன்பொருளாவதுவினைமுதற்பொருளின்குணமாகத்தன்னைத்தானே வேற்றுமைசெய்தலென்பதும் பெறப்படும், வினையெனப்பொதுப்படக்கூறினமையாலே வினையும்வினைக்குறிப்புமுதலியவினைவிகற்பமடங்கலுங்கொள்க. [உ-ம்.] சாத்தன்வந்தான்-சாத்தன்கரியன் -அவன்வாழ்க-ஆவுண்டு-அவையுண்டு - அவனில்லை-அவன்வேறு-எ-ம்-புலிகடிக்கப்பட்டான்- பேய்பிடிக்கப்பட்டான்-அவனின்றியமையாது-அவனன்றிக்கூடாது- சாத்தனுண்டசோறு -சாத்தன்பெரியமலிதன் - எனவிவைவினைகொண்டன-சாத்தனிவன் - பசுவொன்று - பசுவாயிரம் எனவிவைபெயர்கொண்டன-அவன்யாவன்-ஆயாது-அஃதெவன்-அவையெவை- எனவிவைவினாக்கொண்டன-பிறவுமன்ன.

(சூத்திரம்) வினைநிலையுரைத்தலும்வினாவிற்கேற்றலும் பெயர்கொளவருதலும் பெயர்ப்பயனிலையே என ஆசிரியர் அகத்தியனாரும்இவ்வாறுகூறுதல்காண்க. ஆயின் (சூத்திரம்)அவற்றுள், எழுவாய்வேற்றுமைபெயர்தோன்றுநிலையே-பொருண்மைசுட்டலவியங்கோள்வருதல் - வினைநிலையுரைத்தல்வினாவிற்கேற்றல்-பண்புகொளவருதல் பெயர்கொளவருதலென். றன்றியனைத்தும்பெயர்ப்பயனிலையே, என ஆசிரியர்தொல்காப்பியனார்-இதன்பயனிலையை அறுவகையாகக்கூறியதென்னெனின்- பொருண்மைசுட்டல்-ஆவுண்டு-எ-ம், வியங்கொள்வருதல், ஆசெல்க-எ-ம்-வினைநிலையுரைத்தல்-ஆகிடந்தது-எ-ம் - பண்புகொளவருதல்-ஆகரிது-எ-ம்- வருமிந்தநான்கும்வினையின்பாற்பட்டன ஆதலாலென்க. இனியுரையிற்கோடலென்னு முத்தியால் - இது. தோன்றுஎழுவாயாகநின்றுபயனிலைகொள்ளுதலுமுண்டெனக்கொள்க. உ-ம்-கருவூர்க்குச்செல்வாயோசாத்தா- என்றவழிசெல்வேனெனவும், நான்யாதுசெய்வேன்என்றவழி-இது செய்யெனவும், இவன்யாவனென்றவழி படைத்தலைவனெனவும்-சொன்னபோது- யான்-நீ இவன்-என்னுமெழுவாய்வெளிப்படாதுநின்று- செல்வேன்-இதுசெய்-படைத்தலைவன்-என்னும்பயனிலைகொண்டவாறுகாண்க- இன்னுமிந்நிலை - ஏவுதற்கருத்தா-இயற்றுதற்கருத்தா-இவற்றின்வேறுதற்கருத்தாஎனஇது மூவகைப்படுமெனவுங்கொள்க. [உ-ம்.] அரசன்கோயிலைக்கட்டினான் எனவருவது- ஏவுதற்கருத்தா, தச்சன்கோயிலைக்கட்டினான்-எனவருவது இயற்றுதற்கருத்தா, சாத்தனுறங்கினான்எனவருவது-இவற்றின்வேறுதற்கருத்தா - எனக்காண்க. இன்னுமிவ்வுருபு- கருவிநிலஞ்செயல்காலங்களினும் வினைச்சொல் இடைச்சொல உரிச்சொற்களினும்வருமெனக்கொள்க. [உ-ம்.] கண்காணும் - செவிகேட்கும்-எனவிவை-கருவி, செய்விளைந்தது-ஊர்நகைத்தது-எனவிவைநிலம், கொல்லாமை நன்று. கொலைசெய்தீது-எனவிவைசெயல், பகல்நீங்கிற்று- இரவுவந்தது

வருடம்பிறந்தது-மாதம்பிறந்தது-எனவிவைகாலம்,திண்ணைமெழுகியது-சோ
றமைந்தது என்றற்போல்வன செயப்படுபொருள், எனவும்,எல்லார்க்கு நன்
றுப்பணிதல் சொற்கோட்டமில்லது செப்பம்-என்றற்போல்வன-வினை, உம்மு
ப்புலனும் குவ்வின் அவ்வரும்-மற்றென்கிளவிவினைமாற்றசைநிலை கொல்லேயை
யமசைநிலைக்கூற்றே-என்றற்போல்வனஇடைச்சொல், சாலவுறுதவநனிகூர்
கழிமிகல்-மன்றவென்கிளவிதேற்றஞ்செய்யும்- (மன்றவென்பதை இடைச்சொல்
லென்பாருமுளர்;) கூர்ப்புங்கழிவுமுள்ளதுசிறக்கும் - என்றற்போல்வனஉரிச்
சொல், எனக்கொள்க. இனிஇதைமுதல்வேற்றுமையென்றதென்னெனின் பெ
ரும்பாலும்பெயர்ச்சொல்லாய்நிற்றலானும்ஒழிந்தஉருபுகளெல்லாம் பின்னி
ட்டுத்தான்முன்னிற்றலானுங்கருத்தாவாதலானுமென்க.பிறவகையால்வருமெ
வினுங்காண்க (உருபு பெயர்,கொள்ளல்பயனிலையெனஇருமுடிபாக்குக. (௫௮)

இரண்டாவதனுருபையேயதன்பொரு ளாக்கலழித்தலடைத
னீத்த லொத்தலுடைமையாதியாகும். ❋

இது, இரண்டாம்வேற்றுமையிலக்கணமுணர்த்திற்று.
(இ-ள்.)இரண்டாவதனுருபையே-இரண்டாம்வேற்றுமையினுரு
புமேற்கூறியஐயுருபுஒன்றுமேயாம், அதன்பொருளாவன, ஆக்க
ல் - தன்னையேற்றபெயர்ப்பொருளை ஆக்கப்படுபொருளாகவும்,
அழித்தல்-அழிக்கப்படுபொருளாகவும், அடைதல்-அடையப்படு
பொருளாகவும், நீத்தல்-நீக்கப்படுபொருளாகவும், ஒத்தல்-ஒக்க
ப்படுபொருளாகவும், உடைமையாதியாகும்-உடைமைப்பொரு
ளாகவும் வேற்றுமைசெய்தல்முதலியவாம்,எ-று.

[வ-று.] குடத்தைவனைந்தான்-குடத்தையுடைத்தான்,குட
த்தைச்சேர்ந்தான்-குடத்தையிழந்தான், குடத்தையொத்தான்-
குடத்தையுடையன்,எனவரும். ஆதியென்றதனாலே-இவ்வாறுசெ
ய்யப்படுபொருளாகவேற்றுமைசெய்தலெல்லாங்கொள்க.

ஒருவினைமுதல்செய்யுந்தொழில்வினையேற்கும்பொருள் யாதுஅதுசெய
ப்படுபொருளாம் - வினைமுதல்செய்யுந்தொழிற்பயனுறுவதுசெயப்படுபொரு
ளென்றலென்னையெனின்-சாத்தன்பகைஞரைவென்றானெனின்,போர்செய்தல்
வினைமுதலின்தொழில், வெற்றியுண்டாதல்அதனால்வருபயன் அப்பயனையடை
ந்ததுபகைஞரெனவேண்டுதலாற்பொருந்தாமையுணர்க. வென்றானென்பதி
ல் வெல்லுதலன்றேவினைமுதலின்தொழிலாவதெனின்வெல்லப்படுதல்பகைஞ
ராதலாற் செய்யப்படுபொருளென்பதுதெளிவாகவிளங்கிற்றென்க. அங்ஙன
மாயின்தொழிற்பயனுறுவதின்றேயெனின்-ஆசிரியர்தொல்காப்பியனார்(௩)இர
ண்டாகுவதே,ஐயெனப்பெயரியவேற்றுமைக்கிளவி-யெவ்வழிவரினும்வினையே
வினைக்குறிப்-பவ்விருமுதலிற்றோன்றுமதுவே. என்றுகூறியசூத்திரத்திற்கு-செ
ய்யப்படுபொருள் இயற்றப்படுவதும்வேறுபடுக்கப்படுவதும்எய்தப்படுவதுமெ
ன மூன்றுவகைப்படுமெனவும்அவற்றுள்- முன்னையவிரண்டுந்தொழிலுறுவதெ
ன்றும்பின்னையதொன்றும் பெரும்பாலுந்தொழிலுறுவதுஞ்சிறுபான்மைதொ
ழிற்பயனுறுவதுமென்றுஉரையாசிரியருரையெழுதினராயினும் அச்சிறுபான்
மைபற்றிச்செயப்படுபொருளெனல்கூடாதென்பதற்குச்செயப்படுபொருளெ

சிறுமிந்தவாய்ப்பாடும் - ஒருவினைமுதல்செய்யுந் தொழிலையுறுவது செயப்படு பொருளென அவ்வெழுதியவுடையையுமே சான்றோருணர்க. ஒருவனொருவினைசெய்ய அதினால்நோக்கியபொருள்செயப்படு பொருளெனினுமமையும். செயப்படுபொருள் செய்பொருள் - கருமம் - காரியம் - எனுமிவைநான்கிற்கும்பொருளொன்று. இனியிச்செயப்படுபொருள் கருத்துண்டாதல் - கருத்தின்றாகல் - இருமையுமாதல் - சுருங்கிப்போதல் - கருத்தாவாதல் - அகநிலையாதல் - தெரிநிலை - எனுமிவை முதலியனவாகவும் வருமெனக் கொள்க, [உ-ம்.] சோற்றையுண்டான் - எ-து - கருத்துண்டாதல்; சோற்றைக்குழைத்தான் - எ-து - கருத்தின்றாதல் - எறும்பைமிதித்துவழியைச்சென்றான் - பதரையும் நெல்லையும் பணத்திற்குக் கொண்டான் - இவையிருமையுமாதல், ஆசிரியனையையுற்றபொருளை வினவினான் - எ-ம் - பசுவினைப்பாலைக்கறந்தான் - எ-ம் - பசுவினதுபாலைக்கறந்தான் - என்பதுபோல - ஆசிரியனது எனவாராததினாலேசுருங்கியதெனவகைப்படுமெனக்காண்க, தன்னைப்புகழ்ந்தான் - எ-து கருத்தாவாதல், வருதலைச்செய்தான் - எ-து - அகநிலையாதல், மாடஞ்செய்யப்பட்டது - எ-து தெரிநிலை, இதுவினைமுதலாற்பேற்றுஞ்செய்யப்படு பொருளேயெனத்தெரியநிற்பது, இவ்வேற்றுமைதன் பெயர்ப்பொருளைமேலே சொல்லிய எழுவாய்க்கண்வருங்கருத்தனாலாகியகாரியமாக்குதலாலிரண்டாம்வேற்றுமையெனப்பட்டது. உருபு ஐ, பொருள் உடைமையாதியாகும் எனஇருமுடிபாக்குக. (௫௮)

மூன்றாவதனுருபாலானொடு, கருவிகருத்தாவுடனிகழ்வ
தன்பொருள். ✻

இது, மூன்றாம்வேற்றுமையிலக்கணமுணர்த்திற்று. (இ-ள்.) மூன்றாவதனுருபு - மூன்றாம்வேற்றுமையுருபு, மேற்கூறியஆலேயன்றி - ஆனும்ஒடும்ஓடுவுமாம், அதன்பொருள் - அவற்றின்பொருளாவன, கருவிகருத்தாவுடனிகழ்வு - (தம்மையேற்றபெயர்ப்பொருளை) கருவியாகவும்வினைப்பொருட்டாகிய கருத்தாவாகவும்உடனிகழ்வதாகவுஞ் வேற்றுமைசெய்தலாம். எ-று.

மேலேஆல்ஒன்றையுமிதற்குஉருபாகச்சொல்லியிங்கே உருபுநான்குள்ளன்றதுமயக்கமெனின் - அங்கேபெயரையும்முறையையுங்காட்டுகிறநிமித்தம் வழக்கிடத்துஞ்செய்யுளிடத்தும் வழங்கிவருவதைச்சொன்னார் இங்கேஅவ்வேற்றுமைக்குவரும் உருபுகளையெல்லாமெடுத்துச்சொல்லவேண்டுதலால் நான்கெனக்கூறியது மயக்கமன்றென்க. இந்தவினவிடைகளைமேல்வருவனவற்றிற்குமுரைத்துக்கொள்க. கருவியாவது - வினைமுதலின்தொழிற்பயனைச்செயப்படுபொருளிலேசெலுத்துவது, கருவி - காரணம் - ஏது - நிமித்தம் - என்பனஒருபொருள், முதற்காரணந் துணைக்காரணம் நிமித்தகாரணமெனக்காரணம் மூன்றுவகைப்படும் - அவற்றுள் - முதற்காரணந் துணைக்காரணமிரண்டையுங்கருவியென்றும், ஏவுதற்

கருத்தாவும்இயற்றுதற்கருத்தாவுமாகிய நிமித்தகாரணமிரண்டை யுங்கருத்தாவென்றுங்கூறினர், இன்னுமந்தக்கருவி- காரகக்கரு வியும்-ஞாபகக்கருவியுமெனவிருவகைப்படும், அவற்றுள்- கார கக்கருவியாவது-தொழிலை இயற்றுவிப்பது, ஞாபகக்கருவி-அறி விப்பது, குடத்தைவனைந்தான்எனின்-குடமாகியகாரியத்திற்கு- அதுவதுஆகியமண்-முதற்காரணம்-எ-ம்-குயவனதுஅறிவும் அ ந்தக்கரணமுமுதலியஞாபகக்கருவியும்- தண்டசக்கரமுதலியகா ரகக்கருவியும் முதற்காரணத் திற்குத்துணையாய் நின்று காரியத் தைத்தருதலால்- துணைக்காரணம்- எ-ம்-குயவனிமித்தமாகஅந்த க்காரியந்தோன்றலால்-குயவன் நிமித்தகாரணம்எ-ம்- காண்க.

[வ-று.] அறிவாலாக்கியகாட்சி-ஆகியகாட்சி-எனின்- ஆறுரு புபெயர்ப்பொருளை ஞாபகமுதற்கருவியாக வேற்றுமைசெய்த து, கண்ணாலாக்கிய-ஆகியகாட்சி-எனின்-ஞாபகத்துணைக்கருவியா கவேற்றுமைசெய்தது, (காட்சி-உணர்வு,) மண்ணாலாக்கிய- ஆகி ய-குடம்-எனின்-காரகமுதற்கருவி, திரிகையாலாக்கிய-ஆகிய-கு டம்-எனின்-காரகத்துணைக்கருவி, இங்கேஆக்குதற்குவினைமுதல் அறிவனும்குயவனுமாம், ஆதற்குவினை-முதல்- காட்சியுணர்வுங் குடமுமாம், இந்தக்காட்சியுணர்வுங்குடமும்வினைமுதலானகால த்தில் - அறிவு-கண்-மண்- திரிகைஎன்றகருவிகள் ஏதுப்பொருள வாய்நின்றன, (கருத்தாவெனினும் வினைமுதலெனினுமொன்று) இந்தமூன்றும்வேற்றுமையில்வரும்ஏவுதற்கருத்தா இயற்றுதற்க ருத்தாவென்னுமிருவகைவினைமுதலுங்கருவிமுதலாகியகாரணங் களைத்தொழிற்படுத்துவதெனக்காண்க. தச்சனாலாகியதேவகுல -தச்சனாற்செய்யப்பட்டதேர்- அகத்தியனாலாக்கப்பட்டதமி ழ்- என்றாற்போல்வனஇயற்றுதற்கருத்தா-அரசனாலாகியதேவகு லம் அரசனாற்செய்யப்பட்டதேவகுலம்-(குலம்-கோயில்,)தேவ ரால்தரப்பட்டதிரு - என்றாற்போல்வன-ஏவுதற்கருத்தா, (திரு- செல்வம்,) ஆக்கியதேவகுலமெனவரின் மூன்றும்வேற்றுமையுரு புகொள்ளாமல் அரசனுந் தச்சனு மெழுவாயாக நிற்கும் - என க்காண்க, கொடியொடுகட்டுண்டான் - ஊசியொடுகுயின்றதூசு ம்பட்டும் - என்றாற்போல்வன - உடனிகழ்ச்சி - கொடிசாத்தனை த்தொழிலுறுவிக்கும்போது அக்கொடியவனை விட்டு நீங்காம லேயுடனிகழ்தலாலும் - ஊசிசாத்தன் தொழிற்பயனைத்தூசிலு ம்பட்டிலுஞ்செலுத்தும்போது அந்தஊசியவற்றைவிட்டுநீங்கா மலேயுடனிழ்தலாலும் இவைமுறையே-வினைமுதற்பொருள்மே

ஆங்கருவிப்பொருண்மேலும்வந்தன (உடனிகழ்ச்சி- கூடவேநடப்பது,) தூங்குகையானோங்குநடைய - உறழ்மணியானுயர்மருப்பின-பெண்டகையாற்பேரமர்க்கட்டு-இவைஆனுருபால்வந்தவுடனிகழ்ச்சி, தூங்குகையோடோங்குநடைய-எனஒடுவுருபாவைத்துக்காண்க, [illegible] திருமாமகள்புல்லநாளும்-எனின் -இருவரும்புல்லவென ஒருவினையுடனிகழ்ச்சி-ஒடு, மனத்தொடுவாய்மைமொழியிற்றவத்தொடுதானஞ்செய்வாரிற்றலை-எனின்-தவமுந்தானமுஞ்செய்வாரில் - என ஒருவினையுடனிகழ்ச்சி-ஒடு-மனத்தொடுவாய்மையொழிதல்வேறுவினையுடனிகழ்ச்சி - மொழிதல்மனத்திற்கு இல்லாவிடினும்நினைத்தலுளதாகலின், தொடியொடுதொல்கவின்வாடியதோள், எனின், தொடிகழலுதலும்தோள்வாடுதலுமாதலாலிதுவுமது, இதனுள் ஆனுருபுவந்தவிடங்களில்ஆனுருபையுமொட்டிக்காண்க.

ஆக்கியதேவகுலமெனவரின் மூன்றும்வேற்றுமையுருபுகொள்ளாதென்றதென்னெனின்- தன்புடைபெயர்ச்சியாகியசெய்வினையென்னுந்தந்தொழில் தோன்றுது கருவியைத்தொழிற்படுத்தித் தானேதுவாகநிற்பதும் - செயப்பாட்டுவினையாகியதம்மினுடையதொழில் வெளிப்பட்டுத்தானேதுவாகநிற்பதும்மூன்றாம்வேற்றுமையிலேவருங்கருத்தாவின்குணம்- தானேதுவாகாமல்புடைபெயர்ச்சியாகியசெய்வினையென்னுந்தந்தொழில் தோன்றிநிற்பது - எழுவாயில்வருங்கருத்தாவின்குணம்- ஆதலால்-ஆக்கல்-போக்கல்-என்றாற்போல்வன எழுவாயிலேவரும் வினைமுதற்குத்தந்தொழில ஆக்கப்படுதல்-போக்கப்படுதல் -என்றாற்போல்வன- மூன்றாம் வேற்றுமையிலேவரும் வினைமுதற்குரியதம்மினுடையதொழில்- இவைதம்முள்வேற்றுமையென்க- அகத்தியனாலுரைக்கப் பட்டது. தமிழ் என்றவிடத்தில்- உரைத்தல்தன்புடைபெயர்ச்சியாகியதந்தொழில தோன்றியதன்றோவெனின்- உரைத்தல் - செய்வினையாகிய தந்தொழிலென்றது போலவே உரைக்கப்படுதல்- செயப்பாட்டு வினையென்னும் தம்மினுடையதொழிலாவதேயன்றி வேறுபகுக்கப்படாதென்க. இதுபற்றியன்றே - புள்ளியுமியிருமாயிறுசொன்முன் - என்னுஞ் சூத்திரத்துரையில்- தந்தொழில்வேறு - தம்மினுடையதொழிலும் வேறு- எழுவாய்க்கண்வரும்வினைமுதல்வேறு - மூன்றாம்வேற்றுமையில்வரும்வினைமுதலும்வேறென்றுரைத்ததுமென்க. அகத்தியன்தமிழுரைத்தான்- என்றவிடத்துத்தானேதுவாகாமற்புடை பெயர்ச்சியாகிய உரைத்தலென்னுந்தந்தொழில்தோன்றிநிற்றலும்- அகத்தியனாற் றமிழுரைக்கப்பட்டது - என்றவிடத்துத் தானேதுவாகித் தம்மினுடைய தொழிலாகிய உரைக்கப்படுதலென்னுஞ் செயப்பாட்டுவினை வெளிப்பட்டு நிற்றலுங்காண்க. இங்ஙனஞ்செயப்பாட்டு வினைவெளிப்பட்டுவினை முதலேதுவாக நின்றபோது செயப்பாட்டு வினைக்குரியசெயப்படுபொருள் எழுவாயாக நிற்றலுங்கண்டுகொள்க.

இனி- ஆசிரியர்தொல்காப்பியனார், (சூத்திரம்.) மூன்றாகுவதே - ஒடுவெனப் பெயரியவேற்றுமைக்கிளவி- வினைமுதல்கருவியனைமுதற்றதுவே - என-ஒடுவுருபொன்றுமேகூறி - அதற்குவினைமுதற்பொருளுங்கருவிப்பொருளுமென விரண்டாகக்கூறியதென்னெனின் - (சூத்திரம்;) அதனினியறலதற்றகுகிளவி - யதன்

வினைப்படுதலதனினுத - லதனிற்கோடலதனொடு மயங்க - லதனொடியைந்த
வொருவினைக்கிளவி - யதனொடியைந்த வேறுவினைக்கிளவி - யதனொடியைந்த
வொப்பலொப்புரை - யின்றனைதுவியக்கெளவரூஉ - மன்னபிறவுமதன்பாலவெ
ன்மனார், எனப்பின்னர்க்கூறியவிச் சூத்திரத்தால் இந்த நான்குருபையும் மூன்று
பொருளையும் அவரும்நேர்ந்தாரெனக. [உ-ம்,] மண்ணினியன்றகுடம்- எது அ
தனினியறல், வாயாற்றக்கதுவாச்சி - அறிவான்மைந்தசான்றோர்- என்பன- அ
தற்றகுகிளவி, நாயாற்கோட்பட்டான் - எது - அதன்வினைப்படுதல், சாத்தனு
ன்முடியுமிக்கருமம் - வாணிகத்தாலாயினான் - என்பன - அதனினுதல், காணத்
தாற்கொண்டவரிசி - எது- அதனிற்கோடல், இவையாலுருபாலவந்தன- எண்
ணொடுவிராயவரிசி- எது -அதனொடுமயங்கல், (எண்- எள்ளு, மயங்குதல- கலத்
தல) ஆசிரியனொடுமாணக்கன்வந்தான் - எது -அதனொடியைந்தவொருவினைக்
கிளவி, மலையொடுபொருதமால்யானை- எது - அதனொடியைந்தவேறுவினைக்கி
ளவி, பொன்னொடிருப்பனையர் நின்னொடுபிறரோ- எது - பொன்னொடிருப்பையு
வமித்தலையொப்பார் நின்னொடுபிறரையுவமிக்குமிடத்து -எனவருதலால்- ஒப்
பலொப்புரை, இவை ஒடுவுருபான்வந்தன, முயற்சியிற்பிறத்தலாலொலி நிலை
யாது- எது- இன்- ஆன் - என்னுமுருபுகளால்வந்த - எது, கண்ணாற்கொத்தைக-
காலான்முடம்- இவைசினைவிகாரத்தை முதன்மேலேற்றிச்சொலலப்பட்டன,
(கொத்தை-பழுது,) மதியோடொக்குமுகம்- எது ஒப்பு, ஆலொடுகமுதைபர
ஞ்சுமந்தது- எது- கட்புலனாகாவொருவினை- ஒடு, (கட்புலனாதல்- கண்ணுக்கு
த்தெரிதல்,) இவைபிறவெனறதனாற்காட்டப்பட்டன, ஆன் - ஆலெனவும், ஒடு
ஓடெனவுந் திரிந்து நின்றன ஆதலால் நான்குருபும்வந்தன, இனி யிக்கருவிப்
பொருள்- அகக்கருவி- புறக்கருவி - ஒற்றுமைக்கருவி - எனமூவகைப்படுமெனக்
கொள்க. [உ-ம்,] மனத்தானினைத்தான் - எது- அகக்கருவி, வாளால்வெட்டி
னான்- எது-புறக்கருவி, அறிவாலறிந்தான் -எது- ஒற்றுமைக்கருவி, எனக்காண்
க, இரண்டாம்வேற்றுமைப்பொருளாகியகாரியத்திற்குவேண்டுங்கருவிப் பொ
ருளைத்தருதலால் இதுமூன்றாம்வேற்றுமை யெனப்பட்டது. (சூத்திரம்,) ஆலு
மானுமொடுமொடுவுஞ்சாலு மூன்றாம்வேற்றுமைத்தனுவே - செய்வோன்கார
ணஞ்செயத்தகுகருவி - யெய்தியதொழின்முதலியையுடைத்ததன்பொருள் எ
ன்றார் ஆசிரியரகத்தியனாருமெனக. இதனுள்முதற்காரணத்தைக்காரணமென்
றும்- ஏவுதற்கருத்தாவைத் தொழின்முதலென்றும் பிரித்துக் கூறினதினாலே
பொருள் ஐந்தாயின. (சய)

நான்காவதற்குருபா குங்குவ்வே, கொடைபகைநேர்ச்சிதகவ
துவாதல்,பொருட்டுமுறையாதியினிதற்கிதெனல்பொருளே.*

இது, நான்காம்வேற்றுமையிலக்கணமுணர்த்திற்று. (இ-ள்) நான்காவதற்குருபாகுங்குவ்வே - நான்காம்வேற்றுமைக்கு உரு
புமேலேசொல்லப்பட்ட-கு- ஒன்றுமேயாம், கொடை - ஈகை
யும்,பகையும்,நேர்ச்சி- நட்பும், தகவு-தகுதியும்,அதுவாதல்-அது
அதுவாதலும், பொருட்டு-நிமித்தமும், முறை - உறவுமுறையும்,
ஆகியின் - முதலியபொருள்தோன்றப்புணரும்புணர்ச்சியில்,இத
ற்கிதெனல்பொருள்-இதற்குஇதுவென்பதுபடவருதற்குஉரிய
பொருளினையும்ஏற்றுக்கொள்ளும் பொருளாகத் தன்னையேற்ற

பெயர்ப்பொருளைவேற்றுமைசெய்வது இதன்பொருளாம்-எ-று.
இதற்கிது என்றதனாலே ஏற்றுக்கொள்ளும்பொருள்என்பதூஉம்பெ
றப்பட்டது,[வ-று,]இரப்போர்க்கீந்தான்-எ-து-கொடை,பிணிக்
குமருந்து- எ-து-பகை- விளக்கினுக்கெண்ணெய்-எ-து-நேர்ச்சி-
அவனுக்குநட்பிவன் -என்பதும்அது, அருங்கலம்- அரசர்க்கேயு
ரித்து- எ-து- தகுதி- அவனுக்குத்தக்கவளிவள்- என்பதுமது, அ
வனுக்குநெல்- எ-து-அது அதுவாதல், இதனுள் - நெல்லென்ப
து- அது- அவல்அதுவாதல்- இன்னுமிது-உருபேற்குஞ்சொல்
உருபேற்கும்பொருள்எனவருமிரண்டின்றிஉருபேற்குஞ் சொல்
லேநின்றுஉருபேற்கும்பொருளாகவிகாரப்படுமெனவும் உய்த்
துணர்க,ஆடைக்குநூல்-எனவரும்-கடிசூத்திரத்திற்குப்பொன்-எ
ன்பதுமது,கூழிற்குக்குற்றேவல்செய்தான்-எ-து-பொருட்டு,கூலி
க்குவேலைசெய்தான்-என்பதுமது,சாத்தனுக்குமகன்-எ-து-முறை,
அவனுக்குஉறவு-என்பதுமது, ஆதியென்றதனாலே - கைக்குயா
ப்புடையதுகடகம்- (யாப்பு-பொருத்தம்,) அவனுக்கும் அவளு
க்கும்பொருத்தமில்லை, என்பதுமது, இச்சொற்குப் பொருளி
து. சுட்டு- அதற்குமுன் - இதற்குப்பின் - அந்தணர்நூற்குமறத்
திற்குமாதி-இன்றைக்குவரும்-அவ்வூர்க்குஇவ்வூர்காதம்-என்பன
எல்லை,அவனுக்குச்சிறந்தவனிவன்-சிறப்பு,போர்க்குப்புலியிவன்-
வீரம், அரசனுக்குக்கண் அமைச்சன் - மனைக்குவிளக்குமனையா
ட்டி- உவமை- மழைக்குமின்னல் - ஏதுக்குறிப்பு - உண்டென்ப
தற்கு அடையாளம்- இல்லையென்பதற்கு அடையாளம்- என்பது
மது- இவ்வாறுஇதற்கிதுஎன்பதுபடவருவனவெல்லாங்கொள்க.

இவற்றுள் இவ்வுருபு தானடைந்த பெயர்ப்பொருளை ஏற்றுக்கொள்ளும்
பொருளாக வேற்றுமைசெய்தல்காண்க, ஏற்கும்பொருள் - ஏற்றுக்கொள்ளும்
பொருள்-கோடற்பொருள்-கொள்ளுதற் பொருள்-கொள்பொருள்-என்பன. ஒ
ன்று-இனி இந்த ஏற்கும்பொருள்-கேளாதேற்றல்- கேட்டேயேற்றல்-ஏலாதே
ற்றல் - ஈவானேற்றல் - உயர்ந்தோனேற்றல் - இழிந்தோனேற்றல்- ஒப்போ
னேற்றல் - உணர்வின்றேற்றல் -விருப்பாயேற்றல் -வெறுப்பாயேற்றல - என
ப்பலவகைப்படும். [உம்] ஆவிற்குநீர்விட்டான் - எ-து- கேளாதேற்றல், வறியா
ர்க்கீந்தான் -எ-து- கேட்டேயேற்றல், மாணாக்கனுக்கறிவுகொடுத்தான்- எ-து-
ஏலாதேற்றல், இது அறிவானது கொடுப்பவனதுபொருளாகிக்கொள்வோனிட
த்தினிற்செல்லாமல் அவன்மனத்துத்தோன்றுதல்-ஏலாதேற்றலாயிற்று. (கொள்
வாமற்கொள்ளுதல்பொருள்) தனக்குச்சோறிட்டான்-எ-து - ஈவானேற்றல்,
அரிக்குப்பாற்கடற்றிருவளித்தானரன் - எ-து - உயர்ந்தோனேற்றல்; (பாற்க
டற்றிரு - திருப்பாற்கடலிலேபிறந்த இலக்குமி) அரனுக்குக்கங்கையளித்தான்
பகீரதன்- எ-து- இழிந்தோனேற்றல், சோழனுக்குவிருந்திட்டான் சேரன்- எ-து-ஒப்
போனேற்றல், சோற்றிற்குநெய்விட்டான் - நீர்க்குவாசமூட்டினான்- கண்

குமையிட்டான்- சுவர்க்குச்சித்திரமெழுதினான்- என்பன - உணர்வின்றேற்றல், மாணாக்கனுக்குக்கசையடி கொடுத்தானுவாத்தி - எ-து- விருப்பாயேற்றல், கள்ளனுக்குக்கசையடிகொடுத்தான்காவலன் - எ-து - வெறுப்பாயேற்றல், எனக் காண்க. இனியிந்தக்குப்பொருளாலேற்கப்பட்ட கொடைப்பொருளும்பல வகைப்படுமெனக்கொள்க. [உ-ம்,] மருமகனுக்குமகளைக்கொடுத்தான் - எ-து- வழக்கத்திற்கொடுத்தல், மகனுக்கரசுகொடுத்தான் - எ-து- உரிமையிற்கொடுத்தல், அரசனுக்குத்திறைகொடுத்தான் -எ-து - அச்சத்திற்கொடுத்தல், (இறை-வரி) தந்தைதாயர்க்குத்திதிகொடுத்தான் - எ-து- பாவனையிற்கொடுத்தல், அவனுக்குப்பரிசுகொடுத்தான் - எ-து - உவகை, அவனுக்குத்தண்டனைகொடுத்தான்- எ-து- வெகுளி, வாய்க்கரிசியிட்டான் - எ-து- அவலம், பிறவுங்காண்க, இக்கொடைப்பொருள் தன்பொருள்குறித்தசொலலாலன்றி - மாணாக்கனுக்கு நூற்பொருளுரைத்தான் - மாணாக்கனுக்கு அடியூட்டினான் எனப்பிறவாய்பாட்டாற்கூறப்படுதலுங்கொள்க. ஒருவன் ஒருகாரியத்தையொருகருவியாற்செய்தல்தனக்காயினும் பிறர்க்காயினும் உதவுதற்பொருட்டாதலால அம்முறைபற்றியிது நான்காம்வேற்றுமையெனப்பட்டது, இதுவுமிருமுடிபாகமுடிந்தது.

(௫) நான்காகுவதே -கு- எனப்பெயரிய வேற்றுமைக்கிளவி - யெப்பொருளாயினுங்கொள்ளுமதுவே - எ-ம்- அதற்குவினையுடைமையினதற்குடம்படுதலினதற்குப்படுபொருளினது வாகுகிளவியினதற்கியாப்புடைமையினதற்பொருட்டாகலி னட்பிற்பகையிற் காதலிற்சிறப்பினென், றப்பொருட்கிளவியுமதன் பாலவென்மனார். என ஆசிரியர்தொல்காப்பியனார்கூறுதலுங்காண்க. (௪௧)

ஐந்தாவதனுருபில்லுமின்னு, நீங்கலொப்பெல்லையேதுப்
பொருளே. ✻

இது, ஐந்தாம்வேற்றுமையிலக்கணமுணர்த்திற்று- (இ-ள்.) ஐந்தாவதனுருபு - ஐந்தாம்வேற்றுமையின் உருபாவன, இன்னுமில்லும் - மேற்கூறிய இன்னேயன்றி இல்லுமாம், பொருள்- அவற்றின்பொருளாவன, நீங்கல்- நீக்கப்பொருளாகவும், ஒப்பு- உவமைப்பொருளாகவும், எல்லை- எல்லைப்பொருளாகவும், ஏது- ஏதுப் பொருளாகவும் தம்மை யேற்றபெயர்ப் பொருளைவேற்றுமைசெய்தலாம்-எ-று.

ஒப்பு- உவமப்பொருவும்- உறழ்பொருவு மெனவிருவகைப்படும்- அவற்றுள் - உறழ்பொருவு உயர்வுதாழ்வுகளை யுணர்த்துவது, உறழ்தல்- ஒன்றினொன்றுமிக்குச் சமமாகாதுமாறுபடல், ஏதுவும்- காரகவேது - ஞாபகவேதுவெனவிருவகைப்படும், இனியுருபேற்றசொல்லையும் உருபுநோக்கிய சொல்லையும் - நீக்கப்பொருள் நீங்கப்படுபொருள், உவமப்பொருள் - உவமிக்கப்படுபொருள், எல்லைப்பொருள் - எல்லைப்படுபொருள், ஏதுப்பொருள்- காரியப்படுபொருள் - எனப்பகுத்துக்காண்க, இவற்றுள் உவமப்பொருள்முதலியமூன்றிலும் உருபுநோக்கியசொல் செயப்பாட்டுப்பொருளில்வரும்- நீக்கப்பொருளொன்றும் உருபேற்றசொ

லைசெயப்பாட்டுப் பொருளாக நிற்கும், நீக்கம் - வீழ்தல் - இ
ழிதல் - தீர்தல் - நீங்கல் - பற்றுவிடல் - முதலியவற்றினும் - இருவ
கைப்பொருவும் பண்புமுதலியபற்றி இதனின் இற்றுவென்னு
ம்வாய்பாட்டினும் - வரு. காரணகாரியத் தொடர்பினும், எல்லை
இடவரையறையினும் அளவுகுறித்தால் - பொருளாதி ஆறினும்
வரும், [வ-று,] மலையின்வீழருவி - தலையினிழிந்தமயிரனையர்
மாந்தர் - தமரிற்றீர்ந்தான் - ஊரினீங்கினான் - காமத்திற்பற்று
விட்டான் - எனவரும் - முதலியவற்றினால் - அரசரிற்பெரியர்
அந்தணர் - ஆவின் இழிந்ததுமேதி - என உயர்வுதாழ்வுகளினு
ம், இந்தநீக்கப்பொருள்வரும் - இவற்றுள். உருபேற்றசொல் - ம
லை - தலை, முதலியன - உருபுநோக்கியசொல் - அருவி - மயிர்முதலி
யன, இந்தஅருவிமுதலியன அவற்றைவிட்டு நீங்க - மலைமுதலியன
நீங்கப்படுபொருளாய்நிற்றல்காண்க, ஆவினிழிந்ததுமேதி - என்
பதில் இழிந்ததுமேதி அவ்விழிவு நீங்கப்படுபொருள் ஆவெனக்
காண்க - இவைபோல்வனவெல்லாம் நீக்கப்பொருள், காக்கையி
ற்கரிதுகளம்பழம் - பாலின்வெளிதுகொக்கு - என்றாற்போல்வ
ன - வண்ணம், அதனின்வட்டமிது - வடிவு - அதனிற்பெரிதிது - அ
தனிற்சிறிதுஇது - அளவு - அதனிற்றீவிதுஇது - (தீவிது - இனியது)
சுவை, இவற்றுள் உவமப்பொருள். காக்கை - பால் - முதலியன,
இவற்றை - உவமை - எனவும். உவமானமெனவு முக்கியப்பொரு
ளெனவுஞ்சொல்லப்படும் - களம்பழம் - கொக்குமுதலியன - உவ
மிக்கப்படுபொருள் - இவற்றை - உவமேயமெனவும் - புகழ்பொ
ருளெனவும் - பொருள் - எய் - சொல்லப்படும், இந்தஇரண்டிற்கு
ம்பொதுப்படநின்றகுணம் - வண்ணம்வடிவுமுதலியன, இவற்றி
ற்கு இருவகைப்பொருவும் விரித்துக்கொள்க. எவ்வாறெனின் -
காக்கைபோல் அதுபோல் - கரிது - பெரிது - சிறிது - எனவருவன
உவப்பொருவும் - காக்கையைக்காட்டிலும் - அதைக்காட்டிலும் -
கரிது - பெரிது - சிறிதென உயர்வுதாழ்வு குறித்துவருவன உறழ்
பொருவுமாமென்க. பண்புமுதலியவெற்றினால் - இவனின் இ
லன் இவன் - இவனினுடையன் இவன் - இதனின்நாறுமிது - இ
தனிற்பலஇவை - இதனிற்றூரமிது - எனவருவனவெல்லாங்கொ
ள்க. இவற்றுள் - இதனினென்பது - காக்கையினென்பது, இற்
றென்பது - கரிதென்பது, இதுவென்பது - களம்பழமென்பது,
இலன் - உடையன் - என்பனவும் இவ்வாய்பாட்டின் அடங்கும், இ
ந்த உறழ்பொருவை நீக்கப்பொருளென்பாருமுண்டு - இவையன்

த்தும் ஒப்பு, கருவூரின்கிழக்கு மருவூரின்மேற்குச்சோணாடு- எ
ன்பது எல்லைப்பொருள்- இதனில்-கருவூரின்மருவூரின் எனஇட
வாயவற்றையெல்லை - உருபேற்றசொல்லில் வருதலால் அவற்றை எ
ல்லைப்பொருளெனவும்- அதனிற்கிழக்குமேற்குஎனத்திசையளவு
குறித்தவைக்க அந்தஎல்லையைக்கொண்டது- சோணாடு ஆதலால்
உருபுநோக்கியசொல்லை எல்லைப்படுபொருளெனவுங்காண்க. இ
ன்றுங் குணகடல்குமரி குடகம்வேங்கடமெனு நான் கெல்லையி
னிருந்தமிழ்க்கடலென்னுமிடத்து- குணகடல்முதலிய நான்கும்
எல்லைப்பொருளாகவும் அந்தநான்கு எல்லையையுங் கொண்டது த
மிழ்க்கடலாதலால்- தமிழ்க்கடல் எல்லைப்படுபொருளாகவும் நின்
றவாறுங்காண்க. இனி அம்மலையின் இம்மலைபெரிது- அவ்வூரில் இ
வ்வூர்சிறிது- அவன்வாழ்நாளில் இவன்வாழ்நாள்பெரிது - அவன்
கண்ணில் இவன்கண்பெரிது - அவனழகில் இவனழகுபெரிது- அ
வன்தொழிலில் இவன்தொழில்பெரிது - எனப்பெருமைசிறுமை
முதலிய அளவுகுறித்தற்குப்பொருளாகி ஆறும் எல்லைகளாய் நின்
றமையுங்காண்க. இவை- அளவுகுறியாது- அம்மலையைப்போல
க், காட்டினும், எனவரின் இருவகைப் பொருவுள் அடங்கும்- இ
வையெல்லாம் எல்லைப்பொருள், கள்ளரின் அஞ்சினான் - வாணிக
த்தின் ஆயினான் - இகழ்ச்சியிற்கெட்டான் - மகிழ்ச்சியின்மைந்
துற்றான் - (மைந்து-வலி,) கோட்டிற்செய்தகொடிஞ்சிநெடுந்
தேர் - (கோடு - யானைத்தந்தம், கொடிஞ்சிதேர்மொட்டு,) என்
றாற்போல்வன - காரகத்து, அறிவினாகியகாட்சி - கண்ணினாகிய
காட்சியென்னவரின் - ஞாபகவேது, இவற்றுள் உருபுநோக்கியசொ
ல்- காரியப்படுபொருளாய்நிற்றல்காண்க. எவ்வாறெனின்- கள்ள
ரும்- வாணிகமும்-இகழ்ச்சியும்முதலியன ஏதுவாக- அச்சமும்
ஆக்கமும் - கேடும்முதலிய காரியங்கள்தோன்ற அவற்றைக்கொ
ண்டுநிற்றலால்உருபுநோக்கியசொல்-காரியப்படுபொருளென்க,
இவையெல்லாம் ஏது - பிறவுமன்ன, இவற்றுள் இல்லுருபுவந்த
இடத்தில் இன்னுருபையும் - இன்னுருபுவந்த இடத்தில் இல்லு
ருபையும்ஒட்டுக - இவ்வாறுகூறவே எல்லாப்பொருளையும் இத
னின் இற்று இதுவென விகற்பித்து அறிதற்குவருவது இந்தஉரு
பென்பதாயிற்று ஆகவே, நான்காம் வேற்றுமைப் பொருளாகிய
கொள்வோனையுங்கொடைப் பொருளையும் இவனின் இத்தன்மை
த்து இந்தக்கொடைப்பொருளென இவ்வாறு விகற்பித்துஉண

ரிந்தால் அல்லது கொடுத்தல் கூடாததினாலே இது ஐந்தாம்வேற்றுமையெனப்பட்டது.

(சூ) ஐந்தாகுவதே - இன்னெனப்பெயரிய வேற்றுமைக்கிளவி - யிதனி னிற்றிதுவென்னுமதுவே-எம். வண்ணம்வடிவேயளவேசுவையே, தண்மைவெம்மையச்சமென்றா, நன்மை தீமைசிறுமைபெருமை, வன்மை மென்மைகடுமை யென்றா, முதுமையிளமைசிறத்தலிழித்தல், புதுமைபழமையாக்கமென்றா, வின்மையுடைமை நாற்றந்தீர்தல், பன்மைசின்மைபற்றுவிடுதலென், றன்னபிறவு மதன்பாலவென்மனார், என-ஆ-தொ-கூறுதலுங்காண்க, (சஉ)

ஆறனொருமைக்கதுவுமாதுவும், பன்மைக்கவ்வுமுருபாம்பண் புறுப், பொன்றன்கூட்டம்பலவினீட்டந், திரிபினக்கமாந்தற் கிழமையும், பிறிதின்கிழமையும்பேணுதல்பொருளே. *

இது, ஆறும்வேற்றுமையிலக்கணமுணர்த்திற்று. (இ-ள்,) ஆறனொருமைக்கதுவுமாதுவும் - ஆறும்வேற்றுமையின் ஒருமைப்பொருட்குமேற்சொல்லிய அதுவென்பதன்றி ஆதுவும், பன்மைக்கவ்வுமுருபாம் - பன்மைப்பொருட்கு அகாரமும் உருபாம், பொருள், அவற்றின்பொருளாவன, பண்பு - குணமுந்தொழிலுமாகியபண்பும், உறுப்பு - அவயவமும், ஒன்றன்கூட்டம் - ஒருபொருட்கூட்டமும், பலவினீட்டம்-பலபொருட்கூட்டமும், திரிபினாக்கம் - ஒன்றுவிகாரப்பட்டுமற்றொன்றுஆனதும், ஆந்தற்கிழமையும்-ஆகியஐந்துதற்கிழமைப்பொருளையும், பிறிதின்கிழமையும்-பிறிதின்கிழமைப் பொருளையும், பேணுதல் - உடையனவாகித்தம்மையேற்றபெயர்ப்பொருளை வேற்றுமை செய்வனவாகப் போற்றுதலாம், எ-று.

கிழமைப்பொருளைக்- கிழமையென்றது ஆகுபெயர், தற்கிழமை- யாவதுதன்னோடு ஒற்றுமையுடைய பொருளின்சம்பந்தம், அது· சாத்தனது . கால். கை. என்றாற்போல்வது, பிறிதின் கிழமையாவது- தன்னின்வேறாகிய பொருளின்சம்பந்தம், அது. சாத்தனதுதோட்டம்- வீடு- என்றாற்போல்வது. கிழமை - உரிமை, சம்பந்தம் - சொந்தம். என்பனவெல்லா மொன்று, [வ- நு,] நீலத்தது அகலம். சாத்தனது இயல்பு - சாத்தனது நன்மை- சாத்தனது இருக்கை- சாத்தனது நிலை- சாத்தனது வரவு- சாத்தனது பாட்டு-இவைகுணமுந்தொழிலுமாகியபண்புத்தற்கிழமை, சாத்தனதுகை- சாத்தனதுகண்- இவைஉறுப்புத்தற்கிழமை, மக்களதுதொகுதி- நெல்லினதுகுப்பை - இவைஒன்றுபலகூடிய ஒன்றன்கூட்டத்தற்கிழமை, படையதுதொகுதி- விலங்கினது.

ம் - இவைவேறுபலகூடியபலவின் கூட்டத்தற்கிழமை, (விலங்கு-
மிருகம்,) நெல்லினதுபொரி- கோட்டதுநூறு- இவைதிரிபினுக்
கத்தற்கிழமை,(கோடு-சங்கு, நூறு-சுண்ணும்பு,)இவையெல்லாம்
ஐவகைத்தற்கிழமை, இவற்றுள்- ஒன்றன் கூட்டம்மாறிக்குப்பைய
துநெல் எனவரின் உறுப்புத்தற் கிழமையாம். பலவின்ட்டமாறி
னும் அதுவாம், இங்கேசொல்லப்பட்டசினைகுணந்தொழில்களை
த்தற்கிழமையெனவே- பொருளிடங்காலங்கள் மூன்றும்பிறிதின்
கிழமையென்பதாயிற்று- சாத்தனதுவில். சாத்தனதுஆடை- இ
வைபொருட் பிறிதின்கிழமை - முருகனது பிள்ளைத்தமிழ். இது
முருகன்பாடிய பிள்ளைத்தமிழ்- முருகன் மேற்பாடியபிள்ளைத்த
மிழ் எனநிற்றலால் - இருவகைச்செய்யுட் பிறிதின்கிழமை, இது
வும்பொருட்பிறிதின்கிழமையேயாம், சாத்தனதுதோட்டம்- சா
த்தனதுநிலம், இவைஇடப்பிறிதின்கிழமை, சாத்தனதுநாள்-சா
த்தனதுவாழ்நாள்- இவைகாலப் பிறிதின்கிழமை, இவையெல்லா
ம்பிறிதின்கிழமை- இவற்றுள்- சாத்தனது பாட்டென்னும்வினை
த்தற்கிழமையானதுவரிவடிவைநோக்கியகாலத்துச்செய்யுட்பிறி
தின்கிழமையாம்,எனதுகை-தனதுதாள்-என ஆது உருபோடும்- எ
னகைகள்- தனதாள்கள் - எனயானைகள் என அகரஉருபோடும் ஒ
ட்டுக, அஃறிணையொருமைபன்மைகளுக்கு இயைந்தஉருபுகளை
யிங்கேசொல்லவே உயர்திணையொருமை பன்மை யாகியகிழமை
ப்பொருள்களுக்கு இந்தமூன்றுருபுகளும் வாராவென்பதாயிற்
று- வரின், அவனுடையமனைவி - எனமூன்று சொல்லாய் இரண்
டுசந்தியாய்- முன்னது எழுவாய்ச்சந்தியம்- பின்னது பெயரெச்
சக்குறிப்புச்சந்தியுமாமென்க- அவன்மனைவி - என்றஇடத்து உ
டைய என்பதுகுறைந்துநின்றது- இவற்றை ஆறும்வேற்றுமைச்
சந்தியென்றும்உடைய என்பதைச்சொல்லுருபென்றுங்கூறுவாரு
முண்டு.

ஆசிரியர் தொல்காப்பியனார்- உயர்திணை யொருமை பன்மைகளுக்கு இ
ந்தஉருபுகள்வாராவென்பதுநோக்கி. (௫) அதுவென்வேற்றுமையுயர்திணைந்
தொகைவயி, னதுவெனுருபுகெடக்குகரம் வருமே - என்றார் - எனக்கொள்க.
இவ்வாறும் வேற்றுமைப் பொருளைக்குறைப் பொருளென்றும் வழங்குவர், இனி
இந்தஆறும் வேற்றுமைப் பொருள் - ஒற்றுமை வேற்றுமையென இருவகைப்
படுமெனவும் - அவற்றுள் ஒற்றுமையாவது ஒருபொருளே யாமெனவும், வே
ற்றுமை யாவது - ஒன்றாய்த் தோன்றல் உரிமை யாய்த் தோன்றல் வேறாய்த்
தோன்றல்,எனமூவகைப்படுமெனவும் அம்மூவகையுள் - ஒன்றாய்த் தோன்றல்-
ஒன்றன்கூட்டம்பலவின்கூட்டந்திரிபினுக்கஞ்சினைகுணந்தொழிலென அறுவகை
ப்படுமெனவும், உரிமையாய்த்தோன்றல்- பொருளிடங்கால மிருவகைதாவெ

னறவகைப்படுமெனவும், வேறாய்த்தோன்றல் - வேறிடத்துஞ்செல்லும்நிலைமையிலதுடைமைகள்பலவுமாமெனவுங்கொள்ளப்படும். [உ-ம்] என்னுயிர் - இராகுத்தலை - என்பன ஒற்றுமை - இவற்றுள் - யானென்பதும் உயிர் - என்பதும் - ஒருபொருள் - இராகுஎன்பதுந்தலையென்பதும் ஒருபொருள், வேற்றுமைவகையுள் - ஒன்றாய்த்தோன்றலுக்கு உதாரணம் - ஐவகைத்தற்கிழமைப்பொருளுக்கும்மேலே காட்டியனவும் உரிமையாய்த்தோன்றலுக்குஉதாரணம் மூவகைப்பிறிதின்கிழமைக்குக்காட்டியனவுமேயாம், வேறாய்த்தோன்றலுக்குஉதாரணம்-சாத்தனதுபசு-சாத்தனதுநெல், சாத்தனதுபொன்- எனவரும்-இவையுமொருவருக்குஉரிமையாகியும் பின்வேறொருவருக்கு உரிமையாகியும் வருதலால்நிலைமையில்லுடைமையாயின - இந்தமூவகைவேற்றுமையையடநூலார்நூற்றொருபேதமாக்குவர், மேற்சொல்லியகொள்வோனையுங் கொடைப்பொருளையும் இதனின் இற்று இதுவெனவிகற்பித்துணர்த்துகொடுத்தல இத்த இருகிழமைப்பொருளுடையோர்செயலென்பதுந்தோன்ற இது ஆறாம்வேற்றுமை யெனப்பட்டது, (௫) ஆறனுருபேயது வாதவ்வே - வேறொன்றுடையதைத் தனக்குரியதை யென - விருபாற்கிழமையின் மருவுறத்தோன்றும், ஐம்பாலுரிமையற்றதற்கிழமை-பொருளிடங்காலமாம் பிறிதின்கிழமை - என்றார் ஆசிரியர் அகத்தியனாரும் - ஆறுவ°த - அதுவெனப்பெயரிய வேற்றுமைக்கிளவி-தன்னினும் பிறிதினுமிதனிதுவெனு,மன்னகிளவிக்கிழமைத்ததுவே-எம்-இயற்கையினுடைமையின் முறைமையிற்கிழமையிற், செயற்கையின் முதுமையின்வினையினென்றுகருவியிற்றுணையிற்கலத்தின்முதலின்-ஒருவழியுறுப்பிற்குழுவி னென்று - தெரிந்துமொழிச்செய்தியினிலை யின்வாழ்ச்சியிற், றிரிந்து வேறுபடூஉம் பிறவுமன்ன, கூறியமருங்கிற்றோன்றுங்கிளவி, யாறன்பாலவென்மனார் புலவர்- என- ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க. (௯௧)

ஏழனுருபுகண்ணாதியாகும், பொருண்முதலாறு மோரிருகிழமையி, னிடனாய் நிற்றலிதன்பொருளென்ப. *

இது, ஏழாம்வேற்றுமையிலக்கணமுணர்த்திற்று. (இ-ள்,) ஏழனுருபு கண்ணாதியாகும் - ஏழாம்வேற்றுமையுருபு - மேற்கூறியகண்ணேயன்றி அதுமுதலியபிறவுமாம், பொருண்முதலாறும் - தம்மையேற்றபெயர்ப்பொருளாகிய - ) பொருள் - இடம்- காலம் -சினை - குணம்• தொழில்- என்கின்றஆறும், (சினை - அவயவம், ) ஓரிருகிழமையின் - மேற்சொல்லிய இருகிழமைப் பொருட்கும், இடனாய்நிற்றல் - இடமாகிநிற்கவேற்றுமைசெய்தல், இதன்பொருளென்ப - இந்தவேற்றுமையுருபுகளின் பொருளென்றுசொல்லுவர்புலவர்-எ-று.

[வ-று,] மணியின்கண்ஒளி- மணியின்கண் இருந்தது ஒளி என இதுதற்கிழமை - பனையின்கண் அன்றில்- பனையின்கண் இருந்தது-அன்றில்- என இதுபிறிதின் கிழமை- இவையிரண்டிலும் பொருள் இடனாயிற்று, ஊரின்கண் இல்லம் - இதுதற்கிழமை-

ஆகாயத்தின்கட்பருந்து- பிறி - இவையிரண்டிலும் - இடம்இடமாயிற்று, நாளின்கண் தாழிகை-தற-வேனிற்கட்பாதிரி- (வேனில்-காலம்- பாதிரி- மரம்,) பிறி-இ-ம்-காலம்இடமாயிற்று, கையின்கண்விரல்- தற்- கையின்கண்வரை-பிற்- இ- ம் - சினையிடனாயிற்று, சுறுப்பின்கண் அழகு - தற- இளமையின்கட்செல்வம்-பிறி- இ-ம்-குணம்இடனாயிற்று,ஆடற்கட்சதி-தற்-(சதிதாளம்,) ஆடற்கட்பாட்டு- பிறி- இ- ம்- தொழிலிடனாயிற்று,ஆடற்கட்பாடப்பட்டதுபாட்டு- என்பதுபோல இடையிலேநின்றனவற்றிற்கும்வினைவருவித்துணைத்துக்கொள்க, ஆதியென் றதினால்வரும் உருபுகளிவருந்சூத்திரத்தாற்கூறுவர், இனிஇந்த இடவேற்றுமைப்பொருள் : இருவகையுரிமையும் ஒரிடமும்- எங்கும் - என நான்கென்மேசிலர்சொல்லுவர் - அவற்றிற்கு உதாரணம் - நிலத்தின் கண்தேரோடுகின்றது - கடலின்கண் நாவாய் ஒடுகின்றது- (நாவாய்-தோணி, ) ஆகாயத்தின்கண்பருந்துபறந்தது -காட்டின்கண்புலிவாழ்ந்தது- இவைபிறிதின் கிழமை- மதியின்கண்மறு- கையின்கண்விரல்-குன்றின்கண்குவடு-(குவடு-மலையுச்சி,)நெற்றியின்கண்விழி-ஆண்டின்கண் இருது- (இருது-பருவம்,) நாளின்கண்வைகறை-(வைகறை-விடியற்காலம்,) இவைதற்கிழமை, ஊர்க்கண்இருந்தான்-தேர்க்கண் இருந்தான் -இவைஒரிடம், மணியின்கண் ஒளி உயிரின்கண்உணர்வு - பாலின்கண்சுவை- நெருப்பின்கண்சூடு- நீரின்கண்குளிர்ச்சி - இவைஎங்கும், இந்தவிகற்பமெல்லாம்மேற்கூறியவற்றுளடங்கும்- இனிஇடமல்லாத இடம்மூவகைப்படும்- கூட்டிப்பிரித்தலும்பிரித்துக்கூட்டலும் இருவராலுமுடியும் ஒருவினைத்தொழிற்பெயரும் என, உடையாரைசருள்ளறு - அவற்றுள் அஇஉஎஒக்குறில்- எனவரும்வைகூட்டிப்பிரித்தல்- அரசனையெல்லாங்கூட்டி உடையானென்ன ஒருவனையும்- எழுத்தை யெல்லாங் கூட்டி- ஐந்துகுறிலையும் பிரித்ததிலே யெனக்காண்க- வையத்துள்வாழ்வாங்குவாழ்பவன்வானுறையுந்தெய்வத்துள்வைக்கப்படும்- மற்றையான்செத்தாருள்வைக்கப்படும் - எனவருமிவை ஒருவனையெடுத்து ஒருகூட்டத்துள்ளே சேர்க்கப்படுதலாற்பிரித்துக்கூட்டலெனக்காண்க-புல்லுதற்கண்வேர்வைவந்தது-பொருதற்கண்மறைகெடுத்து-சூதாடற்கண்மேனதுக்கம்வந்தது- (புல்லுதல்-ஆண்பெண்சுகலுக்கல்) இவையிருவரால் முடியுமொருவினைத்தொழிற்பெயர்- பல்லுதல்-பொருதல் - சூதாடல் என்பனதொழிற்பெயர் உருபேற்றுநின்றன, இந்த உருபெயர்ப்பொருளை மேற்சொ

கிலிய இருகிழமைப்பொருள்களுக்கும் இடமாக வேற்றுமைசெ ய்தலால்ஏழாம்வேற்றுமையெனப்பட்டது.

(கு) ஏழாதுவதே, கண்ணெனப்பெயரிய வேற்றுமைக் கிளவி - வினைசெ யிடத்திலத்திற்காலத்தினவைகைக்குறிப்பிற்றோன்றுமதுவே. எம்- கண்கா ல்புறமகமுள்ளுழையீடுமேல் - பில்சார்டயல புடைதேவகை யெனஅ - முன்னி டைகடைதலைவலமிடமெனஅ - வன்னபிறவுமதன்பாலவென் மனார். எம்- ஆசிரி யர் தொல்காப்பியனார் கூறுதலுங்காண்க. (௩௪)

கண்கால்கடை யிடைதலைவாய் திசைவயின், முன்சார் வலமிட மேல்கீழ்புடைமுதல், பின்பாடளைதேமுழைவழியுழியுளி, யுள் ளகம்புறமில் லிடப்பொருளுருபே. *

இது,மேலேகண்ணாதியென்ற உருபுகளிவையென உணர் த்திற்று.(இ-ள்,) இங்கேகண்முதலாக இல்முடிவாக எண்ணப்பட் ட இருபத்தெட்டும் இடப்பொருளாகவேற்றுமைசெய்யும் உருபு களாம்- எ-று.

இங்கேயுங்கண்ணுருபைக்கூட்டிச்சொன்னது தொடர்ச்சி தோன்றவெனக்காண்க. [வ-று,] உளர்க்கால்நிவந்தபொதும்பர்- கால்- (நிவப்பு-உயர்வு)வேலின்கடையணிபோல்திண்ணியான், க டை - (திண்மை- உறுதி) நல்லாரிடைப்புக்கு- இடை, வலைத்தலை மானன்னநோக்கியர்- தலை, குறைகடல்வாய் அமுதென்கோ-வா ய், தேர்த்திசையிருந்தான்-திசை, அவர்வயிற்சென்றான்-வயின், கற்றார்முன்தோன்றாகழிவிரக்கம் - முன், காட்டுச்சாரோடுங்குறு முயால்- சார், கைவலத்துயாழ்வரைநின்றது- வலம், இவ்விடப்பு ரத்தை- இடம், தன்மேற்கடுத்துவந்தான் - மேல், (கடுப்பு- வே கம்,) நிழற்கீழிருந்தான்-கீழ், கடைப்புடைக்கொண்டநீர்- (எது கபிரளையம்-) புடை,சுரன்முதல்வந்த -(சுரம்-பாலை,) முதல், காதலிபின்சென்றது- பின், நம்பாடுஅணையாதநாள் - பாடு, கல் லளைச்சுனைநீர்- அளை, கோடாய்தேத்து- (கோடாய் - கைத்தாய்,) தேம், அவனுழைவந்தான்-உழை, நிழல்வழியசைந்தது- வழி,உ றையுழியோலைபோல் (உறை-வாழ்நாள்,) உழி, குளிர்காவுளிசேர் ந்துறைபம்- (கா-சோலை,) உளி,குவட்டுள்வாழும்- (குவடு-மலையு சசி,) உள்,டல்லராகத்து - அகம், உயிர்ப்புறத்துஇறுத்த- (இறு த்தல்-தங்குதல்,) புறம், ஊரிலிருந்தான்- இல், எனவருமிவையெ ல்லாம்பலதிறத்தனபோலநிற்பினும் ஒருதிறத்தனவாகிய கண்ணு ருபின் பரியாயநாமங்களாய்வருதல்காண்க, இனிக்கண்கால்முத லியன இடவிகற்பங்களையுணர்த்துமாயின்- ஒருதிறத்தவாகிய உ ருபகாது பலதிறத்தனவாகிய இடங்களையுணர்த்தும்பெயராகி- இ

ண்ணகன்ஞாலம்- கடைநாள்- இடைச்சுரம்- தலையாயார்- தென்றிசை - என்றாற் போல்வனவாய்வருதலுங்காண்க. மணியின்கண்ணொளி- என்னுமிடத்து-கண் - என்பதுபெயராயின் - மணியினது இடத்துஒளி- என்பதுபொருளாகி- மூன்றுசொல்லாகி இரண்டுசந்தியாகும்- எனக்காண்க பிறவுமன்ன. (சரு)

எட்டனுருபே யெய்துபெயரீற்றின், றிரிபுகுன்றன்மிகுதலிய
ல்பயற், றிரிபுமாம்பொருள்படர்க்கையோரைத், தன்முகமா
கத்தானழைப்பதுவே. *

இது,எட்டாம்வேற்றுமையிலக்கணமுணர்த்திற்று. (இ-ள்,) எட்டனுருபு - எட்டாம்வேற்றுமையாகியவிளிக்கு வேறேயுருபில்லாததினாலேயதற்கு உருபாவது- எய்துபெயரீற்றின்றிரிபு - அந்தவிளியடைந்தபெயரின் இறுதிதிரிதலும், குன்றல் - அப்பெயரிறுதிகெடுதலும், மிகுதல்- இறுதியிலேயோரெழுத்துமிக்கிருத்தலும், இயல்பு - அந்தஇறுதிமுன்போலவேயிருத்தலும், அயற்றிரிபுமாம்- அந்தஇறுதியெழுத்துக்கு அயலெழுத்துத்திரிதலுமேயாம், பொருள் - அதன்பொருளாவது, படர்க்கையோரை- படர்க்கையிடத்தாரை, தன்முகமாக - தனக்குஎதிர்முகமாக, அழைப்பது- அழைக்கப்படுவதாக வேற்றுமைசெய்தலாம்- என்று.

வேறுருபில்லாததினாலே யென்பது குறைந்துநின்றது, இயல்பென்றதினாலே இயல்பாகிய விளியுருபிற்கும் - எழுவாயுருபிற்குஞ் சொல்லால்வேற்றுமை யில்லையாயினும் பொருளால்வேற்றுமையுண்டென்பதும், படர்க்கையோரையெனவே - ஒழிந்ததன்மை முன்னிலைகள்விளியுருபு கொள்ளாவென்பதும்பெறப்பட்டன, தான்-ஏ-து- அசைநிலை, இவ்வாறுவரும் உருபுகளும்பொருளும் பின்வருஞ்சிறப்புச் சூத்திரங்களாலுணர்க. இது எழுவாயிலேநின்றும் ஒருவிதத்தினால்வேறுபட்டதினாலே இறுதியிலேவைத்து எட்டாம்வேற்றுமை யெனப்பட்டது. (சூ) விளியெனப்படுபகொள்ளும் பெயரொடு, தெளியத்தோன்றுமியற்கைய வென்ப. என- ஆ- தொ-ர்-சூ-றுதலுங்காண்க. (சசு)

இ உ ஊ ஓவடையோனளரல, யவ்வீற்றுயர்திணையோரவல்
லிவற்றொடு, ணஃகானவீறாகும்பொதுப்பெயர், ஞரவொழி
யனைத்தீற்றஃறிணைவிளிப்பன. *

இதுவிளியுருபேற்கும்பெயர்களிவையென்கின்றது. (இ-ள்,) இ-உ-ஊ-ஐ-ஓ-ன-ள-ர-ல-ய-வ்வீற்றுயர்திணை - இப்பத்தீற்று உயர்திணைப்பெயர்களும், ஓரவல்லிவற்றொடு - ஓகாரமும் - ரகர

ளும் அல்லாதஇந்த எட்டீற்றுப் பெயர்களோடு, ளஃகானுவீறு
ரும்பொதுப்பெயர்-ளகரவொற்றும்ஆகாரமுமாகிய இரண்டுங்கூட்டப்பத்திற்றுப்பொதுப்பெயர்களும், ஞநவொழியனைத்தீற்ற அஃறிணை - (நாலாறுமீறே யென்றவற்றுள்) ஞகரவொற்றும் நகரவொற்றும்-ஈறாகாதென் மேலேவிலக்கப்பட்ட எகரமு மொழித்து ஒழிந்தஇருபத்தோரீற்று அஃறிணைப் பெயர்களும், விளிப்பன-விளிக்கப்படுவனவாம்- எ-று.

(விளித்தல்- அழைத்தல், ) (சூ) இ உ ஐ ஓ வென்னுமிறுதி, யப்பாலன் கேயுயர்திணைமருங்கின, மெய்ப்பொருள்சுட்டியவிளிகொள்பெயரே-எம்-னரலளவென்னுமந்நான்கெனபுள்ளியிறுதிவிளிகொள்பெயரே-எம்-ஊகாரமும்யகரவொற்றும்விலக்கி-ஆசிரியர்-தொல்காப்பியனார்கூறிய துயாலவழக்கெனக்காண்க.(சஎ)

இம்முப் பெயர்க்கணியல்புமேயு, மிகர நீட்சியு முரு
பாமன்னே. *

இது, மூவகைப்பெயர்க்கும்பொதுவாகியவிளியுருபுதொகுத்து உணர்த்துகின்றது. (இ-ள்,) இம்முப்பெயர்க்கண் - மேல்விளிக்கப்படுமென்ற மூவகைப்பொருள்களும், இயல்புமேயு மிகரநீட்சியும் - இயல்பாதலும் - ஏகாரம்மிகுதலும் - இகரவிறுதி ஈகாரமாகத்திரிதலும், உருபாமன் - பெரும்பாலும் - உருபுகளாம்- எ-று.

[வ-று,] முனி-வேந்து- ஆடூஉ - விடலை- கோ-கோன்-வேள்-மாந்தர்- தோன்றல்-சேய்- எனநிறுத்தி-கூறாய்-கூறீர்- எனவருவித்து- முனிகூறாய்-வேந்துகூறாய்- மாந்தர்கூறீர் - எனஒட்டி இயல்பாதலும், முனியே- வேந்தே எனஏகாரமிகுதலும், நம்பீ என இகரம்நீளுதலுமாகியமூன்று உருபுகளும்உயர்திணையிலே வந்தனவெனக்காண்க. ஒழிந்தவற்றேறும்மிவ்வாறேயொட்டுக-பிதாக்கூறாய்- ஆண்கூறாய் - பிதாவேகூறாய் ஆணேகூறாய் - சாத்தீகூறாய் - எனப்பொதுப்பெயரிலே மூன்றுருபும்வந்தன, விளக்கொடியை- புறாக்கொடியை - புல்வாய்கொடியை - விளவே- புறாவே-புல்வாயே- கொடியை- மந்திகொடியை எனஅஃறிணையிலே மூன்றுருபும் வந்தனபிறவுமன்ன, மன்னே யென்றமிகுதியினாலே இந்தஉருபுகள் சிலவற்றிற்கு எல்லாமையும் இந்தப்பொதுவிதியிலும் மேல்வருஞ்சிறப்பு விதியிலும் அடங்காதுவருமுருபுகள்சிலவுளவாயின் அவையுங் கொள்க. இனியிவரிச்சூத்திரமுதலாகவிளியிலக்கணங்களைப் பொதுவகையாற்றொகுத்துக்கூறுத

லாலும் ஆசிரியர் தொல்காப்பியனார் சிறப்புவகையாற் றனித்தனி
யெடுத்துக்கூறுதலாலும் இவர்வகுத்துக்கூறிய விதிகளையவர்தொ
குத்துக்கூறியிருப்பதினாலும் பெரும்பாலும் விதிகளொத்துவரி
னுஞ்சூத்திரங்களொத்துவாராமையுணர்ந்துகொள்க. (கூஅ)

ஐயிறுபொதுப் பெயர்க்காயுமாவு, முருபாமல்ல வற்றாயு
மாகும். *

இது, ஐகாரவீற்றுப் பொதுப் பெயர்க்கு எய்தியதுவிலக்
குகின்றது. (இ-ள்,) ஐயிறுபொதுப் பெயர்க்கு - ஐகாரவீற்றுப்
பொதுப்பெயர்க்கு, (இயல்பும் ஏகாரமிகுதலுமன்றி) ஆயுமாவு
முருபாம்- ஐகாரம் ஆய் ஆகவும் ஆவாகவுந்திரிதலும் உருபுகளா
ம், அல்லவற்றாயுமாகும் - அல்லாத உயர்திணையஃறிணைப்பெயர்
களில் ஐகாரம் ஆய் எனத்திரிந்துவருதலும்உருபுகளாம்- எ-று.

[வ-று,] அன்னைஅன்னாய்- தந்தைதந்தாய்- எ-ம்- அன்னா அ
லந்தனன் எழுந்திராய்-எ-ம்- பொதுப்பெயரில் இரண்டுருபுமனு
ம்வந்தன, விடலை- விடலாய்- (விடலை- ஆண்மகன்,) மடந்தை ம
டந்தாய்-எ-ம்-நாரை-நாராய்- கொன்றை- கொன்றாய்- முல்லை
முல்லாய்-எ-ம்- இருதிணைப்பெயரிலும் ஆய்உருபுவந்தது- பிறவு
மன்ன. (சக)

ஒருசாரனவ்வீற் றுயர்திணைப் பெயர்க்க, ளளபீ றழிவய னீட்சி
யதனொ, டீறுபோதல வற்றொடோவுற, லீறழிந் தோவுறலிறு
தியவ்வாத, லதனொடயற்றிரிந் தேயுறலீ றழிந், தயலே யாதலும்
விளியுருபாகும். *

இது னகரவீற்றுஉயர்திணைப்பெயர்க்குஎய்தியதன்மேற்சி
றப்புவிதியுணர்த்திற்று. (இ-ள்,) ஒருசாரனவ்வீற்றுயர்திணைப்பெ
யர்க்கண், (பொதுவிதியன்றி) சிலனகரஈற்றுஉயர்திணைப்பெயர்க
ளில், அளபு-அளபெடுத்துவருதலும், ஈறழிவு-ஈறுகெட்டுவருதலு
ம், அயனீட்சி-ஈற்றுக்குஅயலெழுத்துநீண்டுவருதலும், அதனொ
டீறுபோதல் -அந்தநீட்சியுடனேஈறுகெடுதலும், அவற்றொடோ
வுறல்- அந்தஇரண்டுடனே ஓகாரமிகுதலும், ஈறழிந்தோவுறல்-
ஈறுகெட்டு ஓகாரமிகுதலும், இறுதியவ்வாதல் - னகரஒற்றுயகர
ஒற்றாய்த்திரிதலும், அதனொடயற்றிரிந்தேயுறல்- அத்திரிதலுடன்
அயல்நின்ற ஆகாரம்ஏகாரமாகிஏகாரம்மிகுதலும், ஈறழிந்தயலே
யாதலும்விளியுருபாகும்- ஈறுகெட்டு அயல்நின்ற அகரம்ஏகார
மாதலும்விளியுருபுகளாம்- எ-று.

ஒருசார் என்பதைவிளியதிகாரமுற்றுமளவும் வருஞ்சூத்திரங்கள்தோறுங்கூட்டுக [வ-று,] அம்பர்கிழாஅன் - வல்லங்கிழாஅன், (அம்பர் - வல்லம்என்னும் ஊர்க்குரியவன்) இவைஅளபெடுத்தன, நண்ப- புலவ- தோழ- எலுவ- இவைஈறழிந்தன; நம்பான்- பெருமான் - (நம்பன்- பெருமன்என்பன) அயல்நீண்டன; இறைவா- மன்னா- என அயல்நீண்டுஈறுகெட்டன, ஐயாவோ அப்பாவோ என ஈறுகெட்டு அயல்நீண்டுஓகாரமிக்கன, இளையவோ- ஐயவோஎனஈறுகெட்டுஓகாரமிக்கன, வாயிலாய் - ஆதினையாய் என இறுதிணகரம் யவ்வாயின, வாயிலோயே : என இறுதியவ்வொற்றுஈற்றயல்ஆகாரம் ஓகாரமாய் ஏகாரமிக்கது, ஐயேயெமக்கருள்- வாழியமுருகே, எனஈறுகெட்டு அயலில் அகரம் ஏகாரமாயின, பிறவுமன்ன. (௫௰)

ளஃகானுயர்பெயர்க்களபீறழிவய, னீட்சியிறுதியவ்வொற்று
தல், லயலிலகரமேயாதலும்விளித்தனு. *

இது, ளகரவீற்றுஉயர்திணைப்பெயர்க்கு எய்திய தன்மேற்சிறப்புவிதியுணர்த்துகின்றது. (இ-ள்,) ளஃகானுயர் பெயர்க்கு- சில- ளகரஈற்று உயர்திணைப்பெயர்க்கு, அளபீறழிவு(இயல்பாதலும் ஏகாரமிகுதலுமன்றி) அளபெடுத்தலும் ஈறுகெடுதலும், அயனீட்சி- ஈற்றுக்குஅயலெழுத்துநீளுதலும், இறுதியவ்வொற்றுதல், ளகரஒற்றுயகரஒற்றாதலும், அயலிலகரமேயாதலும் - ஈற்றுக்கு அயல் நின்ற அகரம் ஏகாரமாதலும், விளித்தனு- விளியுருபாம், எ-று.

[வ-று,] விறன்மிகுவே எள் - என அளபெடுத்தது- (விறல்- வெற்றி,) துனிகொள்ளலெல்லாநீ - எனஈறு கெட்டது, (துனி- கோபம், எல்லாள்தோழி,) நமர்காள்-எமர்காள்-என-ஈற்றயல்நீண்டன, குழையாள்-குழையாய்-வாயிலாள்-வாயிலாய்-என இறுதிளகர ஒற்றுயகரஒற்றாயின, தலைமீதுகொள்வமடிகேள்- எனஈற்றுக்கு அயல்நின்றஅகரம்ஏகாரமாயிற்று, (அடிகள் ஆசாரியன்) பிறவுமன்ன. (௫௧)

ரவ்வீற்றுயர்பெயர்க்களபெழவீற்றய, லகரமீயாதலாண்டை
யா, வீயாதல் தன்னொடேயுறலீற்றே, மிக்கயல்யாக்கெட்டதனை
உனீட,லீற்றினிருமலிவைடமீண்டுருபே. *

இது, ரகரவீற்று உயர்திணைப்பெயர்க்குப்பொதுவிதிமேற்சிறப்புவிதி கூறுகின்றது. (இ-ள்,) ரவ்வீற்றுயர் பெயர்க்கு- சி

ல்- ரகரஈற்று உயர்திணைப்பெயர்க்கு, அளபெழல்- (இயல்புமே யுமன்றி) அளபெடுத்துவருதலும், ஈற்றயலகரமிகையாதல் - ஈற்றுக்கு அயல்நின்ற அகரம் - இகரமாதலும் ஈகாரமாதலும், ஆண்டையா வீயாதல் - அந்தஈற்றயல் ஆகாரம் ஈகாரமாதலும், அதனோடேயுறல்- அந்தஆகாரம் ஈகாரமாதலுடனே ஏகாரமிகுதலும், ஈற்றேமிக்கயல் யாக்கெட்டதனயலிடல்- ஈற்றிலேகாரமிகுந்து அதற்கு அயல்நின்றயாக்கெட்டு அதனயல்நின்றஇகரம்ஈகாரமாதலும், ஈற்றினீருறல்- ஈற்றிலேஈர்வந்து அடைதலும், இவையுமீண்டுருபு-ஆகியஇவையும்இங்குவிளியுருபாம், எ - று.

[வ-று,] சிறாஅர்-மாகாஅர்- என அளபெடுத்தன, நில்லன்மின்தெவ்விர்- எனத்தெவ்வர்என்னும் ஈற்றயல்அகரம் இகரமாயிற்று (தெவ்வர்பகைவர்,) வணிகிர்- வேற்றீர் - என அகரம் ஈகாரமாயின, சான்றீர்- மடவீர்-என அந்த இடத்து ஆகாரம் ஈகாரமாயின, பல்சான்றீரோபல்சான்றீரோ- கணிகீரோ- எனஅவ்விடத்து ஆகாரம் ஈகாரமாய் ஏகாரம்மிக்கன, நம்பியார -தோழியார்- என்பன, நம்பீரோ- தோழீரோ - எனஈற்றில் ஏகாரம்மிகுந்து அயல்யாக்கெட்டு அதன் அயல் இகரம் ஈகாரமாயின, எமரீர்-தமரீர் - என ஈற்றில் ஈர்வந்தன, ஈண்டென்றமையாலே-கடலாரோ-கடலீரோ- சாத்தியாரோ- சாத்தியீரோ- என அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களைச்சிறப்பித்துரகர ஈற்று உயர்திணைப் பெயர்போலக்கூறியவழியும் இந்த உருபேற்றலுங்கொள்க. (௫௨)

லகரவீற்றுயர் பெயர்க்களபயனீட்சியும், யகரவீற்றிற்களபுமாமுருபே. *

இது, லகரயகர ஈற்றுஉயர்திணைப்பெயர்க்குப்பொதுவிதிமேற்சிறப்புவிதியுணர்த்திற்று. (இ-ள்,) சில - லகரஈற்று உயர்திணைப்பெயர்களுக்கு அளபெடுத்து வருதலும் ஈற்றுக்கு அயலெழுத்துநீண்டுவருதலும், சில-யகரஈற்று உயர்திணைப் பெயர்க்கு அளபெடுத்துவருதலும் உருபாம், எ-று.

உயர்பெயரென்பதை-யகரவீற்றிலும்,உம்மையை-உயர்பெயர்க்களபென்பதிலுங்கூட்டுக. [வ-று,] வலம்புரித்தடக்கையோஅல்நின்னிறம், எம்-தோன்றல்-எனு-தோன்றால்-எம-சேஎய்-எனவும்வரும்- (சேய்-முருகன்,) (௫௩)

னவ்விற்றுயர்திணை யல்லிருபெயர்க்கண், ணிறுதியழிவதனோ டயனீட்சி. *

இது, னகரஈற்று அஃறிணைப்பெயர்க்கும் பொதுப்பெய

க்கும்பொதுவிதிமேற்சிறப்புவிதிகூறுகின்றது. (இ-ள்,) சில-ன
காரஈற்று உயர்திணைப்பெயரல்லாத அஃறிணைப்பெயர் பொதுப்
பெயர்களில் இறுதிகெடுதலும் அதனோடு ஈற்றுக்கு அயலெழுத்
து நீண்டுவருதலும்விளியுருபாம், எ-று.

இதனுள்-விளியுருபெனப்படும்- இறுதியழிவும்- அயனீட்சி
யம்- என்னும் இறந்ததுதழுவிய எச்சவும்மைகளுங்குறைந்துநி
ன்றன- ஆதலால் இறுதியழிவும் அதனோடு அயனீட்சியும் உருபா
மெனமுடித்துக்கொள்க. [வ-று,] அலவ - இகல - கழும -எம்-
அலவா- இகலா- கழுமா எ-ம்- (அலவன்- நண்டு, இகலன்- நரி, க
ழுமன்- கருடன்,) இது அஃறிணை, சாத்த - கொற்ற- எ-ம் - சாத்
தா- கொற்றா-எ-ம்- வரும்- இதுபொதுப்பெயர். (௫௪)

லளவீற்றஃறிணைப்பெயர்பொதுப்பெயர்க்கண், ணீற்றயனீட்
சியுமுருபாகும்மே. *

இது, லகரளகர ஈற்றுக்களையுடைய அந்தஇரண்டுபெயர்க்
குஞ்சிறப்புவிதிகூறுகின்றது. (இ-ள்,) (பொதுவிதியன்றி) சில-ல
கரளகர ஈற்றுஅஃறிணைப்பெயரிடத்தும் பொதுப்பெயரிடத்து
ம் ஈற்றுக்கு அயலெழுத்து நீண்டுவருதலும்விளியுருபாம்-எ-று.

[வ-று,] முயல்-முயால்- ஆரல்-ஆரால்- கிளிகள்-கிளிகாள் -
மரங்கள்- மரங்காள்- இவைஅஃறிணை(ஆரல்-ஓர்மீன்,) தாங்கால்-
மக்காள்- இவைபொதுப்பெயர்- தாங்கல்- எது- யானையையும் -
சோம்பலுடையவன்- உடையவள்- உடையது- என்னுமுக்கூற்று
ஒருமைகளையும்- மக்கள்- எது - இருதிணை இருகூற்றுப்பன்மை
யையுங்குறித்தலிற்பொதுப்பெயரெனக்காண்க. (௫௫)

அண்மையினியல்புமீறழிவுஞ்சேய்மையி, னளவும்புலம்பினோ
வுமாகும். *

இது, மேலே சொல்லப்பட்ட விளியுருபுகளுக்குப் புறன
டைபுணர்த்திற்று, (இ-ள்,)அண்மையினியல்பும் - (மேற்சொல்வி
ளிஉருபுகளுள்) இயல்புகளும் ஈறுகெடுதல்களும்சமீபத்திலு
ம், சேய்மையினளவும் - அளபுகள் தூரத்திலும், புலம்பினோவுமா
கும்- ஓகாரம்புலம்புதலிலும்வரும், எ-று.

எனவேமற்றவிளியுருபுகள் சமீபம்-தூரம்- புலம்பல் என்ற
இந்தமூன்றிடத்துங் கலந்துவருமென்பதாயிற்று - உதாரணமே
லேகாட்டப்பட்டனவற்றுட்காண்க. இரண்டும்ஒன்றும்ஒன்றுமா
மெனமுடித்துக்கொள்க. (௯) அண்மைச்சொல்லேயியற்கையா
கும்-எம்-அண்மைச்சொல்லிற்ககரமாகும்- எம்- உடவெனப்பட்

டவெல்லாப்பெயரு, மளபிறந்தனவேவிளிக்குங்காலைச், சேய்மை யினிசைக்கும் வழக்கத்தான - என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங்காண்க. (௩௯)

நுவ்வொடுவிகுச்சுட்டுற்றனளர, வைத்துத்தா ந்தானின்னன விளியா. *

இது, இ உ ஊவோடென்னுஞ்சூத்திரத்திற்குப்புறனடை கூறுகின்றது. (இ-ள்,) நுவ்வொடுவிகுச்சுட்டுற்ற- (மேல்விளியுரு பேற்குமென்றவற்றுள்) நுவ்வுடனே மூன்றாமுதல்விகுவெழுத்தையும்- மூன்றுசுட்டெழுத்தையும்- வரன்முறையாகவே பொருந்திய, னளரவைது- ன-ள-ர- என்னும் மூன்றுஈற்று உயர்திணைப்பெயர்களும்- வை- து-என்னும் இரண்டீற்று அஃறிணைப்பெயர்களும், தாந்தான்- தாம்-தான், என்னும்பொதுப்பெயர்களும், இன்னன - இவைபோல்வனவும், விளியா - விளியுருபுகொள்ளாவாம்,எ-று.

இந்தமூவகைப் பெயர்களின் இடையெழுத்தைச்சொல்லாததினாலே - வரன்முறையெனப்பட்டது, நுவ்வைஒடுக்கொடுத்துப்பிரித்ததினாலே அதனோடு - வை-து - பொருந்தாதெனக்காண்க,தாம்-என்பதையிங்குங்கூறியது-தொடர்புதோன்றற்கு.[வறு,] நுமன்- ள்-ர்-எனவும், எவன்- ள்-ர்-வை-து-எம், அவன்-இவன்-உவன்-ள-ர்-வை-து எம்,தாம்-தான், எனவும்வரும்,இன்னனவென்றதினால்- பிறன்-ள்-ர்- மற்றையான்- ள்- ர்- அன்னன்- ள்-ர்- ன் னையோன் - ள்-ர் - வை-து - என்றாற்போல்வனவும் விளியேலாவெனக்கொள்க. (கூ) தானென்பெயருஞ் சுட்டுமுதற் பெயரும் யானென்பெயரும் வினவின்பெயரு மன்றியனைத்தும் விளிகோளிலவே- எம்-தநுஎனவைமுலாகித்,தன்மைகுறித்தனளர வெனிறுதியுமன்னபிறவும்பெயர்நிலைவரினே, யின்மைவேண்டும் விளியொடுகொளலே - எம் - ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங்காண்க. (௩௭)

முதலையையுறிற் சினையைக்கண்ணுறு, மதுமுதற்காகிற் சினைக்கையாகும். *

இது, முதல்சினை யிரண்டிடத்தும் ஐயுருபுவாராதெனடப்புறனடைகூறுகின்றது. (இ-ள்,) மு-றின் - முதற்பொருளை ஐயுருபுபொருந்தின், சி-றும் - சினைப்பொருளைக் கண்ணுருபுபொருந்தும், அது-கின் - அதுஉருபுமுதலுக்குவரின், சினை-கும்- சினைப்பொருளுக்கு ஐயுருபுவரும், எ-று.

[வ-று,] யானையைக்காலின்கண்வெட்டினான் - யானையது காலைவெட்டினான் - எ-ம் - கையைவிரலின்கட்பிடித்தான் - கையி னது விரலைப்பிடித்தான் - எனவும்வரும் - இவ்வியிரட்டுறமொழித லென்னும் உத்தியால் - அது என்பதைச்சுட்டாக்கி - அர்த்தக்கண் ணுருபு முதற்பொருளுக்காயின், எனவும் - பொருளுரைத்துக் கொள்க. [உ-ம்,] யானையின்கட்காலைவெட்டினான் - கையின்க ண்விரலைப்பற்றினான், எனக்கொள்க. இதனுள் - விரலைச்சினைப் பொருளாகக்குறித்தபோது - கை - முதற்பொருளாய்நின்றது. ஆதலால்முதல்சினை யிரண்டிடத்தும் ஐயுருபு வாராதென்பது இ வர்கு(

இனிஆசிரியர்தொல்காப்பியனார் (சு) முதற்சினைக்கிளவிக்கதுவென்வேற் றுமை - முதற்கண்வரிற்சினைக்கைவருமே எனக்கூறி - இதையுருபுமயக்கமெ னவும் (ரு) முதன்முன்னைவரிற் கண்ணென்வேற்றுமை - சினைமுன்வருதலென்னி தென்ப - எனக்கூறியிதைப்பொருள்மயக்கமெனவும்முதல்சினையிரண்டிடத்து ம் ஐயுருபுவருமெனவுங்கொண்டது அவர்கருத்தென்பதை பல்வுரையினுமு ணர்க. இனியுரையிற்கோடலென்னுமுத்தியால் - உருபுமயக்கம் - பொருள்மயக் கமெனமயக்கமிருவகைப்படுமெனவும் - அவற்றுள் - உருபுமயக்கமாவது ஒரு ருபின்பொருளொடுதன்பொருள்விடுத்துக்கலமயங்குதலெனவும் - அதற்குகா ரணம் - மணலினின்ற என்னும்ஏழாம்வேற்றுமைப்பொருளிலே - மணலின்நின்ற எனநான்காவதுதன்பொருளைவிட்டுமயங்கிற்றெனவும், பொருள்மயக்கமாவது பிறிதொன்றன் பொருளொடுதன்பொருள்விடாது கலமயங்குதலெனவும் - அ தற்குகாரணம் - கோட்டைக்குறைத்தான் எனவரும் இரண்டாவதன்பொருளி லே - கோட்டின்கட்குறைத்தான் - எனஏழாவது - தன்பொருளைவிடாதுமயங்கி ற்றெனவும், இந்தஇருவகைமயக்கங்களிலே - உருபேற்றசொல்லும் உருபு தோன் றியசொல்லுந்தம்முள்இயைந்துநிற்பது - பொருள்மயக்கமெனவும் - இயையா துநிற்பது - உருபுமயக்கமெனவுங்கொள்க. இங்கேயுருபுமயக்கம் - பொருளின் மயக்கங்களின் - இலக்கணந் தெரிதற்குவேண்டிய அளவேசொல்லப்பட்டன. அவற்றையெல்லாம்விரித்து - யாதனுருபிற் கூறிற்றாயினுமென்னுஞ் சூத்திரத் தாற்காட்டப்படுமங்கே கண்டுகொள்க. (இ-அ)

முதலிவைசினையிவையெனவேறுளவில, வுரைப்போர்குறிப்பி னவற்றேபிண்டமும். *

இது, ஐயுருபுமுதல் சினையிரண்டிடத்தும் வாராமைக்குக் காரணமும் மேலைச்சூத்திரப்பொருளோடு ஐப்பொருளைப்பிண் டப்பொருளுக்கும் ஏற்பித்தலுமுணர்த்திற்று. (இ-ள்,) முத-வி ல- (கடங்கள்இவை, படங்கள்இவை என்றாற்போல) முதற்பொ ருள்கள்இவை- சினைப்பொருள்கள்இவை - என இரண்டாகவேறு வேறுஉள்ளன அல்லவாம், உரை-பின - ஒருபொருளையே யிரண் டாகப்பகுத்துச்சொல்லுவோர் குறிப்பினனவேயாம், அற்றேபி

ண்டமும்-ப்பிண்டப்பொருளும்அத்தன்மைத்தேயாம், எ-று.

யானையைக்குறித்தபோது யானையுண்டாகிக்- கால் - கை- கொம்பு- முதலியன வேறேயில்லையாகியும், கால்-கை-கொம்பு-முதலியற்வறைக்குறித்தபோது - அவையுண்டாகி - யானைவேறே யில்லையாகியும் நிற்கும் ஒருபொருளின் பிரிவுகளாதலால் இவ்வாறுகூறப்பட்டன, வேறுளவில வென்றதினால் - யானையைக்காலை வெட்டினான் - என ஐயுருபு முதல் சினையி ரண்டிடத்தும் வாராமைக்குக் காரணங்கூறினானென்பதாம், இனி ஒருபொருளினிடத்து முதலைக்குறித்துச் சினையெனவுஞ் சினையைக்குறித்து முதலெனவுங்கூறுதல்போலப்பிண்டித்த பொருள்களைக் குறித்தால் அல்லதுபிண்டமென்பதுகூடாமையால் - பிண்டமும் அற்றே எனற அளவிலே பிண்டித்த பொருள்களும் அனைய என்பதுதானேவந்தது இயையும், (அவைவருமாறு) நெல்லைப் பொலியின்கண்வாரினான்- நெல்லினதுபொலியைவாரினான் - எனக்காண்க. நெல்லைப்பொலியைவாரினான் - எனஇரண்டிடத்தும்ஐயுருபுவாராவாம்,என்னெனின்- பிண்டப்பொருளாகியபொலிக்குப்பையும்பிண்டித்தபொருளாகியநெல்லும்-முதல்சினைகளைப் போலே வேறுவேறில்லாததினாலென்க. உள-வில-எம்- அவைகுறிப்பின - எம்-பிண்டமும் அற்று - எம்-மென்றுமுடிபாக்முடிந்தது இச்சூத்திரம்.

இனி இச்சூத்திரத்தை - முதலிவை சினையிவை யெனவேறுளவில - என்றேமுடிப்பின் - முதலுஞ்சினையு மொருபொருளாதலால் அந்த ஒருபொருளில் இரண்டு உருபுவாராமைக்குக்காரணமெனப்படும், மீட்டும்- உரைப்போர் குறிப்பின என்றமையால- உரைப்போர்குறிப்பின்வழி அதுதானேயிருபொருளென்பதாயிற்று- ஆகவே ஒருபொருளில் இரண்டு உருபுவாராதென்பதுகருத்தன்று- வாராதென்பதுகருத்தாயின்- யானையைக்கோட்டைக்குறைத்தான்- மணியைநிறத்தைக்கெடுத்தான் - பசுவைப்பாலைக்கறந்தான் - எனவரும்- செய்யுள்வழக்கிற்கும், அவனைக்கண்ணைக்குத்திக்காட்டிலேவிட்டான்- அவனைக்கையைப்பற்றியிழுத்துவிட்டான் - அவனைப்பல்லையுடைத்து விட்டான் - அவனையிடுப்பையொடித்துப் போட்டான் - எனவரும் உலகவழக்கிற்கும் இலக்கணம் இன்றாய்முடிவதுமன்றி- முன்னோர் நூலொடு முரணுதலால் மாறுகொளக்கூறலென்னுங்குற்றமுமாம் ஆதலால்அதுகருத்தன்று - இன்னும் - அவனைக்குத்தினான்- இழுத்தான்- உடைத்தான்- ஒடித்தான் - எனின் - குறித்தபொருள் விளங்காததினாலே- கண்ணை- கையைப்பற்றி - பல்லை - இடுப்பை - என்பன இடைப்பிறவரலாய்வரவேண்டியேநிற்றலாலும், இரண்டாம்வேற்றுமைப்பொருளில் கருவினைதவிருவகைப்படுமெனக் கூறுதலாலும், வடநூலாரும் இவ்வாறுவருதலை த்விர்ப்ரயோகமெனப் பெயரிட்டுவழங்குதலாலும், முதல்சினைகளையிருபொருளாகக்குறித்தபோது இரண்டிடத்தும் ஐயுருபுவருமென்பதே ஆசிரியர் தொல்காப்பியனார்க்குங்கருத்தென்பதை (சூத்) முதலுஞ்சினையும் பொருள்வேறுபடாஅ துவலுங்காலைச்சொற்குறிப்பினவே - பிண்டப்பெயருமாயியற்றிரியா - பிண்டிப்

ன்மருங்கின் மரீஇயமரபே- எனக்கூறியதினாலும் அவ்வாயாலும், முதலாமுறு
சினையாயுஞ் சினையாயதுமுதலாயும் மாறிவருதலும் அங்ஙனமாறி வருங்கால்-
முதல்சினை ஒருபொருளாயினும் சொல்லுவான் குறிப்பின் வழியிருபொருளா
தலும்- அவ்விருபொருளில் ஐயுருபு இனைந்துவர உதாரணங் காட்டலாலும், ஒ
ருபொருளையே இருபொருளாகவைத்துச் சொல்லுதல் இலக்கணமன்றாயினும்
அது தொன்றுதொட்ட நெறியாய்வரும் வழக்கு உண்மையால் மருவுமுடியெ
ன்றுசொல்லவந்தவர் - பண்டியன் மருங்கின் மரீஇய மரபென்றதினாலுங் காண்
க. இன்னுங் கோட்டை நுனியைக் குறைத்தான் - எனவரின் - கோட்டது நுனி
யைக்குறைத்தான்- எனமுதலின்பால ஐயுருபை அதுவுருபாகத்திரிக்கப்படுமெ
னின்- யானையது கோடெனா - யானைக்குக்கோடு உறுப்பத்தற்கிழமையாவதன்
றி- கோட்டதுநுனி - என- உறுப்புக்கு உறுப்பத்தற்கிழமை யென்பதுங்கூடா
தென்வுணர்க. பண்டியன் மருங்கின் மரீஇ யமரபென்றது - பிண்டத்திற்சினி
ன்- பிண்டப்பெயருமாயியற்றியா - எம் - அற்றேபிண்டமும் - எம்- மாட்டெறி
தலால் இரண்டிற்கும் இலக்கணமொன்றெனக. (௪௯)

யாதனுருபிற் கூறிற்றாயினும், பொருள்சென்மருங்கின் வேற்
றுமைசாரும். *

இது, உருபுமயக்கமுணர்த்திற்று. (இ-ள்,) யா- னும்-எந்த
வேற்றுமைப்பொருள் எந்தவேற்றுமையுருபினாலே சொல்லப்ப
ட்டதாயினும்,பொரு-ரும்-(அந்தஉருபுசென்றவழிப்பொருள்சா
ராது) பொருள்சென்றவழியேயப்பொருளினுருபு சாரும் எ- று.
எனவேபொருளுக்கு இயையாதுமயங்கிவந்தவுருபைப்பொ
ருளுக்கு இயைந்தவுருபாகத்திரித்துக் கொள்கவென்பதாயிற்று
[வ-று,] நாகுவேயொடுநக்கு வீங்குதோள் எனின் - நாகுவேய்
செயப்படுபொருளாக நிற்றலால்- ஒடுவை - ஐயுருபாகத் திரித்துக்
கொள்க- (நாகு- இளமை, நகல்- நகைத்தல்,)பணைத்தோள்
ணின்மணல்இடப்பொருளாய்நிற்றலால- குவ்வை-கண்ணுருபா
க்குக், செய்யவடௌவையைக்காட்டிவிடும்- எனின்- தௌவைவீ
ற்றுக்கோடற்பொருளாய்நிற்றலால் ஐயுருபைக்குவ்வுருபாக்குக-
இவைபோல்வனவெல்லாம் உருபுமயக்கம்- பிறவுமன்ன.

இனியுரையிற்கோடலென்னும் உத்தியால் ஒ்ரோருருபின் பொருட்கே
அவ்வுருபுபோலவேறு உருபுகள்வருமெனவும் அவைபொருண்மயக்க மெனவு
ங்கொள்க- (௬) ஒன்றுமூன்றுநான்காறனுருபொடு - வருமேவினைமுதலெ
னவகுத்தனரே. [உ-ம்,]அவர்செய்த்தார்- எ-ம்- அவராற்செய்யத்தகுமக்காரி
யம்-எ-ம்- அவர்க்குச்செய்யத்தகுமக்காரியம்- எ-ம் -அவரதுவரவு-எனவுமுறை
யேகாண்க.(௬) எல்லாஉருபொடுஞ்செயப்படுபொருளெழும்[உ- ம்,] சோறு
அடப்பட்டது- சோற்றையட்டான்- அரிசியாற்சோறாக்கினான் அவட்குக் கொ
ண்டுமிவ்வணிகலம்- பழியினஞ்சும்- காலநுகுற்றங்கூறினான்- தாணின்கட்சார்ந்
தான்- எனமுறையேகாண்க, (௬) ஒன்றுமூன்றுநான்கைந்தாறுருபொடு- கரு
விவருமெனக்கருதினர்புலவர்- [உ-ம்,] கண்காணும் - கண்ணாற்காண்பன்- கண்
ணிற்குக்காணலாம்- கண்ணிற்காணலாம் - கண்ணினதுகாட்சி - எனமுறையே

ணாண்க. (ரு) எல்லாவுருபொடுங் கொள்வோனெழுமே. [உ-ம்,] இரப்பவரெ
ன்பெறினுங்கொள்வர் - செய்யவடௌவையைக் காட்டிவிடும் - தேவராம்பலி
நேர்ந்தான் - தேவர்க்குப்பலிநேர்ந்தான் - தேவரினன்புசெய்தான் - தேவரது
பலி - தேவர்கணன்புசெய்தான் - எனமுறையேகாண்க. (ரு) இரண்டுநான்கை
த்தொடுமேழுமேதிக்கும். [உ-ம்,] மதுரையைநீங்கினன் - மதுரைக்குவடக்கு
மாயபுரம் - மதுரையின்வடக்குமாயபுரம் - எனமுறையேகாண்க. (ரு) நான்கை
த்தாறேற்றொடுகுறைநடக்கும். [உ-ம்,] சாத்தனுக்குமகன் - மரத்தினிங்கின
கொம்பு - சாத்தனதுவகை, உயிரின்கண் ஊணர்வு - எனமுறையேகாண்க. (ரு)
ஒன்றிரண்டுநான்கேழொடிடமெழும். [உ-ம்,] தூண்போதிகைதொட்டது -
தூணைச்சார்ந்தான், இன்றைக்குநாளைக்கு - காலைக்குமாலைக்கு - வீட்டிற்குவரு
வான், தூணின்கட்சார்ந்தான், என்முறையேகாண்க. (௩௱௰)

ஐயான் குச்செய்யுட் கவ்வுமாகு, மாகா வஃறிணைக் கான
ல்லாதன. *

இது, சிலவேற்றுமையுருபுகள் செய்யுளிடத்துத் - திரிந்துவரினும் அமையுமெனப் புறனடைகூறுகின்றது. (இ-ள்,) ஐ - யான் - கு - இந்தமூன்றுஉருபுகளும், செய்யுளிடத்து, அவ்வுமாகும் - அகரமாகத்திரிந்துவரவும்பெறும், அஃறிணையிடத்து, ஆனல்லாதனவாகா - ஆன்உருபு ஒன்றுமே திரியும்மற்ற ஐயுருபுங் குவ்வுருபுந்திரியாவாம், எ-று.

எனவே உயர்திணையிலேமூன்று உருபுந்திரியு மென்றதாயிற்று.

[வ-று,] காவலோனை என்பது - காவலோனக்களிறஞ்சுமே-எ-ம்-புலவரான் - என்பது - புலவரான எனவும் - ஆசிரியற்கு - என்பது - கடிநிலையின்றேயாசிரியற்க - எனவும் - உயர்திணையிலே மூன்றுஉருபுகளுந்திரிந்தன, புள்ளினான் என்பது - புள்ளினான என ஆனுருபுஒன்றும் அஃறிணையிலே திரிந்துவந்தது - அவ்வுமாமென்னும் இழிவுசிறப்பு உம்மையால் இப்படித்திரிதல் நியமம் அன்றென்க - (நியமம் - நியதி - நிச்சயம்என்பன ஒருபொருள்) திரியுமென்றதினாலே - ஆனுங்குவ்வுந்திரிந்தபோது - முன்னின்ற ஆனுங்குவ்வுஞ்சாரியையெனப்படும் - அல்லர்விடின் - ஐயுருபுஅகரமாகத்திரியவும்ஆனுருபுங்குவ்வுருபும் அகரத்தினைச்சார்ந்துநிற்கவும்பெறுமெனப்பொருள்கொள்க. (௩௱௰௧)

எல்லையினினு மதுவும்பெயர் கொளு, மல்ல வினைகொளு நான்
கேழிருமையும், புல்லும்பெரும்பாலுமென்மனார்புலவர். *

இது, எட்டுவேற்றுமைகளுக்கு முடிக்குஞ்சொல் லுணர்த்துகின்றது. (இ-ள்,) எல்லைப்பொருளிலேவருகின்ற இன்னுருபும், ஆறும்வேற்றுமையுருபும், பெயரைக்கொண்டுமுடியும், அல்லவினைகொளும் - அல்லாத எழுவாய்முதலிய எல்லாவுருபுகளும்

வினையைக்கொண்டுமுடியும், நான்கேழ்-புலவர்- நான்காம்வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் வினையையும் வினையொடுபொருந்தும்பெயரையுங்கொண்டுமுடியும்பெரும்பாலுமென்றுசொல்லுவர் புலவர், எ-று.

பெரும்பாலுமென்றதனால் - வினைகொள்தற்கு உரியன சிறுபான்மைதொழிற்பெயரையும்வினையாலணையும்பெயரையுங்கொண்டுமுடிதலும், எழுவாய்வேற்றுமைவினைகொண்டுமுடிதலேயன்றிச் சிறுபான்மைபெயரையும்வினாவையுங்கொண்டு முடிதலுங்கொள்க. [வ-று,] ஒருவூரின்கிழக்கு- சாத்தனதுகை- என-எல்லையின்னும் அதுவும் பெயர்கொண்டன, சாத்தன்வந்தான் - சாத்தன்நல்லன், குடத்தைவனைந்தான் - குடத்தையுடையன், வாளால்வெட்டினான் - வாளால்வலியன், சாத்தனுக்குக்கொடுத்தான் - சாத்தனுக்குநல்லன், நோயின்நீங்கினான் - நோயிற்கொடியன், அவையின் கணிருந்தான் - அவையின்கட்பெரியன், கொற்றுகொள் - கொற்றுவலியை, என- அல்லனவெல்லாம் வினைகொண்டன, பிணிக்குமருந்து- மணியின்கண்ணொளி - என நான்காம் வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையும் வினையேயன்றிப் பெயருங்கொண்டன, இப்பெயர்கள் இன்னுருபும் அது உருபுங்கொண்ட பெயர்களைப்போலாகாமல் பிணிக்குக்கொடுக்கும்மருந்து - மணியின்கண்ணிருக்குமொளி - என வினைவேண்டிநிற்றலால்- வினையொடுபொருந்தும்பெயர்களென்று சொல்லப்பட்டன, இங்ஙனமாதலால் இவற்றிற்கும் வினைப்பயனிலையொன்றுமே சிறந்ததென்பதாயிற்று.

இனி வினைகொளுமெனப் பொதுப்படக் கூறினதினாலே ஒழிந்தவினைவிகற்பங்களெல்லாம் வருவித்துமுடித்துக்கொள்க. [உ-ம்,] சாத்தன்வந்த- வந்து- வாராத வாராது-வந்தவன் வருதல்- எம்-குடத்தைவனைந்த வனைந்து- வனையாத- வனையாது- வனைந்தவன்- வனைதல்- எம்- வினைவிகற்பங்களுந் தொழிற்பெயரும்வினையாலணையும் பெயருங் கொண்டன, ஒழிந்தவுருபுகளோடு மிவ்வாறேயொட்டுக, சாத்தன்அவன் - சாத்தன்யாவன் - சாத்தன்யார் - எனவெழுவாய் வேற்றுமை சிறுபான்மை சுட்டுப்பெயரும்- வினாப்பெயரும் - வினாவினைக்குறிப்புங்கொண்டது, இங்ஙனஞ் சுட்டவும் வினவவும் பட்டுநிற்றலன்றி - இவன் இத்தொழில்செய்தான் எனவாராதநிலை - இந்தஎழுவாய்வேற்றுமை வினைகொண்டுமுடிதலேசிறந்ததென்று சொல்லவந்தவர் - மற்றஉருபுகளோடுசேர்த்துப்பொதுப்பட அல்லவினைகொளுமெனவரையறுத்தும், சுட்டவும் வினாவும் பட்டுநிற்றலால் பெயரும்வினாவுங்கொண்டுமுடிதலைப்பெரும்பாலுமென்றதனால் தழுவவுங் கூறினாரெனக்காண்க. கொளும்புல்லுமென்மனார்புலவ ரெனமுற்றும்பயனிலையுமாகமுடிந்தது. (கூஉ)

முதலாவதுபெயரியல்முற்றிற்று.

# வினையியல்.

செய்பவன்கருவி நிலஞ்செயல்காலஞ், செய்பொருளாறுந் தருவதுவினையே. ✻

இது, பெயர்வினையென இரண்டாகுமென்ன நிறுத்தமுறையே வினையிலக்கண முணர்த்தத்தொடங்கி- தெரிநிலைவினையின் பொதுவிலக்கண முணர்த்துகின்றது. (இ-ள்,) செய்பவன் - கருத்தாவும், கருவி- காரணமும், இடமும், தொழிலும், காலமும், செயப்படுபொருளும், ஆறுந்தருவதுவினை- ஆகிய ஆறையுந்தருவது தெரிநிலைவினைச்சொல்லாம், எ-று.

வினைச்சொல்லை- வினையென்றது ஆகுபெயர், வருஞ்சூத்திரத்தாற் குறிப்புவினையெனக்கூறுதலால் - இது தெரிநிலை வினையெனக்கொள்க, நடவாமுதலிய வெல்லாந்தழுவுதற்குப் பொதுமையிற்செயலென்றார்- செய்பவன் என- ஒருபால்மேல்வைத்தோதினாராயினும்- ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தே- என்பதனாலெல்லாபாலுங்கொள்க. [வ-று,] வனைந்தானெனின்- குயவனாகிய இயற்றுதற்கருத்தாவும்- (செய்பவனும்) மண்ணாகிய முதற்காரணமும்-தண்டசக்கரமுதலிய துணைக்காரணங்களும்- (கருவியும்) வனையும்இடமும் - (நிலமும்) வனையுஞ்செயலும் - இறந்தகாலமும்-குடமுதலியசெயப்படுபொருளும்- தோன்றுதல்காண்க. அரசன்ஆலயஞ்செய்தான்- என்பதில் - ஏவுதற்கருத்தா- பிறவும் இவ்வாறுகாண்க. இனிமுற்றும்மையொரோவழியெச்சமுமாகுமென்பதினால் - ஆறுந்தருவதுவினையென்பதற்குச் சிலகுறையத்தருவதும் வினையெனப் பொருளுரைத்துக்கொள்க. [உ-ம்,] கொடியாடிற்று- எனின்- செயப்படுபொருள்குறைந்தது - கொடிதுஞ்சும் - எனின் - செயப்படுபொருளுங்கருவியுங்குறைந்தனவெனக்காண்க. இன்னும் - ஆறும் என்றமுற்றும்மையை உயர்வு சிறப்பும்மையாக்கி- இழிந்தனவுஞ் சிலவுளவெனப்பொருளுரைத்துக்கொள்க. அவை- இன்னதற்கு - என்பதும்- இதுபயன்என்பதும்- [உ-ம்,] குடத்தைத்தனக்குவனைந்தான்- பிறர்க்குவனைந்தான்- எ-ம்- (வனைதல்- செய்தல்) தருமமுதலியபயன்கருதிவனைந்தான்- எனவும்வரும்- இவையிரண்டுங்கருவியுள் அடங்கப்பெறுமாதலால் இழிந்தனவாயின,

முற்றுவினைகளுள்-பகுதியாற்செயலும், விகுதியாற்கருத்தாவும், இடைநிலை முதலியவற்றாற்காலமும், பெயரெச்சவினையெச்சங்களில் செயலுங்காலமுந்தோன்றுமாதலால் முற்றுச்சொல்லால் மூன்றும் எச்சச்சொல்லால் இரண்டும் என்றுமல் ஆறுந்தருவதுவினையென்றது- என்னெனின்- இந்தஆறுங்காரணமாகக்கூடுங்கூட்டத்தில செயலென்னும் முதற்காரணத்தில் நின்றும் ஓர்வினையாகியகாரியந்தோன்றும் ஆதலால் அந்தஆறுகாரணத்தையுந் தருங்காரியமாகியவினையின்புடைபெயர்ச்சியை- ஒருமைப்பாடுபற்றிஅதன்சொல்மேலேற்றப்பட்டதாதலால செய்பவன் முதலிய ஆறினுள்ளே முற்றுச்சொல்லில மூன்றும் எச்சசொல்லில இரண்டும் வெளிப்படையாகவும் மற்றைய குறிப்பாகவுந்தோன்றுமென்க. ஆயின்- காரணத்தைக்காரியந்தருமோ எனின் - தராது- புகைதன் ஆதியாகிய அனலைக்காட்டுதல் போலக்காட்டுமென்க. இவற்றுள்- செயலென்றது காரணமாகியசெய் என்றவினையடியெனவுங் காரியமாகிய வினையடி- நடவாமுதலிய வெனவுங்காண்க. இனி - ஆசிரியர் தொல்காப்பியனார்- (சூ) வினையெனப்படுவது வேற்றுமைகொள்ளாது நினையுங்காலைக்காலமொடுதோன்றும் - எனக்கூறியதுட்வினையென்பது உண்- தின்-கரு- செய் - என் னுந்தொடக்கத்துமுதனிலையெனவும்- உணல் - தினல் கருமை - செம்மை- என்றாற்போல்வன- அம்முதனிலைகளாற்பிறந்த தொழிற்பெயரெனவும்- உண்டான் - தின்றான்- கரியன் - செய்யன் - என்றாற்போல்வன - அம்முதனிலைகளாற்பிறந்தவினைச்சொல்லெனவும்- உரைகாரர் எடுத்துக்காட்டியதும். (சூத்) காலமுறிதொழில் கருத்தனோடியையப்பால்வகை தோறும்படுமொழிவேறே. என ஆசிரியரவினையனார் கூறியதும்- உய்த்துணர்ந்துகொள்க. (க)

பொருண்முதலாறினுந்தோற்றிமுன்றறனுள், வினைமுதன்மாத்திரைவிளக்கல்வினைக்குறிப்பே. *

இது, குறிப்புவினையின் பொதுவிலக்கணமுணர்த்திற்று (இ-ள்,) பொருண்முதலாறினுந்தோற்றி- பொருள்- இடம்-காலம்-சினை-குணம்-தொழில்-ஆகியஆறும் முதனிலையாகஅவற்றின்கண்ணேதோன்றி, முன்றறனுள்-மேற்கூறியசெய்பவன்- கருவி நிலம்செயல் காலம் செய்பொருள்- என்றஆறினுள், வினைமுதன் மாத்திரைவிளக்கல்- கருத்தாவொன்றையும்விளக்குவது, வினைக்குறிப்பு- குறிப்புவினைச்சொல்லினிலக்கணமாம், எ-று.

மேலையதிகாரத்திற்பகுபதவுறுப்புக்கூறியபோது - தெரிநிலைவினைக்குமுதனிலைகள்விளங்கிக்கிடந்ததுபோலக்குறிப்புவினைக்குமுதனிலைகள் வகைப்படவிளங்காதன்றலேஇங்கே பொருண்முதலாறினுந்தோற்றியென்றும், இதன்அகத்தும்செய்பவன்முதலிய ஆறுமுண்டென்றுசொல்லவந்தவர் முன்றறனுள் என்றும் அவற்றுள்செய்பவனை இதன்விகுதிவிளக்கும் ஒழிந்தனவற்றைவிளக்குதற்குப்பொருந்திய உறுப்புஇதனகத்தில்லையென்றுசொல்லவந்தவர்-வினைமுதன்மாத்திரையென்றுஞ்சொன்னார்[வ-று,] குழையன்-அகத்தன்- ஆதிரையான்- குறுந்தாளன்-கரியன்-உறுணன்-

னருமறையேபொருளாதியாறும் பகுதியாகவந்தமைகாண்க. மற்ற
ப்பாலிடங்கள்தோறுமொட்டிக்கொள்கபிறவுமன்ன,பகுதி- முத
னிலை- வினையடி- அடிப்பாடு-தாது- என்பனவெல்லாம் ஒருபொ
ருள்,வினைமுதல்-கருத்தா-செய்பவன்- தொழின்முதல்-செய்வது-
என்பனஒருபொருள்.)இவைபெயராய்நில்லாமல்- குழையையுடை
யனாயினான்-அகத்தின்கண்ணிருந்தான்-ஆதிரைநாளிற்பிறந்தான்-
குறுந்தாளையுடையனாயினான் - கரியநிறமாயிருப்பான் - மிகவுமூ
ண்பான்-எனவருதலால்வினைக்குறிப்புச்சொல்லாயின-குழையன்
என்றால்-அக்குழையையுடையவன்வினைமுதல்,இதுவிகுதியால்வி
ளங்கிற்று. குடத்தின்கண்மண்போல இவ்வினையாகியகாரியத்தின்
கண் முதற்காரணமாகியசெயலுண்டெனவும்- காலமில்லாவிட்
டால் அதுவினையாகாமையாலும்- முக்காலங்களுள் ஒன்றிற்குரிய
இடைநிலை யிதற்குவேண்டாமையாலும்- மூன்றுகாலமும் உண்
டெனவும்-வினைமுதல்நிற்க ஓராதாம்வேண்டுதலால் நிலம் உண்
டெனவும்-ஒன்றைவனைந்தான்- ஒன்றால்வனைந்தான் என்றாற்போ
ல-ஒன்றைக்குழையன்- ஒன்றாற்குழையன் எனஇரண்டாவதற்கும்
மூன்றாவதற்குமிதுபயனிலையாகஇயையாததினாலே- இதனைத்து
ச்செயப்படுபொருளுங்கருவியுமில்லையெனவும் ஒன்றையுடையன்
ஒன்றுவுடையன்எனவருதலால்உடையன்என்னுங்குறிப்புமுற்றில்
ஆறுமுண்டெனவும்-உய்த்துணர்க

இனித்தெரிநிலை வினையின்பாற்பட்ட செய்யான் என்னுந் தொடக்கத்துஎதிர்
மறைவினையிலும்- குறிப்பின்பாற்பட்டஇலன்என்னுந்தொடக்கத்து எதிர்மறை
வினையிலும்புடை பெயர்ச் சிவினையில்லையாம்- இங ஙனமாகவும் இவற்றை றவினை
யென்பதும்செய்பவன்முதலிய ஆறுந்தருமென்பதும்முயற்கோடு - ஆகாயப்பூ
என்றாற்போல இன்மையையுண்மை போலவைத்துக் கூறுவதோரிலக்கணை. இ
லக்கணையென்பது இத்தன்மையதெனை மேற்காட்டப்பட்டது, இவைசெய்பவ
ன்முதலிய ஆறுந்தருமென்பது- சிதமின்மை- பனியின்மை யைக் காட்டல்போ
ல இந்தவினையின்மையானது செய்பவன் முதலியவற்றின் இன்மைகளைக்காட்டி
நிற்பதையாம், இதனுள்விளக்கல் என்னுந்தொழிற் பெயரொழுவாயாய் நின்றுவி
னைக்குறிப்பென்னும் பயனிலைகொண்டுமுடிந்தது. (ரு) அதச்சொல்வேற்று
மையுடைமையானுங் - கண்ணென்வேற்றுமைநிலத்தினானு- மொப்பினானும்ப
ண்பினானுமென், றப்பாற்காலங் குறிப்பொடு தோன்றும்-எம்- அன்மையினின்
மையினுண்மையின்வன்மையி-னன்னபிறவுங்குறிட் பொடுகொள்ளு - மென்னகி
ளவியுங்குறிப்பேகாலம்- எம்- பன்மையுமொருமையும்பாலறிவந்த - வன்னமரபி
ற்குறிப்பொடுவருஉங் - காலக்கிளவியு யர்திணைமருங்கின்- மேலைக்கிளவியொடு
வேறுபாடிலவே - எம்- வருமிவையுயர்திணை வினைக்குறிப்பென்றும், இன்றிலவு
டையவென்னுங்கிளவி - மன்றுடைத் தல்லவென்னுங்கிளவியும் - பண்பு கொ
ள்கிளவியுமுளவென்கிளவியும் - பண்பினாகிய சினைமுதற்கிளவி- மொப்பொடுவ
ருஉங்கிலவியொடு தொகைஇ- யப்பாற்பத்துங் குறிப்பொடுகொள்ளும் - எம்-

பன்மையுமொருமையும் பாலறிவந்த - வன்னமரபிற்குறிப்பொடுவருஉங் - காலக்கிளவியஃறிணை மருங்கின் - மேலைக்கிளவியொடுவேறுபாடிலவே - எம் - வருமிவையஃறிணைவினைக் குறிப்பென்றும் - ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க.

(உ)

அவைதாம்- முற்றும்பெயர்வினையெச்சமுமாகி. யொன்றற்குரியவும்பொதுவுமாகும்,

*

இது, மேலேதொகுத்துச் சொன்னவினைச் சொற்களைவகுத்துணர்த்துகின்றது. (இ-ள்,) அவைதாம்- மேலேதெரிநிலை குறிப்பெனத்தொகுத்துச்சொல்லிய வினைச்சொற்கள்தாம், முற்றும் பெயர்வினையெச்சமுமாகி- முற்றுவினைச்சொற்களும் பெயரெச்சவினை வினையெச்சவினைச் சொற்களுமென மூன்றுவகையாகி, ஒன்றற்குரியவும்- திணைபால் இடங்களில்ஒன்றிற்குரியனவும், பொதுவுமாகும்- அவற்றிற்கெல்லாம் பொதுமையில் நிற்பனவுமாம் எ-று.

முக்காலங்களில் ஒன்றற்கு உரியவும்பொதுவு மாந்தன்மைபதவியலுள்ளேகூறினமையால் இங்கே திணைபாலிடங்களினென்றார், உதாரணந்தத்தஞ்சிறப்புச்சூத்திரங்களுட்காண்க.

இனிஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தே- என்பதனால் - இவ்வாறு திணைபால் இடங்காலங்களில் ஒன்றற்குரியவும் பொதுவுமாய் நிற்பன வன்றிப்பிறவழியாலொன்றற்குரியவும் பொதுவுமாய் வருவனவுஞ்சிலவுளவெனக்கொள்க. அவைவருமாறு பிரிவர்- ஆடுவர்- என்றுற்போல்வன- தன்வினைக்கேயுரியன, பிரிப்பர்- ஆட்டுவர்- என்றுற்போல்வன- பிறவினைக்கேயுரியன, தேற்றுவொழுக்கம்- நட்பாடலேற்றுதவர்-எம்-அவனைத்தேற்றிச்கொடுத்தான்-அவனைத்தேற்றிப்பிரித்தான்-எனவும்வரும் தேற்றென்பதும் தொல்காப்பியனெனத்தன் பெயர்தோற்றி- இவன்வெளுத்தான்-எனவரும் இவைபோல்வனவும்தன்வினைபிறவினையிரண்டிற்குப்பொது,உண்பான் உறங்குவான் என்றுற்போல்வனவிதிவினை, உண்ணுன் உறங்கான்என்றுற்போல்வன-மறைவினை- இந்தவிதிவினைமறைவினைகளை-முறையே உடன்பாட்டுவினை எதிர்மறைவினையெனவும்வழங்குவர், செய்யாய் - செய்யீர்- மகனெனல்- மக்கட்பதடியெனல் - அர்ச்சிக்கவல்லார்- மாட்டார்-வல்லார் திறைகொள்வர்- வல்லார்திறைகொடுப்பர்- விசும்பிலார் - காவலார் - அருளார் என்றுற்போல்வன - விதிமறையிரண்டிற்கும் பொதுவாயின, உண்டான்-உண்டசாத்தன் - உண்டுபோனன் என்றுற்போல்வனசெய்வினை, வீடுகட்டினது- அவனேறினது குதிரை - அவனெழுதினது இவ்வெழுத்து - உண்டசோறு என்றுற்போல்வன- செயப்பாட்டுவினை - புலிகொன்றயானை - மீன்விழுங்கினவன்-ஒனரூர்வணங்கினனவன்- அவள்விரும்பினவனிவன் - அறிந்துவந்தான் - தவாஅடிபுனைந்ததலைமையோன் - என்றுற்போல்வனசெய்வினைசெயப்பாட்டுவினை யிரண்டிற்கும்பொது, அவன்நடந்தான்-கால்நடந்தது - அவன்பார்த்தான்-கண்பார்த்தது-காடுபொலிந்தது- படைபொருதிற்று- அவன்பருத்தான் - அருக்கன் உருக்கினன்- என்றுற்போல்வனமுதல்சினையிரண்டிற்குப்பொது, தேடியபொருள்- தேடியவந்தான்- ஓடியபுரவி- ஓடியவிழுந்தான்- கூடியதலைவன்கூடியவந்தான் - என்

றாற்போல்வன - சொல்லொன்றேபெயரெச்சமும் வினையெச்சமுமாயின, யானு
ண்டு - யானுண்டு வந்தேன் - யான்வந்து - யான்வந்துபோனேன் - யான்சென்று -
யான்சென்றுமீண்டேன் - என்றாற்போல்வன சொல்லொன்றேமுற்றுவினையும்வி
னையெச்சமுமாயின - யானுண்டு - வந்து சென்று - என்பனயானுண்டேன் - வந்
தேன் - சென்றேன் - என்பதுபடநின்ற - தன்மையொருமையிறந்தகாலவினைமுற்
றுக்களெனக்கொள்க. அவைதாம் ஆகிஉரியவும் பொதுவுமாமெனமுடித்துக்
கொள்க. (௩)

பொதுவியல் பாறையுந் தோற்றிப்பொருட்பெயர், முதலறு
பெயரல தேற்பிலமுற்றே. *

இதுமுற்றுவினை இலக்கண முணர்த்திற்று. (இ-ள்.) பொ
து - றி - தெரிநிலையுங் குறிப்புமாகிய முற்றுவினை எச்சவினைக
ளுக்குப் பொதுவிலக்கணமாகிய செய்பவன் முதலிய ஆறையுந்
தோன்றச்செய்து, பொருட்பெயர்முதலறுபெயர் - பொருள் -
இடம் - காலம் - சினை - குணம் - தொழில் - என்னும் அறுவ
கைப்பெயர்களையும் பயனிலையாக ஏற்பனவாகி, அலது - அல்ல
தொன்றையும், ஏற்பிலமுற்று - ஏலாதன தெரிநிலையுங் குறிப்பு
மாகியமுற்றுவினைகளாம், எ-று.

எச்சவினைகளைப் போற்குறைந்து நில்லாமல் விகுதியுறுப்
பொடுகூடிநிற்றலால் முற்றெனப்பட்டது, வினைச்சொல்முதலிய
வற்றுள் ஒன்றையும் கொள்ளாதனவென்பதும் - பெயரன்றி அத
ன்பின்மற்றொன்றையுங் கொள்ளாதன முற்றுவினைகளென்பதுந்
தோன்றப் பெயரலதேற்பிலமுற்றென்றார். [வ-று,] செய்தான்
அவன் - நல்லன்அவன் - வளர்ந்ததுமலை - கரியது-குதிரை - இவை
பொருட்பெயர்கொண்டன - குளிர்ந்தது - நிலம் - எது-இடம் - வ
ந்தது - கார் - எது-காலம் - சிவந்தது - கண் - எது-சினை - பரந்தது -
பசப்பு - எது - குணம் - ஒழிந்ததுபிறப்பு - எது - தொழில்கொ
ண்டுமுடிந்தது, ஒழிந்த - திணை - பால் - இடங்காலங்கள்தோறு
மொட்டுக, (சூத்) மற்றுச்சொன்னோக்காமரபினனைத்து - முற்றி
நிற்பனமுற்றியன்மொழியே - என்றார் ஆசிரியர் அகத்தியனார் - அ
வை - எத்திறத்தானும்பெயர்முடிபினவே - என்றார்பிறரும், ஏற்
பிலமுற்றென - முற்றுப்பயனிலைகொண்டது. (௪)

ஒருவன்முதலைந்தையும் படர்க்கையிடத்து, மொருமைப்பன்
மையைத்தன்மை முன்னிலையினு, முக்காலத்தினு முரணமு
றையே, மூவைந்திருமூன்றாய்முற்று, வினைப்படமொன்றே
மூவொன்பானும். *

இது, மேற்கூறிய இருவகை முற்றுகளுள் - தெரிநிலைவினை

முற்றுமொன்றுமேகாலவிகற்பங்களைப் பெறுமென்பதும் அக்காலம்பற்றியந் தவினைச்சொற்கள் இவ்வளவாமென்பதுங் கூறுகின்றது. (இ-ள்,) ஒருவன்முதலைந்தையும் படர்க்கையிடத்தும் - ஒருவன்- ஒருத்தி - பலர்-ஒன்று-பல- என்னும் ஐம்பால்வினைமுற்றுக்களையும் படர்க்கையிடத்திலும், ஒருமைப் பன்மையை - ஒருமைப்பாலையும் பன்மைப்பாலையுமுடையவினைமுற்றுக்களை, தன்மையிடத்தும்முன்னிலையிடத்தும், முக்காலத்திலுமூமாண-மூன்றுகாலங்களாலும்மாற, முறையே - வரிசையாகவே, மூவைந்து- படர்க்கைவினைமுற்றுப்பதினைந்தும், இருமூன்று-தன்மைவினைமுற்றுஆறும், ஆறாய் - முன்னிலைவினைமுற்று ஆறுமாகி, முற்-றும்- முற்றுவினைச்சொல் ஒன்றுதானே இருபத்தேழாம், எ-று.

[வ-று,] நடந்தான்-ள்-ர்-து-ன- இவைஇறந்தகாலவினைமுற்று. (௫) நடக்கின்றான்-ள்-ர்-து-ன - இவைநிகழ்காலவினைமுற்று. (௫) நடப்பான்-ள்-ர்-து-ன-இவைஎதிர்கால-வி-(௫) ஆகப்படர்க்கை வினைமுற்று. (௰௫) நடந்தேன்-ம்-இ- நடக்கின்றேன்-ம்-றி- நடப்பேன் - ம்-எ- இவைதன்மைவினைமுற்று. (௬) நடந்தாய்- நடந்தீர்-இ- நடக்கின்றாய்- நடக்கின்றீர்- றி-நடப்பாய்- நடப்பீர்-எ- இவைமுன்னிலை - வி- (௬) ஆகவகைமூன்றுக்கு முற்றுவினைச்சொல்- (௨௭) ஆயினவாறுகாண்க.

இங்கே ஒருவன் என்றது பெயரன்று - உயர்திணையாண்பால் வினையை யுணர்த்தி நின்றதோர் குறிப்புச்சொல், ஒருமைப்பன்மை - என இடையிலே தோன்றிய பகர ஒற்று - சந்த இன்பப் பொருட்டு விரித்தல் விகாரமாய் நின்றது, ஒன்றே எனற ஏகாரம் - தெரிநிலைகுறிப்பென்னும் இரண்டினுள் - தெரிநிலைமுற்று வினைப்பதமொன்றே எனநிற்றலால் - பிரிநிலையேகாரம், இவ்வாறு கூறவே- இவனுக்குச்செல்வம்முன்னுண்டு- இப்பொழுதுஉண்டு- பின்னுண்டு - என வினைக்குறிப்புச்சொல்முக்காலமுங்கொள்ளுமாயினும் - காலஇடைநிலைமுதல் விடவேண்டாது பொதுப்படநிற்பதாலே அதை இவ்வாறு விரிக்கப்படாதென்பது பெறப்பட்டது - முற்று வினைப்பத மூவொன்பானு மென முடித்துக் கொள்க. (௩)

அன்ஆனிறுமொழி யாண்பாற்படர்க்கை. *

இது, மேற்கூறியஇருவகை முற்றுக்கள் திணைபாலிடங்களில் ஒன்றிற்கு உரியனவாமாறு உணர்த்திற்று. (இ - ள்,) அன்ஆனிறுமொழி- அன் ஆன்என்னும்இரண்டுவிகுதிகளும்ஈறாகியமொழிகள், ஆண்பாற்படர்க்கைவினைமுற்றுங்குறிப்புமுற்றுமாம், எ - று.

[வ-று,] நடந்தனன்- நடந்தான்- நடவாநின்றனன் - நடவாநின்றான்- நடப்பன் - நடப்பான்-அவன் - எனஉயர்திணையாண்பாற்படர்க்கை முக்காலவினை முற்றுக்கள்முறையேவந்தன, கு

ழையினன்- குழையான்- அவன் - என அத்திணையாண்பாற்படர்க்கைக்குறிப்புவினைமுற்றுவந்தன, பிறவுமன்ன.

இவைமுன்குறிப்பு வினைமுற்றாய்ப்பின் பொருள்களை வழங்குதற்குவரும்பெயராயின் அவைகுறிப்புவினையாலணையும்பெயர்களாம் - தம்முன் வேற்றுமையாதோவெனின் பெயராயின்-குழையன்வந்தான்-குழையனைக்கண்டேன்-குழையனல்லுடியும் - குழையா எனஉருபேற்பதும்-வினையாயின் -குழையையுடையனாயினன்-குழையைத்தரித்தான் - சாத்தன் எனஉருபேலாது பெயர்ப்பயனிலைகொண்டுமுடிந்து நிற்பதுந்தான்தம்முள்வேற்றுமையென்க, இவை தெரிநிலைவினைக்குந்தெரிநிலைவினையாலணையும் பெயர்க்கும் ஒக்கும், மொழிபடர்க்கை எனமுடிந்துநின்றது. (௬)

அள்ளாளிறுமொழி பெண்பாற்படர்க்கை. *

இதுவமது, (இ-ள்,) அள்-ஆள் - என்னுமிரண்டுவிகுதியும் ஈறாகவுடைய மொழிகள் உயர்திணைப் பெண் பாற்படர்க்கை வினைமுற்றுங்குறிப்புமுற்றுமாம், எ-று.

[வ-று,] நடந்தனள்- நடந்தாள் - இ-நடக்கின்றனள்- நடக்கின்றாள்- நி-நடப்பள்- நடப்பாள்- எ-அவள்- தெ-குழையினள்- குழையாள் - அவள்- கு- எனவரும்- இனிஆசிரியர் தொல்காப்பியனார் (கு) அன்ஆன்- அள்ஆள்- என்றுநான்கு- மொருவர் மருங்கிற்படர்க்கைச்சொல்லே- எனக்கூறுதலுங்காண்க. (௭)

அர் ஆர்பவ்வூ ரகரமாரீற்ற, பல்லோர் படர்க்கை மார் வினை
யொடுமுடிமே, *

இதுவமது, (இ-ள்,) அர்- மாரீற்ற- அர்-ஆர்-ப-மார்- என்னும்நான்குவிகுதிகளையும்ஈறாகவுடையமொழிகள், ப- கை- உயர்திணைப்பன்மைப்படர்க்கைத்தெரிநிலைவினைமுற்றுங் குறிப்புவினைமுற்றுமாம், மா-வினையோடுமுடிமே - இவற்றுள் - மாரீற்றுச்சொல் பொதுவிதியாற்பெயருடன் முடிவதன்றி வினையுடனுமுடியும், எ-று.

மாரெதிர்வும்- பாந்தஞ்செலவொடு வரவுமெனப் பதவியலுட்கூறினதினாலே இந்தஇரண்டு விகுதியுங்குறிப்பு முற்றிலே வாராவெனவும், மார்வினையுடனுமுடியுமென்றதினாலேஇதற்குப்பொதுவிதிமேற் சிறப்புவிதி கூறினானெனவும், வினையோடுமுடிமே- என்ற இடத்து-இறந்ததுதழுவிய எச்சவும்மைஇல்லையெனக்கொண்டாலும்அமையக்கூறினதினாலேவினையொடுமுடிதல்போற்பெயரொடுமுடிதல் பயின்றுவாராதெனவுங்கொள்க- [வ-று,] நடந்தனர்- நடந்தார்- நடக்கின்றனர் - நடக்கின்றார்- நடப்பர்-நடப்பார்- தெ- குழையினர்- குழையார்- அவர்- கு- எம்- நடப்ப- மொழிப-அவர்- எம்- ஆர்த்தார்கொண் மார்வந்தார்- பழூஉப்ப

யன் றொண்டமார்குறவருன்றிய - இவைமார் வினையொடுமுடிந்து- பாடன்மாறெமரே- இது எதிர்மறைமுற்றாதலின் எதிர்காலவினையொன்றையுமறுத்துப்பாடுவாரல்லரென்னநின்றுஎமர் என்னும் பெயர்கொண்டது.

இம்மார்வினைகொண்டுமுடிதலை- வினைமுற்றுவினையெச்சமென்றாலென்னெனின்- வினைமுற்றியவழி அதற்கு இயைந்தபெயர்ப்பயனிலைவாராமல்இயையாதவினைவந்தால்அதற்குஇயையவினைமுற்றுவினையெச்சமாயிற்றெனப்படும்-இந்தமார்ற்றுவினைமுற்றிற்குப்பெயர்போலவினையுமியைந்துவருதலால்முற்று எச்சமாயினதன்று - முற்றேயாமென்க- பின்வருஞ் செய்கெனுமையுஞ் செய்குமென்பன்மையும் என்னும்முற்றுக்களும் இவ்வாறுநின்றனவெனக்கொள்க (கூ) காலமொடுகருதவரினுமாரை - மேலைக்கிளவியொடுவேறுபாடின்றே - என்றார் ஆசிரியர் அகத்தியனார்- (கூ) மாரைக்கிளவியும்பல்லோர்படர்க்கை - காலக்கிளவியொடுமுடியுமென்ப - என்றார் ஆசிரியர்தொல் காப்பியனாரும் எனக்காண்க. முடியுமே- என்பதுமுடிமே எனவிகாரப்பட்டுநின்றது- ஈற்றுபல்லோர்படர்க்கை- எம்- மார்வினையொடுமுடியும்- எம்-இரண்டுமுடிபாகமுடிந்தது. (அ)

துறுடுக்குற்றியலுகரவீற்ற, வொன்றன்படர்க்கை டுக்குறிப்பினாகும். *

இதுவுமது,(இ-ள்,) து-ற- இந்தமூன்று விகுதிகளையும் ஈறாகவுடையகுற்றியலுகரமொழிகள், ஒன்- றை-அஃறிணையொருமைப்படர்க்கைத்தெரிநிலைவினைமுற்றுங்குறிப்புமுற்றுமாம், டுக்- கும்- இவற்றுள், டுவ்விகுதி குறிப்பிலன்றித் தெரிநிலையில் வாராது, எ-று.

[வ-று,] நடந்தது- நடக்கின்றது- நடப்பது-எம்-வந்தன்று-கூயிற்று-அது-எம்-இவைதெரிநிலை-அணித்து-சேய்த்து-எம் - அற்று- இற்று-எற்று-எம்-பொருட்டு- ஆதிரைநாட்டு- குண்டுக்கட்டு- அது- எனவும்வரும்- இவை-குறிப்பு-எனவும்-முறையேகாண்க- வந்தன்று- என்பதில்-அன்-சாரியை,

சுட்டினும்வினாவினும்வந்தவினைக்குறிப்புக்கள்- பொருண்முதலாறினுந்தோற்றி என்றவற்றுள் எப்பொருளையுடையனவெனின் - பொருளாதியாறினுள்யதாயினுமொன்றைச் சுட்டியும்வினாவியும்வருதலால் அந்தந்தப்பொருளையுடையனவாமென்க, குற்றியலுகரவீற்றவென்றதனாலே- ஏது- யாது - என்பனவுங் காரணப்பெயராவனவுமன்றிவினைக்குறிப்புமாம் என்பதும்- ஒருமொழியொழி தன்னினங்கொளற்குரித்தே- என்பதனால்- அது- இது- என்னுந்தொடக்கத்து முற்றுகர ஈற்றுச்சொற்களும்- குறிப்புவினையாமென்பதும்பெறப்பட்டன, டுவ்விகுதிமுக்காலத்தும்பயின்றுவாராததினாலும், துவ்விகுதிதன்முன்னின்ற எழுத்தை நோக்கி- றுவ்விகுதியாய்த் திரிந்ததெனினும் அமையுமாதலாலும், டுவ்விகுதி குறிப்பிற்கேவருதலாலும், இதுவுந்துவ்விகுதிதிரிந்ததெனினும் அமையுமாதலாலும் இச்சூத்திரத்தில்- துறுடு- எனஇம்முறைவைக்கப்பட்டன, இதுவுமேலைச்சூத்திரம்போல்வேயிரண்டுமுடிபாகமுடிந்தது. (கூ)

அஆவீற்ற பலவின் படர்க்கை, யாவே யெதிர் மறைக்கண்ணதாகும். *

இதுவுமது, (இ-ள்,) அஆவீற்ற- இந்த இரண்டுவிகுதிகளையும் இறுதியாகவுடையமொழிகள், ப-கை- அஃறிணைப் பன்மைப் படர்க்கைவினைமுற்றுங்குறிப்புமுற்றுமாம், ஆ-கும்- இவற்றுள்- ஆகாரவிகுதியெதிர் மறைவினைக்கல்லது உடன்பாட்டு வினையில் வாராது எ-று.

ஆவேயெதிர்மறைக்கண் என்றதினாலே அகரவிகுதிஉடன்பாட்டினும்எதிர்மறையினும்வருமெனக்கொள்க. [வ-று,] நடந்தன- நடந்த- நடவாநின்றன- நடவாநின்ற- நடப்பன- நடப்ப- அவை- இவைதெரிநிலையுடன்பாடு, கரியன- கரிய- அவை- இவை- கு- உடன்பாடு, இவையெல்லாம் அன்பெற்றும்பெறாதும்வந்தன, நடந்தில- நடவாநின்றில- அவை- இவைதெரிநிலை எதிர்மறை- இல்லன- இல்ல- இவை- குறிப்பெதிர்மறை - இதனுள்பகுதியே எதிர்மறைப் பொருள்தந்துநிற்றலால் இதற்கு எதிர்மறை ஆகாரம் வேண்டாமையால் ஏற்புழிக் கோடலென்னும் உத்தியால்இந்த எதிர்மறை ஆகாரவிகுதிதெரிநிலைக்கேகொள்க.

ஈங்குக்காட்டிய அன்பெறாத அகரஈற்று நடப்ப என்னும் பலவறிசொல்லின் இறுதிநோக்கி உயர்திணைப் பன்மைப்படர்க்கைக்கும் அஃறிணைப்பன்மைப்படர்க்கைக்கும் பொதுவினையெனக் கொள்ளாதொழிக. இதனுள் - பகர ஒற்று எதிர்காலவிடைநிலையாதலால், இத்தொடக்கத்தன வெல்லாம் பலபொருளொருசொல்லென்றுணர்க. இனி ஆசிரியர் தொல்காப்பியனார் - (கு) அ ஆ வ வென வரூஉமிறுதி, யப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை - எனவகர வுயிர்மெய்யுமுடன்கூறினார்- அதையிவர் அகரஈற்றுள் அடக்கிவகர ஒற்றை யிடைநிலையாக்கொண்டார்- இது மறுத்தலென்னும் மதம்; உரையிற் கோடலென்னும் உத்தியால் - இம்மணிநல்லவென்னும் உடம்பாட்டுக்குறிப்பு வினைக்கு எதிர்மறையாக - இம்மணிபொல்லா - எம்- திரந்திரத்திர் பொல்லலர்வே - எம்- இந்த எதிர்மறை ஆகாரவிகுதி சிறுபான்மை குறிப்பின் கண்வருதலுங் கொள்க, இச்சூத்திரமுமஃவாறுமுடிந்தது. (ய)

தன்மைமுன்னிலைவியங்கோள்வேறில்லை, யுண்டீரெச்சமிருதிணைப்பொதுவினை, *

இது, திணைபாலிடங்களுக்குப்பொதுவினையுணர்த்தத்தொடங்கி அவற்றுள் திணைப்பொதுவினை இவையென வுணர்த்திற்று. (இ-ள்) தன்மைவினைவினைக்குறிப்பு முற்றும், முன்னிலைவினைவினைக்குறிப்புமுற்றும், வியங்கோள்வினைமுற்றும், வேறு- இல்லை- உண்டு- என்னும்மூன்றுவினைக்குறிப்புமுற்றும், பெயரெச்சவினைவினைக்குறிப்பும், வினையெச்சவினைவினைக்குறிப்பும், இருதிணைக்கும்பொதுவினைகளாம், எ-று.

பொதுவினையெனப்பிற்கூறியதினாலே- முன்னே தன்மை முன்னிலை என்றது- தன்மைமுன்னிலைமுற்றுவினைகளையெனக்கொள்க- ஈரெச்சமெனவே - செய்யுமென்னும்முற்றும் அடங்கிற்று- என்னெனின்- செய்யும் என்னும்பெயரெச்சமே முற்றானதாலென்க - வினைவினைக்குறிப்பென்ற இடங்களிலெல்லாம் - தெரிநிலைவினையும்வினைக்குறிப்பும்- எனப்பொருளுரைத்துக்கொள்க- தன்மையும்முன்னிலையுமெனவெண்ணிப்பொதுவினையெனமுடித்துக்கொள்க. (௰௧)

குடுதுறுவென்னுங்குன்றியலுகரமோ, டல்லன்னென்னாகுமீற்
ற, விருதிணைமுக்கூற்றொருமைத்தன்மை. *

இது, நிறுத்தமுறையேதன்மையொருமைவினைமுற்றுங்குறிப்புமுற்றுமாமாறுணர்த்திற்று. (இ-ள்,) கு- ற- இந்தஎட்டுவிகுதிகளையும் இறுதியாகவுடைய மொழிகள், இரு- டை- இருதிணைக்கும்பொதுவாகிய ஒருவன் ஒருத்தி- ஒன்று-என்னும்முக்கூற்றுத்தன்மையொருமைவினைமுற்றுங்குறிப்புமுற்றுமாம், எ-று.

ஒருமையென்றதனால் இந்தஈற்றுமொழிகள்திணைப்பொதுவாவதன்றிப்பாற்பொதுவாகாவெனக்கொள்க- இனிஒருமைபன்மையென்பனவற்றையுமிவ்வாறுதிணைப்பொதுவாவதன்றிப்பாற்பொதுவாகா எனக்கொள்க. [வ-று,] உண்கு- (உண்பேன்) உண்டு- (உண்டேன்) வந்து - (வந்தேன்) வருது- (வருவேன்) சென்று- (சென்றேன்) சேறு- (செல்வேன்) உரிஞுகு - திருமுகு (உரிஞுவேன் -திருமுவேன்) எனக்குடுதுறுக்கள்எதிர்காலமும்இறந்தகாலமும்பற்றிவந்தன- இனித்துவ்விகுதி- (செய்யுள்) கழிந்ததுபொழுதெனவான்கண்மாறினுந்- தொல்லதுவிளைந்தென நிலம்வளங்கரப்பினும்- எனச்செய்யுளகத்துப்- பொழிந்து-விளைந்து- என்பன- பொழிந்தேன்- விளைந்தேன் - என இறந்தகாலம்பற்றிவருதலுங்காண்க. இனிஅல் ஈறு-பகரவகர இடைநிலைபெற்று எதிர்காலம்பற்றி- உண்பல்(உண்பேன்)வருவல்(வருவேன்) எனவரும், உண்ணாநிற்பல் - எனச்சிறுபான்மை நிகழ்காலத்தும்வரும், தவிர்வல்- ஒழிவல் எனவருமெதிர்மறைவாய்பாடுங்காண்க, அன்-என்-ஈன்- என்பனமுக்காலத்தும்வரும் அங்ஙனம்வருங்கால்- அன்சாரியையுங்குச்சாரியையும்பெற்றும்பெறாதும்வரும் - உண்டனன்- உண்ணாநின்றனன்- உண்பன்- எம்- உண்டனென்- உண்ணாநின்றனென்- உண்குவென்- உண்பென்- எம்- உண்டனேன் - உண்ணாநின்றனேன்- உண்ணாநின்றேன்- உண்குவேன் - உண்பேன்- எம்-

வருதல்காண்க- இனிக்குறிப்பின்கண்- இன்சாரியை பெற்றேபெரும்பாலும்வரும்-தாரினன்- தாரினென்- தாரினேன்- யான்-எனவரும்- இந்த-யான்என்னும்பயனிலையையெல்லா வற்றொடுங்கூட்டுக, தாரோன்எனச்சிறுபான்மைஇன்பெறாதுவருதலுங்கொள்க, இனிஇந்தமூன்றுவிகுதிகளும் எதிர்மறையில் - உண்டிலன்-ஊன்றுநின்றிலன்- உண்ணலன்- உண்ணலென்- என-இல்-அல்-என்னும்எதிர்மறை உருபேற்றுநிற்றலும், வாழலேன்-வாழேன்- உண்ணலேன்- உண்ணேன்- என- ஏன்விகுதி எதிர்மறையுருபுபெற்றும்பெறாதும்விகற்பித்துவருதலும், உண்டனனல்லன்- உண்டனனல்லென்- உண்டன்னல்லேன்- எனமுன்னின்றதெரிநிலையுடன்பாட்டுவினையைப்பின்னின்றகுறிப்புவினைமறுத்துநிற்றலும்- தாரினனல்லன்- தாரினெனல்லென் - தாரினேனல்லேன்- எம்- தாரினனல்லென் - தாரினனல்லேன் - எம் - குறிப்பு உடன்பாட்டுவினையைக்குறிப்புவினைமறுத்துநிற்றலும்-காண்க.

இனி- ஆசிரியர்தொல்காப்பியனார் - (சூத்) கடதறவென்னு- மந்நான்கூர்ந்தகுன்றியலுகரமோ- டென்னேனல்லெனவரூஉமேழுந். தன்வினையுரைக்குந்தன்மைச்சொல்லே, என அன்விகுதியை விலக்கிக்கூறினர் அது அக்காலத்துவழங்காததினாலே, இக்காலத்து - பந்தமடிதொடைபாவினங்கூறுவன் எனவழங்கிவருதலால் இவர் அதனை எதிரதுபோற்றலென்னும் உத்தியினாலேகூட்டிக்கூறினாரெனக்காண்க- ஈற்ற- ஒருமைத்தன்மை- எனமுடித்துக்கொள்க. (௰௨)

அம்மாமென்பன முன்னிலையாரையு, மெம்மேமோமிவைபடர்க்கையாரையு, மும்மூர்கடதறவிருபாலாரையுந், தன்னொடுபடுக்குந்தன்மைப்பன்மை.

இது, தன்மைப்பன்மை வினைவினைக்குறிப்பா மாறுகூறுகின்றது. (இ-ள்,) அம்- யம்- (தன்னிலையில் நிற்பதன்றி) அம்-ஆம் என்ற இந்த இரண்டு விகுதிகளையும் ஈறாகவுடைய மொழிகள் முன்னிலையிடத்தாரையும், எம்-யம்- ஏம்-ஏம்- ஓம் என்னும் இந்த மூன்று விகுதிகளை யீறாகவுடைய மொழிகள் படர்க்கையிடத்தாரையும், உம் - யும் - உம் என்னும்இடைச்சொல்லையூர்ந்த- கடதற் ஒற்றுக்களாகிய- கும்-டும்-தும்- றும்- என்னும் இந்தநான்கு விகுதிகளையும் ஈறாகவுடைய மொழிகள் முன்னிலை படர்க்கையென்னும் இரண்டிடத்தாரையும், தன்-மை-தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத்தன்மை ப்பன்மை வினை வினைக்குறிப்பு முற்றுக்களாம், எ-று.

தன்னிலையில் நிற்பதன்றி என்னும் இறந்தது தழீஇய எச்சவும்மைகள் ஏன்னும்மைகளாகவும், இருபாலாரையும்-என்ற இ

த்து அவற்றொடு முற்றும்மையாகவும் நின்றன. [வ-று,] உண்டனம்-உண்ணாநின்றனம்- உண்பம்- எம்- உண்டாம்- உண்ணாநின்றாம்- உண்பாம் - தாரினம் -தாரினும்-யாம்-எம்-யானும் நீயும்-எம், உண்டனெம் - உண்டேம் - உண்டோம் - எம்- தாரினெம்-தாரினேம்- தாரினோம்- யாம்- எம்- யானும்அவனும்- எம்- உண்கும்- உண்டும்- வந்தும்-சேறும்- யாம்- எம்-யானும்-நீயும்-அவனும் - எம் - முறையே தனித்தன்மைப்பன்மையும் உளப்பாட்டுத் தன்மைப்பன்மையும்வந்தன,

இன்னும் அந்த உம்மைகளை ஐயவும்மைகளாக்கி- அம் ஆம்- என்பனமுன்னிலையாரையாயினும் படர்க்கையாரையாயினும் - உண்டனம் உண்டாம் யானும்நீயும்- யானும் அவனும்-எம்- தன்னொடுபடுக்குமெனவும்- ஆக்கவும்மைகளாக்கி-அம்ஆம்என்பன முன்னிலையாரையும்-படர்க்கையாரையும்-உண்டனம்-உண்டாம்-யானும்நீயும்அவனும்என- ஒருமிக்கத்தன்னொடுபடுக்குமெனவுங்காண்க. மற்றவிகுதிகளுமிவ்வாறுவரும் இவற்றை யோரிடம் பிறவிடந்தழுவலுமுளவே- என்னும் இடவழுவமைதியெனக்கொளினும் அமையும்- இனி - ஆசிரியர்தொல்காப்பியனார்- (சூத்) அவைதாம், அம்ஆம்எம்ஏம்என்னுங்கிளவியு - மும்மொடுவரூஉங்கடதறவென்னு- மந்நாற்கிளவியோடா யெண்கிளவியும் - பன்மையுரைக்குந்தன்மைச்சொல்லே- என- ஓம்விகுதிவிலக்கிக் கூறியதற்கும் இவர்கூட்டிக் கூறியதற்கும்மேலேயுரைத்தவாறு உரைத்துக்கொள்க- என்பன- இவை குமடும்- தும்- றும்- தன்மைப்பன்மை- எனமுடித்துக்கொள்க. (௰௫)

செய்கெனொருமையுஞ்செய்குமென்பன்மையும்,வினையொடு
முடியினும்விளம்பியமுற்றே. *

இது, வினையொடுமுடிதலிதற்குமாமெனவலியுறுத்தலால்-எய்தியதன்மேற் சிறப்புவிதியும்-பெயரொடுமுடிதல் எய்திக்கிடத்தலால்-அதுபிறழாமற்காத்தலுமுணர்த்திற்று. (இ-ள்,) செய்கு என்னுந்தன்மையொருமை முற்றும், செய்கும் என்னுந்தன்மைப்பன்மைமுற்றும்பெயரொடுமுடிதலன்றி வினையொடுமுடிந்துநிற்பினும்மேற்கூறியமுற்றேயாம், எ-று.

[வ-று,] உண்குவந்தேன் - உண்கும்வந்தேம் - எனவரும்- இங்ஙனமாயின் - (இங்ஙனம்- இப்படி,) உண்பேன்வந்தேன்- உண்பேம்வந்தேம் - எனஇவையும்வினையொடுமுடியுமென்றால்-என்னெனின் - அவைபெயரொடும்வினையொடும் முடிதல்மரபாயினாற்போல இவையங்ஙனமுடிதல்- மரபன்றென்க. (மரபு- பழைமை,) ஆசிரியர்தொல்காப்பியனார் - (சூத்) அவற்றுட் செய்கென்னொருமை வினையொடுமுடியினு - மவ்வியனிரியாதென்மனார்புலவர் - என ஒருமைக்கே கூறினார்-இவர்பன்மைக்குங்கூறியது- ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தென்பதனாற்போ

ம் - இவ்வழக்கு இக்காலத்தரிதாயிற்று - ஒருமையும்பன்மையும் முற்று என முடிந்தது. (டுச)

முன்னிலைகூடிய படர்க்கையுமுன்னிலை. *

இது, உளப்பாட்டுப்பன்மைமுன்னிலையிடத்துமுளதென்பது ணர்த்துகிறது. (இ - ள்,) முன்னிலை யொடு கூடிய படர்க்கையும் முன்னிலையாம், எ-று.

விகுதிகளைச்சொல்லாமல் முன்னிலையென்றதினால் முன்னிலைப்பன்மை விகுதிகளெல்லாம் படர்க்கையையுளப்படுத்தும் என்பதும்-படர்க்கையென்றதினால்தன்மையையுளப்படுத்தாதென்பதும்பெறப்பட்டன. [வ-று,] உண்டனிர் -உண்டீர்- உண்மின்- குழையினிர்- குழையீர்- நீயும் அவனும் - எம்- (செய்யுள்) ஒன்றேவிநாராய்நின்சேவலு நீயுமாய் - வண்டூதும்பூங்கானல் வைகுதுஞ்சென்றீரால்- எனவும்வரும். (டுரு)

ஐயாயிகரவீற்ற மூன்று - மேவலின் வருஉமெல்லாவீற்றவு, முப்பாலொருமை முன்னிலைமொழியே. *

இது, முன்னிலை யொருமை வினைவினைக்குறிப்பு முற்று மாறுணர்த்திற்று. (இ-ள்,) ஐ- ஆய் -இ-என்னும் மூன்று ஈற்றுமொழிகளும், ஏவ-லும்-(விகுதிகுன்றியுங் குன்றாதும்.)ஏவற்கண்வரும் இருபத்து மூன்றுஈற்று மொழிகளும், முப்-பு -ஒருவன் ஒருத்தி ஒன்று என்னும் மூன்று பிரிவாகிய முன்னிலை யொருமைவினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம், எ-று.

இவற்றுள், ஏவல்வினை தெரிநிலைக்கேயுரித்தாதலால் - உம்மைகொடுத்துக்கூறினார். [வ-று,] உண்டனைஉண்ணாநின்றனை -உண்டை-எம்-உண்டாய்-உண்ணாநின்றாய்-உண்பாய்-எட-உண்டி-உண்ணா நிற்றி-சேறி-எம்- வருதி-வை-ஐ-ஆய்- இகரவீற்றுத்தெரிநிலைமுற்றுவினைகள், நடவாய் உண்ணாய்-அஃகாய்-எம்-நட -உண்-அஃகு-எனவும் -இவை - விகுதிகுன்றாதுங் குன்றியும் வந்த ஏவல்வினைகள், இவையனைத்துந்தெரிநிலை. வில்லினை-வில்லாய்- வில்லி- நீ-இவைகுறிப்பு, இந்த- நீ-யென்னும்பயனிலையை எல்லாவற்றொடுங்கூட்டுக- இனி-உண்டிலை-உண்டிலாய் - உண்டனையல்லை-உண்டாயல்லை-குழாதி- எனவருமெதிர்மறைவிகற்பங்களும், உண்ணல்-உண்ணேல்- மறால்- எனவரும் எதிர்மறை ஏவல் விகற்பங்களும்-நடப்பி-வருவி- எனச்செய்வி என்னேவல்முன்னிலைவினை-பகர வகர இடைநிலைபெற்று எதிர்காலம் பற்றி வருதலும்பிறவும் விரிவஞ்சிக்காட்டா தொழிந்தனவுங்காண்க. மூன்றும்- ஈற்றவும்

முன்னிலைமொழியெனமுடித்துக்கொள்க.

இவர்விகுதிகுன்றிய - நடயாமுதலிய ஏவல்வினைகளை முன்னிலைவினைமுற்றென்றது ஆசிரியர் தொல்காப்பியனார்க்கு உடன்பாடன்றென்பதை. (சூ) அவற்றுள் முன்னிலைக் கிளவி, இ ஐ ஆ யெனவரூஉ மூன்று - மொப்பத்தோன்று மொருவர்க்கு மொன்றற்கும், என அவர்கூறியவிச்சூத்திரத்தாற்காண்க. (௰௬)

முன்னிலை முன்னரீ யுமேயு, மன்னிலை மரபின் மெய்யூர்ந்து வருமே. *

இது, ஏவல்வினைமுற்றிற்கு எய்தியதன்மேற்சிறப்புவிதியுணர்த்திற்று. (இ-ள்,) முன்-ரீ - மேற்கூறியமுன்னிலையேவல் வினைகளின்முன், ஈகாரமும் ஏகாரமும், அந்-மெய் - அங்கேநிற்றற்குரியதன்மையையுடையமெய்யாதாயினுமொன்றை, ஊர்ந்துவரும்- நடத்திவரும், எ-று.

[வ-று,] சென்றீபெரும - எம்- அட்டிலோலைதொட்டனை நின்மே- எம்- வரும், இந்த ஈகாரஏகாரங்கள்முறையே- றகரஒற்றையும் மகரஒற்றையும் ஊர்ந்துவந்தன, செல்-நில்- என்னும் ஏவல்வினைகள் - மயக்கவிதியில்லாததினாலே ஈறுதிரிந்துநின்றன- (மயக்கம்- இணக்கம்) விதி- இலக்கணம்,) இவற்றிற்கு விகுதியுருபின் பொருளில்லாததினாலே விகுதிகளாகா எனவும், அவைமுன்னிலை அசைச்சொற்களெனவுங்காண்க. (௰௭)

இர் ஈரீற்றவிரண்டு மிருதிணைப், பன்மை முன்னிலை மின்னவற்றேவல். *

இது, முன்னிலைப்பன்மை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமுணர்த்திற்று. (இ-ள்,) இர்-ஈர்-என்னும் இரண்டுவிகுதிகளையீறாகவுடையமொழிகள் - இருதிணைக்கும்பொதுவாகிய முன்னிலைப் பன்மைவினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம், மின் என்னும்விகுதியை ஈறாகவுடைய மொழிகள் அந்த இருதிணைப் பன்மைமுன்னிலைஏவல்முற்றாம், எ-று.

[வ-று,] உண்டனிர்- உண்ணாநின்றனிர்- உண்குவிர்- உண்டீர்- உண்ணாநின்றீர்- உண்பீர்- எம்-குழையினிர்- குழையீர்-எம்- உண்மின் - நீர்- எனவும்வரும் - மின்னவற்றேவலென்றதினாலே- உண்ணும்- தின்னும்- நீர்- என-உம்- இறுதியாய் இக்காலத்துப்பயின்றுவரும் பன்மை ஏவல்கள் புதியன - எனவும் - அவைபுதியனபுகுதலும்வழுவலஎன்பதினாலே அமையுமெனவுங்கொள்க. இரண்டும் பன்மைம் முன்னிலை - மின் - ஏவல் - என இருமுடிபாகக்கூக. (௰௮)

கயவொடுரவ்வொற் றீற்றவியங்கோ, ளியலுமிடம்பா லெங்கு
மென்ப. *

இது, வியங்கோள் முற்றுவினைகளா மாறுணர்த்துகின்றது (இ-ள்,) க-ய - என்னும் இரண்டுயிர் மெய்யையும் - ரகரவொற்றையும் இறுதியாக உடையமொழிகள் வியங்கோள் முற்று வினைகளாம், இவைமூன்றிடத்திலும் ஐம்பாலிலும் செல்லு மென்று சொல்லுவர் புலவர், எ-று.

உயிர் மெய்களை ஒடுக்கொடுத்துப் பிரித்ததினாலே அவை போலத்தனித்து நில்லாமல் - யகரத்தொடுகூடி நிற்கப்பெறும்- ரகர ஒற்றெனக்கொள்க. [வ-று,] வாழ்க- வாழிய- வாழியர்- நியியர் - யான்-யாம்- நீ-நீர்- அவன்- அவள்- அவர்- அது-அவை- எனவரும்- இனியிவை -- வெல்கவாழி நின்வென்றிவார்கழல்- செல்கதீயன சிறக்கநின்புகழ் - எனவாழ்த்துதற்கண்ணும், நடக்க- வருக-உண்க- எனஉயர்ந்தோன் இழிந்தவனை விதித்தற்கண்ணும்- (விதித்தல் - ஏவுதல்,) போற்றியருளுக.- கடாவுகபாகநின்கால்வ னெடுந்தேர்- வல்லேசெயிற்செய்க - எனவேண்டிக்கொள்ளுதலிலும், பரந்துகெடுகவுலகியற்றியான் - எனத்திட்டுதற் கண்ணும் வருமெனக்காண்க. (உடம்பாடு எதிர்மறை) (பக்-259) [illegible]

இனி மொழிந்தபொருளோ டொன்ற வவ்வயின் மொழியாததனையு முட்டின்றி முடித்தலென்னும் உத்தியால்- அல்- ஆல்- உம்- மார் - ஐ- என்னும்விகுதிகளையுடையனவும் வியங்கோள் முற்றுக்களெனக்கொள்க. இவற்றுள் - அல்லீறு- மகனெனல்மக்கட்பதடியெனல்- என-மகனென்று சொல்லாதொழிக. பதடியென்று சொல்லுக- எனஎதிர்மறையிலும் உடன்பாட்டிலும் - ஆலீறு - மரீஇயதோரால் - மருவியதை நீக்காதொழிக. எனவிதித்தற்கண் எதிர்மறையிலும், உம்மீறு- வாழ்தல்வேண்டுமிவண்வரைந்தவைகல் - எனவாழ்த்துதற்கண்ணும்- வரல்வேண்டும் எனவேண்டிக்கொளற்கண்ணும், மாரீறு - பாடன்மாரெமரே-எனப்பாடுவாராகவெனவாழ்த்துதற்கு எதிர்மறையிலும், ஐயீறு - அஞ்சாமையஞ்சுவதொன்றின் - எனவிதித்தற்கண் எதிர்மறையிலும் வருமெனக்காண்க. நாடா கொன்றோ - காடாகொன்றோ என்பன - நாடாகக்காடாக எனவருதலால் இவையும் வியங்கோளெனவும் இவற்றுள் ஒன்றோ என்பது எண்ணிடைச் சொல்லாதலால்- இதுபோலவே - சீயகங்கன்தருகெனமொழிந்தனனாக என்பதில்- தருகவெனவியங்கோளாய்வேண்டிக் கோடற்பொருளில் வருதலும், செய்க என்னும்வாய்பாட்டுவியங்கோள் முற்றிற்குச்சீ- செய்யாதொழிக எனவினையெச்சமும்முடிக்குஞ் சொல்லுமாய்விரிந்து எதிர்மறையாதலும் - செய்யல் என்னும் எதிர்மறைவியங்கோள் விகுதிமேல்விகுதி பெற்றுச் செய்யற்க எனநின்று எதிர்மறையாதலும், செய் என்னும் வாய்பாட்டு ஒருமை ஏவற்குச்செய்யல் - செய்யால்- செய்யேல் - செய்யாதை- எனநின்றெதிர்மறையாதலும், செய்யும் என்னும்வாய்பாட்டையுடையபன்மையேவல்- போம் - எனஈற்றுஉயிர்மெய்கெட்டுத்துணிவுதோன்றநிற்றலும் - போய்விடும் - போய்த்தொலையும்- போயொ

ழியும் எனவினையெச்சமும்முடிக்குஞ்சொல்லுமாய்விரிந்துவினையும் வெகுளியு ந்தோன்ற நிற்றலும் - போ - என்னும் ஒருமையேவலும் - போய்விடு - போய்த்தொலை - போயொழி என அவ்வாறுநிற்றலும், செய்தல்வேண்டும் என்னும் வியங்கோள் - செய்யவேண்டும்எனவினையெச்சமும்முடிக்குஞ் சொல்லும்போல நிற்றலுமன்றிச் - செய்யட்டும் என இடைக்குறைந்துமரீஇ நிற்றலும்பிறவுங் காண்க. ஏவல் - வியங்கோள்என்னுமிரண்டும் ஒருபொருளிலே வருமாயினும் ஐம்பால்மூவிடங்களிலும்செல்வதைவியங்கோளென்பதும் முன்னிலையொன்றிற்கேயுரியதைஏவலென்பதும் வேறென்றிமாபெனக்காண்க. (சூத்) கயவொடுவொற்றல்லாலும்மர் - ஈற்றுவியங்கோண் முற்றவை யெய்துமிடமோபாலெங்குமென்ப - எனக்கூறினருமுளரெனக்காண்க. ஈற்றுவியங்கோள், ஆவையெய்துமென்ப - புலவர் - எனஇருமுடிபாக்குக. (௧௯)

வேறில்லையுண்டைம்பான் மூவிடத்தன்.

இது, வியங்கோள்வினைபோலப்பாலிடங்கட்குப்பொதுமையினிற்பன இவையென்கின்றது. (இ-ள்,) வேறு - இல்லை - உண்டு - என்னும் இந்தமூன்றுவினைக்குறிப்புமுற்றுக்களும் ஐம்பாற்கும்மூவிடத்திற்கும்உரியவாம், எ-று.

[வ-று,] அவன்வேறு - அவள்வேறு - அவர்வேறு - அதுவேறு - அவைவேறு - நீவேறு - நீர்வேறு - யான்வேறு - யாம்வேறு - எம் - அவன்இல்லை - அவள்இல்லை - அவனுண்டு - அவளுண்டு ஒழிந்தபாலிடங்கள்தோறும்ஒட்டிக்கொள்க. இனிச்செய்யுளிலே வருமாறு - விளிந்தாரின்வேறல்லா - யாருமில்லைத்தானேகள்வன் குருகுமுண்டு தாமணந்தஞான்றே - பெண்டிருமுண்டுகொல் - பெண்டிருமுண்டுகொல் - வெண்பா - நாவுண்டு நீயுண்டுநாமந்தரித்தோதப் - பாவுண்டுநெஞ்சேபயமுண்டோ - பூவுண்டு - வண்டுறங்குஞ்சோலைமதிளரங்கத்தேபுல்கை, யுண்டுறங்குவாமொருவனுண்டு: எனவரும் - பழியஞ்சிப்பாத்தூணுடைத்தாயின்வாழ்க்கை - வழியெஞ்சலெஞ்ஞான்றுமில் - எனஇதில் - இல்லையென்பது - இல் எனக்கடைக்குறைந்துநின்றது - இனிமொழிந்தபொருளோடொன்றமொழியாததனையுமுட்டின்றிமுடித்தலென்பதினால் - தகும் - படும் - என்னுஞ்சொற்களும் ஐம்பால் மூவிடத்தனவாமெனக்கொள்க. [வ-று,] இவராலிதுசெய்யத்தகும் - இச்சோறுண்ணத்தகும் - வஞ்சனையஞ்சப்படும் - ஒளியோடொழுகப்படும் - என வரும் - இவையொருபொருட்சொற்களாய்த்தொழிற்பெயராய்த் தேற்றப்பொருள்பட்டேநிற்குமெனக்கொள்க. இவற்றை - நச்சினார்க்கினியார் - சேனாவரையர் - பரிமேலழகர் - உரையாசிரியர் முதலியோர்வியங்கோட்பொருளுடையதென்றும் - விதிப்பொருளுடையதென்றும் - தகுதிப்பொருளுடையதென்றுங்கூறுவர் வே

நில்லையுண்டு - மூன்றிடத்தன - என -எ மூவாய் பயனில்லையாகமு டிந்தது. (உம)

செய்தசெயகின்றசெய்யுமென்பாட்டிற், காலமூன்றுஞ்செயலுந் தோன்றிப்பாலொடு, செய்வதாதியறுபொருட்பெயரு, மெஞ்சநிற்பதுபெயரெச்சம்மே. *

இது, பெயரெச்சமாமாறுஉணர்த்துகின்றது. (இ-ள்,)செய்த- பாட்டில்- இம்மூவகைவாய்பாட்டிலே, கால - நி-முறையே இறப்பு- நிகழ்வு - எதிர்வு- என்னும் மூன்றுகாலமுந்தொழிலுந் தோன்றி, பாலொடு - வினைமுற்றுதற்குவரும்பாலொடுகூட, செய்வதாதியறுபொருட்பெயரும்-,செய்பவன்- கருவி- நிலம்-செயல்-காலம்- செய்பொருள் - என்னும்அறுவகைப்பொருட்பெயரும், எஞ்ச-சம்மே - ஒழிய நிற்பன பெயரெச்சவினை வினைக்குறிப்புக்களாம், எ-று-

பாட்டில் என்றஇடத்து-வாய்- என்பதுகுறைந்துநின்றது, நடவாமுதலிய சிறப்பு வாய்பாடுகளால் தோன்றுவன எல்லாம் அடங்குதற்குச்செய்த- செய்கின்ற- செய்யும்-என்னும்பொதுவாய் பாட்டாற்கூறினார்- வாய்படுதல் - வாய்பாடெனச்சொல்லின்மேல் நின்றது- இவற்றுள்-செய்யுமென்பது இறுதிநிலைகாலங்காட்டும் ஒழிந்தன வற்றுள் இடைநிலை காலங்காட்டும், நிற்பது என்றது தொகுதி ஒருமை யாதலால் அதற்குநிற்பன எனப்பொருளுரைக்கப்பட்டது ஏற்புழிக் கோடலென்னும் உத்தியால் - காலமுஞ் செயலுந்தோன்றுதல் தெரிநிலையுடன் பாட்டிற்கும் ஒழிந்தவிதி தெரிநிலையுங்குறிப்புமாகிய உடன்பாடெதிர் மறையிரண்டிற்குங் கொள்க. [வ-று,] உண்ட- உண்ணநின்ற- உண்ணும் - என நிறுத்தி- சாத்தன்-சலம்- இடம்- ஊண்- நாள்- சோறு- எனவருவித்து ஓட்டிச்செய்வதாதி அறுபொருட் பெயருமுறையே கொண்டுமுடிந்து நின்றதெரிநிலையுடன்பாட்டுப் பெயரெச்சமெனக்காண்க. குறையநிற்பதென்றதற்கு- முடிந்துநிற்கக்காட்டியதென்னெனின் இந்தஆறுங்குறைய நின்றன- அந்த மூன்றுவாய்பாட்டுவினைகளாதலால் அவற்றைப் பெயரெஞ்சுகிளவி யென்றும் பெயரெச்சமென்றுஞ்சொல்லப்பட்டன- வேலாண்முகத்தகளிறு --மழவிலையவேல்- உள்ளபொருள்- அன்ன-இன்ன- என்ன-கரிய -பெரிய- சிறிய-நெடிய- எனவருமிவையெல்லாம் - உடன்பாட்டுக்குறிப்புப்பெயரெச்சம், ஓடாதசாத்தன் - உண்ணாதசாத்தன் - இல்லாத

பொருள்- என்றாற்போல்வன- எதிர்மறைக்குறிப்புப்பெயரெச்சமெனக்காண்க.

செய்வதாதியறுபொருட் பெயருங் காரணமாதலால் இவ்வெச்சங்கள் காரியப்பொருட்டாய்நின்றன- அறுபொருட்பெயரும் என்ற உம்மையை- ஆறுந்தருவதுவினையே என்ற உம்மைபோலவைத்து அறுபொருட் பெயரிற் சிலகுறைந்தும் இன்னதற்கு என்பதும் இதுபயனென்பதும் பிறபெயருங் கூடியும் எச்சமாகநிற்குமெனவும் பொருளுரைத்துக்கொள்க, அவை வருமாறு- ஆடினகொடி- துஞ்சினகொடி- இவைகருவியுஞ் செயப்படுபொருளுங்குறைந் தெச்சமாகநின்றன, களைகட்டபயிர்- களைகட்டகூலி- இவை- களைகட்டது பயிர்க்கு-எனவும்- களைகட்டதற்குப்பயன்-எனவும் நிற்றலால - இன்னதற்கென்பதும் இதுபயனென்பதுங்கூடி யெச்சமாகிநின்றன, உண்டஇளைப்பு பூத்தகண்ணி (கண்ணி-மாலை,) குடிபோனவூர்-பொன்பெரியநம்பி- இவை செய்வதாதி எட்டினுள்ளடங்காப் பிறபெயர்கள்கூடி யெச்சமாகிநின்றன, இனிவந்ததன்மை- வந்தமை-என்றும்முடிந்ததன்மை-முடிந்தமைஎன்றும்- விகாரப்பட்டுவருதலும்நின்றவழி- நின்றுழி-வந்தவழி வந்துழி-சென்றவழி-சென்றுழி- எனவிகாரப்பட்டுவருதலும்-பிறவும்-காலங்கரந்தபெயரெச்சம்வினைத்தொகை எனக்கூறுதலால் வினைத்தொகையையும் பெயரெச்சத்துள் அடக்கிஇதுவேவிதியாகவுங்கொள்க, இப்பெயரெச்சவிகுதியாவன- அ- உம்-எனக்காண்க செய்வதாதியறுபொருட்பெயரொடுமுடியுமென்றவற்றுள்-வந்தமை - முடிந்தமை- நின்றுழி வந்துழி - என்பன எவற்றைக் கொண்டு முடிந்தனவெனின் - இங்கேதன்மை யென்றதுதொழிற் தன்மையாதலால் - செயல்கொண்டு முடிந்ததெனவும் - உழியென்பதிடமாதலால் நிலத்தைக் கொண்டு முடிந்ததெனவுங்காண்க, செல்வழி-சார்வழி என்பனவினைத்தொகை விகற்பமாதலால்விரிந்துழியிவைபோலுமென்க (கு) காலமும்வினையுந்தோன்றிப்பாற்குன்றது, பெயர்கொள்ளும்மது பெயரெச்சம்மே.என்றாராசிரியர்அகத்தியனாருமெனக்காண்க, (உக)

செய்யுமெனெச்ச வீற்றுயிர் மெய்சேறலுஞ், செய்யுளுள்ளு
ம்முந்தாதலுமுற்றே, லுயிருமுயிர்மெய்யுமேகலுமுளவே. *

இது, செய்யுமென்னும் எதிர்காலப்பெயரெச்சத்திற்கெய்தியதன் மேற்சிறப்புவிதியும் எய்தாததெய்துவித்தலு முணர்த்திற்று. (இ-ள்,) செய-ற்று-செய்யும் என்னும் பெயரெச்சத்திறுதியிலே நின்ற, உயிர்- லும்- உயிர்மெய்யெழுத்துக் கெடுதலும், செய்யுளுள்ளே, உம்- லும்-உம்-ஈறு உந்தெனத்திரிதலும், முற்றேல்- செய்யும் என்னும் முற்றுவினையாயின், உயி-முள-அதன் இறுதியுயிராயினும்உயிர்மெய் ஆயினும் கெடுதலும் உளவென்றவாறு

செய்யுளுள் உம் முந்தாமெனவே - மற்றவிதிகள் வழக்கிடத்தும்செய்யுளிடத்தும்ஆமென்பதும், முற்றேல்எனவே-செய்யுமென்னும் பெயரெச்சம் முற்றுவினையுமாமென்பதும் பெறப்பட்டன, எச்சம்முற்றுமெனவே- எய்தாததெய்துவித்தலாயிற்று (வறு) ஆகும்பொருள் - ஆம்பொருள்- போகும்போது- போம்போது-எம்-செய்யுள்- ஆம்பொருள்களாகுபவையார்க்கு மழிப்புண்ணாவாம்-வாம்புரவிவழுதி-எனவும் ஈரிடத்துஞ் செய்யுமென்

னும் எச்சத்து-ஈற்றுயிர்மெய்கெட்டது, தெண்கடற்றிரை மிசைப்பாயுந்து நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து - எனச்செய்யுளிடத்து-பாயும் என்பது-பாயுந்து-எனவும்,கூப்பெயர்க்கும்என்பது-கூப்பெயர்க்குந்து-எனவும்- உம்-உந்தெனத்திரிந்தது, அதுவாம்-இவைபோம். எம்-(இவைஉயிர்மெய்கெட்டுநின்றமுற்றுவினை) கலுழும்- மொழியும்-என்பன,செய்யுளிடத்து - சாரனுடைவென் றேமொழியுங்கலுழ்மே. அம்பலூருமவனொடுமொழிமே- எனஉயிரும் உயிர்மெய்யுங் கெட்டுவந்த முற்றுவினைகள், பொருண்மையின் முற்றெல்லாம்றனிலே-கேளும்-உளாயும் என்னும் ஏவல்முற்று-மாமறை மாக்கள் வருகுலங்கேண்மோ- முதுமறையந்தணிர் முன்னியதுணைமோ-என இவ்வாறு உயிரும் உயிர் மெய்யுங் கெட்டு வருதலுங்கொள்க,இவை இங்ஙனமாதலால்- சொற்றொறுமிற்றிதல் பெற்றியென்னுஞ் சூத்திரத்தால் ஆடுவாமோ என்னுந்தன்மைப்பன்மைமுற்றும்- பொன்னூசலாடாமோ தோழி-என எதிர்காலு இடைநிலைகெட்டு நிற்றலும் பிறவுங்கொள்க- சேறலும்-ஆதலும்-ஏகலும்-ஊடவெனமுடித்துக்கொள்க. (உஉ)

தொழிலுங்காலமுந்தோன்றிப்பால்வினை, யொழியநிற்பதுவினையெச்சம்மே. ❋

இது, வினையெச்சமாமாறு-று- (இ-ள்,) தொழிலுங்கால முந்தோன்றி, (பின்புசெய்து செய்யமுதலியவாக எடுத்துக்கூறப்படும் வாய்பாடுகளிலே) தொழிலும் மூன்றுகாலமும் முறையே தோன்றி, பால்-சம்-வினைமுற்றுதற்குவேண்டும் பால்காட்டும் விகுதியும் அதனொடுவினையும்ஒழியநிற்பனவினை யெச்சவினைவினைக்குறிப்புக்களாமென்றவாறு.

வினையொழிய எனப்பொதுப்படக்கூறினமையானே-தெரிநிலை வினைகுறிப்புவினை விகற்பங்களும் வினையாலணையும் பெயருந தொழிற் பெயருங்கொள்க.[வ-று,] அறனன்றி- அறனல்லாமல்-என நிறுத்தி-செய்தான்-செய்யான்-செய்த-செய்யாத-செய்து-செய்யாது-செய்தவன்-செய்யாதவன்- செய்தல்- செய்யாமை-எம்-இலன்-இல்லாத-இல்லாது-இன்மை-இல்லாமை - எனவும் வருவித்து-அறனன்றிச்செய்தான்-அறனன்றிச்செய்தல்-அறனன்றியில்லாமை-எனமுறையேயொட்டி.-அன்றி அல்லாமல்- என்னுங்குறிப்புவினையெச்சத்திற்கும், அருளின்றி-அருளில்லாமல்-என நிறுத்தி-செய்தான் முதலிய தெரிநிலை வினைவிகற்பங்களெல்லாம் வருவித்து-அருளின்றிச்செய்தான்-அருளில்லாமற்செய்தான் அருளின்றி

ச்செய்தல்-அருளின்றிச்செய்யாமை எனமுறையே ஒட்டி- இன்றி
இல்லாமல்-என்னுங்குறிப்புவினை யெச்சத்திற்கும் உதாரணங்கா
ணைக-செய்தான் என்னுந் தெரிநிலைவினையிடத்துச்செய்தல் என்
னுந்தெரிநிலைத்தொழிற் பெயர்போல - இலன் என்னுங் குறிப்பு
வினையிடத்து-இன்மை-இல்லாமை- என்பன குறிப்புத்தொழிற்
பெயராய்நிற்பதினாலே - அறனன்றியின்மை - அறனன்றியில்லா
மை-எனமுடிந்துநின்றன, இந்த-அன்றி-இன்றி என்பன இரண்
டும் செய்தெனன்னுந்தெரிநிலை யெச்சத்திற்குரிய குறிப்பெச்சம்-
இவை-அல்லாது-இல்லாது-அல்லாமல்-இல்லாமல் - அல்லாமை-
இல்லாமை-எனவிரிந்துநிற்கும், இவற்றிற்கு-ற்-து - மல்-மை-
என்பனவிகுதிகளாம்-பெரியவோதினுஞ் சிறியவுணரா-வெய்ய சி
றியமிழற்றுஞ்செவ்வாய்-எம்-செவ்வன்றெறிகிற்பான் - இனிதினு
ணர்ந்தான்-புதுவதனியன்றவணி-புதிதின- என- அகர ஈறுபற்றியு
ம் பிறஈறுகள்பற்றியும் வந்தன, இவை செயவென்னுந்தெரிநிலை
வாய்பாட்டிற் குரிய குறிப்பெச்சம்-செவ்வனே-இனிதாக- புது
வதாக-புதிதாக-என அகரவிறுய்நிற்றல்காண்க-அல்லது-அல்லா
ல்-என்பன-நானல்லதில்லை- நுணங்கியகேள்வியரல்லால் வணங்கி
யவாயினராதலரிது-எனவருதலின் இவையும்- இன்றும்- ஒல்லைக்
கொண்டான்-சிறிதுதந்தான்-வறிதுசென்றான்- எனக்குறிப்பாக
முடிக்குஞ் சொல்லைவிசேடித்து வருவனவெல்லாங் குறிப்புவினை
யெச்சமெனவுங்கொள்க, தெரிநிலைவினை யெச்சங்களுக்கு உதார
ரணம் வருஞ்சூத்திரங்களாற்காண்க, (சூத்திரம்,) காலமும்வினையு
ந்தோன்றிப்பாறோன்றாது -வினைகொள்ளும்மதுவினையெச்சம்
மே-என்றார் ஆசிரியர் அகத்தியனார்- நிலனும்பொருளுங்காலமுங்க
ருவியும்-வினைமுதற் கிளவியும் வினையுமுளப்பட-வவ்வறுபொரு
ட்குமோரன்னவுரிமைய- செயுஞ்செய்தவென்னுஞ்சொல்லே,
என்றார் தொல்காப்பியனார்- இவர் நிகழ்காலப் பெயரெச்சத்தை
இலேசினாலேதழுவினார். (உரு)

செய்துசெய்புசெய்யாச்செய்யூச், செய்தெனச்செயச்செயி
ன் செய்யிய செய்யியர், வான்பான் பாக்கின வினையெச்சம்பி
ற, வைந்தொன்றாறுமுக்காலமு முறைதரும். *

இது,மேற்கூறியவினையெச்சவாய்பாடுகள்இவையெனவுண
ர்த்திற்று.(இ-ள்)செய்துஎன்பதுமுதலிய ஒன்பதுவாய்பாடுகளால்
வருவனவும்,வான்-பான்- பாக்கு - என்னும் மூன்றுவிகுதிகளையு
டையனவும், இன-இவைபோல்வனபிறவும் , தெரிநிலைவினையெச்

சங்களாம், இவற்றுள்-முறையே, முன்னின்றஐந்தும்- இறந்தகா
லமும், இடைநின்ற-செயவென்பது ஒன்றும் நிகழ்காலமும், ஒ
ழிந்த-இறுதியில்நின்ற ஆறும் எதிர்காலமுந்தருமென்றவாறு.

இற்றுள்-செய்து-என்பது இடைநிலையானும் ஒழிந்தன இ
றுதிநிலையானுங் காலங்காட்டுமெனவுணர்க,வான்-பான்-பாக்கு-
என்பன அந்தந்தஎச்சவிகுதிகளாய்அம்மொழிகளையுணர்த்திநின்
றன, இவற்றிற்குஉதாரணம்வருஞ்சூத்திரத்திற்காண்க,இன்னமெ
ன்றதனால்-ஆல்-கால்-உம்-கு-பின்-முன்-கடை-வழி-இடம்-ஏல்-ன்
ல்-என்னும் விகுதிகளையுடையனவும் வினையெச்சங்களாமெனக்
கொள்க,[வ-று,]அற்றாலளவறிந்துண்க-ஒலித்தக்காலென்னாமுவ
ரி- காண்டலு மிதுவேசொல்லும் - எனச்செயின் என்னும்வாய்
பாடுபோல இவை எதிர்காலங்காட்டின-கு - உணற்குவந்தான்-எ
ன எதிர்காலம்பற்றிவரும் - எற்றுக்குவந்தான் என்பது-எக்காரிய
ஞ்செய்தற்கு வந்தான் என இதன்குறிப்பாய் நிற்கும்- எவற்றுக்
குவந்தானென்பதும் அது,பின்- நீர்பொய்கூறியபின் மெய்கூறு
வர்யார்- என இறந்தகாலமும்-நீயிவ்வாறுகூறுகின்றபின் உரைப்
பதுண்டோ-என நிகழ்காலமும் பற்றிவரும்,முன்-மருந்துதின்ற
முன் நோய்தீர்ந்தது-என இறந்தகாலம்பற்றிவரும், கடை- தொ
டர்கூரத்துவாமைவந்தக்கடை-என-இ-ம்,வழி- விடுவழி விடுவழி
ச்சென்று-என-இ-ம்-ஆடும்வழியாடும் வழிஅகலேலன் மலினே-எ
ன-நி-ம்,இடம்-களையுநர்கைகொல்லுங்காழ்த்தவிடத்து-என-இ-
ம்-உரைக்குமிடத்து-என. நி-ம்,ஏல் - அவாவுண்டேலுண்டாஞ்சி
றிது,ஏன்-அவன்என்றுமேனும்வரும், இந்தஇரண்டையுங்குறிப்
பெச்சமென்பாருமுளர்.

இன்னும்-மல் மை கடை-என்னும் விகுதிகளையுடையன-கூறுமற்குறித்த
தன்மேற்செலலுங்கடுங்கூளி- கூறாமைநோக்கிக்குறிப்பறிவான்- ஈதலையாக்
கடை-என எதிர்மறை விகற்பங்களாய் வருதலும் இன்னும் வினைக்குறையாய் வ
ருவனவெல்லாங்கொள்க. பிறவென்றதினாலே- செய்தென்னும் வாய்பாட்டெ
ச்சம்-ஆடி- ஓடி-உரிஞிப்போயினன் எம் இயல்பாய்நின்றன் போய்நின்றன் என
வும் உகரஈறு இகரமாய்த்திரிந்தும் யகரஒற்றுவரக் கெட்டும் செய்தென்னும்
வாய்பாடுதோன்றநின்று இறந்தகாலங்காட்டுமெனவுங்கொள்க, இவற்றைஇ
கரவீறு என்றும்-யகர ஒற்றீறென்றுங் கொள்ளாமல் உகரஈற்றின்திரிபென்றே
கொள்க-என்னெனின் இவற்றையெதிர்மறுத்துக்கூறும்போது-ஆடாது ஓடா
து-உரிஞாது-ஆகாது - போகாது என உகரஈற்றே தோன்றலாலென்க-தழீஇக்
கொண்டான்-வரனசைஇ-அளைஇ என்றற்போல்வன செய்யுள் முடிபாய்நின்று
இறுதிநிலைவிகாரப்பட்டு இறந்தகாலங் காட்டின - மழைபெய்யமின்னிற்று-ம
ழைபெய்ய நெல்விளைந்தது-எனச்செயவெனெச்சம் எதிர்காலமும்- இறந்தகா
லமும்-பற்றிவருமெனவும்,இன்னுமிவ்வெச்சங்கட்குஎடுத்துச்சொல்லாதனவெ
ல்லாம்அமைத்துக்கொள்க,ஐந்தொன்றாறு இன்ன-வினையெச்சம்-அவைமுக்கா

லமுந்தரும்-என இருமுடிபாக்குக, (கு) செய்து செய்பூச் செய்பு செய்தெனச், செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென, வவ்வகையொன்பதும் வினையெஞ்சுகிளவி, எம்-பின்முன்காலக்கடைவழியிடத்தென்னு, மன்னமரபிற்கா லங்கண்ணிய, வென்னகிளவியுமவற்றியல்பினவே, எனக்கூறுதலுங்காண்க. (௨௪)

அவற்றுண், முதலினான்குமீற்றின்மூன்றும், வினைமுதல்கொள்ளும்பிறவுமேற்கும்பிற. *

இது, அவ்வெச்சவினைகளுக்காவதோர் முடிபுவேறுபாடுணர்த்திற்று. (இ-ள்,) முதலினான்கும்- (மேலைச்சூத்திரத்து) முதலிலேசொல்லிய-செய்து-செய்பு-செய்யா-செய்யூ, என்னும் நான்கும், ஈற்றின்மூன்றும் - இறுதியிலேசொல்லப்பட்ட- செய்வான் செய்பான்-செய்பாக்கு-என்னும்மூன்றும், வினைமுதல்கொள்ளும்-வினைமுதலைக்கொண்டுமுடியும், பிற-இடைநின்ற- செய்தென-செய-செயின்-செய்யிய - செய்யியர்- என்னுமைந்தும் இன்னவென்றதனால் வருவனவும் வினையெச்சக்குறிப்புகளும், பிறவுமேற்கும்- தம்மைநடத்தினவினைமுதலையும்பிறவினைமுதலையுங்கொண்டுமுடியுமென்றவாறு.

[வ-று,] அவனுண்டுவந்தான்- அவனுண்புவந்தான் - அவனுண்ணாக்களிப்பான்-அவனுண்ணூமகிழ்வான்-அவன்கொல்வான்வந்தான்-அவன்அலைப்பான்சென்றான்- அவனுண்பாக்குச்சென்றான்-எனமுதலிலேநின்ற- நான்கும்-ஈற்றிலேநின்ற- மூன்றுமாகிய-உ-பு-ஆ-ஊ-வான்-பான்-பாக்கு-என்னும்விகுதிகளையுடையனேழும் வினைமுதலைக்கொண்டன, அவனுண்டெனமகிழ்ந்தான்- அவனுண்டெனமகிழ்ந்தானிவன், அவனுண்ணவந்தான் அவனுண்ணவந்தானிவன், அவனுண்ணின்மகிழ்வான்-அவனுண்ணின்மகிழ்வானிவன், அவனுண்ணியமகிழ்வான் -அவனுண்ணியமகிழ்வானிவன், அவனுண்ணியர்மகிழ்வான்-அவனுண்ணியர் மகிழ்வானிவன், என இடையிலேநின்ற-என-அ-இன்-இய-இயர் என்னும்விகுதிகளையுடையவைந்தும்-வினைமுதலையும் பிறவினைமுதலையுங்கொண்டன-அவனுண்டாலுவப்பான்-அவனுண்டாலுவப்பானிவன், அவனுண்டக்காலுவப்பான் - அவனுண்டக்காலுவப்பானிவன், மழையின்றிப்பொய்ப்பின்-விருந்தின்றியுண்ணானவன்-என இன்னவென்றதனால்வந்த- ஆல்-கால்- முதலியவிகுதிகளையுடையனவும்-வினையெச்சக்குறிப்புகளுமிவ்வாறு வினைமுதலையும்பிறவினைமுதலையுங்கொள்ளுமெனக்காண்க,

இனிச்செய்புளகத்துவருமாறு - உ- உழுதுண்டு வாழ்வாரோவாழ்வார்-என்னணித்துணிக -பரிஇயுயிர்செகுக்குமைவரோடு சினைஇநிவந்தலைக்கொண்டது (பரிஇ பரிந்து,) (சினைஇ- சினந்து,) எம்-பு -புலராப்பசிலையிடையிடுபுதொடு

த - தெரிபுதெரிபுநத்தினவேறு- எம்-ஆ-கல்லாக்களிப்பர் தலையாயார்-திலகிலேயா நாணிநின்றாள்- எம் - ஐ - படுமகன்கிடைக் கைகாணூஉவீன்றஞான்றினும் பெரிதுவந்தனளே- நிலம்படையூவெழுதருவலம் படுகுஞ்சரம்- எம்-வான்- கொல்வான் கொடித்தானை கொண்டெழுந்தான்-எம்-பான்- அலைப்பான் பிறிதுயிரையாக்கலுங்குற்றம்; எம்-பாக்கு-புணர்தரு செல்வந்தருபாக்குச் சென்றோன்-எம்-முதலில்நான்கும் ஈற்றில் மூன்றும் வினைமுதல்கொண்டன, என- காந்தளஞ்சிலம்பிற்சிறுகுடிபசித்தெனக் கருங்கண்யானைக்கோடுநொடித்துண்ணும்- வி - கோவா வாரம் வீழ்த்தெனக்குளிர்கொண்டுபேஎநாஅந்தாழ் நீர்ப்பனிச்சுனை- பி (நொடித்தல்-ஒடித்தல், பம் - துளை;) ஆரம்வீழ்த்தெனக் குளிர்கொண்டநாஞ்சுனை-வினைமுதலிரண்டு- அ உண்ணவந்தான் உடுக்கவந்தான் -பிறர்கொள்ளக்குறைபடாக் கூழுடைவியனகர் - மழைபெய்ய நெல்விளைந்தது, வி-டு,இ- தாம்வேண்டினல்குவர்-எம்- வி- யாம்வேண்டிற்கெளவையெடுக்கு மிவ்வூர் எம்-பி-வி-டு, இய-காணியவா வாழிதோழி-வி-வாணுதலரிவை காணியபூணகமாகநின் புனைமணி நெடுந்தேர்-பி -வி-டு,இயர்- பசலையுண்ணியர்வேண்டும்-வி-கொங்கர்ப்படணியியர் யழையன்வெல்வாய்த்தன- பி-வி-டு-எனவும் இடையில ஐந்தும் வினைமுதலையும் பிறவினைமுதலையுங்கொண்டன, அற்றலுடங்கின் பந்தரும்-வி-அற்றலளவறிந்துண்க-பி-வி-டு, எம்-விண்ணின்றிப்பொய்ப்பின்-வி-விருந்தின்றியுண்டபகல்-பி-வி-டு-எனவும் இன்னவென்றதனால் வருவனவும் வினையெச்சக் குறிப்புகளும் இவ்வாறு வினைமுதலையும் பிறவினைமுதலையுங்கொள்ளுமெனக்காண்க, நடந்துவந்தவன்-நடந்துவருதல்- என்றற்போல ஒழிந்தனவற்றிற்கும் வினையாலணையும் பெயருந்தொழிற்பெயரும் வருவித்து வினைமுதலும் வினைமுதலொடு பிறவு மேற்றல்காண்க, பிறவுமன்ன, இனி யிவ்வினையெச்சங்கள் நடந்துவந்தான்-மழைபெய்ய நெல்விளைந்தது- எனக்காரணப்பொருட்டாயும், நெல்விளையமழைபெய்தது எனக்காரியப்பொருட்டாயும், உண்ணவந்தான்- எனக்காரண காரியப்பொருட்டாயும், கடிக்கமலமுகங்காட்டக்கருநெய்தல் கண்காட்டும் - எனக்காரணகாரியமிரண்டு மின்றியும் வருதல் காண்க,

இச்சூத்திரத்துள்- வினைமுதல்கொள்ளும் பிறவுமேற்கு மென்பதற்கு -வினைமுதல் வினைகொளும் பிறவினைகொள்ளுமெனப் பொருளுரைத்தாலென்னெனின் நடந்துவந்தான்- என வினைமுதல் வினைகொளினும்-நடந்துவந்தான் சாத்தன் என வினைமுதல்வந்தே முடிதலானும்- ஆசிரியர் தொல்காப்பியனார்(சூத்) அவற்றுள்- முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின - எம்- வினையெச்சம் வினைமுதலானு மானவந்நிலையும் வினைநிலையானுந்- தாமியன் மருங்கின்முடியுமென்ப- எனக்கூறுதலானும்- பொருந்தாதென்க, நான்கும்-மூன்றும்- வினைமுதல்கொள்ளும்-எம்-பிற-பிறவுமேற்கும்-எம்-இருமுடியாக்குக. (உ௬)

சினைவினைசினையொடுமுதலொடுஞ்செறியும் *

இது, மேல்வினைமுதல்கொள்ளுமென்றவற்றிற்கு ஓர்புறனடையுணர்த்திற்று.(இ-ள்,)முதலில்நான்கும் ஈற்றில்மூன்றுமென மேற்கூறிய எச்சங்கள்-வினைமுதல்கொள்ளுமென்றதனாலே)சினைவினையாயிற் சினையொடுமுடிதலேயன்றி முதலுடனேயும்முடியுமென்றவாறு.

[வ-று,]காலிற்றுவீழ்ந்தது-கண்சிவந்துநொந்தது-எனச்சினைவினைசினையொடுமுடிந்தன, காலிற்றுவீழ்ந்தான்- கண்ணொந்

ருகிடந்தான்-எனச்சினைவினைமுதலொடுமுடிந்தன- காலிறுபுவீழ்ந்தான்-காலிறுவீழ்ந்தான்-காலிறாஉவீழ்ந்தான்- எனப்பிறவாய் பாடுகளோடும் ஒட்டிக்கொள்க. (உகூ)

சொற்றிரியினும் பொருடிரியாவினைக்குறை. *

இது வுமது,(இ-ள்,) வினைக்குறை - மேற்கூறியவினையெச்சவாய்பாடுகள், சொற்றிரியினும் - பிறவாய்பாடுகளாகத் திரிந்துவரினும்,பொருடிரியா-அவற்றின்-பொருள் வேறுபடாவா மென்றவாறு.

[வ-று,] ஞாயிறுபட்டுவந்தான்-கோழிகூவிப்பொழுது புலர்ந்தது-(புலர்ந்தது-விடிந்தது,) யானைஒடித்துண்டு குறைந்தமரம்-எம்-யான்கொள்வான்பொருள் கொடுத்தான் - எம்-வரும்பிறவுமன்ன,இவை-செய-என்னெச்சஞ்செய்து- செய்வான் எனத்திரிந்து நின்றும்-அச்செயஎன்னெச்சப்பொருட்டாயே நின்றன -எனவே-ஞாயிறுபட்டுவந்தான்- என்பதற்குப்பொருள்-ஞாயிறுபடவந்தான்-எம்-யான்கொள்வான்-என்பதற்கு-யான்கொள்ளனவும்உணரவேண்டுமென்பதாயிற்று. இன்னுந்திரிந்துவருவனஉளவாயின் அவற்றிற்கும் இவ்வாறுபொருளுரைத்துக்கொள்க(உஎ)

ஆக்கவினைக்குறிப்பாக்க மின்றியலா. *

இது, வினைக்குறிப்பிற்குஆவதோர் புறனடையுணர்த்திற்று (இ-ள்,) ஆக்கவினைக்குறிப்பு- ஆதலென்று ஆக்கத்தைக்கொண்ட வினைக்குறிப்புச்சொற்கள், ஆக்கமின்று-அந்தஆக்கச்சொல் இல்லாமல், இயலா-நடவாவாமென்றவாறு.

வேற்றுமைப்புணர்ச்சிக்குவேற்றுமைஉருபுகள் விரிந்தாயினுந்தொக்காயினுமதற்கு உரிமையாய்நிற்றல்போல-ஆக்கவினைக்குறிப்பிற்கு ஆக்கச்சொல் விரிந்தேனுந்தொக்கேனும் அதற்கு உரித்தாய்நிற்றலால்-ஆக்கமின்றியலா- என்றார், [வ-று,] சாத்தன் நல்லனாயினான் - சாத்தன் நல்லன் - கல்வியிற்பெரியனாயினான்- கல்வியிற்பெரியன்- எம் - குருதிபடிந்துண்டகாகம் உருவிழந்து குக்கிற்புறத்தசிரல்வாய (குக்கில் - செம்போத்து,சிரல் - சிச்சிலிக்குருவி,)புறத்தவாயின- வாயவாயின - என-ஆக்கச்சொற் கூட்டிப்பொருளுணர்க - இவற்றுள் ஆக்கச்சொல் விரிந்துந் தொக்கும்வந்தன் - எனவே - நல்லன் என்பது இயற்கை வினைக்குறிப்பாயின்- ஆக்கச்சொல் - தொகுதல்விரிதல் என்னும் இரண்டும் வேண்டாமல் - சாத்தன் நல்லன் என்றேவருமென்பதாயிற்று.

ஆகவே - வினைக்குறிப்பு ஆக்கவினைக் குறிப்பும் இயற்கைவினைக் குறிப்பும் என இருவகைப்படும் - இனி வினையெச்சங்கொண்டு முடியும் ஆக்கவினைக்குறிப்பிற்கு இந்தவிதியென்று சொல்வாருமுண்டு அது பொருந்தாதென்க. (உஅ)

பல்லோர்படர்க்கை முன்னிலை தன்மையிற், செல்லாதாகுஞ்
செய்யுமென்முற்றே. *

இது, எய்தியது ஒருபக்கம் விலக்குகின்றது, (இ-ள்,) பல-கை-உயர்திணைப்படர்க்கைப்பன்மையிலும்,முன்-யில்-முன்னிலையிடத்தும் தன்மையிடத்தும், ஆகுஞ்செய்யுமென்முற்று, செய்யும் என்னும் பெயரெச்சத்தாலாகுஞ் செய்யும் என்னும்முற்று வினைச்சொல், செல்லாது -நடவாது, எ-று.

இந்தப்பால்,இடங்களை விலக்கவே ஒழிந்தபடர்க்கை நான்குபாலிலும்வருமென்பதாயிற்று. [வ-று,] அவனுண்ணும்-அவளுண்ணும்-அதுஉண்ணும்-அவையுண்ணும்-எனவரும்.

அவையெத்திறத்தாலும் பெயர்முடிபினவே - என்றும் - பெயரலதேற்பிலமுற்றே- என்றுங் கூறினமையால் - இதனைமுற்றென்றுகூறி - அவனுண்ணும் என எழுவாய்ப்பயனிலையாக உதாரணங்காட்டியதென்னை- அவனுண்ணுமூண் எனமற்றுமச்சொல் நோக்கிற்றெனின், இருதிணைக்கும் பொதுவாகிய செய்யும் என்னுஞ்சொல் எச்சமோமுற்றோ என ஐயத்தை விளைத்து உண்ணும் என நின்றபோது அவன்-அது- என்னும்-வினைமுதல் வந்து திணையும் பாலும் விளக்கத்தொடர் மொழிப் பொருளுணர்த்தி எடுத்தலோசையால் மற்றோர்சொல்லை நோக்காது செப்பின்புணர்ச்சிபோல - உண்ணுமவன் எனமுடிந்து பின்னர் அவனுண்ணும் அதுவரும் எனமாறி நிற்பது மரபாதலால் இது முற்றிற்கு இலக்கணமென்றும், உண்ணுமவன் வாழுமில் எனப்படுத்தலோசையாற் கூறியபோது - அவன்- இல்-என்றமுடிக்குஞ்சொல்லால் அமையாது - உண்ணுமவன்நல்லன் வாழுமில்நன்று என மற்றோர்சொல்லை நோக்கி நிற்பது எச்சத்திற்கு இலக்கணமென்றும் விடைகொடுத்து ஐயமகற்றுக- (விடை-எதிர்மொழி.) (உக)

யாரென் வினாவினைக்குறிப்புயர் முப்பால்- *

இது,பாற்பொதுவினையுணர்த்திற்று, (இ-ள்,) யாரென்-பு-வினாப்பொருளைத்தரும் யார்என்னும் வினைக்குறிப்புமுற்று, உயர்-ல்-உயர்திணைமூன்றுபாற்கும்பொதுவினையாம்,எ-று.

[வ-று,] அவன்யார்-அவள்யார்-அவர்யார்-எனவரும், யார்அது என அஃறிணைக்கண் வருதலும், நாளொன்றுள்ளமார் என- யார் என்பது ஆர் என மருவி வருதலும் புதியனபுகுதலாமென்க, இதிற்பொதுவினையென்னும்பயனிலைகுறைந்துநின்றது. (௩௰)

எவனென்வினாவினைக் குறிப்பிழியிருபால், *

இதுவுமது,[இ-ள்,]எவ-பு-வினாப் பொருளைத்தரும் எவன் என்னும் வினைக்குறிப்புமுற்று,இழி-ல் - அஃறிணையிருபாற்கும்

பொதுவினையாம், எ-று.

அம்மெதவன் - அவையெவன் - எனவரும் - இது - வழக்கிடத்து - என்ன - எனவும், செய்யுளிடத்து - என் - எனவும் - என்னை - எனவும் - மருவிவருதல்புதியனபுகுதலாம், இனி - யாவர் என்னும் உயர்திணைப் பன்மைப்பெயர்ச்சொல்லும் - இவ்வாறு - யார் - ஆர் எனமருவிவருதலும், யார் என்வினைக்குறிப்புப்போலத்தோன்றுதலும், எவன் - என்னும் உயர்திணையாண்பாற்பெயர்ச்சொல்லும் எவன் என்னும் வினைவினைக்குறிப்புப்போலத்தோன்றுதலுமுளவாயினும் - உயர் முப்பால் - இழியிருபால் என்றதனாலே இவை அவையல்லவெனக் காண்க - இச்சூத்திரத்திலும் பொதுவினை யென்னும் பயனிலைகுறைந்து நின்றது. (௫௪)

வினைமுற்றே வினையெச்சமாகலுங், குறிப்பு முற்றீரெச்சமாக லுமுளவே. *

இது, இருவகைமுற்றிற்குமாவதோர் புறனடை யுணர்த்திற்று. [இ-ள்,] வினை - லும் - தெரிநிலைவினைமுற்றுச்சொல்லே தெரிநிலை வினையெச்சமாகிவருதலும், குறிப் - முள - குறிப்புமுற்றுச்சொல் லேகுறிப்புவினையெச்சமாகியுங்குறிப்புப் பெயரெச்சமாகியும்வருதலுமுளவாம், எ-று.

குறைச்சொல்லாகாதுபாற்காட்டிநிற்றலால் - வினைமுற்றே - என்றும், வினையெச்சப்பயனிலையையும் பெயரெச்சப்பயனிலையையும்வேண்டிநிற்றலால் - எச்சமென்றும் - இவ்வாறுவருதல்சிறுபான்மையாதலால் - ஆகலுமென்றுங்கூறினர் - (பால் - கூறு,) மை - பகுதிப்பொருள்விகுதி) [வ-று,] நடந்தான்வந்தான் - நடந்தாள்வந்தாள் - நடந்தார்வந்தார் - நடந்ததுவந்தது - நடந்தனவந்தன - எம் - நடந்தாய்வந்தாய் - நடந்தீர்வந்தீர் - எம் - நடந்தேன்வந்தேன் - நடந்தோம்வந்தோம் - எம் - முறையே ஐம்பால்மூன்றிடத்தும்தெரிநிலைவினைமுற்றுவினையெச்சமாயின - இவற்றுள்முன்னின்றமுற்றுவினையை - நடந்துவந்தான் நடந்துவந்தாள் - நடந்துவந்தார் - எனவினையெச்சமாக்குக, ஒழிந்தபகுதிகளாற்பிறக்கும் வினைகளும் இவ்வாறுவருமெனக்காண்க, குழையினன்வந்தான் - குழையினள்வந்தாள் - குழையினர்வந்தார் - என இவ்வாறேகுறிப்புமுற்று ஐம்பால்மூன்றிடத்திலும்வினையெச்சமாய்வருமெனக்கொள்க. இவற்றுள்முன்னின்ற குறிப்புமுற்றைக் குழையினனாகிவந்தான் - குழையினளாகிவந்தாள் - குழையினராகிவந்தார் எனவினையெச்சமாக்கிக்காண்க - மற்றப்பாலிடங்களிலும்ஒட்டிக்கொள்க,

குழையினன் கொற்றன் வந்தான் - குழையினள் கொற்றி வந்தாள் - குழையினர் கொற்றர் வந்தார் - எம் - குழையினன் கொற்றன் - குழையினள் கொற்றி - குழையினர் கொற்றர் - எம் - ஐம்பால் மூன்றிடத்து மிவ்வாறு குறிப்புமுற்றுப் பெயரெச்சமாமெனவுங் கொள்க. இவற்றுள் முன்னின்ற குறிப்புமுற்றை - குழையினனாகிய கொற்றன் வந்தான் எனவும் - குழையையுடைய கொற்றன் - எனவும் பெயரெச்சமாக்கிக் காண்க, ஒழிந்தபாலிடங்களிலும் ஒட்டிக்கொள்க.

இனிச் செய்யுளிடத்து வருமாறு, காணுங் கழிந்தவைகலும் - மோயினள் உயிர்த்தகாலை - முகந்தனர் கொடுப்ப - விளிப்பதுபயிலும் - குடைவன ஆடி - எம் - பெயர்த்தனென் முயங்கயான் - மாறினம் பிறந்துயாம் - எம் - சேர்ந்தனை சென்மோ - இயக்கினிர் கழிமின் - எனவும் ஐம்பால் மூவிடத்தும் - வினைமுற்று வினையெச்சமாயின, வில்லொருகணை தெரிந்து - அமரியமுகத்தாள் விழிநிலைகொள்ளாள் - உச்சிக்கூப்பிய கையினர் தற்புகழ்ந்து - விழுமிது கழிவதாயினும் - நிலமிசைப் புரளுங் கையவெய்துயிர்த்து - எம் - துணையிலெனஞ்சினேன் றுயருழந்திலேனே யோன் - நீர்வார்கண்ணேந் தொழுது நிற்பழிச்சி - எம் - நீர்வார்கண்ணே நீயிவணொழிக வென்வேல்வலத்தினிர் பொருடரல்வேட்கையி னுள்ளினிர் - எம் - வினைக்குறிப்புமுற்று வினையெச்சமாயின, வெந்திறலினன் விறல்வழுதி - அஞ்சாயலன் ஆயிழை - கடற்றுனையர் கழல்வேந்தர் - பெருவரைமிசையது நெடுவெள்ளருவி - புன்றலைமைய சுரனிறந்தோரே (ஒ்மை - மரப், ) எம் - பெருவேட்கையேனெற்பிரிந்து - கண்புரைகாதலேமெம்முள்ளான் - எம் - உலங்கொடோளினை யொருநின்றல் - வினைவேட்கையிர் வீரர்வம்மின் - எம் - மூவிடத்தும் ஐம்பாலிலும் குறிப்புமுற்றுப் பெயரெச்சமாயின, இவைமுறையே - காணுதுகழிந்த - மோந்துயிர்த்த - முகந்துகொடுப்ப - எனத் தெரிநிலைவினைமுற்று வினையெச்சமாதலும், வில்லனுமி யொருகணை தெரிந்து - முகத்தாளாகி விழிநிலைகொள்ளாள் - உச்சிக்கூப்பிய கையினராகித் தற்புகழ்ந்து - எம் - வெந்திறலினையுடைய விறல்வழுதி - அஞ்சாயலையுடைய ஆயிழை - கடற்றுனையராகிய கழல்வேந்தர் - எம் - வினைக்குறிப்புமுற்று வினையெச்சமாகியும் பெயரெச்சமாகியும் வருதலும், இவற்றுள் வரும் வினைகளும் பெயர்களும் முற்றுப்பயனிலையாகாமல் எச்சப்பயனிலையாதலுங் காண்க, ஒழிந்தனவற்றையு மிவ்வாறு கண்டுகொள்க, இனி வினைமுற்றுக்கள் சொற்றிரியினும் பொருடிரியா வினையெச்சங்களாயும் வருமெனக்கொள்க, அவை வருமாறு, விண்ணிற்றூவியிட்டான் வந்துவீழ்ந்தன - பாயுமாரிபோற்பகழிசிந்தினர் ஆயர்மத்தெறி தயிரினுயிர்னர் - ஆனிரைபெயர்ந்தது ஆயரார்த்தனர் - தோளொன்றுமுடங்கிற்று ஒன்றுநிமிர்ந்தது - சரஞ்சென்றது சென்றதாவி - எனவருமிவற்றை - தூவிட - சிந்த - ஆனிரைபெயர - முடங்க - செல்ல - எனச்செய என்னெச்சவாய்பாடு செய்து - என்னெச்சமாய்த் திரிந்துநின்றன - எனக்காண்க - இன்னும் - வினையெச்சமாகவும் என எண்ணிநின்ற எதிரது தழுவிய எச்சவும்மையினாலே - உண்டான் சாத்தனூர்க்குப்போனான் என்றால் - உண்டசாத்தன் எனப்பொருள்படுதலால் - வினைமுற்றுப் பெயரெச்சமாதலும், வெறுத்தனன் ஞானிவீட்டையடைந்தான் - என்றால் - வெறுத்தான் ஞானி எனப்பொருள்பட்டுப் - பெயரெச்சமுற்றாதலும், சாத்தன் உழுதுவந்தான் என்றால் - சாத்தனுழுதான் எனப்பொருள்பட்டு வினையெச்சமுற்றாதலும், பெறுவதுகொள்வாருங்கள்வருநேர் - என்றால் - நேர்வர் - என முதனிலைத்தனிவினைமுற்றாதலும், வரிபுனைபந்து - அறுவேறுவகையின் - செய்தக்கவல்ல - மண்மாண்புனைபாவையற்று - என்றால் - வரிந்து - அற்று - செய்ய - மாட்சிமைப்பட எனப்பொருள்படுதலால் முதனிலைத்தனிவினைகள் வினையெச்சமாதலுமுளவெனவுங்கொள்க. (ரு) வினையெஞ்சுகிளவியும் வேறுபல்குறிய - என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாருமெனக்காண்க. ஆகவும் ஆகவுமுள - எனமுடிக்க. (கூஉ)

வினையியல் முற்றிற்று.

# இடைச்சொல்லியல்.

வேற்றுமை வினைசாரியை யொப்புருபுக, டத்தம்பொருளவி சைநிறையசை நிலை,குறிப்பெனெண்பகுதியிற்றனித்தியலின்றி ப், பெயரினும்வினையினும் பின்முன்னோரிடத், தொன்றும்ப லவும்வந்தொன்றுவதிடைச்சொல். *

(அதுவே, யியற்சொற்றிரிசொல்லியல்பிற்பெயர்வினை-யெ னவிரண்டாகுமிடையுரியடுத்து-நான்குமாமெனா- நிறுத்தமுறை யே) இடைச்சொல்லிலக்கணம் இவ்வியலாலுணர்ந்தத்தொடங்கி அவையிவ்வளவினையுடையன இவ்வியல்பினையுடையனஎன அவற்றி ன்பொதுவிலக்கணமுணர்த்திற்று இச்சூத்திரம் - (இ-ள்,) வேற் றுமை-யுருபு-எழுவாயுருபுமுதலிய எட்டுவேற்றுமையுருபுகளுள்- பெயரும் பெயரதுவிகாரமுமாகிய எழுவாயும் விளிபுமொழித்து ஒழிந்த ஐமுதலிய ஆறுஉருபுகளும்,வினையுருபு- பகுதி - விகுதி- இடை நிலையென்னும் வினையுருபுகளுள் பகுதியொழிந்தவிகுதி முதலியவினையுருபுகளும், சாரியையுருபு- அன் - ஆன்முதலியசா ரியையுருபுகளும், ஒப்புருபுகள் - போலப் - புரையமுதலிய உவ மையுருபுகளும், தத்தம்பொருள- தத்தமக்குரியபொருளையுணர் த்திவருவனவும்,இசைநிறை- வேறுபொருளின்றிச்செய்யுளிசைநி றைத்தலேபொருளாகவருவனவும், அசைநிலை- அசைத்தலேபொ ருளாகநிற்பனவும்,குறிப்பு-(வெளிப்படையாய்வருமிவைபோலா காது) குறிப்பாற்பொருளுணரவருவனவும், எண்ணெண்பகுதியி ன்- என்னுமிவ்வெட்டுவகையினையுடையவாய், தனித்தியலின்றி- தனித்துநடக்குந்தன்மையின்றி, பெயரினும்வினையினும்-பெய ர்ச்சொல்லிடத்தும் வினைச்சொல்லிடத்தும், பின்முன்னோரிடத் து-அவற்றின்பின்னாகவாயினுமுன்னாகவாயினுமோரிடத்து,ஒன் றும்பலவும்வந்து - ஒன்றாயினும்பலவாயினும்வந்து, ஒன்றுவதி டைச்சொல் - (அப்பெயர்வினைகளுக்கு அகத்துறுப்பாயும்புறத் துறுப்பாயும்) ஒன்றுபட்டுநடக்குந்தன்மையது - இடைச்சொ ல்லாம், எ-று.

எனவேதனித்துநடத்தலின்றிப்பெயர்வினைகளினிடமாகநடத் தலின் இடைச்சொல்லென்னுங் காரணக் குறிவிளங்கநின்றமையு

ணர்க. அங்ஙனமாயின் இடைச்சொல்-என இயற்சொல்லாற்கூறாது இடையெனத்திரிசொல்லாற் கூறியதென்னையெனின் - இயற்சொல்லாற்கூறின்- இடப்பொருளைபுணர்த்துஞ்சொல்லெனப்பொருள்படுமாதலின் அதனையொழித்தற்கு இடைச்சொல் எனப்பட்டதென்க-இனிப்பெயருமாகாது வினையுமாகாது அவற்றின்வேறுமாகாதிடைநிகர்த்ததாய் நிற்றலினிடைச்சொல்லெனினும் அமையும் இனி முன்னும்பின்னும்வருமாயினும்பெரும்பாலும் இடையில்வருதலால்இடைச்சொல்லென்பது ஆசிரியர்கருத்து - உருபுகளொன்றதை- வேற்றுமைவினை முதலியவற்றொடுங்கூட்டுக- [வ-று,] நம்பியை- நம்பியால்- நம்பிக்கு - என்பவற்றில் பெயரின்புறத்ததாய் உருபிடைச்சொல்லொன்றுவந்தது- தச்சன்- குழையன்- எ-ல்-பெயரினுங்குறிப்புவினையினும் அகத்ததாய்விகுதியிடைச்சொல்லொன்றுவந்தது, தச்சிச்சி-நிலத்தினன்- எ- ல் - அவ்விரண்டினும்அகத்ததாய்-முறையே இடைநிலையும் விகுதியும்இடைநிலையுஞ்சாரியையும் விகுதியுமாகிய இடைச்சொற்கள்பலவந்தன, நடந்தான்வந்தான்-எ-ல் இடைநிலை விகுதியிடைச்சொற்கள் பலவந்தன-நடந்தனன்-வந்தனன்-எ-ல்-அவற்றொடுசாரியையும் வந்தன-அவன்எவன்-ஏனோன்ஏனையோன் - என்பன-இடைச்சொல் அடியாகப்பிறந்தபெயர்களாதலால்- இவற்றின்பகுதிவிகுதிமுதலியனவும்- போல- புரைய- என்பன இடைச்சொல்லடியாகப்பிறந்தவினையெச்சங்களாய் நிற்றலின்- இவற்றின்பகுதிவிகுதிமுதலியனவும், சாத்தனென்பான்- சாத்தனாயினான்- எ- ல்- என்பான் ஆயினான்என்பன- வினையிலக்கணைகளாய் நிற்றலின் இவற்றின்பகுதிவிகுதிமுதலியனவும் அகத்ததாய் நின்றபலவிடைச்சொற்கள்-(இலக்கணைஎன்பதற்குப்பொருள்முன்னேசொல்லப்பட்டது-அதுமன்-கொன்னூர் - எனப்பெயரின்புறத்ததாய்ப்பின்னும்முன்னுமொன்றுவந்தது, அதுமற்றம்ம - ஓஒவுவமையுறழ்வின்றியொத்தது - இவ - ல்- மற்று - அம்ம - எம் - ஓ- ஓ - எம்- பின்னுமுன்னும்பலவந்தன, வருகதில்- ஓஒதந்தார்-எனவினையின்புறத்ததாய்ப்பின்னும்முன்னும் ஒன்றுவந்தது, வருகதில்லம்ம - ஏஎயம்பன்மொழிந்தனள்- என -இ-ல்- பின்னும் - முன்னும்-தில்- அம்ம-ஏ-ஏ- எம்- பலவந்தன- பிறவுமிவ்வாறேகண்டுகொள்க.

என்றிசினோர்- அருங்குரைத்து - எனவினைத்திரிசொல்லின் அகத்ததாய்வருவனவும்பொதுப்படவந்தென்றறிதல்- தில்- மன்- கொன்- என்பன- போகு

கதில்ல- மன்னைச்சொல்- கொன்னைச்சொல்-என ஈறுதிரிந்துவருதலும் - ஊகாரமுன்னர் என எழுத்துச்சாரியையீறுதிரிந்துவருதலுங்கொள்க. இன்னும்-மற்று- என்னுமிடைச்சொல் - பெயராமாறுகூறுகின்றதெனின் - பெயராம்படிகூறுகின்றது எனவருதலும்- அனையையாகன்மாறே எகிறந்தோன் - பெயரன்பிறந்தமாறே- எனக்காரணப்பொருளுணர்த்தி மூன்றுவதன்பொருள்படநிற்றலும்- இயல்புளிக்கோலோச்சுமன்னவன் - எம்- மந்திரவிதியின்மரபுளிவழாஅ அந்தணர்- எம்- உளி - என்னுமிடைச் சொல்மூன்றுவதன்பொருளும் ஐந்தாவதன்பொருளுமடநிற்றலுங்கொள்க· (ரு) இடையெனப்படுப பெயரொடும் வினையொடு- நடைபெற்றியலுந்தமக்கியலபிலவே - அவைதாம் - முன்னும்பின்னுமொழியடுந்துவருதலுந் - தம்மீறுதிரிதலும்பிறிதவணிலையலும், அன்னவையெல்லாமுரியவென்ப - என- ஆ. தொ - ர்- கூறுதலுங்காண்க· ஒன்றுவது இடைச்சொல் எனமுடித்துக்கொள்க. (க)

தெரிநிலைதேற்றமையமுற்றெண்சிறப், பெதிர்மறையெச்சம் வினாவிழைவொழியிசை, பிரிப்புக்கழிவாக் கமின்னனவிடைப் பொருள். *

இது, மேலேதத்தம்பொருளவென்ற அவை இவையெனவுணர்த்துகின்றது. (இ-ள்,) தெரிநிலைமுதலாவெடுத்தோதிய இப்பதின்மூன்றும்இவைபோல்வனபிறவும்மேலேதத்தம்பொருளவென்ற இடைச்சொற்களாம், எ-று.

இவற்றுள்- விழைவு- என்றது- ஆசை, மற்றைய - பொருள்விளங்கிக்கிடந்தன- இவைபோல்வன பிறவுமென்றவற்றுள்- சிலவருமாறு- அக்கொற்றன்- எக்கொற்றன் என்பன - சுட்டுப்பொருளும்வினாப்பொருளுந்தந்தன, நக்கீரர் - நப்போலத்தனார் என்பதில்- நகரஇடைச்சொல்சிறப்புப்பொருளைத்தந்தது, ... னென்றெண்ணப்படும்- ஆஅவளியவலவன் - அந்தோவிசையப்பட்டனன்- அன்னோபரற்கான மாற்றினகொல்லோ - என்பனவற்றுள்- அஆவும்- ஆவும்- அந்தோ- அன்னோஎன்பனவும்- இரக்கப்பொருளைத்தந்த இடைச்சொற்கள், இவற்றிற்கு அதிசயப்பொருளும் உளவாம், அந்தோறறியாமை கண்டற்றால் - செறிதொறுஞ்செல்வத்தியற்கை- என்புழி- தோறும்- தொறுவும்- இடப்பன்மைப்பொருளைத்தந்தன, இனிச்செய்வான்- இனிஎம்மெல்லை-என்புழி- இனிஎன்னுமிடைச்சொல்- முறையேகாலப்பொருளும்- இடப்பொருளுந்தந்தது, பிறவுமிவ்வாறே தனித்துநடக்குந்தன்மையின்றிப்பெயர்வினைகளைச்சார்ந்துவருமாயின் - அவையெல்லாம் இடைச்சொல்லென்றும் - அவைதரும் பொருளையிடைப்பொருளென்றுங்கண்டுகொள்க - இனித்தெரிநிலைதேற்றமுதலியபதின்மூன்றிற்குமுதாரணம் இனிவருஞ்சிறப்புச் சூத்திரங்களுட்காண்க·

(கு) அவைதாம்- புணரியனிலையிடைப்பொருணிலைக்குதநவும் - வினை செயன் மருங்கிற்காலமொடுவருநவும்- வேற்றுமைப்பொருள்வயினுருபாகுநவு - மசை நிலைக்கிளவியாகிவருநவு - மிசைநிறைக்கிளவியாகிவருநவுந - தத்தங்குறிப்பிற் பொருள்செய்குநவு - மொப்பில்வழியாற்பொருள்செய்குநவுமென் - றப்பண்பி னவேநுவலுங்காலே- என - ஆ - ஹெரா - ர்- கூறுதலுங்காண்க . பதினொருமிக்னை னவும் இடைப்பொருளெனமுடித்துக்கொள்க. (உ)

பிரிநிலை வினாவெண்ணீற் றசைதேற்ற, மிசைநிறையெனவாறே காரம்மே. *

இது, வேற்றுமை யுருபுமுதலியநான்கும் மேற்சொல்லப்பட்டமையால் அவற்றை யொழித்து ஒழிந்தன வற்றை யுணர்த்தத் தொடங்கி அவற்றுள்- ஏகார இடைச்சொல்இலக்கணம் இர்சூத்திரமுணர்த்திற்று - (இ-ள்,) (மேற்கூறிய பொருள்களுள்) பிரிநிலை முதலிய ஆறுபொருளைபுந்தரும் ஏகாரவிடைச்சொல், எ-று.

[வ-று,] அவருளிவனேகொண்டான் என்பது - ஒருகூட்டத்தில்நின்றும் ஒருவனைப் பிரித்தமையாற் பிரிநிலை, இவனேகொண்டான் எனவினாவிநிற்பின்- வினா, நிலனேநீரேதீயேவளியே என்பன- நிலனும்நீரும் - தீயும்- வளியும் - என எண்ணிநிற்றலால் எண், கடல்போற்றோன்றல் கங்குலதுநிலையே - எது- சொல்லின் இறுதியில் ஏரசையாக அசைத்தற்பொருள்படநிற்றலின் அசைநிலை, அவனேகொண்டான் என்பது- துணிதற்பொருள்பட நிற்பின்- தேற்றம், ஏயேயிவளொருத்திபேடியோவென்றார்-என்பது- இசைநிறைத்துநிற்றலின் இசைநிறை, எனக்காண்க.

ஏகாரம் அசைநிலையாகவருங்கால் முதற்கண்வாராதென்று சொல்லவந்தவர் ஈற்றசையென்றார், அவனேகொண்டான் என்பது ஒரோரிடத்து அவன்கொண்டிலன் எனஎதிர்மறைப் பொருள் படநிற்றலும், ஏயேயிவளொருத்திபேடியோ என்றது - ஏயெச்சியெல்லைந்துமிகழ்ச்சி - என்பது நிகண்டு ஆதலால் இசைநிறைத்தலன்றி இகழ்ச்சிப்பொருள்படநிற்றலும் புதியன்புகுதலும்வழுவலவென்பதனாற்கொள்க. (சூ) தேற்றம்வினாவேபிரிநிலையெண்ணே யீற்றசையிவ்வைந்தேகாரம்மே- என - ஆ- ர் - கூறுதலுங்காண்க. இதனுள் - தரும் என்னுமுற்றுவினைச் சொல்துறைந்துநின்றது - ஏகாரமென்பதை அதற்குப்பயனிலையாக்கிமுடித்துக்கொள்க. (௩)

ஒழியிசைவினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை, கழிவசை நிலை பிரிப்பென வெட்டோவே. *

இது, ஓகாரவிடைச்சொல்லிலக்கணமுணர்த்திற்று. (இ-ள்.) ஒழியிசைமுதலிய எட்டுப்பொருளையுந்தரும் ஓகார இடைச்சொல், எ-று,

[வ-று,] கொளலோகொண்டான் - படிக்கவோ வந்தான்- என் பனமுறையே கொண்டுபிலைழத் தலைமேற் கொண்டவன் அ

லலன்-படிந்து நன்னெறிச்செல்லவந்தவன் அல்லன் ; என்னுந் தொடக்கத்து ஒழிந்தசொற்களைத் தருதலால் - ஒழியிசை, குத்திரோ மகனோ-என்பது-வினா, சிறப்பு- உயர்வு சிறப்பும் இழிவு சிறப்பும்-என இருவகைப்படும், ஒஒபெரியன்-எது-உயர்வு சிறப்பு, ஒஒகொடியன்-எது-இழிவுசிறப்பு, அவனோகொண்டான்-எது கொண்டிலனென்னும் பொருள் படின் - எதிர்மறை, அவிவை நோக்கி-ஆணோ அதுவுமன்று-பெண்ணோ அதுவுமன்று-என ஆராய்தற் கண்வருதலின்- தெரிநிலை, உறுதியுணராமற் கெட்டாரை நோக்கி-ஒஒதமக்கோருறுதி யுணராரோ-எது- கழிந்ததற்கு இரங்குதலாற்கழிவு, காணியவம்மினோ-எது- காணவாருங்கள் எனப் பொருள்பட்டு ஓகாரத்திற்குப்பொருளின்றி - அசையாகவே நிற்றலால்- அசைநிலை, அவனோகொண்டான்-எது-பலருள் நின்று ஒருவனைப்பிரித்தலாற் பிரிநிலை.

மொழியாததனையுமொழிந்ததனோடுமுட்டின்றி முடித்தலென்பதினால்- பத்தோபதினைந்தோ எனவருமையமும் - வெண்ணெயோ விதுரனிட்டவிருந்தையோ வேலைசூழ்ந்த மண்ணையோ வுண்டுமுன்னாள்வருபசிதீர்ந்தமாயோன்- என எண்ணினிற்றலுங்கொள்க, பிறவுமன்ன- (ரு) பிரிநிலைவினாவெதிர்மறை யொழியிசை - தெரிநிலைக்கிளவிசிறப்பொடுதொகைஇ - யிருமூன்றென்பவோகாரம்மே- என- ஆ-ர் - கூறுதலுங்காண்க. முடிவுமேலைச் சூத்திரம்போலவே முடிந்துநின்றது. (ர)

வினைபெயர்குறிப்பிசையெண்பண்பாறினு,மெனவெனுமொ
ழிவருமென்றுமற்றே. ※

இது, என-என்று - என்னுமிவ்விரண்டு இடைச்சொல் லிலக்கணமுணர்த்திற்று.(இ-ள்,)வினைப்பொருள் முதலிய அறுவகைப்பொருளினும் என என்னும் இடைச் சொல்வரும், என்று என்னும் இடைச்சொல்லும் அவ்வாறே வருமென்றவாறு,

[வ-று,]கொள்ளெனக்கொண்டான்-மைந்தன்பிறந்தானெனத் தந்தைமகிழ்ந்தான்-என்பது-வினை, உளனெனப் படுவது உறையூர்-அழுக்காறெனவொருபாவி-எது-பெயர், தலைவிண்ணெனவிசைத்தது -பொள்ளெனவாங்கேபுறம் வேரார்- எது-குறிப்பு, குறிப்பாவது-சிறிதுபொழுது நிகழ்வதோர் தோற்றம், அது மனத்தாலுணரப்படுவது, இதனை மெய்ப்பாடு எனவும் வழங்குவர், இது விரைவுமுதலியபொருள் பற்றியும்வரும்,ஒல்லெனவொலித்தது- நிலையருங்குட்டத்துத் துடுமெனப்பாய்ந்தது- எது-இசை, இசையாவது இங்கே ஒலியைநோக்கிநின்றது, நிலனென நீரெனத் தீயென வளியெனப் பூதம்நான்கு -சேரனெனச் சோ

ழனெனப் பாண்டியனெனமூவருந்தமிழ்நாட்டரசர், எ-து-எண், வெள்ளென விளர்த்தது மெல்லென நடந்தது-காளெனக்கறுத்தது-எ-து-பண்பு, எனவரும்-என் றென்பதனையும் கொள்ளென்று கொண்டான் மைந்தன் பிறந்தானென்று தந்தை மகிழ்ந்தான் எனமுறையே யிவற்றோடொட்டுக.

சுட்டுப்பெயருள்வினைப் பெயருந்தமக்கெனவோர்பொருளின்றிப்பொருளாதியாரையுஞ்சுட்டியும் வினவியும்நிற்றல்போல - என - என்று - என்னுமிவ்விரண்டிடைச்சொல்லும் தமக்கெனவோர் பொருளின்றிவினைமுதலாக ஆங்கே சொல்லப்பட்டவற்றின் பொருளேபொருளாக வருமென்று சொல்லவந்தவர்-ஆறுபொருளையுந்தருமென்றது - ஆறுபொருளினும் வருமென்றார், (ரு) வினையேகுறிப்பேயிசையேபண்பே - யெண்ணேபெயரோடவ்வறுகிளவியும் - கண்ணியநிலைத்தேயெனவென்கிளவி - எம் - என்றென்கிளவியுமதனோரற்றே - எம்-ஆ - ர் - கூறுதலுங்காண்க. (ரு)

எதிர்மறைசிறப்பையமெச்சமுற்றளவை, தெரிநிலையாக்கமோ
டும்மையெட்டே. *

இது, உம் என்னும் இடைச்சொல் விலக்கண முணர்த்திற்று.(இ-ள், )எதிர்மறைமுதலிய எட்டுப்பொருளையுந்தரும்-உம்மையிடைச்சொல் லென்றவாறு,

[வ-று,]கொற்றன வருதற்குமுரியன்-எ-து-வாராமைக்கும் உரியனென நிற்றலால்- எதிர்மறை-சிறப்பு-உயர்வுசிறப்பு- இழிவுசிறப்பு எனவிருவகைப்படும், குறவருமருளுங்குன்று- இவ்வூர்ப்பூசையும் புலால்தின்னாது-என்பன-குன்றினுயர்வையும் - புலால் தின்னாத அவ்வூரினுயர்வையுஞ் சிறப்பித்தலால்-உயர்வுசிறப்பு, புலையனும் விரும்பாப்புன் புலால்யாக்கை - எ-து - உடம்பினது இழிவைச்சிறப்பித்தலால் இழிவுசிறப்பு, பார்ப்பானுங்கள்ளுண்டான்-என்பதுமது, இது- கள்ளுண்டலாகிய இழிவுபார்ப்பானுண்ணப்படுதலா லிழிவுசிறப்பாயிற்று, இவ்வூர் என்பதைநீக்கிப்பூசையும் புலால்தின்றதெனின், புலால்தின்னு மிழிவிலே பூசைதின்றது சிறத்தலினிழிவு சிறப்பும்மையெனினும்அமையும்,பத்தாயினும் எட்டாயினுங்கொடு-எ-து-ஐயம்,எச்சவும்மை- இறந்தது தழுவியதும்-எதிரதுதழுவியதுமென இருவகைப்படும் - சாத்தனும்வந்தான்-எ-து-கொற்றன் வந்ததன்றி எனப் பொருள்படின் இறந்ததுதழுவிய எச்சவும்மை,கொற்றனும் வருவானெனப்பொருள்படின் எதிரதுதழுவிய எச்சவும்மை, இன்னும் இவ்வெச்சவும்மை முழுவதுந் தழுவியதும் ஒருபுடை தழுவியதும் என இருவகைப்படும், யான்கருவூர்க்குச்செல்வேன் என்றார்க்கு யானுமவ்வூர்க்குச்செல்வேன்-எம்-அவ்வாறு கூறினார்க்குயானும் உறையூர்

திருச்செல்வன்-எ-வரும், தமிழ்நாட்டுமூவேந்தரும் வந்தார்-எல்லாரும் வந்தார்-எது-முற்றும்மை, சாத்தனுங் கொற்றனுந் தேவனும் பூதனும் வந்தார்-எது-எண்ணும்மை, இருநிலமடி தோய்தலால் திருமகளுமல்லள் அரமகளுமல்லள் இவள் யாராகும்-எது-ஆராய்தற்கண்வருதலால் - தெரிநிலை, நெடியனும்வலியனுமாயினனவன்-பாலும்மருந்துமனதுவாயிற்று.என்பன- ஆக்கம்.

இதனை நெடியனுமாயினன் பாலுமாயிற்று எனக்கூறி - அவனேவலியனுமாயினன் தவேபாலுமாயிற்று எனப்பொருள்படிறக்கவும்மையென்பாருமுளர் - செப்பேவழீஇயினு வரைநிலையின்றே- என்றவும்மை - வழுவியினும் இலக்கணமாமெனே அமைந்துகோடலால் - ஆக்கவும்மையெனக்கூறுதல் ஆசிரியர்கருத்தாதலால் - நெடியனுமாயினன் எனநிற்பினும் அவ்வும்மை ஆக்கவும்மையெனக்கூறவேண்டுதலான் அதுபொருந்தாதென்க.(சூ)எச்சந்தொப்பேயையமெதிர்மறை முற்றேயென்னே தெரிநிலையாக்கமென் றப்பாலெட்டேயும்மைச்சொல்லே என ஆ-ர்-கூறுதலுங்காண்க. (௬)

முற்றும்மையொரோவழி யெச்சமுமாகும். *

இது, முற்றும்மைக்கு எய்தியதன்மேற்சிறப்பு விதியுணர்த்திற்று. (இ-ள்,) மேற்கூறிய முற்றும்மை ஒரோரிடங்களில் எச்சவும்மையுமாமென்றவாறு.

ஏற்புழிக்கோடலால் எச்சப்பொருள்படநிற்பது பெரும்பாலும் எதிர்மறைக்கண்ணே யெனக்கொள்க, [வ-று] பத்துங்கோடேல்- அனைத்துங்கோடேல்-எல்லாருமிதுசெய்யார் என்னும் முற்றும்மைகள்-சிலகுறையக்கொடு எனவும்-சிலரிது செய்வாரெனவும்- எச்சப்பொருள்படநின்றவாறுகாண்க, ஆறுந்தருவதுவினை எது-ஐந்துந்தருவதுவினையெனச் சிறுபான்மையுடன் பாட்டினும்வந்தது-இதுவும்எதிர்மறைக்கண்வந்ததேயாம்-ஆறுந்தாராது ஐந்துந்தருவதெனப் பொருள்படுதலாலென்க, (சூ) முற்றியவும்மைத்தொகைச்சொன் மருங்கி, னெச்சக்கிளவியுரித்துமாகும் -என ஆ-ர்-கூறுதலுங்காண்க. (௭)

செவ்வெண்ணீற்றதா மெச்சவும்மை. *

இது, எச்சவும்மைக் காவதோர் விதியுணர்த்திற்று, (இ-ள்,) எச்சவும்மைசெவ்வெண்ணிலேவருமாயின் ஈற்றிலேவரும், எ-று.

செவ்வெண்- எது-எண்ணிடைச்சொல்இன்றி எண்ணிநிற்பது, [வ-று,] செய்பவன்கருவி நிலஞ்செயல்காலஞ் செய்பொருளாறுந்தருவதுவினை-எம்,கல்விசெல்வ மொழுக்கங் குடிப்பிறப்பும் பெறுவாருமுளர்-எம்-வரும், இவற்றுட் சிலவுந்தருந்திறத்ததுவினையெனவும்,இவற்றுட் சிலபெறுவாருமுளரெனவும் முறையே எச்சப்பொருள்படுதலும் எச்சவும்மையீற்றிலேநிற்றலுங்கா

ணக, இனி மொழிந்தபொருளோடொன்ற வவ்வயின் மொழியா
ததனையுமுட்டின்றி முடித்தலென்னும் உத்தியால், எச்சவும்மை
யும் எதிர்மறையும்மையும், எச்சவும்மையும் முற்றும்மையும் எதிர்
மறையும்மையுந் தம்முள் மயங்கிநிற்கு மெனவுங்கொள்க, அவை
வருமாறு, சாத்தனும்வந்தான் இனிக் கொற்றன் வரினும்வரும்
எனின் - சாத்தனுங்கொற்றனுமென்ற எச்சவும்மைகள் வரினுமெ
ன்ற எதிர்மறையும்மையோடும், வடுகரசரும் வந்தார் இனித்தமி
ழ்நாட்டு மூவேந்தரும் வரினும் வருவர் - எனின் - வடுகரசரும் என்
ற எச்சவும்மையோடு மூவேந்தருமென்ற முற்றும்மை தொடர்ந்
து வரினுமென்ற எதிர்மறை யும்மையோடு மயங்கி நிற்றலுங்கா
ணக- பிறவுமன்ன, (கூ) எஞ்சுபொருட்கிளவி செஞ்சொலாயிற்-
பிறபடக்கிளவார் முற்படக்கிளத்தல் - எம் - எச்சவும்மையுமெதிர் ம
றையும்மையுந் தத்தமுண்மயங்கு முடனிலையிலவே எம் - ஆ - ர் - கூ
றுதலுங்காண்க. (அ)

பெயர்ச்செவ்வெண்ணே யென்றாவெனாவெண், ணான்குந்தொ
கை பெறுமும்மையென்றெனவோ, டிந்நான் கெண்ணுமஃதி
ன்றியுமியலும். *

இது, மேலெடுத்தோதப்பட்டும் படாதும் வருஞ்சில எண்
ணிடைச்சொற்கு ஆவதோரிலக்கணமுணர்த்திற்று. [இ-ள்-] பெ
யர்சசெவ்வெண் - பெயர்களிடையே எண்ணிடைச்சொல் தொக்
குநிற்கவருஞ் செவ்வெண்ணும், ஏஎண் - (பெயரொடுதொகாதுவ
ரும்) ஏகாரவெண்ணும், என்றாவெனாவெண் - என்றாவெண்ணும் எ
னாவெண்ணும், நான்குந்தொகைபெறும் - ஆகிய இந்நான்கெண்
ணுந் தொகைபெற்று நடக்கும், உம்மையென்றெனவோடு - உம்
மையெண்ணும் - என்றெண்ணும் - எனவெண்ணும் - ஒடெண்ணும்,
இந்நான்கெண்ணும் - ஆகிய இந்தநான்கெண்ணும், அஃதின்றியு
மியலும் - அத்தொகைபெறுமலும் நடக்கும், உம்மையாற்பெற்
றும் நடக்குமென்றவாறு.

பெயரெண்என்று கூறாதுசெவ்வெண் என்றதனாலே - அது
எண்ணிடைச்சொல் தொக்கதொகை நிலையென்பதுபெறப்பட்ட
து. இப்பெயர்ச்செவ்வெண்ணை இடைச்சொற்களோடுகூட்டியு
ரைத்ததென்னெனின், அதனிடை எண்ணிடைச்சொல்தொக்குநி
ற்றலினென்க, [வ - று,] சாத்தன், கொற்றன் தேவன் பூதனால்வ
ரும்வந்தார் - இது - பெயர்ச்செவ்வெண், சாத்தனே கொற்றனே
தேவனே பூதனே நால்வரும் வந்தார் - இது - ஏகாரவெண், சாத்

தனென்று கொற்றனென்று தேவனென்று பூதனென்று நால்வரும்வந்தார்-இது - என்றுமெண், சாத்தனெனக் கொற்றனெனத் தேவனெனப் பூதனெனநால்வரும்வந்தார்-இது- எனவெண், இவை தொகைபெற்றேவந்தன-இவைவழக்கிடத் தொரோரிடங்களிலேதொகைபெறாதுவரின்-இசையெச்சமாகவும்-செய்யுளிலே தொகைபெறாதுவரின் தொகுத்தல்விகாரமாகவாவது இசையெச்சமாகவாவது கொள்க, சாத்தனுங்கொற்றனுந் தேவனும் பூதனுமாகிய நால்வரும்வந்தார், சாத்தனென்று கொற்றனென்று தேவனென்று பூதனென்று நால்வருளர், சாத்தனெனக் கொற்றனெனத் தேவனெனப் பூதனென நால்வருளர், சாத்தனொடுகொற்றனொடு தேவனொடு பூதனொடு நால்வருளர், என விவைதொகைபெற்றன, சாத்தனுங் கொற்றனுந் தேவனும் பூதனும் வந்தார், நிலமென்று நீரென்று தீயென்றுவளியென்றுஅளவறுகாயமென்றுகியவுலகம், நிலமென நீரெனத்தீயெனவளியெனவளவறுகாயமெனஆகிய வுலகம், நிலனொடு நீரொடுதீயொடுவளியொடளவறுகாயமோடாகிய வுலகம், என விவைதொகை பெறாது வந்தன.

இனியொன்றின் முடிந்தவென்பதினால் - இவ்வெட்டுவகையெண்களுள் - ஏகாரவெண்மற்றையெண்களினிடை நிற்பினும்பிறநிற்பினும் பலவெண்வந்தனவென்றுகூற்றமெனல்கூடாவாம்அவைபலவுமெண்ணுட்பொருளொன்றையே குறித்துநிற்றலினெனக்கொள்க. அவைவருமாறு- மலைநிலம்பூவே துலாக்கோலென்றின்னர் - எம் - தோற்றமிசையே நாற்றஞ்சுவையேயுறவோடாங்கைம்புலனெனமொழிப- இவைபெயர்ச்செவ்வெண் நின்று ஏகாரவெண்ணை யிடையிலேகொண்டன, மாத்திரையெழுத்தியலசைவகையெனா- எது- செவ்வெண் நின்றனவெண்ணை யிடையிலேகொண்டது; யாத்தசீரேயடியாப்பெனா- எது- ஏகாரவெண் - செவ்வெண்ணையும் எனவெண்ணையுமிடையிலேகொண்டது, ஒழிந்தவெண்களு மிவ்வாறுவருதல்காண்க. இவ்வெண்ணிடைச்சொற்களுள் ஒடுஒடுவெனக்கூறுவருமெனவுமதற்கு இச்சூத்திரமும்வருஞ்சூத்திரமும்மயுதாரணமென்வுங்காண்க. (௬) உம்மையெண்ணுமெனவெனெண்ணுந்தம்வயிற்றொகுதிகடப்பாடிலவே - எம் - உம்மைதொக்கவெனவென்கிளவியு-மாவீறாகிய வென்றென்கிளவியு- மாயிருகிளவியுமெண்ணு வழிப்பட்டன - எம் - அவற்றின் வருஉமெண்ணினிறுதியும் - பெயர்க்குரிமரபிற் செவ்வெண்ணிறுதியும் - யாவயின்வரினுந்தொகையின்றியலா-எம்-எண்ணேகாரமிடையிட்டுக்கொளினு- மெண்ணுக்குறித்தியலுமென்மனார் புலவர் - எம் - ஆ-ர்- காண்க - இந்தஇறுதிச்சூத்திரத்துள் - எண்ணேகாரமென்பதை ஒருதொடராக்காது - எண்களுள் ஏகாரமெனப் பகுத்துப் பொருளுணர்ந்துகொள்க - இச்சூத்திரமிருமுடிபாக முடிந்துநின்றது. (௯)

என்று மெனவுமொடுவு மொரோவழி, நின்றும் பிரிந்தெண்
பொருடொறுநேரும். *

இது, எண்ணிடைச்சொற்களுட் சிலவற்றிற்கு எய்தியது

மேற்சிறப்புவிதிபுணர்த்திற்று. (இ-ள்,) (இந்தமூன்றெண்ணிடைச்சொற்களும் பொருள்தோறும் நிற்பதுமன்றி-) ஓரிடத்துநின்றும் பிரிந்து எண்ணப்படும் பொருள் தோறும் போய்ப்பொருந்துமென்றவாறு,

[வ-று,] வினைபகையென் றிரண்டினெச்சம்- எம்-பகைபாவமச்சம் பழியெனநான்கும் எம்- பொருள் கருவி காலம் வினையிடனொடைந்தும் எம்-வரும், இவையொவ்வோரிடத்துநின்று பொருள் தோறும் நேர்தலாவது-முறையே - வினையென்று பகையென்றிரண்டினெச்சம்-எம்-பகையெனப் பாவமென அச்சமெனப் பழியென - எம் - பொருளொடு கருவியொடு காலத்தொடு வினையொடு இடத்தொடு-எனவும் போய்ப்பொருந்துதல்,

இந்தமூன்றெண்ணிற்கும் இவ்வாறெதிர் தோதமைவமற்றையெண்ணிடைச்சொற்களுக்கு எண்ணும் பொருள்தோறு நிற்றலே சிறந்தனவென்பதூஉம்-ஓரிடத்துநின்றுபிரிந்து வழிந்து பற்றியீர்ந்தலென்பதும், அதுநிவகமென்னும் அணியிலக்கணமாதலால் இங்கேபொருந்தாதென்பதுமாயிற்று, (ரு) என்றுமெனவுமொழிவுந்தோன்றி - யொச்சுவவியுடைய வெண்ணுப்பிரிந்தே - என - ஆதொர்க, என்றுமெனவுமொழிவுநேரும்-எனமுடித்துக்கொள்க. (ம)

வினையொடுவரினு மெண்ணினையவேற்பன *

இது, எண்ணிடைச்சொற்கள் வினையகத்தும் வருமெனமாட்டெறிந்தது-மாட்டெறிந்தொழுகற்குப் பதப்பொருளொடு உதாரணமேற்கூறப்பட்டது, (இ-ள்,) ஏற்பனவெண்-பொருந்துவனவாகிய எண்ணிடைச்சொற்கள், வினையொடுவரினும், இனைய- மேற்பெயரொடுவந்த அவைபோலுமென்றவாறு.

ஏற்பனவெனவேபெயரொச்சங்களெண்ணிடைச்சொற்களையேலாமென்பதும்வினையொடுபொருந்தாத எண்ணிடைச்சொல்வருதலுந்தொகைபெறுதலும் இல்லையென்பதுமாயிற்று. [வ-று,] மண்டிலமழுங்கமலைநிறங்கிளர- வண்டினமலர்பாரந்தூதமிசைய- கண்டலங்கானங் குருகினமொலிப்ப- என்பது வினையொடுவந்த செவ்வெண், மழுங்கவுங்கிளரவும் ஊதவுங் குருகினம் ஒலிப்பவும் என உம்மையிடைச்சொல் தொக்குநின்றது, கற்றுங்கேட்டுங் கற்பனைகடந்தான் -என்பது - உம்மை எண், உண்ணவென்றுடுக்கவென்று பூசவென்று முடிக்கவென்று வந்தான், என்பது- என்று எண், உண்ணவென உடுக்கவென-எ-து-என எண், உண்ணஉடுக்கப்பூசமுடிக்கவென்றுவந்தான், உண்ணஉடுக்கப்பூசமுடிக்கவெனவந்தான், நன்னிதிபெருகநாடொறும்வாழ்கவென்றுன்னுமிவ் வேட்கையொழிந்தனரிலரோ - என்பன - என்றும் எனவும் ஒரோவழிநின்றுபிரிந்து எண்பொருள்தோறும் பொருந்தின - பிறவற்

றுள் ஏற்பனவும்- ஆடல்பாடலொடுவந்தாள்- எம்- ஆதரித்தவன்-
பயந்தீர்த்தவனுதவிசெய்தவனென்று பலகைத்தான் - எம்- தொழிற்
பெயர் வினையாலணையும் பெயரொடு - ஒடுஎண்பிரிந்தொன்றுக
வுங்கொள்க. (௬) வினையொடுநிலையுமெண்ணுநிலைதிரியா- நி
லையல்வேண்டுமவற்றவற்றியல்பே- என- ஆ- ர்- க. (௰௧)

விழைவேகாலமொழியிசைதில்லே.                *

இது, தில்- என்னுமிடைச் சொல்லிலக்கண முணர்த்திற்று-
(இ-ள்,) ஆசையுங்காலமும் ஒழியிசையுமாகிய இம்மூன்றுபொ
ருளையுந்தரும்- தில்லென்னுமிடைச்சொல், எ-று.

[வ-று,] அரிவையைப்பெறுகதில்லம்மயானே-பெறவேண்
டுமென்கின்ற ஆசையையுணர்த்தலால்- விழைவு, பெற்றாங்கறிகதி
ல்லம்மவிவ்வூரே- பெற்றகாலத்தறிகவெனக்காலத்தை யுணர்த்து
தலாற்காலம், வருகதில்லம்மவெஞ்சேரிசேர- எது- வந்தால்இன்
னதுசெய்வேனென்னுஞ்சொல் - ஒழிந்துநிற்றலால்- ஒழியிசை,
இனியுரையிற்கோடலால்-இத்தில்லென்னுமிடைச்சொல் பெரும்
பாலும் அம்மவென்னும்உரையசையிடைச்சொல்லொடுகூடிநின்
றேயிப்பொருள்களையுணர்த்துமெனக்கொள்க. (௬) விழைவேகா
லமொழியிசைக்கிளவியென் -றம்மூன்றென்பதில்லைச் சொல்லே-
என-ஆ-ர்-க- இச்சூத்திரத்தில்தருமென்னும் முற்றுவினைச் சொல்
குறைந்துநின்றது அதைப்பயனிலையாக்கித் -தில்தருமெனமுடித்
துகொள்க.                (௰௨)

மன்னேயசை நிலையொழியிசையாக்கங், கழிவுமிகுதிநிலைபே
றுகும்.                *

இது, மன்னென்னுமிடைச்சொல்லிலக்கணமுணர்த்திற்று.
(இ-ள்) இந்த ஆறுபொருளையுந்தரும்மன் என்னுமிடைச்சொல்,
எ-று.

[வ-று,] அதுமற்கொண்கன்றேரோ - என்றதில் அதுமன் -எ
து-அசைநிலை,கூரியதோர்வாண்மன் - எது- இரும்பைபறத்துணி
த்தது என்னுஞ்சொல்லொழிந்து நிற்றலால் - ஒழியிசை, பெரிய
னமன்- எது - வலியனுமாயினனெனப்பொருள்படின் ஆக்க
ம், புதுமலரணியவின்றுவரின்மன் - என்பதுமது, சிறியகட்பெ
றினெமக்கீயுமன்னே- எது - இப்பொழுதவன் இறத்தலாலவ
மக்கீதல்கழிந்ததெனப்பொருள்படுதலாற்கழிவு, எந்தைஎமக்கரு
ளுமன்- எது- மிகுதியும்அருளுமெனப்பொருள்படுதலால்- மிகு
தி, மன்னுவுலகத்துமன்னியதுபுரிமோ - எனஇவ்விடைச்சொல்

லடியாகப்பிறந்தவினைகள்- நிலைபெறாதவுலகத்திலே; செய்யென்னும்பொருள்படநிற்றலால்- நிலைபேறு, எனவரும்.

இவற்றான் அசைநிலை- பொதுச்சூத்திரத்தாற்பெறுதலாலும், மிகுதி- குறிப்பின்பாற்படுதலாலும், நிலைபேறுவினையின்பாற்படுதலாலும், அவற்றையொழித்து- ஆசிரியர்தொல்காப்பியனார் (௬) கழிவேயாக்கமொழியிசைக்கிளவியென்று மூன்றென்பமன்னைச்சொல்லே- எனச்சூத்திரஞ்செய்தாரெனக்காண்க, மன்- அசைநிலையும் ஒழியிசையும் எனஎண்ணி ஆறுமெனப்பயனிலைகூட்டிமுடித்துக்கொள்க. (௰௩)

வினைமாற்றசைநிலைபிறிதெனுமற்றே. *

இது, மற்றென்னுமிடைச்சொல்லிலக்கணமுணர்த்திற்று.

(இ-ள்,) இந்தமூன்றுபொருளையுந்தரும் - மற்று என்னுமிடைச்சொல், எ-று.

அன்றியென்னும்வினையெச்சம் - அறனன்றிச்செய்யான்- என்புழி- அறனல்லாததைச்செய்யான் - எனஎதிர்மறையிலும்- அகரத்திற்குத்தலைமை- விகாரத்தானன்றிநாதமாத்திரையானவியற்கையாலுமென்புழி - அகரத்திற்குத்தலைமை விகாரத்தாலுண்டானதுமன்றிநாதமாத்திரையான வியற்கையாலும்உண்டென உடன்பாட்டிலும்வருதல்போல - வினைமாற்று-எதிர்மறையுடன்பாடிரண்டிலும்வருதலால் - வினையொழிவுதோன்றமாற்றலும் - ஒழிவுதோன்றாதுமாற்றலுமென இருவகைப்படுமெனக்கொள்க.

[வ-று,] இனிமற்றொன்றுளை- எது- முன்சொன்னதொழிய வேறொன்றுளை- எனப்பொருள்படநிற்றலால் - ஒழிவுதோன்றநின்றவினைமாற்று, மற்றறிவாம்நல்வினையென்பது - இப்பொழுது விளைந்ததறிவோமென்பதைமாற்றியினிமேல்விளையாததறிவோமென நிற்றலாற்காலங்குறித்து ஒழிவுதோன்றநின்றவினைமாற்று, மற்றுங்கூடுமனைமடிதுயிலே- எது - இப்பொழுதுகூடுகின்றதுமன்றியினிமேலுங்கூடுந்துயில்மனைமடியிடத்தென நிற்றலால் - காலத்தோடு இடமுங்குறித்து ஒழிவுதோன்றாது நின்றவினைமாற்று, அதுமற்றம்ம- என்பதில் - மற்று அசைநிலை, ஊழிற்பெருவலியாவுளமற்றொன்று சூழினுந்தான்முந்துறும் - என்பதில் - மற்றொன்றென்பது ஊழல்லதொன்று - எனநிற்றலால்- பிறிது-எனவரும்- இனிப்பிறிதென இவர்கூறியது - வினைமாற்றிலடங்கிநின்றது- எவ்வாறெனின் - மற்றொன்றுசூழினும் - முன்சூழ்ந்ததொழியவேறொன்றுசூழினும்- எனப்பொருள்படுதலாலென்க, (சூழ்தல்- சூழ்ச்சி) உபாயம்- ஆலோசனை- என்பனபொருள், மற்றோருபாயந்தேடினுமென்பது - மற்றொன்றுசூழினுமென்பதற்கு

ப்பொருள், இங்ஙனமாதலால் - (௫) மற்றென்கிளவி வினைமாற்றசைநிலை - யப்பாலிரண்டெனமொழிமனார்புலவர் - எனஆசிரியர்தொல்காப்பியனார்சூத்திரஞ்செய்தாரெனக்காண்க, எனும்மற்று - என்றுசொல்லப்படும்மற்று - எனமுடித்துக்கொள்க. (௱௪)

மற்றையதென்பதுசுட்டியதற்கினம். *

இது, மற்றை - என்னும் ஐகாரவீற்று இடைச்சொல் பொருள்படுமாறுகூறுகின்றது. (இ-ள்,) மற்றையதென்பது - பெயர்க்குமுதனிலையாய்வரும் ஐகார ஈற்று இடைச்சொல்லானது, சுட்டியதற்கினம் - முன்சுட்டப்பட்ட பொருளொழிய அதற்கு இனமாகியபொருளைக்குறித்துநிற்கும், எ-று.

சுட்டுதல் - குறித்தல், [வ-று,] இரண்டுமணியுளவிடத்து ஒன்றுகண்டவன்மற்றையதுங் காணவேண்டுமெனின்முன்கண்டதொழிய அதற்கு இனமாகியமணியையேகுறித்து நிற்பதல்லதுவேறுபிறபொருள் குறித்து நில்லா தெனக்காண்க, வேறுபிறபொருள் குறித்துநில்லாமையாவது - ஆடையொணர்ந்தவழியதுவேண்டாதான்மற்றையதுகொண்டுவாவென்றால்அதற்கினமாகியஆடையையே கொண்டுவாவென்னுங் கருத்தின னாதலன்றி வேறுபிற பொன்னையும் மணியையுங் கொண்டுவாவென்னுங் கருத்தினன் அல்லனாதல்.

இனிஇவ்விடைச்சொல்பெயர்க்குமுதனிலையாய்வருதலன்றி-மற்றையாண்டு - மற்றைப்பொருள் எனவும்வரும், மற்றையது - மற்றையஃது - மற்றையவன் - மற்றையான் செத்தாருள்வைக்கப்படும் - களவல்லமற்றையதீதற்றதவர் - மற்றையநோக்காதடிதொறுவான்பொருள் - எனப்பெயர்க்கும் வினைக்குறிப்பிற்கும் முதனிலையாய்வருதலேபெரும்பான்மையாதலால் மற்றையெனப்பிரித்தோராது - மற்றையதெனஒன்றாகக்கூறினார், இனியிச்சூத்திரத்திற்கு இவ்வாறன்றிமேலைச்சூத்திரத்துள் வினைமாற்றெனவும் பிறிதெனவும் பொதுப்படக் கூறினமையாலே - இனவினைமாற்றும் பிறிதுமென - இச்சூத்திரத்தாற்புறனடைகொடுத்துக் காத்தாரெனக்கூறுவாருமுளர் - அது இந்நாலுடையார்கருத்தாயின் - இனமென்னுமோர்சொல்லுக்காக ஒருசூத்திரஞ்செய்து புறனடைகொடுப்பின் - சில்வகையெழுத்திற் பல்வகைப்பொருளைச் - செவ்வனாடியிற்செறித்தினிதுவிளக்கித் - திட்பநுட்பஞ்சிறந்தனசூத்திரம் - எனக்கூறியசூத்திர விலக்கணத்தகுமையையும்இவ்வுரைகாரர்கல்வியின்பெருமையையும்இச்சூத்திரம்நனிதவநன்குவிளக்கிற்றென்க,என்னெனின் (௫) இனவினைமாற்றும்பிறிதுமற்றசைநிலை - எனச்சூத்திரஞ்சுருங்கச்செய்து - மற்று - என்பதை இடைநிலைமொழியாகவைத்து - வினையிரிடத்தும் நடந்துபொருளை - மற்று இனவினைமாற்றுமினப்பிறிது மசைநிலையுமாமென - நன்னவைத்துத்தாப்பிசைப் பொருள்கோளாக்கின் அமையுமாதலால் - அதுகருத்தன்றென்க. இதனுள் நின்றஉம்மை யெதிரதுதழுவியெண்ணின்றலால் - இனமென்பதை தப்பிற்றென்பதனோடுங்கூட்டுக, (௫) மற்றைப்பெ

ன்னுங் கிளவிதானே - சுட்டுநிலையொழிய வினங்குறித்தன்றே - என ஆசிரியர் தொல்காப்பியனார்கூறுதலுங்காண்க. (௰௫)

கொல்லேயையமசைநிலைக்கூற்றே. *

இது, கொல்லென்னுமிடைச் சொல்லிலக்கணமுணர்த்திற்று. (இ-ள்,) இவ்விரண்டுபொருளையுந் தருங்கொல்லென்னுமிடைச்சொல், எ-று.

கூற்று - சொல், [வ-று,] இவ்வுருக்குற்றிகொல்லோ மகன்கொல்லோ-எது-குற்றியோமகனோவென்னும் பொருள்படநிற்றலின் - ஐயம், பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங்காதலர் வருவர்கொல்- எது - அசைநிலை, இவ்வசைநிலை- புதியனபுகுதல், மொழியாததனையுமுட்டின்றிமுடித்தலென்பதினால்-எல்- என்னுமிடைச்சொல் எல்லெனவெனப்பிரகாசத்தை யுணர்த்தலுங்கொள்க. (௫)

சொல்லேயையம், எல்லே யிலக்கம், என- ஆ- ரி- க- , (௰௬)

ஒடுவுந்தெய்யவுமிசைநிறைமொழியே. *

இது, ஒடு- தெய்ய - என்னுமிடைச்சொல்லிலக்கணமுணர்த்திற்று. (இ-ள்,) இவ்விரண்டும் இசைநிறைத்தலென்னும்பொருளைத்தருஞ்சொற்களாம், எ-று.

[வ-று,] விதைக்குறுவட்டில் போதொடுபொதுள - எம்- சொல்லேன்றெய்ய நின்னொடுபெயர்ந்தே - எம்- வரும் - இவை புதியன. (௰௭)

அந்திலாங்கசைநிலையிடப்பொருளவ்வே. *

இது, அந்தில் - ஆங்கு - என்னுமிடைச் சொல்லிலக்கணமுணர்த்திற்று. (இ-ள்,) இவ்விரண்டிடைச்சொல்லும் அசைநிலையாகியும் இடப்பொருளவாகியும்வரும், எ-று.

[வ-று,] அந்திற்கழலினன்கச்சினன்- எது- அசைநிலை- வருமேசேயிழையந்திற்கொழுநற்காணிய - எது- அவ்விடத்தென்னும்பொருள்படநிற்றலால் - இடம், ஆங்கத்திறனல்ல யாங்கழற- எது- அசைநிலை- இதுஆங்கு- என்பது ஆங்க - எனஈறுதிரிந்துநின்றது, ஆங்காங்காயினுமாக- எது- இடம்.

(௫) அந்திலாங்கசைநிலைக்கிளவியென்- றாயிரண்டாகுமியற்கைத்தென்ப, என- அந்திலென்பது ஆங்குஎன்னும் இடப்பொருளும் அசைநிலையுமாமென்றதை - இவர் அந்திலும் ஆங்கும்இடப் பொருளுமசை நிலையுமா மெனச்சூத்திரஞ்செய்தார் - அது ஆசிரியர்கருத்தன்றென்பதையவர் சூத்திரத்தாலும் ஆங்கு - என்பது இடச்சுட்டுப்பெயர்ச்சொல்லாதலாலும் - ஆங்கு அசைநிலையெனக்கூறி ஆங்க எனவுதாரணங் காட்டியதினாலும் பொருந்தாதென்க. இனி ஆங்கஎன்னும் அகர வீற்றிடைச்சொல் அசைநிலையெனக்கொளின் அமையும் -அன்னெனின்- ஆங்கவுரையசை -எனக்கூறியதினாலும் ஆங்கக்குயிலுமயிலுங்காட்டி- எம்- ஆங்கத்திறனல்லயாங்கழற-எம்- பயின்றுவருதலாலுமென்க. (௰அ)

அம்மவுரையசைகேண்மினென்றாகும். ✻

இது, அம்மவென்னு மிடைச்சொல்லிலக்கண முணர்த்திற்று. (இ-ள்,) அம்மஎன்னுமிடைச்சொல் உரையசைப்பொருளதாகியும் ஒன்றுசொல்வேன் கேளுமென்னும் எவற் பொருளதாயும் வரும், எ-று.

[வ-று,] அதுமற்றம்ம-என்பது-உரையசை - பேச்சிடத்து வருமசை- உரையசை, அம்மவாழிதோழி - எ.று - ஒன்றுசொல் வேன்கேள் என்னுமேவற்பொருளைத்தந்துநின்றது. (கூ) அம்ம கேட்பிற்கும்- என்றஆசிரியர்- அசைநிலையையுமிலேசினுற்றமுவிஞெனக்காண்க. அம்ம ஆகுமெனமுடித்துக்கொள்க. (மகூ)

மாவென்கிளவிவியங்கோளசைச்சொல். ✻

இது, மா - என்னுமிடைச்சொல்லிலக்கண முணர்த்திற்று. (இ-ள்,) மாவென்னுமிடைச்சொல் வியங்கோள்வினையையடுத்து வரும் அசைச்சொல்லாம், எ-று.

[வ-று,] பாயக்கடவுட்குயர்கமாவலனே - எம் - புற்கைப் புண்கமாகொற்கையோனே- எம்- வரும்- இவற்றுள் - உயர்கஉண்க- என்னும்வியங்கோள்வினைகளையடுத்து - மாவென்னும் அசைச்சொல்வந்தவாறுகாண்க. இச்சூத்திரம் ஆசிரியவசனம். (உ0)

மியாயிகமோமதி யத்தையித்தைவாழிய மாளவீயாழமுன்னிலையசை. ✻

இது, முன்னிலையசைச்சொல் இவையென்கின்றது. (இ-ள்,) மியா- இக- மோ- மதி- அத்தை- இத்தை- வாழிய- மாள- ஈ-யாழ - என்னுமிப்பத்திடைசொற்களும்முன்னிலையிடத்துவரும் அசைச்சொற்களாம், எ-று,

[வ-று,] கிலையன்செழுந்தழையன்சென்மியா- என - மியாவும், தண்டுறையூரகாண்க- என - இக - வும, காமஞ்செப்பாதுகண்டதுமொழிமோ- என- மோவும், சென்மதிபெரும்- என- மதியும், சொலியரத்தைநின்வெகுளி- என - அத்தை- யும், நீயொன்றுபாடித்தை - என - இத்தையும், காணியவாவாழியபலேச்சாரல்- என-வாழிய- வும்-சிறிதுதவிர்ந்தீகமாளநின் பரிசிலருய்ம்மார்- என- மாள- வும், சென்றீபெருமதிற்றகைக்குநர்யாரே - சென்றீ- என்பதில்- செல்முன்னிலைவினைச்சொல்- ஈமுன்னிலையசை- அதுஅகரவொற்றையூர்ந்துநிற்க - முன்னின்றலகரவொற்றுனகரவொற்றாய்த்திரிந்துநின்றது ஆதலால் இதுவும், நீயே - செய்வினைமருங்கிற்செலவயர்ந்தியாழ - செலவயர்ந்தாய் என்னும்பொ

ருள்படநின்ற அயர்ந்தி - என்பது முன்னிலைவினையாதலால் - அமிந்துநின்ற - யாழ - வும், முன்னிலையசைச்சொற்களாய் நின்றவாறு முறையேகாண்க.

இனித் திருமுருகாற்றுப்படையுள் - விழுமியபெறலரும்பரிசி - னல்குமதி பலவுடன்மலைகிழவோனே - என - மதியென்னும் அசைச்சொல்படர்க்கையிடத்துவருதலைப்புறனடையாற்கொள்க, மியாயிக - என்றவிடத்து - மாயிருஞால மென்றாற்போல - யகரமெய்தோன்றிநின்றது, (சூ) மியாயிகமோமதியிகுஞ்சின்னென்னு - மாவயினாறுமுன்னிலையசைச்சொல - என - ஆர்க - மியாமுதலியவை அசைச்சொல் - எனமுடித்துங்கொள்க. (உக)

யாகாபிறபிறக்கரோபோமாதிகுஞ், சின்குரையோரும்போலு
மிருந்திட், டன்றாந்தாந்தான்கின்று நின்றசைமொழி. *

இது, எல்லாவிடத்தும்வரும் அசைச்சொற்களிவையெனத் தொகுத்துஉணர்த்துகின்றது. (இ-ள்,) யா - கா - பிற - பிறக்கு - அரோ - போ - மாது - இகும் - சின் - குரை - ஓரும் - போலும் - இருந்து, இட்டு - அன்று - ஆம் - தாம் - தான் - கின்று - நின்று - என்னும் இருபது இடைச்சொல்லும்முன்னையவைபோலாகாது எல்லாவிடத்திலுமெல்லாச் சொல்லினும்வரும் அசைச்சொற்களாம் எ-று.

பொதுப்படக்கூறலால் - எல்லாவிடத்தும் எல்லாச்சொல்லினும்வருமென்பதுபெற்றாம். [வ-று,] யாபன்னிருவர் மாணாக்கர் அகத்தியனார்க்கு, என - யா - வும், புறநிழற்பட்டாளோ விவட்காண்டிகா - என - கா - வும், ஆயனையல்லைபிற - என - பிற - வும், பிறக்கிதனுட்செல்லான்பெருந்தவம்பட்டான் - என - பிறக்கு - ம், இருஞ்ஞாயிலாலுமரோ - என - அரோ - வும், எரியினன்னசெந்தலையன்றில்பிரியின்வாழாதென்போ - எனப் - போ - வும், விளிந்தன்று மாதோ - என - மாது - ம், காண்டிகுமல்லமோகொண்க - கண்டோமல்லமோ - எனக்கூட்டி - இகும் - என்பதும், ஈங்காயினவாலென்றிசின் - என்றி - என்றாய், என்னும்முன்னிலைவினை - சின் - ம், அதுபெறலருங்குரைத்தே - அதுபெறலருமைத்து - எனக்கொண்டு - குரை - யும், அஞ்சுவதோருமறனே - அஞ்சுவதறனெனக்கொண்டு - ஓரும், வருந்தினைபோலும் - எனப்போலும், எழுந்திருந்தேன் - எழுந்தேனெனக்கொண்டு - இருந்து - ம், நெஞ்சம்பிளந்திட்டு - என - இட்டு - ம், சேர்துமன்றே - என - அன்று - ம், பணியுமாமென்றும்பெருமை - என - ஆம் - ம், நீதாம் - எனத் - தாம் - ம், நீதான் - எனத் - தான் - ம், ஆசைப்பட்டிருக்கின்றேன் - ஆசைப்பட்டேனெனக்கொண்டு - கின்று - ம், இதனுள் - இருவும்அசைநி

லை, அழகமைடைந்தமன்றத்தந்தையராயினேரர்- அரந்தையராயி
னார் எனக்கொண்டு-நின்று-ம், அசைநிலையெனமுறையேகாண்க.
பிறவுமன்ன. (கு)பாகா-பிறபிறக்கரோபோமாதெனவரூ-உ. மா
யேழ்சொல்லுமசை நிலைக்கிளவி - என ஆசிரியர் தொல்காப்பிய
னாரும் எல்லாவிடத்தும்எல்லாச்சொல்லினும் வருமசைச்சொல்
என்பதுதோன்றப்பொதுப்படக்கூறலுங்காண்க.யா அசைநிலை-
கா-அசைநிலை என த்தனித்தனி கூட்டியாவது - யாவுங்காவுமெ
னவெண்ணணி அசை நிலையெனப்பயனிலைகொடுத்தாவது முடித்து
க்கொள்க. (உஉ)

மூன்றாவது-இடைச்சொலியன்முற்றிற்று.

நான்காவது-

# உரிச்சொல்லியல்.

பல்வகைப்பண்பும்பகர்பெயராகி, யொருகுணம்பலகுணந்த
ழுவிப்பெயர்வினை, யொருவாசெய்யுட் குரியனவுரிச்சொல்.*

இது, நிறுத்தமுறையேஉரிச்சொல் இலக்கணம் இவ்வியலா
லுணர்த்தத்தொடங்கி - அவற்றின்பொதுவிலக்கண முணர்த்திற்
று. (இ-ள்,) பல்வகைப்- கி - குணப்பண்புந்தொழிற்பண்புமாகி
யவிரண்டிலுளடங்கும்பல்வேறுவகைப்பட்டபண்புகளையும் உண
ர்த்தும்பெயராகி, (அவ்வாறுணர்த்தும்போது) ஒரு - வி - ஒரு
சொல் ஒருகுணத்தைத்தழுவியும்பலகுணங்களைத்தழுவியும்,பெ
யர்வினை - து - மற்றப்பெயர்ச் சொல்வினைச் சொற்களைவிட்டுநீ
ங்காதனவாகி, செய்யுட் - ல் - செய்யுளுக்குரிமையுடையனவாகி
ப்(பொருளுக்குரிமைபூண்டு) வருவனவுரிச்சொல்லாம், எ-று.

இவ்வாறுவருவதை யினிக்காட்டு முதாரணங்களுட் காண்க. இ
வைபண்புப்பெயராயினும் மற்றப் பெயர் வினைகளைவிட்டுநீங்கா
மையின் உரிச்சொல்- எனவேறெடுப்பட்டனவென்பதும் - செ
ய்யுளுக்கு உரியனவாதலின் இவற்றிற்கு உரிச்சொல் லெனக்கார
ணக்குறியாயிற்றென்பதும்பெறப்பட்டன-இனிநால்வகைச்சொ
ற்களுஞ்செய்யுட் குரியனவாய் வருதலின் இவர்செய்யுட்குரியன
உரிச்சொல் என்றதுபொருந்தாதென்பதும் - இசையுங்குறிப்பும்

பண்புமாகிய மூவகைப்பொருளுக்கும் உரித்தாய்வருதலின் உரிச்சொல் என்பதுபொருந்து மென்பதும் — ஆசிரியர்தொல்காப்பியனார் (கூ) உரிச்சொற்கிளவிவிரிக்குங்காலை - யிசையினுங்குறிப்பினும்பண்பினுந்தோன்றிப்- பெயரினும்வினையினுமெய்தடுமாறி- யொருசொற்பல பொருட்குரிமைதோன்றினும் - பலசொல்லொருபொருட்குரிமைதோன்றினும்- பயிலாதவற்றைப்பயின்றவைசார்த்தித்- தத்தமரபிற்சென்றுநிலைமருங்கி- னெச்சொலாயினும்பொருள்வேறுகிளத்தல் - எனக்கூறிய இச்சூத்திரத்தானுத்துணர்ந்துகொள்க. இசை - ஓசை, குறிப்பு-மனத்தானுணரப்படுவது, பண்பு - ஐம்பொறிகளானுணரப்படுவது, (உரியனவுரிச்சொல்- எனவிசசூத்திரத்தைமுடித்துக்கொள்க. (க)

உயிருயிரல்லதாம் பொருட்குணம்பண்பே. *

இது, மேற்பண்பென்றது இதுவெனவுணர்த்திற்று. (இ-ள்,) உயிராகியபொருளும் உயிரல்லதாகியபொருளும் என இருவகைபடங்கும்உலகத்துப்பொருள்களின் குணங்கள்பண்பாம், எ-று.

இதனுட்கடவுட்பொருளையொழித்தார்- என்னெனின்- அதற்கோர்குணமில்லாததினாலும் உளதேற்குறிக்கப்பட்டுஉலகப்பொருளாமாதலாலுமென்க, பொருட்குணம் பண்பென முடித்துக்கொள்க. (உ)

மெய்நாவழிக்கு நாட்டஞ்செவிகளி, னொன்றுமுதலாக்கீழ்க்
கொண்டுமேலுணர்தலி, னோரறிவாதியாவுயிரைந்தாகும். *

இது, மேலுயிராகியபொருளென்றார் அவையிவையெனத் தொகுத்துணர்த்திற்று. (இ-ள்,) மெய்நா- களின்- உடல்முதலாகிய ஐம்பொறிகளானும், (முறையே - பரிசம் - இரதம்- கந்தம்- உருவம்- சத்தம்- என்னும்ஐம்புலன்களையுமுணருங்கால்) ஒன்று - டு- தேகத்தாற்பரிசத்தையுணரும் உணர்ச்சி யொன்றுமுதலாகக் கீழ்கடந்துபோனவுணர்ச்சியையுங்கொண்டு, மேலுணர்தலின்- மேல்வரும் புலன்களையொன்றொன்றாகவுணர்தலின், ஓரறிவாதியா- கும்- ஓரறிவுயிர்முதலாக ஐவகைப்படும் மேலேசொல்லப்பட்டவுயிரொன்றவாறு. (௩)

புன்மரமுதலவுற்றறியுமோரறிவுயிர். *

இது, ஓரறிவுயிரிவையென்கின்றது. (இ-ள்,) புல்லும்மரமும் முதலியன- தேகத்தாற்பரிசிக்கப்பட்டு அப்பரிசத்தையறியும்ஓரறிவுயிர்களாம், எ-று.

புன்மரமுதல- ஓரறிவுயிரெனமுடித்துக்கொள்க. (௪)

முரணந்தாதிநாவறிவோடீரறிவுயிர்.

இது, ஈரறிவுயிரிவையென்கின்றது. (இ-ள்,) முரள்-இப்பியும், நந்தாதி - சங்கும்முதலியன, நாவறிவோடு - (கீழ்ப்போனஅறிவையுங்கொண்டு) நாவால் இரசத்தையறியுமறிவோடு, ஈரறிவுயிர்- ஈரறிவுயிர்களாம்,எ-று.

முரணந்தாதியீரறிவுயிரொனமுடித்துக்கொள்க. (௫)

சிதலெறும்பாதிமூக்கறிவின் மூவறிவுயிர்.

இது, மூவறிவுயிரிவையென்கின்றது. (இ-ள்,) செல்லும்-எறும்பும்-முதலியன- கீழ்ப்போனஇரண்டறிவையுங்கொண்டுமூக்கிநலேசந்தத்தையறியும்அறிவொடுமூவறிவுயிர்களாம்,எ-று. (௬)

தும்பிவண்டாதிகண்ணறிவினாலறிவுயிர்.

இது,நாலறிவுயிரிவையென்கின்றது. (இ-ள்,) தும்பியும்வண்டும்முதலியன- கீழ்ப்போனமூன்றறிவையுங்கொண்டு- கண்ணாலுருவத்தையறியும் அறிவோடு நாலறிவுயிர்களாம், எ-று.

தும்பி- வண்டினுள்ஷ்ர்சாதி, (௭)

வானவர்மக்கணரகர்விலங்குபுள், ளாதிசெவியறிவோடையறிவுயிரே.

இது, ஐயறிவுயிரிவையென்கின்றது. (இ-ள்,) தேவரும் -மனிதரும்- நரகவாசிகளும்- மிருகங்களும்- பறவைகளும் முதலியன- கீழ்ப்போனநாலறிவையுங்கொண்டு - காதிநலேசத்தத்தையறியும் அறிவோடு- ஐயறிவுயிர்களாம், எ-று.

சித்துப்பொருள்சடப்பொருளென்றுசொல்லவந்தவர் உயிருயிரல்லதாம்பொருள் எனக்கூறியதும், சித்தாகியஉயிரறிவுசடமாகியவுடலொடுகூடியவழியன்றி இயங்காமையாலும் அவ்வியக்கங்கண்டல்லதுஉயிருண்டென்பதும் அதற்கோரறிவுண்டென்பதுந்தோன்றாமையாலும் உயிரைப்பிரித்தோதாமல் உடலொடுகூட்டிப்புல்மரமுதலவெனமுறையேகூறியதும், அந்தவுயிரறிவு உடலொடுகூடியியங்குங்கால் ஐம்பொறியாலும் ஐந்தாயியங்கலால் ஐயறிவெனக்கூறியதும் (இயக்கம்- அசைவு,) இந்தஐம்பொறியும்எல்லாவுடல்களிலும் முழுமையுநில்லாமல் இங்கேகூறியமுறையேநின்று அறிவையியக்குதலால் உயிர்கள்பலவாயினும் அறியும்வகையால் ஐந்தெனக்கூறியதும், காண்க;

ஆசிரியர் தொல்காப்பியனார்- (௬) மக்கடாமேயாறறிவுயிரே, எனக்கூறியிருக்க இவர்ஐயறிவுயிரெனக்கூறுதல் மாறுகொளக்கூறலென்னுங்குற்றமாமெனின் அன்றெனக. என்னெனின்- பொறிகளைந்துபுலன்களைந்தாதலால் அறியும்வகையால் உடலறிவுமுதற் செவியறிவுமுடிவாக உயிர் ஐவகையாயினவென்

றதுமன அறிவை நீக்கியன்றே அதனைக்கூட்டுங்கால் ஆறறிவுயிர்மக்கண்முதலியோரென்பது இவர்க்கும் உடன் பாடாதலாலெனக. இங்கே மக்கண் முதலியோரை - வானவர்மனிதர்கீழ்ப்போய்மாற்கிய நரகரோடு - காணுறுவிலங்கு புள்ளுக்கருது நாலறிவினோடே - யூனமில்செவியுமாங்கேயுறலினையறிவிற்சிவன் - மானமர்நோக்கினல்லாய்மனமுமொன்றதிகமாமே - எனக்கூறிய - மண்டலவனே போல, மிருகமுதலியவற்றொடு கூட்டியெண்ணி ஐயறிவுயிரொன்றது மரபுவழுவாமாயினும்புலன்களைந்தையும் நுகரும்வகையாலெனக்காரணங் கூறலின் அமையுமென்பதாம். (கூ) ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே - இரண்டறிவதுவேயதனொடுநாவே - மூன்றறிவதுவே யவற்றொடுமூக்கே - நான்கறிவதுவேயவற்றொடு கண்ணே - ஐந்தறிவதுவே யவற்றொடுசெவியே - ஆறறிவதுவேயவற்றொடுமனமென - நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத்தனரே - எம்-புல்லுமரனுமோரறிவினவே - பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே, நந்துமுரளுமீரறிவென்ப - பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே, சிதலுமெறும்பு மூவறிவெனபபிறவு முளவேயக்கிளைப்பிறப்பே, நண்டுந்தும்பியுநான்கறிவினவே பிறவுமுள, வேயக்கிளைப்பிறப்பே, மாவும் புள்ளுமையறிவினவே - பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே, மக்கடாமேயாறறிவுயிரே - பிறவு முளவேயக்கிளைப் பிறப்பே, என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலால்இலக்கணமுமவழுவும்அமைதியுமுய்த்துணர்ந்துகொள்க. (௮)

உணர்வியலாமுயிரொன்று மொழித்த, வுடன்முதலனைத்து மு
யிரல்பொருளே. *

இது, உயிரல்பொருளிவையென்கின்றது. (இ-ள்,) உணர்-த- அறிவுமயமாகியவுயிரொன்றையுநீக்கியுள்ள, உடன் - ருள் - உடம்புமுதலாகியஉலகத்துப்பொருள்களெல்லாம் உயிரல்லாதபொருள்களாம், எ-று.

முன்னேயுயிர்மாத்திரமே கூறுவார் உடம்பொடுகூட்டிக்கூறியதல்லது உடம்பைப்புங்கூட்டியுயிர்ப்பொருளென்றாரல்லரென்பது இதிலேபெறப்பட்டது - அனைத்தும்பொருளெனமுடித்துக்கொள்க. (௯)

ஒற்றுமைநயத்தினொன்றெனத்தோன்றினும், வேற்றுமைநய
த்தின்வேறேயுடலுயிர். *

இது, மேலதற்கோர்புறனடையுணர்த்திற்று. (இ-ள்,) (பசுவுடம்பெடுத்தபோது தன்கன்றினுக்கிரங்கிநலஞ்செய்தஅவ்வுயிர் புலியுடம்பெடுத்தபோது- இரக்கமின்றிஅந்தக்கன்றினுக்கேதீங்குசெய்யுமாதலால்- எந்தவுயிர்எந்தஉடம்பெடுத்ததோ அந்தஉடம்பின்மயமாய்நிற்கும்) ஒருமைப்பாட்டு நியாயங்குறித்தபோது ஒன்றுபோலத்தோன்றுமாயினும், (உயிர்சித்துப்பொருளாகியும் உடம்புசடப்பொருளாகியும்நிற்கும்) வேறுபாட்டுநியாயமாகிய உண்மைகுறித்தபோது அந்தஇரண்டும்-தம்முள்வேறுமாதலின் உயிரொடுகூடியகாலத்தும் அந்தவுடம்பு உயிரல்பொருளெனப் படும், எ-று.

உடலுயிர்வேறெனமுடித்துக்கொள்க. (௰)

அறிவருளாசையச்சமான, நிறைபொறையோர்ப்புக்கடைப்பி டிமைய, னினைவுவெறுப்பு வப்பிரக்கநாண்வெகுளி, துணிவ ழுக்காறன்பெளிமையெய்த்த, றுன்பமின்ப மிளமைமூப்பிக ல், வென்றிபொச்சாப்பூக்கமறமற, மறவியினையவுடல்கொளு யிர்க்குணம். *

இது, உயிர்க்குணமென்றவையிவையென்கின்றது. (இ-ள்,) அறிவுமுதலியமுப்பத்திரண்டு மிவைபோல்வனபிறவு முடலொடு கூடியவுயிரின்குணப்பண்புகளாம், எ-று.

இவற்றுள் - நிறை - எது - மனஅடக்கம், ஓர்ப்பு - ஆராய்ந்து தெளிதல், கடைப்பிடி-மறவாமை, மையல் -காமமயக்கம், உவப்பு- மகிழ்ச்சி, துணிவு- தெளிவு, அழுக்காறு- பொறாமை, இகல்- பகை,பொச்சாப்பு-மறப்பு,ஊக்கம் -மனவெழுச்சி, (தைரியம்) மறம்-வீரம், மறவி-மறந்துசெய்புங்குற்றம், ஒழிந்தனபொருள் விளங்கிக்கிடந்தன, உடலொடுகூடாக்கால்உயிர்க்குணங்கள்வெளி ப்படாவென்று சொல்லவந்தவர் - உடல்கொளுயிர்க்குணமென் றார், பின்வருவதுமது,இதன்முடிவுஉரையால்விளங்கிற்று. (௰௧)

துய்த்தறுஞ்சறெழுதலணித, லுய்த்தலாதியுடலுயிர்த்தொழி ற்குணம். *

இது, உயிரின்தொழிற்பண்புணர்த்திற்று. (இ-ள்,) இவ்வை ந்துமிவைபோல்வனவு முடலொடுகூடிய உயிரின் தொழிற்பண் புகளாம், எ-று.

துய்த்தல் - உண்டல், துஞ்சல் - உறங்கல், உய்த்தல் - செ லுத்தல், (௰௨)

பல்வகைவடிவிரு நாற்றமைவண்ண, மறுசுவையூறெட்டுயிரல் பொருட்குணம். *

இது, உயிரல்லாத பொருள்களின் குணப்பண்புணர்த்திற் று. (இ-ள்,) பல்வகைவடிவு - வட்டம் இருகோணம் முக்கோண ம்நாற்கோண முதலியபலவகைப்பட் டவடிவுகளும், இருநாற்ற ம்- நற்கந்தந்துர்க்கந்தங்களும்,ஐவண்ணம்- வெண்மை-கருமை- செம்மை- பொன்மை - பசுமைகளும், அறுசுவை - இனிப்பு- பு ளிப்பு- துவர்ப்பு - உவர்ப்பு - கார்ப்பு- கைப்புகளும், சுவை- இ ரதம், (ரசம்) ஊறெட்டு- வெம்மை- தண்மை- மென்மை- வன் மை- நொய்மை - எது - (கனமிலாதது-இலேசு) சீர்மை- எது- (கனமாயிருப்பது) இழுமெனல் - எது-(வழுவழுத்தல்,) சருச்ச

ளா - எது - இத்தகுணிர் - (பருபருக்கை-) என்னும் எட்டுவகைப் பரிசங்களும், உயிரல்பொருட்குணம் - உயிரல்லாதபொருள்களி ன்குணப்பண்புகளாம், எ - று.

வடிவுமுதலியன குணப்பண்புகளெனமுடித்துக்கொள்க. (யகூ)

தோன்றன்மறைதல் வளர்தல்சுருங்கல், நீங்கலடைதனடுங்கலி சைத்தல், தலின்னனவிருபொருட்டொழிற்குணம். *

இது, உயிரல்பொருட்குரிய தொழிற்பண்புகள் கல்லுவெடித்தது - பட்டமரம்முளைச்சுவிட்டது - என்பனபோலச் சுருங்கிக்கிடத்தலால் அதனையொழித்து அவ்விருவகைப்பொருட்கும் பொதுவாகியதொழிற்பண்புணர்த்துகின்றது. (இ-ள்,) தோன்றல் முதலிய ஒன்பதும் இவைபோல்வனவும் உயிர்ப்பொருள் உயிரல் பொருளென்னும் இருவகைப்பொருட்கும் பொதுவாகியதொழிற்பண்புகளாம், எ - று.

[வ-று,] உயிர்தோன்றிமறைந்தது - உடல்தோன்றிமறைந்தது, உயிர்வளர்ந்துசுருங்கிற்று - உடல்வளர்ந்துசுருங்கிற்று, உயிர்நீங்கியடைந்தது - வெயில்நீங்கியடைந்தது, உயிர்நடுங்கிற்று - உடல்நடுங்கிற்று, உயிரொலி - அலையொலி, ஈயாதுவீயுமுயிர்தவப்பலவே - வெயில்குறைந்தது, எனவிவைமுறையேயிருபொருட்குமுரியவாய்வருதல்காண்க. ஈதலுமின்னனவுந்தொழிற்குணமெனமுடித்துக்கொள்க. (யச)

சாலவுறுதவ நனிகூர்கழிமிகல். *

இது, ஒருகுணந்தழுவியவுரிச் சொற்களிவையென்கின்றது. (இ-ள்,) சால - என்பது முதலாகக்கூறியஆறுஉரிச்சொற்களும் மிகுதியென்னும்ஒருகுணத்தையுணர்த்துஞ்சொற்களாம், எ - று.

[வ-று,] இலங்குநூல்கற்றுணர்க்கா றுறுவர்சாலப்பலர், (மிகவும்பலர்) உறுவளிதூக்குமுயர்சினை - (உறுவளி-மிக்ககாற்று, கடுங்காற்று) தவச்சேய் நாட்டாராயினும், (மிகவுந் தூரதேசத்தாராயினும்) நனிபேதையேநயனில்கூற்றம், நனிபேதை - மிகவும்பேதை,) பேதை-பெண், நோய்கூரப்புலம்பினேன், (நோய்மிகமெலிந்தேன்) கழிசண்ணோட்டம், (மிக்கதாக்ஷண்ணியம்) எனமுறையேகாண்க. இவற்றுள் - நோய்கூர - என்பது - கூர்என்னும் உரிப்பெயரடியாகப்பிறந்த செயவென்னும்வாய்பாட்டு வினையெச்சக்குறிப்பு, சாலஎன்பதுமது, சால்எனப்பண்படியாகக்குறிப்பு, ஈறுசெய்யாது - சாலவெனவினையெச்சக்குறிப்பாகக் குறித்திரத்துஞ்செய்தது - இந்தவுரிப்பெயரடியாகவினைவிகற்பங்களெல்லாம்

சிறக்குமென்பது தோன்ற உடம்படுபுணர்த்தலென்க. அவையெல்லாம்வந்தவந்த இடங்களிற்கண்டுகொள்க. காலவுறுதவமுதலியனஉரிச்சொற்களெனமுடித்துக்கொள்க. (சூ) அவைதாம் - உறுதவநனியெனவரூஉமூன்றுமிகுதிசெய்யும்பொருளவென்ப - என்ன ஆசிரியர் தொல்காப்பியனார்கூறுதலுங்காண்க. (௰௫)

கடியென்கிளவி காப்பேகூர்மை, விரையேவிளக்க மச்சஞ்சிற
ப்பே, விரைவேமிகுதிபுதுமையார்த்தல், வரைவேமன்றல்கரி
ப்பிறுகும். *

இது, பலகுணந்தழுவியவுரிச் சொல்லுளொன்றனையுணர்த்திற்று. (இ-ள்,) கடியென்பது - காப்புமுதலியபதின்மூன்றுகுணத்தையுமுணர்த்துமுரிச்சொல்லாம், எ-று.

[வ-று,] கடிநகர் - எது - காப்பு, கடிநுனைப்பகழி - எது - கடுமைபொருந்திய நுனியையுடையகணை - கடுமை-கூர்மை, கடிமாலைசூடி - எது - வாசனைபொருந்தியமாலையையணிந்து - கடி - வாசனை, கண்ணடியன்னகடிமார்பன் - எது - கண்ணடிபோன்றபிரகாசத்தையுடையமார்பன் - கடி-பிரகாசம், கடியரமகளிர் - எது - அச்சந்தங்கியதெய்வப்பெண்கள், கடி - அச்சம், கடிமாமிசைப்பூத்து - சிறப்புப்பொருந்தியமாமரமிகப்பூத்தது, கடி - சிறப்பு, எம்மம்புகடிவிடுதும் - எம் அம்பைச்சீக்கிரம்விடுவோம், கடி - விரைவு, கடியுண் - மிகுதியாகியவுணவு, கடி - மிகுதி, கடிமணம் - புதிதாகியகலியாணம், கடி - புதுமை, கடிமுரசு - ஒலிக்கின்றமுரசு, கடி - ஒலித்தல், கடியென்றார் - நீக்கென்றார் - கடி - நீக்கம், கடியென்பது இங்கேவினையாய்நின்றது, கடிவினை - கலியாணத்தொழில், கடி - கலியாணம் - மன்றலென்பதுமது, கடிமிளகு - காரமாகியமிளகு, கடி - காரம், எனமுறையேகாண்க. கடியென்பதுபதின்மூன்று குணத்திலும் வருமென முடித்துக்கொள்க. (சூ) கடியென்கிளவி, வரைவேகூர்மைகாப்பேபுதுமை, விரைவேவிளக்கமிகுதிசிறப்பே, யச்சமுன்றேற்றுயிரைந்து, மெய்ப்படத்தோன்றும்பொருட்டாகும்மே. எனஆசிரியர்தொல்காப்பியனார்கூறுதலுங்காண்க. (௰௬)

மாற்றநுவற்சிசெப்புரைகரைநொடி, யிசைகூற்றுப்புகறன்மொ
ழிகிளவிவிளம்பறை, பாட்டுப்பகர்ச்சியியம்பல்சொல்லே. *

இது, ஒருகுணந்தழுவியவுரிச்சொல்லுணர்த்திற்று. (இ-ள்,) மாற்றம்முதல் இயம்பல் ஈறாகச்சொல்லியபதினைஞ்சொல்லும் ஒருகுணத்தையுணர்த்தும் உரிச்சொற்களாம், எ-று.

[வ-று,] அவையஞ்சாமாற்றங்கொடுத்தற்பொருட்டு- அவையஞ்சாவார்த்தை, பொழுதறிந்துநுவல- பொழுதறிந்துசொல்ல- செப்பலுற்றேன் - சொல்லலுற்றேன், உரைப்பவையெல்லாம் - சொல்பவையெல்லாம், அறங்கரைநாவின் - தருமத்தைச்சொல்லுன்றநாவின், ஆயிழையாள்தானுரைப்பும் - ஆராயத்தக்க ஆபரணங்களையணிந்தவள்தான்சொல்லுவாள், இசையெனப்புகன்று- சொல்லெனப்புகுந்து, நாங்கள்கூற- நாங்கள்சொல்ல, புகன்றவன்றியும்- சொன்னவையல்லாமலும், கண்டதுமொழிமோ-கண்டதுசொல்லு, கிளந்தகிளைமுதல்- சொன்னகிளைமுதல், விளம்பினர்புலவர் - சொன்னார்புலவர், அறைகுவன்சொல்லே - சொல்லுவேன்சொல்லிலக்கணத்தை, அறம்பாடின்று - அறநூல்சொன்னது, பகர்ந்தனர்புலவர் - சொன்னார்புலவர், ஈதலியல்பேயியம்புங்காலை- ஈயுந்தன்மையைச்சொல்லும்போழ்து, எனமுறையேகாண்க. இச்சூத்திரத்தைச்- சாலவுறுதவ-வென்னுஞ்சூத்திரத்தைச்சாரவையாமலிங் கேவைத்தார் இவை யொலிப்பண்பையுணர்த்தி மற்றப்பெயர்வினைகளை விட்டுநீங்கியும் நடக்குமென்பது தோன்றற்கென்க. இதன்முடிவு- உரையிடைவிளங்கிற்று. (௫௭)

முழக்கிரட்டொலிகலியிசை துவைபிளிறிரை, யிரக்கழுங்கியம்
பலிமிழ்குளிறதிர்குரை, கனைசிலைசும்மைகவ்வைகம்பலையரவ
மார்ப்போடின்னனவோசை. ✱

இதுவுமது, (இ-ள்,) முழக்குமுதலிய இருபத்திரண்டும் இவைபோல்வனபிறவும் ஓசையென்னுமோர்குணத்தை யுணர்த்துமுரிச்சொற்களாம், எ-று,

[வ-று,] முழங்குகடல்- ஒலிக்கின்றகடல், குடிஞையிரட்டும் - ஆறு ஒலிக்கின்றது, ஒலிக்குமொலி, கலிகெழு மூதூர் - ஒலிபொருந்தியபழையவூர், பறையிசையருவி- பறைபோலொலிக்கும் அருவி,(தோல்துவைத்தல்-)தோறுவைத்தல்- தோலொலித்தல், பிளிறுவார்முரசம் - ஒலிக்கின்றவார்முரசம், இரைக்குமஞ்சிறைப்பறவைகள்- ஒலிக்கின்ற அழகியசிறைகளையுடையபறவைகள், இரங்குசினவேழம் - ஒலிக்கின்றகோபத்தையுடையயானை, மாரியுழுங்கினமூதூர் - மேகம்முழங்கியமூதூர், முரசமதியம்ப - முரசம்ஒலிக்க, இமிழ்கடல்- முழங்குகடல், குளிறுமுரசம் - ஒலிக்கின்றமுரசம், களித்ததிருங்கார்-களித்துமுழங்கும்மேகம், குரைபுனல - ஒலியையுடையநீர், கனைகடல் - ஒலிக்குங்கடல், சிலைத்தார்முரசம் - ஒலித்துநிறைதரும்முரசம், சும்மை மிகுதக்கணநாடு,

ஒலியிருந்ததென்றூடி, கவ்வை நீர்வேலி - ஒலிக்கின்றநீர்சூழ்ந்தபூமி, வினைக்கம்பலை - தொழிற்செய்யுமொலி, அரவத்தானை - முழக்கத்தையுடையசேனை, ஆர்த்தபல்லியம் - ஒலித்தனபலவாத்தியம், எனமுறையேகாண்க. இவைபோல்வனபிறவென்றதினாலே - உரு என்பது - அச்சத்தையும் - புரை - என்பது - உயர்வையும் உணர்த்தும் - உதாரணம், உருகெழுஞாயிற்றொண்கதிர் - அச்சம்பொருந்தியசூரியகிரணம், புரையோர்கேண்மை - உயர்ந்தோர்நட்பு - எனவரும்.

(சூத்திரம்) உருவுட்காகும்புரையுயர்வாகும். எனவும், *

குரு - கெழு என்பன - நிறத்தையுணர்த்தும் - [உ-ம்,] குருமணித்தாலி - நிறம்பொருந்தியமணித்தாலி - கேழ்கிளரகலம் - நிறம்பொருந்தியமார்பு - எனவரும் - கெழு - கேழ் - எனவிகாரப்பட்டு நின்றது - குரு - குரூஉ - என நீண்டளபெடுத்து நிற்றலுங்கொள்க - இன்னுங்கெழுவென்பது - வேல்கெழுதடக்கை - எனப்பொருத்தத்தையுணர்த்தலுங்கொள்க.

(சூ) குருவுங்கெழுவு நிறனாகும்மே - எம், *

செல்லல் - இன்னல் - என்பன துன்பத்தையுணர்த்தும் - [உ-ம்,] அணங்கியசெல்லல் - வருந்தியதுன்பம், வெயில்புறந்தரூஉமின்னலியக்கத்து - வெயில்வெளியிலேதுன்பந்தரும்பிரயாணநடையிலே,

(சூ) செல்லலின்னலின்னாமையே - எம், *

அலமரல் - தெருமரல் - என்பன - சுழலுதலையுணர்த்து [உ-ம்,] அல்மரலாயம் - சுழலுதலையுடையபெண்கூட்டம், தெருமரலுள்ளமோடன்னைதுஞ்சாள் - மறுகியநெஞ்சமோடன்னையுறங்காள்,

(சூ) அலமரறெருமரலாயிரண்டுஞ்சுழற்சி - எம், *

மழவுங்குழவும் இளமையையுணர்த்தும் - [உ - ம்,] மண்பாத்த கோட்டமழகளிறு - (நிலத்துப்பாய்தலால்,) மண்கட்டியகொம்புகளையுடையஇளமைபொருந்தியயானை, குழக்கன்று - இளங்கன்று

(சூ) மழவுங்குழவுமிளமைப்பொருள - எம் *

கதழ்வு - துனைவு - என்பனவிரைவுணர்த்தும் - [உ - ம்,] கதழ்பரிநெடுந்தேர் - வேகம்பொருந்தியகுதிரைகட்டியநெடுந்தேர் - துனைபரிதுரக்குந்துஞ்சாச்செலவின் - வேகமாகக்குதிரையைநடத்துகின்றதூங்காப்பிரயாணத்தில்,

(சூ) கதழ்வுந்துனைவும்விரைவின்பொருள - எம் - *

அதிர்வுவிதிர்ப்பு என்பன - நடுக்கத்தையுணர்த்து - [உ-ம்,] அதிரவருவதோர்நோய் - நடுங்கவருவதோர்நோய், விதிர்ப்புறவறியாவேமக்காப்பு - நடுக்குறலறியாதவின்பக்காவல்,

(கு) அதிர்வும்விதிர்ப்பு நடுக்கஞ்செய்யும்- எ-ம்.

வார்தல்- போகல்- ஒழுகலென்பன - நேர்வையுநெடுமையை யுமுணர்த்தும்- [உ-ம்,] வார்ந்திலங்கும் வையெயிற்றிவை-நேராகிவிளங்குங்கூர்மை பொருந்தியபல்லுக்களையுடையமாது, வார்மணலடைகரை- நீண்டமணலடைகரை, போகுகொடிமருங்குல்- நேராகியகொடிபோன்றஇடை, திரிகாயவிடத்தேரொடுகாருடைபோகி - திரிந்தகாய்களையுடையனவாகியவிடத்தேரொடுமத்தோடுகருவேலமரமும் நீண்டு, ஒழுகுகொடிமருங்குல் - நேராகியகொடிமருங்குல்- மால்வரையொழுகியவாழை - பெருமைபொருந்தியமலையின்மேல்நீண்டவாழை,

(கு) வார்தல் போகலொழுகன்மூன்று - நேர்வுநெடுமையுஞ் செய்யும்பொருள- எ-ம்,

கெடவரல்- பண்ணையென்பன- விளையாட்டுக்குறிப்புணர்த்தும்- [உ-ம்,] கெடவரலாயமொடு- விளையாட்டுக்குறிப்புடையமாதர்கூட்டத்தோடு, பண்ணைத்தோன்றிய - விளையாட்டுக்குறிப்பிற்றோன்றிய,

(கு) கெடவரல்பண்ணையாயிரண்டும்விளையாட்டு - எ-ம்,

தடவு - பெருமையும்வளைவையுமுணர்த்தும்- [உ- ம்,] தடக்கை - பெருமைபொருந்தியகை, தடமருப் பெருமை - வளைந்தகொம்புகளையுடையஎருமை, கயவு- பெருமையையுமேன்மையையுமுணர்த்தும்- [உ-ம்,] கயவாய்- பெருவாய், கயந்தலை- மேன்மையாகியதலையினையுடைய யானைக்கன்று, இது - அன்மொழித்தொகை- நளி-பெருமையையுஞ்செறிவையுமுணர்த்தும்-[உ-ம்,] நளிமலைநாடன்- பெருமைபொருந்தியமலைநாடன்- நளிகொண்சுதை- செறிவுகொண்டகுளிர்ச்சிபொருந்தியவமிர்தம்,

(கு) தடவுங்கயவுநளியும்பெருமை - அவற்றுட்டடவென்கிளவி கோட்டமுஞ்செய்யும்- கயவென்கிளவிமேன்மையுஞ்செய்யும் - நளியென்கிளவிசெறிவுமாகும்- எ-ம்,

பழுதுபயனின்மையையும்-சாயல்-ஐம்பொறியாலனுபவிக்கப்படும் மேன்மையையுமுணர்த்தும் - [உ-ம்,] பழுதுகழிவாழ்நாள்-பிரயோசனமில்லாமலேகழிந்தவாழ்நாள், மயிற்சாயல்மகள்- மயில்போன்றமேன்மையையுடையமகள்- இதுஒளியாற்பிறந்தமேன்மை, சாயன்மார்பு- இதுபரிசத்தாற்பிறந்தமேன்மை, அமிர்தன்னசாயல் - எது - தன்னையனுபவித்தவர்பிறிதொன்றையனுபவித்தற்கு ஏதுவாகாமையையுணர்த்திற்று - உணர்த்தவே-இரதமுதலியபலமேன்மைகளுமிதனுளடங்கிநின்றன, ஒழிந்தனவந்தவழிக்காண்க.

(கூ)பழுதுபயமின்மை-சாயன்மென்மை-எம்-

முழுது- குறைவில்லாமையையும்- வம்பு- நிலையில்லாமையையும் - மாதர் ஆசையினையுமுணர்த்தும். [உ-ம்,] மண்முழுதாண்ட- நிலமுழுமையையும் ஆண்ட, வம்புமாரியைக்காரெனமதித்து- நிலையில்லாமேகத்தைக்கண்டுகார்காலமென்றெண்ணி, மாதர் கொண்மானோக்கின் - ஆசையைக்கொண்ட மான்போன்றவிழிகளையுடைய,

(கூ)முழுதென்கிளவியெஞ்சாப்பொருட்டே - வம்புநிலையின்மை-மாதர் காதல் - எம்-

நம்பு- மேவு- என்பன ஆசையையுணர்த்தும் - [உ-ம்,] நன்மொழிநம்பி - நல்வார்த்தையைவிரும்பி, நவிரமேவுங்காரிகை- மயிலுமாசைப் படுகின்றமாது, நம்பென்பது இக்காலத்து - இதைநம்பு- எனஉறுதியிலும், நம்பத்தக்கமனிதன் - எனத்தெளிவிலும்,உன்னை நம்பினேன்-என- ஒருமைப்பாட்டிலும், நம்பினவனை நட்டாற்றிற்கைவிட்டான்-எனச்சார்ந்துகீழ்ப்படிதலிலும்- வருதல்-புதியனபுகுதல்.

நம்புமேவுநசையாகும்மே.எம்,

நசை- ஆசையென்பதை- வரநசைஇயின்னுமுளேன்-என்னும் இதினுலுணர்க-ஓய்தல்-ஆய்தல்-நிழத்தல்- சாய்தல்-என்பன-உள்ளதினுணுக்கத்தையுணர்த்தும்-[உம்,]ஓய்களிறு- உள்ளயானைகளில்இருநுணுகியயானை-பாய்ந்தாய்ந்ததானை-பரந்துஆராய்ந்தெடுத்தசேலை, நிழத்தயானைமேய்புலம்படா- நுணுகியயானைமேயுமிடந்தேடிச்செல்லாது, செருக்கியுண்ணக்கவளமூட்டிப்போற்றுவதென்பதுகருத்து. கயலறலெதிரக்கடும்புனல்சாஅய் - மீன்களுங்கடலின் அலைகளுமெதிர்க்கப்பாய்ந்தவேகந்தங்கியநீர்நுணுகி,கலங்கிய நீர்தெளிந்தென்பதுகருத்து, இந்தநுணுக்கத்தைஆயிழையெனச்செய்யுளிலே பெருவழக்காக வழங்கிவருகின்ற இதினலேயுணர்க - எவ்வாறெனின் -- ஒருசாதியாயுள்ளபலஆபரணங்களிலொன்றைக்கண்ணோட்டக்காரன் தெரிந்தெடுத்தபோது மற்றஆபரணங்களெல்லாம்பரும்படியாதலால்இது உள்ளதினுணுகிற்றென்க, நுண்ணறிவென்பதையு மிவ்வாறேமற்றப்பரும்படியறிவுகளைநோக்கிநுணுகிற்றெனவுய்த்துணர்ந்துகொள்க - இக்காலத்து ஓய்தல்-செயலறலிலும், விடாய்த்தலிலும்-ஆய்தல் -தேடுதலிலும்- ஆராய்தலிலும்-சாய்தல்-கண்ணோட்டத்திலும்-நீதிதவறுதலிலும்- கோணுதலிலும்வருதல்காண்க.

ஓய்தலாய்தனிழத்தல்சாஅ - யாவயினான்குமுள்ளதனுணுக்கம்- எம்-

முரஞ்சல் - முதிர்விலும் - வெம்மைவிருப்பத்திலும்வரும்,

[உ-ம்,] கோடுபல முரஞ்சிய கோளியாலத்து - கோடுபல முதிர்ந்த அத்திமரத்தினும் ஆலமரத்தினும், ஏமவெங்காமம் - இன்பத்தைத் தரும் விருப்பத்தையுடைய காமம்,

(சூ) முரஞ்சல் முதிர்வே - வெம்மை வேண்டல் - எ-ம், *

ஏற்றம் - எ-து - நினைவினுந் துணிவினும் வரும் - [உ-ம்] கானலஞ் சேர்ப்பன் கொடுமை ஏற்றி - நெய்தல் தலைவன் கொடுமையை நினைத்து, ஏற்றமிலாட்டி - துணிவிலா மனையாள், இதுவன்றித் தாழ்வு என மிகுதியினும் - ஆனையேற்றம் - குதிரையேற்றமென்றுந விலும்வரும்.

(சூ) ஏற்றம் நினைவுந் துணிவுமாகும் - எ-ம், *

எய்யாமை - எ-து - அறியாமையையுணர்த்தும் - [உ-ம்,] எய்யாமையல்லை நீயும் வருந்துதி - அறியாமையையுடையையல்லை நீயும் வருந்துகின்றாய்,

(சூ) எய்யாமையே அறியாமையே - எ-ம், *

நன்று - எ-து - பெரிதென்னுங் குறிப்புணர்த்தும் - தெவு - எ-து - கொள்ளுதற் குறிப்புணர்த்தும் - [உ-ம்,] நன்றுமரிதுற்றனை - பெரிது மரிதாக வந்தனை, நீர்த்தெவு நிரைத்தொழுவர் - நீர் கொள்ளும் பொருட்டு வரிசையாய் நின்ற மருதநில மாக்கள்.

(சூ) நன்று பெரிதாகுந் தெவுக்கொளற் பொருட்டே - எ-ம், *

விறப்பு - உறப்பு - வெறுப்பு - என்பன செறிவுக் குறிப்புணர்த்தும் - [உ-ம்,] விறந்த காப்பொடு - செறிந்த காவலோடு, இடையறாக் காவலென்பது கருத்து - உறந்த விஞ்சியுயர் நிலைமாடத்து - செறிந்த கோட்டை மதிலின் மேலுயர்ந்த நிலைவீட்டிடல், வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன் - செறிந்த கேள்வியையும் விளங்குபுகழையுமுடைய கபிலன், இவற்றுள் விறப்பு - அச்சத்தையு முணர்த்தும் - [உ-ம்,] அவலெறியுலக்கைப் பாடுவிறந்து - அவலிடியுலக்கைத் தொழிலினையஞ்சி, இன்னும் - உறப்பு - ஊட்டியையுறந்த துபுலி - தொண்டையைக் கடித்துத் திறந்த சதுபுலி - எனட்புண் படக்கிழித்துத் திறத்தலினும் - உறக்குந் துணைதோராலம்வித்து - சுருங்கிய அளவினையுடையதோர் ஆலம்வித்து - எனச் சுருக்கத்தையுணர்த்தலினும், வெறுப்பு - வெறுத்த ஞானி வீட்டையடைந்தான் உலகத்தை யருவருத்த ஞானி மோக்கத்தையடைந்தான், என அருவருப்பையும் - சினத்தையும் வேண்டாமையையு முணர்த்தலுங் கொள்க.

(சூ) விறப்பு முறப்பும் வெறுப்புஞ் செறிவே - அவற்றுள் - விறப்பே வெரூஉப் பொருட்டுமாகும் - எ-ம், *

கழும் - எ-து - மயக்கக் குறிப்பையும் - கமம் - எ-து - நிறைவாகிய குறிப்பையும் - கவ் - எ-து - அகத்திட்ட குறிப்பையு முணர்த்தும் -

[உ-ம்,] கழுமியஞாட்பினுள்-- மயங்கியபோரினுள், கமஞ்சூன்மாமழை- நிறைசூற்கொண்டபெருமைதங்கியமேகம், கவ்வுக்கதுப்பிற்குழாயள்- அகத்திட்டவேகம்பொருந்தியகுழிரையையுடையாள், குழிரை - குரை- என இடைக்குறைந்துநின்றது- பாய்ச்சலிற்குழிரைதனக்குட்படத்தான்வெளிப்பட்டுநிற்றலைக்கருதி, ஆரங்கவைஇயமார்பு- மாலையையகத்திட்டமார்பு - என -எசசமாங்காலத்துத்திரிந்துநிற்கும்.

(ஞ) கழுமென்கிளவிமயக்கஞ்செய்யும்-கமநிறைந்தியலும்- கவ்வகத்திடுமே. எ-ம்,

ஞெமிர்தல்- பாய்தல்- என்பன - பரத்தலாகியகுறிப்பையுணர்த்தும்- [உ-ம்,] கருமணல்ஞெமிரியதிருநகர்முற்றத்து-கருமணல்பரந்ததிருநகர்முன்றிலில், புண்ணுமிழ்குருதி முகம்பாய்ந்திழிதர- புண்ணிலேநின்றுமிழிகின்ற இரத்தமுகமெல்லாம்பரந்தொழுக, வில்ஞெமிர்ந்தது- எனஞெமிர்தல் ஒடிதலினும் - நீர்பாய்கழனி - பாய்மான்றேர் - எனப்பாய்தல் ஒழுகலினுந்தாண்டுதல்குதித்தலினும்வரும்.

(ஞ)ஞெமிர்தலும்பாய்தலும்பரத்தற்பொருள. எ-ம்,

கவர்வு- சேர்- வியல்- என்பன- முறையே - விருப்பமுந்திரட்சியும். அகலமுமாகியகுறிப்பையுணர்த்தும் - [உ-ம்,] கவர்நடைப்புரவி- கண்கவர்வனப்பு-விரும்பத்தக்கநடையினையுடையகுதிரை, கண்விரும்பப்படும்அழகு, எனக்கவர்வுவிருப்பத்தையுணர்த்திற்று, கொள்ளைமாந்தரின்றுதுகவரும்-கொள்ளையிடுவோர்துன்புறக்கைக்கொள்ளும்- எனக்கவர்தல்கைக்கொள்ளுதலினும்வரும், சேர்ந்துசெறிகுரங்கின் -திரண்டுநெருங்கியகுறங்கின், எனச்சேர்திரட்சியையுணர்த்திற்று- ஊரைச்சேர்ந்தான்- ஊரையடைந்தான், என அடைதற்பொருளுணர்த்திமுதனிலையாகவும் நிற்றல்கொள்க - இருங்கல்வியலறை - பெருமைபொருந்திய அகன்றபாறை, என- வியல்அகலத்தையுணர்த்திற்று- இதுவியனுலகத்து- என - லகரவொற்றுனகரவொற்றாகத்திரிந்துநின்றும் அகலத்தையுணர்த்துமெனக்கொள்க.

கவர்வுவிருப்பாகும் - சேரேதிரட்சி - வியவென்கிளவியகலப்பொருட்டே, எ-ம்,

பேம்-நாம்-உரும்-என்பன-அச்சக்குறிப்புணர்த்தும்-[உ-ம்,] மன்றமராத்தபேமுதிர்கடவுள்- உளர்ப்பொதுமரத்திலிருக்கின்ற அச்சமுற்றியகடவுள், நாமநல்லார்க்கு, அச்சத்தையுடையமனைவி

க்கு, இதில்- நாம்- என்பது- நாமவெனத்திரிந்துநின்றது - உருமி ல்சுற்றமொடு- அச்சமில்லாதசுற்றத்தோடு,

(சூ)பேநாமுருமெனவரூஉங்கிளவி- யாமுறை மூன்றுமச்சப்பொருள. எ-ம், *

துயவு- எது- அறிவுவிகாரப்படுதலும்- உயா- எது - வருத்தமு ம்- உசா- எது- சூழ்ச்சியும்-வயா - எது -ஆசைப்பெருக்கமுமா கியகுறிப்புணர்த்தும்- [உ-ம்,] துயவுற்றேம்யாமாக - யாங்கள்அ றிவுவிகாரப்பட்டனமாக, பருந்திருந்துயாவிளியயிற்றும் - பரு ந்துஇருந்துவருத்தத்திற்கேதுவாகியகூப்பாட்டைச்செய்யும்,உ சாத்துணை- மந்திரி- உசா- மந்திராலோசனை, வயாவும்வருத்தமு மீன்றக்காளேவும் - ஆசைப்பெருக்கமும் துன்பமும் ஈன்றபோ துநோவும், இங்கேஆசைப்பெருக்கமென்றது- கருப்பந்தங்கிவ ருத்தப்பட்டு உண்ணப்படும் பண்டங்களின்மேலே செல்லுகின்ற ஆசைவிரிவையெனக்காண்க.

(சூ)துயவென்கிளவியறிவின்றிரிவே- உயாவேயுயங்கல்- உசாவேசூழ்ச் சி- வயாவென்கிளவிவேட்கைப்பெருக்கம். எ-ம், *

நொசிவு- நுழைவு- நுணங்கு - என்பன- நுண்மைப்பண்புணர் த்தும்- [உ-ம்,] நொசிபடிமருங்குல்- நுண்மையாகிய இடை, நு ழைநூற்கலிங்கம்- நுண்மையாகியநூலாலியற்றியவஸ்திரம், நுண ங்குதுகிலுடைக்கம் - நுட்பமாகியஆடையின்குழைவு, இனிநுணங் கென்பது - நுணங்குநுணகொடி - குழைகின்றநுண்மையாகிய கொடிஎனக்குழைவையுமுணர்த்துதல்கொள்க.

(சூ) நொசிவுநுழைவுநுணங்குநுண்மை. எ-ம், *

நளவு- போர்க்களமும் அகலமுமாகிய குறிப்புப்பொருளையு ணர்த்தும்[உ-ம்]நளவுப்புகுவிறலியிற்றோன்றுநாடன்- போர்க்க ளம்புகுந்தபாடுவிச்சிபோலத்தோன்றுநாடன், நளந்தலையுலகம், அகன்றஇடத்தையுடையவுலகம், இதுபுணர்ச்சி விகாரத்தால்மெ ல்லொற்றுமிக்கது - இனி - நளவிற்புணர்ச்சிநடக்கலுமாங்கே - என- நளவுசாக்கிரஅவத்தையையுமுணர்த்தும்.

(சூ) நளவேகளனுமகலமுஞ்செய்யும். எ-ம்,

அமர்தல்- யாணு - என்பனமுறையேமேவுதலும் அழகுமாகி யகுறிப்புணர்த்தும் - [உ-ம்,] அகனமர்ந்துசெய்யாளுறையும்- மனம்பொருந்தியிலக்குமிவாசஞ்செய்வாள், யாணதுபசலை- அழ கினையுடையதுபசலை,

(சூ)அமர்தன்மேவல்- யாணுக்கவினாம். எ-ம், *

ஐ- என்பது- ஆச்சரியமும்- முனை- என்பதுகோபமுமாகியகு றிப்புணர்த்தும் - [உ-ம்,] ஐதேகாமம் - ஆச்சரியமுடையதுகாம

ங், இதுவிகுதிபெற்றுநின்றது- சேற்றுநிலமூனை இயசெங்கட்கா
ரான்- சேற்றுநிலத்திலேசினந்துபாயுஞ்செங்கண்ணையுடையஎரு
மைக்கடா, இதுமூனவு- என்றும்பாடம்.

(சூ) ஐவியப்பாகும்- மூனைமுனிவாகும். எம், *
ஆசிரியர்தொல்காப்பியனார்கூறுதலாற்கொள்க. (மஅ)

இன்னதின்னுழியின்னணமியலு, மென்றிசைநூலுட்குணகு
ணிப்பெயர்கள், சொல்லாம்பரத்தலிற்பிங்கலமுதலா, நல்லோ
ருரிச்சொலினயந்தனர்கொளலே. *

இது, இவ்வியலுக்காவதோர்புறனடையுணர்த்திற்று. (இ-ள்) இன்னது- (பெயர்-வினை-இடை- உரி- என்னும்நால்வகைச்சொற்களுள்) இன்னசொல், இன்னுழி- (தன்மைமுன்னிலைபடர்க்கையென்னுமூன்றிடத்துள்ளும்வழக்குஞ்செய்யுளுமென்னுமிரண்டிடத்துள்ளும்) இவ்விடத்து, இன்னணம் - இந்தஇலக்கணத்தையுடையதாகி, இயலுமென்று- நடக்குமென்று, இசைநூலுள் - சொல்லத்தக்க இந்தநூலுள்ளே, குணகுணிப்பெயர்கள் - (அவ்விலக்கணங்காட்டுதற்கு வேண்டியமாத்திரமேகூறுவதன்றி) உரிச்சொல்லாகியகுணப் பெயர்களையும் அக்குணத்தையுடையதாகிய குணிப்பெயர்களையும், சொல்லாம் - (நிகண்டிற்போல) விரித்துக்கூறக்கடவோமல்லோம், பரத்தலின் - (மற்றொன்றுவிரித்தலென்னுங்குற்றநேரிடும்படி) விரிதலால், பிங்கலமுதலா நல்லோருரிச்சொலின் - (அவைமுழுமையுமறியவேண்டினோர் இலக்கணமறிதற்குமுன்னேதானே) நல்லோராற்கூறப்பட்ட - பிங்கலம் - திவாகரம் - சூளாமணி - முதலியநூல்களுள்ளேவகுத்துச் சொல்லப்பட்டவுரிச்சொல்தொகுதிமுதலியவற்றுள், நயந்தனர்கொளல் - விரும்பிக்கொள்க, எ - று.

இவ்வியலுள்- சாலவென்பதுமுதல் ஆர்ப்பென்பது ஈறாக-நாற்பத்தைந்து உரிச்சொல் எடுத்துச்சுருங்கச் சொல்லுதல் (சொல்லிலக்கணமுணர்த்தும்நூலுள்ளே சொல்லின்தொகுதிகளைவிரிப்பின் அதுமற்றொன்றுவிரித்தலாமெனவுணராதார்) குன்றக்கூறலாமென்பர் ஆதலால் அதுபரிகரித்தற் பொருட்டு இச்சூத்திரத்தாற்புறனடைகூறினார் -இப்படிச்சொல்லவே-பெயரியலுள்-பெயர்த்தொகுதியையும் - வினையியலுள் வினைத்தொகுதியையும் இடையியலுள்இடைத்தொகுதியையும்விரிக்காமல் அந்தந்தஇலக்கணங்காட்டுதற்கு வேண்டியமாத்திரமே கூறினதற்கு மிதுவே புறனடையாமென்க, பெயரியலென்பது - பெயரிலக்கணம், பெ

யர்த்தொகுதியென்பது - பெயர்க்கூட்டம், நிகண்டு - கூட்டம்,
இலக்கணங்கூறும் நூலுள்ளே நிகண்டையுமுடன்கூறாது அதனை
வேறோர் நூலாகக்கூறுவதுதமிழினுள்ளேயன்றி - ஆரியமுதலிய
வற்றுள்ளுங்காண்க.

இந்நூலாசிரியர் மற்றவியல்களும் - போதுமானவளவாயில் விரித்
துக்கூறி இந்தவியலுள்ளுமுன்னோர் கூறியவாறு போதுமானவளவாயில் விரித்து
க்கூறுமற்சுருக்கிக்கூறினோர் நிகண்டிற்போலக்- குணகுணிப்பெயர்களைக்கூறு
மென்றார் - அவ்வாறாயின் - இடையியலுள்ளுமிப்படியேசில இடைச்சொற்களை
க்கூறிப் புறனடையொடுக்கவேண்டு மப்படிக்கொடாது விரித்தவர் இந்தவிய
லைமாத்திரம் இப்படிச்சுருக்கிப் புறனடைகொடுத்ததும், (செய்யுள்) உற்றறிபு
லனொன்றே புன்மரமேழ்வோரறிவிற்சீவன் - மற்றுமீரறிவிற்சீவன்முரணந்தேட்ட
நாவாற் - றெற்றுமூவறிவிற்சீவன் சிதலெறும்பாதிமூக்காற் - சொற்றநாலறி
விற்சீவன் றும்பி வண்டாதிகண்ணால் - வானவர்மனிதர் கீழ்போய்மாழ்கிய நரக
ரோடு - கானுறுவிலங்குபுள்ளுக் கருதுநாலறிவினோடே - பூனமில்செவியுமாங்
கேயுறவினையறிவிற்சீவன்- மானமர்நோக்கினல்லாய் மனமுமொன்றதிகமாமே-
இவைநிகண்டாதலால் நிகண்டுபோலக் கூறுமென்றவர் - மெய்நாமுக்கெண்
ணென்றுத்திரமுதற்சிலசூத்திரங்களை- அதுபோலவே கூறியதும், முன்னோர் நூ
லொடுமுரண்கொளக்கூறலுமாறுகொளக்கூறலுமன்றேவெனின்-அன்றெ
ன்க, என்னெனின் - முன்னோர் நூலிற் கூறியவாறே கூறுவார் விரிவஞ்சிச்சார்பு
நூலாதலாற் சிலவுரிச்சொற்களை யெடுத்துக்கூறிப் பிறவுமென்றாராதலாலும்,
குணகுணிப்பெயர்கள் சொல்லாம்பரந்தவினென்றதற்கு- நிகண்டிற்போலவிரி
த்துக்கூறக்கடவேமல்லமென்றுவருவித்துரைத்தது உரைகாரர்கருத்தன்றிநூ
லாசிரியர் கருத்தன்றாதலாலுமென்க. இதனுட்கொளல் என்னும்வியங்கோள் முற்றிற்கு
ப்பயனிலைகுறைந்துநின்றதுவருவித்துமுடித்துக்கொள்க. (௰௯)

நான்காவது-உரிச்சொல்லியல்முற்றிற்று.

ஐந்தாவது-

## பொதுவியல்.

இருதிணையாண்பெணுளொன்றனையொழிக்கும், பெயருமவி
னையுங்குறிப்பினானே, *

இது, பெயர்வினையிடையுரியென்னும்நால்வகைச்சொற்கு
ம்பொது இலக்கணம்உணர்த்தலால். இது, பொதுவியலென்ப்
பட்டது. (இதனுள், (இச்சூத்திரம்- பெயர்க்கும்வினைக்கும் உரிய
தோரிலக்கணமுணர்த்திற்று.(இ-ள்,) இருதிணையாண்பெணுள்-உ
யர்திணையாண்பால்பெண்பால்களுக்கும் அஃறிணையாண்பால்பெ

ண்பால்களுக்கும்பொதுவாகியசொற்களுள், ஒன்றனையொழிக்கும்- ஒருபாலையொழித்து ஒருபாலைவிளக்கும், பெயரும்வினையும்- (அந்தஇருதிணையைம்பாலுக்கும்பொதுவான) பெயர்ச்சொற்களும்வினைச்சொற்களும், குறிப்பினன் - சிறிதுபொழுதுநிகழுங்குறிப்பினாலென்றவாறு.

[வ-று,] ஆயிரமக்கள்தாவடிபோயினர் - எனின் - மக்கள் என்னும் உயர்திணையாண் பெண் என்னும் இருபாற்கும்பொதுப்பெயரும்- போயினர் என்னும்அவ்விருபாற்கும்பொதுவினையும்- தாவடிஎன்னுங்குறிப்பினாலே பெண்பாலையொழித்தன (தாவடி - போர்க்குப்பிரயாணம்,) பெருந்தேவி பொறையுயிர்த்தகட்டிற்கீழ்நால்வர்மக்களுளர், எனின் - மக்களென்னும்பொதுப்பெயரும்-உளர்என்னும்பொதுவினையும்- பொறையுயிர்த்தல்-என்னுங்குறிப்பினாலே- ஆண்பாலையொழித்தன, (பொறையுயிர்த்தல் - பிரசவித்தல்,) இப்பெற்றங்கள்உழவொழிந்தனஎனின்-பெற்றங்கள- என்னும் அஃறிணையிருபாற்கும்பொதுப்பெயரும்- ஒழிந்தனஎன்னும்பொதுவினையும் - உழவு என்னுங்குறிப்பினாலே பெண்பாலையொழித்தன, இப்பெற்றங்கள்- கறக்கும்எனின்- அப்பொதுப்பெயரும்- கறக்கும்என்னும்பொதுவினையும்- கறத்தல் என்னுங்குறிப்பினாலேஆண்பாலையொழித்தன, கறக்கும்என்பது விகுதிமாத்திரையிற்பொதுவினையாயிற்று-(பெற்றம்-பசு-காளை- என்னும்இரண்டிற்கும்பொது) பிறவுமன்ன. பெயரும்வினையும்- ஒழிக்கும்- எனமுடித்துக்கொள்க. (க)

பெயர்வினையிடத்துனளரயவீற்றய, லாவோவாகலுஞ்செய்யு
ளுள்ளுரித்தே. *

இது, பெயர்வினைகளுக்குச் செய்யுளிடத்தாவ தோரிலக்கணமுணர்த்திற்று. (இ-ள்,) பெ - து - பெயரினிடத்தும்வினையினிடத்தும், னளரயவீற்றயல்- ன- ள- ர- ய- என்னும் இந்தநான்குஒற்று ஈற்றுக்கும்அயலிலேநின்ற, ஆவோவாகலும் - ஆகாரம் ஓகாரமாகத்திரிதலும், செய்யுளுள்ளுரித்து - செய்யுளிடத்து உரிமையாம், எ-று,

[வ-று,]வில்லான்-வில்லோன், தொடியாள்-தொடியோள், நல்லார்-நல்லோர், நல்லாய்-நல்லோய், எனப்பெயரிடத்தும்-படைத்தான்- படைத்தோன், பெயர்ந்தாள் - பெயர்ந்தோள், சென்றார் - சென்றோர்-வந்தாய் -வந்தோய், எனவினையிடத்தும் ஆவாயினவாறுகாண்க. வினையாலணையும்பெயரிடத்தல்லதுவினை

யினிடத்து ஆஃவாதல்சிறுபான்மையெனக்கொள்க, ஆவோவா தும்என்ற உம்மையை ஆக்கவும்மையாகக்கொண்டு- கிழவன்-ம லைகிழவோனே- என அகரம் ஓகாரமாகி ஓரோரிடத்துவருதலும் செய்யுளுள் உரித்தெனவே - வழக்கிடத்துரிமையின்றியும் சிறி யோர்பெரியோர்நல்லோர்தீயோர் எனச்சிறுபான்மைவருதலுங் கொள்க. ஆவோவாகலும் உரித்து - என முடிக்க. (சூத்) பாலறி மரபினம்மூவீற்றுமாவோவாகுஞ் செய்யுளுள்ளே - ஆவயின்கிள வியுமவற்றொற்றுமெய்கொள்ளும், என்றார் ஆசிரியர்தொல்காப்பியனாரு மெனக்காண்க. (உ)

உருபும்வினையுமெதிர்மறுத்துரைப்பினும், திரியாதத்தமீற்று
ருபினென்ப. *

இது, வேற்றுமையுருபுகளுக்கும்வினைகளுக்குமாவதோரிலக்கணமுணர்த்திற்று. (இ-ள்,) உருபும்வினையும் - எட்டுவேற்றுமையுருபுகளும்மூவகைவினைச்சொற்களும், எதி- பினும் - எதிர்மறுத்துச்சொல்லினும், தத்தமீற்றுருபின்- தத்தம்ஈற்றிலேநின்றுவினையும் - அந்தந்த உருபிலேநின்றஉருபும், திரியாவென்ப- வேறுபடாவென்றுசொல்லுவர்புலவர், எ-று.

இவ்உருபை- ஈற்றுஎன்றஇடத்துங்கூட்டுக- உருபும்- வினையுமென நிறுத்தியபடியே- தத்தம்முருபின்உருபும்- ஈற்றின்வினையுந்திரியா எனின்முறைநிரனிறைப்பொருள்கோள் - தத்தமீற்றினுருபினெனமாறிக் கூறலால் இது எதிர் நிரனிறைப்பொருள்கோள், உருபின்கண்எதிர்மறுத்தல்அவற்றின்பயனிலைகளையெனக் காண்க. [வ-று,] சாத்தன்வாரான்- குடத்தைவனையான்-வாளால் எறியான்- புலவர்க்குநல்கான்- நிலையின்இழியான் - பொருளினதுஇன்மை- தீயர்கட்சாரான்- சாத்தாசாயாதை- எம்- நடவான்- நடவாத- நடவாது- எனவும்வரும்- ஓடாக்குதிரை - ஆறுவறிவு, என்றற்போல்வன- ஓடாத-ஆறாத, என்பவற்றைக்குறைத்துவழங்கின அன்றி ஈறுதிரிந்தனவல்லவெங்க.

நடவான்-எது-நடந்தான்-நடக்கின்றான்-நடப்பான்-என்பனவற்றிற்கும், நடவாத- எது- நடந்த-நடக்கின்ற-எ- கும், நடவா-எது-நடக்கும்-எ-கும், நடவாது- நடந்து- நடவூ- நடவா-நடக்குபு- எ-கும், செய்யாது-செய்யாமல்- செய்யாமை-என்பன-செய்தென- எ-கும், செய்யாமல்- செய்யாமை என்பன-செய- எ- கும், செய்யாமைக்கு-என்பது- செய்யியர்-செய்யிய-செயற்கு-செய-எ-கும், செய்யாவிடின்-எது-செயின்-எ-கும், மறையெனவும், செய்யாதபின்- செய்யாதமுன் - செய்யாக்கால்-செய்யாக்கடை -செய்யாவழி - செய்யாவிடத்து-எனவுயின்முதலியவற்றிற்கும், செய்வான்-செய்பான்-செய்யுபாக்கு -என்பனவற்றிற்

செய்யாதொழிவான் - என்பதும்-மறையெனவும்- நல்லசாத்தன்என்னும்குறிப்பு
ப்பெயரெச்சத்திற்குப் பொல்லாச்சாத்தன் என்பதுமறையெனவுங்கொள்க.- இ
னிச்செய்யும் என்னும் - முற்றிற்கு- செய்யானவன- செய்யாதது - எனமறை ம
ருதலுங்கொள்க. பிறவுமன்ன, ஓர்வினைநிகழும் போது அதற்குக்கருத்தாவு
ஞ்செயப்படுபொருளுமுதலியவாகப் பெயர்ப்பொருளைவேற்றுமைசெய்துநின்
றவுருபுகள் வினைநிகழாதபோதுமவ்வாறுநிற்றலானும், வினைவிகுதிகளும் வினை
நிகழும்போது முற்றின்கட்கருத்தாவையும், எச்சங்களிற்பெயர்க்குறையையும்
வினைக்குறையையும் தந்துநிற்றல்போல வினைநிகழாதபோதுந்தந்துநிற்றலா
னுமிவ்வாறு சொல்லப்பட்டனவென்க, இதனுட் பயனிலைகுறைந்து நின்றது,

(சூத்) எதிர்மறுத்துமொழியினுந் தத்தமரபிற் - பொருணிலைதிரியாவேற்று
மைச்சொல்லே - எ-ம், பெயரெஞ்சுகிளவியும் வினையெஞ்சுகிளவியுமெதிர்மறு
த்துமொழியினும்பொருணிலைதிரியா - எ-ம் - ஆசிரியர்தொல்காப்பியனார்கூறிய
துங்காண்க. முற்றுச்சொற்குமறை இலேசினாற்றழுவினார். (௫)

உருபுபலவடுக்கினும் வினைவேறடுக்கினு, மொருதம்மெச்சமீ
றுறமுடியும். *

இதுவுமது, (இ-ள்,) உரு-னும்- வேற்றுமையுருபுகள்விரித்
தாயினுந்தொக்காயினுந்தம்முள்விரவிப்பல அடுக்கிவரினும்வே
று வேறுபல அடுக்கிவரினும்,வி-னும், மூவகைவினைச்சொற்களுந்
தம்முள்விரவியடுக்குந்தன்மையவன்றி வேறுவேறுபல அடுக்கிவ
ரினும்,(விரவுதல்-கலத்தல்,)ஒரு-யும்- அவற்றவற்றின்எச்சம்இறு
தியிலொன்றுவரஅதனோடுமுடியும், எ-று.
பல- என்பதை - வேறுஎன்பதனோடுங்கூட்டுக, வினைவேறுபலவடு
க்கினும் எனக்கூறியதுபோல உருபிற்குக்கூறாததினாலே - அவை
விரவியும்வேறுவேறுபல அடுக்கியும்வருமெனக்கொள்க. [வ-று,]
சாத்தன்-யானையதுகோட்டைநுனிக்கட்பொருட்குவாளாற்குறை
த்தான்- எனஉருபுவிரவிப்பல அடுக்கிக்- குறைத்தானென்னும்
ஒருவினைகொண்டன, இவற்றுள்-அது உருபடுக்கிநின்றதன்று,
சாத்தனையுங் கொற்றனையுந்தேவனையும் பூதனையும் வாழ்த்தினான்-
சாத்தனுக்குங்கொற்றனுக்குந்தேவனுக்கும் பூதனுக்குந்தந்தை-
எனஇரண்டனுருபும்நான்கனுருபும் வேறுபல அடுக்கி - வாழ்த்தி
னானென்னும் ஓர்வினையும் - தந்தையென்னும் ஓர்பெயரும் முறை
யேகொண்டன, வாள்கைக்கொண்டான்- அருளறமுடையான்- எ
னவுருபுதொக்கு அவ்வாறுவந்தன, உண்டான்தின்றான் ஓடினான்
பாடினான் - சாத்தன - எ-ம் - வருதிபெயர்திவருந்துதிதுஞ்சாய்
பொருதிபுலம்புதிநீயுங் - கருதுங்காற்-பண்டினைபல்லையாற்பாழி
த்தோட்கோதையைக்- கண்டனையோவாழிகடல்- எ-ம்- இனைபண்
டெல்லியெண்பட்டதை- அரியசெயபெருங்கான்யாறே- எ-ம் தெரி

நிலைமுற்றுங்- குறிப்புமுற்றும்விரவாதுவேறுபலவடுக்கிச்- சாத்தனை- நீ- மடந்தை- யாறு- என்றும்ஒர்பெயர்முறையேகொண்டன, கற்றகேட்டபெரியோர் - எம் - சிறியபெரியநிகர்மலர்க்கோதை - எம் - தெரிநிலைப் பெயரெச்சமுங் குறிப்புப்பெயரெச்சமும்விரவாதுவேறுபலவடுக்கிப்- பெரியோர் - மலர்க்கோதை- என்றுமோர்பெயர்கொண்டன, கற்றுக்கேட்டிருந்தான்- எம் - விருப்பின்றிவெறுப்பின்றியிருந்தான்- எனவுந்- தெரிநிலைவினையெச்சமுங்குறிப்புவினையெச்சமும்விரவாதுவேறுபல அடுக்கி அறிந்தான் இருந்தான்- என்றுமோர்வினைமுறையேகொண்டன.

(வெண்பா) கட்கினியாள்காதலன்காதலவகைபுணர்வா, ளுட்குடையாளராணியல்பினு- ளுட்கி, யிடனறிந்தூடி யினிதினுணரு, மடமொழி மாதரான் பெண் - எம்- காலார்கழலார்கடுஞ்சிலையார்கைக்கொண்ட - வேலார்வெருவந்ததோற்றத்தார் காலன், கிளர்ந்தாரும்போல்வார்கிணைப்பூசல்கேட்டே - புனர்ந்தார்நிரைபெயர்வுமுண்டு - எம் - வருமிவற்றை ஒழுவாயுருபடுக்கித்தமக்கேற்றதொருபெயர்ப்பயனிலையும் வினைப்பயனிலையும் இறுதியில்வர முடிந்தனவென்பாருமுளர், அவைமுறையே வினைமுற்றுவினையெச்சங்கள் அடுக்கி- உணருமடமொழிமாதரான் - எம் - உளர்ந்தார் - எம்- வரும்முடிக்குஞ்சொல்லுக்கு அடையாய் நிற்றலால் உருபடுக்கியதன்றெனமறுக்க, (சூத்) உருபுதொடர்ந்தடுக்கியவேற்றுமைக்கிளவி - யொருசொன்னடையபொருள்சென்மருங்கே. எம்- அவைதாம்- தத்தங்கிளவியடுக்குதவரினு மெத்திறத்தானும்பெயர்முடிபினவே எம்- பன்முறையானும் வினையெஞ்சுகிளவி - சொன்முறை முடியாதடுக்குதவரினு- முன்னதுமுடியமுடியுமன்பொருளே, எனவுங்கூறிப் பெயரெச்ச வடுக்கையிலேசினாற்றழுவினார் ஆசிரியர்தொல்காப்பியனாரெனக்காண்க. (சூத்) உருபுதொடர்ந்தடுக்கியவேற்றுமைக்கிளவி- பொருள்சென்மருங்கினொருசொல்லான்முடிதலு - முற்றியன்மொழியும்பெயரெஞ்சுகிளவியுந், தத்தங்கிளவியடுக்குதவரினும்- பன்முறையானும்வினையெஞ்சுகிளவி, சொன்முறைமுடியாதடுக்குதவரினு, முன்னதுமுடியமுடிதலுமரபே - எனப்பிறருங்கூறினாரெனக்காண்க, உருபும்வினையும்முடியுமெனமுடிக்க. (௬)

உருபுமுற்றீரெச்சங்கொளும்,பெயர்வினையிடைப்பிறவரலு மாமேற்பன. *

இதுவுமது, (இ-ள்,) உருபு- இடை - வேற்றுமையுருபுகளும் இருவகையெச்சங்களுங்கொண்டு முடியப்பெயர்க்கும்வினைக்கும்இடையிலே,ஏற- மாம்- அவ்விடத்திற்குப்பொருந்துவனவாகியபிறசொற்கள்வருதலுமாம், எ-று.

பிற-எனப்பன்மைகூறினாராயினும்-ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தே- என்பதனால்- ஒருசொல்வருதலுங்கொள்க.

[வ-று,] சாத்தன்(வயிறார) வுண்டான்-அறத்தை(யழகுபெறச்) செய்தான்- வாளான்மருவாரை(மாய) வெட்டினான்- தேவர்க்குச்(செல்வம்வேண்டிச்) சிறப்பெடுத்தான் - டலையினின் (அரு

ன்றி) வீழ்ந்தான்- சாத்தனது (இத்தடக்கை) யானை-ஊர்க்கண் (உயர்ந்தவொளி) மாடம்- சாத்தா(விரைந்தோடி) வா, எம், இவை யுருபுத்தொடர், வந்தான்(அவ்வூர்க்குப்போன) சாத்தன்- பாடினான்(தேவதேம்பண்ணினுக்கு) அரசன்- அழுதாள்(நடமாக) அணங்கிழை- எம்- செவ்வியன்(சால்பேறூர்) மகன்- நல்லன் (பெருந்தலைச்) சாத்தன்- எம்- இவையிருவகைமுற்றுத்தொடர், கொன்ற(காட்டுள)யானை- கொல்கின்ற(காட்டுள)யானை- கொல்லுங்(காட்டுள) யானை- கவளங்கொள்ளாக் (களித்த)யானை- எம் - உழுது (சாத்தன்) வந்தான்- வந்து(சாத்தனிற்றைநாளவனூர்க்குப்) போயினான்- கொன்று(வாளொடு) வந்தான்- எம் - விருந்தின்றி (யொருபோதும்) உண்ணான்- எனவரும்இவை இருவகை- யெச்சத்தொடர்-பிறவுமன்ன.

இவற்றுள்- காட்டுள- களித்த- என்னும்பெயரெச்சங்களை-அடுக்கெனப்பாருமுளர், அவையடுக்காயினும் இடைப்பிறவரலெனப்படுதே- ஆசிரியர்தொல்காப்பியனார்கருத்தென்பதை அவர்கூறிய (க) தத்தமெச்சமொடுசிவணுங்குறிப்பினெச்சொல்லாயினுமிடைநிலைவரையார் இச்சூத்திரத்தாலுணர்க- இனிற்பனவெனவேல்லாதனவிற்பொருள்கவர்படுமாதலால் அவைவரக்கூடாதென்பதாம்- அவையாவன, உண்டுவிருந்தொடுவந்தான்-வல்லமெறிந்தநல்லிளங்கோசர்தந்தைதமல்லயானைப்பெருவழுதி - என்றவழி விருந்தோடுண்டு-எனவும்-வல்லமெறிகல்வழுதியோகாது நல்லிளங்கோசர்க்குமயமாகிப்பொருள்கவர்படுதலாம் - (கவர்படுதல்- இருபாற்பட்டுத்துணிவுதோன்றாது நிற்றல்,) பிறவாறுமுடம்- எனமுடிக்க. (௬)

எச்சப்பெயர்வினையெய்துமீற்றினும், *

இதுவுமது, (இ-ள்,) எச்சவினை- (உருபுகளும்மூவகைவினைச்சொற்களுங்கொண்டுமுடியும்)குறைச்சொல்லாகியபெயரும்வினையும், எய்துமீற்றினும் - அவற்றினிறுதியிலும்வரும், எ-று

ஈற்றினுமென்றதனாலே அவற்றின்முதலிலும் வருதல்கொள்க. [வ-று,] சாத்தன்வந்தான்- மரத்தைக்குறைத்தான் - சாத்தனால்வந்தான்- சாத்தனுக்குக்கொடுத்தான் - சாத்தனினீங்கினான்- சாத்தனதாடை- சாத்தன்கட்சென்றான்- சாத்தாவா- எம்-வந்தான்வழுதி- கரியன்மால்- எம்- உண்டசாத்தன்-கரியசாத்தன்-எம்- உண்டுவந்தான்- விருந்தின்றியுண்டான்-எம்- இறுதியில்வந்தன- வந்தான்சாத்தன் - குறைத்தான்மரத்தை - வந்தான்சாத்தனால் - கொடுத்தான்சாத்தனுக்கு- நீங்கினான்சாத்தனில் - சென்றான்சாத்தன்கண்- வாசாத்தா - எம்- வழுதிவந்தான்- மால்கரியன்- எம்- வந்தானுண்டு- உண்டான்விருந்தின்றி - எம்-முதலில்வந்தன.

பொருடீர்ந்தபொச்சாந்துஞ் சொல்லார்மருடீர்ந்தமாசறுகாட்சியவர் - மயனில - பயனிலபாரித்துரைக்குமுரை - எம் - மறந் - அறஞ்சூழுஞ்சூழ்ந்தவன்கேடு - கெடல் - அடல்வேண்டி ஞற்றுபவர்கணிழுக்கு - எம் - அந்த - செந்தண்மைபூண்டொழுகலான் - பிறப் - சிறப்பொவ்வாசெய்தொழில்வேற்றுமையான் - எம் - எந உய்வில்லைச்செய்ந்நன்றிகொன்றமகற்கு அறி - செறிவுடையான்செல்கவினைக்கு - நீங்காநிலனாள்பவர்க்கு - எம் - பகை - இகவாவாமில்லிறப்பான்கண் - ஆக்கமதர்வினாய்ச்செல்லுமசைவிலாவூக்கமுடையானுழை - எம் - ஒழுக்கத்தினொல்கார் - இழுக்கத்தினேதம்படுபாக்கறிந்து - உழுவாருலகத்தார்க்காணியஃதாற்றாதெழுவாரையெல்லாம்பொறுத்து - எம் - கற்றதனாலாயபயனென், நற்றாடொழாஅரெனின், பேதைமை - நோதக்கநட்டார்செயின் - எம் இனிததூஉமீதலியையாக்கடை - பழகியநட்பெவன் செய்யுங்கெழுதகைமைசெய்தாங்கமையாக்கடை - எம் - களையுநர்கைகொல்லுங்காழ்த்தவிடத்து - எனவுஞ்செய்யுளகத்துவருதலுங்காண்க. எய்துமீற்றினென்றற்போலமுதற்கண்வருதலையெடுத்துச்சொல்லாமலும்மையாற்றழுவியதென்னெனின் - ஆறனுருபினெச்சமும் - எழனுருபினெச்சப்பெயரும் - பெயரெச்சத்தினெச்சமும் - முதற்கண்வாராமையும் - ஒழிந்தனமுதற்கண்வரினும் இறுதியில் வருவனபோற்சிறப்பின அல்லவென்பதூஉந்தோன்றுதற்கென்க, சாத்தனதாடையென்பதுஆடைசாத்தனது - எனமாறிநின்றபோது - அதுவென்பதுஉருபாகாது - அஃறிணைவிகுதியீற்றுவினைக்குறிப்பாமெனக்கொள்க. எழுவாயுருபுவினைமுற்றுப்பயனிலையையிறுதியிலேகொண்டது - வினைமுற்றுப்பயனிலையைமுதலிலேகொண்டதும் சாத்தன்வந்தான் - எனநிற்கும் - அம்முன்வேற்றுமையாமோவெனின் - கேட்போர்க்குச்சாத்தனியாதுசெய்தானெனவினையையுணர்த்துவது எழுவாய்ப்பயனிலையும் - இதுசெய்தான்சாத்தன் - என - வினைமுதலையுணர்த்துவது முற்றுப்பயனிலையுமாமென்க, வந்தான்சாத்தன் - என்னும் முற்றுப்பயனிலைமாறிநிற்பினும் அதுவாமென்க. (௬)

ஒருமொழியொழி தன்னினங்கொளற்குரித்தே. *

இ-து, நால்வகைச்சொற்கு மாவதோரிலக்கணமுணர்த்திற்று.

(இ-ள்,) ஒருமொழி - பெயர் - வினை - இடை - உரி - என்னும் நால்வகைச்சொற்களுள் - ஒவ்வொன்று, ஒழிதன்னினங்கொளற்குரித்து - ஒழிந்துநின்றதன் தன் இனங்களைக்கொள்ளுதற்குஉரித்தாம், எ-று.

[வ-று,] சோற்றைநனியுண்டான் - என்றாற்கறியைநனிதின்றான் - எம் - பாக்கைநனிதின்றான் - எனின் - வெற்றிலையைநனிதின்றான் - சுண்ணாம்பைநனிதின்றான் - எம் - நஞ்சுண்டான்சாவானெனின் - நஞ்சுண்டாள்சாவாள் - நஞ்சுண்டார்சாவார் - நஞ்சுண்டதுசாம் - நஞ்சுண்டவைசாம் - எம் - பார்ப்பான்கள்ளுண்ணான் - எனின் - பார்ப்பனிகள்ளுண்ணாள் - பார்ப்பார்கள்ளுண்ணார் - எம் - கூறுதேயமைதலால் இவைஇனங்களாய் ஒழிந்துநின்றன - இவற்றுள் - சோற்றையென்னும் பெயர்ச்சொல்லும் உருபிடைச்சொல்லும் - கறியை - என்னும் பெயர்ச்சொல்லையும் உருபிடைச்சொல்லையும், நனியுண்டான் என்னும் உரிச்சொல்லும் வினைச்சொல்லும் - நனிதின்றான் - என்னும் உரிச்சொல்லையும் வினை

ச்சொல்லையுங்கொள்ளுதற்கு உரிமையவாய்நிற்றல்காண்க- பார்ப்பான்கள் ளுண்ணும்என்பதுசாதிபற்றி வருதலாற்பிறசாதியார்க்கும் அஃறிணைக்குஞ்செல்லாதெனவுணர்க பிறவுமன்ன - ஒருமொழிகொளற்குரித்து- எனமுடிக்க. (எ)

பொதுப்பெயர்வினைகளின் பொதுமைநீக்கு, மேல்வருஞ்சிறப்புப்பெயர்வினைதாமே. *

இது, பெயர்வினைகளுக்கு ஆவதோரிலக்கணமுணர்த்திற்று (இ-ள்,) பொதுப்பெயர்வினைகளின்- திணை- பால்- இடம்- காலங்களுக்குப்) பொதுவாகியபெயர் வினைகளினுடைய, பொதுமைநீக்கும் - பொதுத்தன்மையை நீக்கிஒன்றிற்கு உரிமையாக்கும், மேல்- தாமே-மேல்வருஞ்சிறப்புப்பெயரும்வினைகளுந்தாமே, எ-று.

ஒன்றிற்கு-முன்-பின்- என்னும் இருமருங்கையும்மேலென்று சொல்லப்படுதலால்- சிறப்புப்பெயர்வினைகள் - முன்வரினும் பின்வரினும் மேலெனக்கொள்க - பொதுச்சிறப்பென்னு மிரண்டினுள்-பொதுமையைத்தாமேநீக்கும்என நிற்றலால்ஏகாரம்பிரிநிலைப்பொருள்படநின்றது. [வ-று,] சாத்தன் இவன் - சாத்தனிது- எம்- சாத்தன்வந்தான்- வந்தது- எம்- பெயர்த்திணைப்பொதுமையைச்சிறப்புப்பெயரும் வினையும்வந்துநீக்கின, ஒருவர் என்ஐயர்- ஒருவர் என்தாயர்- எம்- மரம்வளர்ந்தது -மரம்வளர்ந்தன - எம் - பெயரின்பாற்பொதுமையைச்சிறப்புப்பெயரும் வினையும்வந்துநீக்கின, அவரெல்லாமிருந்தார் - யாமெல்லாம்வருவோம்- நீயிரெல்லாம்போமின் - எனப்பெயரின் இடப்பொதுமையினைச்சிறப்புப்பெயரும் வினையும்வந்துநீக்கின, வாழ்க அவன்- அவள்-அவர்- அது- அவை- யான்-யாம்-நீ-நீர் -எம்- உண்டுவந்தான்- ள்-ர்-து-ன-தேன்- தேம்- தாய்- தீர்- எம்- உண்டுவருகின்றான் - ள்-ர்-து-ன-றேன்-றேம்- றாய்- றீர்- எம்- உண்டுவருவான்- ள்-ர்-து-ன-வேன்- வேம்- வாய்- வீர்- எம்- வினையின்திணை- பால்- இடம் - காலப்பொதுமையைச்சிறப்புப்பெயரும்வினையும்வந்துமுறையேநீக்கினபிறவுமன்ன - உண்டுஎன்பது- இறந்தகாலவினையெச்சமாயினும்முக்காலவினைகளைக் கொண்டுமுடிதற்கு உரியபொதுமையையுடையது ஆதலால் அதைமேல்வருஞ்சிறப்புவினைகள்நீக்கின, இனி- உண்டு-வந்து- சென்று- என்பன முற்றிற்கும் எச்சத்திற்கும்பொதுமையினின்றன- ஆதலால்- உண்டியான் எனப்பெயர்ப்பயனில் முடிக்கப்படுஞ்சொற்குப்பின்

வந்துமடற்றுச்சொன்னேனக்காது முற்றிநின்றுபொருண்மையை நீக்
கலும், உண்டுவந்தேன்யான் எனப்பெயர்ப்பயனிலை முடிக்குஞ்
சொற்குப்பின்வந்துபொருண்மையை நீக்கலுமுய்த்துணர்க, மொ
ழியாததனையுமுட்டின்றி முடித்தலென்னும் உத்தியால் - நீவருத
லால் ஆசாரம்பெற்றேன் - யான்வருதலாற்கல்லாதனவெல்லாங்க
ற்றுணர்ந்தாய் - எனின் - நீயென்பதும்யான் என்பதும்உயர்திணை
யாண்பால்எனவும் - நீவருதலாற்குழலியழாதாயிற்று - யான்வரு
தலாற்குழலியழாதாயிற்று - எனின் - நீயென்பதும்யான்என்பதும்
உயர்திணைப்பெண்பால்எனவும் - நீவருதலான்முல்லையரும்பிற்று -
எனின் - கார்காலமென்பதும் - குறிப்பினாலேதோன்றுதலால் - சொ
ல்லொடுகூடியகுறிப்பும்பொருண்மையைநீக்குமெனக்கொள்க. சிற
ப்புப்பெயர்வினைதாமேநீக்குமெனமுடிக்க. (அ)

பெயர்வினையும்மைசொற்பிரிப்பெனவொழியிசை, யெதிர்ம
றையிசையெனுஞ்சொல்லொழிபொன்பதுங், குறிப்புந்தத்த
மெச்சங்கொள்ளும். *

இது, நால்வகைச்சொற்குமாவதோரிலக்கணம்உணர்த்தும்
வழிச்சிலவற்றிற்கு எய்தியதன்மேற்சிறப்புவிதியுஞ்சிலவற்றிற்கு
எய்தாததுஎய்துவித்தலுமுணர்த்திற்று. (இ-ள்,) பெயர்-லொழி
பென்பதும் - பெயரெச்சமும் - வினையெச்சமும் - உம்மையெச்ச
மும் - சொல்லெச்சமும் - பிரிநிலையெச்சமும் - எனவெச்சமும் -
ஒழியிசையெச்சமும் - எதிர்மறையெச்சமும் - இசையெச்சமும் -
ஆகியசொல்லெச்சம் ஒன்பதும், (ஒழிபு - எச்சம்,) குறிப்பும் - குறி
ப்பெச்சம் ஒன்றும், தத்தமெச்சங்கொள்ளும் - அவற்றவற்றெச்
சங்களைக்கொண்டுமுடியும், எ-று.

எச்சம்எச்சங்களைக்கொண்டுமுடியுமென்றதென்னெனின் - மு
டிவனவும்முடிப்பனவுமாகிய இரண்டினுள் - முடிவனவாகிய - எ
ச்சங்களுக்குமுடிப்பனவும் எச்சமாகவே நிற்குமாதலால் அவ்வா
றுகூறப்பட்டதென்க, ஒழிபுஎன்பதைக்குறிப்பு என்றதனோடுங்கூ
ட்டுக - எனவே - எச்சங்கள்சொல்லெச்சமுங்குறிப்பெச்சமுமென
இருவகைப்படுமென்பதும் - சொல்லெச்சம் ஒன்பதெனத்தொ
கைகூறினோர் அதன்வகையுள் ஒன்றையுஞ்சொல்லெச்சமென்றதி
னால் அதுசொல்விகற்பங்களின்றிச்சொல் என்பதேகுறைந்துநிற்
பதென்பதுமபெறப்பட்டன, பெயரெச்சம்பெயர்கொண்டுமுடி
தற்கும்வினையெச்சம் வினைகொண்டுமுடிதற்குமுதாரணம் முன்
னேயமைந்துகிடந்தன - [வ-று,] சாத்தனும்வந்தான் என

ம்உம்மையெச்சம்முன்னர்க்கொற்றன்வந்தான் எனத்தம்மெச்சங்கொண்டது, கடியென்மரர்கற்றறிந்தார் - இல்லென்றல்யார்க்கும்வசையன்று - என்பனசொல்லெச்சம் - இவை - கடியென்றுசொன்னார் - இல்லென்றுசொல்லுதல் - எனச் - சொல்லென்றுந்தம்மெச்சங்கொண்டன, இதுபெயரெச்சம் வினையெச்சமென்றற்போலச் - சொல்லென்றுமெச்சத்தையுடைய இடைச்சொல்லைச் சொல்லெச்சமென்றார் ஆகுபெயர், மேல்வரும் எனவென் எச்சம் ஒழிந்தனவும் அத்தன்மையனவேயாம், சாத்தனைக்கொண்டான் - சாத்தனோகொண்டான் என்பனபிரிநிலையெச்சம் - இவைபிறர்கொண்டிலர் எனத்தம்மெச்சங் கொண்டன - கொள்ளுதல்வினையாற்சாத்தனில் நின்றும்பிரிக்கப்பட்டார் பிறராதலாற்பிரிநிலையென்க, கடல்ஒல்லென ஒலித்தது - நரம்புவிண்ணெனவிசைத்தது - என்பன - எனவெச்சம் - இதுமிகுதிப்பொருளைத்தருவதோர் இடைசொல்லாதலால் ஒல்லென ஒலித்ததென்பதற்கு மிகவுமொலித்ததென்பதுபொருள், பெய்யெனப்பெய்தமழை - இது - பெய்யென்றுசொல்லெனவினைப்பொருளைத்தருதலால் இடைச்சொல்லடியாகப்பிறந்தசெயவென் எச்சமாய்வினையெச்சத்துள்ளடங்குமென்க, கூரியதோர்வாள்மன் - வருகதில்லம்ம - கொளவோவந்தான் என்பனஒழியிசையெச்சம் - இவைமுறையே - கோணிற்று - வந்தால் இன்னதுசெய்வேன் - கொண்டுபிழைக்கவந்தவனல்லன் - எனத்தம்மெச்சங்கொண்டன - வருதற்குமுரியன் - யானோசெய்தேன் - என்பனஎதிர்மறையெச்சம் - இவைமுறையே - வாராமைக்குமுரியன் - யான்செய்திலன் எனத்தம்மெச்சங்கொண்டன, இதுவரைக்கும்வினையியல்ஒழிபாகியபெயரெச்சவினையெச்சமுடிபும் இடைச்சொல்லியல் ஒழிபாகியமற்ற அறுவகையெச்சமுடிபும் எடுத்தோதினார் - இனிஇவ்வாறெடுத்து ஓதுதற்கு வரையறைப்படாதுநின்றசொல்லெச்சங்களையெல்லாந்தொகுத்து இசையெச்சமென இறுதியிலேசொன்னார் - இசையென்பது - சொல், இசையெனப்பொதுப்படச்சொன்னதினாலே - இந்தஎச்சமும் - இது கொண்டுமுடிவதும் பெயர்வினையிடையுரியென்னும்நால்வகைச்சொல்லுள் ஒன்றும்பலவுந்தனித்துந்தொடர்ந்தும் வருமெனக்கொள்க, அவற்றுள் - சிலஇசையெச்சங்கள்வருமாறு, இணரெரிதோய்வன்னவின்னாசெயினும் - புணரின்வெகுளாமைநன்று - என்னுங் குறளுக்கு - (பிறவுயிர்க்குத்தீங்குசெயின் அதுதப்பாமலேதமக்குவருதலைக்குறித்துத் தம்மிடத்தில்அன்பும், பிறவுயிர்க

ளிடத்து அருளும், தீங்குசெய்தலாலே மேன்மேல்வரும்பிறப்புஇறப்புஎன்னும் இரண்டின் அச்சமும், நம்மாலே தீங்குசெய்யப்பட்டாரை நாம் அடைந்து இரக்கவரினும்வரும் அதனாலயாரிடத்துந்தீங்குசெயக்கடவோமல்லம் என்னும் எதிர்கால உணர்ச்சியும், இலராகி ஒருவர்)இன-யினும்- அக்கினிச்சுவாலைகளிலேமுழுகினதையொத்தபொல்லாங்குகளைத் தன்னிடத்துச்செய்தாராயினும், புணரின் - (அவர்தமக்குவேண்டுவதோர்குறைமுடித்தலைக்குறித்துநாணமேலதன்னைவந்து) அடைந்தாராயின், வெகுளாமை நன்று - அவர்செய்தபொல்லாங்குகளைநினைந்து அவர்மேற்சினங்கொள்ளாமல் அவற்றைமறந்து அவர்வேண்டுவதை முடித்துக்கொடுத்துப்பண்டுசெய்தபொல்லாங்குகளாலே அவர்கூசிநடத்தலொழிதற்குக்காரணமாகிய இனியமுகமும் இன்சொல்லும்முதலியவைதன்னிடத்து இயல்பாகவேயுண்டாக அவர்க்கு இனியனாகியிருப்பதுதனதுபெருந்தன்மைக்குநன்று, என நால்வகைச்சொற்களுள் வேண்டுவன வெல்லாங்கொண்டுவந்து அகலவுரைகூற வேண்டிநிற்பதும், இப்பட்டுச்சினம் என்றவழி - இப்பட்டுச்சினத்துள்ளது எனஒருசொற்கூட்டியுரைப்பதும்பிறவும் இசையெச்சமாமென்க, இனிக்குறிப்பெச்சமாவன-ஒன்றொழிபொதுச்சொல்முதலிய குறிப்புச்சொற்களாம்- அவற்றை, ஒன்றொழிபொதுச்சொல்விகாரந்தகுதியென்னுஞ்சூத்திரம்நோக்கிக்காண்க- அவை தத்தமெச்சங்கொள்ளுமாறு - பெருந்தேவிபொறையுயிர்த்தகட்டிற்சீர்நால்வர்மக்களுளர் எனின் - மக்களென்றைப்பொதுப்பெயர் பெண்மக்களெனப்பெண் என்னுஞ்சிறப்புப்பெயர்கொண்டது, குறத்தாட்பூதம் எனின் - தகரவல்லொற்று அதற்குஇனமாகிய நகரமெல்லொற்றைக்கொண்டது, இவ்வாறே ஒழிந்தனவற்றையுங்காண்க, சொல்லையன்றிப்பொருளும் எழுத்தும் எஞ்சவருவனவுமுளவாதலால் இதனைக்குறிப்புச்சொல்லெச்சமென்னாமற்குறிப்பெச்சமென்றார்.

இனிச்சொல்லெச்சமென்பது- சொல்லியற்சொல்லெச்சமுஞ் செய்யுளியற்சொல்லெச்சமும் எனஇருவகைப்படுமென்றும்அவற்றுள் - சொல்லியற்சொல்லெச்சமாவது சொல் என்பதை எச்சமாகவுடைய- என்னெச்சமென்றும் அது - சொல்லென்னும் முதனிலையல்லது முன் பின்சொல் எஞ்சுதலின்றெனவும்- அதற்கு உதாரணம் - வினையெனப்படுவது - வினையென்றுசொல்லப்படுவது, பெயரெனப்படுப-பெயரென்றுசொல்லப்படுவன - எம்- செய்யுளியற்சொல்லெச்சமென்பது செய்யுளிடத்து முன்னாகவாயினும் பின்னாகவாயினும் ஒருசொல் மாத்திரம் எஞ்சிநிற்பதெனவும்- அதற்குதாரணம்- எனச்சு, கல்கெழுகானவர் நல்குறுமகள்- மருந்தெனின்மருந்தேவைப்பெனின்வைப்பே இதனுள்- என

க்கு- எனமுன்னும், கழறுசெய்குன்றங்குறிப்பு வின்குலைக்காந்தட்டே- ஆதலால், யாங்காந்தட்பூவார்க்குறையிலம், எனவரும் - இதனுள் - ஆதலால்-எனட்பின்னும் ஒருசொல் எச்சமாய் நின்றதெனவும், பொருள் விளங்க ஆசிரியர் தொல்காப்பியனார். (சூத்) சொல்லென்னெச்சமுன்னும்பின்னுஞ் - சொல்லளவல்லதெஞ்சுதலின்றே - எனக்கூறியதூஉம், குறிப்பெச்சம் இசையெச்சமென்பன- குறிப்பின்கட்டோன்றிய எச்சமெனவும் இசையின்கட்டோன்றிய எச்சமெனவும்விரியுமென்றும் - மேற்கூறியசொல்லெச்சத்துடன் இம்மூன்றும் முடிக்குஞ்சொல்லின்றி எச்சப்பொருளைத்தாமேவிளக்குமென்றும் குறிப்பெச்சஞ்சொல்லியற்குறிப்பெச்சமுஞ் செய்யுளியற்குறிப்பெச்சமு மெனவிருவகைப்படுமென்றும்- சொல்லியற்குறிப்பெச்சத்திற்கு உதாரணம்- கற்கறித்துநன்கட்டாய்- எனின், இங்கட்டாய் எனக்குறிப்பிற்றோன்றிய எச்சப்பொருளை அதுவேவிளக்கிநின்றன், செய்யுளியற்குறிப்பெச்சத்திற்கு உதாரணம் - இளைநரகமன்மரங்கொல்ககளைய, நர்கைகொல்லுங்காழ்த்தவிடத்து - எனவருமிக்குறளென்பதும்- இசையெச்சத்திற்கு உதாரணம் - வயிறுமொழிமொழித்தநென்றல் இசையின்குறிப்பாகிய உண்ணவேண்டாவென்னுமெச்சப்பொருளை அத்திசையே விளக்கிநின்றதென்பதாம் இசையென்பது ஒலியெனவும்விளக்க. (சூத்) அவைதாந் - தத்தங்குறிப்பினெச்சஞ்செப்பும் - எனக்கூறியதூஉம் - இவ்வும்பதெச்சங்களையுந்தொகுத்து (சூத்) பிரிநிலைவினையேபெயரேயொழியிசை எதிர்மறையும்மையெனச்சொல்லே குறிப்பேயிசையேயாயீரைந்து - நெறிப்படத்தோன்றுமெஞ்சுபொருட்கிளவி, எனக்கூறுதலுமுய்த்துணர்ந்துகொள்க. ஒன்பதுங்குறிப்புங்கொண்டுமெனமுடிக்க. (௬)

பெயரொடுபெயரும் வினையும்வேற்றுமை, முதலியபொருளி
னவற்றினுருபிடை, யொழியவிரண்டு முதலாத்தொடர்ந்தொ
ரு, மொழிபோனடப்பனதொகைநிலைத்தொடர்ச்சொல். *

இது, பெயர்வினைகளுக்குரியதோரிலக்கணமுணர்த்திற்று. (இ-ள்,) பெ- னையும் - பெயர்ச்சொல்லொடு பெயர்ச்சொல்லும் பெயர்ச்சொல்லொடு வினைச்சொல்லும், வே - ளின், வேற்றுமை வினைபண்பெனப்பின்வருத்துக்கூறப்படும் அறுவகைப்பொருட்புணர்ச்சியிலும், அவற் - ய- அவற்றினுருபுகள் இடையிலேமறைந்துநிற்க, இரண் - த்- இரண்டுசொல்முதலாகப்பலசொற்கள்தொடர்ந்து, ஒரு- சொல்- ஒருமொழிபோலநடப்பனதொகைநிலைத்தொடர்ச்சொற்களாம், எ-று.

வினையொடு வினைதொகைநிலையாகாமையால் அதனைவிலக்கியும், நிலத்தைக்கடந்தான் எனஉருபுவிரிந்தால்- பிளவுபட்டும்- நிலங்கடந்தான் எனஉருபுதொகின்பிளவுபடாதுந்தொடருமாதலால்- பிளவுபடாதுதொடர்தலையே - ஒருமொழிபோல்நடப்பனவென்றுங்கூறினார் - இத்தொகைநிலைச் சொற்கள் இவ்வளவினையுடையனவென வருஞ்சூத்திரத்தாற்கூறுவார். (௭)

வேற்றுமைவினை பண்புவமைபும்மை, யன்மொழியென வத்
தொகையாறாகும்.

இது, அத்தொகை நிலைத்தொடர் இவ்வளவைத்தென்கின்ற
து.(இ-ள்,)வேற்றுமைத்தொகையும்-வினைத்தொகையும்-பண்புத்
தொகையும்- உவமைத்தொகையும் - உம்மைத்தொகையும்- அன்
மொழித்தொகையும்- எனமேற்கூறிய அத்தொகைநிலைத்தொட
ர்ச்சொல் அறுவகைப்படும், எ-று.

இனி யிவற்றிற்கெல்லாம்ப தப்பொருளோடு இலக்கணந்தோ
ன்றத்தனித்தனிவகுத் துக்கூறுவார், (௰௧)

இரண்டுமுதலாவிடையா றுருபும், வெளிப்படவில்லதுவேற்று
மைத்தொகையே. *

இது, நிறுத்தமுறையே வேற்றுமைத் தொகையாமாறுண ர்
த்திற்று. (இ-ள்,) இடை - எழுவாய்களும் விளிக்கும் இடையிலே
நின்ற, இரண்டுமுதலாவாறுருபும்- ஐ-ஆல்-கு-இன் - அது-கண்-
என்னும் ஆறுஉருபுகளும், வெளி - கை - மறைந்துநிற்குந்தொ
டர்ச் சொற்கள் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்ச் சொற்க
ளாம், எ-று.

[வ-று,] நிலங்கடந்தான்- ஐ- தலைவணங்கினான்- ஆல்-சாத்
தன்மகன்- கு- ஊர்நீங்கினான்- இன்- சாத்தன்கை - அது- மலை
முழை- கண் - என ஆறுஉருபும் இடையிலேதொக்குநின்றவாறு
காண்க- இவை இருமொழித்தொகைநிலைத்தொடர்-யானைக்கோ
ட்டு நுனிக்குறைத்தான்-என்றாற்போல்வனபன்மொழித்தொகை
நிலைத்தொடர், இடையேதொக்கதைத்தொகை நிலைத்தொடரொன்
றனுரலே- கடந்தானிலம்- இருந்தான்குன்றத்து - என இறுதியி
லேதொக்குப் பிளவுபட்டு நின்றவை தொகை நிலைத்தொடராகா
வோ- எனின்- அவைமாறிக்கூறுதலாற்பிளவுபட்டுநின்றனவன்றி-
இடையேதொக்கதொகைநிலைத்தொடரேயாமென்க.

இனிஆறுருபமென்னும்மாற்றும்மையை எச்சவும்மையாக்கிப் - பொருளொ
டொன்றாவிடத்து- உருபும்பொருளும் உடன்றொக்கதும்வேற்றுமைத்தொ
கையெனக்கொள்க- அதுவிரியுங்கால- பொன்னாற்செய்தகுடம் எனவிரியும், இ
னி- ஆசிரியர்தொல்காப்பியனார்- (சூ) ஐயுங்கண்ணுமலலாப்பொருள்வயின் - மெ
ய்யுருபுதொகாவிறுதியான- எனக்கூறுதலால் ஐயுருபுங்கண் ணுருபுமலலாதன
வ்வுருபும் இடையிலன்றிஇறுதியிலேதொகாவென்றும், அவ்விரண்டுருபும் இடை
யிலும் இறுதியிலும்- நிலங்கடந்தான்- கடந்தானிலம் - குன்றத்திருந்தான்-இரு
ந்தான்குன்றத்து - எனத்தொகுமெனவும், அந்தஆறுருபும், சாத்தனையடை
ந்தான்- சாத்தனொடுவந்தான்- சாத்தனுக்குநல்கினான்- சாத்தனினீங்கினான்-
சாத்தனுக்குவீமன்தம்பி- சாத்தன்கணின்றான்- எனவிரிந்துநின்றன - தொகுமாயி
ன்-சாத்தனடைந்தான்- வந்தான்- நல்கினான்- நீங்கினான்- நின்றான் - தருமன்வீம
ன்தம்பி- எனஎழுவாயும்பயனிலையுமாகப்பொருள்வேறுபடுதலால்- இடையிலே
தொகுமென்றாயினும் அந்தந்தப்பொருள்களைத் தருதற்குரிய இடங்களில் அ
வ்வருதொகாவெனவுங்கொள்கபிறவுமன்ன. (௰௨)

இது, வினைத்தொகையாமாறுணர்த்திற்று. (இ-ள்,) காலம்பற்றிப்புடைபெயரும்வினையுருபாகியதம் இறுதிகள்தொக்குநிற்கச்செய்வதாகி அறுபொருட் பெயராகிய தம்மெச்சங்களைக் கொண்டுமுடிந்தபெயரெச்சங்கள்வினைத்தொகைகளாம், எ-று.

காலங்காட்டும்வினையிறுதிகளைக் காலமென்றதுஆகுபெயர், முதனிலைதொகாதுநிற்கப்புடை பெயர்ச்சி வினையிறுதிகள்தொக்குப்பெயரொடுமுடிந்தனவற்றைவினைத்தொகையென்றுசொல்லவந்தவர்-காலங்கரந்தபெயரெச்சமென்றார் (புடைபெயர்ச்சி -வினைமுதலின் அசைவு,) வினையெனப்படுவது வேற்றுமைகொள்ளாது நினையுங்காலைக்காலமொடுதோன்றிப் - பொருட்புடைபெயர்ச்சிபுலப்படுப்பதுவே- என் னுஞ்சூத்திரத்தானுமறிக(புடைபெயர்ச்சிவினைகளை - முதனிலையொழிந்த இறுதிகள்காட்டிநிற்றலால்-அவ்வினைகளுக்கு அவைஉருபுகளாயின, [வ-று,] நெருநலடுகளிறு- இன்றுஅடுகளிறு - நாளைஅடுகளிறு- (செய்பவன்)அடுவேல்-(கருவி) அடுகளம்- (நிலம்) அடுதொழில்- (செயல்) அடுபொழுது- (காலம்) அடுகந்து- (செய்பொருள்) எனவரும் - இவைவிரியுங்கால்- நெருநல்அட்டகளிறு - இன் று-அடுகின்றகளிறு-நாளைஅடுங்களிறு - எனவிரியும், இவை முறையே இறந்தகால வினைத்தொகையும் நிகழ்காலவினைத்தொகையும் எதிர்கால வினைத்தொகையும் எனப்படும், இது ஒவ்வொருகாலத்தைப் பற்றியும் முக்காலமும்பற்றியும் வரும், அவைவருமாறு-அடைகடல்-தோய்தயிர்-விரிமலர்- குவிபூ-செய்நன்றி என்பன- அடைந்தகடல் - தோய்ந்ததயிர்- விரிந்தமலர்- குவிந்தபூ- செய்தநன்றி எனஒருகாலத்தையேயடக்கிநிற்றலால் இவைபோல்வனஇறந்தகாலவினைத்தொகையெனப்படும், ஓடுநீர் - பெய்மழை- ஒழுகுநீராரல் பார்க்குங்குருகுமுண்டு- ஆடுபாம்பெனப்புடையகன்றவல்குலாள்-என்பன ஓடாநின்றநீர்- பெய்யாநின்றமழை - ஒழுகாநின்றநீர் - ஆடாநின்றபாம்பு- எனவருமொருகாலத்தையேதம்முளடக்கிநிற்றலால் இவைபோல்வன-நிகழ்காலவினைத்தொகையெனப்படும், உண்பண்டம் - தின்பண்டம்- கொள்பொருள்- அழிபொருள்-என்பன - உண்ணும்பண்டம் - தின்னும்பண்டம்- கொள்ளும்பொருள்- அழியும்பொருள்- எனவருதலால் இவைபோல்வன- எதிர்காலவினைத்தொகை, உழுபடை- இறைகூடை- மிதிமரம்- கொல்புலி. அரி

வாள்- என்பன- பண்டும்உழுதபடை- இன்றும்உழாநின்றபடை- நாளையுமுழும்படை எனவருதலால் இவைபோல்வனமுக்கால்வினைத்தொகையெனப்படும், இவ்வாறே ஒழிந்தனவற்றையும் ஆராய்ந்தமைத்துக்கொள்க, இதற்குவருமொழி பெயராதலால் இத்தொகைநிலையாகவே தொடர்ந்துவருமிரண்டிறந்த பன்மொழித்தொடர் இலவென்க.

அட்டதுகளிறு- அடாநின்றதுகளிறு- அடுவதுகளிறு- எனவருவினைமுற்றுக்கள் இறுதிதொகுதலால்- அடுகளிறு எனவினைத்தொகையாயிற்றெனின்- அடுகளிறு - இது - அடுகளிறுவந்தது எனப்பின்னுமோர்பெயர்வினைகளைக்கொள்ளுதலால்அவை அற்றெனவும், அடுவென்னும் முதனிலை வினையாகியகாரணத்தின் கண்முக்கால வினையாகிய காரியங்கள் தொக்குநிற்றலால் - அடுகளிறு எனவினைத்தொகையாயிற்றெனின் - காரணத்திற்காரியந்தொக்குநிற்பதற்குக்-களிறு என்னும் முடிக்குஞ்சொல் வேண்டாமையால் - அதுஒருமொழியிலக்கணமேயன்றி இங்கேயெடுத்துக்கொண்ட தொடர்மொழியிலக்கணமன்றாதலால் அதுவுமன்றெனவிலக்கிப்பெயரெச்சத்திறுதிதொக்கதேவினைத்தொகையென்றார். (சூத்) வினையின்றொகுதி காலத்தியலும் - எனப்பெயரெச்சத்திறுதொக்கு மூன்றுகாலத்தும் நிகழ்வது வினைத்தொகை யென்று - ஆசிரியர்தொல்காப்பியனாருமிவ்வாறுகூறுதல்காண்க. (௰௩)

பண்பைவிளக்குமொழிதொக்கனவு, மொரு பொருட்கிருபெயர்வந்தவுங்குணத்தொகை. ❋

இது, பண்புத்தொகையாமாறுணர்த்திற்று. (இ- ள்,) பண்பும்-குணத்தொடுகுணிக்குஉண்டாகிய ஒருமைப்பாட்டை விளக்கவரும் ஆகியவென்னும்பண்புருபுதொக்குநிற்பனவும், ஒரு - தவும்- (அந்தப்பண்புருபுதொக்குநிற்கப்பொதுப்பெயருஞ்சிறப்புப்பெயருமாய்) ஒருபொருளுக்கு இருபெயர்வந்தனவும், கு - கை- பண்புத்தொகைகளாம், எ-று.

[வ-று,] செந்தாமரை-கருங்குவளை- என்றாற்போல்வன- வண்ணப்பண்புத்தொகை,வட்டக்கல்-சதுரப்பலகை - என்றாற்போல்வன- வடிவு-கை, ஒருபொருள்-இருபொருள் - என்றாற்போல்வன- அளவுப்-கை-தீங்கனி- துவர்க்காய்- என்றாற்போல்வன- சுவைப்- கை-நல்வினை-தீவினை- தண்ணீர்- வெந்நீர்- நுண்ணுணர்வு-அருவினை-என்றாற்போல்வன அந்தநான்கினுளடங்காப்பல்வகைப் பண்பு-கை,இவையனைத்தும்பண்புத்தொகைகளாம், ஆயன்சாத்தன-ஆடித்திங்கள்- சாரைப்பாம்பு-அகரமுதல்-சகரக்கிளவி-பெயர்ச்சொல்- வினைச்சொல் - என்றாற்போல்வன ஒருபொருளுக்குஇருபெயர்வந்த இருபெயரொட்டுப்பண்புத்தொகைகளாம், இவையெல்லாமிருமொழித்தொடர், செந்நிறக்குவளை-சிறுபசுந்துவி-

கருநெடுங்கண் - ஒருபெருஞ்செல்வம் - கரும்புருவச்சிலை - என்றாற்போல்வன - பன்மொழித்தொடர், இவைவிரியுங்கால் - செம்மையாகியதாமரை - கருமையாகியகுவளை - எம் - ஆயனாகியசாத்தன் - ஆதியாகியதிங்கள் - அகரமாகியமுதல் - பெயராகியசொல் - எம் - செம்மையாகியநிறமாகியகுவளை - சிறுமையாகியபசுமையாகிகிளி - எம் - விரியும்ஒழிந்தனவற்றையுமிவ்வாறுவிரித்துக்கொள்க.

இனியிந்தஆகிய என்னும்உருபின்கண் - ஆக்கவினையில்லாதநிலை - இலக்கணவகையாற்செய்தவென்னும் பெயரெச்சவாய்பாட்டின் பாற்படுமேதோர்வினையிடைச்சொல், முற்றுவினை எச்சவினையாகியகாலத்து முற்றுப்பொருளையொழித்துஎச்சப்பொருளையுணர்த்திநின்றாற்போல - ஆயன் ஆதியென்றாற்போலும் நிலைமொழிகள்பண்பிச்சொல்லாயினும் - அத்தன்மையினீங்கிச் - சாத்தன் - திங்கள் - என்றாற்போலும் - வருமொழிகளைவிசேடித்துப் - பொதுப்பண்பையுஞ்சிறப்புப் பண்பையுமுணர்த்தி அடையாயநிற்றலால் இவையும்பண்புத்தொகையாயினவெனவும் இன்னுமிவை - சாரைகடித்தது - பாம்புகடித்தது - ஆயன்வந்தான் - சாத்தன்வந்தான் - எனத்தனித்துநின்றும் அப்பொருள்களையுணர்த்துமெனவும் - பாம்பாகியசாரை - சாத்தனாகிய ஆயன் என - வருமொழி நிலைமொழிகளைவிசேடித்தும் நிற்குமெனவும் கொள்க இனியிவ்விருபெயரொட்டும் - வடிவும்-அளவுமல்லாதபண்புத்தொகைகள் - குணமுங்குணியுமாய்த்தொடர்ந்துநின்றுழி - அக்குணங் குணியின்கண் முழுமையுமாயகாலத்துக் கருங்கோழி வெண்கோழி என்பன - கருமையாகியகோழி - வெண்மையாகியகோழி எனவிரிந்துபண்புத்தொகையாமெனவும் - குணியின்கண் அக்குணம் ஏகதேசமாயகாலத்துக் - கருமையுடையகோழி - வெண்மையுடையகோழி யெனவிரிந்துஇரண்டாம்வேற்றுமையுருபும்பொருளு முடன்தொக்க வேற்றுமைத் தொகையாமெனவுங்கொள்க - இன்னும் - வண்ணம் - வடிவு - அளவு - சுவை - என்பனபற்றிவருந்தொகைச்சொல் நான்கினுள் - வடிவொழிந்தன - ஐம்பாலறியும் பண்புத்தொகையெனவும் - மற்றையது ஐம்பாலறியாப் பண்புத் தொகை யெனவும்.படும் இவையெல்லாந்தொல்காப்பியக்கடலுட்காண்க - இனி இச்சூத்திரத்திற்குஇந்தஉரைகாரர் - பொருளேக்கம்பற்றுது சொல்லேக்கம் பற்றியே உரையெழுதினார் - என்னெனின் - செந்தாமரை என்புழிச் - செம்மைக்குணம் - தாமரையென்னுங் குணியோடு ஒன்றுபட்டு நிற்பதல்லது வேறுபட்டு நில்லாமையின் - செம்மையாகியதாமரையெனக் குணம்வேறுகுணி வேறாகப்பிளவுபடப் பொருள்கூறுவதுகூடாதென்றுகருதி - ஆசிரியர்தொல்காப்பியனார். (சூ) வண்ணத்தின் வடிவினளவிற்சுவையினென் - றன்னபிறவு மதன்குணநுதலி - யின்னதிதுவெனவரூஉமியற்கை - யென்னகிளவியும்பண்பின்றொகையே, எனச்சூத்திரஞ்செய்தார்--இதன்பொருளாவது - இப்பல் வேறுவகைப்பட்டபண்புகளில் அந்தந்தக்குணங்களைக்குறித்து இன்னகுணத்தையுடையது இது வெனவருமெவ்வகைப்பட்டசொற்களும் இவைபோல்வன பிறவும்பண்புத்தொகைச் சொற்களாமென்பது ஆதலால், செந்தாமரைஎன்புழிச் - செய்யது - இன்னது, தாமரை - இது, என்பதாயிற்று, ஆகவே - செய்யதாகியதாமரையென்பதே - செந்தாமரையெனப்பால்காட்டும் விகுதிகுன்றி முன்னின்றமெய்திரிந்து முடிந்ததென்பதுபொருந்தமுடைத்தாயிற்றென்க - ஆண்டு - ஆகியவென்பது - தொகைப்பொருளைவிரித்தற்குப்பெய்துரைத்தபெய்துரை - என்பதை - செந்தாமரை - செய்யதென்

செந்தாமரை எனப்பிறசொல்லால் விரித்தலுணர்க, வடநூலாரும்விரியாத் தொகைகளைப்பிறசொல்லால்விரிக்கப்படுமென்பர்- அற்றேல் வட்டப்பலகை- சதுரக்கல் - என்பன-எப்பால்களைக்காட்டினவெனின் - இங்ஙனம் வடிவுப்பண்பு பற்றிவருவனவற்றை ஐம்பாலறியாப்பண்புத்தொகை யென்றாராயினும்- வட்டம்- சதுரம் என்பனவும்- பலகை - கல- என்பனவும்- பால்பகா அஃறிணையாதலால் இவைபோல்வனவற்றையெல்லாந்தொகுத்துப்-பால்பகாவஃறிணைப்பெயர்கள் பாற்பொதுமைய எனக்கூறினாராதலால் - அஃறிணையிருபாற்கும்பொதுமையவாய்நின்று பொருளுக்கேற்றபால் காட்டிநிற்குமென்க - வட்டமாகிய பலகை- வட்டமாகியனபலகைகள் எனவிரிப்பினும்அமையும்-பிறவுமன்ன-தொக்கனவும் வந்தவுங்குணத் தொகையெனமுடிக்க. (௰௪)

உவமவுருபிலதுவமத்தொகையே. *

இது, உவமைத்தொகையாமாறுணர்த்துகின்று. (இ-ள்,) (வினையும்- பயனும் - மெய்யும்- உருவும் - பற்றிவரும்) உவமையுருபுகள்தொக்கதொடர்ச்சொற்கள்உவமத்தொகைகளாம், எ-று.

[வ-று,] புலிப்பாய்த்துள்-புலிக்கொற்றன - குருவிகூப்பிட்டான் - சக்கரஞ்சுற்றிவந்தான் - என்றாற்போல்வனவினையுவமைத்தொகை-மழைக்கை- கிளிமொழி - குயின்மொழி-மழலையாழ்- என்றாற்போல்வன-பயனுவமைத்தொகை- துடியிடை - பணியரவல்குல்- கரிக்கைக்கவான்- களிறுங்கந்துங்கூம்புங்கலனும்- என்றாற்போல்வன- மெய்யுவமைத்தொகை, (மெய் -எ-து- பண்பி) பவளவாய்- பொற்சுணங்கு- தரளநகை-வேய்த்தோள்- என்றாற்போல்வன- உருவுவமைத்தொகை - (உரு - எ-து- பண்பு,) மரகதக்கிளிமொழி- இருண்மழைக்கை - என்றாற்போல்வன - பன்மொழித்தொடர்-இவைவிரியுங்கால்- முறையே-புலிப்பாய்த்துளன்னபாய்த்துள்- (பாய்த்துள்- பாய்ச்சல்,) புலிபோற்பாயுங்கொற்றன்- குருவிபோற்கூப்பிட்டான்- இருள்போலும்மழைபோலுங்கை-என விரியும் ஒழிந்தனவற்றையுமிவ்வாறுவிரித்துக்கொள்க.

பண்பியும் - பண்பும்- தொழிலும் - பயனுமாகிய இந்நான்கினுள்ளே - பண்பியொடுபண்பியும் பண்பொடுபண்பும் - தொழிலொடுதொழிலும் பயனொடு பயனும் ஒப்புமைதோன்றப் பொருளொடுபொருள்புணர்த்துச்சொல்லுதல் உவமையணியாதலால்- மழைக்கையென்பது மழைபோலுங்கை யெனவிரிந்துழிப்பண்பியொடுபண்பியொப்புமை தோன்றுதலிலே மெய்யுவமையன்றெனவும், மழையினதுபண்பொடுகையினதுபண்புமொப்புமை தோன்றுதலிலே -உருவுவமையன்றெனவும்- மழையினது தொழிலுங்கையினது தொழிலுஞ் சிறிதொத்துப்பெரும்பாலுமொவ்வாததிலே- தொழிலுவமையன்றெனவும், அவ்விரண்டின்தொழிலால் வரும் பயனொடு பயனொத்திருத்தலால் - பயனுவமையாயிற்றெனவுங்காண்க- மழையினது தொழிலால்வரும்பயனாவது- வானின்றுலகம் வழங்கிவருதலாற்றானமிழ்தமென் றுணரற்பாற்று - என்றவாறேயாயுலகமின்புற்றுவாழ்தலாம், அதுபோலவேகைக்குந்தனது கொடைத்தொழிலாலுலகமின்புற்றுவாழ்ந்திருப்பச்செயல்பயனாயிற்று - ஆதலால்மழைக்கைபயனு

மையாயிற்றெனக்காண்க - இனிமொழிமுதலியபயனுவமைகளையுமிவ்வாறேயுய்த்துணர்ந்துகொள்க. இருள்போலுமழைபோலுங்கையெனவிரிந்தபன்மொழித்தொடரில முன்னையது உருவுவமையும்பின்னையதுபயனுவமையுமாதலானுவமைத்தொகையன்றெனவுணர்க - புலிப்பாய்த்துளையொத்தபாய்த்துள் - புலியைப்போற்பாயுங்கொற்றனனெனவிரிதலாலிவையிரண்டாம்வேற்றுமையுருபும்பொருளுமுடன்றொக்க வேற்றுமைத் தொகையன்றே இவற்றையுவமைத் தொகையென்றதென்னெனின்- செயப்படுபொருள்குறித்துக்கூறியவழியத்தொகையாகவும் உவமைப்பொருள்குறித்துக்கூறியவழியித்தொகையாகவுங்கொள்ளப்படுமென்க- அன்றியும் புலியன்னபாய்த்துள் - மழையன்னவண்கை- போல்மானுமெனி - எனவேற்றுமை யோடியைபில்லாவுருபுகள் தொக்கவிடத்து உவமத்தொகையாவதல்லதுவேற்றுமைத் தொகையாகாவென்க - இனியிக்கருத்தேபற்றி ஆசிரியர் தொல்காப்பியனார்- (௬) உவமைத்தொகையே யுவமவியல -எனக்கூறியதூஉமெனக்காண்க. (௰௬)

போலப்புரையவொப்பவுறழ, மானக்கடுப்பவியையவேய்ப்ப,
நேரநிகரவன்னவின்ன, வென்பவும்பிறவுமுவமத்துருபே. *

இது, உவமையுருபு இயற்சொல்மாத்திரையாய் நில்லாமல்- திரிசொல்லாற்பலவாமாதலால் அவையிவையெனவுணர்த்திற்று• (இ-ள்,) போலவென்பதுமுதலியசெயவென்னும் வாய்பாட்டுவினையெச்சம்பத்தும்-அன்ன - இன்ன - என்னும்பெயரெச்சக்குறிப்பிரண்டும்இவைபோல்வனபிறவும் உவமவுருபுகளாம்,எ-று.

பிறவென்றமையால் - போல்-புரை- என்னும்தொடக்கத்துவினையடியாற்பிறத்தற்கு உரியமற்றவினையெச்சவிகற்பங்களும்பெயரெச்சவிகற்பங்களும்- பொருவ- ஏற்ப - அனைய- இகல- எதிர- சிவண- படைய- துணை- தூக்கு - கேழ்-அற்று - செத்து- என்னுந்தொடக்கத்தனவுங்கொள்க. [வ-று,] குருவிபோலக்கூப்பிட்டான்- குருவிபுரையக்கூப்பிட்டான்-புலியன்னகொற்றன்-எனப்பெயரொடுவினை புணருங்கால்வினையெச்சவுருபுகள்அனைத்தினையும், பெயரொடுபெயர்புணருங்காற்பெயரெச்ச உருபுகள்அனைத்தினையும்விரித்துக்கொள்க. பெயரொடுபெயர்புணருங்காலத்தும் - புலியைப் போலும்பாயுஞ்சாத்தன் - மழையைப்போல அளிக்குங்கை- துடியைப்போலச்சுருங்கியஇடை - பொன்னைப்போலவிளங்கியசுணங்கு-எனவினையெச்சவுருபுவிரிந்தல்லதுநால்வகையுவமையும்விளங்காமையால் - போலப்புரைய - என அந்தவினையெச்சவுருபுகளைமுன்னெடுத்துக்கூறினார். (௰௭)

எண்ணலெடுத்தன்முகத்தனீட்ட, லெனுநான்களவையுளும்பிலதத்தொகை. *

இது,உம்மைத்தொகையாமாறுணர்த்திற்று.(இ-ள்,) எண்ணலளவை- எடுத்தலளவை- முகத்தலளவை- நீட்டலளவை- என்னும்

நால்வகையளவைகளாற்பொருள்களையளக்குங்கால் - தொடர்பட்டுநிற்கும்அவ்வளவைப்பெயர்களுள்,உம்மிலதத்தொகை-உம்,என்னும்உருபுதொக்குநிற்பனஅந்தஉம்மைத்தொகைகளாம்,எ-று.

[வ-று,] கபிலபாணர்-இராப்பகல்- புலிவிற்கெண்டை-அறுபத்துமூவர்-ஆயிரத்தைஞ்ஞூற்றைம்பத்தொன்றேகாலேயரைக்காலரைமாகாணிமுந்திரிகை-எ-ம்- கழஞ்சேகால்- கழஞ்சரையேயரைமாவரைக்காணிமுந்திரிகை - எ-ம்- நாழியாழாக்கு - கலனேமுக்குறுணிநாழியாழாக்கேமூச்செவிடு- எ-ம்- சாணரை- சாணரையேயரைக்கால்- எனவும்வரும்- இவைவிரியுங்கால்- கபிலனும்பாணனும்- இராவும்பகலும்- புலியும்வில்லுங்கெண்டையும் - அறுபதின்மரும்மூவரும் - ஆயிரமும் ஐஞ்ஞூறும்ஐம்பதும்- ஒன்றும்- காலும் அரைக்காலும்- அரைமாகாணியும் - முந்திரிகையும்- எனவிரியும்பிறவுமன்ன..

கபிலபாணர் - என்பது இரண்டுறும்விகாரப்பட்டுநிற்றலிற்கபிலனும்பாணனுமெனவிரித்ததென்னெனின் அதுஉயர்திணையும்மைத்தொகையென்னுஞ்சூத்திரத்தால் மேற்பெறப்படுமென்க-கபிலபாணர்ப்பரவினுன்எனவருவழிக்- கபிலனையும்பாணனையும்பரவினன் எனவேற்றுமையுருபுமுடன் விரிதலினும்மைத்தொகையென்றதென்னெனின் - பரவினனென்னும் வருமொழிநோக்கி வேற்றுமைத்தொகையாகவும் - கபிலபாணரென்னும் - நிலைமொழிநோக்கியும்மைத்தொகையாகவுங் கொள்ளப்படுமென்க, இந்த உம்மை இடையிலும் இறுதியிலுந் தொகுமென்று சொல்லவந்தவர் இடையிலே தொகுமென்ற - வேற்றுமைவினைபண்புவமையென்ற நான்குதொகைக்கும் இறுதியிலேதொகுமெனக்கூறும் அன்மொழித் தொகைக்கும்நடுவேவைத்தாரெனக்கொள்க, இவ்வாறுவைத்தெண்ணப்படும் எண்ணிடைச்சொற்கள் பலவுமுளவாக இதனையும்மைத்தொகையென்றதென்னெனின் இது இயற்சொல்லாதலால அத்தலைமைபற்றிச் - கமுகந்தோட்ட மென்றற்போல உம்மைத்தொகையெனப்பெயர்தந்ததென்க- எடுத்தல்முதலிய அளவைகளிற்ப எண்ணலளவையை முன்வைத்ததென்னெனின் - தானென்றெனத்தனித்தும் எல்லாவெழுத்தினுங்கலந்தும்நிற்றலால் அத்தலைமைபற்றி அகரம் எழுத்துகட்கெல்லாமுன்வைக்கப்பட்டதுபோல் எண்ணலளவை எனத்தனித்தும் எடுத்தல்முதலிய மூன்றினும் ஒருதுலாம்- ஒருகலம்- ஒருசாண் - எனக்கலந்தும்நிற்றலால்முன்வைக்கப்பட்டதென்க-இனிஆசிரியர்தொல்காப்பியனார்- (சூ) இருபெயர்பலபெயரளவின்பெயரே-யெண்ணியற்பெயரோநிறைப்பெயர்க்கிளவி - யெண்ணின்பெயரோடவ்வறுகிளவியுங்கண்ணிய நிலைத்தேயும்மைத்தொகையே, என அறுவகையாற்கூறவின்- இவர்நால்வகையளவையுளும்மிலதத்தொகையென் றல்மாறுகொளக்கூறலன்றோஎனின்- அவர்-எண்ணலளவையை-இருபெயர்-பலபெயர்- எண்ணியற்பெயர்-எண்ணின்பெயர்-எனநான்காகவகுத்தும்,முகத்தலளவை- நீட்டலளவை-என்னுமிரண்டையும்-அளவின்பெயரெனத்தொகுத்துங்கூறலால்அன்றென்க.(யஎ)

ஐந்தொகைமொழிமேற்பிறதொகலன்மொழி. *

இது, அவற்றினுருபிடை யொழியவென்றபொருணிலையில

க்கி அன்மொழித்தொகையாமாறுணர்த்திற்று- (இ-ள்,) ஐந-மே
ல்- வேற்றுமைத்தொகைமுதலிய ஐவகைத்தொகைநிலைத்தொடர்
மொழிகளுக்கும்புறத்து, பிற- ழி- அவையல்லாதபிறமொழிகளா
கியவுருபுகள்தொக்குநிற்றல்அன்மொழித்தொகையாம், எ-று.
ஐந்தொகைமொழிமேலென்றதினால் - இடையேதொகுமெனவெய்தியதைவிலக்கலாயிற்று, [வ-று,] பூங்குழல் - பொற்றொடி-
கவியிலக்கணம்- பொற்றாலி- கிள்ளிகுடி. - கீழ்வயிற்றுக்கழலை- எ
னவிவைஇரண்டாவதுமுதலாகிய அறுவகைவேற்றுமைத்தொகை
ப்புறத்துவந்த அன்மொழித்தொகை, தாழ்குழல் - வினைத்-ழி, க
ருங்குழல்- பண்புத்- ழி- துடியிடை- உவமைத்-ழி, தகரஞாழல்-
உம்மைத்- ழி, இவையெல்லாம் இருமொழித்தொடர், தகரஞாழ
ன்முலை-பன்மொழித்தொடர், இவைவிரியுங்கால் பூவையுடையகு
ழலினையுடையாள், பொன்னாற்செய்ததொடியினையுடையாள், கவி
க்கு இலக்கணஞ்சொன்னநூல், பொன்னினாகியதாலியையுடையா
ள்- கிள்ளியதுகுடியிருக்குமூர், கீழ்வயிற்றின் கண்ணெழுந்தகழ
லைபோல்வான், எ-ம்- தாழ்ந்தகுழலினையுடையாள், கருமையாகிய
குழலினையுடையாள், துடிபோன்றஇடையினையுடையாள், தகரமு
ஞாழலும்விரவிச்சமைந்தசாந்து, தகரமுஞ்ஞாழலும்விரவிச்ச
மைந்தசாந்தையணிந்தமுலையினையுடையாள்- எனவும்விரியும்) த
கரம்- ஞாழல்- என்பனவாசனைத்திரவியம்.

இனிப்பன்மொழித்தொடரில் அறுவகைத்தொகைகளும் விரவிந்தொகு
மாறு- திகழ்செவ்வான்மதித்திருமுகப்பூங்குழல்- எனவரும் - இவைவிரியுங்கால்-
திகழ்ந்தசெம்மையாகியவானத்தின்கண்மதிபோலுந்திருமுகத்தினையும்பூவைய
ணிந்தகுழலினையுமுடையாள், எனவிரியும், இதனுள் - திகழ்ந்த எனவினைத்தொ
கையும்- செம்மையாகிய - என- பண்- யும்- வானத்தின்கண் - என- வேற்று- யும்,
மதிபோலும்- என- உவ- யும், முகத்தினையும்- என- உம்மை - யும், பூங்குழலினை
யுடையாள்- என- அன்மொழியும்விரிந்தவாறுகாண்க. இனி- (சூ) எல்லாத்தொ
கையுமொருசொன்னடையவென- க்கூறுதலால் - இத்தொகைச்சொற்கள்விர
விவழக்கிடத்துஞ் செய்யுளிடத்துமொருசொன்னடையவாய் நின்று பயனிலை
கொள்ளுதலும் - மொழிந்தபொருளோடொன்ற மொழியாததனையுமுட்டின்
றிமுடித்தலென்பதனாற்கொள்க. அவைவருமாறு - கற்சுனைக்குவளையிதழ்தந்
து - துடியிடைநெடுங்கட்டுணைமுலைப்பொற்றொடிவந்தாள் - எனவரும்பிறவும
ன்ன, ஆசிரியர்தொல்காப்பியனார் (சூ) பண்புதொகவரூஉங்கிளவியானு- மும்
மைதொக்கபெயர்வயினானும் - வேற்றுமைதொக்கபெயர்வயினானு- மீற்றுநின்
றியலுமன்மொழித்தொகையே-என இம்மூத்தொகையீற்றுநின்றியலுமன்மொ
ழியெனக்கூறினார் இவரைந்தொகை மொழிமேலன்மொழிதொகுமெனக் கூறி
யதுமலைவாமெனின்- அவர் - எதிரதுதழீஇயெண்ணிநின்ற எச்சவும்மைகளால்
உவமைத்தொகைவினைத்தொகையீற்றினுநின் றியலுமன்மொழியெனத்தழீஇ
யினார் அவையக்காலத்தரியனபோலுமென்க. (சூ) வேற்றுமை முதலியவைத்.

தொகைமொழியினும்பிற்றுநின்றியலுமன்மொழித்தொகையே, எனப்பிறர்கூறு
தலுங்காண்க, இனி- அன்மொழித்தொகையென்பதற்குப்பொருள் - குறிக்கப்
படுபொருளுக்கு அல்லாதமொழியன்மொழி-எனவும்- அப்பொருள்தொக்குநிற்ற
லிற்றொகை - எனவுங்கொண்டு - குறிக்கப்படுபொருளுக்கு அல்லாதமொழியில்
அப்பொருள்தொக்குநிற்பதென்பதேசிறந்துகாட்டிற்றுப்போலும்-என்னையெ
னின்- அஃறிணை. அன்மையாயதிணை- அல்வழி அல்லாதவழி என்றாற்போல-அன்
மொழியென்றவிடத்தும் எதிர்மறுத்தேநின்றுபிறிதுபொருளுணர்த்த வேண்டு
மாதலினென்க. இனிப்பயனிலைக்கு அல்லாதமொழியன் மொழியெனவும் அப்ப
யனிலைக்குரியபொருள் அதனிற்றொக்குநிற்றலிற்றொகை யெனவுங் கொண்டன்
மொழித்தொகையெனப்பட்டதெனினும் அமையும். (ம-அ)

முன்மொழிபின்மொழிபன்மொழிபுறமொழி, யெனுநான்கி
டத்துஞ்சிறக்குந்தொகைப்பொருள். *

இது, தொகைநிலைத்தொடர்ச் சொற்களுக்குவேண்டுவதோ
ர்புறனடையுணர்த்திற்று. (இ-ள்,) தொகைநிலைத்தொடர்மொழி
களிலே- முன்மொழியும் - பின்மொழியும்-முன்பின் இருமொழி
யும் - அவ்விருமொழியுமல்லாதபுறமொழியும் என்றுசொல்லப்ப
டுகிந்தநான்கிடத்துந்தொகைநிலைத்தொடர்ப்பொருள்சிறந்துநி
ற்கும், எ-று.

இரண்டிறந்தபன்மொழித்தொடரையுந்தழுவுதற்கு-இருமொ
ழியென்றதுபன்மொழியென்றார் வரையறுத்துக்கூறாது,நான்கி
டத்தும்பொருள்சிறக்குமென்றாராயினும், உம்மைத்தொகை-ப
ன்மொழிக்கண்ணும்பொருள்சிறந்துநிற்குமெனவும்- அன்மொ
ழித்தொகை - முன்பின் இருமொழிக்கண்ணுமின்றிஅவற்றின்புற
மொழிக்கண்ணேபொருள்சிறந்துநிற்குமெனவும்-ஒழிந்தநான்
குதொகைகளும் முன்மொழிக்கண்ணாயினும் பின்மொழிக்கண்
ணாயினும்பொருள்சிறந்துநிற்குமெனவுங்கொள்க.[வ-று,]குடம்
வனைந்தான்- வேங்கைப்பூ-முண்மரம்- எம்-விரிபூ-எம்- செந்தா
மரை- எம்- வேற்கண்- எனவும்வருமிவற்றுள்- குடமுதலியமுன்
மொழிகள்- சட்டிமுதலிய இனங்களைவிலக்கிநிற்றலால்முன்மொ
ழியிற்பொருள்சிறந்தன, நிலமுழுதான் - கண்ணிமை - என்றாற்
போல்வனபின்மொழியிற்பொருள்சிறந்தன, உழுதான்- இமை-
என்றமாத்திரமே - நிலத்தைஎன்பதுங்கண்ணென்பதுந்தாமேவ
ந்து இயைதலினென்க, கபிலபாணர்- புலிவிற்கெண்டை-என்னு
ந்தொடக்கத்து உம்மைத்தொகைகள்- எல்லாமொழியினும்பொ
ருள்சிறந்துநின்றன - பூங்குழல் - தாழ்குழல் - என்னுந்தொடக்
கத்து அன்மொழித் தொகைகள் - இந்தஇருமொழிக் கண்ணும்
பொருள்சிறவாது- உடையாளென்னத்தொக்குநின்ற அவற்றின்புற

மொழிக்கண்ணேபொருள்சிறந்துநின்றன-பிறவுமன்ன-இனிஆசிரியர்தொல்காப்பியனாரும்- (சு) முன்மொழிநிலையலும்பின்மொழிநிலையலும் - இருமொழி மேலுமொருங்குடனிலையலும் - அம்மொழி நிலையாதன்மொழிநிலையலும் - அந்நான்கென்பபொருணிலைமரபே, எனக்கூறுதலுங்காண்க. (௰௧)

வல்லொற்று வரினேயிடத்தொகையாகு, மெல்லொற்று வரினேபெயர்த்தொகையாகும். *

இது, ஐயமகற்றுதற்காவதோர்குறியுணர்த்திற்று. (இ-ள்,) வல்லொற்று இடையிலேவரின் ஏழாம்வேற்றுமைத்தொகையாகும், மெல்லொற்று இடையிலேவரின் இருபெயரொட்டுப்பண்புத்தொகையாகும், எ-று.

[வ-று,] வடுகக்கண்ணன்- வடுகங்கண்ணன்-கன்னடக்கொற்றன்- கன்னடங்கொற்றன்- எனவரும்- இவைவிரியுங்கால்- வல்லொற்றிற்கு- வடுகநாட்டிற்பிறந்தகண்ணனெனவும்- மெல்லொற்றிற்கு- வடுகனாகியகண்ணனெனவும்- விரியும், வடுகனென்பது தந்தைபெயராய்மெல்லொற்றுவரின்- வடுகற்குமகனாகியகண்ணனெனவும் விரியும் பிறவுமன்ன, சிலவிகாரமாமுயர்திணையென்றதினாலே ஈறுகெட்டு வல்லொற்றுமெல்லொற்றுமிக்குவேற்றுமைத்தொகையோ- பண்புத்தொகையோவென்று ஐயப்படநின்றபோது - இந்தக்குறியினாலே துணியப்படுமென்பதாயிற்று- இனி- வடுகநாகன்- வடுகவணிகன்- வடுகவரசன்- எனவரின்- சொல்லுவான்குறிப்பாலன்றி இவ்வாறு துணியப்படாதென்பதுதானேவந்திசையுமென்க. வரின்அது இடத்தொகை- அது பெயர்த்தொகை- எனமுடிக்க. (௰௨)

உயர்திணையும்மைத்தொகைபலரீறே. *

இது, உம்மைத்தொகைக்குப்புறனடையுணர்த்திற்று. (இ-ள்,) உயர்திணையொருமைப்பாலிலேவரும் உம்மைத்தொகைகள், (ரவ்வீறுங்களீறுமாகிய) பலர்ஈற்றையுடையனவேயாம், எ-று.

[வ-று,] கபிலபாணர் - கல்லாடமாமூலர் - சேரசோழபாண்டியர்- தேவன்றேவிகள்- எனவரும்- இனியருத்தாபத்தியால்- அஃறிணையொருமையும்மைத்தொகைகளும்பொதுப்பெயரொருமையும்மைத்தொகைகளும் பன்மையீறுகவேவரவேண்டுமென்னும் நியதியின்றி, உண்மையின்மைகள்-உண்மையின்மை-நன்மைதீமைகள்-நன்மைதீமை-எம்- தந்தைதாயர் - தந்தைதாய்- சாத்

தன்சாத்திகள் - சாத்தன்சாத்தி - எனவும்பன்மையீற்றாலும் ஒரு மையீற்றாலும்வருமென்பதாயிற்று- பலமொழிகளையுந்திரட்டி யொருபிண்டமாகக்கூறியபோது உம்மைத்தொகையாகவும்-கபி லன்பாணனிருவரும்வந்தாரெனப்பிளவுபடக் கூறியபோது பெய ர்ச்செவ்வெண்ணாகவுங்கொள்ளப்படுமெனக்காண்க-இனிஆசிரியர் தொல்காப்பியனாரும்- (கூ) உயர்திணைமருங்கினும்மைத்தொகை யே- பலர்சொன்னடைத்தெனமொழிமனார்புலவர் - எனஇவ்வா றுகூறுதலுங்காண்க. (உக)

தொக்குழி[illegible]யங்குநவிரண்டுமுதலே, ழெல்லைப்பொருளின்ம யங்குமென்ப. *

இது, தொகைநிலைத்தொடர்ச்சொற்கள் இரண்டுமுதலிய பொருள்களில்மயங்கிவருமென்கின்றது. (இ - ள்,) தொக்குழி- வேற்றுமையுருபு மு[illegible]ன தொக்கு நின்றவிடத்து, மயங்குந- பொருள்களால்மயங்[illegible]தற்கு உரியனவாகிய தொடர்ச்சொற்கள், இர- ளில்- இரண்டுமுதல் ஏழீறாகியவவையறையுடையபொருள்க ளாலெ, மய-ப- மயங்குமென்றுசொல்லுவர்புலவர், எ-று.

(மயங்குதல் - இணங்குதல்,) பொருளெனப் பொதுப்பட ச்சொன்னதினாலே - தொகைநிலைப்பொருளாலுந்தொகாநிலைப் பொருளாலுமயங்குமெனக்கொள்க. [வ-று,] தெய்வவணக்கம்- எது-தெய்வத்தைவணங்கும்வணக்கம் - தெய்வத்துக்குவணக்கம்- எம்- தாழ்குழல்- எது - தாழ்ந்தகுழல் - தாழ்ந்தகுழலினையுடை யாள்- எம்-இவையிருபொருளால்மயங்கின, தற்சேர்ந்தார் -எது- தனினைச்சேர்ந்தார் - தன்னொடுசேர்ந்தார் - தன்கட்சேர்ந்தார் - எம்- கடிப்பகை- எது- கடிக்குப்பகை - கடியினதுபகை - கடி யாகியபகை- எம்- இவைமூன்றுபொருளால்மயங்கின, சொல்லி லக்கணம்- எது- சொல்லினதிலக்கணம்- சொற்கிலக்கணம்-சொ ல்லின்கண்ணிலக்கணம் - சொல்லிலக்கணஞ்சொன்னநூல்- என இதுநான்குபொருளால்மயங்கிற்று, பொன்மணி - எது-பொன் னாலாகியமணி- பொன்னாகியமணி - பொன்னின்கண்மணி-பொ ன்னொடுசேர்ந்தமணி- பொன்னும்மணியும்,எனஐந்துபொருளா ல்மயங்கிற்று, மரவேலி- எது- மரத்தைக்காக்கும்வேலி -மரத்தா லாகியவேலி- மரத்துக்குவேலி - மரத்தின்புறத்துவேலி - மரத்தி னதுவேலி-மரமாகியவேலி-எனஆறுபொருளால்மயங்கிற்று,சொ ற்பொருள்- எது- சொல்லானதுபொருள் - சொல்லாலறியப்படு ம்பொருள் - சொல்லுக்குப் பொருள் - சொல்லினதுபொருள்-

சொல்லின்கட்பொருள்- சொல்லாகியபொருள்- சொல்லும்பொ
ருளும்- என- ஏழுபொருளால்மயங்கிற்று, இவற்றுள்- சொல்லா
னது பொருள் என்றது - தொகாநிலைப்பொருளாகிய எழுவாய்ப
யனிலை, வாளைமீனுள்ளல் தலைப்படல் - எது- வாளைமீனையுள்ளல் த
லைப்படல்- வாளைமீனுள்ளலைத்தலைப்படல் - என- இரண்டாவதும்
ம்எழுவாயுமாகிய இருபொருளால்மயங்கியபன்மொழித்தொகை
நிலைத்தொடர், (உள்ளல்-ஓர்பறவை, தலைப்படல்- போர்செய்தல்,)
புலிகொல்யானை - எது- புலியானது கொன்றயானை-புலியைக்கொ
ன்றயானை- புலியாற்கொல்லப்பட்டயானை- எம்-குரங்கெறிவிளங்
காய்- எது- குரங்கானது எறிந்தவிளங்காய் - குரங்கையெறிந்த
விளங்காய்- குரங்காலெறியப்பட்டவிளங்காய்-எம்-இவை-எழுவா
யும் இரண்டாவதும்மூன்றாவதுமாகிய மூன்றுபொருளால்மயங்
கியபன்மொழித்தொடர்- பிறவுமன்ன-' இனிஇவ்வாறன்றி- வலிந்
துபற்றிப்பொருள்கொள்ளப்புகின் - ஏழெல்லையென்னும்வரம்பு
கடந்துபலவாமாதலால் அதுமரபன்று என்றுசொல்லவந்தவர் -
என்ப- எனப்புலவர்மேலேற்றிக்கூறினார் - மயங்குநமயங்குமெ
ன்ப- புலவர் எனமுடித்துக்கொள்க. (உஉ).

முற்றீரெச்சமெழுவாய்விளிப்பொரு ளாறுருபிடையுரி யடுக்
கிவைதொகாநிலை *

இது, நால்வகைச்சொற்குமாவதோரிலக்கணமுணர்த்திற்று.(இ-ள்,)முற்றீ- ருள் - முற்றுவினைகளும்பெயரெச்சவினையெச்சவினைகளும் - எழுவாயும்விளியுமாகிய ஐவகைப்பொருளிலே பெயர்வினைகள்புணரும் புணர்ச்சியும், ஆறுருபு - வேற்றுமைப்பொருளிலே அவற்றினுருபுகளாகிய இரண்டாவதுமுதலிய ஆறு உருபுகளும் இடையிலேவிரிந்துநிற்கப் - பெயர்வினைகள்புணரும்புணர்ச்சியும், இடை- கு- இடைச்சொற்புணர்ச்சியும்- உரிச்சொற்புணர்ச்சியும்- ஒருசொல் அடுக்கிவரும்புணர்ச்சியும், இவை-லை- ஆகியஇவையொன்பதுந்தொகாநிலைத்தொடராம், எ- று.

[வ-று,] உண்டான்சாத்தன் - குழையன்கொற்றன் - (முற்று) உண்டசாத்தன்- நல்லசாத்தன்- (பெயரெச்சம்)உண்டுவந்தான்- உழுதன்றியுண்ணான்- (வினையெச்சம்) சாத்தன்வந்தான்-(எழுவாய்) கொற்றாகொள்- (விளி) குடத்தைவனைந்தான் - வாளாலெறிந்தான் - இரப்போர்க்கு ஈந்தான் - மலையின்இழிந்தான்- சாத்தனதுகை-மணியின்கண்ஒளி-(ஆறுருபு)அதுகொல் (இடை) நனிபேதை- (உரி) பாம்புபாம்பு- (அடுக்கு) எனமுறையேகாண்

க, வேற்றுமைத்தொகைவிரிந்தபோது வேற்றுமைத்தொகாநிலையாம், வினைத்தொகைவிரிந்தபோது - பெயரெச்சத்தொகாநிலையாம், பண்புத்தொகையும்- உவமைத்தொகையும்-உம்மைத்தொகையும்விரிந்தபோது- இடைச்சொற்புணர்ச்சியாம், அன்மொழித்தொகைவிரிந்தபோது- வேற்றுமைத்தொகாநிலைமுதலின்றப்பனவுமாமெனக. (உரு)

திணையேபாலிடம்பொழுதுவினாவிறைமரபாமேழுமயங்கினும்வழுவே. *

இது, வழுவறிந்தல்லது அவற்றைவிலக்கலாகாமையால்-அவைஇவையென்கின்றது. (இ-ள்,) திணை- முதல் திணைமுதலாக- மரபீறாகச்சொல்லப்பட்டனமும், மயங்கின் - அவற்றின்நெறிபிறழுமாயின், ஆம்வழு- வழுவாம், எ-று.

(மரபு-பழமை,) திணைமுதலாகியஆறும்மரபாயினும், அவைபொழிந்தனவற்றையே மரபென்று சொல்லவந்தவர் அதனையிறுதியிலேசொன்னார்- [வ-று,] அவன்வந்தது- எனின் - திணைவழு, அவன்வந்தார்- எனின் - பால்வழு, யான்வந்தான் - எனின்- இடவழு, நேற்றுவருவான்- எனின்- காலவழு, கறக்கின்ற எருமைபாலோசினையோ- எனின்- வினாவழு, கடம்பூர்க்குவழியாது- எனின்-இடம்பூணி என்ஆவின்கன்று- என்பது- விடைவழு, யானைச்சாணி- என்றும்- எருமையிலத்தி- என்றும் - யானைமேய்ப்பானை இடையனென்றும்- ஆடுமேய்ப்பானைப்பாகனென்றும்சொல்வது- மரபுவழு, (வழு- குற்றம்,) விடை- எதிர்மொழி,) இவ்வாறேனழுவகைவழுக்களையும் உணர்ந்துவழக்கினுள்ளுஞ்செய்யுளுள்ளும் அவைவாராமல்நீக்குக· ஆம்வழு,எனமுற்றுப்பயனிலையாகமுடிப்பினும்அமையும். (உசு)

ஐயந்திணைபாலவ்வவ்பொதுவினு, மெய்தெரிபொருண்மேலன்மையம்விளம்புப. *

இது, திணைபால்களோடு வினாவிடைவரின்வழுவாதுகாத்தலுணர்த்திற்று. (இ-ள்,) ஐயந்திணைபால - (திணைபாலனவாகியஐயத்தை) திணையையத்தையும் - பாலையத்தையும், அவ்வப்பொதுவினும் - அந்தந்தப்பொதுச்சொற்களாலும், மெய்தெரிபொருண்மேல்- துணிந்தபொருளின்மேல், அன்மையும்விளம்புப - அல்லாததன்மையைவைத்துங்கூறுவர்புலவர், எ-று.

[வ-று,] குற்றியோமகனோஎனத்திணைஐயந்தோன்றியவழி- குற்றியோமகனோ அங்குத்தோன்றுநின்றவுரு எனப்பொது

ச்சொல்லால் வினவுக, குற்றிக்கும்மகனுக்கும் உருப்பொதுப்படநிற்றலாற்பொதுச்சொல்லென்க, (குற்றி - கட்டை) ஆண்மகனோபெண்மகளோ எனஉயர்திணைப்பாலையந்தோன்றியவழி - ஆண்மகனோபெண்மகளோஆங்குத்தோன்றாநின்றானெனப்பொதுச்சொல்லால் வினவுக, ஆண்பெண் இரண்டல்லது பலர்பாலென வேறொன்று இன்றியந்த இரண்டற்கும் பொதுப்படநிற்றலால் - தோன்றாநின்றானென்பது பொதுச்சொல்லென்க, ஒன்றோ பலவோ என அஃறிணைப்பாலையந்தோன்றியவழி - ஒன்றோபலவோ இச்செய்புக்கபெற்றம் எனப்பொதுச்சொல்லால் வினவுக - பெற்றம்என்பதுபால்பகாஅஃறிணையாய்அத்திணையிருபாற்கும்பொது ஆதலால்பொதுச்சொல்லென்க (செய் - வயல், பெற்றம் - எருது - பசுவும் - காளையும் -) இனிஇவ்வாறுவினவினார்க்குத்துணிந்தபொருள் - குற்றியாயின் - மகனன்று - எம் - துணிந்தபொருள்மகனாயின் - குற்றியல்லன் - எம் - ஆண்மகனெனின் - பெண்மகளல்லன் - எம் - பெண்மகளெனின் - ஆண்மகனல்லள் - எம், விடைகொடுக்க.

மகனன்றுகுற்றியெனக்கூறின் குற்றியோமகனோ எனவினவினார்க்குமகனன்றெனின் அமையும் - குற்றியெனம்மல்வைத்துக்கூறுதல் - வேண்டாகூறலென்க, மகனன்றுஎன்பதை ஐந்தாம்வேற்றுமைப் புணர்ச்சியென்று - மகனின்றெனவிரிப்பாருமுண்டு - அதுபோலவேவரும் - நீயல்லேன் - என்பதை அவ்வாறு விரித்தல் கூடாமையால் இதுஅவ்வழிப்புணர்ச்சி பதினொன்றின் அடங்காது வெளிப்பட்டு அதன்புறத்ததாயடங்குமென்க - ஒழிந்தமூன்று உதாரணங்களும் அவ்வாறேயாமென்க, இனித்துணியாத பொருளின் மேல் அல்லாததன்மையைவைத்து - மகனல்லன்குற்றி - எனின் - மகனல்லன்அவ்வுருக்குற்றியெனக்கூறல்வேண்டும் அவ்வாறுகூறுதல் - சொற்பல்குதலென்னும் விடைவழுவாம் - அவ்வழுவாராமலே - மெய்தெரிபொருண் மேலன்மையும் விளம்புப என்றார் - எனக்காண்க, இனிஆசிரியர்அகத்தியனார்(௫)கண்டுபான்மயங்குமையக்கிளவி - நின்றோர்வருவோரென்றுசொன்னிகழ்க - காணுவையமும் பல்லோர்படர்க்கை - எனக்கூறலும், தொல்காப்பியனாரும் (சூத்) பான்மயக்குற்றவையக்கிளவி - தானறிபொருள்வயிற்பன்மைகூறல், உருவென்மொழியினும்அஃறிணைப்பிரிப்பினும், இருவீற்றுமுரித்தேசுட்டுங்காலை, தன்மைசுட்டலுமுரித்தெனமொழிப, வன்மைக்கிளவிவேறிடத்தான, எனக்கூறுதலுங்காண்க. விளம்புப - என்னும் பல்லோர்படர்க்கைவினைமுற்றுப்பயனிலை - புலவரென்பது, குறைந்துநின்றதுகூட்டிமுடித்துக்கொள்க. (௨௭)

உயர்திணைதொடர்ந்தபொருண்முதலாறு, மதனொடுசார்த்தின
த்திணைமுடிபின.

*

இது, திணைவழுவமைதியுணர்த்திற்று. (இ-ள்,) உயர் - றும் - உயர்திணையைத்தொடர்ந்த அஃறிணைப்பொருளாகியாறும், அத - ன - அவ்வுயர்திணையொடுசேர்த்துமுடிப்பின், அத் - ன - அவ்வுயர்

திணைமுடிவையுடையனவாம், எ-று.

தொடர்தலாவது- அஃறிணைப்பொருளாகியாறும் உயர்திணைக்குக்கிழமைப்பொருளாய் நிற்றல்,(கிழமை- உரிமை,) சார்த்தலாவது- உயர்திணையெழுவாயின்பயனிலையோடு அஃறிணையெழுவாயையுங்கூட்டிமுடித்தல், உயர்திணை -என்றதிறனே- பொருண்முதலாறென்றதிற்பொருளாவது- அஃறிணைப்பொருளெனக்கொள்க. [வ-று,] நம்பிபொன்பெரியன்- நம்பிநாடுபெரியன்- நம்பிவாழ்நாள்பெரியன் - நம்பிகண்பெரியன் - நம்பிகுடிமைநல்லன்- நம்பிநடைகடியன்- எனவருமம்.

இனிச் சொற்றொடர்நிற்றிதன் பெற்றி யென்னுஞ்சூத்திரத்தால் - கிணறு நீருநிற்று - மாடுகோடுகூரிது - (செய்யுள்) ஊருணிநீர்நிறைந்தற்றே- நெடுங்கடலுந்தன்னீர்மைகுன்றும், என அஃறிணையொடு அஃறிணையைச் சேர்த்தின் அம்முடிபாகமுடிதலுங்கொள்க, இதனுள்- பொன் என்னும் அஃறிணையெழுவாய்நம்பி என்னுமுயர்திணை எழுவாயின் பயனிலையாகிய பெரியன் என்னும் உயர்திணைவினைக்குறிப்புச் சொல்லைக் கொண்டு முடிதலால் வழுவாகி - இவ்வாறு தொடர்ந்துநிற்றல்சான்றோர்செய்யுளுள்ளும் உளவாதலால் அதுநோக்கிச்சார்த்திமுடித்தலின் அமைதியாகி- வழுவமைதியாயிற்றென்க - பிறவுமன்ன -இனி- நம்பிபொன்பெரியன்- என்பதை- நம்பிபொன்னினது பெருமையையுடையன்-எனவிரிந்து- வழாநிலையென்றால்- என்னையெனின்- பொற்பெரியனென்னும்வேற்றுமைப்புணர்ச்சிக்குரிய எழுத்துச்சந்தியில்லாததினாலே பொருந்தாதென்க - (வழுவாதநிலை- வழாநிலை,) வழாநிலை - இலக்கணம், வழு- இலக்கணக்குற்றம், வழுவமைதி- இலக்கணக்குற்றமாயினுமிருக்கலாமென ஒத்துக்கொண்டது, இம்மூவகையேயெல்லாஇலக்கணநூல்களினுமிலக்கியநூல்களினுஞ்சொல்லப்படுவது - பொருண்முதலாறும் - அத்திணைமுடிபின - எனமுடித்துக்கொள்க. (உசு)

திணைபால்பொருள்பலவிரவினசிறப்பினு, மிகவினுமிழிபினு
மொருமுடிபினவே. *

இது, திணைபால்மரபுவழுவமைதியுணர்திற்று.(இ-ள்,)திணை- பல- திணையும்பாலும்வேறுவினைப்பலபொருள்களும், விரவின- கலந்துநின்றனவாயின்அவை, ஒருமுடிபின - ஒருமுடிபாகமுடிவனவாம், சிறப்பினுமிகவினுமிழிவினும்- சிறப்புமிகுதியும் இழிவுமாகிய இம்மூன்றுகாரணங்களாலும்,எ-று.

(சிறப்பு- உயர்வு,) [வ-று,] திங்களுஞ்சான்றோருமொப்பர்- இது திணை விரவிச்சான்றோர் என்றஉயர்வுபற்றி யஃறிணையுயர்திணைமுடிபேற்றது. (வெண்பா) பழியஞ்சான்வாழும் பசுவுமழிவிஞற், சொண்டவருந்தவம்விட்டானுங், கொண்டிருந் - தில்லஞ்சிவாழுமெருதுமிவர்மூவர், நெல்லுண்டநெஞ்சிற்கோர்நோய்• என்றதும்அது, இழிந்தோரையெண்ணியபின் இதனுட்சிறப்பெண்ணெயனின்- பசு- விட்டான்- எருது-என்றமூன்றினுள்- விட்டா

ன்என்றதுஉயர்திணையாண்சிறப்பு, பசு, எருது, என்பனவும்உயர்தி
ணைப்பொருளாயினும் அஃறிணையாகஉருவகப்படுத்தினதிறலே
யிவ்வாறமைக்கப்பட்டன, நன்பால்பசுவே துறந்தார் பெண்டிர்
பாலர்பார்ப்பா- ரென்பாரை, இதுதிணைவிரவிஇரண்டுஅஃறிணை
யும்நான்கு உயர்திணையுமாய்நின்றநிலையலே யம்மிகுதிபற்றியஃறி
ணையும் உயர்திணை முடிபேற்றது, பார்ப்பார்தவரோசுமந்தார்பிணி
ப்பட்டார்- மூத்தோர்குழவியெனுமிவர்கட்குஎன்றதும்அது, இ
தனுட்குழவி- ஒன்றும்அஃறிணை, வசைபடவாழ்ந்தோர்பலர்சொ
ல்- வேள்விமுற்றியூபநட்டவியன்களம்பலகொல் - யாபலகொல்
லோபெருந-எனவிவைசிறப்பினால் அஃறிணைமுடிபேற்றது-பல
ர்பலஎனப்பிரித்து இரண்டையுங்கூட்டி,யாபலஎனவினைவினைநிற
லேயுயர்திணையஃறிணைமுடிபேற்றது, வசைபட வாழ்ந்தோரில் -
வேள்விமுற்றியூபநட்டவியன்களஞ்சிறத்தலால் - சிறப்பாயிற்று,
யூபம - வேள்வித்தறி, தொல்லைநால்வகைத் தோழருந்துன்னமணி
நெடுந்தேர்-மல்லற்றம்பியுமாமனுமதுவிரிகமழ்தார்ச் -செல்வன்
முதையுஞ்செழுநகரொடுவளநாடும் - வல்லைதொக்கனவளங்கெழு
கோயிலுமொருங்கே - என்றதுமது, நகரும்நாடுஞ்சிறத்தலால்
முன்னின்ற உயர்திணைநான்குமஃறிணை முடிபேற்றன, எச்சிலார்
தீண்டார்பசுப்பார்ப்பார் தீத்தெய்வ- முச்சந்தலையோடிவையெ
ன்பயாவருந் - திட்பத்தாற்றீண்டாப்பொருள் - எனவிவைமிகுதி
யினால் அஃறிணைமுடிபேற்றன- இதனுள்உயர்திணைமூன்றும் அ
ஃறிணைநான்குமாதலால் அஃறிணைமிகுதியாயிற்று,கோலஞ்சிவா
மூங்குடியுங்குடிதழீஇ - யாலம்வீழ்போலுமமைச்சனும்- வேலி
ன் -கடைமணிபோற்றிண்ணியான்காப்புமிம்மூன்றும்- படைவே
ந்தன்பற்றுவிடல்- எம்- செய்பவன்கருவிநிலஞ்செயல்காலஞ்செ
ய்பொருளாறும்- எனவும்வருமிவற்றுள்- அமைச்சன் - செய்பவ
ன்-என உயர்திணையொன்றும்ஒழிந்தன அஃறிணையுமாதலால் இ
வையுமிகுதியாலஃறிணைமுடிபேற்றனவெனக்காண்க,வடுகருவா
ளர்வான்கருநாடர் - சுடுகாடுபேயெருமையென்றிவையாறுங்- கு
றுகாரறிவுடையார்- இவையிழிவினலுயர்திணையஃறிணைமுடிபே
ற்றன- இம்மூவகைநாட்டிலுள்ளோர் மூர்க்கராதலாலிழிபாயிற்
று, மூர்க்கனுமுதலையுங்கொண்டதுவிடா - இதுவுமது, இனிப்
பொருள் பலவிரவினவருமாறு - கறியுஞ்சோறுமுண்டான் - மா
லையுமுடியுங்கவித்தான் - குஞ்சமுங்குடையுங்கவித்தான் - சாந்து
முமாலையுந்தமுவினன்- எனவேறுவினைக்குரியபலபொருள்கள்அ

ரவி - சோறு - முடி - குடை - முல்லை - எனச்சிறந்தனவற்றிற்குரி
யவினைகளால் - சிறப்பில்லாதவேறுவினைக்குரிய - கறி - மாலை - குஞ்
சம் - சாந்தம் - என்பனவுமொருமுடிபாகமுடிந்தன, இவைமிகு
தியும் இழிவும்பற்றியொருமுடிபெற்றல்வந்துழிக்காண்க, (வந்த
உழி - வந்துழி - உழி - இடம்,) இங்கேயிறுதியிற்சொன்னமரபுவ
ழுவமைதி - வேறுவினைப்பல்பொருட்குழீஇய பொதுச்சொலும்
வேறவற்றெண்ணுமோர்பொதுவினைவேண்டும் என்னுஞ்சூத்திரத்
தொடுமாறுகொளக்கூறலன்றோவெனின் - சிறப்புமுதலியகுறியா
து ஒத்தநிலையாக எண்ணியபோது முடியுமரபு அங்கேகூறுதலா
ல் இதுமாறுகொளக்கூறலன்றென்க. பன்மையொருமுடிபின
வென்றது ஒருமுடிபின எனவாளாகூறினதிறலே - (வாளா - வீ
ண்,) தானுந்தேரும்பாகனும்வந்தென்னலனுண்டான் - எனத்தி
ணைவிரவிச்சிறப்பினுலே - தேரென்னுமஃறிணை உயர்திணையாண்
பால்முடிபெற்றலும், தானுந்தன்னையுந் தாழ்சடையோனுண்
டலனேல் - எனஉயர்திணை ஆண்பாலும் பெண்பாலும்விரவிச்சி
றப்பினுற் பெண்பாலாண்பால் முடிபெற்றலுங்கொள்க, இனிச்
சொற்றொறுமிற்றிதன்பெற்றியென்னுஞ் சூத்திரப்புறனடைவிதி
யினுலே - விரவாமலெண்ணித் - தோழனுந்தானும்வந்தான் - தோ
ழியுந்தானும்வந்தாள் - எனஒருமைமுடிபெற்றலுங்கொள்க.

பாணன் பறையன்கடம்பன் துடியனென்றந்நான்கல்லது குடியுமில்லை-
எனவுயர்திணையெண்ணியஃறிணையாகமுடித்த - வழு - எங்கேஅமைக்கப்படுவ
தெனின் - குடியென்பதைப்பாணன்முதலிய நான்கினுங்கூட்டியுரைக்கப்படுத
லால் - வழாநிலையாமென்க - இனிப்பால்விரவியொருமுடிபெற்றனவற்றிற்கு - ஒ
ருவன் கொல்லோ பலர்கொல்லோ இச்செய்புக்கார் எனவுதாரணங்காட்டின்
அமையாதோவெனின் - ஐயந்திணைபாலவ்வப்பொதுவினுமென்பதனுல் வந்த
னவாதலானும் - அவற்றைப்பொதுச் சொல்லாற்சொல்லுதலே யிலக்கண
மாதலாலும்இங்கேகாட்டியன அக்களால்வந்தவழுவமைதியன்றென்க - இழிவின
லஃறிணைமுடிபெற்றதற்குக்காட்டியவுதாரணத்துள் வடுகரையறிவுடையோர்
குறுகாரென்ற தென்னையிந்நாட்டில் வாழுந்தனவசியருந் தெலுங்கருமன்றோ
வடுகரெனப் பட்டவரெனின் - வடுகர் - தெலுங்கரென்பவர் வடுக நாட்டினுந்
தெலுங்குநாட்டினுமுள்ளவர் ஆகுபெயரால் அந்நாட்டுப் பாடைகளும் வடுகு-
தெலுங்கு எனவழங்கப்பட்டன - ஆதலால் உணராதார் யானைகாணுக்குருடர்
கைத்தலங்கண்ணுக்கண்டகண்டளவுகூறியதுபோல - வடுகரென்பதற்குத்தெ
லுங்கரெனவுந்தனவசியரெனவும்பொருள் கூறுவர்கொடுந் தமிழ்நாடுபன்னி
ரண்டைச்சூழ்ந்தபன்னிரண்டுநாட்டினுள் - வடுகநாடுவேறு தெலுங்குநாடுவே
று வடுகுவேறு - தெலுங்குவேறு - வடுகருந்தெலுங்கரும்வேறுவேறென்க - அதற்
குச்சான்றென்னையெனின் - கொடுந்தமிழ்நாட்டைச்சூழ்ந்தபன்னிரண்டுநாடா
வன - சிங்களம் - பழந்தீபம் - கொல்லம். கூபம் - கொங்கணம் - துளுவம் - குடகம் -
கருநடம் - கூடம் - வடுகு - தெலுங்கு - கலிங்கம் - என்பனவும் - இவற்றுள் - சிக்க - கு
விரு - என்பனவடுகர்பாடை மொழி - எம் - செப்பு - என்பதுதெலுங்கர்பாடை
மொழி - எம் - உதாரணமெடுத்துக்காட்டலுமாமென்க. (உஎ)

உவப்பினுமுயர்வினுஞ் சிறப்பினுஞ்செறலினு, மிழிப்பினும் பாறிணையிழுக்கினுமியல்பே. *

இதுவுமது, (இ-ள்,) உவப-பினும்- மகிழ்வும் உயர்வும்- தலைமையும்-வெகுளியும்- இழிவுமாகிய ஐந்தினுலும், பாறிணையிழுக்கினும்- பாலுந்திணையும்வழுவிவருமாயினும், இயல்பு- அதுவமைதிப்பண்பாம், எ-று.

[வ-று,] தன்புதல்வனை என்னம்மைவந்தாள்- என்பது-உவப்பின் ஆண்பால்பெண்பாலாயிற்று, ஒருவனை அவர்வந்தார்-எது- உயர்வின் ஒருமைப்பால்பலர் பாலாயிற்று, தாதாய்மூவேழுலகுக்குந்தாயே- எது- சிறப்பின் ஆண்பால்பெண்பாலாயிற்று, எனைத்துணையராயினுமென்னுந்தினைத்துணையுந் - தேரான்பிறனில்புகல்- இக்குறளினுள்- எனைத்துணையரென்னும்பலர்பால்-தேரான் எனவெகுளியால் ஒருமைப்பாலாயிற்று, பெண்வழிச்செல்வானை நோக்கி இவன்பெண் - என்பது இழிவினால் ஆண்பால்பெண்பாலாயிற்று, ஓர்பசுவை என்னம்மைவந்தாள்-என்பது- உவப்பின்- அஃறிணையுயர்திணையாயிற்று, கிளியார்தந்தார் - எது -உயர்வின்- அஃறிணை- உ -று, தம்பொருளென்பதம்மக்கள்-எது-சிறப்பின்- உயர்திணை-அ-று, எவ்வுஞ்செய்கலான் றான்றேரானவ்வுயிர்-போஒமளவுமோர்நோய்-இக்குறளில்- செய்கலான்தேரான்நோய்-எது- வெகுளியின்உயர்திணை-அ-று, நாயெல்லாங்கடவுளுடைமை-எது- இழிவின்உயர்திணை-அ-று, பிறவுமன்ன, இனிச்சொற்றொறுமிற்றி தன்பெற்றியென்னுஞ் சூத்திரத்தால் - புதல்வனை அப்பன்வந்தான்- எம்- புதல்வியை அம்மைவந்தாள் - எனவும்வரும் மரபுவழுவமைதியுங்கொள்க.

இவ்வழுவமைதி உருவகவுவமைகளில்வழுவிவரும்வழுவமைதியின்வேறெனக்காண்க - அது - உருவகவுவமையிற்றிணைசினை முதல்களென்னுஞ்சூத்திரத்தாற்பிற்கூறப்படும், இச்சூத்திரத்துள் இழுக்கினுமென்றதுஇழிவுசிறப்பும்மை இவ்விடங்களில் இழுக்காதுவருதல் இலக்கணமென்பதும், பாறிணையெனப்பாலைமுற்கூறியது அதுமிகுதியும்பயின்றுவருமென்பதுந்தோன்ற நின்றமையுந்துணர்ந்துகொள்க. இது உய்த்துணர்வைப்பென்னும் உத்தி. இனிக்குடிமையாண்மைமுதலியன உயர்திணைப்பொருளவாயினும்- குடிமைநன்று-ஆண்மைநன்றுஎனமுடிதலால் இவைபோல்வனவெல்லாஞ்சொன்னோக்கம்பற்றிவந்த வழுவமைதியெனக்கொள்க, இக்குடிமைமுதலியன பண்பாதலாற் பண்பாகுபெயரன்றோவெனின்- ஆகுபெயராயின் - குடிமை குடிமகனையுணர்த்திக்குடிமை நல்லன் எனவேநிற்கவேண்டும் - பின்புகுடிமை நன்றென அஃறிணைமுடிபேற்றலின் அவைபண்பிகளாவனவேயன்றிப் பண்பாகாமையால் ஆகுபெயரெனல் பொருந்தாதென்க. குடிமைநல்லன் ஆண்மைநல்லன் எனமுடிவன வழாநிலையேயாம்.

குடிமையென்பது குடிப்பிறப்பிற்கேற்றவொழுக்கம் - அது - ஒழுக்கமுடைமை
குடிமை - எம் - மடிமைகுடிமைக்கட்டங்கிற்றன்னொன்னார்க் - கடிமைபுகுத்திவி
டும் - எனவுவருவனவற்றுள் - ஒழுக்கமுடையவன்குடிமகன் - ஒழுக்கமுடைய
வள்குடிமகள் - எம் - மடிமைகுடிமகனிடத்திற்றங்குமாயின் - அது - அவனையவன்
பகைஞர்க்கு அடியனாகவுழைத்துவிடும் - எனவும்வருவன வற்றுட்காண்க, இனி
க்காலம் - உலகம் - உயிர் - உடம்பு - முதலியனவும் உயர்திணைப்பொருளையுணர்த்து
மேனும் அஃறிணைச்சொல்லாகநின்று அஃறிணைமுடிபேற்றுநிற்குமென்க. ஆ
யின்வேற்றுமையாதோவெனின் - மேற்கூறிய - குடிமையாண்மை முதலியனவிவ்
வாறன்றியிருதிணைமுடிபுமொருங்கேற்றுநிற்பதென்க - இவ்வேறுபாடெல்லா
ம் - ஆசிரியர்தொல்காப்பியனார்கூறிய பலவயினானுமெண்ணுத்திணைவிரவுப்பெ
யர் - என்னுஞ்சூத்திரத்தாலும், குடிமையாண்மை யென்னுஞ்சூத்திரத்தாலும்,
காலமுலகமுயிரேயுடம்பே - என்னுஞ்சூத்திரத்தாலுங்காண்க. இவையுரையிற்
கோடலென்னு முத்தியாலுரைக்கப்பட்டன - இச்சூத்திரத்துள் அதுவென்பது
தோன்றுஎழுவாயாய்நின்றது - ஆதலால்வருவித்து - அதுவியல்புஎனமுடித்துக்
கொள்க. (உஅ)

ஒருமையிற்பன்மையும் பன்மையினொருமையு, மோரிடம்பி
றவிடந்தழுவலுமுளவே. *

இது, பால்வழுவமைதியோடு இடவழுவமைதியுமுணர்த்தி
ற்று. (இ-ள்,) ஒருமைப்பாலிலே பன்மைச்சொல்லைச்சேர்த்துக்
கூறுதலும் - பன்மைப்பாலிலே யொருமைச்சொல்லைச்சேர்த்துக்
கூறுதலும், ஓரிடத்திலேபிற இடச்சொல்லைச்சேர்த்துக்கூறுதலு
முண்டென்றவாறு.

[வ-று,] வெயிலெல்லாமறைத்ததுமேகம் - இக்குளத்துநீ
ரெல்லாமிறைத்தானிவன் - எனவெயில் - நீர் - என்னுமஃறிணையொரு
மையிலே - எல்லாம் என்னும்பன்மைவந்தது, இரண்டுகண்ணுஞ்
சிவந்தது - இருநோக்கிவளுண் கணுள்ளதொரு நோக்கு - நோய்
நோக்கொன்றந் நோய்மருந்து - உள்ளியதெல்லாமுடனெய்து
ம் - என அதன்கட்பன்மையிலொருமைவந்தது, அஃதைதந்தை
யடுபோர்ச்செழியர் - எம் - ஏவலிளையர்தாய்வயிறுகரிப்ப - எனவு
ம் - தந்தைஎன்னும் உயர்திணையொருமையிற் செழியர்என்னும்
பன்மையும் - இளையரென்னும் அதன்பன்மையில் தாய் என்னும்
ஒருமையும்வந்தன - அஃதை - எது - அஃதி - அகுதி - எனவுந்திரி
து - திக்கற்றவன் - திக்கற்றவள் - திக்கற்றது - எனஉயர்திணையாணொரு
மைபெண்ணொருமை அஃறிணையொருமையிலும்விரவிதிற்பதோ
ர்பொதுச்சொல், இவற்றுளமைதியென்னெனின் - தந்தைஎன்னு
மொருமையிற்செழியரெனப்பன்மைவந்ததுவழுவும் - தனித்தனி
யொவ்வொருவராகக் கூடிச்செழியரென் நின்றபன்மையில் ஒவ்
வொருவருந் தனித்தனி யஃதைக்குத் தந்தைபோல்வராதலால் அ

மைதியும், இனி இளையனொன்பது- சேனைமுழுமையுமுள்ள இளைஞர், இவர்பலராதலால் இதில்- தாய்- எனவொருமைவருதல்வழுவும்- இச்சேனையில்இரண்டுநின்றஇளைஞரில்ஒவ்வொருவர்க்குந்தாயெனத் தனித்தனிசென்றியைதலால்அமைதியுடையதாயிற்றென்க- இனியிவ்வாறேவழுவமைதிவந்த இடந்தோறும்விரித்தெழுதவேண்டின்விரிந்துபோயாதலாற்சுருக்கியெழுதியவிடங்களிலுமிவ்வாறுவிரித்துணர்ந்துகொள்க- நம்பிமார்வந்தார்- நங்கையார்வநதார்- எம்- நங்கைமீர்கேண்மின்- பாவைமீர்கேண்மின்எனவும்- ஒருமைப்பெயராப்பன்மையீறுகளடுத்து நின்றுபன்மையுணர்த்தலுங்கொள்க. சாத்தனீறுயவைசெய்வனே- கல்வியனென்னும்வல்லான்சிறுசொல்வேனல்லன்- எனத்தன்மையிற்படர்க்கைவந்தது- தன்னைச்சாத்தன்றாய் எனப்படர்க்கையாகக்கூறிச்செய்வனே எனவும் - கல்வியனென்னும்வல்லான -எனப்படர்க்கையாகக்கூறிச்சிறியாரோடிணங்கேன்- எனவுந்தன்மையால்முடித்தவாறுகாண்க. எம்பியையீங்குப்பெற்றேனென்னெனக்கரியதென்றான் - எனத்தன்றம்பியை முன்னிலையாகவைத்து அவனைநோக்கியே கூறுதலால் முன்னிலையிற் படர்க்கைவந்தது. நீயோ அவனோயாரிது செய்தார் - யானோ அவனோயாரிதுசெய்தார்- நீயோயானோயாரிதுசெய்தார்- நீயோ அவனோயானோயாரிதுசெய்தார் - எனவிரவியோரிடத்திற்பிற இடம்வருதலுங்கொள்க.

ஒருவீரொருவீரொப்பினிர்கழிமின்- யானெம்மூர்புகுவன்- நீநும்மூர்புகுவை- என்பனவுமொருமையிற்பன்மைவந்தவழுவமைதியெனின் - ஒருவரொன்பதுயாரிருபாற்குப்பன்மை வினைகொளுமென்ற - ஒருவவொன்னுஞ்சொல் முன்னிலையிடத்து ஒருவீரொருவீரென அடுக்கிநின்றுபன்மை வினைகொளுங்கால் அதற்கியைய ஒப்பினிரெனமுற்றெச்ச மிடைநிற்றலால்- ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தே என்பதிலைமைந்தவழாநிலையேடாம் - ஒழிந்தன - யான் புகுவன்- நீபுகுவை- எனஒருமைமுடிபேற்றுநின்றுழி - எம்மூர் - நும்மூர்- என்பன இடைப்பிறவரலாய்த்தன்கிளையைந் தன்னொடுபடுத்துக் கூறலாலவையும் வழாநிலையாமென்க- இவைபோல்வனவன்றி முன்னர்க்காட்டிய வுதாரணங்கள் போலமயங்கிவருவனவுளவேல் அவற்றையும்இச்சூத்திரத்தா லமைத்துக்கொள்க- ஆசிரியர்தொல்காப்பியனார். (சூ) ஒருமைசுட்டியபெயர்நிலைக்கிளவி- பன்மைக்காகுமிடனுமாருண்டே- எனக்கூறுதலாலுங்காண்க - தழுவலுமுள என முடித்துக்கொள்க. (உக)

தரல்வரல்கொடைசெலல் சாரும்படர்கை, யெழுவாயிரண்டு மெஞ்சியவேற்கும். *

இது, இடவழாநிலையும்வழுவமைதியுமுணர்த்திற்று. (இ-ள்,) தரல்- கை - இந்தநான்குசொற்களையும்படர்க்கைசாரும், எழுவாயிரண்டும் - இவற்றுள்முதலிலேநின்ற தரல் வரல் - என்னுமிரு

கைசொற்களையும், எஞ்சியவேற்கும் - ஒழிந்ததன்மைமுன்னிலை களேற்கும், எ-று.

ஈங்கு - இங்குமுதலியன தன்மைமுன்னிலைகட்கும் - ஆங்கு - அங்குமுதலியனவும் - போதல் - புகுதல் - முதலியனவும்படர்க்கைக் கும்உரியவெனவுங்கொள்க - தரல் வரல்முதலிய அந்தநான்குசொற்களும் அந்தந்தப்பகுதிகளையுணர்த்தி நின்றன ஆதலால் அப்பகுதிகளாற்பிறக்கும்வினைவிகற்பங்களைத்துங்கொள்க. [வ-று,] அவனுக்குதந்தான் - அவன்பால்வந்தான் - அவனுக்குக்கொடுத்தான் - அவன்பாற்சென்றான் - எம் - எனக்குத்தந்தான் - என்பால்வந்தான் - எம் - நினக்குத்தந்தான் - நின்பால்வந்தான் - எனவும் - ஈங்குவந்தான் - தந்தான் - ஆங்குச்சென்றான் - போயினான் - புக்கான் - எனவும்வரும் - சாரும்ஏற்கும்எனப்பராமுகமாகச்சொன்னதினலே - தரல்வரலிரண்டும் - தன்மைமுன்னிலைக்கும் - கொடைசெலவிரண்டும்படர்க்கைக்கும் வழாநிலையெனவும், தரல்வரலிரண்டும் படர்க்கைக்கும் - கொடைசெலவிரண்டுந்தன்மைமுன்னிலைக்கும் - வழுவமைதியெனவுங்கொள்க.

வழுவமைதிக்கு; [உ-ம்,] பெருவிறல்அமரர்க்குவென்றிதந்த - புனல்தருபசுங்காய்தின்றகன்று - எனத்தரலும் - தாண்டில்வேட்டுவன்வாங்கவாராது வருவிருந்துபார்த்திருப்பான் - என - வரலுந்தன்மைமுன்னிலைகளுக்குரியவன்றிப்படர்க்கையிடத்துவந்தன - வைய்த்தும்வானத்துஞ் செல்லாதணங்காகியைத்துநின்றதரா - என்பதில் - ஈங்கென்பதுபடநின்றவைய்த்து - ஆங்கென்பதற்குரிய - செலல்வந்தது - இன்னுந்தரல் வரல்படர்க்கையிடத்துவந்தவழுவமைதிக்கு மேற்காட்டிய உதாரணத்துள்ளுங்காண்க. எனக்குக்கொடுத்தான் - என்பாற்சென்றான் - நினக்குக்கொடுத்தான் - நின்பாற்சென்றான் - எனப்படர்க்கைக்குரியகொடைசெலல் - தன்மைமுன்னிலைகளில்வந்தன - பிறவுங்காண்க - இனிஆசிரியர்தொல்காப்பியனார். (சூ) செலவினும்வரவினுந்தரவினுங்கொடையினு - நிலைபெறத்தோன்றுமந்நாற்சொல்லுந் - தன்மைமுன்னிலைபடர்க்கையென்னு - மம்மூவிடத்துமுரியவென்ப - எம், அவற்றுட் - டருசொல்வருசொலாயிரு கிளவியுந் - தன்மைமுன்னிலையாயீரிடத்த - எம் - ஏனையிரண்டும்படர்க்கையிடத்த - எம் - கூறுதல்காண்க, படர்க்கைசாரும் - எஞ்சியஏற்கும் - எனவிருமுடிபாகமுடித்துக்கொள்க. (கய)

இறப்பெதிர்வுநிகழ்வெனக்காலமூன்றே. ✻

இது, மேல் - திணையேபாலிடம்பொழுதுவினாவிறைமரபாமேழுமெனநிறுத்தவற்றுள் - முன்னின்றமூன்றின்வழாநிலையும் - வழுவமைதியுங்கூறினார் இனிக்காலவழாநிலையும்வழுவமைதியும் உணர்த்தத்தொடங்கினாராதலாற்காலம்இவ்வளவைத்தென்கின்றது. (இ-ள்,) முற்கூறியகாலம் இறந்தகாலமும் எதிர்காலமும்நிகழ்கா

முமெனமூன்றுவகைப்படும், எ-று.

மற்றோரிலக்கணங்கூறப்புக்கவிடத்துவிளங்கிக்கிடந்தகாலவிகற்பங்களை யிங்கேதொகுத்துச்சொன்னதினாலே இது-முடிந்தது முடித்தலென்னுமுத்தி,

யாதொருபொருளும்- தோன்றுமளவிலே தோன்றி - வளருமளவிலேவளர்ந்து- முதிருமளவிலேமுதிர்ந்து - அழியுமளவிலேயழியுமல்லது உயிர்கள்வேண்டியவாறாகாமையால் அவ்வுயிர்களையந்த அளவினாலே யவ்வாறுசெய்வது-காலமெனவும், அக்காலத்தால் இயலும்பொருள்களின்தொழில் - இறந்ததும்-எதிர்வதும்- நிகழ்வதும் - ஆதலால் அப்படிச்செய்யுங்காலமும் மூன்றுபிரிவாமெனவும் உய்த்துணர்தலால்- இவ்வாறுணராமலேகாலமின்றெனவும்- நிகழ்காலமொன்றேயெனவும், இறந்தகாலமெதிர்காலமிரண்டேயெனவுங்கூறுவாரை விலக்கிக்காலமூன்றேயென்றார் இதனையின்னும் விரித்துச்சொல்ல இடமின்றி விரிவஞ்சிவிடப்பட்டது - நிகழ்காலம்போலவெளிப்படைப்பொருளன்றி இறந்தகாலமெதிர்காலமிரண்டும் - மறைபொருளாய்நிற்றலால் - இறப்புநிகழ்வெதிர்வென்னுமுறைபிறழநிகழ்காலத்தையிறுதியிலேவைத்தார். (௧௧)

முக்காலத்தினுமொத்தியல்பொருளைச், செப்புவர்நிகழுங்காலத்தானே, *

இது, காலவழுவமைதியுணர்த்திற்று. (இ-ள்,) முக்- ளை - தந்தொழிலிடையறுமல்)மூன்றுகாலத்தினும்ஒருதன்மையையுடையனவாய்இயலுகின்றபொருள்களை, (இயலுதல்- நடத்தல்,)செப்- தான் - நிகழ்காலத்திற்குரித்தாய்நின்றும் ஒழிந்தகாலங்களையுமுள்ளடக்கிநிற்குஞ்செய்யுமென்னும்வாய்பாட்டுச்சொல்லாற் கூறுவர் புலவர் எ-று.

நிகழுங்காலச்சொல்லை- நிகழுங்காலமென்றது-ஆகுபெயர். [வ-று,] மலைநிற்கும்- தீச்சுடும்- ஞாயிறியங்கும்-திங்களியங்கும்- வெங்கதிர்க்கனலியொடுமதிவலந்திரிதருந்தண்கடல்வரைப்பின்-எனவரும்- தீச்சுடுமென்றால்- பண்டும்இன்றும்- மேலுஞ்சுடுமென்பதை ஒப்பவிளக்கிநிற்றல்காண்க. (வெங்கதிர்க்கனலி - சூரியன்.)

இனிநிகழுங்காலச்சொல்லாலென்றது - நிகழுங்காலத்தானென்றதினாலே- ஒழிந்தநிகழ்காலச்சொல்லால்வருவனவுமுளவெனக்கொள்க - அவைவருமாறு- தெய்வமிருக்கின்றது - மலைநிற்கிறது - நிலங்கிடக்கிறது அவனியைத்தாங்கியரசிருக்கின்றார்- எனவரும் - பிறவுங்காண்க. (சூ) முந்நிலைக்காலமுந்தோன்றுமியற்கை - யெம்முறைச்சொல்லுநிகழுங்காலத்து - மெய்ந்நிலைப்பொதுச்சொற்கிளத்தல்வேண்டும் என - ஆசிரியர்தொல்காப்பியனாருங்கூறுதல்காண்க.

விரைவினும்மிகவினுந்தெளிவினுமியல்பினும், பிறழவும்பெறூஉ முக்காலமுமேற்புழி. *

இதுவுமது, (இ-ள்,) விரை - பினும் - விரைவுமிகுதிதெளிவென்னும் இம்மூன்றுகாரணத்தாலும் - காரணமின்றிச்சுபாவத்

திறனும்,பிறழ-புழி- மூன்றுகாலங்களுமொன்றமற்றொன்றுக்கமை திவரவும்பெறும் ஏற்குமிடத்தென்றவாறு.

காரணமின்றி என்று சொல்ல வந்தவர் இயல்பினுமென்றார்.

[வ- று,] சோறுவேவாநிற்க அதனையுண்டுபோதற்கு இருந்தஒருவனை ஒருவன்இன்னும் உண்டிலையோ- எனின் - இருவரும் போகவேண்டுங்குறையுடைமையால் - உண்டேனுண்டேன்என்பான்-உண்ணாநின்றானையுமவ்வாறுவினவினபோது-உண்டேனுண்டேனென்பானாதலால் இவைவிரைவினாலேஎதிர்காலமும்நிகழ்காலமும் இறந்தகாலமாயின,அவன் அக்காட்டிற்புகிற்கூறைபறிகொடுத்தான்-களவுசெய்யிற்கையறுப்புண்டான்-என்பனமிகுதிபற்றிஎதிர்காலமிறந்தகாலமாயிற்று- (கூறை-சீலை,) கூறைபறிகொடுத்தலும் கையறுப்புணலும்ஒருவேளைதவறினுந்தவறுமாதலால் இதுமிகுதி பற்றியகுறியாயிற்று,அறஞ்செய்யிற் சுவர்க்கம்புக்கான் -எறும்பு முட்டைகொண்டுதிட்டையேறின்மழைபெய்தது- என்பனதெளிவுபற்றி எதிர்காலமிறந்தகாலமாயிற்று,உரையளவையானுங்காட்சியளவையானும் இவற்றிற்கு இவைகாரணமாகத்தெளிந்ததினாலே தெளிவாயிற்று, உரையளவை-ஆகமப்பிரமாணம், காட்சியளவை-பிரத்தியட்சப்பிரமாணம், யாம்பண்டுவிளையாடுவது இச்சோலை-- பண்டுவிளையாடுகின்றது இச்சோலை - என்பனகாரணமின்றிஇயல்பினால்இறந்தகாலம் எதிர்காலமும் நிகழ்காலமுமாயிற்று,பிறவுமன்ன.

இனிமிகுதியென்பதற்கு ஆசிரியர்தொல்காப்பியனார் - இருவினைபலவற்றுள்ளும்மிக்கவினைகளெனவும், அவை - தவஞ்செய்தல் - தாயைக்கொல்லுதலெனவும், அவற்றின்கண் - வினைவைத்து ஒருவனைச்சுட்டாது பொதுப்படக் கூறுங்கால் - இறந்தகாலமும்எதிர்காலமும் நிகழ்காலத்தொடுமயங்குமெனவும், அவற்றிற்கு உதாரணம் - தவஞ்செய்தான் - செய்வான் - சுவர்க்கம்புகாநிற்பன், தாயைக்கொன்றான்- கொல்வான்- நிரையம்புகாநிற்பன், எனவும் - (நிரையம்- நரகம்,) இயல்பென்பதற்குச்- சுபாவவழக்குநெறியெனவும், அதனுள்வினைவைத்துக்கூறுங்கால்- எதிர்வு - இறப்பொடும் நிகழ்வொடும்மயங்குமெனவும்- அதற்குதாரணம்- இக்காட்டிற்புகிற்கூறைகோட்பட்டான் - படுகின்றான் - எனவும்பொருள்விளங்கக்கூறினார் - அவற்றையெல்லாம். (கூ) வாராக்காலத்துநிகழுங்காலத்து - மோராங்குவரூஉம் வினைச்சொற்கிளவி - யிறந்தகாலத்துக்குறிப்பொடுகிளத்தல் - விரைந்தபொருளவென்மனார்புலவர் - எம்- மிக்கதன்மருங்கின்வினைச்சொற்சுட்டி - யப்பண்புகுறித்தவினைமுதற்கிளவி - செய்வதில்வழிநிகழுங்காலத்து- மெய்பெறத்தோன்றும்பொருட்டாகும்மே - எம்- வாராக்காலத்துவினைச்சொற்கிளவி - யிறப்பினு நிகழ்வினுஞ்சிறப்பத்தோன்று-மியற்கையுந் தெளிவுங்கிளக்குங்காலை - எம் - இறப்பேயெதிர்வேயாயிருகாலமுஞ் சிறப்பத்தோன்றுமயங்குமொழிக்கிளவி- எம்- வினைக்காலமுமயங்குதல்வரையார்- எனவுமவரும்- இச்சூத்திரங்களாற்காண்க. (௩௯)

அறிவறியாமையை யுறழ்கொள்கொடை, யேவறரும்வினவா றுமிழுக்கார். ✻

இது, நிறுத்தமுறையே வினவின்பெயரும் முறையுந்தொகையும்உணர்த்தியமுகத்தால்அதன்வழா நிலைகூறுகின்றது.(இ-ள்.) அறி-வல்- அறிவும்அறியாமையும்- சந்தேகப்படுதலும்-கொள்ளுதலும்- கொடுத்தலும்- ஏவுதலும், தரும்வினவாறும்- ஆகிய அறுவகைப்பொருளையுந்தரும் அறுவகைவினாக்களையும், இழுக்கார் - வழுவாதுகூறுவர்புலவர், எ-று.

[வ-று,] ஆசிரியன்மாணாக்கனைநோக்கி - இச்சூத்திரத்திற்குப்பொருள்யாது- என்பது-அறிவினா, மாணாக்கன் ஆசிரியனைநோக்கி- அவ்வாறுகூறுவது- அறியாவினா, குற்றியோமகனோ- என்பது-ஐயவினா, பொன்னுளதோமணியுளதோ- என்பது - கொளல்வினா, சாத்தனுக்கு ஆடை யில்லையோ - என்பது - கொடுத்தற்பொருட்டுவினவுதலால் - கொடைவினா, சாத்தாஉண்டாயோ - என்பது- அவனையேவுதற்பொருட்டாதலால் - ஏவல்வினா, இவற்றுள்-அறிவுஅறியாமை - ஐயம்என்னும்மூன்றேயொழியவினாவைத்தருவதுவேறொன்றில்லையாதலால் அம்மூன்றையுமுற்கூறிப்-பின்னையமூன்றும் அவற்றுள் அடங்குமாயினும்பொருள்விசேடம்பற்றிவிளங்குதற் பொருட்டுப்பிற்கூறி அதுவுந்தொன்று தொட்டநெறிதானென்றுசொல்லவந்தவர்- இழுக்காரென்றுபுலவர்மேல்வைத்துங்கூறினார்- (சூ) அறியான்வினவலறிவொப்புக் காண்டலையமறுத்தலவனறிவுதான் கோடல்-மெய்யவற்குக்காட்டலோடைவகைவினாவே- எனப்பிறர்கூறியஐவகையுள்-அறிவொப்புக்காண்டலும்அவனறிவுதான்கோடலும்மெய்யவற்குக்காட்டலும்அறிவினாவில்அடங்கின ஆதலால்அவரும்-அறிவு- அறியாமை- ஐயமென்னும் மூவகைவினாவையு மேயுடன்பட்டுக்கூறினாரெனக்காண்க. இதன்முடிவுவிளங்கிற்று. (௬௪)

சுட்டுமறைநேரேவல்வினாத, லுற்றதுரைத்தலுறுவதுகூற,லின மொழியெனுமெண்ணிறையுளிறுதி, நிலவியவைந்தும்பொருண்மையினேர்ப. ✻

இது, நிறுத்தமுறையே விடையின்பெயரும் முறையுந்தொகையுமுணர்த்தியமுகத்தால் அதன்வழா நிலையும் வழுவமைதியுங்கூறுகின்றது- (முகம்- இடம்.) (இ-ள்.) சுட்டு-யுள்- சுட்டிக்கூறுதலும்-மறுத்துக் கூறுதலும்- உடன்பட்டுக் கூறுதலும்- ஏவுதலும்-வினவிக்கூறுதலும்- தனக்குஅப்போதிருந்ததைச்சொல்லுதலும்,

மேல்வருவதைச்சொல்லுதலும்- வினவினதற்கு இனமானதைக்
கூறுதலுமாகியஎட்டுவகைவிடையுள், இறு-ப-கடையிலேநின்ற-ன்
வல்முதலியவைந்தும்- விடைப்பொருளைக் குறிப்பினாலே தந்து
நிற்றலால்விடையெனத்தழுவிக்கொள்வர்புலவர், எ-று.

எனவே- விடையாவது - வெளிப்படைவிடையும் - குறிப்புவி
டையுமென இருவகைப்படுமென்பதாயிற்று- அவற்றுள்- சுட்டு-
மறை-நேர்-என்னுமூன்றும்வெளிப்படைவிடை - மற்றவைந்துங்
குறிப்புவிடை- வெளிப்படைவிடையைச்-செவ்வனிறையென்றும்-
குறிப்புவிடையை-இறைபயப்பதென்றுங்கூறுவர்- (இறை-விடை,
செவ்வன்- நேர்,) [வ-று,] கருவூர்க்குவழியாதெனவினவின்- இ
துவென்றும் - கவர்படுபொருண்மொழி யென்பதற்குப்பொருள்
யாதெனின் - இருபொருளுக்கியைந்துநிற்குமொழியென்றுங்
குறித்துக்கூறுந்தொடக்கத்தனவெல்லாஞ்சுட்டு விடை, சாத்தா இ
துசெய்வாயோவெனின் -செய்யேனென்பது - மறைவிடையும்-
செய்வேனென்பது-உடன்படல்விடையும்- நீசெய்என்பது- ஏவல்
விடையும் - செய்வேனோஎன்பது - வினாதல்விடையும் - உடம்பு
நொந்தது-நோவாநின்றது-என்பன - உற்றதுரைத்தல்விடையும்,
உடம்புநோம்-என்பது-உறுவதுகூறல்விடையும், மற்றையது செ
ய்வேன் - என்பது - இனமொழிவிடையும் எனமுறையேவந்தவா
றுகாண்க- குறிப்புவிடையுள்வினவெதிர்வினவலொன்றும்உடன்
படற்பொருளையும்-ஒழிந்தநான்கும் - மறுத்தற்பொருளையுங்குறி
ப்பினாலேதந்தவாறுகாண்க.

இனிக்குறிப்புவிடையை நிலவியவெனச் சிறப்பித்ததினாலே நிலவாதன
வும் அவற்றுட்சிலவுளவெனப் பொருளுரைத்துக்கொள்க - அவை - நேர்தலும்
சொற்றொகுத்திறுத்தலும்- சொல்லாதிறுத்தலுமாம் அவைவருமாறு-சாத்தா
உண்பாயோ எனின்- பசித்தேன்பொழுதாயிற்று- எம்- பயறுளவோஎனின்- உ
ழுந்தல்லதில்லை- உழுந்துந்துவரையுமல்லதில்லை- எம்- சாத்தா உண்பாயோ-எ
னின்- பேசாதிருத்தல்- எம்- முறையேகாண்க - பேசாதிருத்தலதற்குடன் பட்
டு உண்பேனெனவிடைகொடுத்ததாயிற்று, ஆதலால்-சொல்லாதிறுத்தலும்ஓர்
விடையாயிற்று- (சொல்லாமல்விடைகொடுத்தல் - சொல்லாதிறுத்தல், இறுத்
தல்- விடை கொடுத்தல்,) வெளிப்படையுள்வந்தநேர்விடை - நேராகஒருசொ
ல்லாற்கூறிய விடை- (நேர்- செவ்வை,) எம்- குறிப்பினுட்கூறியநேர்விடை- அ
வ்வாறன்றிவேறுசிலமொழிகளாலே விடைப்பொருள்தோன்றவுடன்பட்டுக் கூ
றுதல்- (இங்கே- நேர்தல் - உடன்படுதல்,) எனவுங்காண்க. இன்னும் இக்குறிப்
புவிடையுள் நீயிது செய்வாயோஎனின் - செய்வேனோ - எனஎதிர்மறையோகா
ரமாகியும்- யானோசெய்வேன் எனச்சிறப்பேகாரமாகியும்நின்றுசெய்யேனெ
ன்றவிடைப்பொருள்தருதலுங், கங்கையாடிவந்தேன் ஒருகூறைகொடுமின்-

எனவினாவில்வழிவிடைவருதலுங்கொள்க. இவற்றுள் - வெளிப்படைவிடைவழா நிலையும் - குறிப்புவிடைவழுவமைதியுமாம், (ரூ) செப்பும்வினாவும்வழாஅலோம்பல் - எம், வினாவுஞ்செப்பே வினாவெதிர்வரினே - எம், செப்பேவழீஇயினும் வரைநிலையின்றே - யப்பொருள்புணர்ந்தகிளவியான - எம், ஆசிரியர்தொல்காப்பியனார்கூறுதலுங்காண்க. செப்பு - இறை - விடை - உத்தரம் - மறுமொழி - எதிர்மொழி - என்பன ஒருபொருள், வினா - கடா - எம் - வினவுதல் - வினவல் - வினாதல் - கடாவுதல் - கடாவல் - எம் - வருவன - ஒருபொருள், வினவியபொருளை அறிவுறுத்துஞ்சொல் - விடை, அறியலுறவுவெளிப்படுத்துஞ்சொல் - வினா, இச்சூத்திர முடிபுவிளங்கிநின்றது. (௩௫)

வினாவினுஞ்செப்பினும்விரவாசினைமுதல். *

இது, சினைமுதல்களைப்பற்றிவினாவிடைநிகழும் வழாநிலைபுணர்த்திற்று. (இ-ள்,) வினா - னும் - வினாவுதற்கண்ணும்விடைகொடுத்தற்கண்ணும், விரவ - ல் - சினையுமுதலுமொன்றெனக்கருதிச்,) சினையொடுமுதலும்முதலொடுசினையுமாகமயங்கக்கூறலாகா, எ - று.

[வ - று,] சாத்திகண்பெரியவோ கொற்றிகண்பெரியவோ - சாத்தன்நல்லனோகொற்றன்நல்லனோஎனவினாவுதலும் - அவ்வாறு - வினாவினார்க்கு - சாத்திகண்பெரிய - கொற்றிகண்பெரிய - சாத்தன்நல்லன்கொற்றன்நல்லன் - எனவிடைகொடுத்தலும்வழாநிலையாம், இவ்வாறன்றிக்கண்ணல்லவோ அவள்நல்லளோ - எனவினாவுதலும் - கண்நல்ல அவள்நல்லள் எனச்செப்புதலும்வழுவாமென்பதாயிற்று - இனிக்குயிலோகிளவி - மயிலோசாயல் எனவினாவுதல்வழுவாமேனின் - அன்றென்க - என்னை - குயிலினிசையையும் மயிலின்சாயலையுங்குறித்துக்கூறுதலாலும் - இசை - சாயல் - என்பன - இசையெச்சமாகக்குறைந்துநிற்றலாலும் - இத்தொடக்கத்தனவெல்லாம்வழுவாகாவென்க.

இனி ஒன்றின்முடித்தலென்பதனால் - ஒப்புமைகருதாதுமாறுபடக்கூறும்பொருளினும் ஒப்புமைப்பொருளினும் வினாவிடைகள் நிகழுங்கால்முதல்சினைகள்விரவாமல் அவ்வப்பொருள்களுக்கு அவ்வப்பொருள் வரவேண்டுமெனவுங்கொள்க. அவைவருமாறு, இவள்கண்ணின் இவள்கண்பெரியவோ - எம்மரசனில்நும்மரசன்நீதிசெய்வானோ - வினா - இவள்கண்ணின் இவள்கண்பெரிய - எம்மரசனில்நும்மரசன்நீதிசெய்வான் - விடை - இவள்கண்களைக்காட்டிலும்எனவருதலால்மாறுபடக்கூறும்பொருளாயிற்று, இவள்கண்ணுக்குமோஇவள்கண் - எம்மரசனையொப்பானோ நும்மரசன் - வினா - இவள்கண்ணொக்கும் இவள்கண் எம்மரசனையொப்பான் நும்மரசன் - விடை - இவைஒப்புமைப்பொருள், எனவரும்பிறவுமன்ன, தன்னின்முடித்தலென்பதினால் - என்னுங்காலும் பவள்மும்முத்தும்பொன்னும் எனஇனமொத்தனவே எண்ணுக. என்வும் - முத்துங்குருக்கத்தியுங்காணங்கோழியும்பொன்னுமென எண்ணலாகாதெனவுங்கொள்க. (ரூ) செப்பினும்வினாவினுஞ்சினைமுதற்கிளவிக் - கப்பொருளாகுமுறழ்துணைப்பொருளே - என ஆசிரியர்தொல்காப்பியனார்கூறுதலுங்காண்க. உறழ்பொருள் - உவமைகருதா

தமாறுபடக்கூறும்பொருள், துணைப்பொருள் - ஒப்புமைப்பொருள், இதன்மு
டிவும் விளங்கிற்று. (௩௬)

எப்பொருளெச்சொலினெவ்வாறுயர்ந்தோர், செப்பினரப்ப
டிச்செப்புதன்மரபே. *

இது, நிறுத்தமுறையேமரபாமாறுணர்த்திற்று. (இ-ள்,) எப்
பொரு- பினர் - எந்தப்பொருளை யெந்தச்சொல்லால் எந்தநெ
றியிலேயறிவுடையோர்சொன்னார்களோ, அப் - மரபு - அந்த
ப்பொருளை அந்தச்சொல்லால் அந்தநெறியாற் சொல்லுதல் மர
பாம், எ - று.

மரபு- பழையமுறைமை, [வ-று,] யானைக்கன்று - யானை
க்குட்டி- குதிரைக்குட்டி - பசுவின்கன்று - மான்கன்று - யானை
மேய்ப்பான்பாகன்- ஆடுமேய்ப்பான்இடையன் - யானையிலத்தி
எருமைச்சாணி - என்றாற்போல்வன எனக்காண்க. இனியிவ்வாற
ன்றி- பசுவின்குட்டி - குதிரைக்கன்று - யானைச்சாணி - எருமை
யிலத்தி - எனக்கூறுதல்வழுவாமாதலால் வழக்கிடத்துஞ் செய்யு
ளிடத்தும் வழங்கிவரும்மரபுதேர்ந்துகொள்க - இதன்முடிபும்
விளங்கிற்று. (௩௭)

வேறுவினைப்பல் பொருடழுவியபொதுச்சொலும், வேறவற்
றெண்ணுமோர்பொதுவினைவேண்டும். *

இது, மரபுவழாநிலைபுணர்த்திற்று. (இ-ள்,) வேறு - லும்-
வெவ்வேறுவினைகளுக்குரிய பலபொருள்களையுஞ்சேரத்தழுவிநி
ற்குமோர்பொதுச்சொல்லும்,வேற- டும்-வேறுவினைக்குரியபொ
ருள்களை யெண்ணிநிற்கும்பலசொல்லும் ஒன்றிற்குரியசிறப்புவி
னையைவேண்டாமல்எல்லாவற்றிற்குமுரியபொதுவினையைவேண்
டிநிற்கும், எ - று.

[வ-று,] அடிசில்- என்பது- உண்பன - தின்பன- நக்குவ
ன- குடிப்பன வற்றிற்கெல்லாம்பொதுவாதலால் அடிசில்-அயி
ன்றார்- மிசைந்தார்-என்க- அணி-என்பது-கவிப்பன-கட்டுவன-
இடுவன தொடுவனவற்றிற்கெல்லாம் பொதுவாதலால் - அதனை
அணிந்தார்- தாங்கினார்-என்க- இயம்-என்பது-கொட்டுவன- ஊது
துவன வற்றிற்கெல்லாம்பொதுவாதலால்அதனைஇயம்பினார்-படு
த்தார்-முழக்கினார்- என்க-(இயம்- வாத்தியம்,) படை - என்பது-
எய்வன - எறிவன - வெட்டுவன - குத்துவன வற்றிற்கெல்லாம்
பொதுவாதலால் அதனைவழங்கினார்- தொட்டார்-என்க - (படை-
ஆயுதம்,). இனி-எண்ணுங்காலும் - சிலநாட்சோறும்- சிலநாள்மா

வும்- சிலநாட்பாலும்- சிலநாள்நீரும் - சிலநாட்சருகும்- அயின்றார்- பிசைந்தார்-எனவும், குழையும் அரைநாணும் அணிந்தார்- பறையுங்குழலுமியம்பினார்- வாளும்வேலும்வழங்கினார்- எனவும் பொதுவினைகொடுத்துமுடித்துக்கொள்க - பிறவுமன்ன.

அடிசில்தின்றார்- பருகினார்- எம்- அணிகவித்தார்- பூண்டார்- எம்- இயம்-கொட்டினார்- ஊதினார்- எம்- படைஎறிந்தார் - எய்தார்- எம் - யாழுங்குழலும் ஊதினார் - எம் - ஒருசார்க்குரிய சிறப்புவினையாற் கூறின் மரபுவழுவாமாதலாற் பொதுவினையாற் கூறுதலவழாநிலையாயிற்றெனக்காண்க. அங்ஙனமாயின்- ஊண்சுவைகறிசோறுண்டுவருந்தி - என்றவிடத்து- உண்டென்பது- சிறப்புவினையாகலின் வழுவன்றோவெனின் - உண்டல்-என்பது உண்பனதின்பனவற்றைப்பிரித்துக்கூறாவழிச் சிறப்புவினையாம் - பரிதிரஉண்ணப்படும் பொருளெல்லாம் உணவெனப்படுமாதலால் பொதுவினையுமாமாதலின் அது வழுவாகாதென்க- (ஊண்சுவை - ஊனைப்புளியிட்டாக்கியகறி,) இன்னும் - (சூ) உண்டற்குரியவல்லாப்பொருளையு- முண்டனபோலக்கூறலுமரபே - என்னும்பொருளியற் சூத்திரத்தாலும்- அவ்வாறுகூறுதல் மரபென்பதுணர்க- அறுசுவையடிசிலணியிழை தருதலி - லுறுவயிறாமேவாம்பாதுதின்று - என்பது - இழிவுபற்றிக்கூறுதலால்-இவ்வாறுவருவனவெலலாம் மரபுவழுவமைதியென்க. (சூ) வேறுவினைப்பொதுச் சொல்லொருவினைகிளவார் - எண்ணுங்காலுமதுவதன்மரபே - என ஆசிரியர் தொல்காப்பியனாருங்கூறுதல்காண்க. சொல்லும்- எண்ணும்- எனவெண்ணிவேண்டுமெனப்பயனிலைகொடுத்து முடித்துக்கொள்க. (கூஅ)

வினைசார் பினமிட மேவிவிளங்காப், பலபொருளொருசொற் பணிப்பர்சிறப்பெடுத்தே. *

இதுவுமது- (இ-ள்,) வினை- மேவி - குறித்தபொருளைவிளக்கும்வினையும்- சார்பும்- இனமும்- இடமும்- முதலியசொற்களைப்பல பொருளொரு சொல்லானது பொருந்தி, விளங்காப்பல பொருளொருசொல்- (பொருள் விளங்கிநிற்குமாயின் அதனை அடைகொடாமற்சொல்லி) அவ்வினைமுதலிய வற்றைப்பொருந்தியும்பொருள்விளங்காதாயின் அதனை, சிறப்பெடுத்துப்பணிப்பர்- சிறப்படைகொடுத்துக்கூறுவர்புலவர், எ-று.

(பணித்தல்- சொல்லல்,) (அடை - விசேடணம்,) இடமுதலியவென்றது - ஒழிந்தபெயர்களையுந்தழுவிக்கொளற்கெனக்காண்க. [வ-று,] மா- என்பதுமாமரத்துக்கும்-வண்டினுக்கும் - சிலமிருகங்களுக்கும் - திருமகளுக்கும் - பொதுவாகிய பலபொருளொருசொல்லாதலால்இவற்றுள்- மாப்பூத்தது- காய்த்ததுஎன்ற மாத்திரமே - மரமென்பதுவினையால்விளங்கிற்று, மாவீழ்மலர் என்றமாத்திரமே - வண்டென்பது - மலரென்றசார் பால்விளங்கிற்று,காலாள்-கரி-மா-இரதம்-நாலங்கம் - என்றமாத்திரமே- குதிரை என்பதுஇனத்தால்விளங்கிற்று, மாமறுத்தமலர்மார்பன்-

ன்றமாத்திரமே - திருமகள்என்பது - (திருமால்) மார்பென்னும் இடத்தால்விளங்கிற்று - என்னெனின் - மார்பிடத்தலேயணிந்த வனென்பது மரபாதலாலெனக, முதலியவென்றறிஞல்- இம்மா- வயிரம்- வெளிறு- இம்மா- சண்டி- என்றமாத்திரமே- மரமென் பதுங்குதிரையென்பதும் - பெயரால்விளங்கிற்று - பிறவுமன்ன, இவை அடைகொடாமற் கூறப்பட்டன - இனிகன்றுக்குநீருட்டு- மாவேறினன் எனின்- குறித்தபொருள்விளங்காமையால- ஆன்க ன்று- பூங்கன்று- எம்-பாய்மாவேறினன்- மரமாவேறினன்- பா ய்மாயாது- மரமாயாது - எனவுஞ்சிறப்படைகொடுத்துக்கூறப் பொருள்விளங்கியவாறுகாண்க.

இவற்றைவினைவேறுபடாப்பலபொருளொருசொல்லென்றும்- வினைசா ர்பினமிடமேவிப்பொருள் விளங்கியதை வினைவேறுபடூஉம்பலபொருளொரு சொல்லென்றும்- வினைவேறுபடூஉம்பலபொருளொருசொல்வினைவேறுபடாது பொதுமையினிற்பினும் ஓரோரிடத்துக்காலமிடம்பற்றிக் குறிப்பாற் பொருளு ணர்த்திநிற்குமென்றும்பொருள்விளங்க-ஆசிரியர்தொல்காப்பியனார்.(௫) அவற் றுள்-வினைவேறுபடூஉம்பலபொருளொருசொல்- வேறுபடுவினையினுமினத்தினு ஞ்சார்பினுந்-தேறத்தோன்றும்பொருடெரிநிலையே- எம், வினைவேறுபடாஅப் பலபொருளொருசொல்- நினையுங்காலைக்கிளந்தாங்கியலும் - எம்- ஒன்றுவினை மருங்கினொன்றித்தோன்றும்- எனவுஞ்சூத்திரஞ்செய்தவாறுங்காண்க. (௫௧)

எழுத்தியறிரியாப் பொருடிரிபுணர்மொழி, யிசைத்திரிபாற் றெளிவெய்துமென்ப. *

இதுவுமது, (இ-ள்,)எழுத்-யா-எழுத்தினதுதன்மைவேறுப டாது, பொரு- ழி- பொருள்வேறுபட்டுச்சொல்லும்பொருளுமைஐ யப்படநிற்குந்தொடர்மொழிகள்,இசைத்-ப-(அவ்வாறுகுறித்துக் கூறுஞ்சொற்களின் இறுதியும்முதலுந்தோன்ற) இசையறுத்துக் கூறும் வேறுபாட்டினலே தெளியப்படுமென்று சொல்லுவர்புல வர், எ-று.

எனவேஅவ்வாறு இசையறுத்துக்கூறுதல்மரபென்பதாயிற்று, இசை-என்பது இங்கே ஒலியையுணர்த்தி நின்றது- [வ-று,] செம் பொன்பதின்றொடி-நாகன்றேவன்போத்து- குன்றேறுமா - கு ரும்பரம்பு- செம்பருத்தி- தாமரக்கணியார் - இனியாரினியார்- ஐயமிட்டார்கெட்டார்- எனவரும்- இவற்றை- செம்பொன், பதி ன்றொடி என இசையறுத்துக்கூறின்- செம்பொன்பத்துப்பலம்- எ ம்-செம்-பொன்பதின்றொடி - என இசையறுத்துக்கூறின் - செம் பு ஒன்பதுபலம் - எனவும் - நாகன்-றேவன் - போத்து - என இசை - றின் - நாகனுந்தேவனும்போத்தும் - எனவும் - நாக

ன்றே-வன்போத்து-என-நின்-இளமையதன்றுமுதிர்ந்த எருமைக்கடா - எனவும் பொருள்விளங்கிக்கிடந்தமைகாண்க. ஒழிந்தனவற்றையும் இவ்வாறு இசையறுத்துக் கூறிப்பொருள்காண்க - பிறவுமன்ன. (௪௰)

ஒருபொருண்மேற்பல பெயர்வரினிறுதி, யொருவினைகொடுப்பதனியுமொரோவழி. *

இது, மரபுவழாநிலையும் வழுவமைதியுமுணர்த்துகின்றது. (இ-ள்,) ஒரு - ன் - ஒருபொருளின்மேற்பலபெயர்கள்வருமாயின், இறு - ப - (பொருளொன்றேயென்பதுதோன்ற) அதன் இறுதியிலே ஒருவினைகொடுத்துமுடிப்பர், தனியுமொரோவழி-(ஒருபொருளேயென்பதுதெளிய நின்றவிடத்துத்)தனித்தனிப்பெயர்தோறுங்கொடுத்தும்முடிப்பர்புலவர், எ-று.

ஒருபொருளுக்கு ஒருமுடிபென்றுசொல்லவந்தவர் ஒருவினைகொடுப்பவென்றார் அன்றிப்பெயர்கொடுத்துமுடித்தலைவிலக்கினரல்லர் ஆதலாற் பெயர்கொடுத்தும் முடிப்பவெனக்கொள்க.

[வ-று,] ஆசிரியன்- பேரூர்கிழான் - இளங்கண்ணன் சாத்தன் வந்தான்- எம் - பாண்டியன் - பல்யாகசாலை- முதுகுடுமி-பெருவழுதிஇவன்- எம் - இவையிறுதியில் ஒருவினையும் பெயருங்கொடுக்கப்பட்டன - இனிப்பெயர்தோறுங்கொடுக்குமாறு- ஆசிரியன்வருக- பேரூர்கிழான்வருக - இளங்கண்ணன்வருக- சாத்தன்வருக- எம்- மின்றேய்வரைகொன்றவேலோன்புகுதுக - வின்றென்கமழ்தாரியக்கன்புகுதுக- வென்றோன்புகுதுக - விறலோன்புகுதுக - வென்றேநகரமெதிர்கொண்டதுவே - எனவருமிச்செய்யுளுள்- வேலோன்-இயக்கன்-வென்றோன்- விறலோன்-என்பன முருகனென்னுமோர்பொருளே- என்பதுதெளிய நின்றவிடத்தே- பெயர்தோறும்புகுதுக என ஒருவினைகொடுத்தவாறு, இனி ஆசிரியன்வருக- பேரூர்கிழான்செல்க - இளங்கண்ணனுண்க- சாத்தனுறங்குக- எனவேறுவினைகொடுப்பிற் பொருள்வேறுபடுமாதலால்முதல்வந்தவினையே பெயர்தோறும் வரவேண்டுமென்றுசொல்லவந்தவர்-தனியுமொரோவழி-(அவ்வினைகொடுப்பவெனச்சுட்டி) முடியாதுவிட்டனர்- இவ்வாறுபெயர்தோறும் ஒருவினைவருவனவெல்லாங்காதல் முதலியபற்றிவருதலா லொருவினைவந்ததனையெயொக்குமென்க. (௫) ஒருபொருள்குறித்த வேறுபெயர்க்கிளவி- தொழில்வேறுகிளப்பி னொன்றிடனிலவே. என - ஆ - தொ - க, இதன்முடிபுவிளங்கிற்று. (௪௧)

திணைநிலஞ்சாதிகுடியேயுடைமை, குணந்தொழில்கல்விசிறப் பாம்பெயரோ, டியற்பெயரேற்றிடிற்பின்வரல்சிறப்பே. *

இதுவுமது. (இ-ள், திணை- ரோடு - திணைமுதற்கல்வியீறாகச்சொல்லியவைமுதலியசிறப்புப்பெயருடனே, இயற் - ன் - இயற்பெயரையொருபொருளேற்குமாயின், பின்-பு- அவ்வியற்பெயர் பின்வருதல் சிறந்தமரபாம், எ-று.

பின்வரல்சிறப்பே என்றதனால் முன்வருமென்பதூஉம் அது சிறப்பின்றிவழுவமைதியாமென்பதூஉம் பெறப்பட்டன, (திணை-ஐவகைநிலம், நிலமென்பது-நாடுமுதலியன,) [வ - று,] குன்றவன் கொற்றன், திணை-அருவாளன் அழகன், நிலம்-பார்ப்பான்பராயனன், சாதி-ஊர்கிழானோணன், குடி- பொன்னன்பொறையன், உடைமை- கரியன்கம்பன்- குணம்- நடையன்நாகன், தொழில்- தெய்வப்புலவன்திருவள்ளுவன், கல்வி-என்முறையேதிணைமுதலியசிறப்புப்பெயரோடு இயற்பெயர் பின்வந்தமைகாண்க. முதலியவென்றது-தவம்-ஆள்வினை-உறுப்பு-முதலியவும்-பிறவுந்தழுவுதற்கு, அவைவருமாறு - முனிவன் அகத்தியன், படைத்தலைவன் சாத்தன், முடவன் முருகன், குருடன் கொற்றன், எனக்காண்க. பண்டிதன்- தச்சன்- கொல்லன் என்றாற்போல்வன - தொழிலுளடங்கும் - இனிக்கொற்றன்குன்றவன் - அழகன் அருவாளன் என்றாற்போல இயற்பெயர்முன்வருதல் சிறப்பின்றாயினுமிக்காலத்தார்மயங்கக்கூறிவழங்கலால். (கூ) கடிசொல்லில்லைக் காலத்துப்படினே- என்பதனாற்கொள்க - இயற்பெயர் - சுபாவப்பெயர், சிறப்புப்பெயர்-யாதாயினுமோர் காரணம்பற்றிக் கூறும்பெயர், (கூ)சிறப்பினாகிய பெயர்நிலைக்கிளவிக்கு -மியற்பெயர்க்கிளவி முற்படக்கிளவார்- என- ஆ- தொ- க, (சஉ)

படர்க்கைமுப்பெயரோடணையிற்சுட்டுப், பெயர்பின்வரும்வினையெனிற்பெயர்க்கெங்கு, மருவும்வழக்கிடை செய்யுட்கேற்புழி. *

இதுவுமது, (இ-ள்,) படர்க்- பெயர்--படர்க்கையிடத்தனவாகிய உயர்திணைப்பெயர்- அஃறிணைப்பெயர்- பொதுப்பெயர்- என்னுமூவகைப்பெயரோடுசுட்டுப்பெயர்வரின், பின்வரும்வினையெனின்- அச்சுட்டுப்பெயர் அம்மூவகைப்பெயர்க்கும்பின்வரும் அதுவினைமுடிபாயின், பெயர்க்கெங்குமருவும்- அதுபெயர்முடிபாயின்முன்னும் பின்னும்வரும், வழக்கிடை - இம்மரபு உலகவழக்கின்கண், செய்யுட்கேற்புழி - செய்யுளிடத்து இந்நிய

றியின்றிவேண்டியவாறேவரப்பெறும், எ-று.
(செய்யுள்- கவி, நியதி- நிச்சயம்,) ஏற்புழிக்கோடலால் இவற்
றின்பின்னிற்கத்தக்க அகரச்சுட்டேகொள்க [வ-று,] நம்பிவந்தா
ன் அவனுக்குச் சோறிடுக, நங்கைவந்தாள் அவளுக்குப் பூக்கொ
டுக்க- எ-ம்- எருதுவந்தது அதற்குப்புல்லிடுக- குதிரைவந்தது அ
தற்குமுதிரையிடுக- எ-ம். (முதிரை - கடலை-கொள்ளுமுதலியன,)
சாத்தன்வந்தான் அவனுக்குப்பலியிடுக - சாத்தன்வந்தது அதற்
குப்புல்லிடுக- எனவும்வினைநிகழுங்காற்சுட்டுப்பெயர் முறையே
மூவகைப் பெயர்க்கும்பின்வந்தது, வந்தான்நம்பி அனுக்குச்
சோறிடுக-எனவுமுறையேயொட்டுக- இவைமுற்றுப் பயனிலையாயி
னுஞ்சுட்டுப்பெயர்பின்வந்தமைகாண்க. நம்பியவன் அவன்நம்
பி-எ-ம்-குதிரையது-அதுகுதிரை -எ-ம்- சாத்தன்அவன் அவன்சா
த்தன்- சாத்தனது- அதுசாத்தன்- எ-ம்- பெயர்க்குப்- பின்னும்
முன்னும்வந்தது, ஒழிந்தபெயர்களோடுமிவ்வாறே ஒட்டுக - இ
வைவழக்கு- இனிச்செய்யுட்கு ஏற்றபடிவருமாறு- அவனணங்கு
நோய்செய்தானாயிழாய்வேலன் - விறன்மிகுதார்ச்சேந்தன்பேர்
வாழ்த்தி- எனவருமிதனுள்- சேந்தன்இயற்பெயரெனவுஞ்சுட்டுப்
பெயர்முன்வந்ததெனவுங்காண்க- செய்யுளிடத்துப்பின்வருதல்
வந்தவிடத்துக்காண்க. செய்யுளிடத்துமுன்வருதல்வழுவமைதி-
பின்வருதல்வழாநிலை - வழக்கிடத்துவினைநிகழ்வழிப்பின்வருதல்
வழாநிலை.

ஆயின்வழக்கிடத்துமுன்வருதல்வழுவமைதியாமோவெனின் - ஆகாவெ
ன்க- என்னெனின்- அவன்வந்தான்நம்பிக்குச்சோறிடுகஎன்றாயினும்-அவனுக்கு
ச்சோறிடுகநம்பிவந்தானென்றாயினும் சுட்டுப்பெயரைமுன்வைத்துக் கூறின்-
அதுஒருபொருண்மேலிருபெயர்வந்ததாகாதுநம்பிவேறு அவன்வேறாய்முடித
லின்வழுவேயாமென்க, இனிச்சாத்தன்கல்வியில்வல்லன் அதனால்தந்தையுவக்கு
ம்- சாத்திமனைத்தக்கமாண்புடையள் அதனால் - கொண்டானுவக்கும் - எ-ம்- சா
த்தன்வந்தான் அதுநம்மரசனுக்கு உவப்பாயிற்று- கிழவன்பிரிந்தான் அதனைக்
கிழத்தியுணர்ந்திலள் எனவும் இவைமுறையே சுட்டுமுதலாகியகாரணச்சொல்
லும்-காரணமின்றித்தொடர் மொழிப்பொருளைச்சுட்டிவருஞ்சுட்டுப்பெயரும்-
தன்னின் முடித்தலென்னுமுத்தியால் இச்சுட்டுப்பெயரிலக்கணத்தின் பாற்படு
மெனக்கொள்க - இவற்றுள்- அதனால் - என்றதுஆதலாலென்றாற்போலவோரி
டைச்சொல்- சுட்டுப்பெயராருபேற்றதன்று-இனிச்சாத்தன்வந்தானிவனுக்குச்
சோறிடுக - எனஇகரச்சுட்டுஞ்சிறுபான்மைவருமெனக்கொள்க . பிறவுமன்ன.
(சூ) இயற்பெயர்க்கிளவியுஞ் சுட்டுப்பெயர்க் கிளவியும், வினைக்கொருங்கியலுங்
காலந்தோன்றிற், சுட்டுப்பெயர்க்கிளவிமுற்படக்கிளவா - கியற்பெயர்வழியவெ
ன்மனார்புலவர்-எ-ம்-முற்படக்கிளத்தல்செய்யுளுளுரித்தே- எ-ம்- சுட்டுமுதலாகிய

காரணக்கிளவியுஞ்-சுட்டுப்பெயரியற்கையிற்செறியத்தோன்றும்-எம்-ஆ-தொ-க-சுட்டுப்பெயர் - பின்வரும் - எங்குமருவும் - எற்புழிவரும் - எனமுடித்துக் கொள்க. (௩௩)

அசைநிலைபொருணிலையிசைநிறைக்கொருசொல், லிரண்டுமூ ன்றுநான்கெல்லைமுறையடுக்கும். ✻

இதுவுமது,(இ-ள்,)அசை-கு-அசைநிலைக்கும்-விரைவு-வெகுளி-உவகை-அச்சம்-துன்பம்-முதலியபொருள்நிலைக்கும்-இசைநிரப்புதற்கும், ஒருசொல்-கும்- ஒருசொல்லானது இரண்டுமூன்று,நான்கு எல்லையளவும்முறையே அடுக்கிநிற்கும், எ-று.

முறையென்றதனால் - அசைநிலைக்கிரண்டும்பொருணிலைக்கு இரண்டொடுமூன்றும் இசைநிறைக்கு இரண்டு மூன்றொடு நான்குமென்பதாயிற்று - பொருள்நிலைக்கொளாது அசையாகவேநிற்றலின அசைநிலை, [வ-று,]அன்றேயன்றே- மற்றோமற்றோ- என்பன- அசைநிலை, உண்டேனுண்டேன்- வந்தேன்வந்தேன்- என்பன-விரைவு, எய்எய்- எறியெறி - என்பன - வெகுளி, வருகவருக-பொலிகபொலிக - என்பன- உவகை, பாம்புபாம்பு- தீதீ- என்பன-அச்சம், உய்யேனுய்யேன் - வாழேன்வாழேன் - என்பன- துன்பம், அவனவன்- என்பது துணிவு - வைதேன்வைதேன் -என்பதுஉடன்பாடு-போம்போம்-எது - ஒருதொழில்பலகானிகழ்ந்தது- இவைபொருணிலையிருமுறையடுக்கிநின்றன, எறிஎறிஎறி - தீத்தீத்தீ - வாழேன்வாழேன்வாழேன் - இவைபொருணிலைமும்முறையடுக்கிநின்றன- ஒழிந்தனவந்தவழிக்காண்க-ஏஏயம்பன்மொழிந்தனளாயே, நல்குமேநல்குமே நல்குமேநாமகள், பாடுகோ பாடுகோபாடுகோ, இவைஇசைநிறை- இரண்டெல்லைமுதல்நான்கெல்லைவரையடுக்கிநின்றன - பிறவுமன்ன.

ஒருசொல்லைப்பலகாற் கூறுதல்வழுவாயினும் இவ்விடங்களிலாகுமென் றல்வழுவமைதியும்- இவற்றிற்கு இவ்வெல்லைகடவாதென்றல்வழுவா தொழிகவெனக்காத்தலுமாம் - (சூ) இசைநிறையசைநிலைபொருளொடுபுணர்தலென் றவைமூன்றென்பவொருசொல்லடுக்கே- விரைசொலடுக்கே மூன்றுவரம்பாகும்- என- ஆ- தொ- க- ஒருசொல்லடுக்கும்- எனமுடிக்க. (௩௪)

இரட்டைக்கிளவியிரட்டிற்பிரிந்திசையா. ✻

இது, மரபுவழாநிலையெனக்காத்தலுணர்த்திற்று. (இ-ள்,)இரட்டைச்சொற்கள் அவ்விரட்டித்தலில் நின்றுப்பிரிந்துதனித்து ஒலியாவாம், எ-று.

எனவேவலிந்துபற்றிப்பிரித்துக் கூறிற்பொருள் படாதென்பதும்-இரட்டித்துக்கூறுதலேமரபு என்பதுமாயிற்று, [வ-று,]சுரு

சுருத்தது-மொடுமொடுத்தது-என இசைபற்றியும்- (இசை-ஒலி,) கொறுகொறுத்தார்- மொறுமொறுத்தார்-எனக் குறிப்புப்பற்றியும்- (குறிப்பு-சிறிதுபொழுதுநிகழ்வதோர்மெய்ப்பாடு) குறுகுறுத்தது- கறுகறுத்தது - எனப்பண்புபற்றியும், இரட்டித்துப்பிரியாதுநின்றன, இவை குறுத்தது குறுத்தது என ஒருசொல் முழுவதும்இருமுறைவாராமையால்அடுக்கல்ல, இவை- மக்களிரட்டையும் விலங்கிரட்டையும் போலாகாமல் இலையிரட்டையும் பூவிரட்டையும்போலஒன்றுபட்டும்வேறுபட்டும்நின்றன, இவற்றுள் - பின்னையது பிரிந்திசைக்குமாயினும் முன்னையது பிரிந்திசையாமையால்இரட்டைச்சொல்லேயாமென்க. இச்சூத்திரம்மேற்கோளென்கின்ற ஆசிரியவசனம்- இதன்முடிபுவிளங்கிற்று. (௬௫)

ஒருபொருட்பலபெயர்பிரிவிலவரையார். ※

இதுவுமது, (இ-ள்,) ஒருபொருளைக்குறித்துப்பலபெயர்வருமாயின் அப்பொருளில்நின்றும் பிரிதலில்லாதனவற்றைநீக்காது கொள்வர்புலவர், எ-று.

எனவேபிரிவுள்ளனவற்றை நீக்குவரென்பதாயிற்று - [வ-று,] பாண்டியன்பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதிவந்தான்-எனின்-பாண்டியன் - என்பதும் - யாகசாலை - என்பதும்-குடுமி-என்பதும்- வழுதி-என்பதும்ஒருபொருளின்மேற்சென்றுகேட்போர்க்குச்சொல்லுவான்குறித்தபொருளைவிளக்கிநிற்றலானும்- ஆசிரியன் பேரூர்கிழான் இளங்கண்ணன் சாத்தன்வந்தான் - என்பது மாணாக்கர்க்கு நூற்பொருளுணர்த்தலால் ஆசிரியத் தன்மையும்- ஊருரிமையுங்கண்ணின் வேறுபாடு முடையவன்சாத்தனாதலானும் இவைபோல்வனவெல்லாம்பிரிவில்லனவாம்.

(வெண்பா-) வையைக்கிழவன்வயங்குதார்மாணகலந் தையலாய்நீயின்று நல்கினை- நல்காயேற்-கூடலார்கோவோடுநீயும்படுதியே, நாடறியக்கௌவை யொருங்கு. இதனுள்வையையாற்றிற்குஉரியவனும்கூடலென்னும்பதியிலுள்ளார்க்கு இறைவனும்ஒருவனேயாதலாற்பிரிவிலதாயினும்நல்கினை எனமுடிந்தபின்புமற்றோர்முடிபாகக் கூடலார்கோவென்றதனால் அது அக்கூடலார்கோவெனச்சுட்டி நில்லாவிடிற்பிரிவுளதாமிதுசுட்டியேநிற்றல்காண்க. (வெண்பா-) கொய்தளிர்த்தண்டலைக்கூடற்பெருஞ்சேந்தன்- வைகலுமேறும்வயக்களிறே, கைதொழுவல் - காலேகவண்ணனைக்கண்ணாரக்காணவெஞ், சாலேகஞ்சாரநட. இதனுள் - காலேகவண்ணம்சந்தனப்பூச்சுஆதலால் அதுபொதுமையினின்றுபிரிவுளதாயினும்காலேகவண்ணனாகியசேந்தனெனமாறி - விசேடித்துநிற்றலும், கைதொழுவல் எனமுடிந்தபின்- மற்றோர்முடிபாய் - அப்பொருளையேவிளக்கிக் காலேகவண்ணனாகிய அச்சேந்தனையெனச்சுட்டிநிற்றலுமுடைமையாற்சிறப்பின்றாயினும்பிரிவிலதென (ஆசிரியர்தொல்காப்பியனார்) (கு) பொருளொடுபுண

ராச்சுட்டுப்பெயராயினும்பொருள்வேறுபடாதொன்றும்மே-எனக்கூறிய ச்சூத்திரத்தாற்கொள்க - இவ்வாறுபொருளொடுபுணராச்சுட்டுப்பெயர்கள்புராணகாவியங்களில்பெரும்பான்மைவருமெனவுணர்க - இனிப்பிரிவுளதாய்வழுவியதுயாதெனின் · பகையியல்பாயிவிபடைக்கைமறவன் எழுத்துணர்விலனிலக்கணநிறைகடல்-எனவரிற்பகையியல்பாகவேயில்லாதவனைப்படைக்கைமறவனென்றலும்-எழுத்துணர்வில்லாதவனையிலக்கணம்நிறைகடலென்றலுங்கூடாமையிற்பிரிந்துவழுவாமென்கபிறவுமன்ன. (சசு)

ஒருபொருட்பன்மொழிசிறப்பினின்வழா. *

இது,மரபுவழுவமைதியுணர்த்திற்று. (இ-ள்,) ஒருபொருளைக்குறித்துவரும்பலசொற்கள், சிறந்துநிற்றலின்வழுவாகா, எ-று.

[வ-று,] மீமிசை- இதில்-மீ- என்றதும்- மிசை - என்றதும் மேல், புனிற்றிளங்கன்று-இதில்-புனிறு-இளமை- இரண்டுமொன்று, நாகிளங்கமுகு- இதில் -நாகு- இளமை - இரண்டுமொன்று, உயர்ந்தோங்குபெருவரை- இதில்-உயர்தலோங்குதலிரண்டுமொன்று, குழிந்தாழ்ந்தகண்- இதில்-குழிதல்-ஆழ்தல்-இரண்டுமொன்று,எனவரும்பிறவுமன்ன, சிறந்துநிற்றல்செவிக்குஇன்பந்தோன்றநிற்றல்.

இனிச்சிறப்பினின்வழா என்பதற்குப் பதப்பொருள் விளங்கவுரையெழுதாது- இடர்ப்பட்டு உரையெழுதினார் - அதுயாதுநோக்கியெனின்· (ரு) இன்னெனவரூஉம்வேற்றுமையுருபிற், கின்னென்சாரியையின்மைவேண்டும் என்னுஞ்சூத்திரநோக்கியென்க. ஆசிரியர்தொல்காப்பியனார்- இன்னுருபிற்குஇன்சாரியை ஒரோவழியக்காலத்தும்வருமென்பதுகருதியே - இன்னென்சாரியையின்மைவேண்டும் -எனநியதிகூறுமல்- இன்மைவேண்டும் எனவேண்டிக்கோடலாயும்பராமுகமாயுங்கூறினார்-அதனையும் -பாம்பினிற்கடிதுதேளென்னும்வழக்கையும்-யாதினின்யாதினினீங்கியானோத - லதனினதனினிலன் - என்னுஞ்செய்யுளையும்நோக்கிநூலாசிரியர்- சிறப்பினின்வழா- எனச்சூத்திரஞ்செய்தார்- இதற்குசிறப்பின்-சிறக்குமாயின்-எனச்செயினென்வாய்பாட்டுவினையெச்சமாகப்பொருள்கூறின்- வழங்கினவற்றிற்கு அன்றென்பதாயிற்று அதுவுமன்றி - இன்- என்பதுவாளாநின்றது - (வாளா-வீண்,) இனிச்சிறப்பினாலெனவிரித்துப்பொருள்கொளினும் பொன்னிற்செய்தகுடம்- வாணிகத்தினாயினானென்பனபோலக்காரணகாரியத்தொடராய்நில்லாமையுமன்றி -ஆங்கும்இன்என்பதுவீணாநின்றது · ஆதலால்-சிறப்பினில்நின்றும்தவறிவழாஎனஎல்லைப்பொருளாகஉரைப்பதேசிறந்ததுகாட்டிற்று- நீக்கமெனினும்- குற்றியலுகரப்புணர்ச்சியாயின் இன்னுருபிற்கு இன்சாரியைவருதல்- புதியனபுகுதல் எனினும்அமையும் - இனி எல்லாவீற்றுஞ்சொல்லுங்காலை- வேற்றுமையுருபிற்கின்னேசாரியை - என்றதைமறந்து - பாட்டின்பொருள் என்பதைப்பாட்டன் பொருள் என்றற்போல மேற்சொல்லியகுறளை -யாதனின்யாதனின்எனத்திருப்பிச்சொல்லின்பங்கெடச்செய்தாருமுளர்-)மொழி-வழா- எனமுடிக்க. (சஎ)

இனத்தென்றற்பொருளுலகினிலாப்பொருள், வினைப்படுத்துரைப்பினும்மைவேண்டும். *

இதுமரபுவழாமைக்காத்தலுணர்த்திற்று. (இ-ள்,) இனைத்தென்-இவ்வளவென்றுவரையறைபுணரப்படும்பொருளும், உல-ள்-எவ்விடத்தும் எக்காலத்தும் இல்லாதபொருளும், வினை-படு-வினைப்படுத்துச்சொல்லும் போழ்துமுற்றும்மையை வேண்டிநிற்கும், எ-று.

பொருள்எனவேறுபிரித்ததினாலே உலகென்றது - மற்றஇடமனைத்தையுங்காலமனைத்தையும்- எனவும்- இனைத்தென்றறிபொருளொன்றதினாலும் இடமனைத்தையுங்காலமனைத்தையுங்கூறுதலாலும்உம்மையென்றது-முற்றும்மையெனவும்-இனைத்தென்றறிபொருளென்றது- பொருளாதியாறையுமெனவுங்கொள்க. [வ-று,] தமிழ்நாட்டுமூவேந்தரும் வந்தார் - வேதநான்கும் உணர்ந்தான்- (பொருள்) உலகமூன்றும் ஒருங்குணர்ந்தான்-திசையொருநான்கினுஞ்சீர்திகழ்பெம்மான்- (இடம்) காலமூன்றுங்கண்டோன்-சிறுபொழுதாறுஞ்சிறந்ததிம்மருதம் - (காலம்) கண்ணிரண்டுஞ்சிவந்தன-தோளிரண்டும்பூரித்தன- (சினை) சுவையாறுமுடைத்திவ்வடிசில்- வண்ணமைந்துமுடையதிக்கிளி- (குணம்) தொழில்மூன்றுமுடையோன் முதல்வன் - கதியைந்துமுடைத்திக்குதிரை- (தொழில்) இவையினைத்தென்றறிபொருள் - முற்றும்மைபெற்றவாறுகாண்க - இனிஇவ்வளவென்றது இவ்வளவையுடைய தென்னும்பொருள்பட-இனைத்தென்றறிபொருளென்றதினாலே-பொருட்பெயர்முன்னிற்க இனைத்தென்னுமளவுப்பெயர் உம்மைபெற்றுவருதலும் - அளவுப்பெயர்முன்னிற்கப்பொருட்பெயருமும்மைபெற்றுவருதலுங்கொள்க- அவைவருமாறு- நின்கண்வைத்தபொன் நூற்றையுங்கொடு - நின்கண்வைத்தநூறுபொன்னையுங்கொடு- வேதநான்குமுணர்ந்தான்-நான்குவேதமுமுணர்ந்தான்- கண்ணிரண்டுஞ்சிவந்தன இரண்டுகண்ணுஞ்சிவந்தன- எனவரும், கண்ணிரண்டுங்குருடு - காதிரண்டுஞ்செவிடு - எனப்பெயர்கொண்டவழியும்மைபெற்றதென்னெனின்-பெயராகவாயினும்வினையாகவாயினும்முடித்துநிற்குஞ் சொல்லொடுபடுதலேயிங்கேவினைப்படுதலாதலின் அவையும்வினைப்படுத்துரைத்தலேயாமென்க, பவளக்கோட்டுநீலயானையென்றுமில்லை - முயற்கோடு ஆமைமயிர்க்கம்பலமென்றுமில்லை - ஒளிமுன்னிருளொன்றுமில்லை - மண்ணாற்செய்தபடமும்நூலாற்செய்தகடமுமென்றுமில்லை-(படம்-வஸ்திரம், கடம்-பானை,) என உலகின் இல்லாப்பொருள் வினைப்படுத்துரைத்தவழியும்மைவேண்டிநின்றவாறுகாண்க - எவ்விடத்துமில்லையெ

னவும் இவற்றோடு ஒட்டிக்கொள்க.

உம்மைவருமென்றது உம்மைவேண்டுமென்றதினாலே- அந்தஉம்மைகு றைந்துநிற்க அதனைவேண்டுவனவாய் நிற்பனவும் அதனோடு காலப்பெயரிடப் பெயர்குறைந்துநிற்பனவுங்கொள்க- வருமாறு- இருதோள்தோழர்பற்ற - எரு மைநாற்கால்நீர்ச்சிழவ்வே- எம்- மண்ணிற்படமில்லை-நாவிற்கடமில்லை- ஒளிமுன் னிருளில்லை எனவும்வரும் இனிஇரட்டுற மொழிதலென்னுமுத்தியால்- உலகினி லாப்பொருளென்பதை -உலகின் நில்லாப்பொருளெனப்பிரித்து - உலகத்தில்நி லையில்லபொருள்களைவினைப்படுத்துமைப்பின் எச்சவும்மைவேண்டுமெனவும் பொ ருளுரைத்துக்கொள்க - அவைவருமாறு - யாக்கையும்நில்லாதெனவே இளமை யுஞ்செல்வமுந்நில்லாதெனவும்-யாக்கையும் பொய்யெனவே இளமைசெல்வமு தலியவும்பொய்யெனவும் பொருளுணர்த்தியெச்சவும்மையாய் நின்றவாறுகா ண்க-இன்னுமவ்விலேயினாலே-இல்பொருள்களுமெச்சவும்மைபெறுதல்கொள்க- குறுகொண்டல்பகலுமில்லை எனின்இரவுமில்லையெனவும் - பவளக்கோட்டுநீலயா னைசாத்தவாகனன்கோயிலுள்ளுமில்லை யெனின்மற்ற இடங்களினுமில்லையெனவு ம்பொருள்தந்துஎச்சவும்மைபெற்றவாறுகாண்க - பிறவுமன்ன, (சூ) இதைத்தெ னவறிந்தசினைமுதற்கிளவிக்கு- வினைப்படுதொகுதியினும்மைவேண்டும்-எனவும் மன்றுப்பொருளுமன்னவியற்றே - எனவும், ஆ-தொ- க - பொருளும்பொருளும் உம்மைவேண்டும்எனமுடித்துக்கொள்க. (சஉ)

செயப்படுபொருளைச்செய்ததுபோலத், தொழிற்படக்கிளத் தலும்வழக்கினுரித்தே. ※

இது, மரபுவழுவமைதியுணர்த்திற்று. (இ-ள்,) செயப்-போ ல - செயப்படுபொருளைக்கருத்தாவைப்போலவைத்து, தொ-ம்- அதன்மேல்வினைமுதல் வினையையேற்றுக்கூறுதலும், வழ - து- உலகவழக்கின்கண் உரித்தாம், எ-று.

[வ-று,] இம்மாடுநான்கொண்டது - இச்சோறுநான்கொ டுத்தது- இவ்வெழுத்துநானெழுதினது - எனவரும் - கிளத்தலு மென்ற உம்மையாற்கருமத்தைக்கருத்தாவாகக் கூறுதலுடன்றிக் கருவிநிலஞ்செயல்காலங்களையுங் கருத்தவாகக்கூறுதலுமெவ்வும்வி னைமுதலை இயற்றும்வினைமுதலாகக் கூறுதலுமுளவெனக்கொள் க- அவைவருமாறு- இவ்[illegible]த்தாணிநானெழுதியது-கருவி-இவ் வீடுநானிருந்தது - நில[illegible]த்தொழில்யான்செய்தது - செயல், இந்நாள்யான்பிறந்தது-காலம், அரசனெடுத்தஆலயம்- எவும்வி னைமுதல், பிறவுமன்ன; கிளத்தலுமுரித்து- எனமுடிக்க- (இச்சூ த்திரம்- ஆசிரியவசனம், (சங)

பொருண்முதலாறுமடைசேர் மொழியினை, முள்ளவுமில்லவு மா,நிருவழக்கினும். ※

இது,யாபுவழுவமர்காத்தலும் அதன்வழுவமைதியுமுணர் த்திற்று. (இ-ள்,) பொருண்- ழி- பொருள்- இடம்-காலம்- சினை-

குணம்-தொழில்களாகிய அடைகளடுத்து வருமொழிகள், இனமு- மாம்- இனமுள்ளனவாகிய பொருள்களுக்கேயன்றியினமில்லனவாகிய பொருள்களுக்கும்வரும், இரு- ம் - உலகவழக்கினுள்ளும், செய்யுள்வழக்கினுள்ளும்,எ-று.

உள்ளவுமென்ற உயர்வுசிறப்புஉம்மையும்இல்லவுமென்றஇழிவுசிறப்புஉம்மையும் எண்ணும்மைகளாயும்நின்றன- ஆதலால்- இனமுள்ளனவற்றைப்படைகொடுத்துக்கூறுதல்- வழாநிலையெனக்காத்தலும், இனமில்லனவற்றையடைகொடுத்துக்கூறுதல்- வழுவமைதியுமெனக்காண்க: [வ-று,] நெய்க்குடம்- பாற்குடம்-பொருளடை, குளநெல்- வயல்நெல்- இடத்தடை, கார்த்திகைவிளக்கு- ஐப்பசிவிளக்கு- காலம், பூமரம் - காய்மரம்- சினை, செந்தாமரை வெண்டாமரை- குணம், ஊன்றுகோல்- தாங்குகோல்- தொழில், இவையினமுள்ளன, உப்பளம் - பொருள், ஊர்மன்று- இடம், நாளரும்பு- காலம், இலைமரம்- சினை,செங்காவி-குணம், தோய்தயிர்- தொழில், இவைஇனமில்லன- (மன்று- சபை,) இவைமுறையேயடையின்றியும்அப்பொருளாதியாறைப்புணர்த்தும்-எவ்வாறெனின் அளம்எனவே- உப்பு- என்பதும்-மன்றெனவே-ஊரென்பதும்- அரும்பு- எனவேநாளென்பதுந்தானே வந்தியையும்- உப்பிலாஅளமும் ஊரில்லாச்சபையும் - நாளிலாஅரும்புமில்லையாதலாலென்க. ஒழிந்தமூன்றுமிவ்வாறேகாண்க- இனிமுற்கூறிய இனமுள்ளனவற்றை அடைகொடாதுகூறின்குறித்தபொருள்விளங்காதுபொதுமையினிற்குமாதலாலிவற்றிற்கு அடைகொடுத்துக்கூறுதலேமரபாயிற்று இவையுலகவழக்கு, பொருட்பெண்டிர் பொய்ம்மைமுயக்கம் - பொருள், கான்யாற்றடைகரை- இடம், முந்நாட்பிறையின்- காலம், கவைமாமயிலெருத்திற்கடிமலரவிழ்ந்தனகாயா- சினை, சிறுகோட்டுப்பெரும்பழந்தூங்கியாங்கு- குணம், ஆடுபாம்பெனப்புடையகன்றவல்குலாள் - தொழில், இவையினமுள்ளன, பொற்கோட்டிமயமும் - பொருள், வடவேங்கடந்தென்குமரியாயிடை- இடம், வேனிற்கோங்கின்பூம்பொகுட்டன்ன- காலம், சிறகர்வண்டுசெவ்வழிபாட- சினை, செஞ்ஞாயிற்று நிலவுவேண்டினும் - குணம், முழங்குகடலோதமூழ்கிப்போகு- தொழில், இவையினமில்லன, இவைசெய்யுள் வழக்குப் பிறவுமன்ன.

இனி- ஆ- தொல்காப்பியனார் - (கூ) இனச்சுட்டில்லாப்பண்புகொள்பெயர்க்கொடைவழக்காறல்லசெய்யுளாறே - எனக்கூறியதினாலே இனச்சுட்டில்லாதனவற்றிற்கு அறுவகையடைகளுஞ் செய்யுளிடத்தாமென்பதும் ஐவகைய்

டைகள்வழக்கிடத்தாமென்பதூஉம், இனச்சுட்டுள்ளனவற்றிற்கு அவ்விருவகைப்படைகளும் இருவகைவழக்கினு மாமென்பதூஉந் தோன்றநின்றமையும் இனச்சுட்டில்லாதனவற்றிற்குவழக்கிடத் தப்பண்படைகொடுத்தலிக்காலத்தும் அரிதாதலுங்காண்க, மொழிஆம்-எனமுடித்துக்கொள்க. (௰௨)

அடைமொழியினமல்லதுந்தருமாண்டுறின். ※

இது, மரபுவழுவமைக்காத்தலுணர்த்திற்று. (இ-ள்,) ஆண்டுறின், அவ்விடத்திற்குப்பொருந்துமாயின், அடை - தரும் - மேற்கூறிய அடைசேர்மொழிகள் இனத்தைத்தருதலேயன்றியும் இனமல்லாததையுந்தரும், எ-று.

[வ-று,] அறஞ்செய்தான்சுவர்க்கம்புகுவான் - எனின் - மறஞ்செய்தான்நரகம்புகுவான் - எம் - (மறம்-பாவம்,) இழிவறிந்துண்டான் இன்பமெய்தும் - எனின்- கழிபேரிரையான்றுன்பமெய்தும்- (கழி-மிகுதி,) எனவும்வருமிவைஇனத்தைத்தந்தன- இவை அருத்தாபத்தியெனவுங்காண்க. பேலைச்சேரிச்சேவலலைத்ததெனின்-கீழைச்சேரிச்சேவல் அலைப்புண்டதென இனத்தைத்தந்ததுமன்றி அச்சேவலுடையார்க்கு வெற்றியாயிற்று என இனமல்லதனையுந்தந்தது, இனியிரட்டுறமொழிதலென்னுமுத்தியால்- இனமல்லதுந்தருமென்றதற்கு இனத்தைத்தருவதைநீக்கி இனமல்லாததைத்தருமெனவும் பொருளுரைத்துக்கொள்க. அவைவருமாறு, காலைஎழுந்துகருமத்திற்செல்வான்- கோழிகூவிற்றெனின்- மற்றப்பறவைகள் கூவுகில என்னுங்கருத்து அவனுக்கில்லையாதலால் அவ்வினத்தையொழித்துப் பொழுதுவிடிந்ததென்னும் இனமல்லதனைத்தந்தது- பெய்முகிலனையானெனின் - இனமாகிய பெய்யாமுகிலுவமையைநீக்கிக் - கைமாறுகருதாதபெருங்கொடையாளன் என்னும் இனமில்லதனை அந்தஅடைமொழிதந்தவாறுகாண்க. பிறவுமன்ன - (கைமாறுகருதல் - பிரதியுபகாரத்தை நினைத்தல்,)

இனி- ஒன்றின்முடித்தலென்பதினல், அடையில்லாமொழிகளும் இனத்தைத்தருதலுந்தாராமையுமுளவெனக்கொள்க- அவைவருமாறு-உண்டாறுஞ்செய்வான் - எனின் - உண்ணுதானுஞ்செய்யான் - எனஇனத்தைத்தந்தனவம்- ஆவாழ்க அந்தணர்வாழ்க - எனின்- எருமை ஒட்டகமுதலியனவும் - அரசர்வணிகர் வேளாளர் முதலியோருஞ் சாகவென்னுங் கருத்தில்லாமையாலிவைபோல்வனஇனத்தைத்தாராதனவெனவுங்காண்க.இனி- ஆசிரியர்தொல்காப்பினர். (௫) எடுத்தமொழியினஞ்செப்பலுமுரித்தே - எனக்கூறுதலுங்காண்க- மொழிகளும்- எனமுடித்துக்கொள்க. (௰௩)

அடைசினைமுதன்முறைபடைதலுமீரடை, முதலோடாதலும், வழக்கியலீரடை, சினையொடுசெறிதலு மயங்கலுஞ் செய்யுட்கே. *

இது, மரபுவழுவாமற்காத்தலும் அதன்வழுவமைதியுமுணர்த்திற்று. (இ-ள்,) அடை - தலும் (மேற்கூறிய அடைசினைமுதல்களையடுத்துவருங்கால்) ஓரடையும் ஓர்சினையும் ஓர்முதலுமாய் ஒன்றையொன்றுவிசேடித்துவருதலும், ஈரடை-லும்-இரண்டடைமுதலைவிசேடித்துவருதலும், வழக்கியல்- வழக்குநடையாம், ஈரடை-தலும் - இரண்டுஅடைசினையைவிசேடித்துவருதலும், மயங்கலும்- இந்தவரம்புகடந்துமுறைபிறழ்ந்துவருதலும், செய்யுட்கு-செய்யுட்குரியநடையாம், எ-று.

முறைஎன்றதனால் ஒன்றையொன்று விசேடித்துவருமென்பதும்- அவ்வாறுவரும்போது - அடைபல சினைபலவாய்வாராமல் ஒவ்வொன்றுவருமென்பதும்பெறப்பட்டன, அடையென்றது பொருளாதியாறுமெனக்கொள்க. [வ-று,] வேற்கைமுருகன்-வேல்- பொருள், நிலப்பூநெரிஞ்சில்- நிலம்- இடம், கார்த்திகைப்பூக்கொடி- கார்த்திகை - காலம், பழக்குலைவாழை - பழம்- சினை, செங்கால்நாரை- செம்மை- குணம், முழங்குதிரைக்கடல் - முழங்கல்-தொழில், இவை - அடையுஞ்சினையும் முதலுமாகி ஒன்றையொன்றுவிசேடித்துவந்தன, பனைச்சிறுகிணறு - சிறுகருங்காக்கை- என்றாற்போல்வன இரண்டு அடைமுதல்மேல்வந்தன- (முதல்- அவயவத்தையுடையது,) இவைவழக்குநடை, சிறுபைந்தூவியிற்செயிரறச்செய்த-இதனுள்- சிறுமைபசுமைஇரண்டும்அடை-தூவி-சினை, (செயிர்-குற்றம்,)கருநெடுங்கண்டருங்காமநோயே- இதில்- கருமை- நெடுமைஅடை-கண்-சினை, இவையிரண்டுஅடைசினையொடுவந்தன, பெருந்தோட்சிறுமருங்குற்பேரமர்க்கட்பேதை- எம்- சிறுநுதற்பேரமர்க்கட்செய்யவாயையநுண்ணிடையாய்- எம் -வரும்இவைபோல்வன இவ்வரம்புகடந்தும்இம்முறைபிறழ்ந்தும்வந்தன-இவைசெய்யுள்நடை- பிறவுமன்ன, இவற்றுள்- அடைசினைமுதன் முறையடைதலொன்றும் - வழுவாமற்காத்தலும் ஒழிந்தமூன்றும்வழுவமைதியுமாமென்க.

கவிசெந்தாழைக்குவிபுறத்திருந்த செவிசெஞ் சேவலும் பொருவலும் வெருவா, வாய்வன்காக்கையுங்கூகையுங்கூடி - என்றதில் - செவிசெஞ்சேவல்- வாய்வன்காக்கை - என்பன - கொம்புகூர்மாடு - மடல்விரிதாழை என்பனவற்றையொத்திருத்தலால் - உயர்திணைதொடர்ந்த பொருண்முதலாறுமென்னுஞ் சூத்திரத்துள் - அஃறிணைபொருசார்த்தின் அஃறிணை முடிபினவாமென அ

மைத்ததன்பாற் படுமெனக்காண்க. இனி - ஆசிரியர் தொல்காப்பியனார். (௫)
அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை - நடைபெற்றியலும்வண்ண
ச்சினைச்சொல் - எனப்பண்படை யொன்றுமே கூறியொழிந்தனவற்றையிலே
சிறைற்றழுவியவாறுங்காண்க. அடைசுலும் ஆதலும் - வழக்கியலாம் - செறித
லும் - மயங்கலுஞ் செய்யுட்குரிய நடையாமென முடித்துக்கொள்க. (௫௨)

இயற்கைப்பொருளையிற்றெனக்கிளத்தல். ✻

இது, மரபுவழுவமைதியுணர்த்துகின்றது. (இ-ள்,) (இயற்கை செயற்கையென்னு மிருவகைப்பொருள்களுள்) இயற்கைப்பொருளை யதன் தன்மைகூறுங்கால் (ஆக்கமுங்காரணமுங்கொடாமல்) இத்தன்மையையுடையதென் றுகூறுக, எ-று.

இயற்கைப்பொருள் - தனக்குப்பின்தோன்றாது தான்தோன்றுங்காலுடனே தோன்றியதன்மையையுடையபொருள் - எ-ம்-தனக்குப்பின்தோன்றிய தன்மையையுடையபொருள் - செயற்கைப்பொருளெனவும் - இயற்கை - அவிகாரம் - செயற்கை - விகாரமெனவுங்காண்க. [வ-று,] நிலம்வலிது - நீர்தண்ணிது - தீவெய்து - மயிர்கரிது - பால்வெளிது - பயிர்பசியது - மெய்யுள்ளது - பொய்யில்லது - எனவரும்.

எல்லாப்பொருள்களும் மாயையின் விகாரமென்பதைநோக்கச் செயற்கைப்பொருளாயினும் - அந்தந்தப்பொருள்கள்தோன்றுங்காலுடன் தோன்றியகுணங்களாகிய அவிகாரங்களைநோக்கஇயற்கைப்பொருளாமென்க, இந்த இயற்கைப்பொருளையிற்றென் றும்வினைக்குறிப்பாற்செயற்படுத்துக்கூறுதலால் வழுவமைதியாயிற்று - இதுகருதாது இவ்வாறுகூறுதல் மரபென்பாருமுண்டு, சேற்றுநிலம்மிதித்தவன் வன்னிலமிதித்தபோது - நிலம்வலிதாயிற்றெனின் மெலிதாகியதுவலிதாய் வேறுபட்டதென ஆக்கம் வேறுபாடு குறித்து நின்றதினாலே இயற்கைப்பொருள் ஆக்கமொடு வந்ததன்றென்க. இச்சூத்திரம் ஆசிரியவசனமெனக்காண்க. கிளத்தலென்னும் வியங்கோள் முற்றிற்குப் பயனிலைகூட்டி முடித்துக்கொள்க. (௫௩)

காரணமுதலாவாக்கம்பெற்றுங், காரணமின்றியாக்கம்பெற்று, மாக்கமின்றிக்காரணமடுத்து, மிருமையுமின்றியுமியலுஞ்செயும்பொருள். ✻

இது, மரபுவழுவாமற்காத்தலும் அதன்வழுவமைதியுமுணர்த்திற்று. (இ-ள்,) முதற்காரணந் துணைக்காரணநிமித்தகாரணங்களாற் செய்யப்படுபொருளாகியசெயற்கைப் பொருளைக்கூறுங்கால், கார-றும் - காரணச்சொல்முன்வர ஆக்கச்சொல்பின்வரப் பெற்றும், காரண - றும் - காரணச்சொல்தொக்குநிற்க ஆக்கச்சொல்பின்வரப்பெற்றும், ஆக்க - தும் - ஆக்கச்சொல்தொக்குநிற்கக்காரணச்சொல் முன்வரப்பெற்றும், இருமை - ருள் - ஆக்கங்கா

ரணமிரண்டுந் தொக்குநிற்கவுஞ் செயற்கைப்பொருள்நடக்கும்,
எ-று.

இந்த ஆக்கச்சொல்லும் காரணச்சொல்லும் எவ்விடத்துவரினும் அவைநிற்கவேண்டுமிடத்து வைத்துப்பொருளுரைக்கவேண்டுமாதலாற்காரணமுதலாவாக்கம்பெற்றென்றார், [வ-று,] கடுவுங்கைபிழியெண்ணெயும்பெற்றமையால்மயிர்நல்லவாயின - எருப்பெய்து இளங்களைகட்டு நீர்கால்யாத்தமையாற் பயிர்நல்லவாயின - இவைகாரணமுதலாஆக்கம்பெற்றன, (களைகட்டல்- களைபறித்தல்,) யாத்தல்-கட்டுதல்,) மயிர்நல்லவாயின-பயிர்நல்லவாயின- இவைகாரணச்சொல்தொக்கு ஆக்கம்பெற்றன, கடுவுங்கைபிழியெண்ணெயும்பெற்றமையான்மயிர்நல்ல - எருப்பெய்திளங்களைகட்டுநீர்கால்யாத்தமையாற்பயிர்நல்ல, இவையாக்கச்சொல்தொக்குவந்தன- மயிர்நல்ல- பயிர்நல்ல- இவையிரண்டுந்தொக்குவந்வன-இதனுள்- காரணமுதலாவாக்கம்பெறுதலொன்றும்வழுவாமற்காத்தலும் ஒழிந்த மூன்றும் வழுவமைதியுமாமென்க, பிறவுமன்ன.

இனிச்சூத்திரத்திற்குக்காரணத்தால் தன்குணம்வேறுபட்டபொருளைக்கூறுங்கால் - காரணமும் ஆக்கமுங்கொடுத்தே கூறவேண்டுமெனவும் அவைதொக்குவருதல்செய்யுள் விகாரமெனவும் வழக்கின்கண் அவைதொக்குவரினுங் குற்றமின்றெனவும் பொருளுரைத்துக்கொள்க. அவைவருமாறு - [வெண்பா,] வருமழையவாய்க்கொள்ளும் வாடாச்சீர்வண்கைக் - கருமுருகன் சூடியகண்ணி- திருநுதா - வின்றென்கூரற்கூந்தற்பெய்தமையாற்பண்டைத்தன் - சாயலவாயினதோள்- என இதுகாரணமும் ஆக்கமும்பெற்றுவந்தது - தெரிகணையெஃகந் திறந்தவாயெல்லாங்- குருதிபடிந்துண்டகாக- முருவிழந்து குக்கிற்புறத்தசிரல்வாயசெங்கண்மா- றப்பியாரட்டகளம் - இதனுள் - குருதிபடிந்துண்டதனால் எனக்காரணம்வெளிப்பட்டுச்சிரல்வாய ஆயின- என்னும் ஆக்கச்சொல் விகாரத்தால்தொக்குநின்றது. (கூரல் - பெண்மயிர், எஃகம் - ஆயுதப்பொதுப்பெயர்- கணைசிறப்புப்பெயர், குக்கில் - செம்போத்து, சிரல் - செவ்வாய்ச்சிச்சிலிக்குருவி, சிரல்கவுதம்பொன்வாய்ப்புட்டித்திரிசிச்சிலிப்பேர்- என்பது நிகண்டு, செங்கண்மாறப்பியார்- செங்கண்மால்தப்பியார்;) அரியகானஞ்சென்றோர்க்கெளியவாகியதடமென்றோளே- இதனுள் - கற்புக்காலத்து எனநிற்றலால அக்காலமென்னுங்காரணம்வெளிப்பட்டுநின்றது, நல்லவையெல்லாந்தீயவாந்தீயவு - நல்லவாஞ்செல்வஞ்செயற்கு - இதனுள்ளும் ஊழாலென்பது அதிகாரத்தால் வெளிப்பட்டுநின்றது, இனிவழக்கின்கண் - மயிர்நல்ல பயிர்நல்ல- எனவாக்கங்காரணமிரண்டுமின்றிவந்தன - இவற்றிற்குநன்மைசெயற்கையாயின் முன்றீயனவாய்ப்பின்பு நல்லனவாகியபோது அந்தத்தீமையைக் காணுதவன் மயிர்நல்ல பயிர்நல்லவென்றுரைத்தலால் ஆக்கமுங்காரணமு முளவெனவே துணிந்துகொள்க. இவ்வாறுகூறுதல் ஆசிரியர் தொல்காப்பியனார்க்குங்கருத்தென்பதை - (௫)

செயற்கைப்பொருளையாக்கமொடுகூறல் எம்- ஆக்கந்தானேகாரணமுதற்தே-ஏம்- ஆக்கக்கிளவிகாரணமின்றியும் - போக்கின்றென்பவழக்கினுள்ளே- எம்- கூறியசூத்திரங்களாலுமுறையானுமுய்த்துணர்ந்துகொள்க - செயும்பொருளியலுமெனமுடித்துக்கொள்க. (௫௪)

தம்பாலில்லதில்லெனினினனுயுள்ளதுகூறியுமாற்றியுமுள்ளது,
சுட்டியுமுரைப்பர்சொற்சுருங்குதற்கே. *

இது, மரபுவழுவாமற்காத்தலுணர்த்திற்று. (இ-ள்,) தம்பாலின் - (ஒருவன்வினவியது) தம்பக்கலில்லையாயின் அதனையில்லையெனப்புகின், இனனு- யும் - அவன்வினவியதற்கு இனமாய்த்தம்பக்கலுள்ளதனைச்சொல்லியச்சொல்லினேலயதனையில்லையென்றுமாற்றியும், உள்ளது- உள்ளதாயின், சுட்டி- தற்கு-இவ்வளவுண்டென்றுஞ் சொல்லுவர்விறுவுதலுஞ்செப்புதலுமாகியசொற்கள்சுருங்குதற்பொருட்டு, எ-று.

குன்றக்கூறல்முதலியகுற்றங்களை நீக்கிச்சுருங்கச்சொல்லுதல்முதலிய அழகொடுகூறுதலைவழக்கிற்கும்வேண்டுமென்றுசொல்லவந்தவர்- சொற்சுருங்குதற்கே- என்றார். [வ - று,] பயறுளவோவணிகீரோவென்றார்க்கு- அதில்லையென்பார்- உழுந்துண்டுஉழுந்துவரையுமுண்டென்க, இந்தஇனமொழிகள்பயறில்லையென்றும்விடைப்பொருளைத்தந்துநிற்றலால்இனனுயுள்ளதுகூறியுமாற்றியுமென்றார், அதுஉண்டென்பார்இவ்வளவுண்டென்க, நூறுவிற்கும்பட்டாடையுண்டோ என்றார்க்கு- அதுஇல்லையென்பார்-ஐம்பதுவிற்குங்கோசிகமுண்டென்க, அதுஉண்டென்பார் - எண்பதுவிற்பதுண்டென்க, (கோசிகம்- பட்டு,)பிறவுமன்ன.

இனியாசிரியர்தொல்காப்பியனார்- (௩) எப்பொருளாயினு மல்லதில்லெனி, னப்பொருளல்லாப்பிறிதுபொருள்கூறல். எம் - அப்பொருள்கூறிற்சுட்டிக்கூறல்- எம்- கூறினர்- இவற்றின்பொருள்- யாதொருபொருளாயினும், அல்லதில்லெனின் - தம்பக்கலுள்ளதல்லாததனை யில்லையென்றுசொல்லப்புகின், அப்- நல் - வினவியபொருளைக்கூறாது அதற்கினமாகியபிறிதுபொருளைக்கூறுக, அவன்வினவியபொருளையேகூறுவானாயின்- இவ்வளவெனச்சுட்டிக்கூறுகவென்பதாம்- இதுவேயிந்நூலுடையார்கருத்தாவதும் - இதற்கு இவ்வாறன்றி - அல்லதில்லெனின்- என்பதற்கு- அல்லதில்லையென்றுசொல்லப்புகின், எனப்பொருள்கூறிஉழுந்தல்லதில்லைக்கொள்ளல்லதில்லையெனவும் இப்பயறல்லதில்லை இவையல்லதில்லையெனவும் உதாரணங்காட்டுவாருமுண்டு அவைசொற்சுருங்காது மிகைபடக்கூறலென்னுங்குற்றமாமென்க. இதனுள் புலவரொன்னும் பயனிலகுறைத்நின்றது. (௫௫)

ஈதாகொடுவெனுமூன்றுமுறையே,யிழிந்தோனொப்போன்மிக்கோனிரப்புரை. *

இ... (இ-ள்,) ஈதா-வே-கொ-கொடு- என்கின்ற இ

னுமூன்றுசொற்களும்நிரனிறையாகவே, இழிந்-னை- தாழ்ந்தவனு ம்-சமானமானவனும்- உயர்ந்தோனுமாகியஇம்மூவரும் இரக்கு ம் இரப்புவார்த்தைகளாம், எ-று.

எனவே- ஈ-என்பது தாழ்ந்தவனுயர்ந்தவனிடத்திலிரக்குமிரப் புரையும், தாவென்பதுசமானமானவன்சமானமானவனிடத்திலி ரக்குமிரப்புரையும்,கொடுவென்பது-உயர்ந்தோன்தாழ்ந்தவனி டத்திலிரக்குமிரப்புரையும், ஆமெனக்கொள்க. இரப்புரை- யாசக வார்த்தை, [வ-று,] தந்தையீ - எம்பெருமா னெனக்கொருபிடி சோறீ- எம்- தோழா தா, எனக்குச்சோறுதா- எம்-மைந்தா கொடு- இவனுக்குஉண்கொடு- எம்- வரும்-வேறேமார்க்கங்களிலேவரு கிற ஒப்பு-உயர்வுதாழ்வுகளினுமிவ்வாறேயொட்டுக.

இவை வழங்கு- நல்கு வீசு- என்னுந்தொடக்கத்து இரப்புரைகள்போ லாகாமல ஈ தா கொடு என்றமாத்திரமே ஈவோர்க்கும் ஏற்போர்க்கும் உயர்வு தாழ்வுகளைபுணர்த்திநிற்பதினலே யிவற்றையித்தன்மைத்தென்றறிபொருளா கக்கூறினார், இனி- அருள் - அளிஎன்னும் இரப்புரைகளும் ஈவோர்க்கு உயர்வும் ஏற்போர்க்குத்தாழ்வும் உணர்த்தினவயன்றேஎனின் அவைகருணைக்குரியசொற் கள் குறிப்பினலே இரக்கப்பொருளை புணர்த்திநின்றன அன்றி இரப்புரையல்ல வென்க. இனியிம்மூன்றுசொற்களுமிங்கேசொல்லியமுறைபிறழ்ந்து வருமாயி ன் அவற்றைப் புதியனபுகுதலும் வழுவலவென்றதனல் அமைத்துக்கொள்க. நீ ஏல்வாயென்னுந் சூத்திரத்தால்- கொடுவென்பது தன்மையிடத்துவந்த வழுவ மைதியென்றுபின்னுந் தன்னைப் பிறன்போற் கூறுங்வகையால் வந்தவழுவமைதி யென்றுயினுங்கொள்க. (சூ) ஈதாகொடுவெனக்கிளக்குமூன்று - மிரவின்கிளவி யாகிடனுடைய- எம் - அவற்றுள் - ஈயென்கிளவியிழிந்தோன்கூற்றே - எம்- தா வென்கிளவியொப்போன்கூற்றே- எ-ம்-கொடுவென்கிளவியுயர்ந்தோன்கூற்றே- எ-ம்- கொடுவென்கிளவிபடர்க்கையாயினும் - தன்னைப்பிறன்போற்கூறுங்குறிப் பிற்- றன்னிடத்தியலுமென்மனர்புலவர்- எம்- ஆசிரியர்தொல்காப்பியனார்கூறுத லுங்காண்க- மூன்றுமிரப்புரையெனமுடித்துக்கொள்க. (சூ)

முன்னத்தினுணருங்கிளவியுமுளவே. *

இது, மரபுவழுவமைதிபுணர்த்திற்று. (இ-ள்,) (வெளிப்படை யாலன்றிக்) குறிப்பாற்பொருளுணரவருஞ் சொற்களுஞ்சிலவுள வாம், எ-று.

(முன்னம்-குறிப்பு,)அவையாவனஒன்றொழிபொதுச்சொலெ ன்னுஞ் சூத்திரத்தாற் சொல்லப்பட்ட ஒன்றொழி பொதுச்சொல் முதலியாவாம்- அவற்றுள் இறுதியிலேவைத்தகுறிப்பென்பதுப லவகையாதலால் அவற்றுள்ளேசொல்லுவான் குறிப்பொன்றுமே யிச்சூத்திரங்குறித்ததென்க. [வ-று,] செவியெல்லாஞ்செம்பொ ன்னிறைந்தசெல்வத்தினையொன்றுசொல்லவந்தவர் - செஞ்செவியரெ னவும்,குற்றமற்றசுற்றத்தினையொன்றுசொல்லவந்தவர்-வெள்ளொக்

கலர்- என்றும், பெருவாழ்க்கையினொன்றுசொல்லவந்தவர் - ஒழைமொண்டுகோழியெறியுமவர்வாழ்க்கை-என்றும்,கூறுவதுமுதலியவாம்-கேட்போர்வருத்தப்படாமல்வெளிப்படையாகக்கூறுவதுமரபாதலால் இதுவழுவமைதியாயிற்று- இனிஇச்சூத்திரத்திற்குவினையெச்சவினைக்குறிப்புமுற்றுச்சொற்களுள்ளே - செய்தெனெச்சத்தெரிநிலைப்பொருளுணர்த்துவனவுமுளவெனப்பொருள்கூறிக் - கச்சினன்கழலினன்செச்சைக்கண்ணியன்குழலன்கோட்டன் என்றாற்போல்வனவுதாரணங்காட்டிக் - கச்சைக்கட்டிக்கழலையணிந்துகண்ணியைச்சூடிக்குழலையூதிக்கோட்டைக்குறித்து எனத்தெரிநிலைவினையெச்சவாசகமாக விரித்துக்காட்டுவாருமுண்டு- அவ்வேறுபாடுமுணர்க , இதன்முடிபுவிளங்கிற்று இச்சூத்திரமேற்கோளென்னும் ஆசிரியவசனம். (ருஎ)

கேட்குநபோலவுங்கிளக்குநபோலவு, மியங்குநபோலவுமியற்
றுநபோலவு, மஃறிணைமருங்கினுமறையப்படுமே. ❋

இதுவமை. (இ-ள்,) கேளாதனவற்றைக்கேட்பனபோலவும்,பேசாதனவற்றைப்பேசுவனபோலவும்- நடவாதனவற்றை நடப்பனபோலவும்(இவையன்றிவேறு) செய்யாதனவற்றைச்செய்வனபோலவும், அஃறிணையிடத்துஞ்சொல்லப்படும், எ-று.
முன்னையவைபோலவகைப்படச்சொல்லாது இறுதியிலேதொகுத்துப்பொதுப்படஇயற்றுநஎனச்சொன்னதினாலே - இவையன்றிவேறுஎன்பனகுறைந்துநின்றன, [வ-று,] நல்லீராவாழியனிச்சமே- எம்- இரவெல்லாநின்றுயாலீர்ஙகதிர்த்திங்காள் - எம் - இவைகேட்பனபோலவுரைக்கப்பட்டன், பகைமையுங்கேண்மையுங்கண்ணுரைக்கும்- எம்- மாய்தலும்பிறத்தலும்வளர்தலிங்களுந்தேய்தலுமுடைமையைத்திங்கள்செப்புமால்- எம்- இவைபேசுவனபோலவுரைக்கப்பட்டன்,இவ்வழியவ்வூர்க்குப்போம்- இவ்வரசனுழையெங்குஞ்செல்லும்- எம்- இவைநடப்பனபோலச்சொல்லப்பட்டன,தன்னெஞ்சேதன்னைச்சுடும்- எம்- (செய்யுள்) வண்சிறைப்பவளச்செவ்வாய்ப்பெடையன மடமைகூர்ந்து தண்கயநீருட் கண்டதன்னிழற்பிறிதென்றெண்ணிக் கண்டனவ் வன்னமற்றுன்காதலிதன்னை நீக்கிப்- பண்டையமல்லலம்வேண்டாபருக்கவென்றாடற்றன்றெ-எம்-கருவிரற்செம்முகவெண்பற்சூன்மந்தி-பருவிரலாற்பைஞ்சுனைநீர்தூவிப்- பெருவரைமேற் - றேன்றேவர்க்கியுமலைநாடவாரலோ- வான்றேவர்கொட்கும்வழி- எம்- இவைசெ

உம்மையால் உயர்திணைமருங்கினு மிவ்வாறு சொல்லப்படுதல் புலம்பல் முதலியவற்றுட்காண்கவென்பாருமுளர்- அந்தஉம்மையிழிவுசிறப்பும்மையாதலானும், கேட்குநகிளக்குநமுதலியமரபுடையுயர்திணைப்பொருள் அம்மரபுடையுயர்திணையை நோக்கிக்கூறின் அஃதுமரபு வழுவமைதியாகாது மரபேயாமாதலானும், அம்மரபில்லாதஅஃறிணையைநோக்கி யீங்குக்கூறியதேமரபுவழுவமைதியாதலானும், இங்கேகாட்டிய வுதாரணங்களுள் - இரவெல்லாநின்றுயாலீர்ங்கதிர்த்திங்காள் - கரவலமென்றனைக்கண்டிலமே - என்பது - உயர்திணைப்பொருள் அஃறிணையைநோக்கிக் கூறியபுலம்பலாதலானும், நன்னீரைவாழியனிச்சமேநின்னினு - மென்னீரள்யாம்வீழ்பவள்- என்பதும் அவ்வாறு கூறியவுகையாதலானும். (ஆ) வாராமரபினவரக்கூறுதலு - மென்னாமரபினவெனக்கூறுதலு - மன்னவையெல்லாமவற்றவற்றியல்பா- னின்னவென்னுங்குறிப்புரையாகும்- எனக்கூறிய ஆசிரியர்தொல்காப்பியனார்க்கு அதுகருத்தன்றாகலானும் பொருந்தாதெங்க, இனிஒன்றின்முடித்தலென்பதிலுலகல்·அகத்திடலென்றற்போலச்சொல்லினதுபொருள்குறிலையச்சொல்லின் மேலேற்றிக்கூறுவனவும், தீதுண்டுகிலிகையென்றவழி நிலைபற்றியதை உண்டதாகக்கூறுதலும், இப்பொருளையிச்சொற்சொலலும் - என்றற்போல்வனவுங்கொள்க. இச்சூத்திரத்தில் தோன்று எழுவாயாகநின்றது உயர்திணைப்பொருளென்பது ஆதலால் உயர்திணைப் பொருள்சொல்ல அஃறிணைப்பொருள் படுமென்றயினும் - அறையப்படுமென்டறை - வஞ்சனையஞ்சப்படும் - திறன்றெரிந்துகூறப்படும் என்றற்போல ஒருமுற்று வினைச்சொலென்கொண்டு அத்தோன்று எழுவாய்க்குப்பயனிலையென்றயினுமுடித்துக்கொள்க. (௫அ)

உருவகவுவமையிற்றிணைசினைமுதல்கள் , பிறழ்தலும்பிறவும்பே
ணினர்கொளலே. ※

இதுவுமது, (இ-ள்,) உருவக- யின்- உருவகத்திடத்தும் உவமையிடத்தும், திணைபிறழ்தலும் - உயர்திணையஃறிணைதம்முள்மயங்குதலும், சினைமுதல்கள்பிறழ்தலும்- அவயவம்அவயவிதம்முள்மயங்குதலும், பிறவும்- இவ்வியலுள்ளேசொல்லாதொழிந்தனவும், பேணினர்கொளல்- போற்றிக்கொள்க, எ-று.

[வ-று,] (வெண்பா) மன்னர்மடங்கல்மறையவர்சொன்மாலை,யன்னநடையினார்க்காரமுதந்-துன்னும்,பரிசிலர்க்குவானம்பனிமலர்ப்பூம்பைந்தா,ரரிசினவேற்றானையெங்கோ. இதனுள்-எங்கோ- மடங்கல்-மாலை - அமுதம் - வானம் - எனஉயர்திணையஃறிணையாகமயங்கிற்று, (மயங்கல்- இணங்கல்,) விருத்தம், தாழிருந்தடக்கைபுயருப்புந்தம்பியாத், தோழர்தன்றாள்களாச்சொரியுமும்மத , மாழ்கடற்சுற்றமாவழன்றுசீவக , வேழயர்போதகமினத்தோடேற்றதே. இதனுள்- தம்பியர்தடக்கைமருப்பு, தோழர்-தாள்கள், சுற்றம்- மும்மதம், சீவகன்யானை என - முதல்சினையாகவும்,உயர்திணையஃறிணையாகவும், மயங்கிநின்றன. அகழ்கிடங்கத்து

லொர்ந்தபாம்புரி- புகழ்தருமேகலை ஞாயில்புனைமுலை-திண்மணி
க்கோபுரந்திங்கள்வாண்முகஞ் - சிகழிகைநெடுங்கொடி செல்விக்
கென்பவே- இது- நகரொன் றுமஃறிணையுயர்திணையோடுமயங்கிற்
று, அகழ்கிடங்கு - தோண்டியபள்ளம், பாம்புரி - நீர்சூழ்ந்தஅக
ழி, ஞாயில்- கோட்டைமதில் உறுப்பு, சிகழிகை- மயிர்முடி, ஆ
தலால்-கிடங்கு ஆடை, அகழி-மேகலாபரணம்- மதிலுறுப்பு-ஆப
ரணம், முலை- கோபுரம், திங்கள்- முகம், மயிர்முடி- நெடுங்கொ
டி-நகர்செல்வி- எனக்காண்க, முகமதி என்பது - இனமுதலொ
டுமயங்கிற்று, இவையனைத்தும்உருவகம், உருவகமாவது முகம்மதி
யையொக்கும் எனாவருமுவமையின்கண்ணிரு பொருட்படநின்ற
தையொழித்து ஒருபொருட்படமுகமேமதியென்பது, மல்லன்
மலையன்னயமாதவனா - எது - உயர்திணையோடு அஃறிணைமயங்கிற்
று, சொல்லருஞ்சூற்பசும்பாம்பின்றோற்றம்போன் - மெல்லவே
கருவிருந்தீன் றுமேலலார் - செல்வமேபோற்றலைநிறுவித்தேர்ந்த
நூற்- கல்விசேர்மாந்தரினிறைஞ்சிக்காய்த்தவே- எது- நெல்லென்
னுமஃறிணையுயர்திணையொடுமயங்கிற்று, கயற்கண் - தளிர்மேனி-
என்றுமுவமைத்தொகைகள்- சினைமுதலோடும் - முதல்சினையோ
டுமயங்கிநின்றன, மேனி - முதல், இவையெல்லாமுவமை- இனிப்
பிறவுமென்றதனாலே- உருவகவுவமைகளில்- இவன்பாரதி- இவன்
பாரதியனையான் எனப்பால்மயங்கக்கூறுதலும், கயலினதுபிறழ்ச்
சிபோலுங் கண்ணினது பிறழ்ச்சி எனச்சொல்லின்முடிவின் அப்
பொருள்முடியாது - கயற்கண்-எனக்குறைபடக்கூறுதலும், செ
ங்கோல்- கொடுங்கோல்- வீரக்கழல்- சினவேல்-எனஒருபொருளி
ன்குணத்தைமற்றொருபொருள்மேல்வைத்துக்கூறுதலும், ஈந்தா
னென்பதை அருளினான்எனமற்றொருவினையாற்கூறுதலும், வேந்
து-அரசு எனஉயர்திணைப்பொருளை அஃறிணைவாய்பாட்டாற்கூ
றுதலும் இவை போல்வன பிறவும் வழுவமைதியாகக்கொள்க.

இச்சூத்திரம்- மற்றொன்றுவிரித்தலாய்வேண்டாகூறலாயிற்று- என்னெ
னின் - சொல்லிலக்கணங்கூறவந்தவர் அணியிலக்கணத்தையும் அதன்புறனடை
களையுங்கூறுதலாலென்க, அவையாவையெனின் (௬) மிகுதலுங்குறைதலுந்
தாழ்தலுமுயர்தலும் - பான்மாறுபடுதலும்பாகுபாடுடைய- எம் - உருவகவுவ
மையெனவிருதிறத்தவு- நிரம்பவுணர்த்தும்வரம்புதமக்கின்மையிற் - கூறியநெ
றியின்வேறுபடவருபவை - தெரிந்தனர்கோடறெள்ளியோர்கடனே, எனவும் வ
ருவனவாமென்க. பேணினர்கொளல்- எனப்பல்லோர்படர்க்கைமுற்றெச்சம்வி
யங்கோள் வினைகொண்டதாதலால் அதற்கேற்கப்புலவரொன்றும் பெயர்வருவி
க்க அதனையெழுவாயாகவேனும்பயனிலையாகவேனுங் கூட்டிமுடித்துக்கொ

யாற்றுநீர்மொழிமாற்றுநிரனிறைவிற்பூண், டாப்பிசையளைமறிபாப்புக்கொண்டுகூட் , டடிமறிமாற்றெனப்பொருள்கோ ளெட்டே.

இது, நால்வகைச்சொற்களாலுஞ்செய்யப்படுஞ்செய்யுள்கொண்டபொருள்கோளின்பெயருந்தொகையுமுணர்த்திற்று. (இ-ள்,) ஆற்றுநீர்ப்பொருள்கோளும், மொழிமாற்றுப்பொருள்கோளும், நிரனிறைப்பொருள்கோளும், விற்பூட்டுப்பொருள்கோளும், தாப்பிசைப்பொருள்கோளும், அளைமறிபாப்புப்பொருள்கோளும், கொண்டுகூட்டுப்பொருள்கோளும், அடிமறிமாற்றுப்பொருள்கோளும், எனப்பொருள்கோள் எட்டுவகைப்படும், எ-று.

இவற்றுள்- தாப்பிசை- என்பது- ஊஞ்சல்போல் இடைநின்றசொல் இருமருங்குஞ்செல்வது, தாப்பென்பது- ஊஞ்சல், அளை- அளைமறிபாம்பென்பதுபாப்பெனநின்றதுபோலத்தாப்பென்பது-வலித்தல்விகாரமாய்நின்றது, ஒழிந்தனவுங்காரணக்குறியாதலாற்கண்டுகொள்க. பொருள்கோளென்பது அந்வயம், சொற்களின்பொருளைக்கொள்ளுங்குணம் எனினும்அமையும். (சுய)

மற்றையநோக்காதடிதொறும்வான்பொரு , ளற்றற்றொழுகு மஃதியாற்றுப்புனலே.

இது, நிறுத்தமுறையேயாற்றுநீர்ப்பொருள்கோளாமாறுணர்த்திற்று. (இ-ள்,) மற்றைய - மொழிமாற்றுமுதலியபோல, நோக்காது- (பிறழ்ந்துசெல்லுதலை) நாடாது, அடிதொறும்-பாதங்கள்தோறும், வான்பொருள் - சிறந்தபொருளானது, அற்றற்றொழுகுமஃது- அறுபட்டு அறுபட்டுநடக்கும் பொருள்கோள், யாற்றுப்புனலே- யாற்றுநீர்ப்பொருள்கோளாம், எ-று.

திரும்பாமலேயொரேமுகமாகவோடுகின்ற - யாற்றுநீரோட்டமுவமையாதலால்- அற்றற்றொழுகுதலாவது- மொழிமாற்றுமுதலியனபோலத் திரும்பிநடக்கும் நடையற்று அங்கங்கேயமைந்துநடத்தலேயன்றிப் பொருள்முடிந்துநடத்தல் அன்றென்க- அங்ஙனமாயின் அடிதொறுமென்றதென்னெனின் அடிகண்முழுமையுமவ்வாறொழுகுவதென்னுமெஞ்சாப் பொருட்டென்க.

[வ- று,] சொல்லருஞ்சூற்பசும்பாம்பின்றோற்றம்போன் - மெல்லவேகருவிருந்தீன்றுமேலலார்- செல்வமேபோற்றலைநிறுவித்தேர்ந்தநூற்கல்விசேர்மாந்தரினிறைஞ்சிக்காய்த்தவே-எனவரும், இப்பாட்டினுள்- சொல்- என்னும்எழுவாயிணைமுதலெடுத்து அதின்தொழிலாகிய வினையெச்சங்கள் ஒன்றையொன்றுகொ

ளும்படியிடையிலேமுறையாகவைத்து அவற்றைமுடித்த - காய்த்த- என் னும்பயனிலையையிறுதியிலேகூட்டிமுடித்தமையால்- அப்பொருளொழுகியது ஆற்று நீரொழுக்குக்கு உவமையாயினவாறுகாண்க, இதனைவான்பொருளென்றதெவ்வெனின்- நெறிப்பட்டுவருதலாலும், பெரும்பாலாகவழங்கிவருதலாலும், மற்றப்பொருள்கோள்களைப்போல்மயங்கிப்பொருளுணரவேண்டாமையாலும், அம்மொழிமாற்று முதலியவற்றுள்ளும் இதுகலந்துவருதலாலுமென்க.

இனியிதற்கு இவ்வாறன்றிமற்ற அடிகளைநோக்காமல் அடிதொறும்பொருள்முடிந்துவருவது எனப்பொருளுரைத்து - அலைப்பான்பிறிதுயிரையாக்கலுங்குற்றம் - விலைப்பாலிற்கொண்டூன் மிசைதலுங்குற்றஞ் சொலற்பாலவல்லாத சொல்லுதலுங்குற்றங்கொலைப்பாலுங் குற்றமேயாம் - எனவுதாரணங்காட்டுவாருமுண்டு - ஆற்றொழுக்கு இடையறுதலின்மையாலும்; இடையறின் அதனையொழுக்கென்றல் கூடாததினாலும் அதுஉவமையன்றாகவேண்டும், என்னெனில், ஒவ்வோரடியொழுகுதற்குஉவமையாயிற்றெனின் பாட்டுமுழுவதும்இடையறுதொழுகிவழங்கிவரும் பொருள்கோள்மொழிமாற்று முதலியவற்றுளடங்காமையால் குன்றக்கூறலென்னுங்குற்றமாமென்க. ஆயின்அவர்காட்டிய உதாரணம்யாதினுளடங்குமெனின்- அடிமறிமாற்றின்பாற்படுமென்க. அதன்விகற்பம் அச்சூத்திரத்தில் விளங்கக்காட்டுவோமாங்குணர்க - இதன்முடிவு விளங்கிற்று. (௯௧)

ஏற்றபொருளுக்கியையுமொழிகளை, மாற்றியோரடியுள்வழங்
கன்மொழிமாற்றே. ✻

இது, நிறுத்தமுறையேமொழிமாற்றுப்பொருள்கோளுணர்த்திற்று. (இ-ள்,) ஏற்ற-ஊ - (இரண்டுமொழியும் அவைகொள்ளும் இரண்டுபயனிலையுமாய்வரக்கூறுவோர் அந்தநான்கினுள்)கொண்டுமுடியும்பயனிலைகட்குப்பொருந்துஞ் சொற்களை, மாற்றி- (தனித்தனிகூட்டிக்கூறாமல்)ஏலாதபயனிலைகட்குஇயையாதமொழிகளைத்தனித்தனிமாற்றிவைத்து, ஓரடி- று-ஓரடியுள்ளேகூறப்படும்பொருள்கோள்மொழிமாற்றுப்பொருள்கோளாம், எ-று. ஓரடியுள் இரண்டுசொல்லும் இரண்டுபயனிலையுமாய்வந்தாலல்லது மொழிமாற்றுதல்கூடாமையால்நான்கென்னுந்தொகைவருவிக்குரைக்கப்பட்டது, [வ-று,] சுரையாழவம்மிமிதப்பவரையனைய- யானைக்குநீத்துமுயற்குநிலையென்ப- கானகநாடன்சுனை -என்னும் இச்சிந்தியல்வெண்பாவினுள் - ஆழவென்னும் பயனிலைக்குஇயைந்த அம்மியென்னுமொழியினை- மிதப்பவென்னும்பயனிலைக்கும், மிதப்ப வென்னும் பயனிலைக்கு இயைந்த சுரையென்னுமொழியினை ஆழவென்னும்பயனிலைக்குமாகமாற்றிவைத்ததும்,

நீத்தென்னும்பயனிலைக்கு இயைந்த முயலென்னுமொழியினை நிலையென்னும்பயனிலைக்கும், நிலையென்னும்பயனிலைக்கு இயைந்த யானையென்னுமொழியினை நீத்தென்னும் பயனிலைக்குமாகமாற்றிவைத்துரைக்குங்காண்க.

ஆலத்துமேலகுவளைகுளத்துள, வாலினெடியகுரங்கு- எனஈரடிமுதலியவற்றுள்உரைப்பதுஉராநந்தாப்மொழிமாற்றென்பதுதோன்றுமையால் அதனையிலக்கணமன்றெனவிலக்கிச்சமீபத்திற் கூறுவதேமொழிமாற்றென்றுசொல்லவந்தவர் ஓரடியுள்வழங்கன் மொழிமாற்றென்றார், ஆலத்துமேலவென்பது ஓரடிக்கண்வாராமையால் மொழிமாற்றன்று, வாலினெடியகுரங்கு ஆலத்துமேல எனச்சென்று ஒட்டுதலாற்பூட்டுவிற்பொருள்கோளின்பாற்படுமென்க. இதனைக்கொண்டுகூட்டென்பாருமுண்டு -இனிஆசிரியர்தொல்காப்பியனார். (௫) சுண்ணத்தானே- பட்டாங்கமைந்தவீரடியெண்சீ- ரொட்டுவழியறிந்துதுணித்தனரியற்றல் - எனச்சுண்ணமொழிமாற்றெனக்கூறுதலுங்காண்க, இனி - ஓரடியுள்வழங்கன்மொழிமாற்றென்றதற்குநூலுடையார் - ஈரடியெண்சீரிலக்கியமேயுதாரணங்காட்டியதினாலும், ஒழிந்தபொருள்கோள்களுக்கு அடிவரையறை கூறுதலினாலும், உளனுடையுரித்துண்டு-என நான்குசொல் இரண்டுசீராகியஅரையடியிலும்வருதலாலும், அவ்வாறுகூறியதிற்பயனின்மையும். ஈரடியெண்சீர்துணித்தனரியற்றலெனஆசிரியர்கூறியதேயமைவுடைத்தென்பதுங்காண்க, இன்னும்- (௬) மொழிமாற்றியற்கை - சொன்னிலைமாற்றிப்பொருளெதிரியைய- முன்னும் பின்னுங்கொள்வழிக்கொளாஅல் - என- ஈரடிக்கண்ணேயாதாயினும் ஓர்சொல்லைப்பொருளுக்குஇயையும்படி முன்னின்றதைப்பின்னேயாவதுபின்னின்றதைமுன்னேயாவதுமாற்றுவது- மொழிமாற்றெனக்கூறுதலால் இதனைச்சுண்ணமொழிமாற்றென்றதும், மொழிமாற்றுக்கு- இரும்புலிரித்தன்னமாயிருமருப்பிற்பரலவலடையவிரலைதெறிப்ப- என்பதில்- இரலையெனப்பின்னின்றதைமருப்பினெனமுன்னின்றதனொடு- மருப்பினிரலையெனக்கூட்டுவதுபோல்வனவும்- இடைமுலைக்கிடந்தென்பதில்-முலையிடைக்கிடந்தெனவும்-சிலையிலேதோள்விசயனிவ்வண்ணஞ்செப்பினன்என்பதில்-தோளிலேசிலைவிசயன் எனமுன்னின்றசொற்களைப்பின்னேமாற்றுவனபோல்வனவும் உதாரணமெனவும், இரண்டிறந்தபலவடிக்கண்ணும்பலசெய்யுள்தொடர்பினும் இவ்வாறு அகன்றும் அணுகியும்வரின் அதனைஅகன்றமாட்டுறுப்பு அணுகியமாட்டுறுப்பு- எனப்பெயர்கொடுத்து- (௫) அகன்றுபொருள்கிடப்பினுமணுகியநிலையினு - மியன்றுபொருண்முடியத்தம்பொருளுணர்த்தன்-மாட்டெனமொழிபபாட்டியல்வழக்கின், எனக்கூறுதலும், பூட்டுவிற்பொருள்கோளும்- அளைமறிபாப்புப்பொருள்கோளும் - தாப்பிசைப்- ளும்- கொண்டுகூட்டுப்- ளும்- இம்மாட்டுறுப்புளடங்கிநின்றமையும், யாற்றுநீர்ப்பொருள்கோள் - யாப்புறுப்புளடங்கியவாறுங்காண்க. இதன்முடிபுவிளங்கிற்று. (௯௨)

பெயரும்வினையாஞ்சொல்லையும்பொருளையும், வேறுநிரனி
றீஇமுறையினுமெதிரினு, நேரும்பொருள்கோணிரனிறை
நெறியே. *

இது, நிறுத்தமுறையே- நிரனிறைப்பொருள்கோளுணர்த் திற்று. (இ-ள்.) பெயரு - ம் - பெயரும்வினையுமாகியசொற்க ளையும் அவைகொண்டுமுடியும் பெயரும்வினையுமாகியபயனிலைக ளையும்,வேறுநிரனிறீஇ-வேறுவேறுநிரையாகநிறுத்தி,முறையினு மெதிரினும் - முறையாகவாயினும்அதற்கு எதிராகியமுறைபிறழ வாயினும், நேரும்- நெறி- (இதற்கிதுபயனிலையென்பதுபடக்) கூறும் பொருள்கோள் நெறிப்பட்டநிரனிறைப்பொருள்கோளா ம், எ-று.

பெயரும்வினையுமாஞ்சொல்லையுமென்றதினால் - பெயர்நிர னிறையும்வினைநிரனிறையும் - பெயர்வினைநிரனிறையும் எனமூவ கைப்படுமெனக்கொள்க. [வ-று,]கொடிகுவளைகொட்டை நுசுப் புண்கண்மேனி- மதிபவளமுத்தமுகம்வாய்முறுவல் -பிடிபிணைம ஞ்ஞைநடைநோக்குச்சாயல்-வடிவினளேவஞ்சியகள்-இது-பெய ர்ச்சொற்களும்பெயர்ப்பயனிலைகளுமாய்நின்ற பெயர்முறைநிர னிறை, மாசுபோகவுங்காய்பசிநீங்கவும்- கடிபுனன்மூழ்கியடிசில் கைதொட்டு - என்றது - முடிவனவும்முடிப்பனவுமாகியவினைச் சொற்கள்வேறுவேறுநிற்றலால்- வினைமுறைநிரனிறை, (அடிசில்- சோறு, கைதொடல் - உண்டல்,) உடலுயிரிந்தோமுழ்மலரும் பார்க்கும்- கடலிருளாம்பல்பாம்பென்ப -கெடலருஞ்சீர்த்- திங்க டிருமுகமாச்செத்து- இது-முடிவனவாகியபெயரும்முடிப்பன வாகியவினையும்வேறுவேறுநிரல்படநிற்றலால்-பெயர்வினைமுறை நிரனிறை, இதனுள்- செத்துஎன்பதுஉவமையுருபு- வினையெச்ச ப்பொருள்படநின்றது - (உடலல் - பொங்குதல்,ஊழ் - முறை,) உடலுங்கடல், இரிந்தோடுமிருள்,முறைமலரும்ஆம்பல், பார்க்கு ம்பாம்பு, எனக்கூட்டிப்பொருளுணர்க. காதுசேர்தாழ்குழையா ய்கனித்துறைச்சேர்ப்ப - போதுசேர்தார்மார்பபோர்ச் செழி ய -நீதியான் -மண்ணமிழ்தமங்கையர்தோண்மாற்றுநாயேற்றூர்க் கு-நுண்ணியவாயபொருள் இதுவுமது, இதனுள்-காதுசேர்தாழ் குழையாயென்பது- ஆறுமுன்னிலையேவல்வினைச்சொற்களாதலா ல்- கா-மண், து-அமிழ்தம், சேர்மங்கையர்தோள்,தாழ் - மாற்று ஞா,குழை - ஏற்றூர்க்கு, ஆய் - நுண்ணியவாயபொருள், எனக்கூ ட்டிப்பொருளுணர்க-து- என்றது நீயுண் என்னும்பொருள்படநி ன்றதொழிற்தொருமொழி- இவையெல்லாமுறைநிரனிறை- களி றுங்கந்தும்போலநளிகடற், கூம்புங்கலனுந்தோன்றுந் - தோன் றலமறந்தோர்துறை கெழுநாட்டே - இதுபெயர்ச்சொற்களும்

பெயர்ப்பயனிலைகளுமாய்நின்றனஎதிர் நிரனிறை, இதனைக்களிறுங் கந்துங்கலனுங்கூம்புமெனமாறவேண்டுதலால்முறைக்குஎதிராயி ற்று-(கந்து-யானைகட்டுந்தறி,கூம்பு-பாய்மரம்,கலன்- தோணி,) ஆடவர்களெவ்வாறுசென்றொழிவர்வெஃகாவும்- பாடகமுமூரகம்ப ஞ்சரமா- நீடியமா- னின்றானிருந்தான்கிடந்தானிதுவன்றோ- ம் ன்றூர்மதிற்கச்சிமாண்பு- இதுபெயர்ச்சொற்களும்வினைப்பயனி லைகளுமாய்வந்த எதிர்நிரனிறை - இதனைவெஃகாவிற்கிடந்தான், பாடகத்திருந்தான்,ஊரகத்துநின்றான், எனமாறிக்கூட்டிப்பொ ருளுணர்க-இவைஎதிர்நிரனிறை.

இனிச்சொற்றொடர்பற்றிதகப்பெற்றியென்னுஞ்சூத்திரத்தால்- காமவிதி கண்முகமென்மருங்குற்செய்யவாய்- தோமிறுகடினிசொலமிர்தந்- தேமலர் க்- காந்தள்குரும்பைகனகமடவாள்கை- யேந்திளங்கொங்கையெழில - எனவ ருமிதனுள்- கண்முகம்- காவிமதி என்பதைக்- காமவிதிஎன்றும், மென்மருங்குல் செய்யவாய் துடிகனி-என்பதைத்-துகடினிஎன்றும், மாற்றிவைத்தளுத்துமா ற்றுநிரனிறையும், வெண்பாமுதலாகவேதியராதியா - மண்பாலவகுத்தவருண மா- மொண்பா - வினங்கட்குமிவ்வாறேயென்றுரைப்பர்தொன்னூல்- மனநதி ட்பக்கற்றோர்மகிழ்ந்து, எனவெண்பா - ஆசிரியம்- கலி-வஞ்சி - என்பனவற்றை யும்- வேதியர் அரசர் வணிகர்- சூத்திரர்- என்பனவற்றையுந்தொகுத்துக்கூறு ம்நிரனிறைமுதலியவுங்கொள்க.இதனுள்- வெண்பா-வேதியர், ஆசிரியம்- அரச ர், கலி-வணிகர், வஞ்சி- சூத்திரர், எனவகுத்துநிரனிறையாகக்கூட்டிப்பொரு ள்காண்க. இந்தநான்குபாவிற்கும் இனங்களாகிய- தாழிசை-துறை-விருத்தங்க ளுள்வெண்பாவினம்வேதியரினமெனவும்- ஆசிரியவினம்-அரசரினமெனவும்-ஒழி ந்த- கலி வஞ்சியுமவ்வாறேவணிகர்சூத்திரரினமெனவும்பொருள்காண்க. அம்- பவள - வரிநெடுங்கணுவ்வஞ்சிக் - கொம்ம் - பவளகொடிமருங்குலகோங்கின- ரும்ம்- பவண்முலை- யொக்குமேயொக்குங்க - ரும்ம்- பவன்வாயிற்சொல்- எனவ ருமிது - சொல்லையும்பொருளையும்வெவ்வேறுநிரலாகவையாதுதனித்தனிசொ ன்முடிந்தாங்கேபொருண்முடியவைத்தலால்- யாற்றுநீர்ப்பொருள்கோளென் க.பிறவுமன்ன, (சூ) அவற்றுணிரனிறைதானே - வினையினும்பெயரினுநினையத் தோன்றிச்- சொல்வேறுநிலை இப்பொருள்வேறுநிலையல் - என- ஆசிரியர்தொல் காப்பியனார்கூறுதலுங்காண்க. நேரும்பொருள்கோள்நிரனிறை எனமுடித்து நிற்றலுங்காண்க.

(௯௬)

எழுவாயிறுதிநிலைமொழிதம்முட், பொருணோக்குடையதுபூட் டுவில்லாகும். *

இது, நிறுத்தமுறையேபூட்டுவிற்பொருள்கோளுணர்த்திற் று. (இ-ள்,) எழுவா- ழி-செய்யுள்முதலினுமீற்றினும்நிற்குமொ ழிகள், தம் - மும்- தம்மிற்பொருள்நோக்கமுடையதாயிருப்பது. விற்பூட்டுப்பொருள்கோளாம், எ-று.

[வ-று,] திறந்திடுமின்றீயவைபிற்காண்டுமாத-ரிறந்துபடித்
பெரிதாமேத-முறந்தையர்கோன்-றண்ணாரமார்பிற்றமிழர்பெ
ருமானைக்- கண்ணாரக்காணக்கதவு; இதனுள் - திறந்திடுமினென்
னுஞ்செய்யுள்முதல்மொழிக்கதவு - என்னும்அதனிறுதிமொ
ழிக்கும்பொருள்நோக்கமுடைத்தாகிக்கதவு திறந்திடுமின் எனநி
ன்றவாறுகாண்க- பிறவுமன்ன. (௩௪)

இடைநிலைமொழியேயேனையிரிடத்து, நடந்துபொருளைநண்
ணுதாப்பிசை. ※

இ-து, நிறுத்தமுறையேதாப்பிசைப்பொருள்கோளுணர்த்தி
ற்று.(இ-ள்,) இடைநிலைமொழி - செய்யுளிடையிலேநின்றசொல்-
லேனையிரிடத்து நடந்து- ஒழிந்தமுதலிலும்இறுதியிலுஞ்சென்று,
பொருளைநண்ணுதாப்பிசை- பொருளைக்கூடுவது - தாப்பிசை
ப்பொருள்கோளாம், எ-று.

[வ-று,] உண்ணாமையுள்ளதுயிர்நிலையூனுண்ண-வண்ணாத்தல்
செய்யாதளறு, இதனுள் - ஊன்-என இடையிலேநின்றசொல் -
ஊனுண்ணாமையுள்ளதெனமுதலிலும், ஊனுண்ணவெனப்பின்
னுஞ்சென்றடைந்தவாறுகாண்க. பிறவுமன்ன (௩௫)

செய்யுளிறுதி மொழியிடைமுதலினு, மெய்தியபொருள்கோ
ளளைமறிபாப்பே ※

இ-து, நிறுத்தமுறையே அளைமறிபாப்புப்பொருள்கோளு
ணர்த்திற்று(இ-ள்,)செய- ழி-செய்யுளின் இறுதியிலேநின்றசொ
ல், இடை-ம்-அதன்-இடையிலும்முதலிலும், எய்தி- பாட்டு-செ
ன்றபொருள்கோள் அளைமறிபாப்புப்பொருள்கோளாம், எ- று.

அளை - புற்று, புற்றிலேதலைவைத்துமடங்கும்பாம்புபோன்ற
தெனக்காண்க.[வ-று,] தாழ்ந்தவுணர்வினராய்த்தாளுடைந்துத
ன்டூன்றித்தளர்வார்தாமுஞ்-சூழ்ந்தவினையாக்கைசுடவிழிந்துநா
ற்கதியிற்சுழல்வார்தாமு-மூழ்ந்தபிணிநலியமுன்செய்தவினையெ
ன்றேமுனிவார்தாமும்-வாழ்ந்தபொழுதினேவானெய்துநெறிமு
ன்னிமுயலாதாரே- எனவரும்இதனுள்- வாழ்ந்தபொழுதினேவா
னெய்துநெறிமுன்னிமுயலாதார் - மூழ்ந்த- முனிவார்,சூழ்ந்த-
சுழல்வார், தாழ்ந்த- தளர்வார்,எனத்தலைகீழாயிடையிலுமுதலிலு
ஞ்சென்றடைந்தவாறுகாண்க-பிறவுமன்ன. (௩௬)

யாப்படிபலவினுங்கோப்புடைமொழிகளை, யேற்புழியிசைப்
பதுகொண்டுகூட்டே. ※

இ-து, நிறுத்தமுறையேகொண்டுகூட்டுப்பொருள்கோளுணர்

ர்த்திற்று. (இ-ள்,) யாப்பு-னை - செய்யுள்அடிபலவற்றினுங்கோ
த்துக்கிடந்தசொற்களை, ஏற்புழி - ம் - எடுத்துப்பொருளுக்குஏற்
றஇடத்தில் இசைத்துக்கொள்வது கொண்டுகூட்டுப்பொருள்கோ
ளாம், எ-று.

பொருளுக்கேற்ற இடமாவது - சிதர்ந்துகிடந்தசொற்களை
யெடுத்துவரிசைப்படவைக்கவேண்டுதலால் - யாற்றுநீர்ப்பொரு
ள்கோளுக்குப்பொருந்துமிடமெனக்காண்க, [வ-று,] தெங்கங்கா
ய்போலத்திரண்டுருண்டபைங்கூந்தல் - வெண்கோழி முட்டையு
டைத்தன்னமாமேனி - யஞ்சனத்தன்னபசலைதணிவாமே - வங்கத்
துச்சென்றார்வரின், எனவரும் - இதனுள் - சிதர்ந்துகிடந்தசொற்
களை - வங்கத்துச்சென்றார்வரின் - அஞ்சனத்தன்னபைங்கூந்தலை
யுடையவளதுமாமேனியின்மேல்தெங்கங்காய்போலத்திரண்டுரு
ண்டகோழிவெண்முட்டை யுடைத்தன்னபசலைதணிவாம் - எனக்
கொண்டுகூட்டியாற்றொழுக்குப்போலாக்குக.

ஆரியமன்னர்பறையினெழுந்தியம்பும் - பாரிபறம்பின்மேற்றண்ணுமை - கா
ரி - விறன்முள்ளூர்வேங்கைவீ தாறுஞ்சேதாரா - ணிறனுள்ளூருள்ளதலர் - என்ப
து - இதிற்சிதர்ந்துகிடந்தசொற்களை - பாரிபறம்பின்மேற்றண்ணுமைதாறு
ஞ்சேதாரான்நிறன்விறன்முள்ளூர்வேங்கைவீ - உள்ளூருள்ளதாகிய அலர்ஆரிய
மன்னர்பறையினெழுந்தியம்பும், எனக்கூட்டிப்பொருளுணர்க. இனியியல்பா
கிய, யாற்றுநீர்ப்பொருள்கோளிற்பிறழ்ந்துவருவனவற்றை மொழிமாற்றுமுத
லியவாகப்பகுத்து அவற்றுளடங்காதுவேறுபட்டுவருவனவெல்லாங் கொண்டு
கூட்டுப்பொருள்கோளெனத்துணிதற்பொருட்டு இதனையீற்றின்கண் வைத்த
மையால் - உருவகவுவமையிற்றிணை சினைமுதல்களென்னுஞ்சூத்திரத்தில்நின்ற
சினைமுதலென்றதைமுதல்சினையெனமுறையாகவைத்துப்பொருள்கொள்வது
ப்பிறவுங்கொண்டுகூட்டெனக்காண்க. இனியிதனைமொழிமாற்றென்றலே ஆசி
ரியர்கருத்தென்பதுமுன்னர்க்காட்டினாம்.

(கஎ)

ஏற்புழியெடுத்துடன்கூட்டுறுமடியவும், யாப்பீறிடைமுதலாக்
கினும்பொருளிசை, மாட்சியுமாறாவடியவுமடிமறி. *

இது நிறுத்தமுறையே அடிமறிமாற்றுப்பொருள்கோளுண
ர்த்திற்று - (இ-ள்,) ஏற்புழி-யும் - பொருளுக்கேற்றஇடத்து எடுத்து
நீங்காமற்கூட்டும் அடியினையுடையனவும், யாப்பீ-னும் - (யாதாகி
னும் ஓரடியையெடுத்து) அச்செய்யுளின்முதலிடைகடையென்ப
வற்றுள்யாதாகினும் - ஓரிடத்துக்கூட்டினும், பொருளிசைமாட்சி
யும் - பொருளோடுசந்தச்சிறப்பும்சந்தமொழியப்பொருட்சிறப்
பும், மாறாவடியவுமடிமறி - வேறுபடாதவடியினையுடையனவுமா
கியபொருள்கோள் அடிமறிமாற்றுப்பொருள்கோளாம், எ-று.

எனவே - ஏற்புழிக்கூட்டுமடிமாற்றும், பொருளிசைமாட்சி
மாறு அடிமறிமாற்றுமெனவிருவகைப்படுமெனவும், அவற்றுள்
ளேபின்னையது- பொருண்மாட்சிமாறுவடிமறிமாற்றும், பொரு
ளிசை மாட்சிமாறுவடிமறிமாற்றுமென விருவகைப்படுமெனவு
ம், மறிமாற்றென்றதினால் -மறித்தற்குரியதும்,மறித்தற்கும்,மாற்
றுதற்கு முரியதெனவும், அவற்றுள்-மறித்தற்குரியது- ஏற்புழிக்கூ
ட்டுமடிமறிமாற்றெனவும், ஒழிந்தன மறித்தற்கும் - மாற்றுதற்கு
முரியனவெனவுங்கொள்க. மறிதல்- மடங்கல்,[வ-று,]நடுக்குற்று
த்தற்சேர்ந்தார் துன்பந்துடையார் - கொடுத்துத்தாந் துய்ப்பினு
மீண்டுங்காலீண்டு- மிடுக்குற்றுப் பற்றினு நில்லா துஞ்செல்வம் - விடு
க்கும்வினையுலந்தக்கால், இதனுள்- கொடுத்துத்தாந் துய்ப்பினுமீ
ண்டுங்காலீண்டும்விடுக்கும் வினையுலந்தக் கால்மிடுக்குற்றுப்பற்றி
னு நில்லா துசெல்வம்- இஃதுணரார் - நடுக்குற்றுத்தற்சேர்ந்தார்
துன்பந் துடையார்,என அடிகளைப்பொருளுக்கேற்றஇடத்தெடுத்
துக்கூட்டுக. மாறுக்காதலர்மலைமறந்தனரோ - யாறுக்கட்பனிவர
லானாவே- வேறுமென்றோள்வளை நெகிழும்மே-கூறுய்தோழியா
ன்வாழுமாறே, இதனுள்- யாதாயினுமோரடியையெடுத்துயாதா
யினுமோரிடத்துக்கூட்டியுச்சரித்துப்பொருளுமோசையும்வேறு
படாமைகாண்க. அலைப்பான்பிறிதுயிரையாக்கலுங்குற்றம்-விலை
ப்பாலிற்கொண்டூன் மிசைதலுங் குற்றஞ் - சொலற்பாலவல்லாத
சொல்லுதலுங்குற்றங்- கொலைப்பாலுங்குற்றமேயாம்- இதனுள்-
ஈற்றடியொழிந்தமூன்றடியுள் - யாதாயினுமோரடியையெடுத்து
யாதாயினுமோரிடத்துக்கூட்டியுச்சரித்துப்பொருளுமோசையும்
வேறுபடா அடிமறிமாற்றெனவும், ஈற்றடியையெடுத்து அவ்வா
றுகூட்டி ஓசையொழியப்பொருள்வேறுபடா அடிமறிமாற்றென
வுங்காண்க-

ஒருசெய்யுளிலேதானேயிரண்டுபொருள்கோளாகக்காட்டியதென்னை
யெனின்- எட்டுவகைப்பொருள்கோளும் அவற்றின்விகற்பங்களுமாகிய இவற்று
ள்- ஒன்றுதானே ஒருசெய்யுள்முழுமையும் அமைந்துகிடக்கவேண்டுமென்றநி
யதியின்றி (நியதி- நிச்சயம்,) ஒன்றும்பலவும் அமைந்துகிடக்குமென்க, அவ்
வாறு அமைந்துகிடத்தலை அந்தந்தப்பொருள் கோள்களுக்குக் காட்டியசெய்
யுள்களிலும்பிறசெய்யுள்களிலுங்காண்க. அடிமறித்தலன்றிமாற்றுதல் ஏற்புழி
யெடுத்துக்கூட்டுமடியவுமென்றதற்கின்மையின் அதனையும்அடிமறிமாற்றென்
றதென்னெனின்- சிலவுறுப்புக்குறைந்தாரையு மக்களென்றாற்போல அதற்கும்
அடிமறிமாற்றெனப்பெயர்தந்ததென்க. செய்யுட்குரியபொருள்கோளைச்சொ

ல்லிலக்கணத்தூட்கூறியதென்னெனின்- செய்யுளுக்குத்தொடர் என்றகாரண ப்பெயர்வந்தது மொழிகள்தொடர்ந்ததாலன்றே அங்ஙனமாதலால் இதுவுந் தொடர்மொழியிலக்கணமேயாமென்க. இனியுரையிற்கோடலென்பதனால் அடிமறியாவதுசீர்நிலைபெயராமல் அடிநிலைபெயர்தலெனவும்- ஒரோவழியீற்றடியிறுதிச்சீர்நிலைபெயர்ந்துவருதலுமுண்டெனவுங்கொள்க. அவைவருமாறு- குரல்பம்மியசிறுகான்யாறே குரமகளிரரணங்கினரோ - சாரனாடநீவருதிபேராரலெனினேயானஞ்சுவலே - இதுசீர்நிலைபெயராது அடிநிலைபெயர்ந்துதடுமாறிவந்தசெய்யுள். அடிநிலைபெயர்ந்துதடுமாறலாவது- இச்செய்யுளில் இதுமுதலடி இதிரண்டாமடி - இதுமூன்றாமடி இதுநான்காமடி எனநியதிகூறக்கூடாமையாம், மாறுக்காதலர்மலைமறந்தனரோ என்னுஞ்செய்யுளில் - கூறாய்தோழியான்வாழுமாறே என்னுமீற்றடியில்- வாழுமாற்றைக்கூறாய்எனவிறுதிச்சீர்நிலைபெயர்ந்து நின்றவாறுகாண்க. (சு) அடிமறிச்செய்தியடிநிலைதிரிந்து - சீர்நிலைதிரியாதுதடுமாறும்மே - எம் - பொருநுட்டரிமருங்கில் - னீற்றடியிறுசீரெருத்துவயிற்றிரியுந் - தோற்றமும்வரையாரடிமறியான, எனக்கூறுதலுங்காண்க. அடியவுமடியவும் - எனஎண்ணி - அடிமறியெனப்பயனிலைகூட்டிமுடித்துக்கொள்க. (கூஅ)

சொற்றொறுமிற்றிதன் பெற்றியென்றனைத்து, முற்றமொழிகு
றின் முடிவிலவாதலிற், சொற்றவற்றியலான் மற்றையபிறவுந்,
தெற்றெனவுணர்தறெளிவோர்திறனே. *

இது - இந்த அதிகாரத்திற்குப் புறனடையுணர்த்திற்று - (இ-ள்,) சொற்றொறும்- சொல்லுகடோறும், இற்று- இத்தன்மைத்து, இதன்பெற்றியென்று- இதனிலக்கணமென்று, முற்றமொழிகுறின்- முழுமையுஞ்சொல்லப்புகின், முடிவிலவாதலின் - வரம்பிலவாமாதலால், சொற்றவற்றியலான் - எடுத்துக்கூறியசொற்களினிலக்கணங்களைக்கொண்டு, மற்றையபிறவும் - சொல்லாதவற்றினிலக்கணங்களையும், (ஒப்புமைகுறித்திதுவுமதுவென்று) தெற்றெனவுணர்தல்- தெளிவாகவுணர்ந்துகொள்வது, தெளிவோர்திறன் - நூலோதித்தெளிதற்குரிய மாணாக்கரதுகூறுபாடாம், எ-று.

இவற்றிற்கு உதாரண முன்னேதானேவந்தவந்த இடங்களிற்காட்டப்பட்டன அந்தந்த இடங்களிற்கண்டுகொள்க. உணர்தல்- திறன் எனமுடித்துக்கொள்க. (கூகூ)

பழையனகழிதலும் புதியனபுகுதலும், வழுவலகாலவகையி
னானே. *

இது, இந்தநூலிற்குப்புறனடையுணர்த்திற்று. (இ-ள்,) பழையனகழிதலும் - முற்காலத்துள்ள இலக்கணங்களுட்சில பிற்காலத்தொழிதலும், புதியனபுகுதலும் - முற்காலத்தில்லாதனசி

லபிற்கால்த்திலிலக்கணமாகவருதலும், வழுவல் - குற்றமல்லவா
ம், காலவகையினுன் - காலவேற்றுமையதுவாதலால், எ-று.

இவற்றிற்குமுதாரணமுன்வந்தவந்த இடங்களிற்காட்டப்ப
ட்டன அந்தந்தஇடங்களிற்கண்டுகொள்க. கழிதலும்புகுதலும்-
வழுவல- என முடித்துக்கொள்க. (௭0)

இருதிணைமூவிட நான்மொழியைம்பால றுதொகையேழ்
வழுவுருவெட்டொன்பதாகுந் தொகாநிலைவாய்ந்தவெச்ச
மொருபதுகோளெட்டுமுப்பொழுதிரிடமோரியல்பாய்
வருமொழிமூன்றுமுணரசசொல்வண்மைவருந்திருவே.

ஐந்தாவது-பொதுவியல்முற்றிற்று.

நன்னூலுக்கு.

இயற்றமிழாசிரியராகிய இராமாநுசகவிராயராற் செய்யப்
பட்டவிருத்தியுரை முற்றிற்று.

இதற்கு இராமாநுச காண்டிகையெனச் சிறப்புப் பெயரு
மவராலிடப்பட்டது.

அங்ஙனமாயின் காண்டிகையுரையும் விருத்தியுரையும் வெ
வ்வேறன்றோ விருத்தியுரையைக் காண்டிகையுரையென்றதென்
னென்னின் - ஐயமகலவைங்காண்டிகையுறுப்பொடுமெய்யினையெ
ஞ்சாதிசைப்பது விருத்தியென்றாராதலால்,

காண்டிகை - விருத்தியுரைக்கு அவயவமாம் ஆகவே அவய
வஆகு பெயராய்அவயவியாகியவிருத்தியுரை மேனின்றதென்க.

இது- அவரது அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

சு அாசயஎம்ஙூ }
நவம்பர் மீ }

| சூத்திரம். | பக்கம். | சூத்திரம். | பக்கம். |
| --- | --- | --- | --- |
| அஆஈற்ற | ௨௱௰௮ | அவற்றுள்முதலி | ௨௱௩௧ |
| அஆஉஊ | ௪௮ | அவற்றுள்முயற் | ௩௮ |
| அஆஎஒ | ௪௯ | அவற்றுள்வினையி | ௬ |
| அஇஉம் | ௩௫ | அவைதாம்-முற்றும் | ௨௱௰௩ |
| அஐமுத | ௫௬ | அவ்வழி-ஆவி | ௩௮ |
| அகமுனர் | ௱௨௧ | அவ்வினையாளர் | ௨௫ |
| அசைநிலை | ௩௱௰௨ | அழலினிங்கா | ௨௫ |
| அடிநாவடி | ௩௯ | அளக்கலாகா | ௰௮ |
| அடைசினை | ௩௱௰௯ | அள்ளாளிறு | ௨௱௰௬ |
| அடைமொழி | ௩௱௰௮ | அறம்பொரு | ௮ |
| அண்ணநுனி | ௪௰ | அறிவருளாசை | ௨௱௫௭ |
| அண்ணநுனிநாவரு | ௩௯ | அறிவறியாமை | ௩௱௩ |
| அண்பலடி | ௩௯ | அன்றனிறு | ௨௱௰௫ |
| அண்பன்முதலு | ௩௯ | அன்றனள் | ௬௭ |
| அண்மையினி | ௨௰௩ | அன் ஆன் இன் | ௰௩௫ |
| அதுமுன்வரு | ௯௯ | அன்றியின்றி | ௯௫ |
| அதுவே-இயற்சொ | ௱௬௰ | அன்னபாவே. | ௨௨ |
| அத்தினகர | ௩௱௯ | ஆஈஊன் | ௩௪ |
| அத்திலாங் | ௨௱௫௰ | ஆக்கவினைக் | ௨௱௩௩ |
| அம்மவரை | ௨௱௫௬ | ஆக்கியோன் | ௨௬ |
| அம்மாமென் | ௨௱௨௰ | ஆசாறுளைத் | ௨௫ |
| அம்முதலீரா | ௩௪ | ஆண்பெண்பல | ௱௫௧ |
| அம்முனிகரம் | ௫௭ | ஆண்மைபெண் | ௱௭௩ |
| அரிதிற்பெயக் | ௨௰ | ஆநின்றுகின்று | ௬௯ |
| அர்ஆர்பவ் | ௨௱௰௬ | ஆமாகோனவ் | ௱௩௭ |
| அல்வழிஇஐ | ௯௬ | ஆமுன்பகரவீ | ௯௭ |
| அல்வழியா | ௯௪ | ஆயிரமுகத்தான் | ௨௯ |
| அவற்றுள்-அஇ | ௩௪ | ஆய்தக்கிடந்த | ௪௰ |
| அவற்றுள்எழு | ௱௮௨ | ஆவிஞணநம | ௪௯ |
| அவற்றுள்ழா | ௭௪ | ஆவியரழவி | ௮௫ |
| அவற்றுள்ஒன்றே | ௩௭௪ | ஆவியுமொற்று | ௪௭ |
| அவற்றுள்கிளை | ௱௬௬ | ஆறனுருபுமே | [illegible] |

| சூத்திரம். | பக்கம். | சூத்திரம். | பக்கம். |
|---|---|---|---|
| ஆறனொருமை - | ௱௯௩ | இன்னதின் - - | ௨௱௬௭ |
| ஆற்றொழுக்கரி. - | ௰௩ | ஈதலியல் - - - | ௨௧ |
| இஈஎன் - - | ௩௮ | ஈதாகொடு - - | ௩௱௨௨ |
| இஈஐவழி - - | ௮௬ | ஈமுங்கம்மு - - | ௱௨௧ |
| இஉஊவோ - | ௱௯௮ | ஈறுபோதலி - - | ௬௩ |
| இசைகெடின் - | ௪௨ | ஈற்றியாவி - - - | ௮௫ |
| இடுகுறிகாரணப் - - | ௩௩ | உஊஒஓ - - - | ௩௯ |
| இடுகுறிகாரண - - | ௱௬௫ | உஊஒஓவல - - | ௪௮ |
| இடைச்சொல் - | ௱௰ | உடன்மேலு - - | ௱௰௨ |
| இடைத்தொட - - | ௱ | உணர்வியலா - | ௨௱௫௬ |
| இடை நிலைமொ - | ௩௱௩௨ | உயர்திணைதொ - | ௨௱௯௩ |
| இடையினம் - - | ௩௫ | உயர்திணையும் - - | ௨௱௮௯ |
| இடையினான்கு - | ௭௩ | உயிருமுடம்பு - - | ௩௨ |
| இடையுரிவட - - | ௱௩௧ | உயிருயிரல் - - | ௨௱௫௪ |
| இணைந்தியல் - - | ௭௫ | உயிர்மவிலா - - | ௫௯ |
| இதற்கிதுசாரி - - | ௱௪௰ | உயிர்மெய்யா - - | ௩௨ |
| இதற்கிதுமுடி - | ௱௪௪ | உயிர்மெய்யிரட் - - | ௩௩ |
| இம்முப்பெயர்க் - | ௱௯௯ | உயிர்வரினுக் - - | ௮௮ |
| இயல்பினும்வி - - | ௮௯ | உரத்தின்வள - - | ௰௭ |
| இயல்பின்விகா - | ௱௪௨ | உரிவரினாழி - - | ௯௬ |
| இயல்பெழுமாந் - - | ௪௭ | உருபின்முடி - - | ௱௩௰ |
| இயற்கைப்பெய - | ௩௱௨௰ | உருபுபலவ - - - | ௨௱௭௧ |
| இரட்டைக்கிள - | ௩௱௰௨ | உருபுமுற்றீ - - | ௨௱௭௨ |
| இரண்டாவத - - | ௱௮௪ | உருபும்வினை - | ௨௱௭௰ |
| இரண்டுமுதலா - | ௨௱௮௰ | உருவகவுவ - | ௩௱௨௫ |
| இரண்டுமுன்வ - - | ௱௮ | உவப்பினுமு - - | ௨௱௯௭ |
| இருதிணையாண் - | ௨௱௬௮ | உவமவுருபில - - | ௨௱௮௪ |
| இருவர்நாற்கு - - | ௭ | எகரவினா - - | ௮௭ |
| இர்ஈரீற்ற - - | ௨௱௨௩ | எச்சப்பெ - - | ௨௱௭௩ |
| இலக்கணமு - - | ௱௫௪ | எடுத்தல்படு - - | ௪௰ |
| இலக்கியங - - | ௬௮ | எட்டனுடம் - - | ௱௫ |
| இல்லெனின் - - | ௱௨௮ | எட்டனுரு - - | ௱௯௮ |
| இறப்பெதிர்வு - - | ௩௱ | எண்ணலெ - - | ௨௱௮௫ |
| இனைத்தென் - - | ௩௱௰௪ | எண்ணிறை - - | ௱௩ |

| சூத்திரம். | பக்கம். | சூத்திரம். | பக்கம். |
| --- | --- | --- | --- |
| எண்பெயர்மு | ௯௧ | ஒருபுணர்க் | ௮௧ |
| எண்முமெழுத் | ௮௨ | ஒருபொருள்கு | ௱௬௨ |
| எதிர்மறைவி | ௨௱௪௨ | ஒருபொருட்பலபெ | ௯௱௰௯ |
| எப்பொரு | ௯௱௬ | ஒருபொருட்பன் | ௯௱௰௪ |
| எய்யாமுத | ௯௫ | ஒருபொருண்மே | ௯௱௩ |
| எல்லாமெழு | ௱௯௫ | ஒருமையிற்ப | ௨௱௩௮ |
| எல்லாருமெ | ௱௯௬ | ஒருமொழி | ௱௪௭ |
| எல்லையின் | ௨௱௮ | ஒருமொழிமூவ | ௮௬ |
| எவனென்வி | ௨௱௯௪ | ஒருமொழியொரு | ௱௪௮ |
| எழுத்தியற்றி | ௯௱௮ | ஒருமொழியொழி | ௨௱௭௪ |
| எழுத்தேதலி | ௫௮ | ஒருவரொன்பதுய | ௱௭௭ |
| எழுவகைமத | ௮ | ஒருவனொருத்திப்பெ | ௱௭௭ |
| எழுவாயிறு | ௯௱௯௧ | ஒருவனொருத்திபல | ௱௯௨ |
| ஏன்றுமென | ௨௱௪௫ | ஒருவன்முதலைந் | ௨௱௰௪ |
| ஏழனுருபு | ௱௩௫ | ஒழியிசைவினைச் | ௨௱௪௰ |
| ஏற்குமெவ் | ௱௮௰ | ஒற்றுமைநயத் | ௨௱௫௬ |
| ஏற்புழியெ | ௯௱௯௯ | ஒற்றுயிர்முத | ௱௯௯ |
| ஏற்றபொரு | ௯௱௨௮ | ஒன்பதொழித் | ௱௩ |
| ஐஔஇஉச் | ௯௬ | ஒன்பானொடு | ௱௫ |
| ஐயான்யவ் | ௫௬ | ஒன்றனன்புள் | ௱௪ |
| ஐந்தனொற்ற | ௱௫ | ஒன்றுமுதலீ | ௱௭ |
| ஐந்தாவதனு | ௱௩௰ | ஒன்றுமுதலெட் | ௱௯௮ |
| ஐந்தொகை | ௨௱௮௬ | ஒன்றேபலவென் | ௱௫௬ |
| ஐயந்திணை | ௨௱௩௨ | ஒன்றொழிபொதுச் | ௱௫௭ |
| ஐயந்திரப் | ௰௯ | கஙவுஞ்சஞவு | ௯௩ |
| ஐயாயிகர | ௨௱௨௨ | கசதபவொழித | ௫௧ |
| ஐயான்குச | ௨௱௮ | கடியென்கிள | ௨௱௫௩ |
| ஐயிறுபொதுப் | ௨௱ | கண்கால்கடை | ௱௩௭ |
| ஐயீற்றுடைக் | ௱௧ | கயவொடுரவ் | ௨௱௨௪ |
| ஒடுவுந்தெய் | ௨௱௫௰ | கருத்துப்பதப் | ௰௫ |
| ஒருகுறிகேட் | ௨௫ | களிமடிமா | ௨௯ |
| ஒருசார்னவ் | ௨௱ | காரணமுதலா | ௯௱௨௰ |
| ஒருநெறியின்றி | ௰௯ | காலங்கரந்த | ௨௮௧ |
| ஒருபஃதாகி | ௱௭ | காலங்கள | ௨[illegible] |

| சூத்திரம். | பக்கம். | சூத்திரம். | பக்கம். |
|---|---|---|---|
| கிளந்தகிளை | ௱௬௯ | செம்மைசிறுமை | ௬௨ |
| கிளைமுதலாக | ௱௬௮ | செயப்படுபொ | ௩௱௰௬ |
| கிழிலமுன்வ | ௱௨௩ | செய்கெனொருமை | ௨௨௩ |
| குறிறுறுவென் | ௨௱௰௧ | செய்தசெய் | ௨௨௬ |
| குலனருடைய் | ௰௭ | செய்துசெய்பு | ௨௨௯ |
| குயினூவ்வேற் | ௱௰௮ | செய்பவன்க | ௨௱௰ |
| குறியதன்கீழா | ௯௪ | செய்யியவெ | ௯௰ |
| குறியதன்முன் | ௪௧ | செய்யுளிறுதி | ௩௩௨ |
| குறிலணைவில் | ௱௰௫ | செய்யெனேவி | ௬௬ |
| குறில்செறியா | ௱௨௫ | செவ்வெணிற் | ௨௪௩ |
| குறில்வழிலள | ௱௨௪ | சொற்றிரியினு | ௨௩௩ |
| குற்றுயிரள | ௫௰ | சொற்றொறுமி | ௩௩௫ |
| குன்றக்கூறல் | ௯ | ஞணநமலவ | ௱௰௩ |
| கேட்குநபோ | ௩௨௪ | ஞநமுன்றம் | ௫௨ |
| கொல்லையைய | ௨௫௰ | டறமுன்கசப | ௫௨ |
| கோடன்மரபு | ௨௩ | ணனமுன்னி | ௫௨ |
| ஙஞணநமனவ | ௪௩ | ணனமுனும் | ௪௫ |
| ஙம்முன்கவ்வா | ௫௨ | ணனவல்லி | ௱௰௪ |
| சாதிகுழூஉப்பர | ௱௰௫ | தடறவொற்றின் | ௬௯ |
| சாலவுறுதவ | ௨௫௮ | தத்தம்பகாப் | ௬௨ |
| சாவவென் | ௯௩ | தமிழவ்வுறவும் | ௱௨௩ |
| சிதலெறும் | ௨௫௫ | தம்பாலில்ல | ௩௨௨ |
| சில்வகையெ | ௰௩ | தம்பெயர்மொ | ௫௪ |
| சிறப்பினுமி | ௩௭ | தரல்வரல் | ௨௯௯ |
| சினைவினைசி | ௨௩௨ | தற்சுட்டளபொ | ௪௫ |
| சுட்டியாவெ | ௪௯ | தனிக்குறின் | ௱௰௨ |
| சுட்டின்முன் | ௱௩௯ | தன்டகனைசான் | ௨௨ |
| சுட்டுமறைநே | ௩௱௩ | தன்மைமுன்னி | ௱௫௪ |
| சுட்டுவகரமூ | ௱௨௯ | தன்மைமுன்னிலைவி | ௨௱௰௮ |
| சுருங்கச்சொல் | ௮ | தன்மையானென் | ௱௭௫ |
| சுவைப்புளி | ௯௬ | தன்னாசிரியன் | ௨௮ |
| சூத்திரத்துட் | ௰௬ | தன்னெனென்னென் | ௱௰௯ |
| செந்தமிழாகி | ௱௬௯ | தன்னொழிமெய் | ௱௰௩ |
| செந்தமிழ்நிலஞ் | ௱௬௩ | தானமுயற்சி | ௩௬ |

| சூத்திரம். | பக்கம். |
| --- | --- |
| தானேதரக்கொ | ௨௰ |
| தான்யாளுனி | ௱௭௯ |
| தான்றுநாமூத | ௱௯௮ |
| திசையொழிந் | ௱௨ |
| திணைநிலத் | ௯௱௰ |
| திணைபால் | ௨௯௪ |
| திணையேபாலி | ௨௯௨ |
| தும்பிவண்டா | ௨௫௫ |
| துய்த்தறுஞ்ச | ௨௫௭ |
| தூறுடுக்குற்றி | ௨௱௰௭ |
| தெங்குநீண | ௱௯ |
| தெரிநிலைதே | ௨௯௯ |
| தெரிவரும் | ௰௮ |
| தெவ்வென் | ௱௨௯ |
| தேன்மொ | ௱௰௭ |
| தொகுத்தல் | ௨௭ |
| தொக்குழி | ௨௬௰ |
| தொல்லைவ | ௪௬ |
| தொழிலுங்கா | ௨௨௮ |
| தோன்றறிரி | ௭௯ |
| தோன்றன்மறை | ௨௫௮ |
| தோன்றுதோற் | ௨௮ |
| நடவாமடிதி | ௬௪ |
| நவ்விறுதொ | ௱௰௪ |
| நான்கன்மெ | ௱௫ |
| நான்காவதற் | ௱௮௮ |
| நிறைபுயிர் | ௯௭ |
| நின்றனெறி | ௫௰ |
| நீயிர்நீவிர் | ௱௮௨ |
| நுதலிப்புகு | ௰ |
| நுந்தம்எம் | ௱௨௰ |
| நுவ்வொடு | ௨௱௫ |
| நூலினியல் | ௫ |
| நூலேநுவ | ௫ |

| சூத்திரம். | பக்கம். |
| --- | --- |
| நூல்பயிலி | ௨௫ |
| நூற்பொருள் | ௰௨ |
| நெடிலோடா | ௮௪ |
| நெடிலோடுயி | ௱ |
| நெல்லுஞ்செல் | ௱௨௭ |
| நேரினமணி | ௰௨ |
| பகாப்பதமே | ௫௯ |
| பகுதிவிகுதி | ௬௨ |
| பகுப்பாற்ப | ௬௰ |
| பஞ்சிதன்சொ | ௰௬ |
| படர்க்கைமுப் | ௯௱௰ |
| படர்க்கைவி | ௱௫௨ |
| பண்பைவி | ௨௮௨ |
| பதமுன்வி | ௱௯௪ |
| பலசிலவெ | ௯௯ |
| பல்லோர்ப | ௨௯௪ |
| பல்வகைத் | ௱௫௭ |
| பல்வகைப்பண் | ௨௫௯ |
| பல்வகைபத | ௨௪ |
| பல்வகைவடி | ௨௫௭ |
| பவ்வீறுமவிடத் | ௭௰ |
| பவ்வீநீமீ | ௯௮ |
| பழையனக | ௯௯௫ |
| பனைமுன்கொ | ௱௰௯ |
| பன்மையுயி | ௪௮ |
| பாடங்கருத் | ௰௫ |
| பாயிரம்பொ | ௫ |
| பால்பகாவ | ௱௭௨ |
| பிண்டந்தொ | ௰௪ |
| பிரிநிலைவி | ௨௪௰ |
| புள்ளியுமு | ௱௪௯ |
| புள்ளிவிட் | ௪௯ |
| புள்ளும்வள் | ௱௨௯ |
| புன்மரமுத | ௨௫௯ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| பூப்பெயர்மு | ௱௯ |
| பூமலியசோ | ௩௰ |
| பெண்மைவிட் | ௱௫௧ |
| பெயருமவினை | ௩௨௯ |
| பெயரோஜயால் | ௱௮௧ |
| பெயரொழ்பெய | ௨௭௯ |
| பெயர்ச்செவ்வெ | ௨௪௪ |
| பெயர்வழித்தம் | ௱௩௩ |
| பெயர்வினையி | ௨௬௯ |
| பெயர்வினையும் | ௨௭௬ |
| பெய்தமுறைய | ௨௰ |
| பொதுப்பெயரு | ௮௩ |
| பொதுப்பெயர் | ௨௭௫ |
| பொதுவியல்பா | ௨௱௰௪ |
| பொதுவெழுத்தா | ௱௬௪ |
| பொருண்முதலாறு | ௩௱௰௬ |
| பொருண்முதலா | ௨௱௰௧ |
| பொருண்முதலாறே | ௱௭௮ |
| பொருளிடங்கா | ௬௰ |
| போலப்புணாய | ௨௮௫ |
| மகரவிறுதிய | ௫௫ |
| மக்கடேவர்ந | ௱௫௰ |
| மங்கலமாகி | ௰௯ |
| மம்முன்பய | ௫௨ |
| மரப்பெயர் | ௬௰ |
| மரமல்லெகி | ௱௰௮ |
| மலர்தலையு | ௧ |
| மவ்வீறொற் | ௱௨௰ |
| மற்றையபெதெ | ௨௪௯ |
| மற்றையநோ | ௩௨௭ |
| மன்னுடை | ௨௮ |
| மன்னேயசை | ௨௪௭ |
| மாடக்குச்சி | ௨௯ |
| மாவென்கி | ௨௫௧ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| மாற்றருவற் | ௨௫௯ |
| மியரியிக | ௨௫௧ |
| மின்பின்ப | ௱௰௯ |
| மீக்ழிதழூற | ௩௯ |
| மீன்றவ்வொ | ௱௰௭ |
| முகவுரைபதி | ௪ |
| முக்காலத் | ௩௱௧ |
| முக்காற்கே | ௨௫ |
| முற்சகநிழற் | ௱௪௭ |
| முதலிருதான் | ௱௬ |
| முதலிவைவி | ௨௱௫ |
| முதலையைபு | ௨௱௪ |
| முதல்வழிசா | ௬ |
| முதற்பெயர் | ௱௭௨ |
| முதனூல்கரு | ௨௭ |
| முரணந்தா | ௨௫௫ |
| முழக்கிரட் | ௨௩௰ |
| முற்றீரொச் | ௨௯௧ |
| முற்றும்மை | ௨௪௩ |
| முன்மொழி | ௨௮௮ |
| முன்னத்தி | ௩௨௩ |
| முன்னாவ் | ௱௭௰ |
| முன்னிலைகூ | ௨௨௨ |
| முன்னிலைமு | ௨௨௩ |
| முன்னோர்நூ | ௭ |
| முன்னோர்மொ | ௭ |
| மூன்றனுறுப் | ௱௪ |
| மூன்றுவதனு | ௱௫ |
| மூன்றுறுரு | ௯௮ |
| மூன்றுயிரள | ௪௬ |
| மெய்களகர | ௫௭ |
| மெய்ந்தாழக் | ௨௫௪ |
| மெய்யுயிர்மு | ௭௬ |
| மெல்லினமங | ௩௫ |

| சூத்திரம். | பக்கம். | சூத்திரம். | பக்கம். |
|---|---|---|---|
| மென்றொடர் | ௱௧ | வரிழியவெண் | ௯௨ |
| மேற்பல்லித் | ௪௰ | வானவர்மக் | ௨௫௫ |
| மொழிகுண | ௰௯ | விகாரமனைத் | ௭௧ |
| மொழிமுதற்கா | ௫௧ | விகுதிபதஞ்சா | ௱௪௧ |
| மொழியாய்த் | ௫௮ | வினாவினும்பி | ௫௱௧ |
| யகரம்வரக் | ௪௪ | வினைவேகா | ௱௪௭ |
| யரழமுன்னர்க் | ௱௨௨ | விளம்பிய | ௯௭ |
| யரழமுன்னர்மொ | ௫௫ | விளைச்சுட்டி | ௱௰ |
| யரழவொற்றின் | ௫௫ | விளைவினுந் | ௫௱௫ |
| யாகாபிறபிறக் | ௨௫௨ | வினைசார்பி | ௫௱௭ |
| யாதனுருபிற் | ௨௱௭ | வினைபெயர்கு | ௨௪௧ |
| யாப்படிபலவி | ௫௫௨ | வினைமாற்ற | ௨௪௮ |
| யாவென்வினா | ௨௫௪ | வினைமுற்றே | ௨௫௫ |
| யாற்றுநீர் | ௫௨௭ | வினையின்பெ | ௱௭௯ |
| ரவ்விற்கம் | ௭௫ | வினையொடு | ௨௪௯ |
| ரவ்வீற்றுயர் | ௨௱௬ | வேற்றில்லையு | ௨௨௫ |
| ரழவல்லன | ௫௫ | வேறுவினைப் | ௫௱௯ |
| லகாரவீற்று | ௨௱௨ | வேற்றுமைமப் | ௱௨௰ |
| ளனமுன்கச | ௫௫ | வேற்றுமையாயி | ௱௰ |
| ளனமெய்த் | ௫௪ | வேற்றுமையும் | ௭௭ |
| ளனவீறுதொ | ௱௨௯ | வேற்றுமைவினைசா | ௨௫௭ |
| ளனவீற்றாம் | ௨௱௫ | வேற்றுமைவினைபண் | ௨௭௯ |
| ளனவீற்றியை | ௪௯ | னஃகானுயர் | ௨௱௩ |
| ளனவேற்று | ௱௨௪ | றவ்வொடுகரவு | ௭௰ |
| வலித்தன்மை | ௮௰ | றனழஎஒவ்வு | ௭௯ |
| வல்லினங்க | ௫௫ | னஃகான்கிளைப் | ௱௰௯ |
| வல்லேதொழி | ௱௨௭ | னலமுன்றனவும் | ௱௫௰ |
| வல்லொற்றுவ | ௨௮௧ | னவ்வீற்றுயர் | ௨௱௨ |
| வவ்விறுசுட் | ௱௫௧ | | |
| வன்றொடரல் | ௯௧ | | |


நன்னூற்சூத்திரவகராதி முற்றிற்று.

| பக்கம் | வரி | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௪ | மேல். | ௧ | சிறப்புப்பாயிரம். | சிறப்புப்பா |
| மேற்படி | மே | ௨௭ | எற்றலும் | ஏற்றலும் |
| ௭ | மே | ௧ | பெருங்கொத்து | பொருங்கொத்து |
| ௧௯ | மே | ௰௭ | படுகால் | படு[illegible] |
| ௩௮ | மே | ௮ | அண்த்தொழிலின் | அண்ணத்தொழிலின் |
| ௪௮ | மே | ௨௫ | ஒஓ | ஒ ஓ |
| ௪௯ | கீழ் | ௧ | வான் | வாள் - அஃகு - |
| ௫௧ | மே | ௪ | தலைதமொற்றம் | தலைதடுமாற்றம் |
| ௫௯ | கீழ் | ௩ | பகுதிப்பொருன் | பகுதிப்பொருள் |
| ௬௨ | மே | ௰௭ | இது | இது |
| ௬௫ | கீழ் | ௰ | சூந்திரம் | சூத்திரம் |
| மேற்படி | கீழ் | ௭ | மூதலால் | முதலால் |
| ௬௯ | கீழ் | ௩ | தறையிவினை | தறைவினை |
| ௮௮ | கீழ் | ௰௭ | என்றவாவாறு | என்றவாறு |
| ௮௯ | மே | ௰௮ | சிற்ப்பு | சிறப்பு |
| ௯௰ | மே | ௰ | வேழுற்மை | வேற்றுமை |
| ௯௫ | மே | ௪ | இரண்டும்ன்றி | இரண்டுமன்றி |
| ௯௯ | மே | ௰௭ | துக்கின் | [illegible]க்கின் |
| மேற்படி | கீழ் | ௪ | எஃகுகடிது | எஃக்குகடிது |
| ௱௫ | மே | ௰௨ | பொக | போக |
| ௱௰௪ | மே | ௰௯ | பனங்கய் | பனங்காய் |
| ௱௩௭ | மே | ௨௧ | யருபு | யுருபு |
| ௱௩௯ | கீழ் | ௯ | குவ்வுருபுணரும் | குவ்வுருபுபுணரும் |
| ௱௪௨ | கீழ் | ௰௯ | தென்க் | தென்க |
| ௱௯௭ | மே | ௰௩ | குறிசில் | குரிசில் |
| ௱௮௰ | கீழ் | ௪ | எற்கும் | ஏற்கும் |
| மேற்படி | கீழ் | ௧ | யடையன | யுடையன |
| ௱௮௩ | கீழ் | ௭ | யிலைகட்டிறன் | யிலைக்கட்டிறாய் |
| ௱௮௭ | கீழ் | ௮ | னேதுவரகி | னேதுவாகி |
| ௱௯௨ | கீழ் | ௰௯ | மகழ்சசி | மகிழ்ச்சி |
| ௨௱௨ | கீழ் | ௰௭ | சாத்தியீரோ | சாத்தியீரோ |
| ௨௱௯ | மே | ௧ | பிண்டமும்ப்பிண்டப் | பிண்டமும்பிண்டப் |
| மேற்படி | மே | ௪ | முதலியற்றை | முதலியவற்றை |
| ௨௱௰௯ | மே | ௰௪ | வினையெச்சு | வினையெச்ச |
| ௨௱௨௯ | மே. | ௨ | குறிப்பிவினை | குறிப்புவினை |
| ௨௱௭௭ | கீழ் | ௰ | ஓதுதற்கு | ஓதுதற்கு |
| ௨௱௭௰ | கீழ் | ௭ | குன்றத்து | குன்றத்து |
| ௨௱௮௫ | கீழ் | ௬ | உருபகனை | உருபுகளை |
| ௨௱௯௫ | மே | ௰௭ | கபிலனையும் | கபிலனையும் |
| ௨௱௯௰ | கீழ் | ௰௧ | தனினை | தன்னை |
| ௨௱௯௮ | கீழ் | ௨ | ரொன்நின்ற | ரொனநின்ற |
| ௩௱௨௯ | மே | ௮ | கினை | சினை |
| மேற்படி | கீழ் | ௰௭ | கண்ணின்றி | கண்ணினறி |
| ௩௱௨௭ | மே | ௰௧ | அமையுயும் | அமையும் |